சங்க இலக்கியத்தில் ஊர்ப்புனைவுகள்

அழகப்பா பல்கலைக்கழக முனைவர் (பிஎச்.டி)
பட்டத்திற்காகப் பணிக்கப்பெற்ற ஆய்வேடு

சா. இரமேஷ்

தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி - 630 003.

ஏப்ரில் - 1999

முனைவர். தே. சொக்கலிங்கம்
எம்.ஏ., எம். ஓ.எல்., பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர் & தலைவர் (பொறுப்பு)
தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி - 630 003.

நாள் : 09.04.99.

ஆய்வு நெறியாளர் சான்றிதழ்

'**சங்க இலக்கியத்தில் ஊர்ப் புனைவுகள்**' என்னுந் தலைப்பில் **திரு. சா. இரமேஷ்** அவர்கள் முனைவர் (பிஎச்.டி) பட்டத்திற்காகச் செய்த இந்த ஆய்வு அழகப்பா பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையில் அவர் செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப்பட்டது என்றும் இந்த ஆய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப்படவில்லை என்றும் உறுதி அளிக்கிறேன்.

(தே. சொக்கலிங்கம்)

நெறியாளர்.

PROFESSOR AND HEAD
DEPARTMENT OF TAMIL
ALAGAPPA UNIVERSITY,
KARAIKUDI - 630 003.

சா. இரமேஷ்,
ஆய்வாளர், தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி - 630 003.

நாள் : 09.04.99

ஆய்வாளர் உறுதிமொழி

'**சங்க இலக்கியத்தில் ஊர்ப்புனைவுகள்**' என்ற தலைப்பில் முனைவர் (பிஎச்.டி) பட்டத்திற்காக எழுதப்பெற்ற இவ்வாய்வு என் சொந்த முயற்சியால் உருவானது என்றும், இதற்கு முன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இவ்வாய்வேடு அளிக்கப்படவில்லை என்றும் உறுதி அளிக்கின்றேன்.

சா. இ.

(சா. இரமேஷ்)
ஆய்வாளர்

உறுதிக் கையொப்பம் :

PROFESSOR AND HEAD,
DEPARTMENT OF TAMIL,
ALAGAPPA UNIVERSITY,
KARAIKUDI - 630 003.

ஆய்வு நெறியாளர்

முனைவர். தே. சொக்கலிங்கம்,
இணைப் பேராசிரியர் & தலைவர் (பொறுப்பு)
தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி - 630 003.

நன்றியுரை

"சங்க இலக்கியத்தில் ஊர்ப்புனைவுகள்" என்னுந் தலைப்பில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு மேற்கொள்ள அனுமதி வழங்கிய அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் மற்றும் ஆட்சிக்கு உறுப்பினர்களுக்கு என் உள்ளம் நிறைந்த நன்றி.

அழகப்பா பல்கலைக் கழகத்தில் ஆய்வு மேற்கொண்ட காலத்தில் எனக்கு ஞானகுருவாய் எனக்குக் கலைகள் கற்பித்தும் மகனுக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்த தந்தையாயும் என்னுடைய வளர்ச்சிக்கு உறுதுணையாயும் வழிகாட்டியாயும் இருக்கும் என் ஆய்வு நெறியாளர் டாக்டர் திரு. தே.சொக்கலிங்கம் அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்வுக்காலங்களில் பல்வேறு வகைகளில் பல்வேறு விதங்களில் உதவிகள் புரிந்து வந்தவர்கள் எண்ணிக்கை பலப்பல. அவர்களுள் தலைப்பு பற்றிய சிந்தனையைத் தூண்டிய டாக்டர். தமிழண்ணல், டாக்டர். கி.நாச்சிமுத்து ஆகியோருக்கும் அழகப்பா பல்கலைக்கழகத் துணைப் பதிவாளர் இரா. தண்டபாணி மற்றும் தனி அலுவலர் எஸ். இராமகிருஷ்ணன் ஆகியோருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றி.

மறைந்த பேராசிரியர்கள் டாக்டர். வ.சுப.மாணிக்கம், முனைவர் கோ.சிவகுருநாதன், திரு. ரெ.பிச்சைக் கண்ணு, டாக்டர் சி.பாலசுப்பிரமணியன் ஆகியோருக்கு என் இதயத்தில் இருந்து எழும் நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.

ஓய்வுபெற்ற பேராசிரியர்கள் டாக்டர். இரா.சாரங்கபாணி, டாக்டர். வெ.தெ.மாணிக்கம், டாக்டர். அ.விசுவநாதன்,திரு. இராம. இராமநாதன் ஆகியோருக்கும் அழகப்பா பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்கள் டாக்டர். ரா.பாலசுப்பிரமணியன், டாக்டர். மு.பாண்டி, ஆகியோருக்கும் மேலைச்சிவபுரி

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி பேராசிரியர்கள் திரு. அரங்கநாதன், திருமதி. ந.இராமாயி, திரு. க.கனகராசு, திரு. ந.விஜய ரெகுநாதன், என்.முருகேச பாண்டியன், திரு. தி.பூங்குன்றன், திருமதி. ஜெ.ரோசுலெட், திரு. தெ. திருஞான மூர்த்தி ஆகியோருக்கும் என் நன்றியுடைத்து.

சகோதர உள்ளங்கள் திரு. இரா.மணிகண்டன், இரா.விமலன், சி. மீனாட்சி சுந்தரம், திரு.முத்துராமலிங்கம், சு.இராசாராம், திருமதி. சே.செந்தமிழ்ப் பாவை, அரு.ஜான் பிரிட்டோ, க.செல்வநாதன், ரெ.சிவ்குமார், சே.இளையராஜா, பெ.வெள்ளைச்சாமி, இரா.கருணாநிதி, பா.வசந்த் குமார், சே. முகமது கனி, மணவை. மொழிப்பிரியன், மு.சண்முக சுந்தரம், வே.திருநீலகண்ட பூபதி, ம.முத்துப்பாண்டி, மா.சண்முகவேலு, சொல்லேருழவன், லா.ஞா.பிரகாஷ், கனகராசு, க.புஷ்பராஜ், செல்வி சி.விமலா ஆகியோருக்கும், திரு.அருள்தாஸ் ஐயா அவர்களின் குடும்பத்தினருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியறிதலைப் புலப்படுத்துகின்றேன்.

என் குடும்பத்தினர் திருமதி.பிரேமநீலா சாமியப்பா, திருமதி. விஜயலட்சுமி வைத்தியலிங்கம், திருமதி.சந்திரகலா முத்தையன், திருமதி.ஜான்சிராணி மாரியப்பன், திருமதி.தேன்மொழி சுந்தரேசன், திருமதி. சிவகாமசுந்தரி பார்த்திபன், திருமதி.அமுதவேணி பழனியப்பன் ஆகியோருக்கும் என் நன்றி உரித்தாகுக.

என் ஆய்வுக் காலத்தில் உதவி புரிந்த மாணவ மாணவியர் அனைவருக்கும் என் இதயம் நிறை நன்றி. என்னுடைய ஆய்வேட்டுப் படியினைத் திருத்துவதற்கு உதவிய செல்வி ஸ்ரீ.சித்ரா, செல்வி. பி.சித்திரா, திரு. எம்.பால்வண்ணன், செல்வி சோபியா, செல்வி ரேணுகா காந்தி, செல்வி. பஞ்சவர்ணம், திரு. வி. ராமராஜபாண்டியன், திரு.எம்.பழனித்துரை, திரு.டி.கண்ணன், திரு.ஆர்.கார்த்திக், செல்வி பி. எஸ்.செல்வ மீனா, செல்வி ஆர்.சத்யப்பிரியா, செல்வி. அ.விமலா, செல்வி பி.முத்துமாரி, செல்வி பா.சத்தியபாமா(துபாஷி).

செல்வி கோ.புவனா, செல்வி எஸ்.நிலாநந்தினி, செல்வி ஆர்.ராதா, ஆகியோருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியுடையன்.

ஆய்வுலக நண்பர்கள் திரு. முஷ்டாக் முகமது, திரு. முகமது இலியாஸ், (வங்கதேசம்) திரு. பா. சுந்தரேசன், திரு. ஆர்.கண்ணன், திரு. பா.சக்திவேல், திரு. அருணாசலம், திரு. ஜெயக்கொடி மோசஸ், திரு. ஆர்.தனபால், திரு. ஏ.பி.தனபால், ஆகியோருக்கும் தமிழ்த்துறை ஆய்வுலக நண்பர்கள் திரு. சங்கர்தாஸ், செல்வி தி.ரமா, திரு. ஆர்.குமார், திரு. எஸ்.எஸ்.என். சந்திரசேகரன், செல்வி பி.மாலதி,செல்வி விமலா ஆகியோருக்கும் ஆய்வேட்டின் முதல்படியினைத் தட்டச்சு செய்த புதுவயல் திருமகள் தட்டச்சு உரிமையாளர். திரு.பிச்சப்பனுக்கும், பார்கவி தட்டச்சு நிலையத்தினருக்கும் நன்றி.

அழகப்பா பல்கலைக்கழக மைய நூலகத் தலைமை நூலகர் திரு. நா. செயராமன், நூலக உதவியாளர்கள் திரு. சுப்பையா, திரு. நூர் முகமது, திருமதி. பி.பொற்செல்வி ஆகியோர் என்னுடைய ஆய்வேட்டிற்குரிய பல்வேறு ஆய்வு நூல்களை வழங்கி உதவினர். அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

கணிப்பொறியின் மூலம் ஆய்வேட்டின் இறுதி வடிவினை வடிவமைத்துக் கொடுத்த லஷ்மி கம்ப்யூட்டர் நிறுவன உரிமையாளர் திரு. க.சரவணன், திரு. அ.அசோக் சரவணன், செல்வி. அ. ஜெசுவின் விமலா, செல்வி. கோ.தாரிணி, செல்வன். த.மணிகண்டன், ஜி.பாபு ஆகியோருக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்றும் அன்புடன்,

(சா. இரமேஷ்)

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகம்.	-	அகநானூறு
இ.ப.த.ம.	-	இந்திய பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம்
இளம்.	-	இளம்பூரணர்
உ.ஆ.	-	உரையாசிரியர்
உரை.ஆ	-	உரையாசிரியர்கள்
உவம.	-	உவமவியல்
உ.வே.சா.உரை	-	உ.வே. சாமிநாதையர்
எழுத்து.	-	எழுத்திகாரம்
ஐங்.	-	ஐங்குறுநூறு
களவு.	-	களவியல்
கலி.	-	கலித்தொகை
கழகம்.	-	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
குறள்.	-	திருக்குறள்
கு.உ.	-	குறிப்புரை
குறு.	-	குறுந்தொகை
சூ.எண்.	-	சூத்திர எண்
சிறுபாண்.	-	சிறுபாணாற்றுப்படை
சூ. எண்கள்.	-	சூத்திர எண்கள்
சொல்.	-	சொல்லதிகாரம்
தொகு.	-	தொகுப்பாசிரியர்.
தொ. ஆ.	-	தொகுப்பாசிரியர்கள்
தொல்.	-	தொல்காப்பியம்
நச்சர்.	-	நச்சினார்க்கினியர்
நற்.	-	நற்றிணை
நூ.	-	நூற்பா
ப.	-	பக்கம்

பக்.	-	பக்கங்கள்
பத்.	-	பத்துப்பாட்டு
பதி.	-	பதிப்பாசிரியர்
பதி. ஆ.	-	பதிப்பாசிரியர்கள்
பதிற்.	-	பதிற்றுப்பத்து
பரி.	-	பரிபாடல்
புறம்.	-	புறநானூறு
புறத்.	-	புறத்திணையியல்
பெரும்.	-	பெரும்பாணாற்றுப்படை
பேரா.	-	பேராசிரியர்
பொருநர்.	-	பொருநராற்றுப்படை
பொருள்.	-	பொருளதிகாரம்
பொ.வே.சோ.உரை.	-	பொ.வே. சோமசுந்தரனார் உரை
மதுரை.	-	மதுரைக் காஞ்சி
மலை.	-	மலைபடுகடாம்
மு.பதி.	-	முதன்மை பதிப்பாசிரியர்
மொ.ஆ.	-	மொழிபெயர்ப்பு ஆசிரியர்
மொழி. ஆ.	-	மொழிபெயர்ப்பு ஆசிரியர்கள்
Ed.	-	Editor
P.	-	Page
PP.	-	Pages
Tr.	-	Translator
Vol.	-	Volume

பொருளடக்கம்

இயல்	தலைப்பு	ப.எண்கள்
	நன்றியுரை	
	சுருக்கக் குறியீட்டு விளக்கம்	
	முன்னுரை	1 - 25
ஒன்று	ஊர்ப்புனைவின் தோற்றமும் வளர்ச்சியும்	26 - 90
இரண்டு	ஊர்ப்புனைவு வகைகள்	91 - 209
மூன்று	மூதூர்ப் புனைவுகள்	210 - 272
நான்கு	சீறூர்ப் புனைவுகள்	273 - 317
ஐந்து	அம்பலூர் அலரூர்ப் புனைவுகள்	318 - 357
ஆறு	ஊருவமைப் புனைவுகள்	358 - 401
	முடிவுரை	402 - 413
	பின்னிணைப்பு	1 - 15
	1. சங்ககால ஊர்கள்	
	2. திருக்குறள் ஊர்ப்புனைவு	
	துணை நூற்பட்டியல்	16 - 21

முன்னுரை

முன்னுரை

இயற்கை இனியது; எழிலானது; எல்லாரும் விழைவது; இயற்கையில் இருந்து கிளைத்து எழுந்ததே இன்றைய அறிவியலும் இலக்கிய இயலும். இயற்கையில் ஈடுபடாத மனிதனில்லை. இயற்கையைச் சேராத இயற்கையுடன் வாழாத உயிர் ஏதுமில்லை. மக்களாயினும் மாக்களாயினும் இயற்கையில் பிறந்து இயற்கையில் வாழ்ந்து இயற்கையில் மறைகின்றனர். இயற்கை நிறைந்தது இவ்வுலகம். தமிழர் இயற்கை வாழ்வு வாழ்ந்து வளர்ந்து தம் மரபை வளர்த்துக் கொண்டனர். இனத்தைப் பெருக்கிக் கொண்டனர்; அறிவைத் தழைக்கச் செய்து கொண்டனர். இயற்கைக்குள் கட்டுப்பட்டு வாழ்ந்த மாந்தர் பொழுது வளரவளர அறிவு பெருகப் பெருக இயற்கையைக் கட்டுப்படுத்தி வாழலாயினர். இயற்கையின் உறுப்பாக வாழ்ந்த மனிதன் இயற்கையைத் தன்னிலிருந்து பிரித்துத் தன்னுடைய கருவியாக அதனைக் கொண்டு வாழத் தொடங்கினான். அப்போது அவன் நாகரிகம் பெற்றவனாக மலர்ச்சி பெற்றான். மனித இன அறிவியல் வளர்ச்சியில் தமிழன் உறைவிடத்தை வரையறுத்துக் கொண்டு வாழத் தொடங்கினான். அவன் வாழ்க்கையில் இன்பங் கண்டான்; தன்னினத்தைப் பெருக்கினான். இயற்கையாகத் திகழ்ந்த உயிரினங்களையும் பயிரினங்களையும தனக்கு வேண்டுவனவாக வளைத்துப் பயன்படுத்திக் கொள்ளலாயினான். அவனுடைய இனமும் அவனுடைய வாழ்வும் அவனுக்குப் பல்வேறு துய்ப்புகளையும் துடிப்புகளையும் தந்துதவின. அந்த வளர்ச்சியில் அவன் இனம்பெருகியபோது அவனும் அவனைச் சார்ந்தவர்களும் தொகுதியாக வாழத் தொடங்கினர். அந்தக் கூட்டு வாழ்க்கை அவனுடைய நாகரிக வரலாற்றில் தனிப்பகுதியாக உருமாறியது. அதுவே ஊராக வளர்ச்சி பெற்றது.

மக்கள் கூட்டம் கூட்டமாகப் பெருகியபோது தனித்தனியெல்லைக்குள் ஒருங்குகூடிக் காப்பாக அரண்களை அமைத்துக் கொண்டு வாழலாயினர். அவ்வாறு வாழ்ந்த போது தோன்றிய ஊர்கள் குடியிருப்புகள் ஆங்காங்கே இருந்தன. மக்கள் பெருக்கமே ஊரின் தோற்றத்திற்கும் பெருக்கத்திற்கும் மூலகாரணமாகும்.

சங்க இலக்கியங்கள் தொகுதி தொகுதியாக மக்கள் வாழ்ந்த ஊர்களையும் அந்த ஊர்கள் அடங்கிய நாடுகளையும் குறிக்கின்றன. ஊர் என்ற சொல்லால் வயலும் வயலைச் சார்ந்த பகுதிகளும் குறிக்கப்படுகின்றன. சங்கவிலக்கியம் மக்கள் வாழ்வதற்கு அடிப்படையான ஒரு கூட்டமைப்பைப் பாடல்களில் புனைகின்றது. இப்புனைவு எல்லாப் பாடல்களிலும் வெவ்வேறு வகையாக இடம் பெற்றிருக்கின்றது. சங்கப் புலவர்கள் புனைவு உரமும் திறமும் பெற்றவர்கள். அவர்கள் புனைவு, திட்ப நுட்ப ஒட்பமுடையது. அந்தப் புனைவுகளை அவர்கள் எவ்வெவ்வாறு அமைத்திருக்கின்றனர் என்பதையே இந்த ஆய்வு தனிநோக்கில் முழுப்பார்வையாக ஆராய்கிறது.

ஆய்வுத் தலைப்பு

இந்த ஆய்வு சங்க இலக்கியத்தில் ஊர்ப்புனைவுகள் என்பதை நுதலியது. சங்க இலக்கியங்களில் அமைந்திருக்கின்ற ஊர்ப்புனைவை ஆராய்வதைத் தலை நோக்கமாகக் கொண்டு அதைக் கடைப்பிடியாகக் கொண்டு இவ்வாய்வு இயலுகின்றது. சங்கப் புலவர்கள் பல்வேறு ஊர்களைத் தங்கள் பாடல்களில் பாடியிருக்கின்றனர். சங்க இலக்கியப் பாடுபொருள்களில் காதல், போர் என்ற இரண்டும் அன்றி மூன்றாவதாகப் பாடப்பட்டிருப்பவை ஊர்களேயாம். அன்று புலவர்களின் கண்ணுக்குப் புலப்பட்டன தமிழக ஊர்களே. இந்த ஊர்களைத் தமிழ் இலக்கியங்கள் வண்ண வண்ணப் புனைவுகளாகக் காட்டுகின்றன. அவற்றைத் தொகுத்து ஒப்பு நோக்கி முழுமையாக இவ்வாய்வு விளக்குகிறது. எல்லா நோக்கிலும் ஊர்ப்புனைவு என்ற ஒன்றே மேலோங்கியிருக்கும். அப்புனைவால் பெறப்படுகின்ற பிறநுண்பொருள்களும் ஒப்புமை நயம் கருதி அவண் சுட்டப்பெற்றுள்ளன. வெவ்வேறு வகையான ஆய்வுக்குரிய பாடல்கள் பன்முகத்திரள் நோக்கால் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் காட்டப்பட்டிருப்பதை ஆய்வர் அறிவர். எனினும் புதுக்கருத்து வெளிப்பட்டால் அவை மீண்டும் பயிலுகின்றன. ஆதலின் இவை கூறியது கூறல் அல்ல. ஆகையால் இந்த ஆய்வேடு சங்க இலக்கியம் கூறும் தமிழக ஊர்களின் புனைவை விளக்குவதாகத் திகழ்கிறது.

ஆய்வு நோக்கம்

சங்க இலக்கியங்கள் தமிழ் இலக்கியக் கொள்கைகளையும் மரபுகளையும் அடித்தளமாகக் கொண்டு எழும்பியவை. அவற்றில் முழுமையான தமிழப்பார்வை 'தமிழ்மை' பொதிந்து கிடக்கிறது. அந்த நோக்கில் சங்க இலக்கியம் ஊர்களை எவ்வாறு ஏன் புனைகின்றன? என்று இவ்வாய்வு ஆராய்கிறது. சங்கப் புலவர்கள் பெயர் சுட்டிப்பாடவேண்டிய ஊர்களைக் கூடப் பெயரைக் கூறாது பாடிப் போகின்றனர். ஆனால் அங்கே ஊரின் இயற்கையை அல்லது இயல்பைப் படிப்போர் உணர்ந்து கொள்ளுமாறு புனைகின்றனர். அந்தப் புனைவு தமிழ்மைப் புனைவாகத் தமிழ்மண் புனைவாக அமைவதைக் காண முடிகின்றது. சங்கப் புலவன் உவமை சுட்டும்போதுதான் பெயரைச் சுட்டிப் புனைகின்றான். அவனுடைய புனைவு எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதையும் தமிழன் இயற்கையோடு இணைந்த தமிழ்மண்ணையே ஊர்ப்புனைவுகளில் சுட்டுகின்றான் என்பதையும் உவமையாக ஊர்களைப் பயன்படுத்துகின்றான் என்பதையும் அடிப்படை நோக்காகக் கொண்டு இவ்வாய்வு அமைகிறது.

வேறு எம்மொழிச் சிந்தனையையும் கைவிளக்காகக் கொண்டு இவ்வாய்வு மனை எழுப்பப்படவில்லை. தமிழ்மையும் தமிழச் சிந்தனையும் கருவியாகத் தமிழ் ஊர்கள் எவ்வாறு புனையப்படுகின்றன? அப்புனைவில் தமிழ் நிலம் வெளிப்படுகின்ற பாங்கு என்ன? என்பதை நோக்கமாகக் கொண்டே இவ்வாய்வு எழுதப்பட்டிருக்கிறது.

ஆய்வு முன்னோடிகள்

இயற்கை மக்கள் மனத்துக்கு அமைதி தருவது போன்று தமிழ் ஆய்வாளர்கள் பலரையும் சங்க இலக்கியத்து இயற்கை கவர்ந்துள்ளது. பேராசிரியர் தனிநாயக அடிகளார், முனைவர் மு. வரதராசனார் ஆகியோர் சங்க இலக்கிய இயற்கையைப் பழந்தமிழ் இயற்கையென்று ஆராய்ந்து இருக்கின்றனர். இவர்கள் சங்க இலக்கியங்களின் இயற்கை பற்றிய குறிப்புகளை அணுகிப் பயிரினம், உயிரினம் என்ற அடிப்படையில் இயற்கைக் கூறுகளை ஆராய்ந்திருக்கின்றனர். அறிஞர்

தனிநாயக அடிகளார் இயற்கையை ஒப்பியல் நோக்கில் ஆராய்ந்தார். பேராசிரியர் மு.வ. சங்கப் புலவர்கள் இயற்கையை ஒட்டுமொத்தமாகப் பாடிய வகைமை நோக்காது சங்கப் புலவர்கள் இயற்கைப் பொருள்களைக் கூர்ந்து நோக்கி எவ்வெவ்வாறு அவற்றின் நீர்மைகளை விளக்கியுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டி உள்ளார். அவருடைய நூல் இயற்கைப் புனைவில் சங்கப்புலவர்கள் இயற்கையை உற்று நோக்கிய பாங்கைக் காட்டுவதாகத் திகழ்கிறது. இவையிரண்டும் இயற்கையை - சங்க இலக்கிய இயற்கையைத் தனித்து ஆராய்ந்து எழுதியவை. டாக்டர். இரா. சாரங்கபாணி, டாக்டர். இராம. பெரிய கருப்பன் இருவரும் சங்க இலக்கிய இயற்கையை ஆராய்ந்துள்ளனர். இவை சங்க இலக்கியம் தொடர்பானவை. டாக்டர் இரா. நாகு. டாக்டர். வெ.தெ. மாணிக்கம், டாக்டர் முத்துக் கண்ணப்பர், ஆகியோர் திணையடிப்படையில் சங்கப் பாடல்களைப் பகுத்தும் தொகுத்தும் வகுத்துமெழுதியுள்ளனர். இவையனைத்தும் சங்க இலக்கியங்களின் புனைவாக இயற்கை அமைந்ததைச் சுட்டிக் காட்டுவன.

சங்க இலக்கியங்களில் அமைந்த ஊர்களைப் பற்றியும் ஊர்களின் பெயர்க்காரணங்களைப் பற்றியும் இலக்கியங்கள்/பிற்காலக் கல்வெட்டுகள் கொண்டு ஆராயப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தாரால் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவை ஊர்களை வரலாற்று அடிப்படையில் ஆராய்ந்து புலப்படுத்துவன. இவற்றில் புனைவு விளக்கமோ புனைவு முறையோ புனைவுத் திறமோ பேசப்படுதலில்லை. இந்த ஆய்வேடு சங்க இலக்கிய ஊர்களின் புனைவுத் திறத்தையும் புனைவு நிலையையும் புனைவு வரலாற்றையும் தனிப்படுத்தி ஆய்கின்றது. அதனால் சங்க இலக்கியத்தில் ஊர்ப்புனைவுகள் என்னும் இவ்வாய்வு முற்குறிப்பிட்ட இரண்டு ஆய்வுகளிலிருந்து வேறாக அமைகிறது.

முனைவர். குளோறியா சுந்தரமதி, ஊர்ப்புனைவு என்னும் நோக்கில் ஊர் பாடிய உலோச்சனார் என்ற கட்டுரையை ஆராய்ந்து உருவாக்கியுள்ளார். பாட நூல்களாக வைத்தற்கெனச் சங்ககால மதுரை, பூம்புகார், போன்ற பல நூல்கள் ஊர்களைப் பற்றி எழுதப்பட்டிருக்கின்றன. இவை வரலாறு தழுவியவையாகவும்

சங்க இலக்கியச் செய்திகளைத் தொகுத்து உரைப்பனவாகவும் அமைந்தவை. இந்த நூல்களிலும் ஊர்ப்புனைவு நோக்கம் காணப்பட்டிலது. சங்க இலக்கிய ஊர்கள் பெயர் தெரியினும் பெயர் தெரியாவாயினும் அவற்றின் புனைவுகள் இங்கு ஆராயப்பெற்றிருக்கின்றன.

ஆய்வெல்லை

'சங்க இலக்கியத்தில் ஊர்ப்புனைவுகள்' என்ற ஆய்விற்கு எல்லை சங்க இலக்கியங்களே. சங்க இலக்கியங்கள் முழுமையும் ஒரு நோக்காக முழு நோக்காகக் நுணுகிக் காணப்பெற்று இவ்வாய்வு விளக்கப் பெற்றிருக்கிறது. சங்க இலக்கியங்களில் புனைவுக் கோட்பாடு மிகப் பெரியளவிற்கு இடம் பெற்றிருக்கிறது. சங்கப் புலவர்கள் மரமாயினும் மாக்களாயினும் அவற்றைப் புனைந்திருக்கின்றனர். புனைவு என்பது சங்கப் புலவர்கள் கண்ட அறிவியல் புலமையாகும். புனைவு வளர்ச்சியில் கால வேறுபாடுகளையும் நிலவேறுபாடுகளையும் காலமும் நிலமும் இணையும்போது அவை பெறும் அழகையும் சங்கப் புலவர்கள் புனைந்திருக்கின்றனர். ஆயினும் அவர்களுடைய புனைவு, சுட்டிக் கூறிய புனைவாக அமையாது மக்கள் வாழ்க்கையோடு இணைந்து பாடிய புனைவாக அமைந்திருக்கிறது. இது சங்க இலக்கிய ஊர்ப்புனைவில் குறிப்பிடத்தக்க ஒரு சிறப்புச் செய்தியாகும். இயற்கையை முருகியல் இன்பத்திற்காக மாத்திரம் புனைந்து காட்டுகிற போக்கு சங்கநூல்களில் கிடையாது. இந்திய இலக்கியங்களின் பொதுப் பண்பு எதுவாயினும் இயற்கையோடு இணைந்த மக்கள் பைஞ்ஞிலத்தின் உணர்வுகளைக் காட்டுமுகமாகப் பாடுபுனையப்பட்டன. **'கலை கலைகளுக்காகவே'** என்ற கோட்பாட்டிலிருந்து மாறுபட்டுக் கலை மன்பதை உண்மையைப் புலப்படுத்துவதாகவே சங்கப்பாக்கள் அமைந்தன. இதனாலேயே முதல், கரு, உரி என்று முப்பொருளால் அகப்பாடல்கள் அமையவேண்டும் என்று தமிழ் இலக்கியக்கொள்கை முகிழ்த்தது.

சங்கப் புலவர்கள் இயற்கையைப் புனைந்து பாடினாலும் இயற்கைப் புனைவு என்பது பல்திறமாக அமையும் புனைவு ஆகும். தமிழ் நிலத்துப்

பெரும்பொழுது சிறுபொழுதுகளைப் புனைவன சங்கப்பாடல்கள். வேறு பல, நிலத்தைப் புனைவன. இன்னும் பல, நிலத்தையும் பொருளையும் புனைவன. இவையன்றி ஐந்நில இயற்கையமைப்பில் ஐவகை நிலங்களையும் `தனித்தனிப் புனைகின்ற பாங்கும் தமிழில் இருந்தது. அனைத்திலும் புலவர்களின் புலமை உத்தி கஞலியது. ஆனால் புனைவு மரபில் வேற்றுமை இல்லை. இவ்வாறு பல்வகையாக இயற்கைப் புனைவு புலவர்களின் மன நாட்டத்திற்கும் புலமை ஈட்டத்திற்கும் ஏற்பப் புனையப்பட்டன. ஆனால், புலவர்கள் காலப்போக்கில் நிலத்தைப் புனைவதை நாட்டைப் புனைவதாகவும் ஊரைப் புனைவதாகவும் தம் அறிவுத் திறத்தைக் கொண்டு கூர்மைப்படுத்தினார்.

நாடு, ஊர் என்பன நிலத்தின் உட்பிரிவுகளாகும். நிலம், திணை என்பன பொதுவான பிரிவின. திணையின் உட்பிரிவு நாடு. நாட்டின் உட்பிரிவு ஊர்,[1] ஊர் என்பது திணையின் ஒரு சிறு பகுதியாகும்; அது நாட்டின் ஒரு சிறுபகுதியைக் கவிஞர்கள் முழு நோக்காக நோக்கியதாகும். இந்த ஊருக்கு திணையின் இயல்புகள் முழுமையும் உண்டு. நாட்டின் இயல்புகள் முழுமையும் உண்டு. ஒரு சிறு ஊர் என்பதற்காக இதனுடைய நீர்மை யாண்டும் நீங்குவதில்லை. ஆதலின் சங்கப்புலவர்கள் ஊர் என்பதைத் தனி ஓர் அணுப்போலத் தம் அகம்புறப் பாடல்களில் நோக்கிப் புனைந்திருக்கின்றனர். ஊர் என்ற பெயர் மருதத் திணையில் வழங்கினாலும் பிற திணைகளிலும் சங்கப் பாடல்களில் வருகின்றது. ஊரை அடிப்படையாகக் கொண்டு 'ஊர' என்று தலைவன் விளிக்கப்படுகின்றான். அகப்பாடல்களில் ஊர்ப் புனைவுகள் மிகுதி. தலைவன் பெயர் சுட்டினமையால் ஊரின் இயற்கையையும் எழிலையும் புனைந்து புலவர்கள் ஊரனை உணர்த்துகின்றனர். இதனால் ஊர்ப் பெயர்கள் சுட்டப்படவில்லை. சங்கப் புலவர்கள் அகப்பொருளில் தலைவன் தலைவியின் பெயர் தெரிந்தால் அகத்திற்காகாததாகிவிடும் என்றும் ஆண்பெண் துய்த்தவின்பம் தமிழ் முரணில் காதலாகிவிடும் என்றும் பெயர் சுட்டவில்லை. ஆதலால் ஊர் பற்றிய புனைவுகள் மட்டுமே சங்க இலக்கியத்தில் இருந்து திரட்டி ஈண்டு ஆராயப்பெறுகின்றன.

ஊர் சுட்டிய புனைவுகள் அகப்பாடல்களிலும் - புறப்பாடல்களிலும் பெரிதும் பயில்கின்றன. இவையனைத்தும் எந்த ஊரையாவது குறிப்பிடுகின்றன. அத்தகைய ஊர்களில் பெரும்பாலானவை தலைவிக்கு உவமையாக உரைக்கப்படுவனவேயாம். தலைவியின் அழகையோ உறுப்பு நலன்களையோ பேசுவன மிகுதி. இவ்வாறு உவமையாக வருகின்ற ஊர்கள் அனைத்தும் பெயர் சுட்டிப் புனையப்பட்டுள்ளன. பெயர் சுட்டிய ஊர்களில் அலரை உவமிப்பது அலரோசையை உவமிப்பது பரிசிலாகப் பெறுவது போன்றவற்றிற்கும் - ஊர்கள் உவமை உரைக்கப்படுகின்றன. ஆனால், அகப்பாடலாயினும் புறப்பாடலாயினும் புனைவு அடிப்படை எல்லாப் பாடல்களிலும் ஒரு வடிவமைப்புடையனவாகக் காணப்படுகின்றன. ஆகவே சங்க இலக்கிய ஊர்ப்புனைவு என்பதையே இவ்வாய்வு முதன்மையாகக் கொண்டு அதனைப் பல்வேறு தலைப்புகளில் தரவுகளைத் திரட்டி ஒன்றோடு ஒன்று ஒருங்கிணைத்து ஆராய்கிறது. ஆதலின், சங்க இலக்கியங்களும் சங்க இலக்கிய ஊர்களும் ஊர்ப்புனைவுகளும் ஆகியவை இவ்வாய்வுக்குரிய எல்லையாக வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

சங்க இலக்கியத்தில் இயற்கைப் புனைவு என்ற ஆய்வின் வளர்ச்சிகளாக ஊர்களை மட்டும் புனைகின்ற தன்மை இந்த ஆய்வின் எல்லையாகும். புனைவுத் திறத்தைக் காட்டவும் நீர்மையை எடுத்தியம்பவும் அடைப்புனைவு என்றும் சில அகப்பொருள் மரபுத்தொடர் என்றும் சொந்த ஊர்ப்புனைவு என்றும் ஊர்ப்புனைவின் பன்மாண் பரிமாணங்களைக் காட்டுவதற்கு ஆராயப்பட்டிருக்கின்றன.

முதன்மை ஆதாரங்கள்

'சங்க இலக்கிய ஊர்ப்புனைவு' என்ற ஆய்விற்கு அடிப்படை நூல்கள் தொகையும் பாட்டுமாகும். தொகையாய்ப் பாடிய புலவர்கள் தனித்தனிப் பாட்டுகளாய்ப் பாட்டில் பாடியுள்ளனர். தொகைப் பாடல்கள் ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு என்பனவாம். இவை ஒரு வகை மரபின. இவை அடிவரையான் தனித்தனியாகத் தொகுக்கப்பெற்றன. இவற்றைப் பாடிய

புலவர் அடிப்படையான் தொகுக்கப்பெற்றமையால் ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, நான்கும் அடியளவான் தொகுக்கப்பெற்றவை. படைப்பாளி அடிப்படையானும் அடியெண்ணிக்கையாலும் தொகை பெற்றது ஐங்குறுநூறு. பொருள்வகையானும் யாப்பு வகையானும் நாட்டு அடிப்படையானும் தொகை பெற்றது கலித்தொகை. யாப்பு வகையானும் நாட்டு வகையானும் தொகை பெற்றது பரிபாடல். பாடப்பட்டவரானும் நாட்டுவகையானும் தொகை பெற்றது பதிற்றுப்பத்து. பொருள் வகையான் அகநானூற்றில் இருந்து வேறுபட்டது புறநானூறு. இவ்வாறு எட்டுத்தொகை நூல்கள் அனைத்தும் யாப்பு, பொருள், புலவர், நாடு அடிப்படைகளால் தொகை பெற்றுள்ளன.

தொகை நூல்களனைத்தும் தமிழ் மண்ணையும் மக்களையும் பாடுவன. தமிழோடு தமிழ் மண்ணில் தமிழனாய் வாழ்ந்தவர் தமிழ்ப் புலவர்கள். இயற்கை வாழ்வு வாழ்ந்தவர்கள். இயற்கை வளத்துக்குள்ளும் காட்சிக்குள்ளும் தங்களைஉட்படுத்தி வாழ்ந்தமையால் அந்த இயற்கையைத் தங்கள் படைப்புகளில் உருவாக்கியுள்ளனர். இயற்கையை மீறிய மீவியற்கையோ அல்லியற்கையோ அவர்தம் வாழ்க்கையிலுமில்லை; அவர்தம் படைப்புகளிலுமில்லை. படைப்பாளிகள் இயற்கையைக் கூர்ந்து நோக்கி உயிரினமாயினும் பயிரினமாயினும் அதனியல்பு தோன்ற தம் படைப்புகளில் அடைத்தொடர்களையும் தழுவு தொடர்களையும் அமைத்தனர். ஆதலின் தொகை நூற்புனைவுகள் அனைத்தும் இயற்கை சார்ந்தனவாகி இயற்கை அறிவியலை உணர்த்துவனவாக அமைகின்றன.

இயற்கையைப் பாடுகின்ற புலவர்கள் மக்கள் உணர்வுடன் தங்கள் படைப்புகளை ஆக்கினர். மக்கள் உணர்ச்சியைக் காட்டாத - சாராத - இயற்கைப் புனைவு சங்கப் புலவர் புலமையன்று. அதனைத் தொல்காப்பியர் கருப்பொருள் சார்ந்த உரிப்பொருள் என்றும் உரிப்பொருள் அல்லன மயங்கா என்றும் வலியுறுத்துவர். தொகை நூல் இயற்கைப் புனைவுகள் அனைத்தும் இயற்கையை ஒட்டியவை. மக்கள் உணர்ச்சியை மையமாகக் கொண்டு அவண் இயற்கை, புனைவு பெறுகிறது. இந்தப் போக்கினை அடைகளானும் குறைந்த அடிகளானும்

குறுந்தொகை காட்டுகின்றது. குறுந்தொகையினும் கூடுதலாக நற்றிணையில் புனைவு விரிவுபெறுகின்றது. அகநானூறோ உள்ளுறை உவமை என்று புனைவை உரிப்பொருளோடு அமைத்து விரித்துப் புனைகிறது.

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI.
LIBRARY.
Accession No.
Call Number
P420
894.811

இயற்கைப் புனைவு ஆராய்ச்சியில் சங்கப் புலவர்கள் திணையாகப் பாடியிருப்பன ஒருவகையின. இவை மருதம் என்றும் குறிஞ்சியென்றும் முல்லையென்றும் பாலையென்றும் நெய்தலென்றும் திணைநோக்கில் வரையறுக்கப்பட்ட கருப்பொருள்களால் புனையப்பெறுகின்றன. திணைப் புனைவு பாலைத் திணையாயின் 'கான்' என்றும் 'காடு' என்றும் 'சுரன்' என்றும் 'அத்தம்' என்றும் சுட்டிப் பேசப்படுகின்றன. முல்லையாயின் கார்காலமும், புறவும் கானமும் பாடப்படுகின்றன. நெய்தலாயின் கடற்கரை, மீன்பிடித்தல், மீன் பங்கிடல் ஆகியன பாடுபெறுகின்றன. குறிஞ்சியில் மலையும் யானையும் புனைவு பெறுகின்றன. இந்தப் புனைவுகளில் மரஞ்செடிகொடிகள் புனையப்படுவதோடு காலமும் பேசப்படுகிறது. திணையைப் புனைவுழி கருப்பொருள் மரபிலேயே படைப்பாளிகள் நிலத்தை இடத்தைப் புனைகின்றனர். கையெழுதுமாறு வல்ல ஓவியன் நாடு சமய இனச் சார்பற்ற ஒரு நிலத்தை வரைவது போல இந்தப் புனைவுகள் அமைகின்றன. இவையனைத்தும் முதற்பொருள் என்னும் கொடியில் பூத்த கருப்பொருள்களின் காட்சிக் கூடமாகும்.

சங்கப் புலவர்கள் திணைநோக்கில் பாடிய போக்கிலிருந்து மாறுபட்டுத் தலைவனை ஊரன் என்றும் நாடன் என்றும் அவன் இயற்பெயரைச் சுட்டாமல்/ சுட்டுழி அடையாளம் தெரியாத வகையில் நாட்டையோ ஊரையோ புனைகின்றனர். இவ்வண்ணம் சங்க இலக்கியத்தில் வருகின்ற குறிப்புகள் ஊர்ப்புனைவையும் நாட்டுப் புனைவையும் உணர்த்துகின்றன.

நாடு என்பது பெரிய நிலப்பகுதி ஆயினும், 'ஊரன்' என்னும் புனைவுக்கு புனைவு எவ்வாறு அமைகின்றதோ அப்புனைவே நாட்டிற்கும் அமைகின்றது. சங்கப் புலவர்கள் களவு கற்பு என்ற இரு கைகோள்களிலும் தலைவனுடைய

ஊரைப் புனைந்து நாட்டைப் புனைந்து அவனை ஊரன், நாடன் என்று சுட்டுவர். இந்தச் சங்க இலக்கிய மரபில் ஊர்ப்புனைவைப் பாடுதற்குரிய களம் படைப்பாளிகளுக்குக் கிட்டுகின்றது. இக்களம் ஆய்வாளிகளுக்குச் சங்க இலக்கிய ஊர்ப்புனைவைக் காண நல்ல வரலாறாக இலங்குகிறது.

சங்கச் சான்றோர் தங்கள் பாடல்களில் ஊர்களைப் புனைந்தும் காட்டுகின்றனர். இவை பெயர் சுட்டாத ஊர்கள். இப்பெயர் சுட்டாத ஊர்கள் 'சீறூர்' என்றும் 'மூதூர்' என்றும் 'நல்லூர்' என்றும் அடைபெற்றமைகின்றன. தலைவனை விளிப்பதுபோல வருகின்ற ஊர்ப்புனைவுகள் மிகுதி. தலைவியை விளிக்கின்ற ஊர்ப்புனைவுகள் இல்லை. சங்க காலத்து மகளிர்க்குச் சொத்துரிமை இன்மையின் இவ்விளி தலைவிக்கு இன்றித் தலைவனுக்கு மாத்திரமாக அமைகின்றது. தலைவியைச் சுட்டவிழைந்த ஒரு சூழலில் அவளுடைய தந்தையுடன் இணைத்துத் தலைவி சுட்டப்பெறுகிறாள். அவ்வண்ணம் தலைவியின் தந்தை நாடு சிறப்புப் பெறுகிறது. இச்சூழலில் அமைகின்ற ஊர்ப்புனைவைவிடக் கூடுதலான அடிகளில் சங்கப் புலவர்கள் பெயர் சுட்டாது ஊரைப் புனைகின்றபோது காணப்படுகின்றன. இவற்றில் இயற்கையின் இனிமையும் எளிமையும் தென்படுகின்றன. சங்கப் புலவர் யாண்டும் மிகைப் புனைவினர் அல்லர் என்பது இந்தப் புனைவுகளால் புலனாகும் எண்மையாகும். ஒரோவழி இவற்றில் உள்ளுறை அமையும். நாடன், ஊரன் என்று தலைவனை விளித்தமையும் ஊர்ப்புனைவுகள் அனைத்தும் உள்ளுறையோடு அமைந்த புனைவுகளாகத் திகழ்கின்றன.

இங்ஙனம் தொகை நூற்புலவர்கள் இருதிறப்புனைவை - ஊர்ப்புனைவை- அமைத்துப் பாடல்களை யாத்துள்ளனர். இவையன்றிச் சங்கப் பனுவல் ஊர்ப் பெயர்ச் சுட்டிப் பல ஊர்களைப் புனைந்து காட்டுகின்றன. இவை வரலாற்று நிகழ்ச்சிகளாக விளங்குவன; வேறு சில ஊரின் வளத்தைக் காட்டுவன; இன்னும் சில தலைவியின் அழகுக்கு அல்லது கவினுக்கு உவமையாக வருவன. தலைவியின் அழகுக்கு உவமையாக வரும் எல்லா ஊர்களும் பெயர் சுட்டப்பட்டு இருக்கின்றன;

உவமையாக வருவதால்தான் பெயர் சுட்டப்பட்டுள்ளன. தொகைப் பாடல்களின் திணைப்புனைவில் எவ்விடத்திலும் ஊர்ப்பெயர் சுட்டிய புனைவைக் காணுதற்கியலாது. தொகை நூல்கள் ஊர்ப்புனைவு பற்றிய இத்தகைய பொது அடிப்படையான கருத்துகளைத் தன்னகத்தே பொதிந்துள்ளன. சங்கப்பாடல்கள் ஒவ்வொன்றிலும் மண்ணும் மக்களும் அவர்தம் உணர்ச்சியும் அமைந்துள்ளன. நிலத்தை உருவாக்கிப் பொழுதைக் காட்டி மக்கள் வாழ்க்கையை அமைத்துத் தொகை நூற்பாடல்கள் ஒவ்வொன்றும் ஒரு சிறுகதையாய் விளங்குகின்றன. இவையனைத்தும் ஊர்ப்புனைவு ஆய்வின் முதன்மைச் சான்றுகளாய்ச் சங்கப்புலவர்தம் புனைதிறனைக் காட்டுவனவாய் ஆய்வின் தலைச்சான்றுகளாய்த் திகழ்கின்றன.

இவ்வகப் பாடல்களின் ஊர்ப்புனைவு அகமரபுக்கேற்பப் பெயர் சுட்டா ஊர்ப்புனைவுகளாகப் பாடுபொருளோடு இணைந்து வருகின்றன. புறப்பாடல்களும் இந்த ஆய்விற்குத் துணையாவன. புறநானூறும் பதிற்றுப்பத்தும் பல்வேறு ஊர்களைச் செயல் நடந்த களங்களைப் புனைகின்றன. இந்தப் பாடல்களில் போர்ப்புனைவும் அழிவும் அறவுரைகளும் அழுகை ஒலிகளும் புனைவாகின்றன. அகப்பாடலைப் போல ஊரைப் பொழுதொடு, இணைத்தோ பயிரின உயிரினங்களோடு பொருத்தியோ புறநானூற்றுப் புலவர்கள் பாடிலர். அப்படைப்பாளிகளின் படைப்புத்திறன் அழிவையும் அவலத்தையும் வரைகின்றன. அகப்புலவர்கள் அமைதி தவழும் இனிய இயற்கையில் நெகிழ்ந்துபோய் - இன்ப ஆக்க உலகை - இன்பத்தின் இருப்பிடத்தைத் - தங்களுடைய மென்மையான ஊர்ப்புனைவால் புனைந்து காட்டுவர். புனைவு மிகுதி; புனைவு ஓவியம், புனைவு அழகு, புனைவு வகைமை என்ற பன்முகப்பார்வையில் புறப்பாடல்களைவிட அகப்பாடல்களே மேலோங்கி நிற்கின்றன. சங்கப் புலவர்களின் அகம்புறமாகிய இருபெரும் பொருண்மையையும் பாடிய புலவர் பலருளர், எனினும் உணர்ச்சியில் அகப்படாத அறிவு மேலோங்கிய ஊர்ப்புனைவுத் திறம் அகப்பாடல்களில் மட்டுமே ஓங்கி நிற்கிறது. இதனைப் புறநானூற்றுப் பாடல்கள் நன்கு அறியத் துணை செய்கின்றன.

பதிற்றுப் பத்துச் சேரநாட்டுக்கு - சேரமன்னர்களுக்கு - உரிய இலக்கியமாகும். இதனுள்ளும் புனைவு இருக்கிறது. இவற்றின் கடு நடையும் நெடு நடையும் புனைவுகளுக்கு வாய்ப்பு மிகுதியும் நல்கவில்லை. சேரவேந்தர்களின் செல்வச் சிறப்பும் இன்பச்சிறப்பும் பெருமிதமும் அவற்றில் பேசப்படுகின்றன. கபிலர், பரணர், காக்கைப்பாடினியார் நச்செள்ளையார், போன்றோர் பிறதொகை நூல்களில் பாடியுள்ளனர். பதிற்றுப்பத்தில் ஊர்ப்புனைவுகளைத் திறம்பட அமைத்திட/ புனைந்திட இவ்விலக்கியம் வாய்ப்பு நல்கவில்லை. ஐங்குறுநூறும் பதிற்றுப்பத்தினைப் போன்றதொரு சேரநாட்டு இலக்கியம், சேரநாட்டில் தொகுக்கப்பெற்றது. கபிலர், பரணர் போன்ற பிறநாட்டுப் புலவர்கள் சேரநாட்டிற்குச் சென்ற போது இதனைப் பாடினர். இவற்றில் உள்ள பாடல்களின் அடியெண்ணிக்கை மிகக் குறைந்தனவாதலின் ஊர்ப்புனைவு இந்நூற் பாடல்களில் சிறுசிறு தொடர்களாக விளங்குகின்றன. இந்நூலில் அம்மூவனார் பாடிய தொண்டிப்பத்து பலவகைப்புதுமைக்கும் களனாய் இருக்கிறது. சங்கப் புலவர் சொந்த நாட்டில் ஈடுபாடும் சொந்த ஊரினைப் பாடுவதில் ஆர்வமும் உடையவர்கள் என்பதைக் காட்டுவதற்கு அம்மூவனாரின் இப்போக்கு தலை சிறந்த எடுத்துக்காட்டாகும். சேரநாட்டு இலக்கியப் போக்கில் ஊரை விரிவாகப் பாடுகின்ற மரபை இந்த இரண்டு தொகை நூல்களான் உணர்ந்து கொள்ள இயலுகிறது.

எட்டுத்தொகை நூல்கள் அனைத்தும் வெவ்வேறு கோணங்களில் வெவ்வேறு பார்வைகளில் வெவ்வேறு வகையான புனைதிறத்தால் ஊரைப் புனைவதை அந்நூல்களின் பாடல்கள் கொண்டு உய்த்துணர்ந்து கொள்ள முடிகிறது. ஊர்ப்புனைவுத் திறத்தை அறிந்து கொள்ளுவதற்குத் தொகைநூல்கள் அனைத்தும் தக்கச் சான்றுகளாகின்றன. கலித்தொகையிலும் பரிபாடலிலும் பல்வேறு ஊர்களைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. கலித்தொகை சங்க இலக்கியத்தில் வழக்குச் சொற்களையும் பல்வேறு இனமக்களின் கொச்சைச் சொற்களையும் கையாளுகின்ற ஓர் இலக்கிய வகை. இதனுள் எந்த ஊரும் தலைவிக்கு உவமை கூறப்படவில்லை. கலித்தொகைப் புலவர் ஐவரும் தங்கள் பாடல்களில் ஊர்களைக் குறிப்பிடுகின்றனர். கலித்தொகையின் யாப்பு வடிவத்தாலும், கருத்து வடிவத்தாலும்

ஊர்ப்புனைவினை அந்நூற்பாடல்களில் சிறக்க அமைக்கமுடியவில்லை. கலிப்பாடலின் தரவு, பாட்டின் கருத்தைத் தந்து நிற்கிறது. தாழிசைகள் அதன் கருத்தை வழிமொழிகின்றன. இதனால் அகநானூற்றினைப் போன்றும் நற்றிணையைப் போன்றும் ஒரு பாடலில் பல்வேறு பொருள்களைப் பாடவும் உவமையாகக் கூறவும் வாய்ப்புகள் குறைவு. திணை நோக்கில் பாடப்படும்போது ஊர்ப்புனைவுக்கு வாய்ப்புக் குறைகிறது. படைப்பாளியின் புலமைத்திறன் திணை நோக்கில் புனைவை அமைக்கத் தூண்டுகிறது. இயற்கையான ஓட்டமில்லை முல்லைக்கலியில் ஏறுதழுவுதலும் ஏறு தழுவுதலைக் காணும் மக்களின் நிலையும் விரிவாகக் காட்டப்படுகின்றன. ஏறு தழுவுதல் நிகழிடம் மதுரை எனினும் புலவர் மதுரையைச் சுட்டாமலும் களம் சுட்டாமலும் நிகழ்ச்சியைப் புனைகின்றார். இந்தப் பாடல்களில் இயற்கைச் சூழலைக் காட்டிலும் செயல் வினை புனைவு பெறுகிறது. ஆகையால் சோழன் நல்லுருத்திரன் களத்தைப் பாடுவதில் அக்கறை காட்டாது அங்கு நிகழும் காட்சியைக் காதற் கற்பைப் புனைவதில் கருத்துச் செலுத்துகிறார். கலிப்பாடல்கள் யாப்பும் இதற்குத் துணை செய்கின்றன. ஏனைய திணைகளுக்கும் இவ்வாறே விளக்கம் அமையும். ஆதலின் கலித்தொகைப் புலவர்கள் ஊர்களைச் சுட்டிப் பாடுவதிலும் ஊர்களைப் புனைந்து பாடுவதிலும் ஆர்வம் காட்டவில்லை.

பரிபாடல் பாண்டிய நாட்டிலக்கியம்; பாண்டிய நாட்டை முதன்மைபடுத்துவது. கலித்தொகை கூடல்நகரைக் குறிப்பிட்டாலும் கூடல் மாநகர் புனைவு பெறவில்லை. பரிபாடல் எல்லாப் பாடல்களிலும் மதுரையைச் சுட்டுகின்றது; மையப்படுத்துகிறது. பரங்குன்றத்தையும் புனைகிறது; அழகர் மலையை அறைகிறது; வையை என்னும் பொய்யாக் கொடியினைப் புனைவதன் மூலம் மதுரையைச் சார்ந்த வையைக் கரையினைப் புனைகிறது. பரிபாடல் காட்சி அனைத்தும் ஆற்றங்கரைப் புனைவுக்காட்சி. வையை வெள்ளத்தில் மகளிர் நீராடுகின்ற காட்சியும் பரத்தை விரும்பிய காம விளையாட்டும் பரிபாடலில் இடம்பெறுகின்றது.

பரிபாடல் நீண்ட பாடல்களாக அகவற்பா போலப் பாடுதற்குக் கருத்தை ஓட்டமாகச் சொல்லுதற்கு இயைந்த யாப்பு வடிவம். பரிபாடலின் ஒட்டுமொத்த

இலக்கணம் பல்வேறு யாப்பு அடிகளும் கலந்து வருவதாகும். ஆதலின், பரிபாடல் மதுரையை - வையையை - வையைக் காட்சியைப் புனைகின்றது. ஊர்ப் புனைவு ஆராய்ச்சியில் அம்மூவனாருக்கு தனித்தன்மையும் தனியிடமும் இருக்குமாறு பரிபாடலுக்கும் தனியிடம் உண்டு. சங்க நூல்களிலேயே ஊரின் அமைப்பைப் பரிபாடல்[2] சொல்லோவியமாகக் காட்டுகின்றது. வேறு எந்தத் தொகை நூல்களிலும் ஊரின் வடிவமைப்பு புலவர்களால் இவ்வாறு புனையப்பட்டிலது. இன்றைய வரைபடம் (Blue Print) போல இப்புனைவு விளங்குகிறது தொகை நூல்கள் அனைத்தும் ஊர்ப்புனைவு பற்றிய ஆராய்ச்சியின் தோற்றத்தையும் பல்வேறு பரிமாணங்களையும் உணர்த்தும் சான்றாக மிளிர்கின்றன.

தொகை நூற்புனைவுகள் ஒரு பாங்கினவாகத் திகழ்கின்றன. பத்துப்பாட்டுப் புனைவுகள் இவற்றிலிருந்து முரணியன. பத்துப்பாட்டு நெடும்பாட்டு; சங்கப்புலவர் எண்மர் ஆக்கியன. திருமுருகாற்றுப் படை காலத்தால் பிற்பட்டது[3.] ஆதலின் ஒன்பது பாட்டுக்களே ஆய்விற்குரியச் சங்கப்பனுவல்கள். இவற்றுள் நெடுநல்வாடை மதுரையின் கூதிர்காலப் புனைவாகிறது. படைப்பாளி ஊரைச் சொல்கின்றார்; பெயரைச் சுட்டவில்லை; மதுரைக் காஞ்சி நெடும்பாடலாக (782) அமைகிறது. இப்பாட்டில் மதுரையைப் பாடியுள்ளார் ஆசிரியர். பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி இரண்டும் இருபெரு வேந்தர்களின் ஊர்களை இணைத்து அகத்தையும் புறத்தையும் பாடுவன. இவற்றில் ஊருக்கு முதன்மை கொடுத்திருக்கின்ற நாகரிக வளர்ச்சியைக் காணமுடிகிறது. அம்மூவனார் தொண்டிப்பத்து என்று பெயரிட்டுத் தனிப்பத்துப் பாடிய இலக்கிய வளர்ச்சி இரண்டு நெடும் பாட்டுகள் தோன்றுவதற்கு வித்தாகி இருப்பதை உணரமுடிகிறது. கடல்வளம் நிறைந்த காவிரிப் பூம்பட்டினம் ஒன்று. தமிழ்வளம் நிறைந்த மதுரை மற்றொன்று. தொகை நூல்களில் புனைவு பெறுகின்ற ஊர்கள் இயற்கைவளம் மட்டும் பேசுவன. பத்துப்பாட்டு தான் புனையும் ஊரில் வாழும் மக்களின் ஆகுல வாழ்க்கை பொருளாதார மேம்பாடு ஆகியவற்றைப் புனையும். புனைதலில்லை.

அகம் என்பதற்கேற்ப அமைதியும் இணைப்பும் இருவர் கலப்பும் ஒருமித்த அமைதிப் புனைவே அகப்பாடலில் இடம்பெறுகிறது. பத்துப்பாட்டுப் புனைவு அதற்கு நேர்மாறாக இயற்கையை மீறிய செயற்கைப் புனைவாக அமைகிறது.

பட்டினப்பாலையும் மதுரைக் காஞ்சியும் சங்க இலக்கிய அமைதி வாழ்க்கை பொருளாதார மேம்பாடு அற்ற ஆடம்பர வாழ்க்கையைப் புனைவதாக அமைகின்றது. இதனால் ஆசிரியர்களின்/புலவர்களின் புனைவு முடியாத பெருந்தொடராக இடம் பெறுகிறது.

குறிஞ்சிப் பாட்டு தமிழரின் காதலொழுக்கத்தைப் பாடியது; கபிலர் குறிஞ்சிப்பாட்டில் திணையைப் புனைகிறார்; வெறியாடு களம் பேசுவர்; ஆனால், தலைவன் ஊரையோ தலைவி ஊரையோ புனையவோ சொல்லவோ மாட்டார். இந்தக் குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை என்பன எல்லாம் ஊர்ப்புனைவு ஆராய்ச்சிக்குத் துணையாகிப் புலவர்களின் பாடுமுறையை ஒப்பிட்டுக் காண்பதற்குச் சான்றுகளாகின்றன.

தொகை நூல்களில் பாடிய புலவர்களே இந்தப் பத்துப் பாட்டையும் பாடியுள்ளனர். இவர்கள் பாடியன, தொகை நூற்புனைவுகள் எவ்வாறு வேறுபடுகின்றன என்று காண்பதற்கு உதவுகின்றன. புனைவு முறையில் இறுகிய நிலையைத் (Synthetic) தொகை நூல்களில் காணமுடிகின்றது. பத்துப் பாட்டில் நெகிழ்ச்சியான (Analytic) நிலையைக் காணமுடிகிறது. தொகை நூல்களில் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயற்கையின் தலையீட்டைக் காணமுடியாது. பத்துப் பாட்டில் இயற்கையை மீறிய செயற்கைப் பொருள்களான வணிகப் பொருள்களின் மயக்கம், விற்போர் ஓதை போன்றன புனைவு பெறுகின்றன. இவ்வாறு புனைவு முறையில் புனைவுப் போக்கில் பத்துப்பாட்டு வேறுபட்டு நிற்கின்றது; இது படைப்பாளிகளின் அறிவு வளர்ச்சி புனைவு வளர் நிலையைக் காட்டுகின்றது.

பத்துப்பாட்டில் எஞ்சியவை ஆற்றுப்படை நூல்கள். இவற்றில் நான்கு ஆற்றுப்படை நூல்கள் துயராற்றுப்படை நூல்கள். ஒருவனுடைய வறுமையை ஆற்றுப்படுத்தி அவன் செல்வம் பெறுதலின் பொருட்டுப் பாடப்பட்டவை. இதனால் பரிசில் பெறுகின்றவன் ஓரிடத்தில் இருந்து வேறோர் இடத்திற்குச் செல்ல வேண்டியவனாகப் பாடப்படுகின்றான். இவ்வமைப்பால் அவன் பல இடங்களை/ ஊர்களை/ திணைகளைக் கடந்து போக வேண்டியவனாகின்றான். இதனால் அவன் பல ஊர்களில் தங்கவும் கடந்துபோகவும் வேண்டியதாகிறது. இவ்விலக்கிய வடிவமைப்பால் ஆற்றுப்படைகளில் பல ஊர்கள் புனைவதற்கு வாய்ப்பாகின்றன.

சங்க இலக்கியத் தொகை நூல் போக்கிலிருந்து இங்கு அமையும் ஊர்ப்புனைவுப் போக்கு முற்றிலும் வேறுபட்டது. ஊர்ப்புனைவு அகமாயின் மக்கள் வாழ்க்கை, உணவு, விளையாட்டு, ஆகியன பேசப்படுவதில்லை. ஆற்றுப் படைநூல்களில் ஊர், இருப்பிடம், அவன் தங்கல், வளம், உணவு போன்ற அனைத்தும் இடம்பெறுகின்றன. ஆற்றுப்படைகளில் கொடைஞனின் நாட்டைச் சிறப்பிக்கு முகமாக அவனுடைய நானில வளத்தைக் காட்டுமாறு ஊர்கள் புனையப்படுகின்றன. இந்தப் புனைவால் ஊர்ப்பெயர் சுட்டப்படுவதும் சுட்டப்படாமையும் காணப்படுகிறது. பாலைத் திணையில் சுரம் புனையப்படுதல்போல இங்கும் ஓர் ஊருக்கும் மற்றோர் ஊருக்கும் இடையே உள்ள வழிகள் புனையப்படுகின்றன. புரவலனுடைய நாட்டிற்குத் தக்கவாறு ஐந்நில, நானில வருணனை ஊர் வருணனை, அமைகிறது. ஆற்றுப் படைநூல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஊர்கள் புனையப்படுவது தனிச்சிறப்பு.

ஒவ்வொரு ஊரும் இரவலன் தங்கும்போது அவ்வந்நிலத்துக்கு ஏற்பச் சூழலைப் படைப்பாளி புனைந்து காட்டுகிறான். இதனால் எந்தப் புரவலனைப் புலவன் பாடுகின்றானோ அதற்குத் தக ஊர்பற்றிய செய்தியினை அறிந்துகொள்ள முடிகின்றது. இவற்றிலிருந்து இயற்கைப் புனைவுக் கூறுகள் குறைவாக இருப்பதைக் கண்டு கொள்ளவியலுகிறது. இவ்வாறு ஐந்து திணைகளை ஒரு சேரப் புனைகின்ற புலமைத்திறம் படைப்பாளிகளுக்குக் கிட்டுகிறது. தொகை

நூல்களில் ஒரு திணையோ ஓர் ஊரோ பெரும்பாலும் புனையப்படும். இங்கு அம்மரபின் பரிணாம வளர்ச்சியாக ஐந்து திணைகளும் ஒன்றாக்கப்பட்டு ஒரு புதிய இலக்கிய வடிவம் பெறுகிறது. இவ்விலக்கிய வடிவில் இரவலனின் வறுமையும் இரவலன் பரிசு பெறுதலும் நீக்கிவிட்டால் எஞ்சிய பகுதிகள் ஊர்ப்புனைவாகவும் திணைப்புனைவாகவும் அமையும்.

ஆற்றுப்படை வளர்ச்சியில் துயராற்றுப்படையினின்று முரண்பட்டு வளர்ந்தது, அருளாற்றுப்படை என்னும் திருமுருகாற்றுப்படை. கலாநிதி. சு. வித்தியானந்தன் திருமுருகாற்றுப்படை சங்க இலக்கியத் தொகுப்பில் சேராதது என்ற கருத்தினர்[4]. இவ்வாற்றுப்படை ஊர்ப்பெயர் புனைவில் ஒரு வளர்ச்சி நிலையைக் காட்டுகின்றது. ஒரு தலைவன் ஆறிடங்களில் படைவீடு கொண்டு இருப்பதை ஆறு வகைகளில் நக்கீரர் புனைகின்றார். ஆற்றுப்படை ஒரு தலைவனைக் காணப் பல ஊர்களைக் கடந்து இரவலர் செல்லுகின்றனர். ஆறுபடைவீடுகளில் விளங்கும் ஆறுவடிவமான ஒரு தலைவனைக் காண ஒவ்வொரு ஊராகச் சென்றால் கண்டு வரலாம் என்று பேசுகிறது. துயராற்றுப் படைகள் இரவலன் ஒரு புரவலனைச் சென்றடைய பல ஊர்களைத் தாண்டி அடைவதாகப் புனைகின்றன. இங்கு ஊர்கள் புனைவு பெறுகின்றன; ஊருக்குரிய தலைவன் ஒவ்வொரு ஊரிலும் வீற்றிருத்தலைப் புனைவதில்லை. முருகாற்றுப் படையில் ஆறிடங்களிலும் ஆறுமுகன் அமர்ந்திருக்கும் காட்சி ஊர்ப்புனைவோடு விவரணம் பெறுகிறது. ஒவ்வொரு இடத்திலும் ஊர்ப்புனைவைக் காட்டிலும் ஊருக்கு உரியோனே புனையப்பெறுகின்றான். தெய்வம் என்பதால் முருகன் தனிச்சிறப்புப் பெற்றுப் புனைவுக்கு உரியவனாகிறான். இடத்தைக் காட்டிலும் இடத்துக்குரிய வினை முதலே மேலாண்மை பெற்றுப் புனைவு பெறுகின்றான். எட்டுத் தொகை நூற்புனைவுகளிலிருந்து ஒரு வளர்ச்சி பெற்ற ஊர்ப்புனைவினைப் பத்துப்பாட்டு ஊர்ப்புனைவுகளில் காண முடிகின்றது. இங்கு எந்த ஊரும் பெண்ணுக்கும் ஆணுக்கும் உவமை கூறப்படவில்லை. பத்துப்பாட்டில் ஊர்ப்புனைவு அங்கு வாழும் மக்களின் சமூக வாழ்க்கைப் புனைவாகப் புனையப்பட்டிருக்கிறது. தொகை நூல்களில் இன்பங்காட்டும் அகப்புனைவாக ஊர்ப்புனைவுகள் அமைகின்றன.

இவை ஆகுல நீர அல்ல. ஊர்ப்புனைவு வரலாற்றில் எட்டுத் தொகைக்குப் பின் புனைவு மரபினில் ஏற்பட்ட வளர்ச்சியையும் மாற்றங்களையும் பத்துப் பாட்டுப் புனைவுகள் காட்டுகின்றன. ஆதலின் பாட்டும் தொகையும் ஊர்ப்புனைவு ஆராய்ச்சிக்கு முதன்மைச் சான்றாதாரங்களாகின்றன.

பத்துப் பாட்டில் பெரும்பாணாற்றுப் படையும் பொருநர் ஆற்றுப்படையும் பட்டினப்பாலையும் சோழர் தொடர்பின; நெடுநல் வாடை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி பாண்டியர் தொடர்புடையன. குறிஞ்சிப் பாட்டும் பாண்டிய நாட்டுக்குரிய பாரி பறம்பு மலைக்குரியது. சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை இரண்டும் குறுநிலத் தலைவர்களுக்குரியது. திருமுருகாற்றுப்படை கடவுள் தொடர்புடையது; பாண்டிய நாட்டுக்குரியது. இத்தொகுப்பில் சேரநாட்டுக்குரிய நெடும்பாட்டு இல்லை; எட்டுத் தொகைத் தொகுப்பில் சோழநாட்டுக்குப் பங்கில்லை. எனினும், தொகைநூல்களில் சோழநாட்டுக்குரிய பாடல்கள் காணப்படுகின்றன. ஆனால் பத்துப்பாட்டு நெடும்பாட்டு இல்லாதது போலச் சேரநாட்டுக்கு நெடும்பாட்டுத் தனிப்பாட்டு இல்லை. ஆனால் அதற்கீடாகப் பதிற்றுப்பத்து அமைந்துள்ளது. ஒரு நெடும்பாட்டு பாடாது அதற்கீடாகப் பத்துப் பாடல்களைப் பாடுகின்ற இலக்கியப் படிநிலை வளர்ச்சியைச் சேரநாட்டில் காணமுடிகிறது. பாண்டிய நாட்டில் ஒரு பொருள் மீது பத்துப்பாட்டு ஒன்றாகப் பாடாமல் ஓர் இலக்கிய வடிவில் நெடும்பாடலாகப் பல்வேறு அடிகளான் ஓர் இலக்கிய வகையைப் பாடுகின்ற இலக்கிய வளர்ச்சித் தோன்றுகின்றது. தொகையாகவும் பாட்டாகவும் வளர்ந்த சங்க இலக்கியம், தான் தோன்றிய காலத்து ஊர்களையும் மக்களையும் புனைந்து பாடுகின்றது. இந்தப் புனைவு அந்தப் படைப்பாளிகளின் இயற்கையான உந்துதலில் அமைந்தவை. ஒவ்வொரு படைப்பாளிக்கும் தன் நாடு, தன் ஊர் என்ற உடைமை மனப்பான்மை இருத்தலின் தங்கள் பாக்களில் ஊர்களைப் புனைந்துள்ளனர்.

படைப்பாளிகள் பாடுபொருளுக்கு என்ன தேவையோ அதனை மனத்திலிருத்தி புனைந்திருக்கின்றனர். ஊரில் உள்ள அனைத்தையும் வகுத்தோ, தொகுத்தோ

தொடர்ச்சியாக எண்ணியோ புனையவில்லை. ஒளிப்படக் கருவியில் எந்தப் பகுதி விழவேண்டுமோ அந்த பகுதியை மட்டுமே அது படமாக்குவது போன்று கவிஞர்கள் தம் கருத்து வீச்சில் எது தேவையென்று படுகின்றதோ அதனை மட்டும் புனைந்துள்ளனர். பிற்காலப் புராணப் புலவர்கள் போல நாட்டுப் படலம் நகரப் படலம் என்று தங்கள் கற்பனைக்குரிய களமாக அமைத்து மனம் போன போக்கில் தம் கவிதை வளத்தைப் பெருக்கெடுத்து ஓடவிட்டிருப்பதைப் போலச் சங்கப் புலவர்கள் பாடிலர். அதனால் தெரிந்த பல செய்திகளைத் தங்கள் பாடல்களில் பதிவு செய்யாமையால் அவற்றை ஊர்ப்புனைவு ஆராய்ச்சியால் அறிந்துகொள்ள முடியவில்லை. சங்கப் புலவரின் இயல்பான மனம் தேவையானவற்றை மட்டும் பாடுகின்ற பாங்கு-மற்றொன்று விரியாமை ஆகிய இயல்புகள் ஊர்புனைவு ஆராய்ச்சியில் பல்வேறு செய்திகளை அறிந்து கொள்வதற்குத் தடையாக விளங்குகின்றன. எனினும், அவர்கள் ஊர்களைப் புனைகின்ற முறை, மரபு, ஊர்களுக்கு அவர்கள் கொடுக்கின்ற அடை போன்ற அனைத்துச் செய்திகளும் ஆய்வர்கள் அறிந்துகொள்ளத் தக்க வகையில் தொகையும் பாட்டும் ஆதாரங்களாகின்றன.

ஆய்வுப் பாகுபாடு

இந்த ஆய்வேட்டில் முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஆறியல்கள் உள்ளன. ஆய்வு மரபுக்கேற்ப முன்னுரை அமைகிறது. இவ்வியலில் ஆய்வு நோக்கம், ஆய்வு வரையறை, ஆய்வுக்குரிய சான்றுகள், ஆய்வு நெறிமுறை, ஆய்வேட்டின் அமைப்பு, முடிவுரை ஆகிவற்றை விளக்குகிறது. இவ்வியல் ஆய்வின் சுருக்கமாகவும் ஆய்வுத் திறனாகவும் அமைந்திருக்கிறது.

முதலாமியல் ஊர்ப்புனைவின் தோற்றமும் வளர்ச்சியும் ஆகும். சங்க இலக்கியத்தில் ஊர்களைப் புனைகின்ற மரபு எவ்வெவ்வாறு கருவாகி உருவாகி விரிவாகி வளர்ந்தது என்பதை விளக்குகிறது. ஊர்ப்புனைவின் தோற்றம் மக்கள் நாகரிக அடிப்படையின் முதற்களமான ஊரின் தோற்றத்தை விளக்கி அதைப் புனைகின்ற மரபு சங்க இலக்கியங்களுக்குள்ளேயே எவ்வெவ்வாறு வளர்ச்சி

பெற்றது என்பதை எடுத்துக்காட்டுகிறது. பிறமொழித் துணை கொண்டோ பிற இலக்கியத் துணை கொண்டோ தமிழ்க்கருத்துகள் ஆராயப் பெறாது தமிழ் ஆவணங்களைக் கொண்டும் தமிழ் மரபுகளைத் தழுவியும் விளக்கப்பட்டிருக்கிறது. தமிழர் ஊர் வளர்ந்தாலும் தளர்ந்தாலும் தமிழ்ப் புலவர்கள் அதைப் புனைகின்ற மரபை எவ்வாறு வளர்த்தனர் என்பதை ஊர்ப்புனைவின் தோற்றமும் வளர்ச்சியும் விளக்குகிறது. பாடல்களில் அடி எண்ணிக்கைக்கூடக்கூடப் புனைவு அடிகளும் கூடி வருகின்ற புனைவு வளர்ச்சி தெளிவாக வெளிப்படுகிறது.

இரண்டாமியல் **ஊர்ப்புனைவு வகைகள்** என்பதாகும். சங்க இலக்கிய ஊர்ப் புனைவினைப் பல்வேறு வகையாகப் பிரித்து ஆராய முடியும். இந்த வகைப் புனைவு விரிந்ததும் தனி ஆராய்ச்சிக்குரியதுமாகும். இவ்வியலில் ஊர்ப்புனைவில் சில பகுதிகளே ஆய்வேட்டின் பக்க எல்லை கருதி விளக்கம் பெறுகின்றன. அக்கருத்துக்களுக்கிடையே புனைவு நோக்கம் புனைவு உத்திகள் இரண்டும் எடுத்துக் காட்டப்பெறுகின்றன.

சங்க இலக்கியங்களில் ஊர்ப்பெயரை அடையாகப் பெற்ற பல புலவர்கள் இருக்கின்றனர். இவர்கள் பாட்டுகள் அனைத்தும் தனித்தனியே ஆராயப் பெற்றன. இந்த ஆராய்ச்சியால் ஆவூர் என்ற பெயரால் பலவூர்கள் இருத்தலும் ஒன்று பிறநாட்டினது என்பதும் மற்றது பாண்டிய நாட்டது என்பதும் வெளிப்படும். ஆவூர் பாடலிலேயே ஆமூர் என்று எழுதப்பெற்றிருக்கிறது. ஆவூர்ப் புலவர்களிடையே புனைவில் பெரும் வேற்றுமையில்லை. அவ்வூர் அவர்களுடைய சொந்தவூராயினும் புலவர்கள் மிகுந்து பாராட்டிப் பாடாது அக இலக்கிய மரபு தழுவிய அடிப்படையிலேயே ஊரைப் பாராட்டிப் பாடியிருக்கின்றனர். ஒரே பெயரால் பலவூர் இருத்தலும் அவ்வவ் ஊர்களில் பல புலவர்கள் இருத்தலும் அறியப்படுகின்றன. இந்நோக்கில் சங்கப் பாடல்கள் மேலும் ஆராய வேண்டும் என்பதை இந்த ஊர்ப்புனைவு ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இன்னொரு புலவரான அள்ளூர் நன்முல்லையார் தன் சொந்தவூரான அள்ளூரைப் பாடியிருக்கின்றார். அவரும் தன்னுடைய பாடலில் அள்ளூரைப் பற்றிய

குறிப்பினைத் தந்திருக்கிறார். ஆனால் அவர் அதனை தன்னுடைய ஊர் என்று பாடலில் சுட்டவில்லை. ஆயினும் தன்னுடைய ஊரைச் சுட்டியிருப்பது சங்கப் புலவர்களிடையே சொந்தவூர் பற்றிய உணர்வு இருந்தமையை எடுத்துக்காட்டுகிறது. தம்பெயருக்கு அடையாகக் கொண்டும் அந்த ஊர்ப் பெயரைப் பாடலில் சுட்டியும் பல புலவர்கள் உள்ளனர். ஈங்கு வகைக்கு ஒன்றாக இருதிறத்தார் மட்டும் எடுத்து ஆராயப்பெற்றனர். சொந்தவூரைப் பாடிய புலவர் என்ற பொருளில் சங்கப் பாடல்கள் ஆய்வு பெற வாய்ப்புண்டு. அத்தகைய ஒரு நோக்குடைய ஆய்வு சங்க இலக்கிய ஆய்வை வளப்படுத்தக்கூடும். இந்தப் பகுதியில் அள்ளூர், ஆவூர் புலவர்கள் ஊரைப் புனைந்திருக்கக்கூடிய திறம் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஊரைப் புனையாது நிலத்தையும் காலத்தையும் பிறவற்றையும் புனைந்த பல புலவர்களின் புனைவுத்திறமும் ஈண்டு விளக்கப் பெற்றுள்ளன. அதன்மூலம் சங்கப் புலவர்கள் புனைவுத்திறம் இருப்பினும் தாம் பாடுகின்ற பாடுபொருளுக்குத் தேவையிருந்தால்தான் ஊரைச் சுட்டிப் புனைவர் என்ற கருத்து நிலைநாட்டப்படுகிறது. உரிய பொருள் இன்றிக் கருப்பொருளையே புனைந்து பாடுகின்ற மரபு சங்க இலக்கியப் புலவர்கள்பால் இல்லை; வேண்டுழி அவர்கள் ஊரைப்புனைவர். இதனால் அகப்பாடலாயினும் புறப்பாடலாயினும் எல்லாச் சூழலிலும் சங்கப்புலவர்கள் ஊரைப் புனைகின்றபோது ஒரே வகையான மரபினையே வரைவினையே பின்பற்றுகின்றனர். பரிபாடல் திறத்தில்தான் ஊரமைப்பைப் புனைகின்ற புனைவுக் குறிப்பு உள்ளது. சங்க இலக்கிய ஊர்ப்புனைவைப் பாடி வந்த புலவர்கள் ஊர்களின் அமைப்பைக் கண்ணால் கண்டமையால் ஊரின் அமைப்பை விவரித்துச் சொல்லிப் புனைந்திருக்கின்றனர். புறப்பாடல் புனைவுகளும் ஆங்காங்கே எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. இவற்றிலும் பெயர் சுட்டப்படாத ஊர்கள் புனையப்பட்டு இருக்கின்றன. இவை அகப்பாடல்களின் தாக்குதலால் எழுந்தனவாகும். இவ்வாறு ஊர்ப்புனைவு ஆராய்ச்சியில் இந்த இயல் ஆய்வில் கண்ட பல கருத்துகளைத் தொகுத்து வழங்குகிறது.

சங்க இலக்கிய நடை நெகிழ்ச்சியற்ற இறுக்கமான நடை (Synthetic); அஃது ஓரசைச் சொற்களால் பல கருத்துகளை விளக்குவன. இவற்றில் பெயர்களே ஊருக்கு அடையாகிப் பல்வேறு கருத்துகளை உணர்த்துகின்றன. அடை என்பது அடையாகவும் பெயருக்கு அருகே நிற்கப் பெயராகவும் காணப்படுகிறது. இவ்வியலில் மூதூர் என்ற ஊர் தனியே பல்வேறு அடைகளைப் பெற்றிருப்பதை இவ்வியல் உணர்த்துகிறது. இந்த ஊர்களால் தமிழரிடையே தனித்தனியே பல்வேறு பண்பாட்டுக்கேற்ப ஊர்கள் அமைந்திருந்த வகையை அறிந்து கொள்ள முடிகிறது. பேரிசை மூதூர், நியம மூதூர் என்னும் அடைகளின் அடிப்படையில் ஊர்ப்புனைவு விளக்கப்படுகின்றது. நியம மூதூர் என்பது வணிக மையம் இருந்த இடமாகும். அதனால் நியம மூதூர் என்ற அடை பெறும்போது ஊர்கள் வணிகச் சார்புடையனவாகப் புனையப்பெறுகின்றன. அடைகளும் புனைவுகளும் இணைந்து செல்லுகின்றன. அடைகளின் மூலம் ஊரின் புனைவைச் சங்க இலக்கியம் காட்டுவதே **மூதூர்ப்புனைவுகள்** என்னும் மூன்றாமியலால் இவ்வியலால் உணர்த்தப்படுகிறது.

சீறூர்ப் புனைவுகள் நான்காமியலாகிறது. சங்ககால ஊர்கள் சிறியனவாதலின் சீறூர் என்று சுட்டப்பட்டன. இந்த சீறூர்கள் 'அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்' என்று புலவர்களால் சுட்டப்பட்டன. இக்காலத்துச் சிற்றூர் என்று வழங்கப் பெறுதல் போலப் பண்டு, சீறூர் என்று சொல்லப்பெற்றது. சிற்றூர் என்ற ஆட்சியில்லை. சீறூர் என்ற புனைவு பாலை நிலத்தையொட்டி வழியிடை அமைந்த ஊராகும். அவ்வூரின் புனைவு பாலையைச் சார்ந்தாயினும் குறிஞ்சி, முல்லையைப் புனைவதாக அமைகிறது. வறுமை வாழும் எளிய ஊர் சீறூர். பிரிந்து செல்லும் தலைவனோ உடன் போகும் தலைமக்களோ அங்குத் தங்கிச் செல்வதாக இப்புனைவுகள் சுட்டுகின்றன. வினை முடித்து மீண்டு வரும் தலைவன் இச்சீறூரில் தங்குவதில்லை. அவன் யாண்டும் தங்காது நேரே வீடு வருகின்றான். ஏழ்மை நிறைந்த சீறூரை அகநானூறும் பிறவும் புனைந்து காட்டுகின்றன. சீறூர் என்றால் சுரத்தைச் சார்ந்த ஊர் என்பதை இந்த புனைவுகள் வெளிப்படுத்துகின்றன.

'அம்பல், அலர்' என்ற சொற்கள் அகப்பொருளுக்குரியன. இவை அகப்பொருட் கலைச் சொற்கள். ஆரவாரமும் செய்தி விரைந்து பரவுதலும் ஆகிய ஒரு குறித்த நிகழ்ச்சியைக் காதலன் காதலி களவொழுக்கத்தில் அம்பல் என்றும் அலர் என்றும் சங்கப் புலவர் பெயரிட்டுச் சொல்லினர். இந்தச் சொற்களைச் சங்கப் புலவர்கள் அடையாக அமைத்துப் பல பாடல்கள் யாத்திருக்கின்றனர். இந்தத் தொடர் அடைகள் ஊரின் இயல்பை விளக்குவன. சங்க இலக்கியங்களில் இத்தொடராட்சி அம்பலூர் என்றும் அம்பல் மூதூர் என்றும் அலரூர் என்றும் அலர்மூதூர் என்றும் பயிலுகின்றன.

இந்த தொடர்களின் மூலம் ஊரின் இயல்பைப் புலவர்கள் புனைந்து காட்டுகின்றனர். அகப்பொருளில் தலைவன் தலைவியர் காதலொழுக்கம் - கற்பொழுக்கம் பற்றி ஊரார் பேசுவது மிகுதி. அதனை விளக்குமாறும் அதனால் எழும் ஊர் நிலையையும் இந்தப் பாடல்கள் வெளிக்காட்டுகின்றன. இயல்பான ஊர் அம்பலாலும் அலராலும் எழுச்சியும் செயல்திறமும் பெற்று இயங்குவது அறியத்தக்கது. சங்கப் புலவர்கள் இந்தத் தொடர்களை எவ்வெவ்வாறு தங்கள் பாடல்களில் எந்தெந்த இடங்களில் நிறுத்தியுள்ளனர் என்பது ஆராய்ந்து விளக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் அம்பல் ஊர் அலரூர் என்ற இரு தொடர்களும் ஊர்ப்புனைவில் தனி ஒரு குறியீடாக அமைந்து ஊர்ப்புனைவைக் காட்டுகின்றன. இதனை விளக்குவதே **'அம்பலூர் அலரூர்'** என்ற ஐந்தாமியலின் அடிப்படையாம்.

ஆறாமியல் **ஊர் உவமை** என்பதாகும். சங்க இலக்கியத்தில் சங்கப் புலவர்கள் பல்வேறு பெயர் சுட்டிய ஊர்களை உவமைப் படுத்தியுள்ளனர். இந்த ஊர்களில் பெரும்பாலானவை தலைவிக்கோ தலைவியின் உறுப்புக்களுக்கோ உவமையாக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஊர்ப்புனைவுகள் அனைத்தும் பெயர் சுட்டிய ஊர்கள். சங்கத் தமிழகம் அறிந்த மிகப்பெரிய ஊர்கள்; இந்த ஊர்களைச் சுட்டிப் புலவர்கள் ஊரைப் புனைந்து பாடியுள்ளனர். இவையனைத்தும் முழுமையாகத் திரட்டப்பட்டு வரன் முறைப்படுத்தி எழுதப்பட்டிருக்கின்றன.

தலைவிக்கு ஊரை உவமை சொல்லுதல் போலத் தொண்டி மாநகரை அம்மூவனார் தலைவனுக்கும் உவமை கூறியுள்ளார். இந்த மரபு மீறல் இவ்வியலில் ஆய்வாளரால் கண்டுணர்த்தப்பட்டிருக்கிறது. தலைவியைப் போலப் பரத்தையர்க்கும் பரணர் ஊரை உவமை கூறியுள்ளார். தலைவி கையில் அணிந்துள்ள தொடிக்கும் உவமை கூறியுள்ளார்.

முடிவுரை இறுதியாக அமைகிறது. ஒவ்வொரு இயலின் முடிவுகளும் அந்தந்த இயலின் இறுதியில் அமைந்துள்ளன. எனவே, இவ்வியல் ஆய்வுப் போக்கின் ஒட்டுமொத்தமான கருத்தினை எடுத்துரைக்கின்றது. மேலும் வருங்கால ஆய்வர்களுக்குரிய களத்தினையும் தந்துள்ளது.

சான்றெண் விளக்கம்

1. நாடு.1006, 1060,ப.51; ஊர். 1048, 1060, 1447, 1575, ப.118.
தொல்காப்பியம் சொல்லடைவு, (தட்டச்சுப் பிரதி), அழகப்பா பல்கலைக்கழகம், தமிழ்த்துறை, காரைக்குடி-3.

2. பரிமேலழகர், (உ.ஆ.:1980), **பரிபாடல் திரட்டு**, பா. எண்.7. (டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, ஐந்தாம் பதிப்பு), ப.239.

3. எஸ். வையாபுரிப்பிள்ளை, (1955), **இலக்கிய தீபம்**, (பாரிநிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு), ப.12.

4. சு. வித்தியானந்தன், (1954), **தமிழர் சால்பு**, (கல்ஹின்னை, கண்டி), ப.20.

இயல் ஒன்று

ஊர்ப்புனைவின் தோற்றமும் வளர்ச்சியும்

ஊர்ப்புனைவின் தோற்றமும் வளர்ச்சியும்

வாழ்வும் ஊரும்

மக்கள் ஆணும் பெண்ணுமாகக் கூடி வாழத் தொடங்கியபோது குடும்பங்கள் உருவாகின; அவர்கள் சேர்க்கையால் மக்கள் பெருகக்குடும்பங்கள் பல குழுவாக வளர்ந்தன. குழுக்கள் பெருகப் பெருகவும் வாழ்ந்து வளரவும் இயற்கையின் அழிவுகளிலிருந்து பிழைத்து வாழவும் தனி இடங்கள் மக்களுக்குத் தேவைப்பட்டன. கூட்டம் கூட்டமாக மக்கள் இணைந்து வாழ்ந்தபோது ஊர் உண்டாயிற்று. உணவையும் உடையையும் பெற்ற மனிதன் உறைவிடத்தையும் தனக்கெனத் தேர்ந்தெடுத்துக்கொண்டான். அவன் அதனை இயற்கைச் சூழலிடையே தனிமைப்படுத்தி அமைத்து வாழ்ந்தான். அவ்வாறு வாழ்ந்த சூழலும் இடமும் அவனுடைய தேவைகளை நிறைவு செய்யும் ஊராக வளர்ச்சி பெற்றது. மக்கள் வாழ்க்கை வளமும் பெருக்கமும் பெற்றுத் தழைத்தது ஊர்களில்தான் என்பது உண்மையாகும். நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியாகவும் நாகரிக வளர்ச்சி பெற்ற மனிதனை உருவாக்கியதே ஊர்களாகும். நாகரிகமும் பண்பாடும் தழைத்த சங்கத் தமிழகத்தில், ஊர்கள் பல் வளமோடும் பொலிவோடும் திகழ்ந்தன.[1]

ஊரும் ஊர் உருவாதலும்

சங்கப் பனுவல்கள், பல்வேறு ஊர்களைப் பெயர் சுட்டியும் சுட்டாமலும் இலக்கியத்தில் உரைக்கின்றன. ஆனால் தொல்காப்பியத்தில் எந்த ஊரின் பெயரும் நூலுக்குள் சுட்டப்படவில்லை என்பது உறுதி. கபிலர் என்ற கற்று வல்ல புலவர், பாரியின் நாட்டைப் பற்றிக் கூறும்போது,

> முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
> முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர் (புறம்.110:3-4)

என்று இயம்புகிறார். பறம்பு நாட்டில் முந்நூறு ஊர்கள் அடங்கியிருந்தன. இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் குமட்டூர்க் கண்ணனார்க்கு ஐஞ்ஞூறூர் பிரமதாயம் கொடுத்தான் என்று பதிற்றுப் பத்துப்பதிப்பகம் குறிக்கிறது.[2] இவை சங்ககாலத்தில்

ஊர்கள் இருந்தமையை விளக்குகின்றன. சங்கநூல்கள் 'மூதூர்' என்றும் தொல்புகழ் மூதூர்' என்றும் 'அம்பலூர்' என்றும் 'அழுங்கலூர்' என்றும் ஊர்களைச்சுட்டுகின்றன. சங்கநூல்களில் ஊர்பற்றிய குறிப்புகள் இருப்பது போலத் தொல்காப்பியத்திலும் ஊர் சுட்டப்படுகிறது. இவற்றால் ஊர்களைப்பற்றித் தெளிவாகவும் விரிவாகவும் அறிய முடிகிறது.

கருப்பொருளில் எண்ணாமை

ஊர்களைப்பற்றியும் ஊர்ப் பெயர்கள் பலவற்றையும் சங்கநூல் உணர்த்துகின்றன. தொல்காப்பியம் முதற்பொருளிலும் கருப்பொருளிலும் நிலத்தையும் பயிரின உயிரினங்களையும் பேசுதற்கு வாய்ப்பளிக்கிறது. கருப்பொருளில் தொல்காப்பியர் 'ஊரை' இணைத்து எண்ணிலர். பின் வந்த நம்பியகப் பொருளோ, கருப்பொருளில் ஒன்றாக 'ஊர் நீர் பூ மரம் உணாப்பறை' என்று ஊரைச் சுட்டுகின்றது.[3] இந்நூல் போலத் தொல்காப்பியம் ஊரைக் கருப்பொருளில் சுட்டாமை ஆராயத் தக்கது.[4]

ஊர்கள் எவ்வாறு உருவாயின என்பதைத் தொல்காப்பியக் குறிப்புகளால் அறிய முடியவில்லை. ஊர்கள் எவ்வாறு சிறுகச்சிறுக உருவாயிற்று என்று கால வரிசைப்படி அறியத்தக்க வரலாறுகளோ குறிப்போ கிட்டில; ஆனால் கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

புன்பொருவர் வழிபொன்ற
விருங்கோவேண மருங்கசாயக்
காடுகொன்று நாடாக்கிக்
குளம்தொட்டு வளம் பெருக்கிப்
பிறங்கநிலை மாடத் துறத்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு புழையமைத்து (பட்டினா. 281-286)

என்று கரிகாலன், உறையூரைப் பெருக்கிய வகைபாடுகிறார். இது காட்டை அழித்து நாட்டையும் ஊரையும் ஆக்கிய வகையை எடுத்துக்காட்டுகிறது. இந்த ஒரு குறிப்பே சங்க காலத்தில் ஊர் உருவான வரலாற்றை உரைக்கின்றது. இதனைத் தொடர்ந்து கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஊரைப் புனைகிறார். பட்டினப்பாலையின் ஒரு பகுதி (239-270) பகைவர் நாடும் ஊரும் அழிவதைப் பேசிட அதனைத் தொடர்ந்து வரும் பகுதி (271-299) ஊரமைவதையும் ஊர்நிகழ்ச்சிகளையும் புனைகிறது. சங்கப்புறப் பாடல்களில் அழிவைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. ஆனால் அவற்றில் ஊர் உருவாதல் பற்றிய குறிப்புகள் அமைந்தில. தொல்காப்பியம் புறத்திணையிலோ அகத்திணையிலோ ஊர்கள் உருவாகின்ற முறையைக் காட்டும் குறிப்புகள் உடையதன்று. ஊர், பகைவரால் அழியும் என்ற குறிப்புப்படத்துறைகள் அமைப்பரே அன்றி ஊரை அமைத்தலாகவோ, ஊரைத் திருத்திக் கட்டுதலாகவோ துறைகள் ஏதும் புறத்திணையில் அமைக்கப்படவில்லை. தொல்காப்பியத்தில் ஊரைப்பற்றிக் காணப்படும் செய்திகள், ஊரின் வளர்ச்சியையும் சிறப்பையும் எடுத்தியம்புகின்றன.

தொல்காப்பியமும் ஊரும்

தொல்காப்பியம் தமிழ்மக்கள் பண்பாட்டையும் வாழ்வியலையும் வளர்ச்சியையும் மொழிநிலையையும் காட்டுகிறது. மக்கள் கூடிக் குடும்பமாய் ஊராய் வாழ்ந்த போது மொழி உருவாயிற்று. மக்கள் ஒன்றாய் உறவாடி வாழ்ந்து ஊர் உண்டாகிப் பேச்சு, இலக்கியம் என்று பண்பாடு படிப்படியாக வளர்ந்தது. என்பதை முன்னேற்ற வளர்ச்சியில் இலக்கிய இலக்கணங்கள் தோன்றுவதற்கு முன்னரே ஊர்கள் தோன்றி உருவாகிவிட்டன.

விதந்து சுட்டா ஊர்

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் 'ஊர்' என்று ஊரைக் குறிக்கின்ற சொல்லை எடுத்தோதிலர். புள்ளிமயங்கியலில் 'ரகர' ஈற்றுச் சொற்களைச் சொல்லும் போதே ஊர் என்ற சொல்லும் அந்தவிதிக்குள் கட்டுப்பட்டு விடுகிறது. அவர் ஆர், வெதிர், சார், பீர் என்று ரகர ஈற்றுச் சொற்கள் நான்கினையே விதந்து

விளம்புகிறார்.[5] ஊர் என்ற இடப் பொருள் காட்டும் சொல் இவ்வதிகாரத்தில் இல்லை. ஊரன்றித் தெரு. சேரி. பாக்கம். குடி போன்ற இடஞ்சுட்டுங்கிளவிகளையும் தொல்காப்பியர் சுட்டிக் கிளந்திலர். மக்கள் கூடி வாழும் ஊரைக் காட்டும் சொல், மிகுதியாக வழங்கிப் பொது விதிகளைப் பெறுவதாகத் திகழ்ந்தமையான் ஆசிரியர் தனியே எடுத்துச் சொல்லாது விடுத்தாராதல் வேண்டும். ஒரே வடிவையும் வேறு பொருளைமுடைய ஏறிவருதல் என்ற பொருள் தரும் 'ஊர்' என்ற சொல் குற்றியலுகரப்புணரியலில் ஆளப்பட்டிருக்கிறது. "அவை, ஊர்பத்தினும் அத்தொழிற் றாகும்" (தொல். எழுத்து.473) "ஒன்று முதலாகிய பத்துஊர் கிளவி" (தொல். எழுத்து.475:1) என்று வருவனஇதனை உணர்த்தும். எழுத்ததிகாரத்தில் இந்தச்சொல் இரண்டிடங்களில் பயிலுகின்றது. இவை ஊர்ந்து வருதல் என்ற பொருளில் தான் ஆளப்பட்டிருக்கின்றன; இஃது ஊர் என்ற சொல்லுக்கு ஒத்த வடிவமேயன்றி ஒத்த பொருளினதன்று. ஓரிரு குடிகளாக இருக்கின்ற வீடுகள் சிறிது சிறிதாக ஊர்தலால் ஊர் என்று பெயர் ஏற்பட்டது. அதுபோல நகர்தலால் நகராயிற்று என்ப. இவ்வாறு இடப்பொருளையுணர்த்தும் சொல் (ஊர்) பயின்றிலதாயினும் ஊர் என்ற அமைப்பு-ஊர் என்ற உணர்வு-ஊர் என்ற பகுப்பு தொல்காப்பியர் காலத்தில் இருந்தே உள்ளது.

உரைதருமுண்மை

இளம்பூரணர் ஊர்க்கண், ஊர்க்கு, ஊர, ஊரன், ஊரா கொள் என்பன போன்றவற்றை மேற்கோள் காட்டுகின்றார்.[6] இந்த எடுத்துக்காட்டுகளின் வழியே ரகரஈற்றில் 'ஊர்' என்ற சொல் தொல்காப்பியரால் கண்டறியப்பட்டுப்புணர்ச்சி விதி கூறப்பட்டிருக்கிறது என்ற உண்மை வெளிப்படும்.

நிலமா? ஊரா? இடமா?

சொல்லதிகாரத்தில் 'ஊர்' என்ற சொல்லாட்சி இல்லை. ஆசிரியர் வேற்றுமையியலில் 'வினை செய் இடத்தின் நிலத்தின் காலத்தின் எனா அ'[7] என்று ஏழாம் வேற்றுமையை விளக்குகின்றார்; அதை இடவேற்றுமையாகக்

காட்டுகின்றார்; ஆயினும் ஊர் என்ற பெயரை ஆசிரியர் அங்கும் சுட்டிலர். பெயரியலில் அஃறிணைப்பெயர், உயர் திணைப்பெயர், விரவுப் பெயர் என்று பேசுபவர், நிலப் பெயர்.[8] என்ற ஒன்றைக்குறிக்கிறார். ஆனாலும் ஊர் என்ற பெயரை அவர் சுட்டவில்லை.

நிலம் எனல்

எச்ச வியலில் திசைச் சொல் என்றும் வட சொல் என்றும் சொற்களை ஆசிரியர் பகுக்கின்றார்.[9] 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்'[10] என்ற குறிப்பால் தமிழ்நாட்டை ஒட்டிப் பன்னிரண்டு நிலங்கள் இருந்தமையை அறிய முடிகிறது. ஆசிரியர் நாடுகளின் பெயரைச் சொல்லவில்லை. சொல்லைப் பகுக்கும் போது, இப்பன்னிரண்டு நிலத்து வழங்கும் சொல் திசைச் சொல்லாகும் என்பர்; இந்தப் பாகுபாட்டால் தமிழ் மண் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்திருந்தமையை அறிய முடிகிறது. இந்த பிரிவு ஊர், நாடு என்று ஏற்பட்ட பின்னர்தான் அமைந்திருக்க வேண்டும். இவற்றால் தொல்காப்பியர் காலத்திலேயே தமிழ்மக்கள் கூட்டம் கூட்டமாகத் தனித்தனி இடங்களில் வாழுகின்ற நாகரிக நிலைக்கு உயர்ந்தமை புலனாகும்.

நிலமும் வையமும்

எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் 'ஊர்' என்ற சொல்லைச் சுட்டாத தொல்காப்பியர் எச்சவியலில் 'பன்னிருநிலம்' என்ற பகுப்பைச் சுட்டுவர். அதனைப் போலவே பொருளதிகாரத்திலும் 'படுதிரை வையம் பாத்திய பண்பே'[11] என்று உலகம் ஐந்தாகப் பிரிந்திருந்தமையை ஆசிரியர் உணர்த்துகிறார். இவண் முதற்பொருளைச் சுட்டி, அது நிலம், பொழுது என்று இரண்டாக வரும் என்று பேசுகிறார். அவர் நிலத்தைக் காடு, மணல், புனல், வரை என்று நான்காக்குவர். இவையெல்லாம் பெரிய பிரிவாக அமைந்தவை; இவற்றுக்கு உட்பிரிவும் உண்டு. இப்பாகுபாடுகள் நாடு, மொழி, இனம், காலம் ஆகிய அனைத்தும் கடந்து என்றும் மாறாதவை; ஊர், சேரி என்பன திணைக்குள் அமைந்த உட்பிரிவுகள்.

அடைபெற்ற புனைவு

அகத்திணையியலில் தொல்காப்பியர் 'ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்' (தொல்.40) என்று குறிப்பர். ஊரைப் பேரூர் என்றும் ஏமப்பேரூர் என்றும் ஆசிரியர் சுட்டுவது ஊர் நன்றாக வளர்ச்சி பெற்றிருந்த் நிலையைக் காட்டுகிறது. ஈண்டு ஊர் என்று தொல்காப்பியர் சுட்டாது, ஊருக்கு இரண்டு அடைகள் பெய்து ஊரின் புனையத்தக்க நிலையைப் புலப்படுத்துகிறார். ஊரை அடை கொடுத்துப் புனைதலைத் தொல்காப்பியரே இந்த அடையின் மூலம் தொடக்கியிருக்கிறார். ஏமம் பொருந்திய ஊர் என்றும் பெரிய ஊர் என்றும் தொல்காப்பியர் இலக்கண நூலிலேயே புனைவை முதற்கண் தொடங்கினார். 'ஏமப் பேரூர்ச் சேரி' என்று ஊரை நடுவணதாக்கி முன்னே ஈரடையும் பின்னே ஒரு சொல்லும் அமைத்து ஊரைப்புனையும் மரபுக்குத் தொல்காப்பியர் வழிகாட்டுகிறார். ஊரைச் சொல்லி ஊருக்குரிய தரத்தையும் தொடர்ந்து ஆசிரியர் சுட்டுகிறார். இஃது ஊர்ப்புனைவின் முதல்சுவடு. இத்தொடரை நச்சினார்க்கினியர் 'பதியெழு அறியாப் பேரூர்'[12] என்று விளக்குவர். இடத்தைக் குறிக்கும் 'சேரி' என்ற சொல்லும் இங்கு இடம் பெறுகிறது; பாதை வழியையும் ஆசிரியர் 'சுரம்' என்பர். இங்ஙனம் ஊரின் உறுப்புகளான சேரியும் ஊருக்குப்போகச் சுரமும் தொல்காப்பியத்தால் புனையத்தக்கனவாகின்றன.

பாதைப்புனைவுக்களம்

ஊர்கள் ஒன்றோடொன்று இணைய வேண்டுமாயின் வழி-பாதை-தொடர்புக்கு இருத்தல் வேண்டும். இவ் வழியைச் சுரம் என்பது அகத் திணை மரபு. இது பாலைத் திணையில் புனைவுக்குரிய பகுதியாகும். பாதையைச் சுட்டும் சுரன் என்ற சொல் வந்தாலே அது பாலைத் திணைச் சார்புடையது என்பது தெளிவு. இந்த நூற்பாக் குறிப்பால், பாலைத் திணையில் பாதையினும் ஊர்ச்சேரியினும் தாயர் உடன் போன தலைவியரைத் தேடிச் செல்வர் என்பது பெறப்படும். இதனால் தொல்காப்பியர் ஊரையும் சேரியையும் அகப்பாடல்களில் புனைதற்கு, வழி அமைக்கிறார்.

காதலர் காணுமிடப்புனைவு

களவியலில் தலைவன் தலைவியைக் காண ஓரிடம் வேண்டும். இவ்வாறு சந்தித்த இடத்தில் மீண்டும் தலைவன் தலைவியைச் சந்திப்பான். இதனை இடந்தலைப்பாடு என்பர். தொல்காப்பியர் 'இடந்தலைப்படல்'[13] என்று செய்யுளியலில் மட்டும் சுட்டுவர். இத்தொடரே ஊரின் ஒரு பகுதியை மையப்படுத்தி விளக்குகிறது. களவுப்புணர்ச்சியில் இடந்தலைப் பாடு, பகற்குறி, இரவுக்குறி என்று வருவன வெல்லாம் ஊரின் பகுதியாக - ஊரை மையமாக-வைத்து வருவன. பகற்குறியிடம் மனையை விட்டு வெளியிடமாகும்.

பகற்புணர் களனே புறன்என மொழிய
அவள் அறிவுணர வருவழி யான (தொல். நூ. 1078)

பகற்குறியிடத்தைச் சுட்டும் போது புனைவில் இயற்கை இடம் பெறுகிறது. அப்பகுதி ஊரின் பகுதியாகும். இரவுக்குறியை உணர்த்த ஒருவகையாகவும் பகற்குறியை உணர்த்த இன்னொரு வகையாகவும் ஊர்ப்புனைவு அமையும்.

காண்டலும் ஊர்வினாதலும்

தொல்காப்பியர் காலத்தில் ஊர்கள் பலவாகப் பெருகிமக்களும் வெவ்வேறு ஊர்களில் வாழ்ந்தனர். தலைவியையும் அவள் ஆயத்தாரையும் காணும் தலைவன், 'அவர்களை ஊர், பெயர் கேட்டுத் தான் காணாது தொலைத்த மானைக் கண்டீரோ? என்று வினவுவான். இதனைத் தொல்காப்பியர்,

ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்
நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித்
தோழியைக் குறையுறும் பகுதியும் (தொல்.நூ.1048:11-13)

என்று பாடுவர். தலைவன் தலைவியின் ஊரை வினாவல், இருவரும் தனித்தனி ஊரினர் என்பதைக் காட்டும். இவ்வண்ணம் ஊரைச் சுட்டும் போது ஊர் புனையப் பெறுகிறது.

கண்டோர் பேச்சும் ஊரும்

தொல்காப்பியத்தில் 'கண்டோர்' என்று சுட்டப்பெறுபவர்கள் அனைவரும் பாதை அல்லது சுரத்திடைத் தலைவன் தலைவியரையோ தாயரையோ காண்பவர்களே அன்றிப் பிறரல்லர். இவர்கள் கூற்றின் பாடுபொருள், சுரத்தைப் பற்றியதாக அமைகின்றது.

பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி
வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்
ஊரது சார்வும் செல்லுந் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்

(தொல்.986:1-4)

இங்குப் பாதையிடையே செல்லும் போது கால நிலையாலும் வழியின் இயற்கையாலும் செல்லுவோர்க்கு அச்சம் தோன்றும். அச்சம் தரத்தக்கதாகப் பாதையைப் புலவர் புனைவர்; பாதையில் செல்லுவோர்க்கு அருகிலுள்ள ஊரைப் பற்றியோ நாட்டைப் பற்றியோ ஆர்வத்துடன் உரைப்பர், கண்டோர். இவை ஊரையும் சுரத்தையும் பாடற்குரிய களங்கள்.

உடன் போகின்ற தலைவனை நோக்கிக் கண்டோர் காலத்தையும் வழியையும் சுட்டி அவற்றின் குற்றங்களைக் கூறுதலும் ஊர்ப்புனைவின் ஒரு பகுதியாகும். உடன் போவார்க்கு வழியிடையே தங்க அண்மையில் ஊருண்மையைத் தலைமக்கட்குச் சொல்லும் போது ஊரைப்புனைய வாய்ப்பு நல்கப் பெறுகிறது. தமிழருடைய காதல் வாழ்க்கையில், தலைவன் தலைவியர் உடன் போக்காக வெளியே சென்றதும், அவர்களைத் தேடிவருபவர் தேடுமிடங்களாகத் தொல்காப்பியர், ஊர்களைச் சுட்டுகிறார். அதுபோல உடன் போக்காகச் சென்றவர்களிடமும் கண்டோர் பாதையையும் ஊர் அருகிலுள்ள தன்மையையும் விளக்கிப் பேசுகின்றனர். இவையெல்லாம் அகப்பாடல்களில் பாதையையும் ஊரையும் சேரியையும் புனைய வாய்ப்பான களங்கள். இவை ஊர்ப்புனைவின் தொடக்கம் என்பது உறுதி.

சுரப்புனைவு

தலைவன் கூற்றில், சுரத்தைப் பற்றித் (நூ.987:1) தொல்காப்பியர் சொல்லுகிறார். தலைவியை உடன் போக்காகத் தலைவன் சுர(பாதை)த்தில் அழைத்துச் செல்லுகிறான். இதனால், இக்கூற்றில் பாடல் பாடும் புலவர்கள் சுரத்தைப் புனைந்து பாடுவர். அதே நூற்பாவில் 'இடைச்சுர மருங்கின் அவள் தமர் எய்தி' (நூ.987:3) என்று தொல்காப்பியர் உரைப்பர்; இதனால் இடைச்சுரத்தைப் படைப்பாளிகள் அடையாளங்காட்டிப் பாட வேண்டிய சூழல் எழுகிறது. இவை இரண்டும் பாலைத் திணைக்குரியனவாய்ப் பாதையைப் புனைய வழி காட்டுகின்றன. பாதையைப் புனைவுழி ஊரையும் தேசத்தையும் புனைந்த குறிப்புகளும் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.[14]

பாதையைப் புனைதல்

'ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்' (தொல்.நூ.1060:29) என்று பாதையிலுள்ள ஏதத்தைத் தோழி முதலியோர் அறிந்து வருந்துவர். இதனைப் பாடு பொருளாக்கும் படைப்பாளி, பாதையை அஞ்சத்தக்கதாகப் புனைந்து காட்டுவர். தலைவன் இரவுக்குறிக்காக வரும் போது வழியின் தீமையைக் காட்டுவதற்கு இக்குறிப்புப் பயன்படுகிறது. இப்புனைவில் ஆறின்னாமையையே புனைதல் வேண்டும் என்ற பாடுதற்குறிப்பு வழங்கப்பெறுகிறது. 'சுரமென மொழிதலும் வரைநிலை இன்றே' (தொ.நூ.1162) என்பதும் சுரத்தின் கொடுமையை மிகுத்துப் புனைய வாய்ப்பளிக்கின்றது. ஆற்றது தீமை, இன்னாமை என்று தொல் காப்பியர் சுரத்தைக் கூறுதற்குத் தருகின்ற குறிப்புகள், பாடுபொருளுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. பாதையில் இன்ன இன்ன தீமைகள் உள்ளன என்றும் இவை இவை அச்சமூட்டுவன என்றும் பாடுதற்கு இவை வழிகோலுகின்றன. இவ்விரு சூழலிலும் பாதைப் புனைவு இன்பமாக அமையலாகாது. 'பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி' (தொல்.986:1) என்பதும் பாதையை அச்சம் தருவதாகப் புனைய வேண்டும் என்றே காட்டுகிறது.

புனைவுக்கு வாய்ப்பிடம்

நாடும் ஊரும் இல்லும் குடியும்
பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி
அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ

(தொல்.நூ.1060:33-35)

இப்பகுதியில் தோழி தலைவனுடைய நாடு, ஊர் ஆகியவற்றைப் பாடலில் பாடத் தக்க களம் அமைகிறது. திருமணம் முடிந்திடவேண்டித் தோழி தலைவனைப் விளித்துப்பேசுகிறாள். அப்போது தலைவன் பிறந்த நாடு, அதன் பகுதியாகிய குடியிருப்பு, மனை ஆகியவற்றைச் சிறப்பித்துக் கூறுவாள். இப்பகுதி விளியாக அமையும்; தலைவனைத் தோழி விளிப்பதாகவும் அமையும். இதனை,

> நாடு முதலாயின சுட்டித் தலைவன் மாட்டுத் தோன்றுங் கிளவியாவன நீ இத்தன்மையாகிய நாட்டையுடையை இத்தன்மையாகிய நகரையுடையை; இத்தன்மைத்தாகிய இல்லையுடையை; இத்தன்மைத்தாகிய குடிப் பிறப்பை யுடையை; இத்தன்மைத்தாகிய சிறப்புடையை; என அவற்றின் மிகுதிப்படக் கூறுதல்[15]

என்று இளம்பூரணர் விளக்குவர். இவ்வடிப்படையிலேயே சங்கப் புலவர்கள் அகப்பாடல்களில் ஊரையும் நாட்டையும் தலைவனைத் தொடர்புறுத்திப் பாடுகின்றனர். அகப்பாடலில் தலைவனைப் பிணைக்கவும் அவன் ஊர் அல்லது நாட்டு வளத்தைக் காட்டவும் இந்த உத்தியே பயன்படுத்தப்பெறுகிறது. இது தொல்காப்பியர் ஊரைப்புனைந்து பாடுவதற்குக் காட்டிய வழியாகும்.

தலைவன் புனைவுபடப்பேசல்

தலைவனுக்குக் கற்பு வாழ்க்கையில் உரிய கூற்றுகளைத் தொல்காப்பியம் வரிசைப்படுத்துகிறது.

வேற்றுநாட்டு அகல்வயின் விழுமத் தானும்

மீட்டுவர ஆய்ந்த வகையின் கண்ணும் (நூ.1092:45-46)

என்ற இரண்டு கூற்றும் தலைவன் வரும்போது ஊர்களைப் பாட வாய்ப்பாகும். தலைவன் தான் இருந்த ஊரை விட்டுவிட்டுப் பிரிந்து வருகிறான்; அவ்வாறு பிரியும் போது வருகின்ற துன்பம் பற்றிக் கூற்று நிகழும். அவன் தலைவன் தான் வாழ்ந்த இடங்களை இணைத்துப் பேசுவான்; அதன் மூலம் ஊரைப் பாட வாய்ப்பு ஏற்படுகிறது.

களவில் தலைவனை விழைந்து உடன் போக்காகத் தலைவி போய் மணம் புணர்ந்து இல் வாழ்க்கை நடத்தினாள். உடன் போக்காகத் தலைவனுடன் சென்ற போது தலைவி வழியிடையேயுள்ள பல்வேறு கருப்பொருள்களையும் கண்டு மகிழ்ந்தாள்; கருப்பொருளும் அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் அவள் உள்ளத்தில் நிலைத்து நின்றன.

புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து

இடைச்சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி

அன்புறு தக்க கிளத்தல் தானே

கிழவோள் செய்வினைக்கு அச்சம் ஆகும்

(தொல்.நூ.1094)

என்ற நூற்பா விளக்கும். இந்த அடிப்படையில் இடைச் சுரத்துக் காட்சிகளைச் சங்கப் புலவர்கள் புனைந்திருக்கின்றனர். அக்காட்சிகள் இயற்கைப் புனைவாய்த் திகழ்கின்றன. இதனையே இளையோர் கூற்றில் "ஆற்றது பண்பும் ஆற்றிடைக் கண்ட பொருளும்" (தொல்.நூ.1116:1-3) என்று ஆசிரியர் அறைகுவர். வழியிடைப் புனைவுதான் இரண்டிலும் வலியுறுத்தப்படுகின்றது; ஆனால் முற்காட்டியது தலைவி கூற்றாகப் பிற்கூறியது இளையோர் கூற்றாகப் போதருகிறது.

ஊரைக்கடத்தல்

தலைவன் தலைவியுடன் தன்னூரை விட்டு வெளியே சென்று ஆறு, குளன், சோலை ஆகிய இடங்களில் இன்பம் துய்ப்பான். இதனை

யாறும் குளனும் காவும் ஆடிப்

பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப (தொல்.நூ.1137)

என்று தொல்காப்பியம் நவிலும். இங்கு ஊர் பதி என்று சுட்டப்படுகிறது. யாற்றிலும் குளத்திலும் நீராடிக்(ஜலக் கிரீடை) காவில் தங்கி இன்பம் துய்ப்பதும் ஊர்ப்புனைவாகக் காணப்படுகிறது. ஊரைச் சார்ந்து ஓடும் ஆற்றில் நீராடிச் சோலையில் இன்பம் துய்த்தல் இங்கு அமைகின்றது. இதனை வையைப் பரிபாடல்கள் கொண்டு தெளிவாக அறிய முடியும்.

இயற்கையை உளப்படுத்தல்

தொல்காப்பியப் பொருளியல், சில உயிரினங்களையும் பயிரினங்களையும் பேசுவன போலவும் கேட்பன போலவும் பாடிட வழி வகுத்துக் கொடுத்திருக்கிறது. இறையனார் வண்டை நோக்கி வினவுகிறார்.[16] உயிரினங்களையும் பிறவற்றையும் விளித்துப் பாடுகின்ற பாங்கு, சங்கப் புலவர்களிடையே காணப்படுகிறது. இவையெல்லாம் சங்கப்புலவர் இயற்கையைக் கூர்ந்து நோக்கிப் பாடும் பாங்கைக் காட்டுவன.

ஊரும் பாதையும்

தொல்காப்பியர் ஊரைப் பாடவோ சுரத்தைப் பாடவோ தனியாக எந்த விதியையும் அமைக்கவில்லை. தொல்காப்பியத்தில் ஊரைப் புனைதற்குரிய வாய்ப்பினைக் காட்டிலும் சுரத்தைப் பாடுதற்குரிய வாய்ப்பே மிகுதியாகக் கூறப்பட்டிருக்கிறது.

<u>ஊர்</u>	சுரம்
1. ஏமப் பேரூர்ச் சேரியும்(983)	1. சுரத்தும் (983)
2. செல்லுந் தேயமும்(986)	2. பொழுதும்ஆறும் உட்குவர (986)
3. நாடும் ஊரும் இல்லும் (1060)	3. ஊரது சார்வு(986)
4. வேற்று நாட்டு அகல்வயின் (1092) விழுமத்தான்	4. இடைச்சுர மருங்கின் (987)

5. பதியிகந்து (1137)

5. ஆற்றது தீமை அறிவுறு (1060)

6. சுரமென மொழிதலும் (1162)

7. 'இடைச் சுரத்து இறைச்சி' (1094)

8. ஆற்றது பண்பும் ஆற்றிடைக் கண்ட பொருளும்' (1116)

9. செய்பொருளச்சமும் (1178)

அவர் ஊரைப்பற்றி மிகுதியாகக் களம் அமைத்துக் கொடுக்கவில்லை. திணையைப் புனையவே அவர் வழிமுறையும் நெறிகளும் கூறுகிறார். பாதையைப் புனைவதற்குத் தான் களவு, கற்பு ஆகிய இருகை கோளிலும் மிகுதியான வாய்ப்பை ஆசிரியர் அளித்திருக்கிறார்; ஆதலால் தான் சங்கப் பனுவல்களில் பாலைத் திணைப் பாடல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

ஊர்ப்புனைவுக்கு அடித்தளம்

தொல்காப்பியர் 'இறைச்சிதானே உரிப்புறத் ததுவே (தொல். இனம். 225) என்று உரைத்தார். முதற்பொருளைச் சேர்ந்த காலத்துக்கும் உரிப் பொருட்கும் நெருங்கிய தொடர்பில்லை. 'எடுத்தோதப்படும் உரிப்பொருட்கு நிலைக் களமாய் விளங்கும் இயற்கைக் காட்சியில் உள்ள கருப்பொருள் அனைத்தும் அதற்குப் புறமாம்'. இளம்பூரணர் 'கருப்பொருளாகிய நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகி வருவது'[17] என்று விளக்குவர். "சாரற்/கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு / பெருந்தேன் இழைக்கும் நாடனொடு" (குறு.3) என்ற தேவகுலத்தாரின் குறுந்தொகைப் பாடலைக் கொண்டு இளம்பூரணர் 'நாட்டிற்கு அடையாகி வந்த குறிஞ்சிப்பூவுந் தேனும் இறைச்சிப் பொருள்'[18] என்பர். நாட்டுக்கு அடையாக வருதல், நாட்டைப் புனைதலாகும். இளம்பூரணர் நாடு, ஊர், துறை என்பனவற்றைப் புனைவதற்குக் கருப்பொருள்கள் துணை நிற்கும் என்ற கருத்தினர்.[19] எனவே சங்கவிலக்கிய ஊர்ப்புனைவில், ஊர்க்கு அடையாக இயற்கைப் பொருள்கள் அமையும் என்பது புலனாம். 'இறைச்சிதானே உரிப் புறத்தது' என்பதனால், தொல்காப்பியரும் அவர்வழி இளம்பூரணரும் ஊர், நாடு,

துறை ஆகியவற்றுக்கு இயற்கையைப் பாடும் போது அடை கொடுத்துப் பாடுக என்றனர். எனவே தொல்காப்பியர் சுட்டும் இறைச்சி, ஊரின் நாட்டின் இயற்கையைப் புனைய வாய்ப்பாக அமைகிறது. முனைவர் தமிழண்ணல். இறைச்சியை ஆராய்ந்து,

> இறைச்சி அகப் பாடலுக்கு மட்டுமே உரியது; அவ்வத் திணைக்குரிய கருப்பொருள்களின் அடிப்படையிலே வருவது; தலைமகனது நாட்டிற்கும் ஊருக்கும் அடையாகி வருவது; தலைமகன் தலைவி தோழி கண்டோர் போல்வாரின் கூற்றுக்களில் அவர்கள் கண்ட இயற்கைக் காட்சிகளைப் பற்றியதாய், அவரவர் நிலைக்கேற்ப அமைவது. அகப்பாட்டு மரபு வழியை நன்கு அறிந்த அவர்களுக்கே, இறைச்சியால் போந்த பொருள் புலனாகும்.[20]

என்று எழுதுவர். இதனால் இறைச்சிக் கோட்பாடு, சங்க இலக்கிய இயற்கைப் புனைவுக்கு அடித்தளம் என்பதைக் காட்டும்; இஃது ஊரையும் சுரத்தையும் புனைந்திட மிகத் துணையாகிறது.

அன்புணர்த்தும் இயற்கைப் புனைவு

தொல்காப்பியர், இயற்கையைப் புனையும் இறைச்சியை நுட்பமாகவும் சுருக்கமாகவும் விளக்கிப் போந்தார். இளம்பூரணர், குறிப்புப் பொருள் தருவது என்றும் தாராதது என்றும் இறைச்சியை இரண்டாகப் பிரித்து விளக்குவர்.[21] உயிரினங்களின் காதற்காட்சிகளைப் புனைந்து மனித உள்ளத்தில் அன்புணர்வைத் தூண்டுவது இறைச்சி. இயற்கைக்கும் மக்கள் மன உணர்ச்சிக்கும் ஒரு மிக நெருங்கிய தொடர்பை இறைச்சிக் கொண்டிருக்கிறது. ஊர்/நாடுகளைப் புனையவும் அப்புனைவின் மூலம் வேறு பொருளை உணர்த்தவும் இறைச்சி துணையாகிறது.

இயற்கையைப் பலவாறு பாடிப் பாடித் தமிழர் பாடலாக்கி ஆராய்ந்து துய்த்திருக்கின்றனர். இயற்கைப் புனைவு, ஊர்ப்புனைவாகவும் பிற இருப்பிடப் புனைவாகவும் பாதைப்புனைவாகவும் அமைந்தது. ஆற்றிடைக் காட்சி, இயற்கைக்காட்சியாக மட்டும் விளங்காது குறிப்புப் பொருளையும் உணர்த்தும் காட்சியாகவும் விளங்குகிறது. இவ்வளர்ச்சியில் வளர்ந்த இறைச்சி அன்புணர்த்தும் இறைச்சிக் கோட்பாடாகத் தழைத்தது. இயற்கைப் புனைவின் வளர்ச்சியே இறைச்சி என்னும் இலக்கிய நெறியாக வளர்ந்திருக்கிறது.

ஊரும் உவம மரபுகளும்

உவமைக்குரிய மரபைச் சொல்லும் போது தொல்காப்பியர் 'தலைவி அவள் அறிந்த பொருளையே உவமை கூற வேண்டும்' (நூ.1247) என்பர். 'தோழி நிலம் பெயர்ந்து உரையாள்' (நூ.1247) என்றுரைப்பர். தலைவி கூறுவதாகப் பாடலைப் பாடினால் எவ்வெவற்றை உவமையாக அமைக்க வேண்டும் என்றும் தோழி கூறினால் எவ்வெவற்றை உவமையாக அமைக்க வேண்டும் என்றும் தொல்காப்பியர் நவிலுகிறார். தலைவி தான் கண்டு பழகியவற்றையே உவமையாக உரைப்பாள்; தலைவி உவமை கூறுவதை ஆசிரியர் கட்டுப்படுத்துகின்றார். தலைவி வேற்று நிலத்தையோ ஊரையோஅவ்விடங்களில் உள்ளவற்றையோ உவமை சொல்லாள்; அவள் தான் வாழுகின்ற நிலத்துக்குள்ளும் தான் அறிந்தவற்றை மட்டும் சொல்லுவாள்; தோழியோ தான் வாழும் நிலத்துக்குள்ளுள்ளன வற்றையே உவமை கூறுதல் வேண்டும். தலைவனோ தன் அறிவுப்பரப்பினடிப்படையில் உவமை கூறுவான். இந்த விதிகளினால், அகத்திணை மாந்தர்களில் தலைவியை மிகக் குறைவான சுற்றுச் சூழலிலேயே தொல்காப்பியர் பழக விதிவிதிக்கிறார். தோழியை அவர் ஒரு நிலம் பற்றியே பேச வேண்டும் என்றும் கட்டுப்பாடு விதிக்கிறார். விரிந்து பரந்து கிடக்கின்ற உலகத்தில் வேண்டியவற்றையெல்லாம் உவமையாக்கித் தோழி கூறுவதாகச் சங்கப் புலவர்கள் பாடக் கூடாது என்பது தொல்காப்பிய மரபு. இதனால் தலைவியின் உவமைகள் ஊரைச் சார்ந்தவையாகத் தோழியின் உவமைகள் அந்நிலத்தைச் சார்ந்தவையாக அமையும். இவ்வாறு உவமமரபுகளை விளக்கும் தொல்காப்பியர் ஊருக்கென்று எந்தவிதியும் சொல்ல வில்லை. ஊர்

பற்றியோ ஊர்ப்புனைவு பற்றியோ வெளிப்படப் பேசிட மெய்ப்பாட்டியலில் வாய்ப்பில்லை.

தொல்காப்பியர் ஊரின் இயற்கையைப் புனையும் போது இன்ன இன்ன உவமைகளை அமைத்துப் பாடுக என்று சுட்டிக் கூறிலர். புலவர்களுக்கு உரிமை கொடுத்து அவரவர் திறமைக்குத் தக உவமை அமைத்துப் பாட வாய்ப்பு நல்கினார் தொல்காப்பியர். இன்ன இன்னவற்றை உவமை அமைக்க; இன்னவாறே அமைக்க என்று அவர் கட்டுப்பாடு விதித்திலர். பெண்களைப் புனையும் சங்கப்புலவர்கள் அவர்களுக்கு ஊர்களை உவமைப்படுத்துவர். இதனை ஏற்றுக் கொண்டோ விளக்கியோ தொல்காப்பியம் உவமவியலில் யாதும் கூறவில்லை. இந்த உவமையியல் உவமையின் பொது அடிப்படையையே பேசுகின்றது. உவம உருபுகளாலும் உவமை நிலைக்களங்களாலும் உவமையை வகைப்படுத்துகிறது.

ஊர்ப்புனைவும் தலைவன் ஒழுக்கமும்

தொல்காப்பியம் அகத் திணையியலிலும் உவமவியலிலும் உள்ளுறை உவமையை விவரிக்கிறது. கருப்பொருளில் தெய்வம் நீங்கிய ஏனையவற்றால் உள்ளுறை உவமை அமையும் என்பது விதி.[22] கருப்பொருள் என்பது இயற்கைப்புனைவில் இடம் பெறுகின்ற பயிரினங்கள், உயிரினங்கள் ஆகியவற்றின் தொகுதியே. இவை பெரிதும் ஊரைப்புனையும் புனைவாக அமைகின்றன.

உள்ளுறை உவமை ஊரைப்புனைவதாகவும் இறைச்சி சுரத்தைப் புனைவதாகவும் சங்கப்புலவர்களால் கையாளப்பட்டிருக்கின்றன. உள்ளுறை உவமை என்ற இலக்கியக் கொள்கையின் அடிப்படையே ஊரின் இயற்கைப்புனைவையும் அதற்குரிய உள்ளுறைப் பொருளையும் பேசுவதாகும். இயற்கைப் புனைவு ஊரைப்பற்றியதாகிறது; அதன் உள்ளுறைப்பொருள் ஊரில் வாழும் தலைவனைப் பற்றியதாகிறது. இவ்வாறு ஊர்ப்புனைவு இயற்கைப்புனைவாகின்ற போது, உள்ளுறையாகி மிளிர்கிறது. ஆற்றிடைப் புனைவு, தலைவனுக்கு அறிவு கொளுத்தும் இயற்கைப் புனைவாகிக்

குறிப்புப்பொருள் தரும் இறைச்சியாக விளங்குகிறது; ஆகலின் உள்ளுறை, இறைச்சி என்ற இரண்டும் இயற்கைப்புனைவு வளர்ச்சியைக் காட்டுவன என்றும் இவை ஊர்களையும் சுரங்களையும் புனைவன என்றும் இவை தலைவன் தொடர்பானவை என்றும் முடிவு காண்பது பொருந்தும்.

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு

செய்யுளியல், செய்யுள் அமைப்பு, பாடுபொருள், இலக்கியத்தை வகைப்படுத்தல் ஆகியன பற்றி விரித்துரைக்கின்றது. அவ்வியலில் தமிழகத்தைத் தொல்காப்பியர் 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்றியம்புவர். தமிழ் நிலத்தைச் சொல்லவந்த ஆசிரியர் நிலப் பெயரைச் சொல்லாது, மொழியால் நாட்டுப் பெயரைச் சொல்லாது, அகத்திணையியலில் 'வையம்' என்று சொன்னது போலச் சொல்லாது, ஈண்டு இலக்கிய நயம்பட 'வண்புகழ் மூவர் தண் பொழில்' என்றார்; மண்ணை மன்னனுடன் இணைத்தும் நிலத்தைப் பொழில் என்றும் 'தண்' என்னும் அடை கொடுத்தும் தமிழகத்தைத் தொல்காப்பியர் அடையாளங் காட்டினார். நூற்பாவில் இயற்பெயர் வாராதவாறு அவர் சுட்டுகின்ற குறிப்பு, அகப் பாடல்களில் இயற்பெயர் சுட்டாத மரபைக் காட்டுகிறது. ஓர் ஊரையோ நாட்டையோ பெயர் சுட்டாமல் உடைமையாளனொடு தொடர்புறுத்திச் சொல்லுதற்கு இந்த அடியே இலக்கணமும், இலக்கியமும் ஆகும். நாட்டை அடை நல்கித் தொல்காப்பியர் புனைந்து வழிகாட்டுகிறார்.

ஊர் - ஆகுபெயர்

செய்யுளியலில் கற்பில் கூற்று நிகழ்த்துவோரைச் சொல்லும் போது, நேர் கூற்று நிகழ்த்தாதவர்களைத் தனியே ஒரு நூற்பாவில் தொல்காப்பியம் சுட்டுகிறது. இவர்கள் பேசுகின்றனர் என்று பிறர் மேற்கோள் காட்டுவரேயன்றி இவர்கள் பேசுவதாக அகப்பாடல் பாடுவதில்லை. அத்தகைய இலக்கிய மரபுடையவர்களில் ஒரு திறத்தாராக ஊரார் குறிக்கப் பெறுகின்றனர். இந் நூற்பாவில் ஊர் மக்களை (தொல்.நூ.1447) 'ஊர்' என்று ஆசிரியர் பேசுகிறார். இவ்வாறு ஆகுபெயரால் 'ஊர்' மக்களை உணர்த்துகிறது.

'ஊர்' என்ற அமைப்புச் சிறப்பாக அமைந்தமையும், அங்கு மக்கள் கூடி வாழ்ந்தமையும், அவர்களுடைய பேச்சுகளும் எண்ணங்களும் ஒட்டு மொத்தமாகப் பிறர் சொல்லுவதாக இலக்கியத்தில் இடம் பெற்றமையும் இச் சொல்லால் தெரிய வருகிறது. தனிப்பட்ட ஆண், பெண்களின் உரிமையையும் வாழ்வையும் பேசும் அகப்பொருள் பாடல்களில், மண்பதை வாழ் மக்களின் கருத்துக்கும் தமிழ்ப்பண்பாடு வழங்கிய இடத்தை இக்குறிப்பு வெளிப்படுத்துகிறது. இங்கு ஊரைப்புனையக் களம் அமையவில்லை. ஆனால் அவ்வூரில் வாழும் மக்களின் கருத்துக்கு மதிப்புக் கொடுக்கப்பெறுகிறது.

ஊர் தொடரில் அமைதல்

தொல்காப்பியர், மக்களைச் சொல்லும் போது பின் வரும் முறையில் அமைத்துக் கூறுக என்றார். அம்முறை,

ஊர் + பெயர்

என்பதாம். இதனை,

ஊரும் பெயரும் உடைத்தொழில் கருவியும்
யாரும் சார்த்தி அவைஅவை பெறுமே (தொல்.நூ.1575)

என்ற நூற்பா உணர்த்தும். இதனால் ஊர்ப்பெயரை மக்கள் பெயரோடு இணைத்துக் கூறும் மரபு தொல்காப்பியர் காலத்தில் இருந்தமையை அறிய முடியும். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகன், கடியலூர் உருத்திரங்கண்ணன் என்று வருவன இதனை உணர்த்தும்.

மரபியல் மாட்சி

உலகியல் வழக்கிலும் பேச்சு வழக்கிலும் பயிரினங்களையும் உயிரினங்களையும் எவ்வாறு சுட்ட வேண்டும் என்பதை மரபியல் காட்டுகிறது. இவை அகத் திணையியலில் கருப்பொருள் என்று சொல்லப்பட்டவற்றுக்கு விளக்கமாகும்.[23] இவ்வியலின் முதல் எழுபது நூற்பாக்கள் கருப்பொருளின்

விளக்க~~மின்றன~~ மாகின்றன. கருப்பொருள் மரபுகளை மரபு மாற்றிச்சுட்டினால் கருத்துப்பிழையும் வழக்குப் பிழையும் விளையும்.

பிழையான சொல்லாட்சி - முரண்பட்ட வழக்கு - பொருட் சிதைவை ஏற்படுத்திவிடும். இந்தச் சொற்களும் சொல் வழக்குகளும் தெரிந்திருந்தால் தான் புலனெறி வழக்கில் இயற்கையைச் செவ்வனே புனைய இயலும். இவற்றின் புலமை பெற்றிருப்பது, தெளிவாகவும் மெய்யாகவும் இயற்கையைப் பாடக் கருவியாகும்.

மரபியலும் உரியியலும்

சங்க இலக்கிய ஊர்ப்புனைவு, இயற்கையைப் புனையும் புனைவே; இயற்கையே அந்நாளில் சுற்றுச் சூழலாக அமைந்திருந்தது; செயற்கைவளமும் செயற்கைக் கட்டிடங்களும் அக்காலத்தில் பெரிதும் உருவாக வில்லை. ஊர்களைப்புனையும் போது உயரினங்களுக்கும் பயிரினங்களுக்கும் இடையில் ஊரைப் புனையலாயினர். அஃறிணை உயிர்களின் வாழ்க்கை நிகழ்ச்சியைப் பின்புலமாக வைத்துக் கொண்டு ஆறறிவு பெற்ற உயர்ந்த மக்களின் உணர்ச்சிகளையும் பண்பாடுகளையும் வாழ்க்கையையும் ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார். மரபியல் உரிய சொல்லை உரிய இடத்தில் உரிய பொருளுக்கு வழங்குவதற்காக அமைந்தது; அவை உயிருள்ள பொருள்களைப்பற்றிய சொற்களின் தொகுப்பாகும்; உரியியலோ நுண்பொருட் சொற்களின் பொருளைக் காட்டுகின்றது. ஆதலின் மரபியலின் முற்பகுதி, இயற்கையைப் புனைவதற்கு வேண்டிய உயிரினப் பயிரினச் சொற்களையே தொகுத்து ஒரு சொற்கோவையாகத் தருகிறது.

ஊரும் புறப்பொருளும்

அகப்பொருள் தொடர்பான இயல்களில் ஊரைப்பற்றி உரைக்கும் தொல்காப்பியர், புறத்திணையியலிலும் ஊரைப்பற்றிக் குறிக்கின்றார். அங்கும் அவர் ஊரின் அமைப்பு இவ்வாறு அமைய வேண்டும் என்றோ, தெருக்கள் இத்தனை இருக்க வேண்டும் என்றோ வரையறுத்துக் கூறிலர். புறப்பொருள்,

நாகரிக வளர்ச்சியைக் காட்டுகிற போர்த்துறையாகும். ஒருவனை ஒருவன் அடுதலும் ஊரையும் நாட்டையும் அழித்தலும் கைப்பற்றலுமாய் விளங்கிடும் போர்த்திணையில் போர் ஊர் பேசப்பட வேண்டும். அதனையும் கூடச் சிறு குறிப்பாகத் தொல்காப்பியர் சுட்டுகிறார்.

புறப்பொருள் அமைப்பில் ஊர் பெருவளர்ச்சி பெற்று விட்டமையைக் காண முடிகிறது. தொல்காப்பியர் வெட்சித் திணையில் 'ஊர்க்கொலை' (நூ.1004:5) என்று ஒரு துறையை வகுப்பர். ஆநிரை கவர்தல் பொருட்டாக ஊரைத் தாக்குதலே இதன் கருத்து. இந்தத் துறையைத் தொல்காப்பியர் வகுத்ததன் மூலம் ஊர் என்ற அமைப்பு அவர்காலத்தில் அமைந்து விட்ட பாங்கு வெளிப்படுகிறது. மக்கள் ஆநிரைகளைப் பேணி ஊரில் வாழ்ந்தனர்; அந்த ஊரைத் தாக்கி அழித்து ஆக்களைக் கவர்ந்தனர். இத்திணையில் இடம் பெறும் 'பாக்கத்து விரிச்சி' (நூ.1004:1) என்பதும் ஊரையோ ஊரின் ஒரு பகுதியையோ சுட்டுவதாய் அமைகிறது.

ஊரும் மதிலும்

உழிஞைத் திணையால் ஊரும் கோட்டையும் இருந்தமை அறியப்பெறும். தொல்காப்பியர் அதனை ஊர் என்று உரையாது 'முழுமுதலரணம்' (நூ.1011:1) என்று போர் நிலைக்குத்தகப் பேசுவர். உழிஞைத் திணையில் 'ஊர்ச்செரு வீழ்ந்தமறனும்' (நூ.1014:8) என்று போர் நெறியில் ஊரைச் சுட்டுவர் தொல்காப்பியர். இவை உழிஞைத் திணையால் புலப்படும் குறிப்புகள். இந்நூற்பாவில் 'கொள்ளார் தேயம் குறித்த கொற்றம்' என்பது நாட்டைக் குறிக்கும்.

'தொல் எயிற்கு இவர்தல்'[24] என்று கோட்டை பழமையானது என்ற கருத்தில் 'தொல்' என்ற அடை கொடுத்தார். 'ஏணிமிசை மயக்கம்'[25] என்பது மதில் இருத்தலைக் காட்டுகிறது. அவ்வாறு மதில் இருந்தமையையும் அதற்கு உச்சி இருந்தமையையும் 'இகன் மதில் குடுமி கொண்ட மண்ணுமங்கலமும்'[26] என்பது உணர்த்துகிறது. 'மதின் மிசைக்கு இவர்ந்த'[27] என்பதும் இஃதே. 'மன் எயில் அழித்த மண்ணு மங்கலமும்'[28] என்பதில் நிலையான மதில் என்ற

குறிப்புக்கிட்டுகிறது. இவ்வண்ணம் தொல்காப்பியப் புறத்திணை சுட்டும் குறிப்புகள் அவர்காலத்தில் கோட்டையும் மதிலும் மதிற் குடுமியும் இருந்தன என்பதைக் காட்டுகின்றன. இவை ஊரமைப்புத் தொடர்பானவை. புறத்திணையில் முழுமையும் ஊரின் செயற்கையான மதில், கோட்டை, குடுமி போன்ற உறுப்புகளே பேசப்பெறுகின்றன. ஊர்ச் செரு என்பது ஊருக்கு வெளியே நடந்த போரை விவரிக்கிறது. இந்தத் துறைகளால் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே ஊர் அமைப்பு இருந்தமை தெரியவரும். இச் சுட்டுகளால் ஊரின் செயற்கை நிலையை அறிய முடிகின்றதே அன்றி மரங்கள் செடிகள் கொடிகள் போன்ற இயற்கை வளம் இருந்தமை எடுத்துரைக்கப்படவில்லை. ஊரை 'நகர்' என்ற சொல்லாலும் இவர் குறிக்கவில்லை. உழிஞைத் திணையைப் பாடுழி இயற்கையைப் பாடுதற்குத் தொல்காப்பியர் களங்களை அமைத்துக் கொடுத்திலர். புறத்திணையியலில் தொல்காப்பியர்,

ஊரொடு தோற்றமும் உரித்துஎன மொழிப(நூ.1031)

என்பர். இந்நூற்பா தலைவன் உலாவருதல் பற்றிய குறிப்பினது. இதற்கு இளம் பூரணர் இவ்வாறு விளக்கம் தருவர். இந்த நூற்பா உணர்த்தும் உண்மைப் பொருளைக் காணப் போதிய வாய்ப்பில்லை. ஆனால் ஊர் என்ற அமைப்பும் ஊரில் பல தெருக்கள் இருந்தமையும் இதனால் தெரிகின்றது. இதற்குத் 'தலைவன் பிறந்த ஊரும் அவரது பிறப்பும்' என்று பொருள் கூறிய நச்சினார்க்கினியர் அப்பொருள் 'கூறியது கூறல் ஆகும்' என்று நவிலுவர்.[29]

பாதைப்புனைவு

காஞ்சித்திணையில் 'நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்துத் தனிமகள் புலம்பிய முதுபாலையும்' (நூ. 1025:24-25) என்று தொல் காப்பியர் ஒரு துறையைச் சுட்டுவர். இப்பகுதி பாதை வழியில் உடன் போக்காகச் சென்ற பெண் தன் கணவனை இழந்து வருந்தும் பகுதியாகும். இலக்கணம் கூறும் தொல்காப்பியர் சுரத்தை 'நனி மிகு சுரம்' என்று புனைவு நலம் தோன்றச் சுட்டுகிறார்; ஊர் என்ற புனைவில்லை. இத்திணையில் 'காடு வாழ்த்து' என்று ஒரு துறை உளது; இது சுடுகாட்டை வாழ்த்துவதாகும். தொல்காப்பியர் தனித்தனி இடங்களையும்

பாதைகளையும் புனைந்து பாடுவதற்கு வாய்ப்பாக ஆங்காங்கே சில வற்றைச் செப்புகின்றார். இவற்றில் ஊரை இவ்வாறு பாடுக என்றோ இன்ன இன்னவாறு புனைய வேண்டும் என்ற கோட்பாடோ தரப்படவில்லை.

தொல்காப்பியர், அகப்பொருள் பகுதிகள் போலப்புறத்திணையிலும் பாதையைப் புனைதற்குத் தான் மிகுதியான வாய்ப்பைச் சுட்டியிருக்கிறார். ஆற்றுப்படையில்,

ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி (தொல். நூ. 1037:4)

என்பது பாதை வழியைப் புனையத் தக்க களமாக்குகிறது.

சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலை யானும் (தொல். நூ. 1036:3-4)

என்ற கடைநிலைத்துறை, புரவலனைக் காணப் புலவன் பாதையைக் கடந்து வருதலைப் பேசுகிறது. இவ்வாறு வரும் போது, பாதையைப் பாட வாய்ப்பாகிறது.

ஊரா? திணையா? நிலமா?

தொல்காப்பியர் காலத்தில் ஊரும் பாதையும் நன்றாக அமைந்து விட்டன; அவர் அவை இரண்டையும் புனைதற்கு வேண்டியகளங்களைத் தன்னுடைய நூலில் குறித்திருக்கிறார். ஆனால் புனையும் முறையைப் பற்றி அவர் விரித்துரைத்திலர். இறைச்சியை விளக்கும் போது அதனை எவ்வாறு அமைக்க வேண்டும் என்பதை ஆசிரியர் 'அன்புறு தகுந'[30] என்று நுதலிய பொருளுடன் பேசுகிறார். ஊரைப்பற்றியும் ஊருக்குச் செல்லும் பாதைகளைப் பற்றியும் விரித்துரைக்கும் தொல்காப்பியம், கருப்பொருள் வகையில் 'ஊர்' என்ற அமைப்பைச் சொல்லவில்லை. அவர் திணை என்றும் நிலம் என்றும் கூறுவது பொதுமை நிலை அளாவியது; ஊர் என்று நிலத்தைப் பகுத்தால், குறுகிய நோக்குடைய பகுப்பையுடைதாய்ப் பாடுவோனுக்குப் பாடுபொருளுரிமை அற்றதாய் மாறிவிடும்; திணை மயக்கம் போல நில மயக்கம் வகுக்க முடியாது. ஆதலால் தான் தொல்காப்பியர் ஊர் என்று சுட்டாது திணை, நிலம் என்ற பாகுபாட்டைப் புனைவுக்கு வகுத்தார்.

மக்கள் தங்கள் பயன்பாட்டுக்குத் தக்கவாறு நிலத்தைப் பண்படுத்தி மனைகளை அமைத்து வாழ்ந்தனர். இதனால் ஊரமையும்போது செடி கொடி முதலிய பயிரினங்கள் அழியும்; அவற்றிடையே வாழும் உயிரினங்கள் இடம் பெயரும்; அழியும். ஆதலின் ஊர்ப்புனைவில் இயற்கையினும் வாழும் மக்களின் செயற்கை அமைப்புகளே சிறந்து நிற்கும். செடியும் கொடியும் மரமுமாய் வளர்ந்து உயிரினங்களின் வாழ்விடமாய்த் திகழ்ந்தது பாதை வழிகளே. இயற்கை ஈடுபாடு மிக்கத் தொல்காப்பியர் பாதை வழிகளை மிகுதியாகப் பாடுதற்கு இஃதே அடிப்படையாகும்.

தொல்காப்பியர் ஊர்களையும் சுரங்களையும் புனைந்தது பாட வேண்டும் என்ற அறிவும் உணர்வும் வாய்ந்தவர். வரன்முறையான விதிகளைச் சுட்டுகின்ற அவர், ஊர்களைச் சுட்டும் போது

'ஏமப் பேரூர்ச் சேரியும்' (தொல். 983)

என்றும் 'தொல்லெயிற்கு' (தொல். நூ.1013:3) என்றும் 'மன்எயில்' (தொல். நூ. 1037:11) என்றும் அடைபெய்து கூறுகிறார். இக்குறிப்புகள், அடைகொளியின் புனை நிலையைக் காட்டுகின்றன. தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே ஊரைப்புனையும் மரபு இருந்தது என்பதை வானத்து ஞாயிறென இவை உணர்த்துகின்றன.

தொகுப்பியலும் காலமுறை ஆய்வும்

சங்கச் சான்றோர்கள் சங்கப்பனுவல்களைப்பொருள் அடிப்படையில் அகப்பொருள் நூல்கள் என்றும் புறப்பொருள் நூல்கள் என்றும் இருவகையாகப் பிரித்தனர். இவ்வடிப்படையில் பாடல்கள் கோக்கப்பெற்றன. அகப்பொருள் தொகுப்புகள் பாடலின் அடி எண்ணிக்கையால் ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு என்று உருவாக்கப்பெற்றிருக்கின்றன. இவை நான்கும் ஒரே வகையான யாப்பின; யாப்பு வகை அடிப்படையான் கலித்தொகை, பரிபாடல் என்று இரண்டு நூல்கள் தொகையாயின. புறப்பொருள் அடிப்படையில் பதிற்றுப்பத்து, புறநானூறு என்று இரண்டு தொகுப்புகள் அமைந்தன. இவற்றில்

அடி எண்ணிக்கையாலோ யாப்பு வகையாலோ பகுப்புகள் அமைந்தில. எல்லாம் ஒரேயாப்பு வகையின. புறப்பாடல்களின் தொகுப்பாக வேறு நூல் இல்லை. அடியெண்ணிக்கை மிகுந்த நெடும்பாடல்களாக அமைந்தவை, தனித்தனியாக வழங்கத் தகுந்தவை' ஆயினும் அவை பத்துப்பாட்டு என்று ஒரே தொகுப்பாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்கள் பொருள் நோக்கு, அடி எண்ணிக்கை யாப்பு நோக்கு, ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப் பெற்றிருக்கின்றன.

சங்கப்பனுவல் தொகுப்பிலுள்ள பாடல்களைப் புலவர்கள் பாடிய கால முறையிலோ வாழ்ந்த கால முறையிலோ சங்கச்சான்றோர் தொகுத்திலர். புலவர்களின் கால ஆராய்ச்சியும் பாடல்களின் காலவரிசை ஆராய்ச்சியும் தனி ஆராய்ச்சியாக அமைவதற்குரிய ஆய்வுக் களமுடையது. இந்த நோக்கில் சங்க இலக்கியங்கள் முழுமையும் ஆழமாகவும் அழுத்தமாகவும் ஆராயப் பெறவில்லை; ஆய்வுகள் நிகழ்ந்தவற்றிலும் கருத்து முரண்கள் மிகுந்து காணப்படுகின்றன. இன்ன பாட்டு இன்ன காலத்தில் பாடியது என்று உறுதியாக உரைக்கவும் இன்னாருக்குப்பின் இன்னார் வாழ்ந்தார் என்று வரையறுத்துணர்த்தவும் தேவையான வலிமையான சான்றுகள் கிட்டில.

ஆய்வுக்குரிய முதற்பாட்டு

'ஊர்ப்புனைவின் தோற்றமும் வளர்ச்சியும்' குறித்து ஆராயும்போது, தொன்மைப்பாடல் எது என்பதைக் கண்டு ஆராய்வதே சாலும். அந்த ஆய்வு சிக்கலுடையதாய்த் தனி ஆய்வாய்ப் - பெருகிவிடுமாதலின் ஒவ்வொரு தொகை நூலின் முதற்பாடலும் ஆய்வு மூலமாகக் கொண்டு ஆராயப் பெறுகிறது. ஏன் இந்நெறி பின்பற்றப்பட்டது; ஒவ்வொரு தொகைநூலிலும் தொகுத்தோர் முதற்பாடலை அமைக்கும்போது, ஏதேனும் ஒரு கருத்தைச் செலுத்தியோ தனித்தன்மை கருதியோ நூலைத் தொகை செய்திருப்பர். ஆதலின் முதற்பாடல்கள் ஈண்டு ஊர்ப்புனைவு குறித்து ஆராய எடுத்துக் கொள்ளப்பெற்றிருக்கின்றன.

ஐங்குறுநூற்று முதற்பாட்டு

ஐங்குறுநூற்றின் முதற்பாட்டு ஓரம்போகியார் பாடிய மருதத்திணைப்பாட்டு. ஓரம்போகியார் பாடிய நூறுபாடல்கள் பத்துப்பத்துப் பகுதிகளாக ஐங்குறுநூற்றின் முதற்பகுதியாக உளது. இந்த நூறுபாடல்களில் ஓரம்போகியார் தேனூர் (54,57), ஆமூர் (56), இருப்பை (58), கழார் (61) ஆகிய நான்கு ஊர்களின் பெயர்களைச் சுட்டிப்பாடுகிறார். இந்த நூறில், முதல்பத்துப்பாடல்கள் ஒரு பொருள் பற்றியனவாய் ஓர் அமைப்பினவாய்த் திகழ்கின்றன.

பரத்தையைத் துறந்து தலைவியுடன் வாழ்ந்த தலைவன், தான் அவளைப்பிரிந்து பரத்தையொடு இருந்தபோது தலைவி என்ன செய்து கொண்டிருந்தாள் என்று அறிந்துகொள்ள விரும்பினான். அதற்குத் தோழி கூறும் மறுமொழியே பாடலாகிறது. அப்பாட்டே ஐங்குறுநூற்றின் முதற்பாட்டு. ஓரம் போகியாரின் ஐங்குறுநூற்றுப்பாட்டில், பாட்டுடைத் தலைவனைச் சுட்டும் பாட்டுகள், இப்பாட்டுள்ள வேட்கைப்பத்தில் கோக்கப்பட்டிருக்கின்றன. இவையே அடி எண்ணிக்கை கூடுதலான பாட்டுகள். தோழி கூற்றாக அமைந்தபாட்டு, தலைவி பிரிவுக்காலத்தில் இல்லறத்தில் மேற்கொண்டிருந்த நெறியை-மனப்பண்பாட்டை-காட்டுகிறது.

தொல்காப்பிய வழிமுறை

மக்கள் கூடிவாழும் மருதநிலப் பகுதியை 'ஊர்' என்று வழங்கல் மரபு. தலைவனை ஓரம்போகியார் 'ஊரன்' என்று அறைகிறார். தொல்காப்பியமரபு ஈண்டு பின்பற்றப்படுகிறது. இவர்பாடிய குறுந்தொகை - மருதத்திணைப்பாடல்களிலும்- 'ஊரன்' என்று தலைவன் பேசப்படுகிறான். (10:4, 127:3) இன்னொருபாட்டில் "மகிழ்ந' (குறு.384:4) என்றுரைக்கப்பெறுகிறான். இச்சொல்லும் மரபுதழுவியதே. இவர்பாடிய குறிஞ்சி (குறு.70) நெய்தல் (குறு.122) பாடல்களில் தலைவன் சுட்டப் பெறவில்லை.

மருதத்திணைப்பாட்டில் தலைவனைச் சுட்ட தோழி அவன் பெயரைச் சுட்ட வேண்டும். அகப் பாடல்களில் இயற்பெயரைச் சொல்லக் கூடாது என்பது விதி.

ஆதலால் ஓரம்போகியார் அகப் பாடலில் தலைவன் பெயர் சுட்டாது 'ஊரன்' என்ற பெயரால் சுட்டினார்.

> நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
> யாண ரூரன் வாழ்க (ஐங்.1:4-5)

இது தலைவனைக் கூறுகின்ற பாடற்பகுதி. இவண் தலைவனை அடையாளங் காட்ட 'பூக்களையுடைய காஞ்சியும் சினைகளையுடைய சிறுமீன்களுமுள்ள ஊரன்' என்று பேசப்பெறுகிறான். தொல்காப்பியர், தலைவனைத்தோழி

> நாடும் ஊரும் இல்லும் குடியும்
> பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி
> அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ[31]

என்று ஊருடன் தொடர்புபடுத்திப் பேசுவாள் என்று களவியலில் விதிவகுப்பர். இது தொல்காப்பியர் நாட்டையோ ஊரையோ மனையையோ குடியையோ தலைவனுடன் இணைத்துப் பேச வகுத்தமரபு.

ஊரும் ஊரனும்

ஐங்குறுநூற்று முதற்பாட்டு, தொல்காப்பிய வழி ஊரனுடைய தொடர்பை எடுத்துரைக்கிறது. பாடலில் தலைவனையே சுட்டவேண்டும்; ஆனால் ஊரைச் சுட்டுவதன் மூலம் சங்கப்புலவர் தலைவனைச் சுட்டுகிறார். நிலத்தைப் புனையவும் நிலத்தில் வாழும் தலைவனைக் காட்டவும் ஊருடன் இணைத்துத் தலைவன் உரைக்கப்பெறுகிறான். ஈண்டு ஊரைத் தொடர்புபடுத்துவதன் மூலம் அவனைப் பற்றிப் பேசுவதுடன் அவன் ஊரையும் புனைகிறார். அதனால் ஊர்வேறு, உடைமையாளன் வேறு என்றாகாமல் இரண்டையும் ஒன்றாக்கி ஓரம்போகியார் பாடுகிறார். பாடலில் தலைவன் பெயர் இன்மை போல ஊர்ப் பெயரின்மை நோக்கத்தக்கது. பாடலில் இரண்டு பெயரைக் குறிப்பிட்டாலும் ஒரு பெயரைக் குறிப்பிட்டாலும் அப்பாடலின் அகப்பொருள் நுண்மை சிதைந்து விடும். கிளவித்தலைவன் பெயரைச் சுட்டாது பாட்டுடைத் தலைவன் பெயரான ஆதன் அவினியை ஓரம்போகியார் பாடல் தொறும் பகருகிறார். இதனால் பாடலின் அகப்பொருள் பாடும் சிறப்புக்குன்றவில்லை. சேரன் ஆதன் அவினியைப்பாடலில்

சுட்டலால், இந்த ஐங்குறு நூற்றுப்பாடலில் ஓரடி கூடுதலாக அமைகிறது. ஆதனவினிபற்றிய குறிப்பு வேட்கைப்பத்து அன்றிப் பிறவற்றில் இல்லை. அந்த அடி இன்றேல், இந்தப் பத்து முழுமையும் ஐந்தடிப்பாடல்களாகவே திகழும். வேட்கைப் பத்துப் பாடல்கள், பத்தும், மருதத்தில் அடி எண்ணிக்கை மிக்கவையாக இலங்குகின்றன.

புனைவும் பிறிதுபொருள் தருதலும்

இப்பாடலில் இரண்டு அடிகள் ஊரின் இயற்கையைப் புனைகின்றன. ஒரே அடியில் காஞ்சி மரமும் சிறுமீனும் இயம்பக் பெறுகின்றன. ஒன்று நிலத்தில் வளரும் மரம்: மற்றொன்று நீரில் வாழும் உயிரினம். ஐங்குறுநூற்றுப் பழைய உரையாசிரியர்,

> பூவும் புலாலும் ஒக்க விளையும் ஊரன் என்பது
> குலமகளிரைப் போலப்பொது மகளிரையும் ஒப்பக்
> கொண்டொழுகுவான் என்பதாம்[32]

என்று எழுதுவர். ஓரம் போகியார் ஊர்ப்புனைவில், தெருக்களையோ மாடங்களையோ மனைகளையோ புனைந்திடாது மரங்களையும் மீன்களையும் சுட்டி நிலவியலடிப்படையில் (Biological Approach) ~~[illegible]~~ ஊரை உணர்த்துகிறார். இவருடைய பாடல்கள் அடி எண்ணிக்கை அளவுக்குத் தக்கவாறு ஓரடிப்புனைவாக அமைகின்றன. விரிவாகப் பல அடிகளான் இப்புனைவு அமையவில்லை. சிறுபுனைவானாலும் அந்தப்புனைவில் வேறொரு கருத்துப் பொருளும் அமைகிறது. தலைவன் மனைவியை விடுத்துப் பொது மகளிருடனும் தொடர்புடையவனாகத் திரிகின்றான். அவனுடைய புறத் தொழுக்கத்தை நேருக்கு நேர் சுட்டி அறிவுறுத்த முடியாத தோழி, தலைவன் மனத்தைச் சென்று பாயுமாறு ஊர்ப்புனைவின் மூலம் அறிவுரைக்கின்றாள். இப்புனைவால் தலைவனுடைய ஒழுக்கச்சிதைவு வெளிப்படுகின்றது. பாடலின் ஊர்ப்புனைவால் - இயற்கைப் புனைவால் பெண்டிர் தலைவனைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தல் புலனாகிறது.

இலக்கணமாறுதல்

தொல்காப்பியர் வகுத்த மரபிலேயே இந்த ஐங்குறுநூற்றுப் பாட்டு, தலைவனை ஊருக்கு உடைமையாளனாகத் தோழி கூற்றாக விளக்குகிறது. தொல்காப்பியர் களவியலில், தோழி, தலைவனை நாடன் என்றோ ஊரன் என்றோ விளிப்பர் என உரைப்பர். அது களவுக்குரிய விதி; ஐங்குறுநூற்று ஓரம் போகியார் பாட்டுக் கற்பிற்குரியதாக விளங்கும் வேற்றுமை நோக்கத்தக்கது. தொல்காப்பிய ஊர்ப்புனைவு மரபில், ஓரம்போகியார் பாடலில் வேறு மரபு மீறலோ புதுவளர்ச்சியோ இல்லை.

குறுந்தொகை முதற்பாட்டு

ஐங்குறு நூற்றில் முதற்பாட்டு, மருதத்திணையாகக் குறுந்தொகை முதற்பாட்டு, குறிஞ்சித் திணையாகும். இது தோழி கையுறை மறுத்தது. திப்புத் தோளார் குறிஞ்சித் திணையில் தோழி கூற்றாகப் பாடிப் போந்தார். ஐங்குறு நூற்றுப் பாடல்களுக்குரிய சிற்றெல்லையான நான்கு அடிகளே, இக்குறுந்தொகைப் பாட்டிலுமுள்ளது. முருகனுக்குரிய மலை, உதிர நிறம் வாய்ந்த பூக்களைக் கொண்ட செங்காந்தளின் பூங்கொத்துகளையுடையது. (குறுந்.1) மாலையில் செங்காந்தள் மலர்கள் மலர்ந்திருத்தலே குன்றத்தின் புனைவாகிறது. குறிஞ்சித்திணைக்கேற்ப இப்புனைவுளது. ஆசிரியர் தெய்வமாகிய முருகனொடு குன்றத்தைத் தொடர்புபடுத்திக் கூறுகின்றமையால் மக்களைப் பற்றி அவர் யாதும் கூறிலர்; குன்றத்திலுள்ள ஊரைப் பற்றிய சுட்டும் பாடலில் இல்லை.

நற்றிணை முதற்பாட்டு

குறுந்தொகைப் பாட்டைப் போல நற்றிணைப் பாட்டும் குறிஞ்சித் திணைப்பாட்டு. இது தலைவி கூற்று. தலைவி தலைவனை மிக உயர்வாக மதித்தற்கு ஏற்ப இப்பாட்டு அமைந்திருக்கிறது. தலைவன் பிரியக் கருதியதைத் தோழி தலைவியிடம் சொல்ல, அவளோ தோழி கூறியதை மறுத்துத் தலைவன் அத்தகையன் அல்லன் என்று புகழ்ந்தனள் இது தலைவி கூற்றாகக் கபிலர் பாடியது. இப்பாட்டில் தலைவி தலைவனை நாட்டுடனோ ஊருடனோ இணைத்துப் பேசிலள். இந்நற்றிணைப் பாட்டில் தலைவன் சுட்டப் பெற்றாலும் அவன்

பண்புதான் பேசப்படுகிறதே அன்றி அவன் ஊரோ நாடோ பேசப்படவில்லை. குறிஞ்சித் திணைப் பாடலொன்றில் கபிலர், மலையைப் புனைந்து தலைவனை 'நாட' என்று தோழி விளிப்பதாக நாட்டைப் புனைகுவர்.[33] இது தொல்காப்பிய விதி தழுவிய அமைப்பு.[34]

நோக்கிற்கேற்ப மாறுதல்

இதன் கண் தலைவன் பண்புகளே பேசப்படுகின்றன. பாட்டு, தலைவி தலைவனைக் காணும் நோக்காதலின், இங்கு இயற்கைப் புனைவுக்கோ பிறபுனைவுக்கோ இடமில்லாது போயிற்று. இது பருப்பொருள் புனைவிலும் பண்புப் புனைவாம். தாமரைப்பூவின் மகரந்தத் தூளை ஊதிச் சந்தன மரத்தில் கூடு கட்டிய இனியதேன்; இது குறிஞ்சிக்கேற்ற கருத்து, ஆனால் பாட்டில் நேர் கருத்தாய் வாராது உவமையாய் வருகின்றது. உவமை வழியேயும் கபிலர் தலைவன் தலைவிபால் வைத்த அன்பைப் புலப்படுத்தும் குறிப்புப்பொருளை அமைத்திருக்கிறார். தொல்காப்பிய மரபையே கபிலர் இங்குப் பின்பற்றுகிறார். அகநானூற்றுப் பாடலில், கபிலர் நாட்டையோ மலையையோ ஊரையோ புனைந்திலர். இயற்கைக் குறிப்பு பாடலில் உவமையாக வருவது ஊர்ப்புனைவைக் காட்டத்தக்கதாகும்.

நற்றிணைப் பாடலின் அடிகள், குறுந்தொகைப் பாடல் அடி எண்ணிக்கையைவிடக்கூடுதலாக உள்ளன; எனினும் நற்றிணைப் பாடலில் இயற்கைப் புனைவில்லை. தலைவன் பண்பை மிகுத்துப் பாட வேண்டும் என்ற நோக்கால் அவன் பண்பியல்களைப் பாடிப் புறவுலகைப் பாடாது கபிலர் விடுத்தார். அடி எண்ணிக்கை மிகினும் படைப்பாளி விழைந்தால் தான் ஊர்ப்புனைவோ இயற்கைப் புனைவோ அமையும் என்பதற்குக் கபிலரின் பாட்டு நல்ல சான்றாகும்.

அகநானூற்று முதற்பாட்டு

மருதம், குறிஞ்சி என்ற திணைகளாக எட்டுத்தொகையின் மூன்று நூல்களில் முதல் பாட்டுகள் அமைய அகநானூற்றில் முதற்பாட்டுப் பாலைத்திணைப்

பாட்டாகும். சங்கப் புலவரில் சாலச்சிறந்த மாமூலனார் இதன் ஆசிரியர். இது பிரிவிடையாற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது. இதன் கண் சுரம் என்றும் காடு என்றும் பாதை புனையப் பெறுகிறது. பாலைத் திணைக்குத் தக இப்பாட்டின் புனைவு விளங்குகிறது.

........			நிலம்பக
அழல்போல்	வெங்கதிர்	பைதறத்	தெறுதலின்
நிழல்தேய்ந்	துலறிய	மரத்த	அறைகாய்
பறுநீர்ப்	பைஞ்சுனை	ஆமறப்	புலர்தலின்
உகுநெற்	பொரியும்	வெம்மைய	யாவரும்
வழங்குநர்	இன்மையின்	வெளவுநர்	மடியச்
சுரம்புல்	லென்ற	ஆற்ற	அலங்குசினை
நாரின்	முருங்கை	நவிரல்	வான்பூச்
சூரலங்	கடுவளி	எடுப்ப	ஆருற்
றுடைதிரைப்	பிதிர்வில்	பொங்கிமுன்	
கடல்போல்	தோன்றல	காடிறந்	தோரே

(அகம்.1:9-19)

என்பது அகநானூற்றுப் பாடற்பகுதி. கதிரவன் ஈரம் அறக்காய்கின்றான்; மரங்கள் வற்றிப்போயின. பாறைகள் நீரற்றுப் பசிய சுனைகளில் சொரிகின்ற நெல்லும் பொரிகின்றது. பாதையில் செல்வோர் இன்மையால் ஆறலைப் போரும் வறியராயினர்; இத்தகைய பொலிவற்ற சுரம். இவ்வாறு மாமூலனார் சுரத்தைப் புனைகின்றார்.

இப்பாடலில் மாமூலனார் காட்டையும் காட்டின் வேறாகச் சுரத்தையும் புனைகுவர். அசையும் கிளையினையுடைய முருங்கை வெள்ளிய பூக்களையுடையது; சூறாவளிக் காற்று வீசி ஒலிக்க அலையின் நீர்ச்சிதறலைப் போலக் கீழே வீழ்ந்து முருங்கைப் பூக்கள் பரந்து கிடந்தன. அதனால் கடல் போலக் காட்சி தரும் காடு; பாதையும் காடும் புனையப்படுவதால் அவண்

ஊரில்லை. காட்டில் வழி - சுரன் - இருப்பது இயல்பு. எனவே காடும் காட்டைச் சார்ந்து சுரனும் அகநானூற்றில் புனையப்படுகின்றன.

சுரமும் காடும்

சங்கப்பனுவலில் மாமூலனார் வரலாற்றுக் கூறு அமையப் பாடும் புலவர். அவர் அகப்பாடலில் பாலையைச் சுரனாகவும் காடாகவும் பாடுகிறார். அப்புனைவு நில இயற்கையை இயல்பாகக் காட்டும் இயற்கைப் புனைவாக விளங்குகிறது. இதனை நோக்குழி இயற்கைக் காட்சியைச் சங்க காலத்தில் நன்கு புனையும் மரபு தோன்றிவிட்டது என்பது தெரிய வரும். ஆசிரியர் வழியிடைக் காட்சியைச் சுரமாகவும் சுரத்தைச் சார்ந்த காடாகவும் புனைந்திருக்கிறார். தொல்காப்பியர் ஆற்றிடைக் காட்சியைப் புனைவதற்குரிய வாய்ப்புகளை மிகுதியாகச் சுட்டுவதும் அதனால் பாலைப் பாடல்கள் மிகுதியாகச் சங்கப் பனுவல்களில் காணப்படுவதும் இங்குச் சுட்டற்பாலது.

மாமூலனாரின் இந்தப்பாடலில் இயற்கைப் புனைவு இருந்தும், உள்ளுறை உவமையோ இறைச்சியோ அமையவில்லை. தொல்காப்பியம் சுட்டும் ஊர், சுரம் என்ற இரண்டு வகைப் புனைவில் இங்கு ஊர்ப்புனைவு கிடையாது; சுரப்புனைவே உள்ளது.

கலித்தொகையும் சுரனும்

கலித்தொகையின் முதல் பகுதியான பாலையைப் பாடியவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ. அதன் முதல்பாட்டுத் தலைவன் செலவழுங்குவித்தமையைத் தோழி தலைமகட்குச் சொல்லியதாகும். இது தோழி கூற்று. இப்பாடலின் தரவில், தலைவன் பிரிந்து செல்லத்துணிந்த பாலை வழி புனையப்பெறுகிறது.

தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய, அமரர்வந்து இரத்தலின்
மடங்கல்போல் சினைஇ மாயம்செய் அவுணரைக்

கடந்துஅடு முன்பொடு முக்கண்ணான் மூஎயிலும்
உடன்றக்கால் முகம்போல் ஒண்கதிர் தெறுதலின்
சீறரும் கணிச்சியோன் சினவலின் அவ்எயில்
ஏறுபெற்று உதிர்வனபோல் வரைபிளந்து இயங்குநர்
ஆறுகெட விலங்கிய அழல்அவிர் ஆரிடை

(கலித்தொகை 1:1-8)

ஒளிவீசும் கதிர்களை அள்ளிவீசும் கதிரவன் வெயிலைக் கக்கும்; அதனால் மலைகள் வெப்பத்தால் வெடிபட்டு வழிச் செல்வார். செல்வதற்கு இயலாதவாறு வழியெங்கும் சிதறிக் கிடக்கும் கொடிய வழி. வழியின் கொடுமையைப் புனையவே தெய்வத் தொடர்புடைய உவமைகளைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடுகிறார்.

பாதையும் பாலையும்

அகப்பாடல்களில், சுரம் எவ்வாறு புனையப் பெறுமோ அவ்வாறே இங்கும் பாதை புனையப் பட்டிருக்கிறது. புனைவை அழகும் வலிமையும் ஊட்ட தொன்மங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதனால் தரவின் அடி எல்லை கூடுகிறது. 'சுரமென மொழிதலும் வரை நிலை வின்றே' என்பதனால் வழியருமை கூறினார், என்று நச்சினார்க்கினியர் உரை எழுதுவர்[35]. எட்டுத் தொகை நூல்களில் காலத்தால் பிற்பட்டது கலித்தொகை, ஆதலின் இயற்கையைத் தொன்மக் குறிப்பு உவமையால் விளக்கி அமைகின்றது. கலித்தொகையால், சுரத்தைப் புனைவதில் மாறுபாடோ வளர்ச்சியோ தென்படவில்லை; ஆனால் புலப்பாட்டு முறையில் இயற்கை உவமைக்கு ஈடாகத் தொன்ம உவமை பயிலுகிறது. பாலைத்திணை என்பதற்கு இணங்கச் சுரமே புனையப்படுகிறது. பாலையின் கொடுமைதான் இங்குப் பேசப்படுகிறது. பாலை நிலத்துப் பயிரினமோ உயிரினமோ இல்லை ; கதிரொளிக் கொடுமையால் மலை மண்ணாகப் பொடியான பாலை நிலமே பேசப்படுகிறது. ஊர் பற்றிய சுட்டுக் காணப்பட்டிலது.

பரிபாடலில் முதற்பாடலும் அடுத்த பாடலும் திருமாலைப்பாடுவன; முதற் பாடலின் ஆசிரியர் பெயரில்லை; திருமாலைப் பாடும் பாடல் போற்றிப் பாடலாகப் புகழ்ச்சிப் பாடலாக அமைகிறது. திருமாலின் இருப்பிடத்தையோ ஊரையோ அந்தப்

பாட்டுப் பேசவில்லை; இதனால் புனைவுக்கு வாய்ப்பின்றிப் போகின்றது. வையைப் பரிபாடலில் தான் (பரி:6) பரங்குன்றம் கூறப்படுகின்றது. பரிபாடலில் ஆற்றுவரவும் நீராடும் ஆராவாரமும் ஊர் நிகழ்ச்சியும் நன்கு புனைவு பெறுகின்றன.[36] சங்க இலக்கியத்தில் சிறு புனைவுகளாக இருந்தவை இங்கு விரிவாகப் புனையப் பெற்றுள்ளன. அகநானூற்று மருதத்தில் பரணர் காவிரியாற்றில் பரத்தையொடு புனலாடுதலைப் பாடுவர்.[37] அத்தகைய பகுதியே பரிபாடலில் விரிவாக ஒரு தனிப் பாடலாகப் புனையப் பெறுகிறது.

ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை, பரிபாடல் ஆகிய நூல்களில் பரிபாடலின் முதலிரு பாடல்கள், திருமாலைப் பாடுவன; இயற்கைப் புனைவோ ஊர்ப்புனைவோ அவற்றில் காணப் பட்டில. ஐங்குறுநூற்று முதற்பாட்டு மட்டும் மருதத்திணை; குறுந்தொகையும் நற்றிணையும் குறிஞ்சித் திணைப் பாக்களை முதன்மையாகவுடையன. அகநானூற்றிலும் கலித்தொகையிலும் முதல்பாட்டுப் பாலைத்திணையன.

முதற்பாட்டு ஒப்புமை

	நூல்	புலவர்	திணை	கூற்று	கேட்போர்	புனையுமிடம்
1.	ஓரம் போகியார்	ஓரம் போகியார்	மருதம்	தோழி	தலைவன்	ஊர்
2.	குறுந் தொகை	திப்புத் தோளார்	குறிஞ்சி	தோழி	தலைவன்	குன்றம்
3.	நற்றிணை	கபிலர்	குறிஞ்சி	தலைவி	தோழி	
4.	அகநானூறு	மாமூலனார்	பாலை	தலைவி	தோழி	சுரனும் காடும்
5.	கலித் தொகை	பாலை பாடிய பெருங் கடுங்கோ	பாலை	தோழி	தலைவன்	காடு
6.	பரிபாடல்	நல்லந்து வனார்		தலைவி	வாயில்	ஆறு

ஒப்பியச் சிந்தனைகள்

ஐங்குறுநூற்றின் முதற்பாட்டு, ஊரின் இயற்கை அழகு தோன்றப் புனைகிறது. குறுந்தொகை முதற்பாட்டு, முருகன் வாழுகின்ற குன்றத்தைப் பேசுகின்றது. நற்றிணை முதற்பாட்டு, தலைவன் பண்பைத் தலைவி எடுத்துப் பேசுவதால் அதன்கண் ஊரோ நாடோ புனையப்படவில்லை; ஆனால் ஆசிரியர் உவமையாக இயற்கையைச் சுட்டுகிறார். இது தலைவன் நாட்டுப் புனைவென்று கொள்ளற்பலது. நெடுந்தொகையாகிய அகநானூற்று முதற்பாட்டில் சுரனும் காடும் (பாலை நிலம்) புனைவு பெறுகின்றன. மாமூலனார் இரண்டைப் புனைதலால் பாடலின் அடி எண்ணிக்கைக் கூடுதலாயிற்று. கலித்தொகையின் முதற்பாடலும் பாலையாகிப் பாதையைப் புனைகிறது. பாதைப் புனைவில் இயற்கைப் பொருள்கள் கருத்தாகவோ உவமையாகவோ அமைந்தில. கதிரவனுடைய வெயில் கொடுமை மட்டும் புராண உவமைகளுடன் பாடப் பெறுகிறது. உவமையே தரவில் பல அடிகளில் பேசப்படுகிறது. பரிபாடலின் முதற்பாட்டும் இரண்டாம் பாட்டும் திருமாலைப் பாடும் பாடாண் பாட்டுகள்; அவற்றில் திருமாலின் பண்புகளும் சிறப்புகளுமே பேசப்படுகின்றன. இயற்கையோ திருமால் எழுந்தருளிய திவ்வியதேசங்களோ பாடலில் சொல்லப்படவில்லை.

இவற்றைஒருங்குநோக்கின், ஊர்ப்புனைவு மருதத்திணையில் அமைந்திருப்பதையும் பாலைத் திணையில் சுரப்புனைவு அமைந்திருப்பதையும் காணமுடிகிறது. குறிஞ்சியில் குன்று புனைவாகிறது. கலித்தொகை பரிபாடல் ஆகிய இரண்டில் கலித்தொகைச் சுரப்புனைவின் கருத்து, குறைவாகவும் இயற்கை அல்லாத உவமையாகவும் அமைகிறது; பரிபாடலில் தெய்வத்தைப் பாடலின் ஊர்ப்புனைவுக்கு அமைத்தலும் சங்கப்பனுவல்களின் இயல்பு என்பதை இவை காட்டுகின்றன.

மருதத் திணைப்பாட்டுகள்

அகப்பொருள் சார்ந்த ஆறு நூல்களின் முதற்பாடல்களில், மருதத்திணைப் பாடலிலேயே ஊர் என்ற சுட்டும் புனைவும் தென்படுகிறது. ஊர் என்ற

சொல்லாட்சி மருதத் திணைக்கே உரியது. பின் இச்சொல் எல்லாத் திணையிலும் உள்ள பதிகளையும் சுட்ட வழங்கலாயிற்று. எனவே ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை ஆகிய ஐந்து நூல்களிலுள்ள மருதப் பாடல்களை ஒப்பு நோக்கிக் கருத்துகள் விளக்கப் பெறுகின்றன.

	நூல்	ஆசிரியர்	திணை	கூற்று	கேட்போர்	புனைவுக்களம்
1	ஐங்குறு நூறு	ஓரம் போகியார் பா.எண்.1	மருதம்	தோழி	தலைவன்	ஊர்
2.	குறுந் தொகை	ஆலங்குடி வங்கனார் பா.எண்.8	மருதம்	காதற் பரத்தை	தலைவிக்குப் பாங்காயினர்	ஊர்
3.	நற்றிணை	ஓரம் போகியார் பா.எண்.20	மருதம்	தலைவி	தலைவன்	மறுகு
4.	அகநானூறு	பரணர் பா.எண்.6	மருதம்	தலைவி	தலைவன்	
5.	கலித் தொகை	மருதனிள நாகனார் பா.எண்.66	மருதம்	தலைவி	தலைவன்	ஊர்

சங்கப் புலவர்கள் மறுகை ஊரின் ஒரு பகுதியாகச் சுட்டிப் புனைந்துள்ளனர். பரணர் 'அழுங்கல் மூதூர் மறுகுடன் மடியின்' (அகம்.22:1-4) என்றும் நக்கீரர் 'மறுவிளக்குறுத்த பழ விறல் மூதூர்' (அகம்.141:8-9) என்றும் பாடுவர். மாமூலனார் 'குன்றகச் சிறுகுடி.மறுகு தொறும் மறுகுமஞ்/சீறூர் நாடுபல பிறக்கொழிய' (அகம்.331:7-8) என்று குன்று, சிறுகுடி, மறுகு, சீறூர், நாடு என்று அனைத்தையும் உரைப்பர். அகநானூற்றிலும் நற்றிணையிலும் ஊரின் ஒரு பகுதியாகச் சங்கப் புலவர்கள் மறுகைப் பாடுகின்றனர்.[38] ஆகலின் மறுகு பற்றிய

புனைவும் பாலைத் திணைச் சுரப்புனைவு போல் அமைகிறது. இவற்றை நோக்கும் போது மறுகைப் பாடுதலே முதற் கண் தோன்றியிருத்தல் வேண்டும் என்பது புலனாம்.

புனலாட்டுக் களம்

அகநானூற்றில் பரணர் பாடிய மருதத்திணைப்பாட்டு, பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகற்குக் கிழத்தி கூறியது. (அகம்.6) இப்பாடலின் முற்பகுதி, காவிரி நீத்தத்தில் தலைவன் பரத்தையொடு புனைலாடியதை விளக்கும்.

அரிபெய் சிலம்பி னாம்பலந் தொடலை
அரம்போ ழவ்வளைப் பொலிந்த முன்கை
இழையணி பணைத்தோ ளையை தந்தை
மழைவளந் தருஉ மாவண் தித்தன்
பிண்ட நெல்லின் உறந்தை யாங்கண்
கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தங்
குழைமாண் ஒள்ளிழை நீவெய் யோளொடு
வேழ வெண்புணை தழீஇப் பூழியர்
கயநா டியானையின் முகனமர்ந் தாஅங்
கேந்தெழில் ஆகத்துப் பூந்தார் குழைய
நெருநை ஆடினை புனலே (அகம்.6:1-11)

இந்த அகநானூற்றுப் பாடலில், தலைவன் பரத்தையுடன் நீராடிய இடத்தைச் சொல்ல வந்த பரணர் காவிரி பாயும் உறையூரைச் சுட்டுவர். அது நெற்குவியல்களையுடைய உறையூர் என்றும் ஓடக்கோல் நிலைத்திலில்லாத நீர்ப் பெருக்கையுடைய காவிரியாறு என்றும் பரணர் பேசுவர். பரத்தையொடு நீராடிய தலைவன் செயலைச் சொல்ல வந்த பரணர், காவிரியாற்றைக் கூறல் வேண்டும். எனவே அதனைக் கூற வந்தவர், உறையூரையும் சுட்டினார். மருதத்துக்குரியவாறு ஆறும் ஊரும் இங்குப் பேசப்படுகின்றன. தலைவன் பரத்தையொடு நீராடும் ஊர்ப்பெயர் இப்பாடலில் சுட்டப்படுகிறது. ஆடுகளத்தின் பெயர் கூறப்படுகிறது.

உறந்தை என்றே உறையூரைப் பரணர் பகர்கின்றார். ஐயையின் தந்தையாகிய மழையன்ன கொடைஞன் தித்தனுக்குரியது உறந்தை. ஐயையைச் சுட்ட விரும்பிய பரணர், பாடலில் தித்தனைக் கொண்டு வருகிறார். பெண்ணுக்கு உடைமைப்படுத்தி நிலத்தையோ ஊரையோ சொல்ல முடியாது. எனினும் ஊரைப்பற்றிய புனைவு பாடலில் கிடையாது.

உவமையும் ஊரும்

பாட்டின் பிற்பகுதியில் 'கழார்' என்று ஓர் ஊரினைப் பரணர் பேசுவர்.

சுடர்ப்பூந்	தமரை	நீர்முதிர்	பழனத்	
தந்தூம்பு	வள்ளை	யாய்கொடி	மயக்கி	
வாளை	மேய்ந்த	வள்ளெயிற்று	நீர்நாய்	
முள்ளரைப்	பிரம்பின்	மூதரிற்	செறியும்	
பல்வேன்	மத்திகழாஅ	ரன்ன		(அகம்.6:11-15)

பரணர் அகநானூற்றில் மேலும் மூன்ற பாடல்களில் (225:5; 226:8; 376:4) கழாஅர்ப் பெருந்துறையைக் கூறுகிறார். ஓரம்போகியாரும் (ஐங்.61:3) கழார்க் கீரன் எயிற்றியாரும் (நற்.281:3) கழாஅர்த்துறையைப் பாக்களில் சுட்டுவர்.

இந்த அகநானூற்றுப் பாடலில் (6) உறந்தையையும் கழாரையும் பாடும் பரணர் உறந்தையை வேறு இரண்டு பாடல்களிலும் (அகம் 122:21; 226:14) கழார் என்னும் துறையை (அகம்.222:5; 226:8; 376:6) வேறு மூன்று பாடல்களிலும் சுட்டுகிறார். உறந்தையைப் பரணர் புனைந்திலர்; கழார், என்னும் துறை பாடலில் உவமையாக - புனைவாக - அமைகிறது. உறந்தையையும் கழாரையும் பாடிய பரணர் உறந்தையை நீராடிய இடமாகக் கூறக் கழாரைத் தலைவியரின் இளமைக்கு உவமையாக்குகிறார். இதனால் நீராடிய களத்தைப் புனைவதினும், தலைவி இளமைக்கு உவமையாகும் கழாரை இயற்கை வனப்புத் தோன்றப் புனைவதில் பரணர் ஆர்வம் காட்டுகிறார் என்பது வெளிப்படும்.

தாமரை மலர்ந்த பழனத்திலுள்ள வள்ளைக் கொடியை நெகிழ்ந்து அங்குக் காப்புடனிருந்த வாளை மீனை, நீர் நாய் தின்று, பிரம்பம் தூரிலே சென்று தங்கிற்று. இது மருதத் திணைக்கு உகந்த நீர்நிலைப் புனைவு. பரணரின் இப்புனைவு பாடலில் இன்னொரு கருத்தையும் உணர்த்துகிறது. தலைவன் பரத்தையர்க்குக் காவலாகிய தாய் முதலாயினாரது நிலைமையை நெகிழ்த்துக் குலமகளிரல்லாத விலைமகளிரை நுகர்ந்தான்; பழைய உறவு கருதித்தங்கிடமாத்திரம் இல்லத்திற்கு வந்தான். இது தலைவியின் உள்ளுறை உவமையால் வெளிப்படுமுண்மை.

தலைவிக்குரிமை சுட்டாமை

ஐங்குறுநூற்றில் ஓரம் போகியார் 'நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்' (ஐங்.1:4) என்றும் புதிய வருவாயையுடைய ஊரன் என்றும் தலைவனைச் சுட்டும் முகமாக ஊரைப் பேசுகிறார். உள்ளுறைப் பொருள் பொதிந்த ஓரடியுடன் ஊரின் இயற்கை நிலை புனைவாகிறது. தலைவனைச் சுட்டுமுகமாகவே ஊர்ப்புனைவே தோன்றியது என்பதற்கு ஓரம்போகியாரின் பாடல்கள் நற்சான்றாம். தலைவிக்கு உடைமையாகவோ உரிமையாகவோ ஊரோ நாடோ சங்கப்பனுவலில் இணைத்துப் பாடப்படவில்லை.

பரத்தையரும் தலைவனும்

குறுந்தொகையில் எட்டாவது பாடல் ஆலங்குடிவங்கனார் பாடிய மருதத் திணைப் பாடல். இது காதற்பரத்தை, தலைவிக்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது. ஈண்டு தலைவனைச் சுட்டவந்த காதற்பரத்தை

கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன் (குறு.8:1-2)

என்று அடையாளம் அறைகுவாள்; தலைவன் பெயர் சொல்லக் கூடாது ஆதலின் இம்மரபு பின்பற்றப்படுகிறது. வயலருகே வளர்ந்த மாமரத்தின் விளைந்த இனிய பழம் பக்கத்திலுள்ள பொய்கையில் விழுந்தது; அங்குள்ள வாளை மீன் அதனைக் கவ்விற்று. இவ்வாறு ஊரின் மருத இயல்பு வெளிப்பட ஆலங்கடி வங்கனார்

பாடுகிறார். இது மெய்ப்புனைவு; இவண் அல்லியற்கையோ தற்குறிப்போ புனைவில் இல்லை. ஈரடியான அமைந்த புனைவாயினும் இதன்கண் இன்னொரு பொருள் உள்ளுறுத்துரைக்கப்பெறுகிறது. பரத்தை எவ்வகை முயற்சியுமின்றித் தலைவனை அடைகின்றாள் என்று உண்மையை இயற்கைக்குள் மறைந்திருக்கும் இவ்வுள்ளுறை உணர்த்துகின்றது. தலைவன் பரத்தையரைத் துய்ப்போன் என்பதை இப்பகுதி காட்டுகிறது.

தலைவனுடைய அல்ஒழுக்கத்தை நேருக்குநேர் இடித்துரைக்க இயலாத தோழி சொல்ல வேண்டியதைச் சொல்லும் கடப்பாடுடையவள் ஆதலின் நேர் முகமாக நவிலாது மறைமுகமாகப் பேசுகிறாள். சங்கச் சான்றோர் தீயனவற்றையும் வாழ்க்கை ஒழுக்க முரண்களையும் தங்கள் படைப்புகளில் விரித்துப்புனைந்து வலிமை கொடுக்கும் பண்பிலிகள் அல்லர்; ஆகலின் ஒழுக்கப் பிழைகளைக் கூட மறைவாகவும் நுணுக்கமாகவும் கூறியே அறிவுறுத்துவர். அந்த நல்மரபு தழுவியே ஓரம்போகியார் தலைவன் பரத்தையர் ஒழுக்கத்தை ஊர்ப்புனைவு மூலம் காட்டுகிறார்.

பரத்தைப்புனைவால் ஊர்புனையப்படாமை

நற்றிணையில் இருபதாவது பாடல் மருதத்திணைப்பாடல், ஏனைய பத்தொன்பது பாடல்களும் பிறதிணையைச் சார்ந்தன.[39] இந்த இருபதாவது பாட்டு, தலைவி கூற்றாகும். இது பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன் 'யாரையும் அறியேன்' என்று கூறியதற்குத் தலைவி சொல்லியது. இப்பாடலைப் பாடியவர் ஓரம்போகியார். ஐங்குறுநூற்றில் மருதத்திணையாக நூறுபாடல்களில் ஊரைச் சுட்டிப் பாடிய ஓரம் போகியார், அடி எண்ணிக்கை கூடுதலான நற்றிணைப் பாடலில் ஊரைப்பாடாது, மறுகைச் சுட்டிப் பாடுகிறார். ஓரம்போகியார் மறுகில் (தெரு) பரத்தை நடந்து போதலையே பாட்டில் புனைகின்றார். ஆனால் மறுகின் அமைப்பையோ உயிரினங்கள், பயிரினங்கள் இருத்தலையோ ஓரம் போகியார் குறித்திலர்.[40]

ஊர் வளர்ந்து பரவியிருந்தால் தான் மறுகு அமையும். ஊரின் பகுதிமறுகு. பிற்காலப் புராணங்கள், நகரப்படலம் என்று புனையும்போது பல்வேறு தெருக்களைப் பகுத்துக் கொண்டு ஒவ்வொரு தெருவிலும் ஒவ்வொரு இனத்தார் வாழ்வதாகப் புனையலாயின. ஊரில் தெருக்களைத் தனியே விரித்துப் பாடுதற்குச் சங்கப் பாடல்களே வழிகாட்டி; அதனைக் காட்டும் சான்றே ஓரம்போகியார் பாட்டு.

மறுகுப்புனைவு பின் ஊர்ப்புனைவு

புணர்ச்சி முடிந்து துயல்வரச் செறிதொடி ஒலிப்பப் பரத்தை மறுகில் நடந்து சென்றாள்; புணர்ச்சி முடிந்து தெருவில் செல்லும் பரத்தையின் நிலையைப் புனைந்தமையால், மறுகின் நிலையை ஓரம் போகியார் புனையவில்லை. பாடுபொருளுக்குத் தக்கவாறு புனைவு அமையும் என்பதற்கு ஓரம் போகியாரின் இந்த நற்றிணைப் பாட்டு (20)ச் சான்றாக இலங்குகிறது. ஐங்குறுநூற்றில் 'நனைய காஞ்சிச் சினைய சிறுமீன், யாணரூரன்' (ஐங்.1:4-5) என்று ஊரைப் புனைந்துரைப்பர் ஓரம்போகியார். அவரே நற்றிணையில் இதே திணையில் பாடிய பாடலில் ஊரையே சுட்டிலர்: மறுகை மட்டும் உரைத்தார். மறுகைப் பற்றியும் ஆசிரியர் புனைந்து பாடிலர். ஆலங்குடி வங்கனாரின் குறுந்தொகைப்பாட்டு, தலைவனை ஊர்ப்புனைவாலேயே உணர்த்துகின்றது. ஐங்குறு நூற்றுப் பாட்டுப் போல இந்தப் பாட்டும் ஊர்ப்புனைவில் குறிப்புப் பொருளுடையதாகத் திகழுகின்றது.[41] இவற்றை நோக்கச் சங்க காலத்தில் புனைவு என்பது தெருக்களைப் பாடுவதாகிப் பின் ஊர்களைப் பாடுவதாக வளர்ந்திருக்க வேண்டும் என்பது விளங்கும்.

தலைவன் பரத்தையுடன் ஆடி இன்புற்றான் என்று தலைவியே கூறுவது தலைவிக்கே தகுதியுடையதாகாது; தலைவன் வேறொருத்தியிடம் இன்பம் துய்த்துத் தன்னிடம் தங்கவே வந்தான் என்று தலைவி கூறுவது அவளுடைய உடல் வளத்துக்கும் இன்பம் நல்கும் தளத்துக்கும் இழிவுதரும். ஆதலால் தான் பரணர், தலைவி வெளிப்படக் கூறுவதாகப் பாடாது குறிப்பாகக் கூறுவதாகப் பாடினார். இந்த உள்ளுறையில் கழாரின் இயற்கைக் காட்சி - நீர் நிலையில் நடக்கும் நிகழ்ச்சி - புனையப்பெறுகிறது.

படர்க்கையாகத் தன்னூர்

கழாரைத் தலைவி உவமையாகக் கூறுகிறாள்; தொல்காப்பியர், தலைவி உவமை கூறும் போது அவள் அறிந்த கிளவியைச் சொல்ல வேண்டும் என்பர்.

'கிழவி சொல்லின் அவளறி கிளவி'[42]

என்பதால் கழார் தலைவி அறிந்த ஊராக இருக்க வேண்டும் என்பது புலனாகும். இந்நூற்பாவின் இன்னொரு அடி 'தோழிக்காயின் நிலம் பெயர்ந்து உரையாது' என்பதாகும். இதனால் தலைவி தான் வாழும் திணைப் பொருளையே உவமை உரைத்தல் வேண்டும் என்பது தெரியவரும். தலைவி தன்னூரரையே (புகுந்த வீடு) படர்க்கையாக உவமையில் அமைத்துச் சொல்லுகிறாள். இவ்வாறு பரணர் பாடலில் ஊர்ப்புனைவு விளங்குகிறது.

மருதக்கலிப்புனைவு

மருதனிளநாகனார், மருதக்கலியில், பாடலின் முதற்கண் அமையும் தரவில் தலைவனை 'ஊர' என்று தலைவி விளித்துப் பேசுவதாகப் பாடுகிறார். தலைவனைத் தலைவி 'புனலணி நல்லூர' (கலி.67:8) என்றே விளிக்கின்றாள்; வேறு அன்புணர்த்தும் விளியில்லை. 'மலர் விற்போர், பெரிய நீர் நிலையில் நீலமலர்களைப் பறித்து ஊருக்குள் கொண்டு வந்தனர்; அம்மலர்களைச் சூழ்ந்து கொண்டு வண்டுகள் ஊருக்குள் புகுந்தன. அவ்வூரின் ஓங்கு எழில் யானையின் மணம் நாறும் மத நீரை அந்த வண்டுகள் விருந்துண்டு மகிழ்ந்தன; அதனால் பகல் எல்லாம் அங்குத் தங்கி இரவில், தம் முன்கை வடுப்படுமாறு கணவன்மார்களைத் தழுவி இன்புறும் மகளிர் மயிருள் கிடந்து மலரும் முல்லை மலர்களில் படிந்து தேனுண்டு மயக்கமுற்றன; வேறு மலர்களைத் தேடிச் செல்ல வேண்டும் என்ற நினைவின்றித் தான் வாழ்ந்திருந்த பொய்கையையும் மறந்து வண்டுகள் திரியும் நீர் வளம் நிறைந்த நல்லூர[43] என்பது புனைவு.

பொய்கையும் பூக்களும் அமைந்து ஊரை மருதனிள நாகனார் இயற்கை நலம் மிகப் புனைகின்றார். ஒரு வண்டை முதன்மைப் படுத்தி அதை நீர்ப் பூவுடன் ஊருக்குள் புகுவதாய்க்காட்டி ஊரில் மதநீரை உண்ணலையும் புணர்ந்த மகளிர்

சூடிய முல்லைப் பூவினை நுகர்தலையும் காட்டிப் பாடுகிறார் புலவர். இது மிக இயல்பான புனைவு ஊர். இயற்கை வளத்தால் நிகழும் வண்டின் நிகழ்ச்சியை ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்வதாகச் சுட்டிப் புனைந்து காட்டுகிறார். ஆசிரியர்.[44]

இப்புனைவில் தலைவி தலைவனை ஒழுக்கப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுத் தலைவனுக்கு அவன் ஒழுக்கக்கேடுகளை அவனுணரக் குறிப்பாக எடுத்துரைக்கிறாள். இயற்கைப் புனைவாகிய ஊர்ப்புனைவு வேறொரு கருத்தையும் உணர்த்தப் பயன்படுத்தப்படுகிறது. நீர் நிலையைப் பரத்தையர் சேரி என்றும் நீல மலரைப்பரத்தை என்றும் மலரைச் சுற்றித் தொடர்ந்து திரியும் வண்டு. பரத்தையரைச் சூழ்ந்து திரியும் தலைவன் என்றும் அவ்வண்டு யானையின் மத நீருண்டு தங்குதல், தலைவன் சேரிப்பரத்தையரைப் புணர்தல் என்றும் மங்கையர் சூடிய முல்லையில் தேனுண்ணல், இற்பரத்தையிடம் இன்பம் நுகர்தல் என்றும் பூம்பொய்கையை மறத்தல் தலைவன் மனைவியை மறத்தல் என்றும் மருதனிள நாகனார் கூறுகிறார். தலைவன் வண்டனையனாய்த் திரிதல் மூலம் அவன் ஒழுக்கக் கேடனாய்த் திரிதல் பேசப்படுகிறது. இவண் தலைவி, தலைவனைப் பற்றிக் கூறுவன அனைத்தும் நேருக்கு நேர் தலைவியால் சொல்ல முடியாதன. அதனால் தலைவன் உணருமாறு வெளிப்படையின்றி மருதனிள நாகனார் உரைத்தார். எனவே மருதனிள நாகனாரின் ஊர்ப்புனைவு. மருதச் சார்புடையதாய்க் குறிப்புப் பொருளுணர்த்துவதாய் விளங்குகிறது. சங்கத் தொகை நூல்களில், கலித்தொகைப் புனைவு, புனைவாலும் உள்ளுறையாலும் கூடுதலாக விளங்குகிறது.

பரிபாடல் புனைவு

வையைப்பரிபாடலில் நல்லந்துவனார் (பா:6) வையை வெள்ளத்தையும் தலைவன் பரத்தையருடன் ஆடலையும் ஊடலையும் கூடலையும் பாடுகிறார். ஆனால் ஆற்றுப் புனைவும் ஊடலும் கூடலுமாகிய புனைவும் தாம் பரிபாடலில் அமைகின்றன. அந்துவனாரின் நோக்கம் ஆற்றைப் புனைவது; ஊரைப் புனைவதன்று.

அகப்பொருள் சார்ந்த எட்டுத் தொகை நூல்களில், ஊரும் மறுகும் புனையப்பட்டிருக்கின்றன. இந்தக் குறிப்பினை நோக்கும் போது, ஊர் என்ற அமைப்பு பெருவளர்ச்சி பெற்றிருந்தமையும் அதனை இயற்கை வளம்படப் புனைந்தமையும் தெரியவரும். இந்தப் புனைவுகளில் செயற்கையாகச் சங்கப் புலவர் எதனையும் சுட்டிப் பாடவில்லை. இயற்கையைப் புனைந்து பாடிய போதும், இன்னொரு கருத்துப் புலப்படப் பாடினர்; அவர்கள் பாடிய உள்ளுறைக் கருத்து, பாடலின் பாடுபொருளுக்கு இயைந்ததாக விளங்குகிறது..

புறப்பொருள் நூல்கள்

புறநானூற்று முதற்பாட்டு

அகப்பொருள் நூல்களைப் போலப்புறப்பொருள் நூல்களிலும் ஊர்ப்புனைவுகள் அமைந்திருக்கின்றன. முரஞ்சியூர் முடிநாகராயர் தான் பாடிய புறநானூற்றுப் பாட்டில், சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை விளிக்கும் போது அவனை,

நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந (புறம். 9-11)

என்று விளிக்கின்றார். இந்தப் புனைவில் மன்னனுடன் நாட்டைத் தொடர்புபடுத்திப் புலவர் பாடுகிறார். நாடு பற்றிய புனைவில் பயிரினமோ உயிரினமோ ஆறோ பொய்கையோ பேசப்படவில்லை. மேலைக் கடற் கரைக்கும் கீழைக் கடற்கரைக்கும் இடையிற் கிடக்கும் நாடு முற்றும் இவனுக்கே உரியது என்பதை உணர்த்த புலவர் கதிரவனை இங்குப் பேசுகிறார். ஞாயிற்றின் தோற்றத்தையும் மறைவையும் சுட்டிச் சேரமன்னன் ஆளும் நிலப்பரப்பு எல்லையைக் காட்டுகிறார். ஆசிரியர், காப்பிய இலக்கியங்கள் போலக் கதிரவன் தோற்றத்தையும் மறைவையும் மிக சுருக்கமாக புனைகின்றார்.[45] புனைவு நாட்டின் பரப்பைக் காட்டுவதாக அமைகின்றது.

இரண்டு மலைக்கு ஒரு புனைவு

பாடலின் பிற்பகுதியில் மலையை முரஞ்சியூர் முடிநாகராயர் புனைந்துரைக்கிறார்.

......... அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி யந்தண ரருங்கட னிறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே

(புறம்.2:20-24)

இப்பாடல் இமயம், பொதியம் ஆகிய இரண்டு மலைகளையும் ஒன்று போலப்புனைகிறது. மலையிலுள்ள சிறிய தலையினையுடைய நவ்விமானும் பெரிய கண்ணையுடைய பெண்மான்களும் மாலைக் காலத்தே அந்தணர் செய்தற்கரிய கடனாகிய ஆவுதியைப் பண்ணும் முத்தீ விளக்கில் துஞ்சும் சிகரங்களையுடைய இமயமலையும் பொதிய மலையுமாம். ஒன்றோடொன்று இணைந்திடாததும் வெவ்வேறு இயல்புகளையுடையதும் அருகருகே இல்லாததுமாகிய இரண்டு மலைகளை ஒரே இயற்கைப் புனைவால் முரஞ்சியூர் முடிநாக ராயர் புனைகிறார். இந்த இரண்டு மலைகளைப் போலச் சேரமான் வாழ்க என வாழ்த்துகிறார். அகப்பொருள் பாடல்களில் ஊர் உவமையாக வருதலைப் போல இங்கு இமயமலையும் பொதிய மலையும் உவமையாக வருகின்றன. நிலை பேற்றை வலியுறுத்தும் வாழ்த்ததாக இஃது அமைகிறது.

பதிற்றுப்பத்தின் முதற்பாட்டு

மற்றொரு புறப்பொருள் நூல் பதிற்றுப்பத்து. இந்நூலின் இரண்டாம் பத்தில் முதற்பாட்டு, இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாடுகிறது. குமட்டூர்க் கண்ணனார், சேரனை விளிக்கும் போது அவனை நாட்டுடனோ ஊருடனோ தொடர்புபடுத்திப் பாடிலர்.

நாரரி நறவி னார மார்பிற்

போரடு தானைச் சேர லாத (பதி.11:15-16)

என்பது விளி. நறவு, முத்துமாலை அணிந்த மார்பு, படை ஆகிய மூன்றையு முடையவன் சேரன் என்றும் இவன் இமயம் முதல் குமரி வரையுள்ள பகுதியை வென்றவன் என்றும் புலவர் பேசுவர். அந்நாட்டைச் சுட்டும் போது, இயற்கையைப் புனையும் குறிப்புள்ளது.

கவிர்ததை சிலம்பிற் றுஞ்சுங் கவரி

பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவும்

ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்

தென்னங் குமரியொ டாயிடை

மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே (பதி.11:21-25)

என்பது அப்பாடற் பகுதி. முருக்கு நெருங்கின பக்க மலையிலே உறங்குகின்ற கவரிமான் பரந்து விளங்கும் அருவியையும் நரந்தம் புல்லையும் கனவுகாணும் ஆரியர் நிறைந்த மிக்க புகழையுடைய இமயமும் தென்திசைக் கட்குமரியிமயமாகிய அவற்றுக்கிடைப்பட்ட நாடு; இது சேரன் வென்றநாடு. இவ்வாறு இரண்டு இடங்களுக்கு இடைப்பட்ட பகுதியையே குமட்டூர்க் கண்ணனார் பாடுகிறார். இவண் மலைப்புனைவு இடம் பெறுகிறது. ஊரையோ நகரையோ குமட்டூர்க் கண்ணனார் புனைந்திலர். இரண்டு எல்லைகளைச் சுட்டி அதற்குட்பட்ட நிலப்பகுதியை ஆசிரியர் கூறுகிறார்.

புறநானூறும் பதிற்றுப்பத்தும்

புறப்பொருள் பாடலாகிய இவை இரண்டிலும் எந்த ஊர்ப் பெயரும் சுட்டப்படவில்லை; ஊரும் புனையப்படவில்லை. புறப்பொருளுக்குப் பொருந்தும் வண்ணம் மன்னர்களின் நாட்டெல்லை பாடல்களில் சுட்டப்படுகின்றன; மலை பேசப்படுகிறது; இரண்டு நூல்களிலும் இமயம் குறிக்கப் பெறுகிறது. புனைவுகள் விரிவாகவோ முற்றும் இயற்கையைப் பாடுவனவாகவோ அமைந்தில. புறநானூற்றுப் பாட்டு, கிழக்கு மேற்காகப் பாடப் பதிற்றுப் பத்து தெற்கு வடக்காகப்பாடுகிறது.

புறநானூறு, நாட்டுடன் மன்னனை இணைத்து விளிப்பதாக அமைகிறது. பதிற்றுப்பத்தில் நாடோ ஊரோ மன்னனுடன் இணைத்துப் பாடப்படவில்லை. இருநூல்களிலும் முதற்கண் விளங்குவன சேரன் பற்றிய பாட்டுகள்.

எட்டுத் தொகை நூல்களின் முதற்பாட்டு அனைத்தையும் ஒப்பு நோக்கி ஆராயின் ஊர்ப்புனைவின் தோற்ற வளர்ச்சியைப் பற்றிய கருத்துகள் புலனாகும். அவை இங்குத் தரப்படுகின்றன. அகப்பாடல்களில் தலைவனைத் தலைவியோ தோழியோ 'புனலணி நல்லூர்' என்று விளிப்பர்; தலைவனுடன் நாட்டையோ ஊரையோ சேர்த்து விளிப்பது அகப்பொருள் மரபு. அந்த மரபைப் போலப் புறப்பாடலிலும் முரஞ்சியூர் முடிநாகராயர் நாட்டுடன் மன்னனைச் சேர்த்தே விளிக்கின்றார். இரண்டு பாடலிலும் கவரிமான் துஞ்சுதல் பேசப்படுகிறது. இரண்டிலும் இமயம் சுட்டப்படப் புறநானூறு பொதிய மலையையும் பதிற்றுப்பத்து குமரியையும் குறிக்கின்றன.

ஊர்ப்புனைவின் வளர்ச்சி

புறப்பொருள் பாடல்களில் தலைவன் இயற்பெயரைச் சுட்டுவதில் எவ்வகைத் தடையுமில்லை; ஆனால் அகப்பொருள் பாடல்களில் தலைவன் இயற் பெயரைச் சுட்டல் கூடாது; ஆகையால் தலைவனுடைய ஊரைச் சுட்டியே - இயற்கைப் புனைவுடனேயே - அகப்பாடல்களில் தலைவன் அடையாளம் காட்டப்பெறுகிறான். இதனால் புறப்பொருள் பாடல்களைக் காட்டிலும், அகப்பொருள் பாடல்களில் ஊரும் பிற இயற்கைப் புனைவுகளும் புனையப்பட்டுள்ளன. புறப்பொருட் பாடல்களில் ஊர்/நாடு/கோட்டை/ ஆகியவற்றின் அழிவும் அதன் முன்னை நிலையும் புனைந்து பாடப்பட்டிருக்கின்றன. அகப்பொருட் பாடல்களில் ஊரின் இயற்கைப் புனைவு வாழும் புனைவாகவே விளங்குகிறது. எனவே அழிவாகவும் இருப்பாகவும் இரண்டு வகையாக ஊரைப் புனையும் புறப்பாடல்களின் போக்கை அகப்பொருட் பாடல்களில் காண முடியவில்லை. ஊர்ப்புனைவு புறப்பொருட் பாடல்களைக் காட்டிலும்

அகப்பொருட் பாடல்களில் தான் மிகுதி; புனைவு வளர்ச்சியும் அகப்பொருட் பாடல்களால் தான் பாடல்களில் பெருகியிருக்கின்றன.

ஆட்சியும் வளர்ச்சியும்

அடி எண்ணிக்கை அளவு குறைவாக இருந்தாலும், ஐங்குறுநூற்றில், மருதத் திணைப் பாடல்கள் ஊரை அழுத்தமாகவும் பளிச்சென்றும் பாடலில் புனைகின்றன. ஏனைய அகப்பொருள் நூல்களிலும் இதே போக்கைக் காண முடிகிறது. ஊரையும் ஊரின் இயற்கையையும் புனைந்து பாடுதல் சங்க காலத்துக்கு முன்னரே தோன்றிவிட்டது; இதனைத் தொல்காப்பியம் உணர்த்தும். இயற்கைக்கு இடையே இயற்கையை ஒட்டி வாழ்ந்த தமிழர், இயற்கையைப் பாடியது இயல்பேயாகும். இயற்கைப் புனைவு, பாடல்களில் பயின்று நன்கு வளர்ச்சி பெற்றதைத் தொல்காப்பியம் காட்டுகின்றது; அவ்வண்ணமே சங்கப் பனுவல்களும் ஊர்ப்புனைவை விவரிக்கின்றன. ஊர்ப்புனைவை இலக்கியப் படைப்பாளிகள், பாட்டின் பாடுபொருளுக்குத் தொடர்புடைய இன்னொரு குறிப்புப் பொருளைத் தருவதாகப் பயன்படுத்தினர். இலக்கணிகளும் உள்ளுறை, இறைச்சி என்று இதனை ஏற்றுக் கோட்பாடாக வளர்த்தனர். இவ்வாறு சங்க காலத்திலேயே, ஊர்ப்புனைவு மிகப் பெரிய வளர்ச்சி பெற்றது என்பது புலனாகும்.

ஊர் வளர்ச்சியும் காவலும்:

இதனை வலியுறுத்துமாறு ஊர்களில் காவலர்கள் பணியாற்றினர்; இவர்கள் இரவுப் போதில் ஊரைக்காவல் செய்தனர்.

யாமங் கொள்பவர் சுடர் நிழல் (புற.37:9)

இங்கு நப்பசலையார் ஊரைப்புனைந்து ஊரைக் காத்தலைச் சுட்டுவர். நற்றிணைப் பாட்டொன்று

காப்புடை வாயில் போற்றோ என்னும்
யாமங் கொள்பவர் நெடுநா ஒண்மணி
ஒன்றெறி பாணியின் இரட்டும் (நற்.132:8-10)

என்று ஊரைக் காவல் செய்வதைக் கூறும். கோண்மா நெடுங்கோட்டனார்

நெடுநா வொண்மணி கடமனை இரட்ட (நற்.40:1)

என்று காவலை உணர்த்த மணி ஒலித்தலைப் பேசுவர். இதனால், ஊர் என்ற அமைப்பு நன்கு வளர்ச்சி பெற்று உருவாகி விட்டமையை அறிய முடியும். ஊர் என்ற அமைப்பு அமைந்து புனையத் தக்கதாகிவிட்டது. அதனால் தான் சங்கப்புலவர்கள் தங்கள் பாடல்களில் ஊரைச் சுட்டியும் புனைந்தும் அமைப்பை விளக்கியும் பாடினராதல் வேண்டும்.

எட்டுத் தொகையில் புனைவு மாறல்

சங்க இலக்கியங்கள் ஊர்களைப் பலவாறு புனைந்து பாடுகின்றன. ஊர்ப்புனைவு மரங்களையும் செடிகொடிகளையும் விலங்குகளையும் பொழுதுகளையும் புனைவதாகத் தோன்றி வளர்ந்தன. தொல்காப்பியர், ஊர்களைப் புனைவதற்குக் கருப்பொருள்களில் எந்தச் செயற்கைப் பொருளையும் சுட்டிலர்; அவர் சுட்டியன எல்லாம் இயற்கைப் பொருள்களே. மக்கள் பெருகப் பெருக ஊர்களின் அமைப்பு விரிந்தது; இயற்கையைத் தழுவித் தமிழன் வாழத் தொடங்கி அதனைத் தன் கட்டுக்குள் கொண்டு வந்துவிட்டான். இயற்கைக் கவினொடு இலங்கிய இயற்கை நிலத்திடையே செயற்கையைப் புனையலாயினர்.

அமைப்பு விளக்கம்

நெடும் பாடலாகிய பெரும்பாணாற்றுப் படை, கச்சிமாகரைப் புனையுமிடத்துத் தாமரை மலரொடு புனைகிறது. இதற்கு முந்தைய இலக்கியங்களில், இவ்வூரைப் பற்றிய குறிப்புகள் இல்லை.[46] கடியலூர் உருத்திரங் கண்ணனார்

நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டிற காண்வரத் தோன்றிச்
சுடும ணோங்கிய நெடுநகர் வரைப்பின் (பெரும்.404-406)

என்று கச்சி மாநகரைப் புனைவர். ஊர் தாமரைப் பொகுட்டைப் போலத் தோன்றிச் செய்யப்பெற்ற தன்மையும் ஊரின் சீர்மையும் இதனால் உணர்த்தப்பட்டது. இப்பகுதியில் தெருக்களின் அமைப்பும் இயற்கை நலங்களும் பேசப்படவில்லை. மிளை சூழ்படப்பையும் கோபுர வாயிலில் யானைக்குரிய கவளத்தைக் தூங்கு கவர்தலும் புனையப் பெறுகின்றன. காலம், திணை ஆகியன தோன்ற ஊர்களைச் சங்க இலக்கியங்கள் புனைகின்றனவே அன்றி ஊரின் அமைப்பை நகரமைப்புப் படம் போல அகப்பாடல்களிலும் ஆற்றுப்படைகளிலும் பாடுதலைக் காணமுடியவில்லை.

பரிபாடல் புனைவு

பெரும்பாணாற்றுப் படையே, தாமரைப் பொகுட்டைக் காஞ்சி ஊரமைப்புக்குக் கூறுகிறது. ஆனால் பரிபாடலில் இந்தக் கருத்துக் கூடுதலான செய்திகளுடன் விரித்துப் புனையப்பட்டிருக்கிறது.[47] தாமரை மலரமைப்பு கச்சியை விட மதுரை மாநகருக்கே பொருந்துமாறு புனையப் பெற்றுள்ளது. பரிபாடல்பாடுகின்ற பகுதி:

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீரூர் பூவின்
இதழகத் தனைய தெருவ மிதழகத்
தரும்பொகுட் டனைத்தே யண்ணல் கோயில்
தாதி னனையர் தண்டமிழ்க் குடிகள்
தாதுண் பறவை அனையர் பரிசில் வாழ்நர்
(பரி. திரட்டு:7)

என்பது பரிபாடல் பகுதி. தாமரைப் பூவின் வடிவை மதுரை அமைப்பிற்குப் பரிபாடல் உவமிக்கிறது.

தாமரைப்பூ - மதுரை
கொட்டை - மன்னன் கோயில்
இதழ்கள் - தெருக்கள்

தாது - மக்கள்

பரிசில் வாழ்நர் - வண்டுகள்

ஊர் அமைப்பைப் புலப்படுத்துமாறு புலவர்கள் பாடிய குறிப்பு வேறு தொகை நூல்களில் பயின்றிலது. ஊரின் அமைப்பு உவமை வழி தெளிவுபடுத்தப்படுகிறதே அன்றிப் புனைவு செய்யப்பெறவில்லை. பரிபாடலாசிரியர் எந்நோக்கத்தில் மதுரையை இவ்வாறு பாடினார் என்று புலனாகவில்லை. இப்பாடல் முழுமையாகக் கிட்டியிருப்பின் பாடிய நோக்கம் புலப்பட்டிருக்கும்.

பரிபாடலும் பிற தொகை நூல்களும்

பெரும்பாணாற்றுப் படையின் கருத்தை ஒட்டியே, பரிபாடலின் புனைவும் அமைப்பு விளக்கமும் பாடப்பட்டிருக்கின்றன. தமிழகத்தின் மிகப்பழமையான ஊர் மதுரை; கச்சியும் தமிழகத்தின் தொன்மையான ஊரேயாயினும் அவ்வூர்த் தமிழ்ச் சார்பினும் சமசுக்கிருதச் சார்பை மிகுதியாக உடையது. [48] பரிபாடல் பல்வேறு அகப்பொருட் கிளவிகளைத் தன்னகத்தே கொண்டது; நற்றிணை, குறுந்தொகை நெடுந்தொகை ஆகியவற்றின் பாடல்கள் ஒரு நிகழ்ச்சியைத் தலைமைப்படுத்தி அதனையே பாடுந்தகையன; பரிபாடலில் ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள் காணப்படும். ஆகையால் தான் அகப்பொருட் பாடல்களில் ஊரமைப்பைப் பாடின் பாடலின் அடி எண்ணிக்கை கூடுதலாதும், பாடுபொருளின் ஒருமைப் பாடு குலையும். பல்வேறு அகப்பொருட் செய்திகள் பரிபாடலில் இடம் பெறுதலால், மதுரை அமைப்பும் களமாகப் பாடலில் அமைகிறது. ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, நெடுந்தொகை ஆகியவற்றின் பாடல்களில் புனைவு இடம் பெற்றில.

எட்டுத் தொகை நூல்களில் காலத்தால் பிற்பட்டது பரிபாடல்; ஆதலின் இத்தகைய ஊர் அமைப்புக் குறிப்புகள் காணப்படுகின்றன. பரிபாடல் பாண்டிய நாட்டு நூலாதலின் பாண்டியரின் தலைமைத் தலைநகர் மட்டும் இதன்கண் புனையப் பெறுகிறது. இஃது ஊர்ப்~~பை~~ புனைவில் பிற்கால வளர்ச்சி. இன்று நகரமைப்பை வரைபடமாக வரைந்து காட்டுவது போலப் பரிபாடல்

சொல்லோவியமாகக் காட்டுகிறது. சங்க மக்கள் வாழ்ந்த ஊர்கள் மிக விரிவாகவும் ஓர் ஒழுங்குபடவும் அமைந்திருந்தன என்பதையும் சங்க காலம் தொட்டுப் பாடல்கள் ஊரைப் புனைந்தன என்பதையும் பரிபாடல் எடுத்துக் காட்டுகிறது.

சங்க நூல்களுக்குப் பின்னெழுந்த இலக்கியங்கள் அறக் கருத்துகளை வலியுறுத்திப் பாடத் தொடங்கின. இதன் காரணமாக ஊரைப் புனையும் போக்கும் மரபும் குன்றிவிட்டன. திருக்குறள் இதனை நன்குணர்த்தும்.[49] காப்பியங்கள், ஊரமைப்பைப் பகுதி பகுதியாகப் புனைந்தன; புராணங்கள் அதனை மேலும் விரித்துப் பாடின.

ஊரைப்புனையும் ஆற்றுப்படை

அகப்பொருட் பாடல்களில் பெயர் சுட்டிப் பாடக் கூடாது என்பது தமிழ் அகப்பொருள் மரபு. தலைவனைச் சுட்டவந்த சங்கப்புலவர்கள், அவனை நாட்டுடனும் மலையுடனும் ஊருடனும் இணைத்துப் பாடினர். ஊரைப்பாடும் போது, அகப்பொருளைப்பாடுவதால் ஊர்ப்பெயரையும் சுட்ட முடியாத நிலை ஏற்பட்டது; அச்சூழலில் புலவர்கள் ஊரை உவமையாகச் சுட்டி ஊர்ப்பெயரையும் குறிப்பிட்டனர். உவமை உள்ளுறை உவமையாகவும் ஏனை உவமையாகவும் வளர்ந்தன; இறைச்சி என்ற கூறும் தனியே அமையலாயிற்று. சிறுகச் சிறுக அகப்பொருள் பாடல்களில் வளர்ச்சிபெற்ற இவையனைத்தும் அகப்பொருளின் தனிச் சிறப்பாக வளர்ந்தன.

அகப்பாடல்களில் பாதை வழி, சுரம் என்றும் காடு என்றும் புனையப்பட்டமை போலப் புறப்பொருள் பாடல்களில் பாதை வழியைப் புனைய ஆற்றுப்படைத்துறை சிறந்த களமாகும்.[50] புறநானூற்று ஆற்றுப்படைப் பாடல்களில் தலைவனின் ஊர் வருணனை கூறப்பட்டுள்ளது. [51] பதிற்றுப்பத்தில் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாடும் நச்செள்ளையார் ஒரு பாடலில் 'நறவு' என்ற ஊர்ப்பெயரைக் குறிக்கிறார். (பதிற்.60:4-12) பிற ஆற்றுப்படைப் பாடல்களில் எந்த ஊரையும் பற்றிய குறிப்புக் கிடையாது.

புறநானூற்று ஆற்றுப்படை

சோணாட்டு முகையலூர் சிறுகருந்தும்பியார் வல்லார் கிழான் பண்ணனுடைய ஊரான வலாரைப் புனைகின்றான்.

மன்ற	விளவின்	மனைவீழ்	வெள்ளில்	
கருங்க	ணெயிற்றி	காதன்	மகனொடு	
கான	விரும்பிடிக்	கன்றுதலைக்	கொள்ளும்	
பெருங்குறும்	புடுத்த	வன்புல	விருக்கைப்	
புலாஅ	வம்பிற்	போரருங்	கடமிளை	
வலாஅ	ரோனே	வாய்வாட்	பண்ணன்	(புறம்.181:1-6)

வலார் என்னும் ஊரைச்சுற்றிக் கோட்டையும் மதிலும் விளங்கின. இவ்வூர் மன்றத்தில் விளாமரங்கள் நின்று தழைத்துக் காய்த்துக் கனிந்திருந்தன. அவை கீழே உதிரும். அவற்றை எடுக்க எயிற்றியருடைய பிள்ளைகளுடன் கான யானைக்குட்டிகளும் ஓடிவரும். இது வலார் என்ற ஊரின் புனைவு. இங்குப் புனைவு விரிவாக உளது. மக்களும் மாக்களும் புனைவில் இடம்பெற்றன.

சேரநாட்டுப் புலவரான பொய்கையார் சேரன் கோக் கோதை மார்பனைப் பாடுழி தொண்டியைக் 'கோதை மன்னன் அணிந்த மாலையானும் அக்கோதையைக் கூடிய கன்னியர் மாலையானும் கரியகழியில் மலர்ந்த நெய்தல் பூவானும் தேன்நாறுகின்ற கானலையுடைய கரியகழியில் மலர்ந்த நெய்தல் பூவானும் தேன்நாறுகின்ற கானலையுடைய தொண்டி' (புறம்.48:1-6) என்று புனைவர் அஃதெம் மூரே அவன் எம்மிறைவன் என்றுரைப்பர். தொண்டியைப் பொய்கையார் நெய்தல் நிலம் தோன்றப் பூமணம் கமழப் புனைகிறார்.

தொண்டியைப் போலச் சோழர் தலைநகரான உறந்தையைக் கோவூர் கிழாரும் ஆலத்தூர் கிழாரும் புனைகின்றனர்.

புனிறுதீர்	குழவிக்	கிலிற்று	முலைபோலச்
சுரந்த	காவிரி	மரங்கொன்	மலிநீர்
மன்பதை	புரக்கு	நன்னாட்டுப்	புட்பகைக்

கேவா னாகலிற் சாவேம் யாமென
நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்பத்
தணிபறை யறையு மணிகொ டேர்வழிக்
கடுங்கட் பருகுவர் நடுங்குகை யுகுத்த
நறுஞ்சே றாடிய வறுந்தலை யானை
நெடுநகர் வரைப்பிற் படுமுழா வோர்க்கும்
உறந்தை யோனே குருசில் (புறம்.68:8-19)

என்பது கோவூர் கிழார் புனைவு. இங்கு நாட்டையும் சொல்லி உறந்தையையும் புலவர் சுட்டுகிறார். சோழ நாட்டில் காவிரி பாய்வதும் வீரர் சிறப்பும் சிந்திய கள்ளில் மிதித்துத் திரியும் யானை பறையோசையைக் கேட்டலும் உறையூரின் தன்மையாகும். புறப்பொருள் பாடல் என்பதற்காக ஊர்ப்புனைவு வேறாக அமைகிறது. போர்வீரர் எழுச்சியும் யானையின் நிலையும் ஊர்ப்புனைவில் சிறப்புப் பெறுகின்றன.

ஆலத்தூர் கிழார் வேறொரு புறநானூற்றுப் பாடலில்

............ மன்னர்
அடுகளி றுயவுங் கொடிகொள் பாசறைக்
குருதிப் பரப்பிற் கோட்டுமா தொலைச்சிப்
புலாக்களஞ் செய்த கலாஅத் தானையின்
பிறங்குநிலை மாடத் துறந்தை யோனே (புறம்.69:7-12)

என்று உறையூரைப் பாடுவர். மன்னர்களின் களிறு புண்பட்டு வருந்துகின்றதும் கொடிபறப்பதுமான பாசறையில் யானையைக் கொன்று புலால் மணம்வீசும் போர்க் களத்தை உண்டாக்கிய போர்ப் படையையுடைய சோழன், அவன் உயர்ந்த நிலையையுடைத்தாகிய மாடத்தையுடைய உறையூரிடத்திருந்தான்.

இங்கு ஆலத்தூர் கிழார் உறந்தையை விரித்துப் புனையவில்லை. நலங்கிள்ளியைப் பாடுகின்ற கோவூர் கிழார், ஆலத்தூர் கிழாரினும் ஊரை விரிவாகப் புனைகின்றார். இருபுலவரும் புறப்பொருளுக்குத் தக்கவாறு உறந்தையைப்

புனைகின்றார். அகப்பொருள், புறப்பொருள் ஆகியற்றுக்கேற்பப் புனைவு வேறுபடும் என்பது இவற்றால் தெரிகிறது.

அகப்பொருள் - புறப்பொருள் புனைவுகள்

இவ்வண்ணம், ஆற்றுப்படையில் அமைந்த ஊர்ப்புனைவுகள் புறப் பொருளுக்கு ஏற்றவாறு புனையப்பட்டிருக்கின்றன. புரவலன் இருக்கும் ஊரைச் சுட்ட வந்தபோது புலவர்கள் ஊரைக் குறிப்பிட்டுப் பாடினர். புறப்பாடல்களில் அகப் பாடல்களைப் போலத் திணையைக் காட்டுகின்ற கருப்பொருள்கள் புனைவில், அகப்பாடல்களில் அரும்பிய ஊர்ப்புனைவு. புறப்பாடல்களில் விரிவாக அமைந்தது. அகப்பாடல்களில் ஒரு நிலமே புனையப் பெறும்; ஒரோ வழி, பல நிலமும் புனைவு பெறும். பாட்டுடைத் தலைவனுடன் திணைப் புனைவு இணையும் போது, ஆற்றுப்படை இலக்கியங்களில் ஐந்திணைப் புனைவுகளும் ஊர்ப்புனைவுகளும் இணையலாயின.

வளர்ச்சிநிலையும் பதிற்றுப்பத்தும்

பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடிய பாட்டில் ஐந்திணைகளைச் சுட்டிப் பாடுகின்றார். (பதி.30) - இப்பதிற்றுப்பத்துப் பாட்டு, அகநூல்களிலிருந்து ஊர்ப்புனைவு, புறப் பாடல்களுக்கு ஏறிய போது பெற்ற வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது.

பல்யானைச் செல் கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடுகிறார். அவன் வென்றிச் சிறப்பைக் காட்ட ஐவகை நிலத்தையும் - நிலத்திலுள்ள ஊர்களையும் - புலவர் புனைகிறார். அகப் பாடல்களில் ஐந்திணையையும் தனித் தனியே புனையாது ஏதேனும் இரண்டையோ மூன்றையோ திணை மயக்கமாகப் புனைந்து சங்கச் சான்றோர் இயற்கைப் புனைவைப் பாடுவர், இது திணைப் புனைவாக அமைந்திருக்குமேயன்றி ஊர்ப்புனைவாக அமைந்திராது. புறப்பொருள் பாடல்களில், திணையை மையப்படுத்தி ஊர்களைப் புனைகின்றனர். பல ஊர்கள்

என்று சுட்டும் புலவர் ஊர்ப்பெயரைச் சுட்டிப் பாடிலர். நான்கு திணையும் ஒருங்கே ஒரே பாடலில் புனையப்பட்டிருக்கின்றது.

நெய்தற் புனைவு

'பூங்கொத்துகள் கொய்யப்பட்டு உதிர்ந்து கிடக்கும் ஞாழல் மரங்கள்; அவை நிற்கும் பெரிய நீர்த்துறை; அங்குக் கரிய இதழ்களையுடைய நெய்தல் கொடியின் பசிய இலைகள் நிறைந்த நீலமணியால் செய்த கலம் போன்ற குளிர்ந்த கழி; அக்கழியில் மீனை வேட்டையாடிப் புன்னையின் வாலிய கொத்துகள் மிக்க கிளைகளிடத்தே மீனுண் குருகுகள் தங்கியிருக்கும்; மக்கள் சென்று தங்குதற்குரிய கானற் சோலையின் உயர்ந்த மணலடைந்த கரையில் தாழ்ந்திருக்கும் அடும்பங் கொடியை அசைத்த அலையால் சங்குகள் ஒதுக்கப்பட்டு அவை ஒலிக்கும். விளங்குகின்ற கடல் முத்துடனே நீண்ட பவளக் கொடிகளை அங்கு வாழ்வோர் எடுத்துக் கொள்ளும் குளிர்ந்த கடற்பாங்கான நெய்தல் நிலம்.[52] இது நெய்தல் புனைவு. இங்குக் கடற்கரையையும் கானலையும் கடல்படு பொருள்களையும் புனைகின்றார்.

குறிஞ்சிப் புனைவு

இப்பாடலில் இரண்டாவதாகக் குறிஞ்சிநிலம் புனையப்படுகிறது. 'வேடுவர் காந்தட்பூவால் தொடுக்கப்பட்ட கண்ணியினையும் கொலை புரியும் வில்லினையும் உடையவர்; அவர் கொண்டுவந்த செங்கோட்டு ஆமாவின் இறைச்சியொடு காட்டிடத்து வாழ்வனவாகிய வலியுடைய களிற்றியானையின் கொம்பைப் பெற்றுக் கொண்டு அவற்றின் விலைக்கு ஈடாக வடித்த கள்ளைக் கொடுக்கின்ற பொன்னுடை நியமத்துக் குன்றுகள் நெருங்கிய புன்புலமாகிய குறிஞ்சி நிலத்தூர்கள்.[53]

இங்கு இயற்கையைப் புலவர் புனையாமல், வேட்டையாடலையும் பொருட் பரிமாற்றத்தையும் செயற்பாட்டையும் தாம் புனைகின்றார். ஆயினும் திணைக்கேற்ற

புனைவாக இஃது அமைகின்றது. இதனைத் தொடர்ந்து மூன்றாவதாக மருதத்தைப் புனைகிறார்.

புனைவும் மூதூரும்

'தேன்பாயும் மருத மரத்தை அடியோடே சாய்த்து, வெள்ளிய நுரை சுமந்து வரும் சிவந்த புதுவெள்ளம் பரந்து வருகிறது; அதனைத் தடுக்க மிகுந்த மரம் இடங்களில் அணையாயிட்டுப் பல வைக்கோற் புரிகள் சூழக் கட்டிய மணலணைகள் கரைந்து கெட்டன; அதனைத் தடுத்து அணையிடுவோர் எழுப்பும் ஆரவாரத்தில் விருப்பமுற்றது மக்கட் கூட்டம்; அம்மக்கள் முழவு முழங்குகின்ற பழையதாகிய ஊரிடத்து நிகழும் திருவிழாவினைக் கண்டு மீண்டு செல்லும் செழுமையான பல ஊர்களையும் காலமல்லாத காலத்தும் கரும்பினையறுத்துக் கொள்வதோடு அதன் அரிகாலையும் சிதைந்து அங்கு மலரும் பல்வகைப் பூக்களைக் கொண்டு எடுக்கும் விழாவினையுடையது மருதநிலம்'[54]

இப்புனைவில் வெள்ளம் மிகுந்து வருதலும் அதனை அணையிட்டுத் தடுத்தலும் இடம் பெறுகின்றன; கரும்பு மிகுந்து விளைதலும் கரும்புப் பாத்தியில் பலவகைப் பூக்கள் பூத்தலும் அப்பூக்களைக் கொண்டு விழாவெடுத்தலும் கூறப்படுகிறது. சிற்றூரில் வாழ்வோர், திருவிழாக் காண மூதூர் செல்லுதல் குறிக்கப்படுகிறது. மருதப்புனைவில் 'ஊர்' சுட்டப்படுவது இங்குக் குறிப்பிடற்பாடலது. பாடலில்,

முழவிமிழ் மூதூர் விழாக் காணூஉப்பெயரும்

(பதிற்.30:20)

என்று வருகிறது. ஆசிரியர் மருத நிலத்தூரை முழவு ஒலியும் விழா ஒலியும் அமைந்த பகுதியாகப் புனைகிறார். இது மிகச் சிறிய குறிப்பாகும். அடுத்து முல்லையையும் குறிஞ்சியையும் பாலைக் கௌதமனார் புனைகின்றார்.

தினை விளைக்கும் குன்றவர், வரகின் வைக்கோல் மேலே வேயப்பட்ட மணமிக்க காட்டுமல்லிகை வளரும் அன்பு பொருந்திய மனைகளில், மெல்லிய

தினை மாவை வரும் விருந்தினர்க்கு முறைமுறையாக அளித்துண்ணும் புன்செய் நிலங்களைத் தழுவிக் கிடக்கும் (முல்லை நிலத்தை அணித்தாகவுடைய) குறிஞ்சி. இங்குக் குறிஞ்சி நிலத்தவர் வீடும் அவர்தம் விருந்தோம்பல் திறனும் பேசப்படுகின்றன. நிலத்தால் விளைவும் இயற்கைப்பொருளும் மக்களின் பண்பாடும் நில இயல்பாகின்றன. செடி, கொடியோ விலங்கோ இனிய இயற்கைக் காட்சியோ இங்குப் புனைவில் அமையவில்லை.

முல்லைப் புனைவு

அடுத்து முல்லை நிலம் புனையப் பெறுகிறது. 'பல்வகைப் பூக்களும் வாடிக் கிடக்கும் காடு; அது பயன்படும் தன்மை திரிந்து செவ்வரக்குப் போன்ற நுண்ணிய மணல் குன்றுகளைக் கொண்டு ஒள்ளிய நுதலையுடைய மகளிர் காலிற் செருப்பணிந்து திரியும் வானுற ஓங்கிய மரங்கள் செறிந்த காடும் காடு சார்ந்த பகுதி.[55] இதில் பூக்களின் மிகுதியும் மணற்குன்றில் மகளிர் திரிதலும் மரங்கள் ஓங்கிய காடும் வண்ணிக்கப் பெறுகின்றன.

இந்த நான்கு நிலச்சுட்டும் சேரன் நாட்டைக் குறிப்பன. பாலைக் கௌதமனார் பாடிய பத்துப் பாடல்களில் இப்பாட்டே அடிகளை மிகுதியாக (44) உடைய பாட்டு. இப்பாடலின் முதற்கண் இடம் பெறும் நெய்தல் நிலமே இயற்கை நிலைமையைப் புனைகின்றது. மருதத் திணையைச் சுட்டிப் பாடும் போது ஆசிரியர்,

முழவிமிழ் மூதூர் விழவுக் காணூஉப் பெயரும்
(பதிற்.30:20)

என்று பழமையான ஊரில் திருவிழா நிகழ்தலையும் (இஃது இந்திர விழா என்பர் உரையாசிரியர்) (பூக்களைத் தொகுத்து விளையாடும் ஓணம்பண்டிகையா?) அதனைக் காணச் சிற்றூரிலிருந்து வரும் பலரும் புனைவாகின்றனர்.

பாலைக் கௌதமனாரின் நானிலப்புனைவு, ஆற்றுப்படை நூல்களில் ஐந்து நிலங்களைப் புனையுமாறுள்ளது. சேரர் மீது தனியாற்றுப்படைநூல் இன்மையை இது ஈடுகட்டுகிறது. ஆற்றுப்படையின் பல திணைப்புனைவுக்கு முன்னோடிப் பாலைக் கௌதமனாரின் பதிற்றுப்பத்துப் பாட்டேயாகும். புலவர் இயற்கையைக் கண்ணால் கண்டு, அதனைத் துய்த்துப் பாடாமல் திணைக்குரிய தொழிலையே சுட்டிப் பாடுகிறார். சங்கப் புலவர்கள் திணை நிலத்தைக் கண்ணால் கண்டு தொழிற்பட்டு நிற்கின்ற உயிரினத்தையும் அசைந்தாடுகின்ற பயிரினத்தையும் புனையாது, அம்மண்ணில் நிகழும் தொழிலை - வினையையே - புனைகின்றார்.

இப்பாட்டில், சிற்றூர்களிலிருந்தவர்கள் மூதூரில் நிகழும் பல பூவிழ்விழாக்களில் கலந்து கொள்ளச் செல்வதாகக் கௌதமனார் குறிக்கின்றார். இஃது உவமையாகவோ வேறு விளக்கமாகவோ இன்றிக் கருத்து விளக்கத்திற்காக வருகின்றது. மருதத் திணையைப் பேசும் போது 'ஊர்' என்று பின்வர மூதூரைப் பாலைக் கௌதமனார் உரைக்கின்றார். நெய்தல், குறிஞ்சி, மருதம், குறிஞ்சி, முல்லை என்று புனைகுவர். பாலைக் கௌதமனார் மூதூர் என்ற அடையை (26:12; 30:20) இரண்டு பாடல்களில் அமைத்துள்ளார். இவ்வாறு புறப்பொருள் பாட்டு, அகத்திணைப் பாட்டுப் போலக் கருப்பொருள்களைத் திணைநோக்கில் பேசுகிறது.

பாதையைப் புனைதல், பாதையைச் சார்ந்த காட்டைப் புனைதல், திணைகளைப் புனைதல் என்று ஆற்றுப் படைப்பாடல்கள் வளர்ந்தன. பிற புறத்துறைப் பாடல்களைக் காட்டிலும் ஆற்றுப் படைகளில் தான் திணை, சுரன், ஊர் ஆகியவற்றின் புனைவு விரிவாக அமைந்தது. போரையும் புரவலரையும் போற்றிப் பாடுதல் தோன்றியபின் கொடையைப் புகழ்ந்து பாடும் பாடல்களே பெருகின. பரிசில் பெற்றுப் பாராட்டும் பாடல்கள் பலவாகத் தோன்றிய பின் ஆற்றுப்படையில் விறலி, பாணர், பொருநர், கூத்தர் என்ற ஒவ்வொரு மரபினருக்கும் தனித்தனி வகைமையில் பாடல்கள் பிறந்தன; பரிசில் பெற்றுப் பாராட்டும் பாடல்கள் தோன்றியபின் பரிசில் பெற்றோன், பரிசில் பெறாதவனை அனுப்புவதாகப் பாடினர். இஃது ஆற்றுப் படைப் பாடல்களின் வளர்ச்சி; இதனால்

ஆற்றுப் படைகள், திணைகளையும் ஊர்களையும் புனைவதில் முழுவளர்ச்சி பெற்றிருக்கின்றன.

இவ்வியலில் கூறப்பெற்ற ஆய்வு முடிவுகள்

1. தொல்காப்பியத்தில் மதுரை, உறந்தை, வஞ்சி என்று எந்த ஊரின் பெயருப் சுட்டிக் கூறப்படவில்லை. 'பன்னிரு நிலம்' , 'ஏமப்பேரூர்', 'தண்பொழில் வரைப்பு' என்று தொல்காப்பியம் சுட்டும். இவற்றால் தமிழர் தனித் தனிக்கூட்டமாக இயற்கையிடையே வாழ்ந்தனர் என்பது புலனாம். அத்தகைய வாழ்விடம் திணைக்குத் தக்கவாறு பெயர் பெற்றது. இடந்தலைப் பாடு, பகற்குறி, ஊரும் பேரும் வினாதல், கண்டோர் கூற்றில் வரும் 'ஊரது சார்வு' என்பன ஊரைப் புனைந்துபாட வாய்ப்பான களங்களாகும்.

2. இறைச்சி, உள்ளுறை என்பன தொல்காப்பியர் இயற்கைப் புனைவுக்குரிய அடிப்படையாகக் காட்டுவர் சுரத்தைப் புனையும் பகுதியில் அமைவது இறைச்சி, ஊரைப் புனையும் போது அமைவது உள்ளுறை.

ஊரும் பெயரும் உடைத்தொழில் கருவியும்
யாரும் சார்த்தி அவைஅவை பெறுமே

என்ற தொல்காப்பிய நூற்பா, ஊர் பற்றிய சிந்தனை வளர்ச்சி தொல்காப்பியர் காலத்தில் நன்கு வேரூன்றியிருந்தமையைக் காட்டுகிறது.

3. புறத்திணையியலின் 'ஊர்க்கொலை' 'ஊர்ச்செருவீழ்ந்த மறன்' என்பன ஊரின் அமைப்பை உணர்த்துகின்றன. தொல்லெயிற்கு இவர்தல் முதலாகிய புறத்துறைகள், ஊரில் கோட்டை இருந்தமையை வெளிக்காட்டுகின்றன. தொல்காப்பியக் குறிப்புகளால் ஊரைப்பற்றியும் ஊரைப் புனைதலைப் பற்றியும் பல்வேறு கருத்துகள் நன்கு வேரூன்றி வளர்ந்துவிட்டன என்பதை அறிய முடிகிறது. இதனால் தொல்காப்பியர் காலத்திலேயே ஊரைப் புனைகின்ற நிலை இருந்தமையை அறிய முடிகிறது.

4. சங்க இலக்கிய ஊர்ப்புனைவின் வளர்ச்சியை ஆராய ஒவ்வொரு நூலின் முதற்பாடலும் தேர்ந்தெடுத்து ஆராயப்பெற்றுள்ளன. அவற்றினால் சங்க காலத்தில் ஊர்ப்புனைவு நன்கு வளம் பெற்றிருந்தமையை அறியமுடிகிறது. அகப்பொருள் நூல்களான எட்டுத்தொகை நூல்களில் ஊரும் மறுகும் புனையப்பட்டிருக்கின்றன.

5. பாலைக் கௌதமனாருடைய பதிற்றுப் பத்துப்பாட்டு, (30) மிக விரிவான புனைவாக அமைகின்றது. இப்பாட்டுக் கருப்பொருள்களை அகப்பொருள் பாடல்கள் போலப் பாடுகின்றது. இப்பாட்டு, நெடும் பாடல்கள் பாடுதற்கு வழிகாட்டியாக விளங்குகிறது. இப்பதிற்றுப் பத்துப்பாட்டு, ஊர்ப்புனைவிலும் திணைப் புனைவையே மிகுத்துப்பாடுகின்றது. இப்பாட்டு, ஆற்றுப்படை வடிவமைப்பின் முன்னோட்ட அமைப்பாகும்.

சான்றெண் விளக்கம்

1. காண்க: பின்னிணைப்பு - 1.
2. உ.வே. சாமிசாதையர் (கு.உ. : 1994), **-பதிற்றுப்பத்து மூலமும் உரையும், பதிகம் எண்.1,** (டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 80. எட்டாம் பதிப்பு), ப.36.
3. நாற்கவிராச நம்பி, சூ.19, (1963), **அகப்பொருள் விளக்கம்,** (கழக வெளியீடு, சென்னை - 1, ஆறாம் பதிப்பு). ப-19. (இதனைத் தழுவித் தொன்னூல் விளக்கம் (175), முத்து வீரியம் (33) ஆகியனவும் ஊரைச் சுட்டுகின்றன).
4. கருப்பொருளையும் முதற்பொருயையும் படைப்பாளி விளக்கிப் பாடினால் ஊரமைப்புத் தானே அமைந்துவிடும். உலகப் படத்துக்குப் பின்னே **(World map)** உள்ள மனித வடிவை ஒழுங்காக ஒட்டி அமைத்தால் உலக வடிவம், தானாக அமைவதுபோல முதற்பொருள் கருப்பொருள் புனைவால் இடம் வெளிப்படும். அதனால்தான் தொல்காப்பியர் ஊரைக் குறித்திலர்.
5. இளம் பூரணர். (உ.ஆ : 1995), தொல்காப்பியம் - **எழுத்ததிகாரம் புள்ளி மயங்கியல்,** சூ.363), (கழக வெளியீடு, சென்னை - 1, ஒன்பதாம் பதிப்பு), பக். 203 - 204.
6. ஊர - 59; ஊர்க்கண் - 115? ஊர்க்கு - 115, மேலது, ப.73.
7. ஊர கொள்; ஊர செல், ஊரதா, ஊர போ, சூ.211, மேலது, ப.130.
8. ஊரன்; சூ.211, ஊரகொள் சூ.225, மேலது, ப. 130.
9. கு. சுந்தரமூர்த்தி (பதி. : 1989), **தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம் உரை,** எச்சவியல், சூ. 397, (அண்ணாமலை பல்கலைக் கழகம் , அண்ணாமலை நகர், இரண்டாம் பதிப்பு), ப.524.
10. சூ. 400, மேலது, ப.533.
11. இளம்பூரணம், (உ.ஆ. : 1967), தொல்காப்பியம் பொருளதிகாரம் **அகத்திணையியல்,** சூ.2, (கழக வெளியீடு, சென்னை - 1, நான்காம் பதிப்பு). ப.6

12. ஆ. சிவலிங்கனார். (பதி : 1991) **தொல்காப்பியம் பொருளதிகாரம் (உரைவளம்) அகத்திணையியல்** சூ. 40, (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை). ப.281.

13. கு. சுந்தரமூர்த்தி (பதி : 1985), **தொல்காப்பியம் பொருளதிகாரம்** (பிற்பகுதி),சூ.498, (அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்), ப.538.

14. இதனைச் 'சீறூர்' புனைவு என்னும் பகுதியில் அறிய முடிகிறது.

15. தொல். பொருள் களவு. இளம். உரை, சூ.எண். 112, ப.228,

16. குறு. 2.

17. தொல். பொருள். இளம். உரை. ப.346.

18. மேலது, ப.346.

19. நாடு, குறிஞ்சியைப் புனைதல்; ஊர், மருதத்தைப் புனைதல்; துறை, நெய்தலைப் புனைதல். மூன்று திணையைப் புனைய ஆசிரியர் வழிவகுக்கிறார்.

20. இராம. பெரிய கருப்பன், (தமிழண்ணல்), (1986), **இறைச்சி - தொல் காப்பியரின் இலக்கியக் கொள்கை,** (மீனாட்சி புத்தக நிலையம், மதுரை) ப.48.

21. தொல்.பொருள். இளம். -உரை, சூ. எண்.226, ப.346.

22. மேலது, சூஎண்.50, ப.62.

23. மேலது, சூஎண்கள். 545 - 614, பக். 553 - 568.

24. ச.வே. சுப்பிரமணியன், (1998), **தொல்காப்பியம்** தெளிவுரை சூ. 68 (மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 8), ப.95.

25. மேலது, சூ.எண். 69 : 2, ப.99

26. மேலது, சூ. எண். 69 : 10, ப.99

27 மேலது. சூ. எண். 69 : 9, ப.99.

28. மேலது. சூ. எண்.88 : 12, ப.148

29. நச்சினார்க்கினியர் (உ.ஆ:1955), **தொல்காப்பியம் பொருளதிகாரம், புறத்திணையியல்,** சூ.30, (கழகவெளியீடு, சென்னை - 1, இரண்டாம் பதிப்பு), பக். 65-66.

30. தொல்.பொருள்.இளம்.உரை, சூ.எண்.227, ப.347.

31. ச.வே. சுப்பிரமணியன், **தொல்காப்பியம் தெளிவுரை**, சூ.எண். 1060 : 33-35.

32. உ.வே. சாமிநாதையர், (கு.உ : 1980), **ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும்,** (டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 41, ஆறாம் பதிப்பு), ப.2.

33 அகம். 2 : 9

34. தொல். பொருள். இளம். உரை. சூஎண்-112, ப.228.

35. நச்சினார்க்கினியர், (உ.ஆ : 1958), **கலித்தொகை,** (வெ.பெரி. பழ.மு.காசி - விசுவநாதன் செட்டியார், பாகனேரி, இரண்டாம் பதிப்பு.), ப.9.

36. வரையழி வாலருவி வாதா லாட்டக்
கரையாழி வாலருவி கால்பா ராட்ட
இரவிற் புணர்ந்தோ ரிடைமுலை யல்கல்
புரைவது பூந்தாரன் குன்றெனக் கூடார்க்
குரையோ டிழிந்துரா யூரிடை யோடிச்
சலப்படை யானிரவிற் றாக்கிய தெல்லாம்
புலப்படப் புன்னம் புலரியி னிலப்படத்
தான் மலர்ந் தன்றே (பரி.6 : 52-59)

37. அகம்.6 : 1-11

38. அகம். 166 : 1-33; 192 : 11-12; 165 : 4; 266 : 10; 270 : 1-4; 306 : 1-9; 320 : 4; 346 : 20; 368 : 11; 396 : 11; 396 : 3, நற். 227 : 6; 311 : 6; 343 : 3.

39. எச். வேங்கடராமன், (பதி : 1989), **நற்றிணை மூலமும் உரையும்** (டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 90), பக். 2-39.

40. அவிழ்கிணர்த்
தேம்பாய் மராஅம் கமழும் கூந்தல்
துளங்கியில் அசைவரக் கலிங்கம் துயல்வரச்
செறிதொடி தெளிர்ப்ப வீசி மறுகில்
பூப்போல் உண்கண் பெயர்ப்ப நோக்கிச்
சென்றனள் வாழிய மடந்தை: (நற்.20 : 2-7)

41. மருதத்தில் மறுகினைப் புனைவது போன்று பாலையில் சுரத்தைப் புனைகின்றார். குறிஞ்சியில் குன்றப் புனைவு அமைகிறது.

42. ச.வே. சுப்பிரமணியன், **தொல்காப்பியம் தெளிவுரை**, சூ.எண்.1247. ப. 502.

43. கலி. 67 : 8.

44 மருதனிள நாகனார் வண்டொன்றை அடையாளங்கண்டு தொடர்ந்து உற்று நோக்கி இதனைப் பாடினராதல் வேண்டும்.

45.. ச.வே. சுப்பிரமணியன், **தொல்காப்பியம் தெளிவுரை**, சூ.எண். 1060 : 33-35.. ச.வே. சுப்பிரமணியன், (1978), **கம்பன் கற்பனை**, (தமிழ்ப் பதிப்பகம், சென்னை - 20), பக். 77-90.

46. J.V. Chelliah (1962), **Patthuppattu** (The South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai - 1), Reprint.), P.98. " It is significiant that no mention is made of the city in the earliest Tamil Poems"

47. பெருங்கதை ஆசிரியர் கொங்குவேளிர் இச்சங்க நூற்கருத்தை இராசகிரியத்தைப் புனையும் போது (மகதகாண்டம்.3 : 50-114) பின்பற்றினார். சீவக சிந்தாமணியிலும் (2311) உண்டு.

48. J.V. Chelliah, **Pattupattu**, P.98.

" It is capital was Kanchipuram, or Kachchi, as it was Tamilised. In very early times it was an Aryanised city bearing a Sanskrit name, although technically it belonged to the Dravidian country. It was the southern most point of Aryan culture in those early times".

49. காண்க. பின்னிணைப்பு.2

50. 'ஊரது சார்பும் செல்லுந் தேயமும்/ ஆர்வ நெஞ்சமொடு செப்பிய மொழியினும்' (தொல். 986 : 3-4) என்ற தொல்காப்பியப் போக்கு அகப்பொருளுக்குரியது. சிறுபாணாற்றுப்படை,

நீறடங்கு	தெருவினவன்	சாறயர்	மூதூர்	
சேய்த்து	மன்று	சிறிதுநணி	யதுவே	(201 - 202)

என்று கூறும். மலைபடுகடாம், 'நணிசேய்த் தன்றவன் பழவிறல் மூதூர்' (487), என்றியம்பும்.

51. மா. நவநீத கிருட்டிணன், (1988), **தமிழ் இலக்கியத்தில் ஆற்றுப் படை**, (குறிஞ்சி மலர் வெளியீடு, மதுரை - 2), ப.179.

52. பதிற்.30 : 1-8.

53. மேலது. 30 : 9-13

54. மேலது. 30 : 14-21

55. மேலது. 30 : 22-25

இயல் இரண்டு

ஊர்ப்புனைவு வகைகள்

ஊர்ப்புனைவு வகைகள்

தொல்காப்பியம் காட்டும் வகைமை

தொல்காப்பியர் நிலத்தைப் புனைதலையே திணை என்று கொண்டார். அவர் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் திணை அடிப்படையிலேயே நிலத்தை-சூழலைப்-புனைய வேண்டும் என்றுரைக்கின்றார். இப்புனைவில் தொல்காப்பியர் ஊரைக்குறித்திலர்.[1] ஊரைப் பாட வேண்டும் என்றும், அதனை இன்னவாறு பாடுக என்றும் அவர் விவரித்திலர். தொல்காப்பியர் சிந்தனையில் திணைக்குள் அடங்கிய பிரிவே ஊராகும். திணை, நிலப்பகுப்பின் பெரும்பிரிவு; ஊர், இதில் அடங்கிய சிறுபிரிவு. ஆயினும் சங்கப்புலவர் எவரும் திணையைச் சுட்டிப் பாடும்போது ஊரைச் சுட்டிப் புனைந்திலர். ஆயினும், ஊர்ப்புனைவும் திணைப்புனைவாகக் கொள்ளத்தக்கது. ஆதலால் திணைப் புனைவு, ஊர்ப்புனைவிலிருந்து வேறுபட்ட புனைவாக உருப்பெறுகிறது.

தொல்காப்பியர் திணைப் புனைவு என்பதை அகத்திணைக்குரியதாக அமைத்தார். இஃது அகத்திணைப் பாடல்களில் சுற்றுப் புறச் சூழ்நிலையைப் பாட வழிகாட்டுவதாகும். இதற்கு எளிய கோட்பாடாக முதற்பொருள், கருப் பொருள் என்று அவர் வகுத்தார். முதற்பொருளைப் பாடும் போது அதில் இன்ன இன்னவற்றைப் பாட வேண்டும் என்று விதி வகுத்திருப்பதும் காலத்தையும் நிலத்தையும் இணைத்துப் பேசுவதும் சுற்றுப்புறச் சூழலைப் புனைதற்காகும். தொல்காப்பியர் காலத்துச் சுற்றுப்புறச் சூழல் என்பது உயிரினமும் பயிரினமும் கலந்து வாழும் இயற்கைச் சூழல்; கருப்பொருள் என்று இயற்கையையே இங்கு ஆசிரியர் குறிக்கின்றார். அப்புனைவு விவரிப்பில் செயற்கைப் பொருளுக்கோ கட்டிடங்களுக்கோ இடமில்லை. தொல்காப்பியர் கருப்பொருளை எண்ணும்போது அவற்றையும் எண்ணவில்லை. அவர் இயற்கையை மதித்து இயற்கையைப் புனைவதையே தம்படைப்பிலக்கியக் கொள்கையாகக் கண்டார்.

உலகை முழு நோக்காக நோக்கி நான்கு பகுப்பாக்கி, அவற்றில் இரண்டின் அழிவைத் தனியாக்கி ஆக ஐந்து நிலம் என்றும் ஐந்து திணை என்றும் ஐந்து உரிப்பொருள் என்றும் தொல்காப்பியர் ஐவகையாக அகப்பொருளை அமைத்துக் கொண்டார். இந்த பகுப்புப் படைப்பாளிகள் புனைவை வெவ்வேறு வகையாகப் புனையவும் பாடுபொருளில் வேற்றுமையை வெளிப்படுத்தவுமேயாம். ஓரடிப்படையிலேயே அனைத்தும் பாடப்பட்டால் சுவை குன்றிய இலக்கியமாகப் படைப்புருவாகும்.

தொல்காப்பியர் திணை அடிப்படையில் உலகப் பொதுவாகக் (Universal) காட்டிய பயிரினத்தையும் உயிரினத்தையும் விதந்து சொல்லித் தமிழ் நிலப் புனைவாகச் சங்கச் சான்றோர் பாடலாயினர். படைப்பாளிகள் எல்லாப் பாடல்களிலும் ஒன்று போலவே சுற்றுப்புறச் சூழலை இயற்கையாகப் புனைந்தால், இயற்கைப் புனைவாகிய ஊர்ப்புனைவு படியெடுத்தலாக (Copier) மாறிப் போய்விடும். அதனால் தொல்காப்பியர் படைப்பாளிகளுக்குப் படைப்பு இலக்கிய உரிமை கொடுத்துக் காலமும் இடமும் கலந்த புனைவு நெறிகளை வகுத்திருக்கிறார். படைப்பாளி தான் விழையும் உரிப் பொருளுக்குத் தக்கவாறு சூழலை அமைத்துக் கொண்டு புனையும் உரிமை கிடைக்கிறது.

இதில் இயற்கைப் புனைவு திணையாகவோ நாடாகவோ (பெயர் சுட்டாத) ஊராகவோ படைப்பாளி விருப்பத்துக்குத்தக அமையும். நிலத்தை வெளிப்படச் சுட்டாது காலப்புனைவாக இடம் குறிக்காது புனைதல்.[2] நிலமும் பொழுதும் தெரியப் புனைதல்.[3] வெறும் அடைகளை ஊருக்கு இணைத்துப் புனைதல்.[4] என்று ஊர்ப்புனைவு பலவகையின. அவற்றை இத்துணை என்றோ இன்னவை என்றோ வகைப்படுத்துவது தனியராய்ச்சியாய் உருவெடுக்கும். ஆதலின் ஈண்டுச் சில புனைவு வகைகள் மட்டும் விளக்கப் பெறுகின்றன.

தொல்காப்பியர் ஊரைப் புனைவதில் படைப்பாளிகளுக்கு முழு உரிமை கொடுத்து அவரவர் விழைவுக்கேற்பப் புனைய வாய்ப்பளித்திருக்கிறார்.

புனைவுரிமை என்பது படைப்பாளிகளுக்கு உரியது. அது தொல்காப்பியர் நல்கியிருக்கும் தனிவுரிமையாகும். அந்நெறியில் சங்கப் புலவர் புனைந்தவகை ஈண்டு ஆராயப் பெறுகின்றது.

சங்கப்புலவர்கள், ஊர்களை வெவ்வேறு வகையாகப் புனைகின்றனர். அவர்கள் ஊரைப்புனையும் வகைகள் இங்குச் சுட்டி ஆராயப்பெறுகின்றன.

1. 'ஊர' என்று தலைவனை விளித்து, ஊரைப்புனைந்து சங்கப்புலவர்கள் காட்டுகின்றனர். இது 'ஊர' என்னும் விளிப்புனைவாகும்.

2. அடைகள் பலவற்றை கொடுத்து ஊரைப் புனைவது அடைப்புனைவு. ஓரடையோ ஒரு தொடரோ ஊருக்கு அடையாகி ஊர்ப் புனைவாக அமைகிறது. அடைக்கு அடை வருவதலும் உண்டு. இவ்வாறு மிகுதியாக வழங்கிய அடைகள் சில தனியே திரட்டப்பட்டு தனி ஆய்வு செய்யப் பெற்றுள்ளன.

3. புலவர்கள் பெயர்களில் அடையாகச் சில ஊர்கள் காணப்படுகின்றன. அந்த ஊர்கள் புலவர்களின் சொந்த ஊராக அமைகின்றன. அதனை அடிப்படையாகக் கொண்டு அல்லூர் என்ற ஊரின் பெண்பாற் புலவரின் அள்ளூர்ப் புனைவு ஆராயப்பெறுகிறது. ஆலூர் என்ற பெயருடைய ஊரில் வாழ்ந்த புலவர்கள் பலர் தனித்து ஆராயப்பட்டுள்ளனர். இந்த ஆராய்ச்சியால் ஆலூர் என்ற பெயரால் பல ஊர்கள் இருந்தமையும் அவற்றின் புனைவும் இங்கு ஆராயப்பெறுகின்றன. சொந்த ஊரைப் புலவர்கள் எவ்வாறு பாடுகின்றனர் என்று காண இந்தப் புனைவு வகை துணையாகின்றது.

4. ஊரைப் புனையும் போது ஊரில் எழுகின்ற ஓசையை அடித்தளமாக்கிச் சங்கப் புலவர்கள் புனைந்து காட்டும் வகையை ஒலிப்புனைவான ஊர்ப் புனைவு என்ற பகுதி விளக்குகிறது. ஊர்ப் புனைவில் ஒலிக்கும் முதன்மை கொடுக்கப்பட்டிருப்பது இதனால் புலனாம்.

5. ஊரைப்புனையும் போது உயிரினங்களின் செயற்பாட்டைக் கொண்டு புலவர்கள் எவ்வாறு புனைகின்றனர் என்பது உயிரினப்புனைவு என்ற பகுதியில் விளக்கப் பெறுகிறது.

6. சங்கப் புலவர்கள், ஊரின் இயற்கையைப் புனைந்தாலும் தாம் பாடுகின்ற பாடுபொருளுக்கு ஏற்ற வகையிலேயே ஊர்களைப் புனைந்து பாடுகின்றனர். இது சங்கப்பாடல்கள் கொண்டு காட்டப்பெறுகிறது.

7. தமிழ் மண்ணிலுள்ள ஊர்களைப் புனைவது போல அயற்புல ஊர்களையும் சங்க இலக்கியங்கள் புனைந்திருக்கின்றன. அப்பாங்கினை அயற்புல ஊர்ப்புனைவு என்ற பகுதியால் ஆராயமுடியும்.

8. ஒரு பாட்டில் ஓர் ஊரின் ஆக்கநிலையும் அழிவு நிலையும் பேசப்படுகிறது. அது போல ஒரேபாடலில் பாட்டுடைத்தலைவனின் ஊர்வளமும் பகைஞன் ஊரின் அழிவுநிலையும் பேசப்படுகின்றன. இப்போக்கினை இருதிறப்புனைவு என்ற தலைப்பு விவரிக்கின்றது.

9. பரணர் அகநானூற்றுப்பாடல் ஒன்றில் ஏழு இடங்களைக் குறிக்கிறார். அவ்வாறு குறிப்பதால் புனைவு சுருங்கியபுனைவாகிவிடுகிறது.

10. சங்கப்புலவர்கள், ஊரைப் புனைந்து பாடியிருந்தாலும் ஒரு புலவரின் பாடல் - மருதத்தைமிகுதியாகப் பாடியவரின் பாடல்கள் - தனித்திறனாக ஆராயப்பெறுகின்றன. இஃது அவருடைய தனித்திறனைக் காட்டுவதாகும்.

1. ஊர என்ற விளிப்புனைவு

சங்கப்பனுவல்கள் ஊரை மட்டுமோ ஊரியற்கையை மட்டுமோ தனித்துப் புனைவன அல்ல. ஊரின் இயற்கையைத் தனித்துப்புனையும் பாங்கினை சங்கப்புலவர் காண்டற்கில்லை; மக்கள் வாழ்க்கையுடனும் ஒழுக்கத்துடனும் இணைத்துத்தான் ஊரின் இயற்கையைச் சான்றோர் பாடினர். 'ஊர' என்று விளியமையும் சங்கப் பாடல்களில் இப்போக்கில் இயற்கைப் புனையப்பட்டிருக்கிறது.

சேரநாட்டுப் புலவர்கள்

ஊரைப் புனைகின்ற சங்கப் புலவர்கள் சேர, சோழ, பாண்டிய நாடுகளைச் சார்ந்தவர்கள். முதற்கண் சேர நாட்டுப் புலவர்கள் 'ஊர' என்று விளியமைத்து ஊரைப் புனைந்த வகை ஆய்வு செய்யப் பெறுகிறது.

1. ஓரம்போகியார்
2. பரணர்

சேரநாடு மலையும் மலைசார்ந்த பகுதியும் மிகுதியுமுடையது, அங்கும் வயல் வளமுள்ளது. ஓரம் போகியார் சேர நாட்டுக்கே உரிய புலவர்; பரணர், சோழ பாண்டிய நாடுகளினும் சேர நாட்டுடனேயே நெருங்கிய தொடர்பு மிக்கவர்; அவர் சேர நாட்டினர் என்று ஒரு தலையாகத் துணிய இயலாததாயினும் சேர நாட்டுச் சார்பினர் என்பது ஏற்கற்பாலது.

ஓரம்போகியார் விளியும் புனைவும்

ஓரம்போகியார் மருதத் திணையில் தோழி கூற்றாகப் பாடுகிறார். அப்பாட்டு, தோழி பாணனிடம் வாயில் மறுப்பது.

குருகு கொளக் குளித்த கெண்டையயல
துருகெழு தாமரை வான்முகை வெரூஉம்
கழனியம் படப்பைக் காஞ்சி யூர

(குறு.127:1-3)

கெண்டை மீனை நாரை கவர அம்மீன் அதன் வாயிலிருந்து தப்பி நீருள் மறைந்தது. பின் அம்மீன் அருகிலுள்ள நிறம் பொருந்திய தாமரையின் வெண் பூகையைக் (நாரையோ என்று) கண்டு அஞ்சுகின்றது. காஞ்சி மரம் நிற்கின்ற வயல்களுள்ள ஊர். இது தலைவனுடைய ஊர் அழகு.

கழனியம் படப்பை, நாரை (அன்னம்) கெண்டை மீனைக் கவர்ந்தல், அம்மீன் தப்பித்து நீருள் மூழ்குதல், அஃது அருகிலுள்ள தாமரை மொட்டைக் கண்டு அஞ்சுதல் என்று நாளும் காணப்படும் கழனிக் காட்சிகள் ஊர்ப்புனைவாகின்றன. இவ்வண்ணம் ஊரைப் புனைந்து ஓரம் போகியார் தலைவனைச்சுட்டுகின்றார். நாரையின் வாயிலகப்பட்ட மீன் தப்புவதும் நாரையின் கால்நிறம் போலிருக்கும் தாமரையைக் கண்டு மீன் அஞ்சுவதும் உயிரின இயல்பு. அந்த இனிய வயற்காட்சிகளைப் புலவர் புனைகின்றார். ஊரிலுள்ள நீர் நிலையைச் சார்ந்து உயிரின வாழ்க்கை அமைந்தோவியமாகிறது.

இந்த ஊர்ப் புனைவில் புலவர் தலைவனுடைய துணைவனாகிய பாணனைப் பற்றிய கருத்தைப் பொதிந்து வைத்துள்ளார். இஃது இறைச்சிப் பொருள் என்று பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை என்று விளக்குவர்.[5] பேச முற்படும் தோழி தலைவனை விளிக்க வேண்டும்; அதுதான் பாடுபொருளைச் சார்ந்ததும் பாடுபொருளுக்குரியதுமாகும். தலைவனைப் பெயர் சுட்டு விளிக்க இயலாமையான், படைப்பாளி அவன் பண்புகளை அவனுடைய ஊரின் இயற்கைக்கு ஏற்றி அதனைப் புனைந்து அவனை விளிக்கின்றார். அதனால் அவனுடைய ஊர் வளம் புலப்படுகின்றது. இப்பகுதியும் தலைவன் ஒழுக்கக்கேட்டை மறைத்துப் பாணன் பேசுவதைத் தோழி கண்டு உணர்ந்துரைக்கின்றாள். தலைவனுடைய பரத்தமை ஒழுக்கமே இங்கும் மையப்படுத்தப்படுகிறது. ஓரம்போகியார் அகநானூற்றில் எழு அடிகளால் மருதத்தில் ஊரைப் புனைந்து விளிப்பதாகப் பாடியுள்ளார். இது தோழி கூற்று.

வெள்ளி விழுத்தொடி மென்கருப் புலக்கை
வள்ளி நுண்ணிடை வயின்வயின் நுடங்க
மீன்சினை யன்ன வெண்மணற் குவைஇக்
காஞ்சி நீழல் தமர்வளம் பாடி
ஊர்க்குறு மகளிர் குறுவழி யிறந்த
இறாஅல் அருந்திய சிறுசிரல் மருதின்
தாழ்சினை யுறங்குந் தண்டுறை ஊர

(அகம்.286 : 1-7)

கரும்பாகிய உலக்கையால் மெல்லிடை வருந்த மணலைக் குவித்துக் காஞ்சி மரத்தின் நிழலில் தம் குடியினர் வளமையைப் பாடி ஊரிலுள்ள இளம் பெண்கள் குற்றுகின்றனர்; அஞ்ஞான்று இறால் மீனைத் தின்ற சிறிய சிரற்பறவை மருத மரத்தின் தாழ்ந்த கிளையிற் சென்று தங்குகின்ற குளிர்ந்த துறையையுடைய ஊர். இது வயல் சார்ந்த இடத்துக் காட்சி. மருத நில மங்கையர், வெண்மணலைக் கரும்பால் குற்றுகின்ற காட்சியொடு காஞ்சி மரத்தையும் சுட்டி ஓரம்போகியார் முடிக்கின்றார். இரண்டு புனைவுகளிலும் மீன்கள் இடம்பெறுகின்றன. குறுந்தொகைப் பாட்டில், அடி எண்ணிக்கை குறைவாதலின் மீனும் குருகும் புனையப்பட்டுள்ளன; அகநானூற்றில் மீன், சிரல் பறவை, மகளிர் ஆகியன இணைத்துச் செயல் நிகழ்வது ஓவியமாகிறது. இரண்டிலும் பொழுது (ள்ங்ஹள்ர்ய்) பற்றிய சுட்டில்லை. இரண்டிலும் ஊரினுடைமையாளனாகத் தலைவன் விளிக்கப் பெறுகின்றான். ஓரம்போகியார் ஊர்களை மருத நில மாட்சியுடையனவாகப் புனைந்துள்ளார்.

பரணரின் விளிப்புனைவு

மருதத் திணையில் பரணர் பாடிய பாடல்கள் ஆறில், தலைவன் "ஊர' என்று விளிக்கப்பட்டிருக்கின்றான். ஊடல் மறுத்த தலைமகள் 'தலைவனே' என்று தலைவனை விளிக்கவில்லை; அவனுடைய ஊரைப் புனைந்து 'ஊர' என்று விளிக்கின்றாள்.

கழுநீர் மலரை மேய்ந்த பெரிய காலையுடைய எருமை அருகிலுள்ள வயலிலே படர்ந்த தாமரையின் குளிர்ந்த மலரைத் தின்பதனை வெறுத்தது. தண்டு சேர் வீரரைப் போலச் செருக்கி நடந்து அதன் பக்கத்திலுள்ள குன்று போலக் குவிந்த வெண்மணலின் மீது துயிலுகின்றது.7 இது தலைவன் ஊர்ப்புனைவு. வயல் நிறைந்த ஊர் நிகழ்ச்சியைப் பரணர் ஈண்டுப் புனைகுவர். இன்னொரு பாட்டில்.

எரியகைந்	தன்ன	தாமரை	யிடையிடை
அரிந்துகால்	குவித்த	செந்நெல்	வினைஞர்
கட்கொண்டு	மறுகுஞ்	சாகா	டளற்றுறின்
ஆய்கரும்	படுக்கும்	பாய்புனல்	ஊர

(அகம்.116 : 1-4)

என்று ஊரைப் புனைந்து தலைவனைத் தோழி அழைக்கின்றாள். கதிரறுப்போர் நெருப்புக் கொழுந்து விட்டெரிவது போன்ற தாமரைப் பூக்களின் இடையிடையே செந்நெல் தாளை அரிந்து அரி அரியாகப் போடுவர். அவர்களுக்குக் கள்ளைக் கொண்டு பலகாலும் திரியும் வண்டி சேற்றில் பதிந்தால் அதனைப் போக்கச் சிறந்த கரும்புகளை அடுக்கி இடை மடுத்துப் பாயும் புனல் வளமிக்க ஊர். மருத நிலத்தையும் அங்கு வாழும் மக்களின் செயல்களையும் ஊரைக் காட்டிப் பரணர் புனைகின்றார். மற்றொரு பாட்டில், பரணர் தலைவன் ஊரைப் புனைந்து ஊரையுடைய தலைவனே என்று விளிக்கின்றார்.

நெடுங்கொடி	நுடங்கும்	நறவுமலி	பாக்கத்து
நாள்துறைப்	பட்ட	மோட்டிரு	வராஅல்
துடிக்கட்	கொழுங்குறை	கொடுத்துண்டு	ஆடி
வேட்டம் மறந்து	துஞ்சுங்	கொழுநர்க்குப்	பாட்டி
ஆம்பல்	அகலிலை	அமலைவெஞ்	சோறு
தீம்புளிப்	பிரம்பின்	திரள்கனி	பெய்து
விடியல்	வைகறை	இடூஉம்	ஊர

(அகம்.196:1-7)

இங்குப் பாணன் - பாடினி (பாட்டி) வாழ்க்கையைப் பரணர் விவரிக்கின்றார். விடியற்காலைப் பொழுதில் மோட்டிரு வராஅல் மீன் துண்டைத் தின்று கள்ளுண்டாடி வேட்டைக்குப் போதலை மறந்து பாணர் உறங்கிக் கிடந்தனர். அவரவர் மனைவியரான பாடினிப் பெண்டிர் ஆம்பலது அகன்ற இலையில் திரண்ட சோற்றைத் தீம்புளிப் பிரம்பின் பெரிய பழத்தினைப் பெய்து வைகறை விடியலில் அவருக்கு இடுகின்றனர். பாணரும் அவர் தம் மனைவியரும் வாழும் வாழ்க்கையை ஈண்டுப் பரணர் உரைக்கின்றார். இங்குத் தோன்றி வளரும் மரமும் செடியும் கொடியும் உயிரினங்களும் புனையப் பெற்றில; அங்கு வாழுகின்ற பாணரின் வாழ்வியல் காட்சியே புனையப் பெறுகின்றது. இயற்கைப் புனைவில்லாமல் இப்பாட்டுப் பாணர்களின் வாழ்க்கைப் புனைவாகின்றது. இதனால் பரணரின் ஊர்ப்புனைவுப் பாக்களில் (விளியாக வருவன) புனைவு கூடுதலான அடிகளைப் பெற வாய்ப்பாகின்றன.

புனைவிலா விளி

பரணர் புனைவில் மிகக் குறைந்த அடிகளையுடைய பாட்டு (அகம்.226 : 2). இது 'யாணர் ஊர' என்று அடை பெற்றமையும் ஒரு சொல் புனைவு; இது தோழி கூற்று. அதனால் இப்புனைவில் வேறொரு பொருளும் பொதியப்படவில்லை. புனைவிருந்தால்தான் உள்ளுறை; இறைச்சிப் பொருளமையும். பரணர் போர்க்கள ஆர்ப்பைப் புனைவதால் ஊர்ப்புனைவைத் தவிர்த்துவிட்டார். படைப்பாளி தான் விரும்பிய புரவலனைப் பாடியதால் விளியுடன் கூடியப் பகுதி - தலைவன் ஊரின் இயற்கை - புனைவு பெறவில்லை. இன்னொரு பாட்டும் மருதப்பாட்டு. தோழி தலைவனை விளிக்கும் போது அவனூரியல்பு தோன்றப் புனைந்து விளிக்கின்றனள்.

பிணர்மோட்டு	நந்தின்	பேழ்வாய்	ஏற்றை
கதிர்மூக்கு	ஆரல்	கள்வ	னாக
நெடுநீர்ப்	பொய்கைத்	துணையொடு	புணரும்
மலிநீர்	அகல்வயல்	யாணர்	ஊர

(அகம்.246:1-4)

சருச்சரையுடைய (சுரசுரப்பு) வயிற்றினையும் பிளவு பட்ட வாயினையுமுடைய ஆண் சங்கு, ஆழ்ந்த நீரையுடைய பொய்கையில் பெண்சங்கினோடு மணம் புணரும். அங்குக் கூரிய மூக்கினையுடைய ஆரல்மீன் கரி கூறுவோனாக விளங்கும். நீர் நிறைந்த அகன்ற வயல்களையுடைய புதுவருவாய் மிக்க ஊர். இதுதான் ஊர்ப்புனைவு. ஆண் சங்கும் பெண் சங்கும் கூடுகின்ற போது, ஆரல்மீன் அங்கு இருக்கிறது. இந்தக் காட்சி, திருமணம் புரிந்துகொள்ளும் சங்குகள், ஆரல் மீனைச் சாட்சியாகக் கொண்டு மணக்கின்றன. நீருக்குள் நிகழ்கின்ற நிகழ்ச்சியை ஊர்ப்புனைவாகப் பரணர் சித்திரித்துக் காட்டுகிறார்.

பரணரின் இன்னொரு பாடல், தோழி வாயில் மறுத்தது. (அகம்.386). இப்பாடலில்

பொய்கை	நீர்நாய்ப்	புலவுநாறு	இரும்போத்து
வாளை	நாளிரை	தேரும்	ஊர

(அகம்.386:1-2)

என்பது புனைவுக்கூறு. பொய்கையிலுள்ள ஆண் நீர் நாய், அங்குள்ள வாளையாகிய இரையை விடியற் காலத்தே தேடுகின்றது. இவ்வூர் மருதநிலம் என்பதற்குத் தகப் புனைவு காணப்படுகிறது.

பரணர் "ஊர' என்று விளியமையப் பாடிய பாடல்களில், ஒன்றில் "யாணர் ஊர' (அகம்.226) என்பது மட்டுமே உள்ளது. வேறு புனைவில்லை. நற்றிணை (260) அகநானூறு (116) ஆகிய இரண்டில் வயலைப் பற்றிய புனைவு காணப்படுகிறது; ஏனைய மூன்றில் வரால் /ஆரல் / வாளை ஆகிய மீன்கள் இடம் பெற்று மருதம் புனையப்படுகிறது. புனைவு அமைந்த ஐந்து பாடல்களில் அவற்றுக்கு வேறொரு குறிப்புப் பொருளும் உள்ளது. அவற்றில் தலைவன் தலைவியல்லாத பரத்தையருடன் ஒழுகி இன்பம் துய்த்துத் திரிகின்றான் என்பதே அடிக் கருத்தாகிறது. இவை தலைவி (அகம்.196)/தோழி (பிறபாடல்கள்) கூற்றானவை. பரணர் தலைவன் புறத்தொழுக்கத்தை வெளிப்படத் தலைவியும் தோழியும்

அறிந்தமையையும் அதனை அவன் கடிதல் வேண்டும் என்பதையும் புனைவுக்குளமைந்த மறைபொருள் காட்டுகின்றது.

'ஊர' என்ற விளியை அமைத்துப் பாடிய பாடல்கள் மருதத் திணையின. அவை பெண்கள் கூற்று. அவற்றில் இரண்டு பாட்டு, தலைமகள் (நற்.260) (அகம்.196) கூற்று, இன்னொன்று பரத்தை கூற்று (நற்.400). ஏனையன தோழி கூற்று. எல்லாவற்றிலும் கேட்பவன் தலைவன். இவ்வாறு பாடப்படும் ஊர்ப் புனைவுப் பகுதி பாடலில் முதற் பகுதியாக வருகிறது.

பரணர் ஊரின் இயற்கையைப் புனைந்து அதன் குறிப்புப் பொருளாகப் பிறிதொன்றை உணர்த்துகின்றார். அவர் இயற்கையைப் புனைந்த பகுதிகளில் எல்லாம் தலைவனுடைய பரத்தையர் தொடர்பையே பரணர் சுட்டிக் காட்டுகின்றார். தலைவன் பரத்தையரொடு தொடர்புடைவனாக இருக்கின்றான் என்பதும் அதனைத் தலைவி அறிவாள் என்பதும் இப்புனைவுகள் உணர்த்துகின்றன. அவற்றில் தலைவனுடைய பரத்தமை ஒழுக்கத்தைப் பெண்கள் இடித்துரைத்துத் திருத்தவில்லை. பரணர் தான் தலைவனை விளிக்கும் ஊர்ப்புனைவுக் குறிப்புகளில் இன்னொரு கருத்தையும் அமைத்திருக்கிறார். அவை குறிப்புப் பொருளாகும்.

1.2 சோழ நாட்டுப் புலவர்கள்

சேரநாட்டுப் புலவர் போலச் சோழ நாட்டுப் புலவரும் இவ்வாறு விளியில் ஊரின் இயற்கையைப் புனைந்து பாடியுள்ளனர். சேரநாட்டுப் புலவர்களைவிட ஊரைப் புனைந்து பாடிய புலவர்களில் சோழ நாட்டார் எண்ணிக்கை மிகுதி.

1. குடவாயிற் கீரத்தனார்
2. மிளை கிழான் நல் வேட்டனார்
3. ஆலங்குடி வங்கனார்
4. ஆவூர் மூலங்கிழார்

ஆகிய நான்கு சோழ நாட்டுப் புலவர்களும் ஊரைப் புனைந்து பாடினார். சோழநாடு மருதத்தின்யாதலின் ஊர்ப்புனைவு இந்நாட்டார் பாடல்களில் மிகுதியாக அமைகிறது.

திணை மாறப்புனைவின்மை

குடவாயிற் கீரத்தனார் பாடிய நற்றிணைப் பாட்டில் தலைவன் தலைவியை உடன் போக்கும் தோழி தலைவனைப் 'பூக்ககேழூர' (நற்.10 : 4) என்று விளித்தாள். 'மலர்கள் நிறைந்த பொழில் சூழ்ந்த ஊரன்' என்பதே இத் தொடரின் கருத்து. ஊரைப் பற்றி வேறு விரிவான புனைவில்லை. தோழி தலைவியைத் தலைவன் பால் கையடைப்படுத்து அனுப்புதலின் புலவர், தலைவன் நாட்டுச் சிறப்பைச் செப்பவில்லை. அவள் தலைவன் தலைவியைச் செம்மையாகப் பேணிக் கொள்ளவேண்டும் என்ற கவலை மேலோங்கியிருக்கிறது. அதனால் தோழி மனம் அவள் ஊரழகில் செல்லாது தலைவியைப் பேணுமுறை ஓம்படுத்துரைத்தலில் சென்றதனைப் பேசுகின்றது.

இங்குப் புனைவின்மையான் வேறு கருத்து இறைச்சியாகவோ உள்ளுறையாகவோ வரவில்லை. பாலைத் திணையாக இப்பாடல் இருப்பதால் புனைவமைத்துப் புலவர் பாடிலர். இப்பாடலில் விளி இருந்தும், பாடு பொருளினீர்மையாலும் திணையாலும் ஊரின் இயற்கை புனையப்படவில்லை.

தலைவனைக் கடியும் புனைவு

மிளைக்கிழான் நல் வேட்டனார் (நற்.210), தோழி தலைவனை விளிப்பதாகப் பாடுகின்றார்.

அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர (நற்.210:1-4)

என்பது ஊர்ப்புனைவாகித் தலைவனை விளிப்பாதாகின்றது. கதிரறுத்த அழகிய பெரிய வயலில் மறுசால் உழுத ஈரம் காயாத செய்யின் கண் விதைப்பதற்கு விதை நெல்லைக் கொண்டு சென்ற கடகப் பெட்டியில் பற்பல மீனைக் கொண்டு வருகின்ற புதுவருவாயினையுடைய ஊர் என்று புனைந்து தலைவன் விளிக்கப் பெறுகின்றான்.

மருதத்துக்குப் பொருந்துமாறு வயலில் கதிரறுத்து மறுபடி உழுது விதை விதைத்தல் புனையப் பெறுகிறது. இன்பமூட்டும் இயற்கைப் புனைவு ஈண்டில்லை. இயற்கைக் காட்சியை மனிதவாழ்க்கையொடிணைத்துப் புலவர், இயற்கைக் காட்சியால் பாடுபொருளுக்குத் தொடர்பான இன்னொரு கருத்தை வெளிப்படுத்துகிறார். ஆகலின் ஊர்ப்புனைவு என்பது இயல்பான இன்னொரு கருத்தை உணர்த்துவதொடு மறை பொருளாக வேறொரு கருத்தையும் தருகின்றது.

தலைவன் தலைவியை நினையாது புறத்தொழுக்கத்தில் திரிவதைக் கடியும் தோழி, குறிப்பாகத் தலைவனைக் கடிந்து அறவுரை கூறுகின்றாள். 'ஈரச் செறுவின் உயர்ந்த வித்தொடு சென்ற வட்டி (கடகம்) அதனால் பெறலாகும் விளை பயனைப் பெறுமுன், இழிந்த பல வேறு மீன்களைக் கொடுவந்தாற்போல, உயர்ந்த தலைவியோடு கூடி இல்லின் கண் நல்லறம் செய்யப் புக்க நீ அதன் பயனைப் பெறுமுன் பரத்தையர் பலர்பாற் பெறலாகும் இழிந்த பயனைப் பெறா நின்றனை' என்பது உள்ளுறை.

மிளை கிழான் நல் வேட்டனார் தன்னுடைய பாடலில் ஊரைப் புனைந்து அதன் வழி அகப் பொருட் கருத்தை உணர்த்துகின்றார். ஒரே பகுதியில் இயற்கைப் பொருளும் அகப்பொருளும் ஒன்றாகிப் பிறிதொரு பொருள் பயக்கின்றது, ஒன்றிலேயே இரண்டை உணர்த்துகின்ற பாங்கு சங்க இலக்கிய மரபாகும்.

ஆலங்குடி வங்கனார் புனைவுகள்:

ஆலங்குடி வங்கனாரும், சோழநாட்டுப் புலவராவார். இவர் தோழி கூற்றாக மருதத்தில்,

வயப்பிடிச் செவியின் அன்ன பாசடைக்
கயக்கணக் கொக்கின் அன்ன கூம்பு முகைக்
கணைக்கால் ஆம்பல் அமிழ்துநாறு தண்போது
குணக்குத்தோன்று வெள்ளியின் இருள்கெட விரியும்
கயற் கணங் கலித்த பொய்கை யூர

(நற்.230:1-5)

என்றுரைத்தார். தோழி தலைவனை விளித்துப் பேசுகிறாள். பத்தடிப் பாடலில் ஐந்தடி ஊரின் இயற்கைப் புனைவு. பெண் யானையின் காது போன்ற பசுமையான இலை; குளங்களில் கூட்டமாக வாழும் கொக்குகளைப் போல் கூம்பிய அரும்புகள்; திரண்ட தண்டுகளையுடைய ஆம்பலின் தேன்மணம் கமழும் குளிர்ந்த பூக்கள், அவை கிழக்கில் தோன்றும் வெள்ளியாகிய விண்மீன் போல இருள் கெடுமாறு விரிந்தொளி வீசுகின்றன. அவ்வூரோ கயல் மீன்களின் கூட்டம் நிறைந்த பொய்கையையுடைய ஊர். இயற்கையைக் கூர்ந்து நோக்கி ஆலங்குடி வங்கனார் இலையும் மலரும் இணைந்து வரும் இயற்கைக் காட்சியை உவமையால் உணர்த்துகின்றார்.

ஆலங்குடி வங்கனார் இப்பாடலில் தலைவன் ஊரை அமைதியின் நிலைக் களனாய், எவ்வகை ஆரவாரமும் அற்றதாய்ப் பெருமிதமாகத் தோன்றும் மோனப் பெருநிலையாகக்.காட்டுகின்றார்.[91] இவணும் தோழி பேச்சில் தலைவனுக்குணர்த்தும் இன்னொரு பொருள் உள்ளுறுத்தப் பட்டிருக்கிறது. "ஆம்பல் போது வெள்ளி போல மலர்ந்திருந்தாலும் வெள்ளியாகாதவாறு போல, நீ தலைவிக்குச் செய்யும் தலையளி போலப் பரத்தைக்குச் செய்யினும் அவள் தலைவியாந் தன்மையளல்லள் காண்"[92] என்ற கருத்து வெளிப்படுகிறது. இன்னொரு நற்றிணைப் பாடலும் தோழி தலைவனை 'ஊர' என்று விளித்துப் பேசுவதாக ஆலங்குடி வங்கனார் பாடியுள்ளார்.

தடமருப்பு எருமைப் பிறழ்சுவல் இரும்போத்து
மடநடை நாரைப் பல்இனம் இரிய

நெடுநீர்த் தண்கயந் துடமெனப் பாய்ந்து
நாள்தொழில் வருத்தம் வீடச் சேட்சினை
இருள்புனை மருதின் இன்னிழல் வதியும்
யாணர் ஊர

(நற்.330 : 1-6)

ஊரினுடைய இயற்கை நிலையை ஆலங்குடி வங்கனார் நன்கு புனைந்திருக்கிறார். மருத நிலத்தது நிகழ்ச்சிகளை உள்ளது உள்ளபடியே இவர் விவரிக்கின்றார். வயல் சூழ்ந்த ஊர்களில் உழவுக்கு உதவும் விலங்கு எருமை; ஆசிரியர் அதன் இயல்பு தோன்றப் புனைந்தார். 'தடமருப்பு எருமைப் பிறழ்சூழ் இரும் போத்து' என்பது அதன் புனைவு. நாரைகளை 'மடநடை நாரைப் பல் இனம்' என்பர். நாரைகளில் பல்வேறு வகை உள்ளமையால் ஆசிரியர் அதனை உணர்ந்து இவ்வாறு கூறுகின்றார். உயிரினங்களைப் புனைந்த புலவர் அவை தங்கும் நீர்நிலையை 'நெடுநீர்த் தண்கயம்' என்று புனைவர். ஒவ்வொன்றையும் புனைந்து ஆலங்குடி வங்கனார் மருதநிலம் என்பதைக் காட்டுகின்றார். இவ்வண்ணம் கயத்தையும் உயிரினங்களையும் புனைந்த ஆலங்குடி வங்கனார், அங்கு வாழுகின்ற எருமையின் நடவடிக்கை மற்றையவற்றை எவ்வெவ்வாறு தாக்குகிறது என்று நிகழ்ச்சியாகப் புனைகின்றார். இந்தப் புனைவில், தலைவனுக்குச் சொல்ல வேண்டிய கருத்து மறைத்துச் சொல்லப்பட்டுள்ளது.

எருமைக் கடா நாரையினம் இரியப் பொய்கையிலே பாய்ந்து வருத்தம் நீங்கியது; பின் தான் புகுந்து இருக்கவேண்டிய தொழுவத்திற்குப் போகாது மருத நிழலில் தங்கிற்று. இதனைப் போலத் தலைவன் காமக் கிழத்தியர் பாற் கிடந்து பின் அவர் அஞ்சியகல வெறுத்துப் பரத்தையர் சேரியில் தங்கி ஆங்கு அவர்களுடன் புணர்ந்து கவலையின்றிக் கிடந்தான். அதன் பின்னும் தலைவன் தன் மனையகம் போகாது பாணன் கொணர்ந்த புதிய பரத்தையிடம் தங்கியிருந்தான்.

எருமைக்கடா	-	தலைவன்
நாரையினம்	-	காமக் கிழத்தியர்

கயம்	-	பரத்தையர் சேரி
மருத நிழல்	-	புதிய பரத்தையின் மனை

இங்ஙனம் தலைவன் பரத்தையருடன் கொண்ட இழிவைச் சுட்டித் தோழி அவருடன் அவன் உறவு கொள்ளலாகாது என்று அறிவுறுக்கின்றாள். தலைவனை ஒழுக்கப் படுத்தும் உரிமை தோழிக்கு இல்லை; ஆதலின் தோழி ஊர்ப்புனைவு வழி நுட்ப அறிவுடைய தலைவனை உய்த்துணர வைக்கின்றாள்.

இன்னொரு பாட்டிலும் ஆலங்குடி வங்கனார் ஊரைப் புனைந்து தலைவன் இயல்பைக் குறிப்பாகப் பெறவைக்கின்றார்.[14] வாழைத்தாற்றின் மெல்லிய நுனியில் வாழைப்பூத் தொங்குகின்றது. அதனை நிலத்தில் ஓங்கி வளர்ந்திருக்கின்ற நெற்கதிர் அசையச் செய்கின்றது. அந்தக் கண்ணுக்கினிய வயலில், கதிரறுப்போர் அறுத்துப் போட்ட அரிச்சூட்டில் பெரிய கரிய கழுத்தையுடைய வாளைமீன் விழுகின்ற ஊர் என்பர் ஆசிரியர். தலைவன் ஊரைப் பரத்தை புனைகின்றாள். இதனை உள்ளுறையாகக் கொண்டு பின்னத்தூர் நாராயண சாமி அய்யர், 'வாழையினது பூவை அசைக்கின்றனவாகிய வயலில் உண்டாகும் நெற்கதிர்களை மள்ளர்கள் அறுத்துப் போகட்ட அரிச்சூட்டின் அயலின் கண்ணே வாளை பிறழுமென்றது - தலைவியினது நெஞ்சை வருத்துகின்றனவாகிய காதற்பரத்தையின் செய்கைகளை வாயில்கள் அடக்க அவள் நெஞ்சிலே தலைவன் விளங்கலாயினா னென்பதாம்'[15] என்று விளக்கந் தருவர். இவ்வாறு பரத்தை தலைவன் மீது கொண்ட காதற் செய்கைகளை வாயில்கள் அடக்கத் தலைவி உள்ளத்தில் தலைவன் விளங்கலாயினான். இந்த உண்மையை உள்ளுறை உணர்த்துகின்றது.

ஆலங்குடி வங்கனார் பாடல் மூன்றும் மருதத் திணைக்குரியன. அவற்றில் இரண்டு பாட்டு தோழி கூற்று; ஒன்று பரத்தை கூற்று. தோழி கூற்றுப் பாடல்கள் இரண்டும் தலைவன் ஊரின் இயற்கையை இயல்பாகப் புனைகின்றன. பரத்தை கூற்றுப் பாடலும் ஊரின் இயற்கையைப் பேசுகின்றது; மூன்றிலும் வயலைச் சார்ந்த புனைவுகளை ஆலங்குடி வங்கனார் வண்ணித்து ஊரைக் காட்டுகின்றார். சங்கப்

புலவரின் ஊர்ப் புனைவு இயற்கைப் புனைவானாலும் அதன் உள்ளடக்கத்தில் ஆடவனுடைய பரத்தை ஒழுக்கம் சுட்டப் படுகிறது; தலைவனுடைய பரத்தை தொடர்பைத் தலைவியும் அவளது சுற்றமும் அறிவதே அவனுக்கு இடிப்புரையாகிவிடுகிறது.

ஆவூர் மூலங்கிழார் புனைவு

ஆவூர் மூலங்கிழார் ஏழு அடிகளான் ஊரைப் புனைகின்றார். "முரசுடைச் செல்வரின் குதிரையின் தலை உச்சியிடத்து, இணைத்துத் தைத்த கவரியை நிமிர்த்து வைத்தாற்போன்ற செழுமை வாய்ந்த வயலிலுள்ள நெல்லின் சிவந்த அரிகளையுடைய இளங்கதிரை முதியபசு தின்பதைக் கண்டு அஞ்சினர் வயற்காவலர்" அவர்கள் அவற்றுக்குக் கரும்பினை உண்பித்துப் பாகற் கொடியுடன் பகன்றைக் கொடியையும் அறுத்து முதிய பசுக்களை அவற்றால் காஞ்சிமரத்தில் கட்டி வைக்கும் நீர் வளம் பொருந்திய ஊர் (அகம்.156:1-7) நெல்லுக் கீடாகக் கரும்பை மூதாவுக்கு வழங்குகின்ற காட்சி ஓவியமாகிறது. நெல்லும் கரும்பும் விதைக்கப் பெறுகின்ற வயல் வளத்தால் ஊர் வளத்தைக் காட்டுகின்றார், 16 ஆவூர் மூலங்கிழார்.

மருதத் திணைப் பாடல்கள், பரத்தை ஒழுக்கத்தைப் பேசுவன; கற்பிற்குரியன. ஆவூர் மூலங்கிழார் களவொழுக்கத்தில் மருதமாகப் பாடுகின்றார். இப்பாட்டு தலைமகளை இடத்துய்த்து வந்த தோழி தலைமகனை வரைவு கடாயது; இப்பாட்டு முதற்பொருளால் மருதமாகிறது. இதன் மையக் கருத்துக் கிசைந்த வகையில், இந்த பாடலின் ஊர்ப்புனைவுக்குக் குறிப்புப் பொருளும் அமைந்திருக்கிறது. "விளைந்து நெல்லாகிப் பின் பெரிதும் பயன்படும் இளங்கதிரை ஆ தின்றலை அஞ்சி அதற்குக் கரும்பைக் கொடுத்துக் கொடியால் கட்டிப் பயன் கொள்வர்" அதுபோலப் பின்னே பெரும் பயன் தரும் களவொழுக்கத்தை அழித்துப் பயன் தராது செய்யும் அலர் கூறுவார் வாயடங்கி ஒழிய வரைந்து கொள்ளுமாறு தோழி தலைமகனுக்குக் கூறுகிறாள்.

1.3 பாண்டிய நாட்டுப் புலவர்கள்

பாண்டிய நாட்டுப் புலவர்களும் 'ஊர' என்பதை விளியாக்கித் தலைமையைப் புனைந்திருக்கின்றனர். பாண்டியநாட்டுப் புலவர்கள் மருதத்தை மிகுத்து பாடியவர்கள். அவர்களுள் ஒரு பெண் புலவருமுளர்.

1. மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார்.
2. மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்
3. மருதம்பாடிய இளங்கடுங்கோ
4. மதுரை நக்கீரர்
5. அள்ளூர் நன்முல்லையார்

மள்ளனாரும், சாத்தனாரும்

மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார் (அகம்.256) ஏழு அடிகளான் ஊரைப் புனைகின்றார். "பின்னிய தூறுகளையுடைய வள்ளைக் கொடியின் நீண்ட இலைச் செறிவில், மடிந்து கிடக்கும் துயிலை வெறுத்த வலிய நகத்தினையுடைய யாமை ஒலிக்கும் பரல்கல் வழியே சென்று அகன் துறைக் கண்ணே பிளந்த வாய் நிறைந்திடப் பனங்கள்ளை அருந்துங்கால் சிந்தியவற்றை உண்ட களிப்பால் தவழ்ந்து இனிய பெரிய வயல்களைக் கலக்கி அதன் அயலதாகிய ஆம்பலின் மெல்லிய இலைகளுக்குள்ளே ஒடுங்கிக் கிடக்கும் ஊர்" (அகம்.256:1-8) இவர் மருதத்து யாமையைக் கொண்டு புனைவைக் காட்டுகின்றார்.

இந்த ஊர்ப் புனைவிலும் "தலைவன் தன் மனையிடத்துத் துயிலுதலை வெறுத்துச் சென்று பரத்தையர் சேரியில் அவர் இன்பம் நுகர்ந்த பெருமிதத்தோடு இற்பரத்தைபாற் சென்று தங்குவான்" என்ற குறிப்புப் பொருள் வெளியாகின்றது. தலைவன் பரத்தை ஒழுக்கத்தை இடித்துரைப்பதாகவே - இகழ்ந்து பேசுவதாகவே - இப்பாடலின் ஊர்ப் புனைவும் அமைகின்றது.

மற்றொரு மதுரைப் புலவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். இவருடைய அகநானூற்றுப் பாட்டில் (306) தோழி தலைமகனுக்கு வாயில் மறுத்த

போது ஊரைப் புனைந்து தோழி அவனை விளிக்கின்றாள். "அகன்ற பொய்கையிடத்துப் பிரம்பினொடு கூடி வளர்ந்த முள்ளமைந்த கொம்பினையுடைய ஈங்கையின் பஞ்சு போன்ற உச்சியினைக் கொண்ட புதிய பூவும் மாமரத்தின் இளந்தளிரும் தன்னை வருட மீனை உண்ட குருகு உறங்கும் வயல். அங்குள்ள வயலிடத்தே நன்செய்க் கரும்பின் செறும்பினையுடைய புறத்தே ஊர்ந்து சென்று பொய்கையிலுள்ள யாமை இளவெயிலில் காயும் நெற்களையுடைய தெருக்கள் உள்ள ஊர்" (அகம்.306). இதுதான் சீத்தலைச் சாத்தனார்ப் புனைவு. ஈங்கைக்கும் மாவுக்கும் இடையில் குருகு உறங்குகின்றது; குருகின் மீது மாவின் தளிர் படுவது. குருகு துயில வருடுமாறு அக்காட்சி சாத்தனாருக்குத் தோன்றுகிறது. அங்குள்ள யாமை இளவெயிலில் காய்கின்றது. அங்குள்ள தெருவெல்லாம் நெற்கள் கிடக்கின்றன. வயல்புறத்து ஊரின் தெருக்காட்சியைச் சாத்தனார் புனைகின்றார். ஊரைப் புனைந்த புலவர்களில் தெருவைச் சுட்டிப் புனைந்த புனைஞர் இவரே. இயற்கைத் நன்கு கண்டு இனிமையாகப் பாடியிருக்கிறார் புலவர்.

இந்தப் புனைவிலும் ஒரு குறிப்புப் பொருள் பெறப்படுகின்றது. "ஈங்கையின் புதுவீயும் மாமரத்தின் இளந்தளிரும் வருட ஆர் குருகு உறங்கும் நீர் சூழ் வளவயல் என்றது தலைவன் குறியாத இன்பத்தினையும் எளிதின் எய்துவான் என்றபடி"[17] என்று எழுதுவர், உரையாசிரியர். தலைவனுடைய பரத்தையர்த்துய்ப்பாகிய ஒழுக்க வழுக்கல் இவ்வாறு சுட்டப் பெறுகிறது.

மருதம்பாடியவரின் புனைவு

மருதம்பாடிய இளங்கடுங்கோ, தோழி கூற்றாக இரண்டு பாடல்களில் 'ஊர' என்ற விளியை அமைத்துப் பாடுகிறார். இஃது எட்டு அடிகளால் அமைந்த புனைவு.

நறவுண்	மண்டை	நுடக்கலின்	இறவுகலித்துப்
பூட்டது	வில்லில்	கூட்டு முதல்	தெறிக்கும்
பழனப்	பொய்கை	அடைகரைப்	பிரம்பின்
அரவாய்	அன்ன	அம்முள்	நெடுங்கொடி
அருவி	ஆம்பல்	அகலடை	நுடக்கி

அசைவரல் வாடை தூக்கலின் ஊதுலை
விசைவாங்கு தோலின் விங்குபு ஞெகிழுங்
கழனியம் படப்பைக் காஞ்சி யூர

(அகம்.96:1-8)

கள் துடித்த மண் கலத்தைக் கழுவிய நீரைக் குடித்த இறால் மீன், நெற்கூடுகளின் அடிகளில் துள்ளி விழுகின்ற மருதநிலப் பொய்கை, அக்கரையிலுள்ள முட்களையுடைய பிரம்பின் கொடி, ஆம்பலின் அகன்ற இலையினைச் சுற்றியது. அந்த இலையை அசைந்து வரும் வாடைக் காற்று விட்டு விட்டுப் புகுந்து அசைத்தலின் கொல்லன் துருத்தி போலப் புடைத்துச் சுருங்கும். இத்தகைய வயல்களையும் தோட்டங்களையுமுடைய காஞ்சி மரங்கள் மிக்க ஊர்.

இப்பாட்டில் வாளை மீனை மையப் படுத்திப் புனைவு அமைந்திருக்கிறது; மக்கள் இங்கே புனையப் பட்டிலர். மீனைப் பற்றிய பகுதி ஒருவகைப் புனைவாக இன்னொரு பகுதிப் புனைவு, காற்றால் மரங்கள் அசைதல் புனைவாகின்றது. வாடைக் காற்றின் தனி இயல்பை இப்பகுதி புனைந்து காட்டுகிறது. அந்த வாடை அசைந்து வரல் வாடை.

தோழி கூற்றாக அமைந்த மருதம் பாடிய இளங்கடுங்கோ பாடல்களில் 'ஊர' என்ற விளியையுடையவற்றில் கூடுதலான அடிகளைப் பெற்றது இப்பாட்டு (176).

கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பின்
நிலம்பக வீழ்ந்த வேர்முதிர் கிழங்கின்
கழைகண் டன்ன தூம்புடைத் திரள்கால்
களிற்றுச் செவியன்ன பாசடை மருங்கில்
கழுநிவந் தன்ன கொழுமுகை இடைஇடை
முறுவல் முகத்திற் பன்மலர் தங்கப்
பூத்த தாமரைப் புள்ளிமிழ் பழனத்து
வேப்புநனை யன்ன நெடுங்கண் நீர்ஞெண்டு

இரைதேர்	வெண்குருகு	அஞ்சி	அயலது
ஒலித்த	பகன்றை	இருஞ்சேற்று	அள்ளல்
தீதலையின்	வரிப்ப	ஒடு	விரைந்துதன்
ஈர்மலி	மண்ணளைச்	செறியும்	ஊர

(அகம்.176:1-12)

இடமகன்ற நீர்ப்பரப்பில் நிலம் பிளக்குமாறு இறங்கிய வேரில் புதிர்ந்த கிழங்கினையும் துளையுடைய திரண்ட தண்டினையும் பசிய இலையிடத்தே செழித்த மொட்டுகளின் இடையிடையே விளங்கப் பூத்த பல மலர்களையுமுடைய தாமரை விளங்கிற்று. பறவைகள் ஒலிக்கின்ற அவ்வயலில் நீர் நண்டானது பிரிந்து போயிற்று. அது இரைக்காகக் காத்திருந்த நாரையினைக் கண்டஞ்சி அருகிலுள்ள தழைத்த பகன்றையினுடைய கரிய சேற்றுப்பிழம்பில் வரியுண்டாக ஒடிச் சென்று விரைந்து தன் மண்ணளைக்குள் பதுங்கும் ஊர்.

மருதம்பாடிய இளங்கடுங்கோ இங்குத் தாமரையின் ஒவ்வொரு உறுப்புகளையும் தெற்றெனப் புனைகின்றார். இங்குத் தாமரை மலர், குருகுக்கு அஞ்சிய நண்டு ஆகியன புனையப்படுகின்றன. வயல் வெளிகளில் காணுகின்றவற்றையே இளங்கடுங்கோ வரைந்து காட்டுகிறார். பறவைக்கு உயிரினம் அஞ்சுவதாக நக்கீரரும் பாடுவர் (அகம். 346).

மருதம் பாடிய இளங்கடுங்கோ தன்புனைவின் மூலம் பரத்தையர் சேரியைச் சூழ்ந்து திரியும் பாணன், காமஞ் சாலா இளமையோளாகிய பரத்தையைத் தலைமகனோடு கூட்டத் தலைமகன் அவளை முயங்கிய விடத்து அவள் களிப்புற்று நீங்கியவழி மெலிகின்றாள் என்று தலைவன் ஒழுக்க நிலையைக் காட்டுகிறார் (அகம்.96). இன்னொரு பாடலில் பரத்தையர் சேரிக்கண் அவர் நலத்தினை நுகர்ந்திருந்த தலைவன் அலர் எழுதலை அஞ்சி அப்பரத்தையர் செய்த குறி தன் மார்பிலே கிடப்பத் தன் மனைக் கண் விரைந்து வரலாயினன்; (அகம்.176) என்கிறார். இரண்டிலும் ஊர்ப்புனைவு மருதத்தைப் பற்றியது. இரண்டு பாடல்களும் தலைவன் பரத்தையொடு கொண்ட உறவையே எடுத்தியம்புகின்றன. ஆகவே,

ஊர்ப்புனைவாம் உள்ளுறையால் தோழியோ . தலைவியோ தலைவனுடைய ஒழுக்கப் பிழையை இடித்துக் காட்டும் முயற்சியாக அமைகிறது. அவர்கள் அதனைச் சுட்டிப் பேசுவதே தலைவனுக்கு நாணத்தைத் தருவதாகும்.

நக்கீரர் புனைவு

மதுரை நக்கீரர் எட்டு அடிகளால் ஊரைப் புனைகுவர். இப்புனைவு விரிவானதும் சுவையானதுமாகும். "பிளந்த வாயினையும் பலவரிகளையுமுடைய பெரிய வராற் போத்து, வளைந்த வாயினையுடைய தூண்டிலுள்ள தசைத்தக் கூற்றமாகிய இரையினை விழுங்கியது" பின் ஆம்பலின் மெல்லிய இலை தழிய மேலெழுந்தும் குவளையின் அரும்பு மலர்ந்த பலமலர்களும் சிதையும்படி பக்கத்தே பாய்ந்து பிணக்கம் மேவிய அழகிய வள்ளைக் கொடியினைக் கலக்கியது. தூண்டிலிட்ட வேட்டுவன் இழுக்கவும் வாராமல் கயிறிட்டுப் பிடிக்கும் சினமிகுந்த காளை போலச் செருக்கு மிக்கு விடியற் காலத்தே குளங்களைக் கலக்கும் பூக்கள் பொருந்திய ஊரன்."

மருத நிலத்தில் தூண்டில் போட்டு வரால் மீன் பிடிக்கின்ற செயலும் தூண்டிலில் அகப்பட்ட மீன் துள்ளி எல்லாவற்றையும் சிதைக்கும் செயலும் உண்மையியலாகப் பாடப்பட்டிருக்கின்றன. தூண்டிலில் சிக்கிய மீன், கயிறிட்டுப் பிடிக்கும் ஏறு போலத் துள்ளித் திரிந்தது. இன்றைக்கும் மீன் பிடிக்கும் இடத்தில் காணத்தக்க காட்சியை நக்கீரர் கண்டு சித்திரிக்கிறார்.

இப்பாடலில் எட்டு அடிகளான் ஊரைப் புனைந்த நக்கீரர் வேறுபாட்டில் (அகம் 346) பதினொரு அடிகளான் புனைவர்.

......			இறைமிசை
மாரிச்	சுதையின்	ஈர்ம்	புறத்தன்ன
கூரற்	கொக்கின்	குறும்பறைச்	சேவல்
வெள்ளி	வெண்டோ	டன்ன	கயல்நிறித்துக்

கள்ளார் உவகைக் கலிமகிழ் உழவர்
காஞ்சியங் குறுந்தறி குத்தித் தீஞ்சுவை
மென்கழைக் கரும்பின் நன்பல மிடைந்து
பெருஞ்செய் நெல்லின் பாசவல் பொத்தி
வருந்திக் கொண்ட வல்வாய்க் கொடுஞ்சிறை
மீதழி சுடுநீர் நோக்கிப் பைப்பயப்
பார்வல் இருக்கும் பயங்கேழ் ஊர

(அகம்.346:1-11).

என்பது புனைவு. மழையில் நனைந்த கொக்கின் சேவல், கயல் மீனைப் பெறக் கருதியது. கள்ளுண்ட உழவர், காஞ்சிமரத்தின் குறிய துண்டுகளை நட்டுக் குறுக்கே கரும்புகளை வைத்துக் கட்டி அடைத்து நெற்பயிரையுடைய செய்யாகிய பள்ளங்களில் நீரைத் தேக்க முயன்றமைத்த அணையில் தேங்கி வழியும் நீரைப் பார்த்து மெல்லச் சென்று நோக்கியிருக்கும் பயனையுடைய ஊர். இவ்வாறு ஊரைப் புனைந்து தலைவனை அடையாளம் காட்டுகிறார் நக்கீரர்.

நக்கீரர் இரண்டு பாடலிலும் மீன்களைப் பற்றிய குறிப்புடனே பாடுகிறார். ஒன்றில் தூண்டில் இட்டு மீன் பிடித்தலையும் இன்னொரு பாடலில் பத்தக் கட்டை போட்டு மீன் பிடித்தலையும் விவரித்துப் பாடுகின்றார் ஆசிரியர். இவற்றில் மறை பொருளாக இன்னொரு கருத்தும் அமைந்திருக்கிறது. தலைவனுடைய பாணன் நெஞ்சு வலிமையுடையனாய்ப் புறம்பு மெல்லதாயிருக்கின்ற இன்சொல்லாலே, அப்பரத்தை நலத்தை நுகர்ந்து, அப்பரத்தையர் தாய்மார் நெஞ்சு வருந்த அவ்விடத்தை விடாத அன்புடனே போந்து, தலைமகள் முதலாகியவர் தலைவன் நிறங்கண்டு வருந்த வீடுவந்து குவளைமலர் சூழ்ந்த வள்ளை போலும் தலைமகள் சுற்றத்தார் மயங்க, அவர்களை வருத்தி, ஊரையெல்லாம் இப்படி எல்லாரும் அறியத் தலைவன் கலக்குகின்றான். இந்த உள்ளுறையின் மூலம் தலைவனுடைய பரத்தையர் ஒழுக்கத்தை நக்கீரர் விவரிக்கின்றார். இது தலைவன் ஒழுக்கக் கேடு ஊரறிந்தது என்பதைக் காட்டுகிறது. இப்பாடலில் நக்கீரர் தலைவன் பரத்தையரொடு ஆடியமை அலரான வகையை 'அலரே...... வீரர் ஆர்ப்பினும்

பெரிதே' என்று பாடினார். இக்கருத்தைத் தெளிவாக விளக்கும் வகையிலேயே இப்பாட்டின் இயற்கைப் புனைவும் அதன் குறிப்புப் பொருளும் திட்டமிட்டுப் பாடப்பட்டுள்ளன. ஊர்ப்புனைவு மீனின் செய்கையாகிய போராட்டத்தைக் காட்டுகிறது.

இன்னொரு பாட்டில், கொக்கின் சேவல் கயல் குறித்துப் பார்வல் இருக்கும் என்றது தலைவன் பரத்தையரை நோக்கியிருப்பன் என்ற கருத்தைத் தருகின்றது. இதன் கண்ணும் நக்கீரர் பாடலின் கருத்தை வலியுறுத்துமாறே இயற்கையைப் புனைந்துள்ளார். இரண்டு அகநானூற்றுப் பாடல்களும் பாடற் கருத்தையும் இயற்கைப் புனைவையும் ஒரே நோக்கில் நக்கீரர் அமைத்திருப்பதைக் காட்டுகின்றன.

பெண்பாற் புலவரின் புனைவு:

"ஊர' என்ற விளி அமையப் பாடல் பாடிய சங்ககாலப் பெண் புலவர் அள்ளூர் நன்முல்லையார். இது தோழி கூற்று.

சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
ஊர்மடி கங்குலின் நோன்தளை பரிந்து
கூர்முள் வேலி கோட்டின் நீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுடன் இரிய
அந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டூது பனிமலர் ஆரும் ஊர

(அகம்.46:1-6)

சேற்றை வெறுத்த எருமை, ஊரார் துயின்ற இருளில் வலிய தளையை அறுத்துக் கொண்டு முள் வேலியைக் கொம்பால் நீக்கியது; பின் வயலில் மீன்களெல்லாம் ஓட வள்ளைக் கொடியை மயக்கி வண்டூதும் தாமரையின் குளிர்ந்த மலரை நிறையத் தின்னும் ஊர். இஃது அள்ளூர் நன் முல்லையார் ஊர்ப்புனைவு. ஓர் எருமையின் நிகழ்ச்சியை - இன்றும் சிற்றூர்களில் காணுகின்ற காட்சியை - சங்க காலப் புனைவு

காட்டுகின்றது. இயற்கை என்றும் ஒன்று போல மாறாததாக இருக்கும் என்பதற்கு அள்ளூர் நன் முல்லையார் புனைவு நல்ல கரியாம்.

இந்த ஊர்ப் புனைவில், தோழி தலைவனுடைய ஒழுக்கக் கேட்டை வெளிப்படவும் குறிப்பாகவும் சுட்டி ஊரைப் புனைகின்றார். தலைவனால் ஆதரித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவியை இவனே வேறுபடுத்தினான்; அவன் தன்னைக் கட்டுப்படுத்தும் நாணமாகிய தளையையும் அறுத்துக் கொண்டு பரத்தையரை நாடினான்; அவர்களுக்குக் காவலாக இருந்த விறலியையும் பாணனால் நீக்கினான்; அப்பரத்தையருடனுறையும் தோழிமார் இரிந்தோட அவர்களுடைய தாய்மாரையும் மயக்கி அகமலர்ந்து அவனை விரும்பாத மகளிரை அவன் நுகர்கின்றவனாவான். இக்கருத்தையே இப்புனைவுணர்த்துகின்றது.

சங்க கால மக்கள் இயற்கையைத் தழுவி இயற்கைக்குள் இயற்கையாக வாழ்ந்தவர்கள்; அம்மக்கள் இயற்கையை யழித்துச் செயற்கையைப் பெருக்கி ஊர் வளம் கண்டவர் அல்லர்; அதனால் அவர்கள் புனைவில் ஊரில் நிகழும் நிகழ்ச்சிகளே உருப்பெறுகின்றன. அவர் தம் புனைவுகள் ஒளிப்படமாக ஒரு காட்சியாக எடுக்கத் தக்கன அல்ல. நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து காட்டிச் செல்லும் ஒளிப்படச் சுருளாகப் புனைவுகள் திகழுகின்றன. அள்ளூர் நன் முல்லையாரின் காரான் புனைவு அத்தகைய திறமான புனைவாம். ஊர் வாழ்க்கையை (கிராமத்து வாழ்வு) நன் முல்லையார் நன்கு நோக்கி இப்பாட்டில் சித்திரமாக்கியுள்ளார்.

'ஊர' என்று தலைவனை விளித்துப் பாடிய பாடல்களில், இந்த விளி ஒன்றையே சங்கப் புலவர்கள் அமைத்தனர். ஆனால் சீத்தலைச் சாத்தனார் 'ஊர' என்று (அகம்.306:8) எட்டாம் அடியில் தலைவனை விளிப்பதாக அமைத்தார். தலைவனை இவ்விளியால் மட்டுமே சுட்டினால் போதும்; ஆனால் இப்பாட்டின் தொடக்கத்தில் 'பெரும் பெயர் மகிழ்ந' (அகம்.306:1) என்று திணைப் பெயர் கொண்டு இன்னொரு விளியும் அமைத்தார். இவ்விளியை ஒட்டி ஊரின் புனைவு பாடலில்

பயின்றிலது. மகிழ்ந என்று விளி அமைந்த மருதப் பாடல்கள் ஐங்குறு நூறு (45, 52, 57, 59, 62, 66, 69, 71, 75, 77, 79, 80), குறுந்தொகை (53, 238, 384), நற்றிணை (30, 340) அகநானூறு (16, 206, 306, 376, 396) ஆகிய நூல்களில் உள்ளன. ஆனால் அவற்றில் ஊர்ப்புனைவில்லை. 'ஊர' என்ற விளியமைந்த பாடல்களில் மட்டுமே ஊர்ப்புனைவு அமைந்திருக்கிறது. சாத்தனார் இரண்டு விளியமைத்து 'ஊர' என்ற விளியில் மட்டும் ஊர்ப்புனைவைப் பாடியிருக்கிறார். பரணர் (அகம்.116) ஊர்ப்புனைவில் மறுகைக் குறிக்கிறார்.

சங்க இலக்கிய ஊர்ப்புனைவில் 'ஊர' என்று தலைவனை விளிப்பதாகக் கொண்டு பதினொருபுலவர்கள் பாடல்களை இயற்றியுள்ளனர். இவற்றில் சேர நாட்டைச் சார்ந்தவர் இருவர்; சோழநாட்டினர் நால்வர்; பாண்டிய நாட்டினர் ஐவர்.

சேரநாட்டுப் புலவர்கள், தங்களூர்ப் புனைவில் குருகு, சிறுசிரல் என்ற பறவைகளையும் கெண்டை, இறால், வரால் மீன்களையும் புனைகுவர். தாமரை முகை, கழுநீர், ஆம்பல் ஆகிய மலர்கள் பேசப்படுகின்றன. செந்நெல், கரும்பு, பிரம்பு, மருது, காஞ்சி ஆகியனவும் சுட்டப்படுகின்றன. எருமை, சாகாடு (வண்டி) கள், மகளிர், பாணர், பாடினி, முதலியன பாடப்படுகின்றன. பரணர் 'நெடுங்கொடி நுடங்கும் நறவு மலி பாக்கம்' (அகம்.196:1) என்று பாக்கத்தைச் சுட்டுவர். இவரே இன்னொரு பாடலில் மறுகை (அகம்.116:3)க் குறிப்பர். இவை ஊரின் உட்பகுப்புகளாக அமைகின்றன. இத்தகைய சிறுசிறு குறிப்புகளே, ஊரில் பல தெருக்கள் இருப்பதாகப் பரிபாடல் புனைவதற்கு வழிகாட்டியாகும்.[19]

சேரநாட்டுப் புலவர் இருவரே ஊரைப் புனைகின்றனர். சோழநாட்டில் நான்கு புலவர்கள் ஊரைப்புனைகின்றனர். பாண்டியநாட்டுப் புலவர் ஐவர் ஊரைப்பு புனைகின்றார். சோழநாட்டுப் புலவர்களின் பாடல்களில் எருமையும் பசுவும் இடம் பெறுகின்றன; துள்ளி விழுகின்ற மீன்களின் செயல்கள் இங்குச் சுட்டப்படுகின்றன. பாண்டிய நாட்டுப் புலவர் பாடல்களில் ஆமை, நண்டு, கயல், இறால், வரால் மீன்கள், எருமை, கொக்கு, காஞ்சிமரம், கரும்பு, ஆம்பல், தாமரை ஆகியன புனைவு

பெறுகின்றன. சிந்திய கள்ளை ஆமை அருந்துதலும் (அகம்.361) இறால் மீன் கள்ளைக் குடித்தலும் புனைவு பெறுகின்றன. மீன்கள் கள்ளை அருந்தித் துள்ளித் திரிதலும் தூண்டிலில் அகப்பட்டு மலர்களைச் சிதைத்தலும் ஊர்ப் புனைவுகளால் விளங்குகின்றன. சங்கப் புலவர்களில் 'ஊர' என்று விளியமைத்துப் பாடும் ஒரே பெண்பாற்புலவர் அள்ளூர் நன் முல்லையார். எருமை வீட்டிலிருந்து வேலியைக் கொம்பால் தள்ளிச் சென்று பொய்கையுள் புகுந்து மீன்கள் அஞ்சித் துள்ளிட வள்ளைக் கொடியைச் சிதைக்கின்றது. இவர் பெண்பாற் புலவராதலின், எருமை வீட்டிலிருந்து கிளம்பிச் செல்வதாகப் புனைவை அமைக்கிறார்.

சங்கப் புலவர், மருதத் திணைப் பாடல்களில் தான் 'ஊரை' விளி மூலம் புனைந்திருக்கின்றனர். ஊரின் இயற்கையைப் புனைந்து பாடும் சங்கப் புலவர்கள், அதனைத் தனியே பாடிடச் சங்க இலக்கியக் கொள்கை இடந்தராது. ஆதலின்அதனை அகப்பாடலில் அமைக்க வேண்டுமாயின் ஏதேனும் ஒரு கூற்று வாயிலாகத்தான் பிணைக்க வேண்டும். ஊரின் புனைவைப் பாடலில் கோக்கத் தலைவனை ஊருக்கு உரிமையாளனாக்கிச் சங்கப் புலவர்கள் ஊரைப் புனைகின்றனர். இவ்வாறு கூற்று நிகழ்த்துபவள் தோழி என்பர் தொல்காப்பியர். இம்மரபு களவுக்குரியது. சங்கப் பாடல்களில் தலைவி பரத்தை ஆகியோர் கற்பில் கூறும் கூற்றுகளாக மரபு மாறிப்பாடப்பட்டிருக்கின்றன.

இந்தப் பாடு பொருளைப் பாடலில் அமைத்ததற்கு ஊரைச் சுட்டுதல் வேண்டாம்; தலைவனையே சுட்ட வேண்டும். ஆனால் அவனைச் சுட்டும்போது அவனுடைய பெயரையோ ஊர்ப் பெயரையோ தந்தை பெயரையோ சொல்ல முடியாது. சொன்னால் அகப்பொருள் மரபு அழிந்துவிடும். வேறு எவ்வாறு தலைவனைக் குறிப்பிட்டுப் பாடுவது? அவன் ஊரைப் புனைந்து - ஆனால் ஊர்ப்பெயரைச் சுட்டாது - ஊருக்கு உரிமையாளனாக்கிப் புலவர்கள் ஊரைப் புனைந்தனர். தலைவனுடன் இணைத்து ஊரைப் பாடின், ஊர், பாடுபொருளுடன் தொடர்புடையதாகிறது. பாடும் போது ஊரைப் புனைந்துபாடுகின்றனர். அப்புனைவில் நிலத்துக்குரிய செடியும் கொடியும் பிற பயிரினங்களும்

உயிரினங்களும் இடம் பெறுகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு படைப்பாளிகள் தங்களுடைய பாடுபொருளுக்கு இசைந்த கருத்தைப் புனைவிலும் வைத்துப் படைத்தனர். புனைவிருந்தால் தான் பிறிது பொருள் (உள்ளுறைப் பொருள்) அமையும், புனைவின்றேல் பிறிதுபொருள் கிட்டாது. அஃதின்று உள்ளுறை தேவையில்லை என்பது படைப்பாளியின் கருத்து. இதனால் ஊர்ப்புனைவுக்கும் உள்ளுறைக்குமிடையே நெருங்கிய தொடர்பமைகிறது. 'ஊர' என்ற விளி மூலம் ஊர்ப்புனைவும் உள்ளுறைப் பொருளும் அமைதல் தெளிவாகும். விளியாக அமைதலைக்கொண்டு ஊரின் இயற்கையைச் சங்கப் பாக்கள் தெற்றென வெளிப்படுத்துகின்றன.

2. அடைப்புனைவு

சங்கப் புலவர்கள் தங்கள் பாடல்களில் ஊர்களைப் பெயர் சுட்டியும் பெயர் சுட்டாமலும் புனைந்திருக்கின்றனர். மண்ணின் வளமும் காலத்தின் வருகையும் ஒன்றி உருவாகும் மலர்ச்சி, இயற்கைக் காட்சியாக ஊர்ப்புனைவாகிறது. பயிரினங்கள் தழைத்தலும் பூத்தலும் அவற்றுக்கிடையே உயிரினங்கள் கலந்து வாழ்தலும் பாடல்களில் புனைவாகின்றன. அவை ஊரின் நிலையை உணர்த்தும் புனைவுகள். பாடலில் ஊர்க்காட்சி மட்டும் அமையாது அவ்வூரின் உரிமையாளனான தலைவனும் இணைத்துப் பேசப்படுகிறான். தலைவனுக்கு உரிமை உடையதாகச் சுட்டும் ஊர்களைச் சங்கப்புலவர்கள் விரிவாகப் பல அடிகளான் புனைகின்றனர். அவ்வாறன்றிப் புலவர்கள் சிற்சில தொடர்களை அடையாக்கி ஊரின் தன்மையை விளக்குகின்றனர். இவை அடையாக அமைந்து ஊர்ப்புனைவைக் காட்டுகின்றன. இவற்றை 'அடைப் புனைவு' என்பது பொருந்தும். இவண் அடைச் சொல்லால் புனைவுக் காட்சி பயில்வோர் மனத்துள் கொண்டு வரப் பெறுகிறது.

அடையால் புனைவமைதல்

அடைப் புனைவில் அடைச் சொல்லே ஊரைப் பற்றி முழுமையான கருத்துகளை மனத்தில் எழுப்புகின்றன. மக்கள் வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் பொருளாழத்துடன் வழங்கும் அடைகள், சங்க இலக்கிய ஆட்சியில் பல்வேறு

கருத்து நலன்கள் நனி பொதிந்த அடைகளாகின்றன. இவை மக்கள் வழக்கில் தொன்று தொட்டு வழங்கி முழு அழுத்தமுடையனவாய் இலக்கியங்களில் கையாளாப் பட்டிருக்கின்றன. அடைச் சொல்லே, கற்போர் உள்ளத்தில் விரிவான புனைவுக் காட்சியை உள்ளத்தில் வடிவம் கொள்ளச் செய்கிறது.

ஓரடை/ஒருதொடர்ப்புனைவு

ஊரைப் புனையும் போது பல சொற்கள் அடையாக வந்தன. அத்தகைய அடைச்சொற்கள் சிலவற்றை எல்லாப்புலவரும் கையாண்டனர். அவை அந்தந்த ஊரின் பெருமையையும் நீர்மையையும் புலப்படுத்துகின்றன. சங்க நூல்களில் 'மூதூர்' என்ற தொகைச் சொல்லால் பல ஊர்கள் பாடல்களில் பேசப்படுகின்றன. ஊரின் தொன்மையை உணர்த்த மூதூர் என்ற பண்புத் தொகைச் சொல் பயன்படுத்தப் பெறுகிறது. ஊரின் பழைமையை உணர்த்த மரங்களையோ பிறவற்றையோ புனைந்து பாடின் பாட்டினடி எண்ணிக்கை கூடும். அப்புனைவு பாட்டின் மையக் கருத்துக்கு இடையூறாகவோ கருத்துச் சிதைவாகவோ தோன்றும்; ஆதலின் பல அடிகளான் விரிவாய் அமையும் ஊர்ப் புனைவு ஒரு தொடரான் அமைந்து பாட்டின் வடிவம் ஒழுங்குபட அமையத் துணையாகிறது. ஓரடைப் புனைவு அல்லது ஒரு தொடர்ப்புனைவு, விரிவான கருத்து வடிவத்தை ஏற்படுத்துவதால், படைப்பாளி அதனை விரிவாகப் புனைய வேண்டிய தேவை இல்லாமல் போய் விடுகிறது.

ஒரு தொடரான் ஊர்ப் புனைவு அமையாது பல அடிகளான் ஊரின் பழைமை காட்டும் கூறுகள் புனையப் பெறின் அவை ஊரை அடையாளம் காட்டி, அகப் பொருளில் இடத்தையும் இடத்திற்குரியவனையும் காட்டிக் கொடுத்துவிடும்; அவற்றை மறைக்கவே சங்கப் புலவர்கள் சிறு தொகைச் சொல்லாய்த் திகழும் தொடர்களைப் பாடலில் புனைவாகப் பயன்படுத்தினராதல் வேண்டும்.

கருத்துள்ள அடை

சங்க இலக்கிய அடைகள் கருத்துள்ள அடைகள். அவை பொருள் பொதிந்தவை. உண்மையானவை. கபிலர் கொடுமணம், பந்தர் என்று இரண்டு ஊர்களைப் பதிற்றுப்பத்தில் உரைப்பர்; ஆனால், இரண்டூர்களைப் பாடும் அவர் பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்; (பதிற்.67:2) என்று ஓரூருக்கு மட்டும் கபிலர் அடை மொழி கொடுத்துப் பாடுவர். ஒரு படைப்பாளி ஓரூரை அடையுடனும் இன்னொரு ஊரை அடையின்றியும் பாடுவது ஒப்பிட்டு ஆராயத்தக்கது. இதனால் சங்கப் புலவர் தாம் சுட்டும் ஊர்களுக்கெல்லாம் அடைபெய்து பாடுமியல்பினர் அல்லர் என்றும் வேண்டிய இடத்துக்குத்தக்க அடை பெய்து பாடும் புலமையர் என்றும் புலனாகும். தாங்கள் சுட்டும் ஊர் மூதூராக இருந்தால் தான் அவ்வூர்க்குப் புலவர்கள் அவ்வடையைக் கொடுப்பர்; ஒவ்வா அடைகளோ உண்மையில் அடைகளோ அல்லியற்கை அடைகளோ சங்கப்பாடல்களில் பயிலா; ஆதலின் சங்க இலக்கிய அடை, கருத்து நிறை அடையாக இலங்குகின்றது.[20]

ஒரு பாவில் இரு புனைவு

களவில் தலைவன் தன்னை விட்டுப் பிரியாமல் இருந்த நிலையை எண்ணிக் கற்பில் அது கழிந்தது என்று தலைவி வருந்துகிறாள். தலைவியின் துயரத்தைத் தோழி பாணனுக்கு உரைக்கின்றாள். அஞ்ஞான்று தோழி தலைவன் இருக்குமிடத்தை "மல்லல் மூதூர்" (அகம்.50:9) என்று சுட்டுகின்றாள். மூதூர் என்றமையாமல் பழைமையான ஊர் அவ்வூர் என்பது போதரும். அம் மூதூர், பரத்தையர் ஆரவாரம் மிக்க ஊர் என்பதைக் காட்ட 'மல்லல்' என்ற சொல்லை ஆசிரியர் மூதூருக்குப் பெய்து பாடுகிறார். இவ்வூர், தலைவன் ஊராயினும் தலைவனுக்கு உரிமையுடைய ஊர் என்று கருவூர்ப்பூதஞ் சாத்தனார் பாடிலர். பொருள் வளம் மல்கிப் பரத்தையர் வாழுமூர் என்று காட்ட "மல்லல் மூதூர்" என்று மூதூர் அடை பெறுகிறது. இவ்வடைத் தொடர் தலைவனிருக்கும் ஊரின் இயல்பை மெய்ப்புனைவாகச் சித்திரிக்கிறது.

அடை பெய்து பாடும்போது வேறொரு கருத்தை வெளிப்படுத்த புலவர் வேறு வகையாக இன்னொரு பகுதியைத் தனித்து அமைத்தலுமுண்டு. மேலே காட்டிய கருவூர்ப் பூதஞ்சாத்தனார் பாடலில் அவர் இருப்பை "மல்லல் மூதூர்" என்று அடை கொடுத்துப் பாடியபின்,

.............			எல்லி
மனைசேர்	பெண்ணை	மடிவாய்	அன்றில்
துணையொன்று	பிரியினும்	துஞ்சா	காண்

(அகம்.50:10-12)

என்று தலைவி இரங்கும் நிலையை நெய்தலுக்கு ஏற்ப ஊரை அன்றிலின் அன்பு நிலையால் அறிவுறுத்துகிறார். பறவை இனத்தின் இன்பக் காட்சி தலைவி வருந்தும் நிலையைப் புலப்படுத்துகிறது. தலைவன் இருந்த ஊரைத் தொடரால் புனைந்து காட்டியவர், தலைவி இருந்த இயற்கைச் சூழலை அவளுணர்ச்சிக்குத் தகப்புனைகிறார். ஒரே பாட்டில் ஒரே ஊரைத் தலைவன், தலைவி ஆகிய இருவர் உணர்ச்சிக்குத்தகக் கருவூர்ப்பூதஞ்சாத்தனார் வெவ்வேறாகச் சித்திரிக்கிறார். இரண்டு புனைவில் ஒன்று அடைப் புனைவாகவும் மற்றொன்று உயிரின உணர்வுப் புனைவாகவும் திகழ்கின்றன.

அடைக்கு அடை

அடை பெய்து பாடும் சங்கப் புலவர் ஒருருக்குப் பல அடைகளைப் பெய்து பாடுவதுமுண்டு. மூதூர் என்ற தொகைச் சொல்லே பழமையை உணர்த்துவது; அச் சொல்லுடன் மேலும் சில சொற்களைச் சேர்த்துப் புலவர் அதே கருத்தை **உணர்த்துவர்.** காக்கை பாடினியார் நச்செள்ளையார், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாடுழி அவன் தலைநகரை,

கல்பிறங்கு வைப்பிற் கடறரை யாத்தநின்
தொல்புகழ் மூதூர்

(பதிற்.53:4-5)

என்று இயம்புவர். மூதூர் என்று தொகைச் சொல்லுணர்த்தும் கருத்தையே அதன் முன்னிற்கும் 'தொல்புகழ்' என்ற அடைத் தொடரும் காட்டுகிறது. தொல்புகழ் மூதூர் என்ற தொடரில், ஒரே பொருள்தரும் இரண்டு சொற்கள் (தொல், மூது) ஊருக்கு அடையாகின்றன. இடையில் தொன்மைப் புகழைக் காட்டும் 'புகழ்' என்ற சொல் நிற்கின்றது. இத்தொடர் ஊரின் பழைமையை நன்கு வலியுறுத்த இரட்டை அடைபெற்று வருகின்றது. இவ்வடிக்கு முந்திய அடி, அம் மூதூர் அமைந்த மலை நாட்டுச் சுற்றுச் சூழலைக் காட்டுகிறது. மலைகள் உயர்ந்த நாடு; காடு சூழ்ந்த ஊர்; இங்குவேறு புனைவில்லை. ஊருக்குத் தொல், புகழ், முதுமை என்று மூன்று அடைகளைப் புலவர் அளித்துள்ளார்.

பெயர் சுட்டா மரபின் தாக்கம்

நச்செள்ளையார் பாடிய பாட்டுப் புறப்பாடலாயினும் அவர் பாவில் சேரவேந்தன் தலை நகர்ப் பெயரைச் சுட்டவில்லை; அவர் பாடிய மூதூர் எவ்வூர் என்று பாடல் பிறந்த காலத்தில் புலனாகியிருக்கும். ஆசிரியன் ஊர்ப்பெயரைச் சுட்டாமையால் கால இடைவெளியில் ஊர் எவ்வூர் என்பது மறைந்து போயிற்று. தலைவன் குடிப் பழைமையையும் நாட்டாட்சி உரிமைத் தொன்மையையும் உணர்த்த இந்த அடை பயன்படுகிறது.

அகப் பாடல்களில் பெயர் சுட்டலாகாது என்ற கோட்பாடு சங்கப்புலவரிடையே மிக ஆழமாகவே வேரூன்றியிருந்தமையால், அவர்கள் மக்கள் பெயரையோ ஊர்ப் பெயரையோ தங்கள் பாடல்களில் சுட்டாது போயினர். இக் கோட்பாட்டின் தாக்கத்தால், புலவர்கள் புறப் பாடல்களில் கூட ஊர்ப் பெயரை உரையாது பாடினராதல் வேண்டும்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை அவன் தன்னுடைய பழைமையான ஊரில் குளிர்ந்த பொய்கையில் மூழ்கி வேப்பந்தளிரைச் சூடி வந்தான் என்று இடைக் குன்றூர் கிழார் பாடுகிறார். இதனை, 'மூதூர் வாயிற் பனிக்கய மண்ணி' (புறம்.79:1) என்பர் ஆசிரியர். பாண்டியன் (தான் இருந்த

ஊரிலிருந்து) நீராடிப் போருக்கு வந்தான் என்ற குறிப்பால் அம் மூதூர் அவனுடைய கொடிநகர் என்று புலனாகும். இது பாண்டியன் நகர் என்பதால் மதுரை என்று கொள்வது சாலும். பாட்டுடைத் தலைவன் குறிப்பால் இம்மூதூர் மதுரை என்று தெரிய வருகிறதேயன்றிப் பாட்டில் வேறு அடையாளம் இல்லை.

இடைக்குன்றூர் கிழார், பாண்டியன் வெற்றியைப் பாட அவன் போருக்குப் புறப்பட்டதைக் கூறுகிறார். படைப்பாளியின் நோக்கம் அதுதான். அவர் ஊரைப் புனைந்தோ சிறப்பித்தோ பாடிலர். ஊரின் பழமை தோன்றிட ஒரு தொடரால் "மூதூர்' என்று ஆசிரியர் பேசுகிறார். மூதூர் என்பதற்கு ஈடாக மதுரை என்பதையே இவர் பயன்படுத்தியிருக்கலாம்; அச்சொல்லைப் பயன்படுத்துவதில் யாப்பு நிலையிலும் சிக்கல் எழாது; எனினும் இடைக்குன்றூர் கிழார் அவ்வாறு கூறாது பெயர் சொல்லுதலைத் தவிர்த்தார்.

அடைத்தொடரும் விரிவான புனைவும்

'மூதூர்' என்று அடைபெய்து ஊரைப் பாடுவோர், அந்த ஊரின் வெவ்வேறு வகையான இயல்பு தோன்ற அதனைப் பாடுகின்றனர். மூதூர் என்ற பொருள் பொதிந்த ஒரு சொல் நீர்மைத்தான பண்புத் தொகைச் சொல், மிகுதியான ஆட்சியால் தன் பொருளைத் தந்து நிற்க இயலாததாய்ப் போகவே புலவர்கள் அத்தொடருக்குக் கூடுதலாக அடை பெய்து பாடலாயினர். அவ்வடைகள் ஊரின் இயல்பு காட்டுவனவாய் அமைந்தன. ஊருக்கு இயற்கை அழகு போலச் செயற்கை அழகுமிருத்தல் வேண்டும்; தலைமையும் தொன்மையும் மிக்க ஊர்களில் இயற்கைக் கவினினும் செயற்கை வனப்பு மேலோங்கியிருத்தல் இயல்பு. ஊரின் வளர்ச்சிக்கும் செல்வச் செழிப்புக்கும் தக மாடங்களும் கூடங்களும் பொலிவுடன் திகழும். ஊரின் கட்டிட வளத்தையும் கவினையும் காட்டுமாறு 'மாட மூதூர்' என்ற அடைத்தொடர் பயன்படுத்தப்படுகிறது. ஐங்குறு நூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு என்ற நான்கு தொகை நூல்களில் அகநானூற்றுப் பாடல் ஒன்றிலே தான் "மாடமூதூர்' என்ற தொடர் பயிலுகிறது. இத்தொகைச் சொல்லைத் தன் பாடலில் மதுரை தத்தங் கண்ணனார் ஆளுகின்றார்.

வால் எயிறு ஊறிய நீரும் கமுகின் நீரும்

மதுரை தத்தங்கண்ணனார், தலைவி வாய் எச்சில் இனிமையைச் சொல்லத் தலைவன் ஒருவமையைச் சொல்லுவதாகப் பாடுகிறார். அவளுடைய வால் எயிறு ஊறிய நீருக்கு மூதூர் மதிற்புறத்துக் கமுகின் மூவாப் பசுங்காய் நீரை உவமித்தார். உவமையை விளக்க முற்பட்ட படைப்பாளிக்கு ஊரைப் புனைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. ஊர்ப்புறத்தே கமுகமரம் இருத்தலும் அது காய்த்தலும் அக்காய் நீரின் இனிமையும் ஊர்ப்புனைவில் இடம்பெற்றன. இதனை ஆசிரியர் அகப்பொருள் பாடலில் பதினான்கு அடிகளாகப் பாடுகிறார். அதன் கண் மாடமூதூர்,

ஆடுகொள் முரசின் அடுபோர்ச் செழியன்
மாட மூதூர் மதிற்புறந் தழீஇ

(அகம்.335:10-11)

என்றவாறு புனையப் பெறுகிறது. வெற்றி முரசு ஒலிக்கும் பாண்டியன் ஊர் என்று பாண்டியனுக்கு உரிமை காட்டி ஆசிரியர் பேசுகின்றார். அவர் ஊர்ப் பெயரைச் சொல்லாது ஊரை அறிய வைக்கிறார். இங்கு ஊர்ப் புனைவைக் கமுகமரம் இருத்தலைக் கொண்டு காட்டுகிறார். இதனால் ஊர்ப்புனைவு அமைகிறது.

மதிற்புறத்துக் கமுகு

கமுகமரம் மதிற்புறத்து விளங்கியது. இங்கு ஆசிரியர் ஊர்ப் பெயரை மதுரை என்று சுட்டிலர். "மூதூரின் மதிற்புறத்திருந்த கமுக மரங்கள் வெயிலால் வருந்தின; அவை குறிய இறைகளையுடைய திரண்ட அடியினையுடையவை; பல மலர்களின் குவியலைத் தொகுத்து மூடிக் கட்டிய ஓலைக்குடலை போலக் காய்த்த கமுகம் பாளை பற்று நீங்கி விரிந்தது. அது வாளை வடித்தாற் போன்ற வயிற்றினையுடைய பொதியிலிருந்து பருவம் வந்தபோது வெளிப்பட்ட இனிமை பொருந்திய அழகினையுடையது; ஆரம் போன்று விளங்கும் புதிய பூக்கள் கவரியில் வண்டு தேன் உண்ணுமாறு விரியும்; முத்துகளைப் போன்ற வெள்ளிய பூக்கள் பரந்து பலகறையைப் போன்ற ஒள்ளிய நிறத்தையுடைய ஆலங்கட்டி போல மகிழ்ச்சியை உண்டாக்கும். அழகு மிகப் பூவொடு வளர்தலுற்ற முற்றாத இளங்காயின் நீரைக்

காட்டிலும் இனிமையுடைய கூரிய (தலைவியின்) பற்களினிடத்தே அமிழ்தம் ஊறும் சிவந்த வாயினையும் ஒளி வீசும் வளையினையுமுடையவள் தலைவி" (அகம்.335:9-26).

தலைவியின் வாயிலூறிய நீர், மதுரைப் புறஞ்சேரிக் கமுகின் இளங்காய் நீரினும் இனியது என்பது புலவர் துய்த்துக்கண்ட முடிவு. இதனைக் குறிப்பாக உணர்த்த மாட மூதூரும் கமுக மரமும் புனைவு பெறுகின்றன. இதனால், இந்த அகநானூற்றுப் பாட்டில் புனைவாகப் பதினேழு அடிகள் கூடுதலாகின்றன. இப்பாட்டின் பாடு பொருளாகிய அகப்பொருளை முதல் ஒன்பது அடிகள் விவரிக்கின்றன. பாடுபொருளைக் காட்டிலும் ஊர்ப்புனைவு மிகுதியான அடிகளால் புனையப் பெற்றிருக்கிறது.

புனைவு விரிவும் நுணுக்கமும்

தலைவன் தான் பிரிய இருக்கும்போது தன் நெஞ்சினைக் கழறிச் செலவழுங்குகிறான். தலைவனைப் பொருள்வயிற் பிரியாது தடுக்கும் தலைவி நலனைக் காட்டுவதாக ஊரை ஒட்டிய புனைவு அமைகிறது. தலைவியால் தலைவன் பெறும் இன்பச் சிறப்பை உவமை வெளிப்படுத்துகிறது. இதனால் மூதூரை ஒட்டிய கற்பனை விரிவு பெறுகிறது. கலஞ்செய்வோன் கையகப்பட்ட மண் அவன் கருத்துக்கேற்ப வடிவம் பெறல் போலக் கவிஞர் கருத்துட்பட்டனவும் தம் கருத்துக்குத் தக வடிவம் எய்துகின்றன. மதுரைத் தத்தங்கண்ணனார் தான் வாழ்ந்த மதுரை ஊரின் மதிற்புறத்தை விவரிக்கின்றார்.

மதுரைத் தத்தங்கண்ணனார், மதுரை புறநகரில் வாழ்ந்து பல்வேறு கமுகம் பிஞ்சைச் சுவைத்து மகிழ்ந்தவராதல் வேண்டும். அவர் கமுக மரத்தையும் அம்மரமீன்ற பாளையையும் பாளை முதிர்ந்து விரிதலையும் கூர்ந்து நோக்கி இயல்பாகவும் நுணுக்கமாகவும் புனைகின்றார். ஒவ்வொன்றையும் விளக்கப் பொருத்தமான உவமைகள் பயிலுகின்றன. கமுக மரத்தை நாள் தொறும் கண்டு கூர்ந்து நோக்கி இவர் பாடியுள்ளார். இவர் தன் வாழ்விடச் சூழலில் கமுக மரத்தைப்

பயிரிட்டுப் பயன் துய்த்தவர் ஆவார். சங்க இலக்கியம் இயற்கை யோடுிணைந்த இலக்கியமாதலின் ஊர்ப்புனைவிலும் ஊரொடு ஊரியற்கையையும் இயல்புப்புனைவாகக் காட்டுகின்றது. 'மாடமூதூர்' என்ற செயற்கை வள அடையைத் தொடர்ந்து இயற்கைப் புனைவும் தொடருகிறது. மதுரைத் தத்தங்கண்ணனார் நுணுக்கமாகவும் விரிவாகவும் புறஞ்சேரியைப் புனைந்து ஊரின் இயல்பை உணர்த்துகிறார். அடையைக் கொண்டு ஊர்ப்புனைவை விளக்குவதுடன் அமையாது மரங்களைக் கொண்டும் ஊர்ப்புனைவை உவமை வழியாக இவர் காட்டுவது நோக்கற்பாலது. இது போல இன்னொரு வகையான அடைப்புனைவு பேரிசைமூதூர் என்பது இவ்வடைத் தொடராட்சி சங்கப் பனுவல்களில் பயின்று வரும் திறத்தைக் காட்டுகிறது. கோப்பெருஞ்சோழன், உறையூரில் வடக்கிருந்தான். பொத்தியார் அவனைப் பாடிய போது,

தேர்வண் கிள்ளி போகிய
பேரிசை மூதூர் மன்றங் கண்டே

(புறம்.220:6-7)

என்று உறையூர் என்ற பெயரைச் சுட்டாமல் மூதூர் என்றும் பெரும் புகழையுடைய ஊர் என்றும் ஊரை அடையாளங்காட்டுகிறார். அவலச்சூழலில் சோழனை நினைந்து பாடலில் ஊரின் ஆரவாரமோ இயற்கை செயற்கை வளங்களோ பாடலில் பாடுபெறவில்லை. பாடுகின்றவன் உணர்ச்சிக்கும் நோக்கத்துக்கும் தக்கவாறு அடைகள் அமைந்து ஊரின் நிலையைப் புனைந்திடத் துணையாகின்றன. பேரிசை மூதூர் என்ற அடை அகப் பாடல்களில் காணப்பட்டிலது. கபிலர், பதிற்றுப்பத்தில்

கொடுமணம் பட்ட நெடுமொழி யொக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர் (பதி.67:1-2)

என்பர். கொடுமணம், பந்தர் என்று இரண்டு ஊர்களைப் பேசுகின்ற கபிலர், பந்தர் என்ற ஊருக்கு மட்டும் 'பேரிசை மூதூர்' என்ற அடை அமைத்துப் பெரும் புகழையுடைய ஊர் என்று காட்டுகிறார். பல அடிகளான் விரிவாகப் புனைய வேண்டிய புனைவைப் 'பேரிசை' என்ற தொடரால் புலவர் காட்டுகின்றார்.

இன்னொருபுலவரான அரிசில் கிழார் கொடுமணம், பந்தர் என்ற இரண்டு ஊர்களையும்

கொடுமணம் பட்ட வினைமா ணருங்கலம்
பந்தர் பயந்த பலர்புகழ் முத்தம்
(பதிற். 74:5-6)

என்று பாடுவர். அரிசில்கிழாரும் கபிலரைப் போல இரண்டு ஊர்களையும் இணைத்தே உரைக்கின்றார். இப்புலவர் கொடுமணம், பந்தர் ஆகிய இரண்டு ஊருக்கும் அடை கொடுத்திலர். கொடுமணத்தைக் காட்டிலும் பந்தர் புகழும் முத்துவணிகமும் மிக்க நகராதல் வேண்டும். எனவேதான் கபிலர் ஊரின் முத்துவளச்சிறப்பைக் காட்ட 'பேரிசை மூதூர்' என்று குறிப்பித்தார். இவ்விரண்டு ஊர்களும் சேர நாட்டு ஊர்கள். பறம்பு நாட்டுக் கபிலர், பந்தர் என்னும் ஊருக்குச் சென்று வந்தமையால் அடை கொடுத்துப் பாடினராதல் வேண்டும்; கொடு மணம் கபிலர் சென்று வாராத ஊர்; எனவே அதனைக் கண்ணால் காணாமையால் புனைந்திலர். தன்னுடைய பாடல்களில் ஊர்ப் பெயரைச் சுட்டுகின்ற புலவர்கள், தங்கள் அனுபவத்தால் கண்டவற்றைத் தன் பாடு பொருள் நோக்கத்துக்கு ஏற்ப ஊர்ப் புனைவைக்காட்டுமாறு அடைகளைப் பயன்படுத்துகின்றனர் ✈ 22.

நற்றிணையில் 'ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்' (நற்.170:6) என்று முள்ளூர் அடைபெறுகிறது. இந்த அடை ஊரின் நீர்மையைக் காட்டுவதாகும். இம் முள்ளூரைக் கபிலர் 'மாயிரு முள்ளூர்' (நற்.291:7) என்பர். இவர் இன்னொரு பாட்டில், முள்ளூர்க் காட்டின் மணத்தைத் (குறு.312:3) தலைவிக்கு உவமிக்கின்றார். இவ்வாறு சங்க காலத்து முள்ளூர் பெரும் புகழுடையதாயிருந்தலின் அதனைப் பாடப் பேரிசை முள்ளூர் என்றார், கபிலர்.

ஊரின் அமைப்பையோ விளைவையோ உணர்த்தாத அடைத்தொடர் 'பேரிசை'. இத் தொடர் ஊரிலுள்ள பயிரினங்களையோ உயிரினங்களையோ விளக்கவில்லை. ஒட்டுமொத்தமாக - முழுமையாக - ஊரின் முழுமையான சோபையைக் காட்டுமாறு இத்தொடர் அமைகிறது; பல அடிகளாலும் பல

சொற்களானும் புனைய வேண்டியதனைத்தையும் உள்ளடக்கி இந்தத் தொடர் ஊரைப் புனைகிறது. 'பேரிசை' என்ற இந்த அடையைச் சங்கப் புலவர்கள் இமய மலைக்கும் அமைத்துப்பாடியுள்ளனர். 'பேரிசை/இமயம்' (குறு.158:4-5) என்று ஔவையாரும் 'ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்' (பதிற்.11:23) என்று குமட்டூர்க்கண்ணனாரும் ஆளுவர்.

3 சொந்தவூர்ப் புனைவு

புலவர்கள் தாங்கள் பிறந்த ஊர்களையே தங்கள் பெயர்களோடு அடையாக கொண்டிருக்கின்றனர். அந்த ஊர்களையே அவர்களுடைய சொந்தஊர் என்று கருதுவது தமிழாய்வு மரபு. ஊரைப்பெயருக்கு அடையாகப் பெற்ற புலவர்கள், தங்கள் ஊரைப் பாடல்களில் குறிப்பிடலும் குறிப்பிடாமையும் காணப்படுகிறது.

ஊரை அடையாகக் கொண்டு சங்கப் புலவர் பலர் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். அவர்கள் தங்கள் பெயரில் அடையாகப் பெற்ற ஊரினைத் தாங்கள் பாடிய பாடல்களில் பாடியுள்ளனரா என்றும் அவற்றை அவர்கள் புனைந்துள்ளனரா என்றும் ஆராயின் ஊர்ப் புனைவின் சிறப்பு வெளிப்படும். புலவர்கள் தங்கள் ஊரைப் புனையும் போது பெயர் சுட்டிப் புனைவர். அள்ளூர் நன்முல்லையார் என்ற புலவரின் பாடல்கள் இதற்குத் தக்க சான்றாகும். அடுத்து ஆவூரில் வாழ்ந்த ஐந்து புலவர்கள் ஆராயப் பெறுகின்றனர்; ஈண்டு ஆவூர் என்ற பெயர் பாடலில் ஆமூர் என்று வருதல் குறிக்கத்தக்கது. இவ்வாறு சொந்தவூரை அடையாகப் புலவர்கள் பெற்றிருப்பதும் அதனை அவர்கள் புனைந்துள்ளபாங்கும் இவண் ஆராயப்பெறுகிறது.

தன்னூர் பாடிய சங்கப் புலவர்கள்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்/நற்றவ வானினும் நனி சிறந்தனவே"* என்பது எல்லாக் காலத்துக்கும் நாட்டுக்கும் இனத்துக்கும் பொருந்திய முடிவாகும். பெற்றெடுக்க ஒரு தாயும் பிறந்து வளர ஒரு நாடும் அனைவர்க்கும் உரியன. தாயின்

பெயரை அறியாத மக்களும் பிறந்த ஊரைச் சொல்லாத புலவர்களும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றனர். 'உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார்' (அகம்.69) என்று தந்தை பெயருடன் பலரைச் சங்க நூல்களில் காணமுடிகிறது. ஆனால் தந்தையார் பெயர் பல புலவருக்கு அடைமொழியாக இல்லை; தாய் பெயர் அறியப் பெற்ற புலவர் சங்க நூல்களில் எவருமிலர் என்பது குறிக்கத்தக்கது. ஊர் அறியப்படாத புலவர்களும் சங்க நூல்களில் மிகுதி.

> "தாம் பிறந்த ஊர்ப் பெயரைத் தம் இயற் பெயரோடு
> சேர்த்து வழங்கினார் சிலரின் ஊர்ப் பெயர்களை மட்டுமே
> உணர்தல் இயலும்; அவ்வாறு அப்பெயர் கொண்டு
> நோக்கிய வழி, அவர்கள் பிறந்த பெருமை சால் ஊர்களாக,
> நூறு ஊர்ப் பெயர்களை அறிகிறோம்."[48]

இவ்வாறு ஊர்ப் பெயரோடு வழங்கிய புலவர்களில் பெண்பாற் புலவர்களும் உள்ளனர்; பெண்பாற் புலவர்களில் தங்கள் ஊரைப் பாடல்களில் புனைந்து பாடியவர்களும் உளர். புலவர் வாழ்ந்து வளர்ந்த மண்ணை ஆண்ட மன்னர்களின் தந்தை, தாய் இருவர் பெயரும் சுட்டப்படுகின்றன. ஆனால் அதனைப் படைத்த படைப்பாளி பற்றிய குறிப்பில்லை.

பாண்டிய நாட்டுப் பெண்பாற்புலவர்

பெண்பாற் புலவர்கள் தம்மூரைத் தங்கள் பாடல்களில் புனைந்திருக்கின்றனர். அவர்கள் கண்ணாற் கண்ட காட்சியும் கேட்டறிந்த கேள்வியும் துய்த்தறிந்த அனுபவங்களும் பாடல்களாயின. பாண்டி நாட்டுப் பெண்பாற் புலவரான அள்ளூர் நன் முல்லையார், ஊர்ப் பெயருடன் குறிக்கப் பெறுபவர்; இவர் பாடிய அகநானூற்றுப் பாடலில் நன்முல்லையார் தன்னூரைத் தலைவியின் ஒண்டொடிக்கு உவமையாகக் குறித்திருக்கிறார். அந்தப் பாடற்பகுதியாவது,

............			செறுநர்
களிறுடை	யருஞ்சமந்	ததைய	நூறும்
ஒளிறுவாட்	டானைக்	கொற்றச்	செழியன்

பிண்ட நெல்லி னள்ளூ ரன்னவென்
ஒண்டொடி நெகிழினு நெகிழ்க

(அகம். 46:11-15)

இவ்வூர்ப் புனைவில், அள்ளூரின் நெல் மிகுதியாக - குவியலாக - விளைவது தலைவி மிகுதியாகத் தொடியை அணிந்துள்ளமைக்கு உவமையாகப் புனையப்பட்டிருக்கிறது. பகைவரின் களிற்றுப் படையை வெல்லும் வாள் தானையையுடைய பாண்டியனுக்கு உரிமையான ஊர் என்று மண்ணின் விளைவுச் சிறப்பையும் அங்குவாழும் மக்களின் வீரச் சிறப்பையும் புனைவு உணர்த்துகிறது. புலவர் தன்னூரை உணவும் உணர்வும் மிக்க ஊராகப் பாடுகிறார்.

சங்கப் புலவர், ஊரைத் தலைவியின் அழகுக்கும் உறுப்பு நலன்களுக்கும் உவமிப்பதே பெரும்பான்மை. இப்பாட்டில், நன்முல்லையார் தன்னூரைத் தலைவியின் தொடிக்கு உவமித்துள்ளமை கருதற்பாலது. பாண்டிய நாட்டுப் புலவரான நக்கீரரும்[25] சோழநாட்டுப் புலவரான குடவாயிற்கீரத்தனாரும்[26] தலைவியின் தொடிக்கு ஊரை உவமித்துள்ளனர். தான் பிறந்த அள்ளூரை நன்முல்லையார் தொடிக்கு உவமையாகப் புனைந்திருக்கிறார்.

பெரும்பான்மையும் உடல் அழகுக்கே ஊர் உவமை சொல்லப்பட்ட நிலையில், தலைவி அணிந்த தொடிக்கு உவமை சொல்லியிருப்பதும் ஆராயத்தக்கது. சங்க காலத்தில் திருமண அணி தொடியேயாம். இது பிற்காலத் தாலியைப் போன்றது. சங்க காலத்தில் மங்கல அணி என்று குறிக்கப் பெற்றது தொடியே என்பர் அறிஞர் வ.சுப. மாணிக்கம்[27]. மங்கல அணி, தலைவன், தலைவி தொடர்பை உணர்த்துவதாய்த் தலைவி கையை அழகுபடுத்துகிறது. அத்தகைய சிறப்புடைய அணிக்கு, நன்முல்லையார், தான் பிறந்த அள்ளூரை உவமை உரைத்தார். அள்ளூர்க்குச் சிறப்பு நெல் வளம்; நெல் வளம் இன்றேல், ஊர் ஊராகாது. அது போலப் பெண்ணுக்குப் பெருமை தந்து சிறப்பிப்பது தொடி; அத்தொடியே கணவன் இருப்பையும் இறப்பையும் உணர்த்துவது. அள்ளூர்க்கு நெல்வளம் மங்கலம் ஆதல்போலத் தலைவிக்குத் தொடி மங்கல அணியாகின்றது. இந்த ஊர்ப்

புனைவு உவமை, தலைவியின் கற்புச் சிறப்பை உணர்த்துகிறது. 'பூத்த கரும்பின் காய்த்த நெல்லின்'[27] என்ற ஓரம் போகியார் கருத்தின் உள்ளுறைப் பொருள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. தலைவி புதல்வர் பெற்றுச் சிறப்படைதலையே 'பிண்ட நெல்லின்/அள்ளூர்' என்ற தொடர் வெளிப்படுத்துகிறது.

தலைவி தொடிக்கு அள்ளூர் நெல் வளத்தை உவமை சொல்லிப் புனைந்த நன்முல்லையார், பாடலின் முதற்பகுதியில் தலைவன் ஊரின் மருத வளத்தைக் குறிப்புப் பொருளுடன் இணைத்துப் பாடியுள்ளார். தலைவன் ஊர்ப் புனைவில் ஊர்ப் பெயர், அகப் பொருள் மரபின்படி, சுட்டப்படவில்லை[28]. ஊரினைப் புனைந்த பின்னர், 'ஊர' என்ற விளி பாடலில் அமைந்திருக்கிறது. இதனால் தலைவன் ஊர் என்ற உண்மை தெளிவாகப் புலனாகிறது.

சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
ஊர்மடி கங்குலி னோன்றளை பிரிந்து
கூர்முள் வேலி கோட்டி னீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுட னிரிய
அந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டூது பனிமல ராரு மூர

(அகம்.46:1-6)

இவ்வடிகள் முழுமையும் மருத நிலத்து வயற் காட்சியைப் புனைகின்றன. மருத நிலம் 'நீர் முதிர் பழனம்' என்றும் வைகறைப் பொழுது 'வண்டூது பனிமலர்' என்றும் மருதத்து உயிரினமும் பயிரினமும் எருமை, தாமரை, மீன், வள்ளைக் கொடி என்றும் இங்குக் காட்டப்பட்டிருக்கின்றன.

இந்த அகநானூற்று அடிகள் மருதநிலத்தையும் அங்குள்ள பழனக் காட்சியையும் சொல்லோவியமாக்கிக் காட்டுகின்றன. இங்கு ஊர்ப் பெயர் உரைக்கப்பட்டிலது. அள்ளூர் நன்முல்லையார் புனைவதால் அவர் வாழ்ந்த - கண்ட - ஊர்ப்புனைவாகவே இஃது அமையும்[29]. தலைவி - தோழி - ஆகியோர் உவமை

சொல்லும் மரபைத் தொல்காப்பியர்,

> கிழவி சொல்லின் அவளறி கிளவி
> தோழிக் காயின் நிலம்பெயர்ந் துரையாது[56] 30

என்பர். அள்ளூர் நன் முல்லையார் பாடல், மருதத் திணையில், தோழி கூற்றாகும்.

> தலைமகள் அதிகமாக வெளியில் திரிந்து அனைத்தையும் அறிந்தவள் அல்லளாதலின், அவள் அவளறிந்த கருப்பொருள்களை மட்டிலுமே அமைத்துக் கூறுவாள். தோழிக்கு அதிகத் தொலைவு செல்லும் பழக்கம் இல்லை யெனினும் தலைவி உறையும் நிலத்தைப் பற்றி நன்கு அறிந்திருப்பவளாதலின் அந்நிலத்திலுள்ள எல்லாக் கருப் பொருள்களையும் அமைத்து உள்ளுறை உவமம் கூறுவாள்[57] 31

எனவே, உள்ளுறையாகிய குறிப்புப் பொருளமைந்த இயற்கைப் புனைவைத் தோழி, தலைவி உறையும் நிலத்தைக் கூறியதாகும். பெண்பாற் புலவரான அள்ளூர் நன்முல்லையாரும் தலைவி போலத் தான் அறிந்ததும் உறைந்ததும் ஆகிய நிலத்தையே இப்பாடலில் புனைந்திருக்கிறார். கற்பொழுக்கத்தில் தலைவன் ஊரே, தலைவி ஊராகவும் அமையும்.

இப்பாட்டின் முற்பகுதியும் பிற்பகுதியும் வெவ்வேறு புனைவாக இருந்தாலும், மருத நிலத்தூரையே இரண்டும் உணர்த்துகின்றன. ஆதலின் இவை ஓரூர்ப் புனைவே என்பது உறுதி. தலைவனூராகப் புனைந்த போது, குறிப்புப் பொருளுடன் உள்ளுறையாகப் பாடப்பட்டது. பிற்பகுதி தலைவி தொடிக்கு உவமையாக ஊர்ப் பெயர் சுட்டிப் பாடப்பட்டது. இவ்வாறு தலைவன், தலைவியர் ஊர் ஒன்றே ஆகவும் பாடுபொருள் அமைப்புக் கருதி இரண்டு பகுதியாக்கப்பட்டிருக்கின்றது. தலைவன் ஊர்ப் புனைவில் மருதத் திணை நிகழ்ச்சிகள் பேசப்படுகின்றன. அப்புனைவு, உயிரினத்தாலும் பயிரினத்தாலும் நீர் வளத்தாலும் நெல் வளத்தாலும் அள்ளூர் சிறந்திருத்தலை வெளிப்படுத்துகின்றது.

ஒரே பாடலில், தலைவன் ஊர்ச் சிறப்பைக் காட்டவும், தலைவன் பெருமையை உணர்த்தவும் மன்பதையில் ஆணின் மேலாண்மையை வெளிப்படுத்தவும் அள்ளூர் நன்முல்லையார் தலைவன் பற்றிய பகுதியில் உள்ளுறை அமைத்து அப்பகுதியை விரிவாகப் புனைந்திருக்கிறார். தலைவி கையிலணிந்துள்ள தொடிக்கு அள்ளூரை உவமித்தல் உள்ளுறை உவமையாகாது ஏனை உவமையாகவே விளங்குகின்றது[32]. ஊர் பற்றிய இரண்டு புனைவுகளும், பாடலில் உவமையாக உணர்த்தப்பட்டிருக்கின்றன.

பாடலின் முற்பகுதியில் வரும் மருதப் புனைவின் தொடர்ச்சியான வயல் விளைவான நெல்வளம் பிற்பகுதியில் தலைவிக்கு உவமையாகிறது. இங்ஙனம், மருதநிலத்தூராகிய அள்ளூர் - ஒரே ஊர் - புலவர் பிறந்த ஊர் - இப்பாட்டில் புனையப்பட்டிருக்கிறது. பெண்பாற் புலவர் ஒருவர் தன்னூரைப் பெயர் சுட்டியும் சுட்டாமலும் உவமையாக்கியுள்ளார்.

தலைவன் ஊரைப் புனைந்துரைக்கும் புலவர், அப்பகுதியை இயற்கைப் புனைவாகமட்டும் அமைக்காது, அப்புனைவில் அப்பாட்டின் உரிப் பொருளை வலியுறுத்தும் இன்னொரு கருத்தும் இருக்குமாறு புனைந்திருக்கிறார். எருமை ஒன்று சேற்றில் நிற்றலை வெறுத்துச் சிவந்த கண்களையுடையதாய் விளங்கிற்று; ஊரார் துயின்ற இரவில், அவ்வெருமை, தன் கட்டை அறுத்துக் கொண்டு கூரிய முள்வேலியைத் தன் கொம்பினால் நீக்கிவிட்டு நீர்மிகு பழனத்துள் புகுந்தது. அதனால் அங்கிருந்த மீன்கள் எல்லாம் ஓடின; அழகிய உட்டுளையையுடைய வள்ளைக் கொடியை அந்த எருமை மயங்கச் செய்து, வண்டுகள் உள்ளிருந்து ஊதும் தாமரையின் குளிர்ந்த மலரை நிறையத் தின்றது. இத்தகைய இயற்கை வளம் நிறைந்தது தலைவன் ஊர்.

ஊரன் செயல்படும் வண்ணம் எருமை ஒன்று மருத நிலத்தில் திரிகின்றதாக ஊர்ப் புனைவில் நன் முல்லையார் பாடுகின்றார். இது வயல் சார்ந்த ஊர்களில் நடைபெறும் இயல்பான நிகழ்ச்சி; உண்மையியல் தழுவிய இந்நிகழ்ச்சி, மிகை

நவிற்சியோ அல்லியற்கை நிகழ்ச்சியோ அன்று. இது பாட்டுக்குரிய பாடுபொருளை - உரிப்பொருளை - ஊடலை - வலியுறுத்துமாறு அமைக்கப் பெற்றிருக்கிறது.

தலைவன் தானே கள வொழுக்கத்தில் மணந்த தலைவியை விடுத்தான்; தன் நாணத்தை அறுத்துக் கொண்டு (விடுத்து) பரத்தையர்க்குக் காவலாகிய விறலியையும் பாணனையும் நீக்கிப் பரத்தையரின் தோழியரும் விலகிஓட, அப்பரத்தையரின் தாயரையும் மயக்கித் தன்னை ஏற்றுக் கொள்ளாத பரத்தையரைத் தலைவன் நுகர்ந்து திரிகின்றான். தலைவன் பரத்தையருடன் திரிகின்ற வழுவிய ஒழுக்கத்தை, வெள்ளிடை மலை என இடித்துரைக்காது நன் முல்லையார், ஊர்ப் புனைவால் அறிவுறுத்துகிறார். ஓராடவனைப் பெண்ணொருத்தி நேருக்கு நேர் இடித்துரைக்க இயலாத பெண்மைப் பண்பு நன்முல்லையார் வழி புலனாகிறது. அவ்வாறு பாடாத ஒரு பெண்பாற் புலவரின் இலக்கிய நாகரிகமும் குறிக்கத் தக்கது. த லை வ ன் கற்பறம் வழுவியமையைத் தோழி அறிந்து

யாரை யோநிற் புலக்கேம் வாருற்று
உறையிறந் தொளிருந் தாழிருங் கூந்தல்
பிறரும் ஒருத்தியை நம்மனைத் தந்து
வதுவை அயர்ந்தனை யென்ப அஃதியாங்
கூறேம் வாழியர் எந்தை

(அகம்.46:7-11)

என்று பேசுகின்றாள். தலைவன் புறத்தொழுக்கம் தோழியாலும் வெளிப்படச் சொல்லப்படுகின்றது. ஆயினும் தலைவனுடைய பரத்தையர்த் தொடர்பு இங்குக் கண்டிக்கப்படவில்லை. தோழி, குறிப்புப் பொருளை - உள்ளுறை உவமையை - அமைத்துத் தலைவனை விளிக்கும் போது அவனுடைய அல் அறச் செயற்பாட்டை இடித்துரைக்கிறாள். இவ்வாறு ஊர்ப் புனைவு, அறிவு கொளுத்தும் குறிப்புடன் சங்கப் புலவர்களால் பாடப்பட்டிருக்கிறது; ஊரைப் புனைகின்ற அள்ளூர் நன்முல்லையார், தான் பிறந்த ஊரை இப்பாட்டில் புனைந்திருக்கிறார். தன்னுடைய சொந்தவூர் என்பதால் மிகையாகவோ மிகுதியாகவோ புலவர் புனைந்திலர்.

ஆவூர் புலவர்கள்

சங்க காலத்து ஊர்களில் ஆவூர் குறிக்கத் தக்க சால்புடைய ஊர். இவ்வூரில் காரியாற்றுத் துஞ்சிய சோழன் நெடுங்கிள்ளி தங்கியிருந்த போது சோழன் நலங்கிள்ளி இதனை முற்றுகையிட்டான். வரலாற்றுப்புகழ்பெற்ற இந்த ஊரில்

ஆவூர் கிழார்

ஆவூர் கிழார் மகனார் கண்ணனார்

ஆவூர் காவிதிகள் சாதேவனார்

ஆவூர் மூலங்கிழார்

ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார்

என்று ஐந்து புலவர்கள் வாழ்ந்திருக்கின்றனர். ஆவூர் அழகியார் என்று பாடமும் ஆவூர் கிழார்க்குக் காணப்படுகிறது.

ஆவூர் கிழாரும் அவர் மகனும்

ஆவூர் கிழார் ஒரு புறநானூற்றுப் பாடல்பாடியவர். இது வாகைத் திணையில் வல்லாண் முல்லைத்துறை. இதில் ஆவூர் கிழார் ஊரைப் பற்றிப் பேசுகிறார். ஆனால் அவர் ஊர்ப் பெயரைச் சொல்லவில்லை. "ஆவூர் காவிரியின் தென் கரையில் உள்ளதோர் ஊர்; அது மருத வளம் நிறைந்தது. தொண்டை நாட்டில், திருவண்ணாமலைக்கு அணித்தே ஓர் ஆவூர் உளது; அது முல்லை வளம் நிறைந்தது. ஆவூர் கிழார், தாம் பாடிய பாட்டில், முல்லை மருதம் ஆகிய இருதிணை இயல்புகளையும் எடுத்தியம்பியுள்ளாராதலின், இவர் பிறந்த ஆவூர் எந்நாட்டகத்தது என்பதை எளிதில் அறிதற்கில்லையென்றாலும், இவர் மருதத் திணையினும், முல்லைத் திணையினையே சிறிது மிகுதியாக விரித்துரைத்துள்ளாராதலாலும், இவர் மகனாகிய கண்ணனார், முல்லையைச் சார்ந்து நிற்கும் திணையாகிய குறிஞ்சித் திணையினையே பாடியுள்ளாராதலாலும் இவர் ஊர், முல்லை வளம் நிறைந்து, திருவண்ணா மலைக்கு அணித்தே விளங்கும் தொண்டை நாட்டு ஆவூராகவே இருத்தல் கூடும்"[59] (33)

ஔவை. சு. துரைசாமி பிள்ளையும் இதே கருத்தைத் தெரிவிப்பர். ஆனால் புறநானூற்றுப் பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாதையர்,

> ஆவூரென்னும் பெயருள்ள ஊர்கள் பல இருத்தலின் இந்த ஆவூர் இன்ன இடத்திலுள்ள தென்று தெரிந்து கொள்ளக் கூடவில்லை; ஆனாலும் மருத நிலத்தின் வளம் இவர் பாடலிற் கூறப் பெற்றிருத்தலின், இது சோழ நாட்டிற் காவிரியின் தென் கரையிலுள்ள ஆவூராக இருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றது[34]

என்று எழுதுவர். ஆனால் பாடலில் ஊர்ப் பெயர் இல்லை. இப்பாடலில் ஆவூர் கிழார், முல்லை, மருதம் ஆகிய இரண்டு நிலத்தைப் புனைகிறார். இரண்டும் ஒருங்கே ஓரூரில் உள்ளன அல்ல; மருதநிலம், பகைஞனுக்கு அஞ்சுகின்றவனுடைய ஊர்; முல்லை நிலம் பகைவனுக்கு அச்சத்தைத் தருகின்ற வீரனுடைய ஊர்; முல்லை நிலத்தை ஊர் என்றும் மருத நிலத்தைத் தன்பணை என்றும் ஆவூர் கிழார் பேசுவர்; எனவே இருவகையான புனைவு இங்கு அமைகிறது. வல்லாண் முல்லைத்திறம் காட்டும் வீரன் ஊரே புலவர் ஊராகும். அஞ்சும் பகைவன் ஊர் புலவர் ஊரன்று. புறநானூற்றுப் பாடல்களில் போரிடும் இரு திறத்தாரையும் அவர் தம் இடத்தையும் இரண்டு வகையாகப் புனையும் போக்கு உள்ளது.

வல்லாண் முல்லை என்பது ஒரு வீரன் இல்லையும் ஊரையும் கூறிச் சிறப்பிப்பதாகும். எனவே இப்புறத்துறை ஊரைச் சிறப்பிக்கச் சிறந்த துறையாகும். 'நிலத்தைக் குத்திக் கிளைத்தமையால் மண் பொருந்திய காளையின் கொம்பு போலக் கள்ளியின் முட்களையுடைய அடியில் மண் பொருந்தியிருந்தது. புதிதாக விளைந்த வரகை அறுத்துப் போட்ட அரிகால் பார்க்கும் எலியைப் பிடிக்கப் புன் தலைச் சிறார் கையில் வில்லெடுத்து ஆரவாரிப்பர். அவ்வோசை கேட்டுப் பெருங்கண் குறுமுயல், கரிய புறத்தையுடைய மட்கலங்கள் உருண்டுடைந்து கெட மன்றத்திலே பாய்ந்தோடும் வன்புலத்தின் கண்ணே உள்ளது[35]. இதுவே புலவர் பாடுகின்ற பாட்டுடைத் தலைவனின் ஊர்ச்சிறப்பு.

இதனைத் தொடர்ந்து பகைஞன் நாட்டைப் புலவர் புனைகின்றார். கரும்பாட்டும் ஆலையின் ஒலியைக் கேட்டு அயலிலுள்ள நீர் நிலையில் இருக்கும் இருஞ்சுவல் வாளை மீன் துள்ளிப் பாயும் அழகிய இடத்தையுடைய குளிர்ந்த மருத நிலத்தூர்களை ஆளுகின்ற வேந்தர்க்குத் தூக்கத்தைக் கெடுக்கும் வேலையுடையவன் ஊர். ஒரே பாட்டில் இரண்டு இடங்கள் இரண்டு திணையாகப் புனையப்படுகின்றன. ஆவூர் கிழார் புனைவு, அந்த நிலத்துக்குப் பொருந்தியதாகவும் இயல்பாகவும் உண்மையியலுடையதாகவும் காணப்படுகிறது. யாருடைய பெயரையும் சுட்டிக் கூறாமல் சங்கப் புலவன் பாடலைப் புனைந்திருக்கின்றான்.

கொடுமுடியின் ஆமூர்

ஆவூர் கிழார் மகனார் கண்ணனார் பாடிய ஒரே பாடல் குறிஞ்சியைப்பாடும் அகநானூற்றுப் பாட்டு (202). கண்ணனார் என்பதற்குக் கண்ணத்தனார் என்றும் பாடமுண்டு. தலைவனை 'நாட' என்று விளிக்கும் முகமாகத் தலைவன் நாட்டைக் கண்ணனார் புனைகின்றார். ஊர்ப் பெயரோ ஊரோ பாடலில் சுட்டப்படவில்லை.

வயங்குவெள் ளருவிய குன்றத்துக் கவாஅன்
கயந்தலை மடப்பிடி இனனே மார்ப்பப்
புலிப்பகை வென்ற புண்கூர் யானை
கல்லகச் சிலம்பிற் கையெடுத் துயிர்ப்பின்
நல்லிணர் வேங்கை நறுவீ கொல்லன்
குருகுஊது மிதியுலைப் பிதிர்விற் பொங்கிச்
சிறுபன் மின்மினி போலப் பலவுடன்
மணிநிற இரும்புதல் தாவும் நாட

(அகம்.202:1-8)

என்பது குறிஞ்சிப் புனைவு. அருவி பாயும் மலைச் சாரல்; அங்கு மெல்லிய தலையினையுடைய பெண்யானையுடனே இன்பமடையப் புலியை வென்ற ஆண் யானை, பக்க மலையில் தும்பிக்கையை உயர்த்திப் பெருமூச்சு விடுகின்றது. அதனால் வேங்கை மரத்தின் மணமுள்ள பூங்கொத்துகளின் பூக்கள், கொல்லன் துருத்தியில் எழும் தீப்பொறி போலப் பொங்கி மின்மினிப் பூச்சிப் போல நீல

மணி போன்ற நிறமுடைய புதரில் பரவிவிழும். இவ்வாறு ஆசிரியர் நாட்டைப் புனைந்திருக்கிறார். இது தலைவனுடைய நாட்டின் இயல்பு.

இந்த நாட்டிலிருந்து நடு இரவில் தலைவன் தலைவியைக் காண வருகின்றான். பாம்பின் தலை துண்டாகிப் போமாறு இடி முழங்கிடக் குன்றாத உள்ளத்துடன் வேலே துணையாகக் கனை இருள் பரந்த கல்லதர் சிறு நெறியில் தலைவன் வருகின்றான் (அகம் 202:10-13). இது தலைவன் வரும் சிறுநெறிப் புனைவு. இப்புனைவு, காலத்துக்கும் நிலத்துக்கும் பொருந்த அமைகின்றது.

தலைவன் நாடு விரிவாகப் புனையப்பட்டிருக்கிறது; தலைவன் வருகையால் ஊரில் அலர் எழுதலைத் தோழி, 'புலிப்பகை வென்ற யானை உயிர்ப்பின் வேங்கைவீ மின்மினி போலப் புதல் தாவும்' என்ற உள்ளுறையால் வெளிப்படுத்துகிறாள். ஆவூர் கிழார் மகனார் கண்ணனார் நாட்டின் பெயரையோ சிறுநெறி போகும் ஊர்ப் பெயரையோ பாட்டில் குறித்திலர்.

ஆவூர் கிழார் என்ற புலவர் தந்தையார்; இவர் மகனார் ஆவூர்க் கிழார் மகனார் கண்ணனார். இருவரும் தங்கள் பாடல்களில் இரண்டு வகையாகப் புனைவை அமைத்திருக்கின்றனர். தந்தை புறப் பெருளில் பாடினார்; மகனோ அகப் பொருளில் குறிஞ்சியை மட்டும் புனைந்து பாடினார்.

'ஆவூர்க் காவிதிகள் சாதேவனார்' அகநானூற்றில் ஒன்றும் (159) நற்றிணையில் ஒன்றும் (264) ஆக இரண்டு பாடல் பாடியவர். அகநானூற்றுப் பாட்டில் இவ்வாசிரியர் தன்னுடைய ஊரை - ஆமூரைக் - குறிக்கின்றார். பாலைக்கு ஏற்பச் சுரன் - கவலை - புனையப்படுகிறது. பாதையைப் பல அடிகளான் இவர் புனைவர்.

'வானிடத்தே சிறந்த இடி ஒலிக்கும் நெடிய உச்சியை உடையதும் நறிய பூக்களையுடைய சாரல்களையுடையதுமான குறும் பொறை என்னும் மலை;

அம்மலைக்குக் கிழக்கின் கண் உள்ளது ஆமூர்; வில் கெழு தடக்கை வெல்போர்ச்சேரனுடைய வண்டுகள் மொய்க்கும் கன்னத்தினையுடைய சிறு கண் யானையின் பூண்பூண்ட பெரிய கோட்டினை ஒடியும்படி அழித்தவன் கொடுமுடி என்பான். அவன் காத்து வருகின்ற ஊர் ஆமூர்' - என்று புலவர் நவில்கின்றார். 'நெடுமதில்/சேண்விளங்கு சிறப்பின் ஆமூர்' (அகம்.159:18-19) என்று ஊரை மதிலுள்ள ஊராகக் காட்டுகிறார்; வேறு புனைவு இல்லை.

அகப் பாடலில் ஆமூர் உடைமையாளனைச் சிறப்பிக்கு முகமாக அமைந்து எவ்வகைப் புனைவுமின்றியுள்ளது. ஆமூர், சிறந்த ஊராக இருத்தலினால் தான் அதை இவர் குறிக்கின்றார். சங்ககாலப் புலவர்கள், 'அரசருடன் கொண்டிருந்த நெருங்கிய உறவின் காரணமாக அவர்களின் புகழை வாழவைக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டு'[38] தங்கள் பாடல்களில் புரவலரையும் அவர்தம் ஊர்களையும் பாடினர். இங்குப் பாடிய ஊர் புலவன் ஊராகவும் விளங்குகிறது.

இவருடைய இன்னொரு பாடல் நற்றிணையிலுள்ளது. ஆவூர்க் காவிதிகள் சாதேவனார் நற்றிணையில் (264) ஒரு பாடல் பாடியவர். இப் புலவர் பெயரை ஒளவை சு. துரைசாமி பிள்ளை 'ஆவூர்க் காவிதி மாதேவனார்'[39] என்று பதிப்பித்துள்ளார். இப்புலவர் 'நித்த விநோத வள நாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூர்' என்ற ஊரினர். இவ்வூர் 'பசுபதி கோயில்' என்று இன்று வழங்குகின்றது. எனவே இந்த ஆவூர் முற்கூறிய ஆவூரிலிருந்து வேறூராக அறிஞர்கள் கருதல் வெளிப்படும்.

இந்நற்றிணைப்பாட்டு, தலைவன் கூற்று. தலைவியை உடன் போக்காகக் கூட்டிச் செல்லும் தலைவன் ஊர் காட்டி வற்புறுத்துகின்றான். தலைவியின் ஊரையும் நாட்டையும் கடந்து சென்ற விட்டனர் தலைமக்கள்; தன்னொடு வந்த தலைவியை நோக்கித் தன்னூர் அருகிலுள்ளது என்று ஊரைச் சுட்டிக் காட்டி மகிழ்ந்துத் தலைவன் கூறுகின்றான்.

....... எல்லின்று பொழுதே
வேய்பயில் இறும்பின் கோவலர் யாத்த

ஆபூண் தெண்மணி இயம்பும்

உதுக்காண் தோன்றுமெம் சிறுநல் ஊரே (நற்.264:6-10)

இப்பாலைத் திணைப் பாடலில் மாலைக் காலம் சுட்டப்படுகிறது. மூங்கில் நிறைந்த மலையில் கோவலர்கள் தங்களுடைய பசுக்களுக்குக் கட்டிய மணி ஒலிக்கின்ற சிறிய நல்லூர் தலைவன் ஊர். மலையையும் முல்லை நிலக்கோவலரையும் பாடல் கூறுகிறது. ஊர்ப் பெயரைப் பாடல் சுட்டவில்லை. சிறு பொழுதைச் சுட்டி அதற்குப் பொருந்துமாறு இவர் ஊரைப் புனைகின்றார். எந்த ஊர் என்று அறியுமாறு இவர் ஊரைப் புனையவில்லை. கொடுமுடியின் ஆமூரைக் குறிஞ்சியூராகப் பாடியவர், இங்குத் தலைவனூரை முல்லையூராகப் பாடுகின்றார். அகநானூற்றில் ஊர்ப் பெயரைக் கூறியவர் நற்றிணையில் ஊர்ப் பெயரை உரைத்திலர்.

ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார், அகநானூற்றில் முல்லைத் திணைப் பாடலைப் (224) பாடியவர். இவர் இயற்பெயர் சாத்தனார்; இவர் பாடல் வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது. இப்பாட்டின் பெரும்பகுதி குதிரையின் செலவையே பேசுகிறது. காண்டகப்/ புதுநலம் பெற்ற வெய்து நீங்கு புறவில் நெறிநடை மரைக் கணம் இரிய' (224:9-11) என்று மிகச் சுருங்கியதாக முல்லை நிலப் புனைவு அமைகிறது; ஆனால் ஊர் சுட்டலோ புனைவோ இல்லை. தலைவன் தேர்ப்பாகற்குச் சொல்லுவதாக இக் கிளவி அமைந்தமையால் தான் ஊர்ப் புனைவு இடம் பெற்றிலது. இப் பாட்டின் முதல் பதினைந்தடிகள் தலைவன், தலைவியை நாடிவரும் நிலையையே பாடுகின்றது. இப்புலவர் எவ்வூரினர் என்று அறியுமாறு பாடலில் ஊர் புனையப்பட்டிலது.

ஆவூரில் வாழ்ந்த புலவர்களில் மிகுதியான பாடல்கள் பாடியவர் ஆவூர் மூலங்கிழாரே. 'இவர் பெயர் மூலம் என்னும் நாண் மீனால் அமைந்த பெயராகு மென்றும் ஆவூர் மூலம் என்பது ஓர் ஊரின் பெயராகுமென்றும் கூறப்படுகின்றது'[66] 40 இவர் புறநானூற்றில் எட்டுப் பாடல்களும் (38, 40, 166, 177, 178, 196, 261, 301) அகநானூற்றில் மூன்று பாடல்களும் (24, 56, 361) ஆகப் பதினொரு பாடல்கள் தொகை நூல்களில் பாடியுள்ளார்.

ஆவூர் மூலங்கிழார், சோழன் குள முற்றத்துத்துஞ்சிய கிள்ளி வளவனைப் புறப்பாடலில் பாடினார். இப்பாட்டில் அவனுடைய இயல்புகளைச் சுட்டிப் பாடுகிறாரேயன்றி அவன் நாட்டைச் சுட்டுமாறு அவன் தலைநகரைச் சொல்லிப் பாடவில்லை (புறம்.38). இன்னொரு புறநானூற்றுப் பாடலில்,

ஒருபிடி படியுஞ் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே (புறம்.40:10-11)

என்று அவன் நாட்டு மண்ணின் விளைச்சலையே புகழுகின்றான் புலவன்; வேறு இயற்கைப் புனைவுகள் இல்லை.

சோணாட்டுப் பூஞ்சாற்றூர் பார்ப்பான் கௌணியன் விண்ணந் தாயனைப்பாடுகின்ற ஆவூர் மூலங்கிழார், அவன் கொடை பெற்றுத் தான் ஊர் சென்று வாழ்வதாகப் பாடுகின்றார்.

....... குடாஅது
பொன்படு நெடுவரைப் புயலேறு சிலைப்பிற்
பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்
தண்புனற் படப்பை யெம்மூ ராங்கண் (புறம்.166:26-29)

'மேற்கிலிலுள்ள குடகுமலையில் இடி முழங்கின் காவிரியில் நீர் பெருகி உலகைப் புரக்கும் குளிர்ந்த புனற் பக்கத்தையுடைய எம்மூர்' என்பர் ஆவூர் மூலங்கிழார்? ஆனால் அவர் ஊர்ப் பெயரைச் சுட்டிலர்.

மல்லிகிழான் காரியாதியைப் பாடுகின்ற ஆவூர் மூலங்கிழார் அவனுடைய இயல்புகளைச் சுட்டிப் பாடுகின்றார் (புறம்.177). 'காரியாதி யின் அரண்மனையில் உறவினர் எனின் யார்வேண்டுமாயினும் புகலாம்; போராயின் திங்களாலும் புகமுடியாத எந்திரப் படு புழையினையுடையது. அவ் வாயிலில் மறவர் கள்ளை ஒருவருக்கொருவர் மாறு மாறாக நீட்டி உண்டனர். மிகுதியாக உண்டு செருக்கி விடாய் மிக்குப் புளிச்சுவையை விரும்பிய மதத்தாற் சிவந்த கண்ணையுடைய ஆண் மக்கள் இனிய புளிப்பையுடைய களாப்பழத்துடனே துடரிப் பழத்தைத்தின்பர். அவற்றில் வெறுப்புத் தோன்றின் ஆற்றங்கரை மரத்துப்

பைந்தேன் அரித்தொழுகுகின்ற நல்ல காட்டாற்றின் மணற் குன்றில் ஏறிக்கரிய நாவற்பழத்தைப் பறித்துண்பர். பிணங்கிய காட்டையுடைய குடநாட்டின் கண் மறவர் எய்து கொண்டு வந்த எய்ப்பன்றியின் கடியப் பட்ட தசையையும் நிணமிக்க புதிய வெண் சோற்றுக் கட்டியையும் வருவார்க்கெல்லாம் சொரிய இரும்பனங் குடையில் தருவர்' (74)

ஆவூர் மூலங்கிழார், ஆதியின் பெயரைப் பாடலில் சுட்டினார்; அவனுடைய நெடுநகரைக் (கோயில்) குறித்தவர், ஊர்ப் பெயரைச் சொல்லவில்லை. ஊரில் இரவலரை ஆதி வரவேற்றுப் போற்றி உணவளித்தலை மூலங்கிழார் பாடுகிறார். 'பெரும் புலர் வைகறை' என்று பொழுதைப் பாடுகின்றார், புலவர். ஊரின் மரம் செடி கொடிகளைப் புனைகின்ற புலவர், அதன் இயற்கை அழகைப் புனையவில்லை. வருவோர்க்கு உணவு வழங்குகின்ற உண்டி கொடுக்கும் உயரிய அறத்தையே புனைகின்றார். இயற்கையைப் புனையும் நிலை மாறி மனையில் விருந்தோம்பும் செயற்கைப் புனைவு இவண் புனையப்பட்டிருக்கிறது.

ஆவூர் மூலங்கிழார், பாண்டியன் கீரஞ்சாத்தனைப் பாடிய புறநானூற்றுப் பாடலில் (178) அவனுடைய பெயரைச் சுட்டுகிறார். ஆனால் அவனுடைய ஊர்ப் பெயர் இல்லை. அவ்வீரனுடைய மனை முற்றத்தை,

கந்துமுனிந் துயிர்க்கும் யானையொடு பணைமுனிந்து
காலியற் புரவி யாலு மாங்கண்
மணன்மலி முற்றம்

(புறம்.178:1-3)

என்றியம்புவர். அவனுடைய வீரர் உள்ளூரில் கூறிய வஞ்சினத்தைக் 'கள்ளுடைக் கலத்தருள்ளூர்க் கூறிய' (புறம்.178:8) என்றுரைப்பர். ஆவூர் மூலங்கிழார் மல்லியாதியின் விருந்தோம்பற் சிறப்பைப் பாடியது போல இப்பாட்டிலும் பாண்டியன் கீரஞ்சாத்தனுடைய விருந்து புரந்தரும் சிறப்பை ஊர்ப்புனைவில் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். ஊரைப் பற்றி வேறு புனைவில்லை.

ஆவூர்மூலங்கிழார், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் பரிசில் நீட்டித்த போது பாடிய பாடலில், (புறம்.196) அவனுடைய ஊரைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றில. தும்பைத் திணையில் தானை மறமாகப் பாடியது இன்னொரு பாட்டு, (புறம்.301) இப்பாடல் யாரைப் பாடியது என்ற குறிப்பில்லை. ஊரைக் குறிப்பிடலோ புனைதலோ பாடலில் காணப்பட்டில. அப்பாடலில் பகை வேந்தன் பாசறை' அமரினிட்ட வருமுள் வேலிக்/கல்லென் பாசறை' (301:4) என்று இயம்பப் பெறுகிறது. சங்கப் புலவர்கள் நாட்டைப் புனைந்தனர்: ஊரைப் புனைந்தனர்; கோட்டையைப் புனைந்தனர்; பாசறையைப் புனைந்தனர். இவற்றால் அவர்களின் புனைவுப் புலமை வெளிப்படுகின்றது.

ஆவூர் மூலங்கிழார் (அகம்.24) முல்லைத் திணைப் பாடலாக அகப்பாடல் பாடுகின்றார். 'வேள்வி செய்யாத பார்ப்பான் கூரிய அரத்தால் அறுத்தெடுத்த வளைகள் போக எஞ்சிய சங்கின் தலை போன்ற கட்டுண்ட பிணிப்பு விரியாத சுரிந்த முகத்தினையுடைய பகன்றையின் அரும்புகள், சிதறுகின்ற அழகிய மழைத்துளிகள் வீசுதலால் மலரும் காலமாகிய குளிர்ந்த பெயல் நின்ற தைத் திங்களாகிய முன்பனியின் கடைநாளில், எழுகின்ற ஞாயிறு மறைந்திருக்கும் வாடையுடன் கூடிய விடியற் காலையில், இருண்ட பெரிய மழை, விசும்பு தோலுரிவது போல அகன்ற வானிடத்தே யியங்கித் தென்றிசைக் கண் போய்ச் சேரும் பணியுடன் கூடிய கரிய கங்குலின் வெள்ளத்தையும் சிறந்த நெற்றியினளாய தலைவி தனியளாய் நீந்தித் தமது ஊரின் கண் உள்ளாள்'[68] இவ்வாறு தலைவன் தலைவி மனையில் இருக்கும் நிலையைப் பேசுகின்றான்

ஆவூர் மூலங்கிழார், பெரும் பொழுது, சிறுபொழுது ஆகியவற்றைக் கூறுவதோடு தைத்திங்கள் என்று திங்களின் பெயரையும் சொல்லி ஊரைப் புனைகின்றார். பகன்றை அரும்புகள் மழை பெய்தலால் மலருதலையும் வாடையுடன் விளங்கும் விடியற் காலையையும் புனைந்து ஆவூர் மூலங்கிழார் பாடுகின்றார். தலைவி கங்குல் வெள்ளத்தில் மூழ்கித் தனியளாய் ஊரில் உள்ளாள். இயல்பாகவும் எளிமையாகவும் புனைவு அமைந்திருக்கிறது. தலைமகளின் மன நிலையைக் காட்டுமாறு இப்புனைவு விளங்குகிறது.

பாடலின் இன்னொரு பகுதி தலைவன் பாசறையில் இருக்கும் இருப்பை உணர்த்துகிறது. 'பாசறையில் யானைகள் மதிற்கதவில் பாய்ந்து பூண் பிளக்கப்பட்டுக் கூரிய முனை மழுங்கி மொட்டையான வெள்ளிய கோட்டினையுடைய சிறுகண் யானையின் நீண்ட நாவினையுடைய ஒளி பொருந்திய மணியின் ஓசையும் கழிகளுடன் பிணிக்கப்பட்ட கரிய தோலாகிய கேடகத்துப் பொழியும் அம்புகள் தைத்தலால் எழும் ஓசையும் முழங்கும் முரச ஓசையுடன் ஒலிக்கும் நள்ளிரவில் வேந்தன் இருக்கின்றான்[69]. வேந்தன் பாசறையே போர் நிகழ்ச்சிக்குத் தக்கவாறு புனைவு பெறுகிறது. அது தலைவனுடைய மன நிலையையும் பாசறைப் புனைவையும் காட்டுகிறது. போர் தொடர்பான விலங்குகளும் கருவிகளும் தாம் இங்குச் சுட்டப் படுகின்றன. ஆனால் பாசறையைப் புலவர் வேந்தனுக்குரியதாகக் கூறுவர்.

பாசறைப் புனைவால் தலைவன் ஊரோ பாசறையோ புனையப்படாமல் அவனுடைய புரவலன் பாசறை இங்குப் புனையப்படுவது நோக்கத்தக்கது. பாசறைப் புனைவு தலைவனை வேந்தனுடைய வீரன் ஒருவனாகக் காட்டுகிறது. இன்னொரு அகநானூற்றுப் பாடலில் 'ஊர' என்று விளி அமையத் தலைவனை விளித்து ஆலூர் மூலங்கிழார் களவொழுக்கத்தில் - மருதமாகப் - பாடுகின்றார். இது 'விளிப்புனைவு' என்ற பகுதியில் விளக்கப்பட்டிருக்கிறது. முல்லைத் திணையில் ஊரைப் புனையும் போது (அகம். 24) பொழுதையும் திங்களையும் புனைந்த ஆசிரியர், இப்பாடலில் இவற்றைச் சுட்டிப் புனைந்திலர். இரண்டு பாடலிலும் பகன்றைப் பூவைக் குறிப்பர். முல்லைப் பாடலில் 'சுரிமுகப் பகன்றை' (அகம். 24:3) என்பர். 'பாகலாய் கொடிப் பகன்றை' (அகம்.156:5) என்று மருதப் பாடலில் பகருவர். இரண்டு பாடலிலும் இவருடைய ஊராகிய சோழ நாட்டூர் பேசப்பட்டிலது.

இன்னொரு பாடல் பாலைத் திணைப் பாட்டு (அகம்.341). இப்பாடலில் தலைவனைப் பிரிந்த தலைவியின் உள்ளத்தில் வேனிற்பருவம் விளைத்த விளைவைப் புலவர் பாடுகின்றார். தளிர் வருதலும் குயில் கூவுதலும் கொண்டு இளவேனிற் காலத்தை ஆசிரியர் பேசுகிறார்.

....... பைபயக்

கோங்குங் கொய்குழை யுற்றன துயிலும்

தேம்பாய் மாஅத் தோங்குசினை விளிக்கும்

நாடார் காவிரிக் கோடுதோய் மலிர்நிறைக்

கழையழி நீத்தம் சாஅய வழிநாள்

மழைகழிந் தன்ன மாக்கால் மயங்கறல்

பதவுமேயல் அருந்து துளங்கிமில் நல்லேறும்

மதவுநடை நாக்கொ டசைவீடப் பருகிக்

குறுங்காற் காஞ்சிக் கோதை மெல்லிணர்ப்

பொற்றகை நுண்டாது உறைப்பத் தொக்குடன்,

குப்பை வார்மணல் எக்கர்த் துஞ்சும்

(அகம்.341:1-11)

இப்பாட்டில் பெரும் பொழுதைச் சுட்டி அதற்கேற்பப் புனைந்திருக்கிறார். காவிரியாற்று வெள்ளத்தைப் புனைந்து அது வடிந்த பின் என்று வேனிற் காலத்தைக் காட்டுவர், புலவர். இமிலேறு அறுகம் புல்லைத் தின்று, காவிரியாற்றில் ஓடும் நீரைப் பருகிக் காஞ்சிமரத்தின் மலர்களின் மகரந்தப் பொடி அவற்றின் மேலுதிர மணல் மேட்டில் துயிலும். மருதப் பாட்டில் (அகம்.166) 'மூதா' புனையப்பட இப்பாட்டில் (அகம்.341) 'துளங்கிமில் நல்லேறு' புனையப்பட்டிருக்கிறது. மூதாவும் நல்லேறும் காஞ்சிமரத்தடியிலேயே துயிலுகின்றன. இவருடைய அகப்பாடல்களிடையே கருத்தொற்றுமைகள் இருக்கின்றன. இவர் புறப்பாடலில், தன்னுடைய நாடு சோழநாடு என்பர்.[70] இன்னொரு பாட்டில்,

பூவிரி புதுநீர்க் காவிரி புரக்குந்

தண்புனற் படப்பை யெம்மூர்

(புறம்.166:28-29)

என்று ஊரைக் குறிப்பர்; ஆனால் தன்னூரான ஆவூரை ஒரு பாடலிலும் சுட்டவில்லை என்பது குறிக்கற்பாலது. அகப்பாடல்களில் காவிரிபாய்கின்ற நாடு பேசப்படுகிறது. இவருடைய ஊர் சோழ நாட்டு ஆவூர் என்பதாலேயே இப்புனைவமைகிறது.

ஆவூர் என்ற ஊர்ப் பெயருடன் ஐந்து புலவர்கள் சங்க இலக்கியங்களால் அறியப் பெறுகின்றனர். ஆவூர் கிழார், அவர் மகனார் கண்ணனார் இருவரும் சோழநாட்டினர்; இவர்களுடைய ஆவூர், பெருங்களூரைச் (பெருங் கோழியூரை) சார்ந்தது; இவ்வூர் மல்லனே ஆமூர் மல்லன். ஆவூர்க் காவிதிகள் சாதேவனாரின் ஆவூர் இவ்வூரிலிருந்து வேறானது. இவர் அகநானூற்றுப் பாட்டில் கொடுமுடி என்பானது ஆவூரைக் (ஆமூரை) குறிப்பர். இவ்வூரே இவரூராகும். ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார் தம் ஆவூர் ஏது என்று கூறிலர். ஆவூர் மூலங்கிழார் ஆவூர் என்ற ஊரினர். இவர் பாடிய புறநானூற்றுப் பாடலில் தன்னூர் சோழ நாட்டினது என்பர்; ஆனால் ஊர்ப் பெயரைச் சுட்டவில்லை.

ஊர்ப் பெயரை அடையாகப் பெற்ற புலவர்கள் தங்கள் பாடல்களில், ஊரைப் புனைந்திருந்தாலும் ஊர்ப் பெயரை உரைக்கவில்லை. ஆவூர் மூலங்கிழார் தன்னாட்டைக் கூறுகிறார்; ஊரைக் கூறவில்லை. ஊர், நாடு என்று ஒவ்வொரு புலவரும் வேறுபட்டாலும் புனைவுகள் எல்லாம் ஒரு பொதுவொழுங்கிற்கு உட்பட்டனவாக - இயற்கையினீர்மையுடையனவாக விளங்குகின்றன. ஊரைச் சுட்டினாலும் தான் பிறந்த ஊர் என்றோ, சொந்த ஊர் என்றோ சங்கப் புலவர்கள் சுட்டிலர். தாங்கள் பிறந்த/வாழ்ந்த ஊர் என்பதற்காகவும் புலவர்கள் ஊர்களை மிகையாக உயர்த்தியோ புனைந்தோ பாடிலர் என்பது குறிப்பிடத்தக்கது.

4. ஒலிப்புனைவான ஊர்புனைவு

ஊரைப் புனைதலில் ஊரின் ஒலியைச் சுட்டிப்புனைவது சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது. ஊரைக்கண்ணால் காணுமாறு ஊரை ஊரில் எழும் ஓசையால் செவியால் உணரமுடியும். செவிப்புலனில் விழுவது ஒலிப்புனைவு. ஊரைப்புனையும் சங்கப்புலவர் ஊர்களை ஒலியாலும் புனைந்திருக்கின்றனர். 'மூதூர்' என்பதை அடிப்படையாகக் கொண்டு இத்தகைய ஒலிப்புனைவுகள் அமைந்திருக்கின்றன.

ஊரைப் புனைகின்ற புலவர்கள் ஊருக்குப் பல அடைகளைக் கொடுக்கின்றனர். இப்புனைவில் 'மூதூர்' என்பது அடிப்படையாகி ஊரின் பழமையைக் காட்டுகின்றது. மூதூர் என்ற அடையுடன் எந்த ஊர்ப் பெயரும் சுட்டப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நற்றிணையில் கள்ளிலாத்திரையன் 'ஆதியருமன் மூதூர்' (371:1-6) என்று ஓர் ஊரைப்பாடுவர். புற நானூற்றில் (202:6) கபிலர் 'இருபாற் பெயரிய வுருகெழு மூதூர்' என்று ஒரூரின் அமைப்பையும் வரலாற்றையும் கூறுகிறார். ஊரினைப் புனைந்து கபிலர் காட்டுகிறார். இவையன்றி ஏனையன எல்லாம் பெயரைச் சுட்டாது 'மூதூர்' என்றே அமைகின்றன.

'மூதூர்' என்ற அடைத்தொடர் அடைபெறாச் சொல்லைப் போல வழக்கில் மாறிவிட்டது; அதனால் அச் சொல்லுடன் வெவ்வேறான அடைகளைப் அமைக்கலாயினர். பதிற்றுப்பத்தில் காக்கை பாடினியார் நச்செள்ளையார் 'தொல் புகழ் மூதூர்' (53:5) என்று அடைபெய்து பாடுகின்றார். மூதூர் என்ற அடையால் வருகின்ற பொருளையே 'தொல் புகழ்' என்ற தொடரும் உணர்த்துகின்றது. ஒரு பொருட் பன்மொழி போல முதுமையைக் காட்ட தொன்மை வருகின்றது.

மூதூருக்கு வருகின்ற அடைகள் அனைத்தும் ஊரின் பண்பை உணர்த்துவனவாக விளங்குகின்றன. செம்மல், பழவிறல், மல்லல், அஞ்சுவரு, அருங்கடி என்ற அடைகள் ஊரின் தலைமையையும் இயல்பையுமுணர்த்துகின்றன. ஊருடன் இணைந்த வணிக நிலையை நியம மூதூர் என்றும் ஆவணம் என்றும் புலவர்கள் பேசுகின்றனர்.

ஊரின் ஆரவாரத் தன்மையையும் ஆகுல நீர்மையையும் ஓசையை உணர்த்தும் அடைகள் கொண்டு சங்க நூல்கள் சாற்றுகின்றன. பெருங்கலிமூதூர் (நற். 321:10) கம்பலை மூதூர் (புறம். 54:1) முழவிமிழ் மூதூர் (பதிற்.15:18) துஞ்சா முழவின் மூதூர் (குறி.236) என்று அடைகள் வருகின்றன. இங்குப் பேசப்படும் விழா நிகழ்ச்சி ஊரின் ஆரவாரத் தன்மையைக் காட்டப் புனையப்பெறுகிறது. 'விழவு கொள் மூதூர்' (அகம்.352:5) 'சாறயர் மூதூர்' (பட். 215) என்று வரும் அடைகள் இவ்வுண்மையை உணர்த்துகின்றன.

ஊருக்கென்று தனியே ஓர் ஓசையுண்டு. அந்த ஓசை எக்காலத்தும் இடைவிடாது ஒலிக்கும். ஓசையின்றி ஊரே இருக்க முடியாது. மரம் செடி கொடி அடர்ந்த காடாயின் அங்கு எழும் காற்றோசையும் உயிரினங்களின் ஓசையும் கேட்போர் செவியை அடைக்கும். பகலோசையினும் இரவோசை இனிதாயும் அச்சத்தைத் தருவதாயும் விளங்கும். பகலாயின் விலங்குகளின் ஒலியும் மக்கள் ஒலியும் ஒலிக்கும். பேரூர் மூதூர்களாயின் அங்கு எழும் ஓசை மிக்கு ஒலிக்கும். ஊரின் அழகும் பெருமையும் ஆரவாரமும் ஊரில் எழும் ஓசையால் தானே வெளிப்படும். இதுதான் ஊரின் இயல்பு. 1. சங்கப் பனுவல்களில் இயற்கையாக எழுகின்ற (இயற்கையைச் சார்ந்த) ஒலிகளையே புலவர்கள் புனைந்திருக்கின்றனர். 2. மக்கள் கூடி எழுப்பும் ஓசைகளாலும் சில புனைவுகள் உள்ளன. அகப் பாடல்களில் முதற்கண் சுட்டிய வகையே மிகுதி.

ஊர்ப்புனைவில் ஓசையை அமைத்துப் புனைவது பழமையான மரபு. ஊர், ஐம்புலன்களாலும் அறியத்தக்கதும் துய்க்கத்தக்கதுமாகும். சங்கப் புலவர்கள் ஊர்ப் புனைவில் எழும் ஓசைக்குத் தனி முதன்மை கொடுத்துப் பாடியுள்ளனர். தலைவி இருக்கின்ற ஊரைத் தேரில் வருகின்ற தலைவன் 'பெருங்கலி மூதூர்' என்று சுட்டுகின்றான். தேரில் வருகின்ற தலைவனுக்குத் தலைவியைப் பற்றிய சிந்தனை வருகின்றது.

செந்நிலப் புறவின் புன்மயிர்ப் புருவை
பாடின் தெண்மணித் தோடுதலைப் பெயரக்
கான முல்லை கயவாய் அலரி
பார்ப்பன மகளிர் சாரற்புறத்து அணியக்
கல்சுடர் சேரும் கதிர்மாய் மாலைப்
புல்லென் வறுமனை நோக்கி

(நற்.321:1-6)

கதிரவன் மேற்கு மலையில் சென்று மறையும் மாலைப் பொழுதில், செம்மண் காட்டில் மேயும் மணி கட்டிய ஆடுகள் மேய்வதை விடுத்துத் தொழுவில் புகுந்தன; காட்டில் மலர்ந்த முல்லைப் பூக்களைச் சாரல் புறத்து வாழுகின்ற மகளிர் பறித்துச்

சூடுவர். இங்கு மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் தலைவி வாழும் மாலைக்காலச் சூழலை நிலக் காட்சியொடு புனைகின்றார். தலைவி வாழுமூரின் (தலைவன் சொந்த ஊரும் இதுவே) புனைவு இது. சங்கப் புலவர்கள் தாம் புனையும் பாடுபொருளுக்குத்தக (உரிப்பொருள்) ஊர்களைப் புனைகுவர். ஊர்ப் புனைவில் புலவர் ஊரை விவரித்துத் தலைவி உணர்வைப் படம் பிடிக்கிறார். இந்த நற்றிணைப் பாட்டின் முன் பகுதி, தலைவியை மையமாக்கி அவளுடைய சுற்றுப்புறச் சூழலையும் உணர்ச்சிகளையும் புலப்படுத்துகிறது. அந்தப் பாட்டின் பின் பகுதி தலைவன் உணர்ச்சியை வெளிக்காட்டி அவன் உணர்ந்த உணர்ச்சியை உணர்த்துகிறது.

குருந்தவிழ் குறும்பொறை பயிற்றப்
பெருங்கலி மூதூர் மரந்தோன் றும்மே

(நற்.321:9-10)

என்று தலைவன் கூறுவதாக மதுரை அளக்கர் ஞாழர் மகனார் மள்ளனார் பாடுகிறார். சிறு மலைக் காட்டில் குருந்து மலர்கின்றது; ஊரில் பேராரவாரம் கேட்கின்றது. அங்கு வளர்ந்திருக்கும் மரங்களும் தெரிகின்றன. ஊர் நெருங்கியமையையும் இருத்தலையும், ஊரின் ஒலியையும் மரங்களையும் கொண்டு புலவர் புலப்படுத்துகிறார். தலைவன் பெருங்கலி மூதூரிலுள்ள மரங்களைக் கண்ணால் கண்டு ஊரின் ஓசையைக் காதால் கேட்டு ஊரை நெருங்கிவிட்டமையை அறிகின்றான். ஊர்ப்புனைவு இரண்டு பகுதியாக அமைந்தாலும் இரண்டும் தலைவி இருக்குமூரையே புனைகின்றன. தலைவன் ஊரே தலைவி இருக்குமூராதலின் அவ்வூர், தலைவன் அறிந்த ஊராகும்,. எனவேதான் ஆசிரியர் அந்த ஊரின் பழமையை 'மூதூர்' என்ற பெயரால் சுட்டினார். ஊரின் புனைவுப் பகுதியில் ஊர்ப் பழமையைக் காட்டும் குறிப்புகள் ஏதுமில்லை. ஊரை நோக்கி வரும் தலைவனுக்கு ஊரிலுள்ள மரங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன. அக்காட்சியால் ஊரின் அணிமை உணர்த்தப்பெறுகிறது.

UNIVE

ஊரைக் காட்சியால் அறிந்த தலைவன் ஊரோசையைக் காதாலும் கேட்டு அறிகின்றான். மதுரைப் புலவரான இவர் ஊர்ப் பெயரைப் பாடலில் சுட்டிலர். 'பெருங்கலி மூதூர்' என்ற ஊரில் ஓசை எழுவதாகப் புனைகின்றாரேயன்றி ஊரில் ஓசை எழுவதற்கான அடிப்படை என்ன என்று ஆசிரியர் சுட்டிக் கழறிலர். இருத்தல் ஒழுக்கத்திற்கேற்ப மதுரை மள்ளனார் முல்லை நிலத்தைச் சூழலாக்கிப் பாடுகிறார். தலைவி பற்றிய பகுதி முற்பகுதியாகவும் தலைவன் பற்றிய பகுதி பிற்பகுதியாகவும் இரண்டையும் இணைக்கும் இடைப்பகுதி தேரை விரைந்து செலுத்த தேர்ப்பாகனுக்குக் கூறுவதாகவும் விளங்குகிறது. இங்ஙனம் ஊரைப்பாடுவதில், தலைவன் தலைவியர்க்கேற்பப் பாட்டில் இரண்டு பகுதிகள் அமைகின்றன.

பொழுதாலும் பருவத்தாலும் ஊரில் ஏற்பட்ட மாற்றத்தைப் புனைந்து மள்ளனார் தலைவியின் உணர்ச்சியைக் காட்டுகிறார். ஊர்ப் புனைவு வெறும் இயற்கைப் புனைவாக - பயிரின உயிரினத் தொகுதிகளைச் சுட்டியதாக - அமைவதில்லை. அப்புனைவு ஏதேனும் ஒரு காலத்தை நிலத்தில் அமைத்துக் காட்டுகிறது. நிலமும் காலமும் ஒன்றோடொன்று பிரிக்கவியலாததாய்ப் பிணைந்தவை; காலமும் நிலமும் இணைந்ததே முதற்பொருள். தொல்காப்பியர்,

> வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்
> அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே[45]

என்று நிலத்தையும் காலத்தையும் இணைத்துப் பேசுவதன் அடிப்படையும் இதுதான். எனவேதான் சங்கப் பனுவல்கள் நிலத்தையும் காலத்தையும் பிரிக்காது இணைத்தே பாடுகின்றன. மள்ளனார் பெருங்கலி மூதூர் என்று சொல்லி ஊரின் ஒலி நிலையைப் புனைந்து பாடுகிறார். ஊரின் ஓசைப்புனைவை அடையாலும் காட்சிப்புனைவாலும் மள்ளனார் உணரவைக்கின்றார்.

ஆரவாரத்தைக் குறிக்கும் சொற்கள் ஊரின் ஓசையை உணர்த்தி ஊர் நிலையைக் காட்டுகின்றன. இந்த அடை சங்க நூல்கள் பலவற்றில் பயிலுகின்றன[46].

ஆனால் ஊருடன் இணைத்துப் புறநானூற்றில் மட்டுமே இந்த அடை வழங்குகிறது. கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார், சேரமான் குட்டுவன் கோதையை, 'எங்கோ னிருந்த கம்பலை மூதூர்' (புறம்.54:1) என்று பாடுகிறார். ஈண்டு மூதூர்க்குக் கம்பலை என்ற அடை தரப்பட்டிருக்கிறது. மன்னன் தங்கிய ஊர் இயல்பாகவும் அவன் தங்கியமையாலும் ஆரவாரம் மிக்க ஊராகத் திகழும். கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் என்ற நான்கு சொற்களும் ஓசையை உணர்த்துவன. குமரனார், பாடலில் வெவ்வேறாகப் புனையாது ஒரு சொல்லாலேயே ஊரின் ஆரவார நிலையை வெளிப்படுத்தினார். ஊரின் ஆரவாரத்தைக் காட்டும் 'கம்பலை' என்ற சொல் புறநானூற்றில் மட்டுமே பயிலுகிறது.

ஓசைப் பொருளை உணர்த்தக்கூடிய இன்னொரு சொல் 'அழுங்கல்' இச்சொல்லை அகப்பாடல்களில் புலவர்கள் பொருள் பொதிந்த தொடராகப் பயன்படுத்துகின்றனர். தலைவன் தலைவியர் களவொழுக்கத்தை ஊரறிந்து பேசுதலையும் அந்த ஆரவாரத்தையும் இச்சொல்லுணர்த்துகிறது. இச்சொல்லின் பொருள் வழிவழி மரபாகக் களவு வெளிப்படுக்கும் ஊர் ஆரவாரத்தை உணர்த்துவதாகத் திகழ்கிறது.

தேவைக்கேற்பப் ஒலிப்புனைவு

தலைவன், தலைவி இருக்கும் ஊரை நெய்தல் திணைப்பாடலில் 'மணல் மலி மூதூர்' (நற். 319:3) என்றார். ஊர் கடற்கரையைச் சார்ந்த ஊராதலின் 'கடலும் ஒலி அடங்கி விட்டது; ஊதைக்காற்று மகரந்தப் பொடிகளை வீசுகின்ற கடற் கழிக்கரைச் சோலையும் பொலிவு குன்றியது. மணல் நிறைந்த பழைய ஊரில் அகன்ற நீண்ட தெருவில் ஆத்திமரம் நிற்கின்றது; அவ்விடம் சதுக்கமாகும். அங்குக் கூகையின் ஆண் சேவல் தன் பெண்ணாகிய குராலுடன் அம்மரத்தின் உச்சியில் ஏறியிருக்கும்; அவை கேட்டோர் அஞ்சுமாறு கூவும். அத்தகைய பேய்கள் இயங்கும் இருள் மயங்கிய நள்ளிரவு.

இது வினைத் தொழிற் சோகீரனாரின் மூதூர்ப்புனைவு. தலைவியைத் தலைவன் காணமுடியாமல் காவல் மிகுந்துவிட்டது. தலைவியைக் காணத் தலைமகன் துயிலாது நினைந்து வருந்துகிறான். எனவே நடு இரவுப் பொழுதில் மூதூரின் நிலை இப்பாட்டில் புனைவாக அமைகின்றது. படைப்பாளி தான் பாடவேண்டிய பாடுபொருளுக்கு ஏற்ற வகையில்தான் இடம், காலம் ஆகியவற்றைப் புனைவான். தனக்குப்புனைவில் எந்த அளவு தேவையோ அந்தளவே பாடலில் இடம் பெறும்; பாடுபொருளுக்குத் துணை செய்யாத வகையிலோ கருத்தூற்றம் தாராத வகையிலோ புனைவு அமைவதில்லை. ஒளிப்படம் எடுப்போன் (photo) தனக்கு வேண்டியவாறு வேண்டிய அளவாகக் காட்சியைத் திட்டமிட்டு வரையறுத்துக்கொள்ளுமாறு ஊரைப்புனையும் புலவர்களும் தேவையான அளவுக்கே புனைவை வரையறுத்துக் கொள்ளுகின்றனர் என்பதற்கு இதுவே நல்ல எடுத்துக்காட்டு.

ஊரைத் தேவையான அளவு புனையும் ஆசிரியர் ஊரின் ஒலிகளை மையப்படுத்திக்காட்டுகிறார்; நடு இரவில் (மயங்கிருள் நடுநாள்) ஊரில் இயற்கை ஒலிகளே மிக்கிருக்கும். அவற்றைக் கூர்ந்து கேட்டுப் புலவர் ஒலிப்புனைவாக ஊர்ப் புனைவை (நற். 319) அமைத்திருக்கிறார்.

பரிபாடலும் ஒலிப்புனைவும்

வையை ஆற்றில் நீராடும் மகளிர் நிலையைப் பரிபாடல் விரிவாகப் பேசுகிறது. ஒவ்வொருவையைப் பரிபாடலும் வெள்ளம் வந்து பாயுதலையும் மக்கள் நீராடுதலையும் கவினுறக்கூறுகிறது. சங்கப்பனுவல்களில் காவிரியாற்றுக்குக் கூட இத்தகைய தனிப்பாடல் இல்லை. நல்லந்துவனாரும் நல் வழுதியாரும் தங்கள் பரிபாடல்களில் 'மூதூர்' என்ற தொடரைப் பயன்படுத்துகின்றார். பரிபாடலில் அவர்கள் ஊர்ப் பெயரைச் சுட்டிக் கூறிலராயினும் அம் மூதூர் மதுரை என்பது வையையாற்றுப் பாய்ச்சலால் அறிய முடிகிறது.

தூதேய வண்டின் றொழுதி முரல்வவர்
காதன்மூ தூர்மதில் கம்பலைத் தன்று (பரி.8:36-37)

என்பர் நல்லந்துவனார். தலைவியர் தூதுவிடுத்த வண்டுகள், மதுரையிடத்துப் போந்து ஒலித்தன. அவ்வொலி மகளிரின் காதலை மதுரை மக்கள் எல்லாம் அறியுமாறு ஒலித்தது. பரிபாடல் பல அடிகளையுடைய பாடலாயினும், புலவரின் நோக்கம் வையையைப் புனைவதாகலின் மதுரை புனையப்படவில்லை. 'மூதூர் மதில்' என்பதே புனைவு. இங்கு வண்டுகளின் ஓசை புனையப்படுகிறது.

பழமையான ஊரான மதுரைப் போரை எதிர் நோக்கும் கோட்டை நகருமாகும் என்று காட்ட 'மதிலு'ம் சுட்டப்படுகிறது. ஊர்ப் புனைவில் ஓசையே ஊரைக்காட்டுகிறது. ஓசை எழுவதற்குரிய காரணத்தையும் நல்லந்துவனார் நவிலுகிறார்.

நீர்ப்புனைவு:

நல் வழுதியார் 'மூதூர்' என்றும் 'அழுங்கல் மூதூர்' என்றும் ஒரே பாடலில் இரண்டு இடங்களில் குறிப்பர். 'புனலென மூதூர் மலிந்தன் றவருரை (பரி.12:94) நீராடும் மக்கள் தங்களுக்குள் உரையாடிக்கொண்ட பேச்சு வையையில் நீர்நிறைந்தாற் போன்று மூதூராகிய மதுரையின் கண் நிறைந்தது. இங்கும் ஊரின் ஒலியே ஊருக்குரியதாய் உரைக்கப்படுகிறது. பாட்டின் இறுதியில் வையை யாற்றினால் மதுரை மூதூர்க்கு இன்பமும் அழகும் பலப்பல உளவாயின.

விசும்புகடி விட்டன்று விழவுப்புன லாங்க
இன்பமுங் கவினு மழுங்கன் மூதூர்

(பரி.12:99-100)

மதுரையை நல் வழுதியார் 'அழுங்கன் மூதூர்' என்று அடை கொடுத்து அறைந்தார். வையை யாற்றைப் புனையும் முகமாகப் பரிபாடல்கள் மதுரையும் மதுரை மக்களையுமே புனைகின்றன. இங்கு மக்களின் பேச்சு ஓசை புனைவு பெறுகிறது.

வையைப் புனைவில் ஊரின் பேராரவார ஒலியையே பரிபாடலாசிரியர்கள் சுட்டி வையைக் கரையையும் மதுரையையும் புனைகின்றனர். இவற்றில் ஒலிப்புனைவு மிகுதி. நல்லந்துவனார் மதுரை நகரின் புனைவில் வண்டோசையைக் காட்ட நல் வழுதியார் மக்களின் பேச்சோசையைப் புனைகிறார். இவ்வாறு ஊரைப் புனையும் போது ஒலியைக் கொண்டு புனைகின்ற மரபு சங்கவிலக்கியத்தில் காணக்கிடக்கிறது.

5. உயிரினப்புனைவு

களவு ஒழுக்கம், மறைவாக நடக்கும் மண உறவாகும்; சாட்சியாக யாரையும் வைத்துத் தலைவன் தலைவியர் கூட மாட்டார்கள்; அவர்கள் ஒருவர் மீது ஒருவர் வைத்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் இணைவர். அவ்விருவருக்கும் ஒருவர் மீது ஒருவர் வைத்த நம்பிக்கையே ஆதாரம். இருவரும் கூடிய இயற்கைச் சூழ்நிலையே சான்றாவதன்றி வேறன்று. இவ்வியற்கைச் சூழ்நிலையைப் பாடும் கபிலர், தன் காதல் கற்பாக வேண்டும் என்ற தலைவியின் விருப்பமாகத் தனக்கும் தலைவனுக்குமுள்ள உறவை அவர்கள் கூடிய இயற்கைச் சூழலில் இருந்த குருகே அறியும் என்று பாடுகின்றார் (குறு.25) இப்பாடலைப் போன்றே வெள்ளி வீதியாரும் தலைவனைக் குரங்கு ஒன்றும் அறியும்' என்பர் (குறு.26).இவ்வாறு பாடும் போது இயற்கையைப் புனைய வேண்டிய கட்டாயம் அமைகின்றது; புலவர்கள் இயற்கையைப் புனையாமல் அங்குள்ள பறவைகளையும் விலங்குகளையும் புனைகின்றனர். இதனால் இடமோ ஊரோ சுட்டப்படவில்லை

இயற்கைப் புனைவு பாடுபொருளை வலியுறுத்தல்

தலைவனும் தலைவியும் களவாகக் கூடியிருந்தனர். தலைவன் வரைந்து கொள்ளாது காலம் நீட்டித்தான். வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்கின்றாள். யாரையும் சாட்சி வைத்துக் காதலர் கூடுவதில்லை; இதனால் தலைவன் தலைவியைக் காதலித்திலேன் என்றும் களவுறவு கொண்டேனிலன் என்றும் பொய் கூறமுடியும். இருவரும் தனித்துக் கூடியது, இயற்கைச்

சூழ்நிலையிலாம். இந்த இயற்கைச் சூழ்நிலையைத் தன் காதலுக்குரிய சாட்சியாகத் தலைவி பேசுவதாகக் கபிலர் புனைகின்றார்.

தினைத்தா என்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே

(குறு.25)

நாரையைக் கபிலர் தினைத்தாள் போன்ற சிறிய பசுமையான கால்களையுடையன என்று புனைகின்றார். அந்த நாரை ஓடுகின்ற தண்ணீரில் ஆரல் வருவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இப்புனைவு குறிஞ்சிப் புனைவு.

சங்கப் புலவர்கள் இயற்கையைப் பாடுவது, மேலை நாட்டுப் புலவர்களைப் போலப் புனைவாகப் பாடவில்லை. இங்கு இயற்கையைப் பாடும் ஆசிரியர், பாடுபொருளுக்கு அப்பொருள் பயன்பயக்குமாறு பாடியிருக்கின்றார். ஆதலின் சங்க இலக்கிய இயற்கைப் புனைவு என்பது வெறும் இயற்கைப் புனைவன்று. அகப்பொருட் கருத்தை வலியுறுத்தும் புனைவாக அமைகிறது.

தலைவன் சென்ற வழியிடைக் காட்சிகள், இயற்கைப் புனைவாய் - விலங்குகள் வாழ்வாய் அமைகின்றன. அக்காட்சிப் புனைவுகள், தலைவனுக்கு இல்லற இன்பத்தை உணர்த்துவனவாய் விளங்குகின்றன. அவை எவ்வகையான குறிப்பு மொழிகளையும் கொண்டவையல்ல; தலைவன் பிரிவுக்கு எதிராக அந்த உயிரினங்கள் இணைந்திருக்கின்றன; ஒன்றின் மீது இன்னொன்று அன்பு காட்டுகின்றன. இப்புனைவுதான் பாடலில் எதிர்மறையாக அமைந்து தலைவனுக்குத் தலைவியொடு இணைந்து வாழ வேண்டும் என்ற உணர்வை உணர்த்துகிறது. இவ்வாறு தலைவன் தலைவியர்க்கு எதிரான விலங்கின/பறவையினக் காட்சி, தலைவன் காண்பதாகவே இருக்கிறது; தலைவி காண்பதாகப் புலவர்கள் பாடவில்லை.

இத்தகையவற்றை 'இறைச்சி' என்றும் உரையாசிரியர்கள் சுட்டினர். இத்தகைய பாடல்கள் மிகுதி.

பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழி அவர்சென்ற வாறே

தலைவன் சென்ற வழியைக் கடுங்கோ பெண் யானைகளின் பசியை அகற்றும் பொருட்டுப் பெரிய துதிக்கையை உடைய களிற்று யானைகள், மெல்லிய கிளைகளையுடைய யாமரத்தின் பட்டையை உரித்துக் கொடுக்கும் அன்புடையனவாம் என்பர். இவ்வன்புக் காட்சியைத் தலைவன் கண்டால் விரைந்து மீண்டும் வந்து நல்குவர் என்பது கருத்து. இயற்கைப் புனைவால், தலைவி நினைவு தலைவனுக்கு ஏற்படுதலைக் காண இயலுகின்றது. இயற்கையான ஊர்ப் புனைவு வேறொரு பொருளை உணர்த்துகிறது. இங்கெல்லாம் ஊர் என்று விதந்து சுட்டப் படாமலேயே களவொழுக்கம் நடந்த இடம் புனையப்படுகின்றது.

6, பாடு பொருளுக்கேற்ற புனைவு

சங்கச் சான்றோர் தம் புலமை ஊற்றத்தையும் ஏற்றத்தையும் காட்ட ஊர்களின் இயற்கையையோ செயற்கையையோ புனைந்திலர்; எது இயல்போ அதனையும் எது தேவையோ அதனையும் தாம் பாடல்களில் புனைந்தனர். வேண்டாதனவற்றைப் புனைவதோ விரித்துரைப்பதோ சங்கச் சான்றோரிடம் காண்டற்கில்லை. பாடு பொருளுக்கும் பண்பாட்டுக்கும் பொருந்திய புனைவுகளையே சங்கப் புலவர்கள் ஊரப் புனைவில் உணர்த்துகின்றனர்.

அகநானூற்றுப் புலவர் (165) பாலைத் திணையைப் பாடுகிறார்; தலைவி உடன்

போக்காகப் போய் விட்டாள்; அவளைத் தேடிக் காணாது தாய். வருந்துகின்றாள். தலைவி விளையாடிய (மணலில் கிடந்த) பாவையைத் தழுவித் தாய் துயருறுகின்றாள்; தாயின் ஆறாத் துயரைக் கண்டோர் கூற்றாக இப்பாடல் பாடப்பட்டிருக்கிறது.

'மெல்லிய தலையையுடைய பெண் யானை குழியில் அகப்பட்டது; அதனை அழைத்துக்களிற்று யானை கத்திப்பேராரவாரத்தை எழுப்பியது; அதற்கு அஞ்சி விரைந்தெழுந்த சிவந்த வாயினையுடைய யானைக்குட்டி ஓடியது; தாதாகிய (உரம்) எருவினையுடைய பழைய ஊரிடத்து நல்ல எருமை மாட்டிலிருந்து பெறுகின்ற மடிப்பாலைக் குடிக்கின்ற இடமாய பல நாடுகள்.' யானைக் கன்று எருமைத் தாயிடம் மலையிலிருந்தோடிப் போய்ப் பாலைக் குடிக்கின்றது. குறிஞ்சி விலங்கும் மருத விலங்கும் பாடலில் பேசப்படுகின்றன. தாயை விட்டுப் பிரிந்த தலைவியைப் போல யானைக்கன்று தன் தாயை விட்டுப் பிரிந்திருக்கிறது. மக்கள் வாழ்க்கை நிகழ்ச்சியை விலங்கு வாழ்க்கைப் புனைவு கொண்டு வெளிப்படுத்துகிறார்; ஆசிரியர்.

ஊரார் எடுத்த அலராகிய ஆரவாரப் பேச்சால், தலைவி தான் பிறந்த ஊரை விட்டுத் தலைவன் பால் சென்று சேர்ந்தாள். இதனை யானைக்கன்று பெண் எருமையிடம் சென்றமை கொண்டு காட்டுகிறார். புலவன் தான் பாடுகின்ற பொருளுக்குத் தக்க வண்ணம் பாடலில் புனைவினை அமைத்தற்கு இது நல்ல சான்று. குடும்பத்துடன் இருந்த யானைக்கன்று தாயின் செயலால் வேற்றிடம் ஓடித்துணை தேடுகிறது. மகட் போக்கிய தாயின் நிலைக்கும் தாயை விட்டுப் போன மகள் நிலைக்கும் இது பொருத்தமாக விளங்குகிறது.

ஊர்ப் புனைவு என்பது புலவர்களின் பாடுபொருளுக்கேற்பப் புலவர்கள் தேர்ந்து அமைப்பதாகும். சங்கப் புலவர்கள் தொடர்பில்லாதனவாகவோ அல்லியற்கையாகவோ ஊரைப் புனைந்திலர்; உள்ள இயற்கை நிலையைப்

புனைந்தமையால்தான் கருப்பொருள்களிலிருந்து உள்ளுறையோ இறைச்சியோ உருவாக முடிந்தது. எனவே ஊர்ப்புனைவு சங்க நூல்களில் கருத்து விளக்கமாகவே அமைகின்றது.

[illegible]

முல்லைத் திணைக்குரிய கார் காலத்து மாலைப் பொழுதை முல்லைப் பாட்டுப் புனைகின்றது. அப்போது ஊரை

அருங்கடி	மூதூர்	மருங்கிற்	போகி
யாழிசை	யினவண்	டார்ப்ப	நெல்லொடு
நாழி	கொண்ட	நறுவீ	முல்லை
அரும்பவி	ழலரி	தூஉய்க்	கைதொழுது

(முல்லை.7-10)

என்று நப்பூதனார் பாடுகின்றார். இப்பகுதி தலைவி வாழுகின்ற ஊர் பற்றிய புனைவாகும். நப்பூதனார் ஊரின் காவல் சிறந்த தன்மையையும் பழமையையும் 'அருங்கடி மூதூர்' என்று புனைவர். தலைவனைப் பிரிந்த தலைவியின் மன ஆறுதலுக்குத் தக்கவாறு பிரிவைக் காட்டும் முகத்தின் விரிச்சிக் கேட்கும் சூழலாக ஊர்க்காட்சி புனையப்படுகிறது. இது முல்லைப்பாட்டின் முதற்பகுதி.

இதனைத் தொடர்ந்து வரும் இரண்டாம் பகுதியில் தலைவன் பாசறைப் புனைவு வருகிறது(24-80). தலைவனுடைய பாடி வீட்டு அமைப்பு, அவனிருக்கும் நிலை, மாலைக்காலம், நடுயாமக் காவல், காலம் உணர்த்தல், மறவர் தலைவனாகிய மன்னனைக் காவல் காத்தல், மன்னன் பள்ளியறையில் தங்கிய நிலைமை, ஆகியனவற்றை இப்பிற்பகுதி புனைகிறது. தலைவி ஊர்ப்புனைவு மிகச் சுருக்கமாய் இருக்கிறது; தலைவனிருக்கும் முரசு முழங்கு பாசறை, ஊர்ப் பெயர் சுட்டாமலேயே புனையப்பட்டிருக்கிறது. போர் நிகழ்ந்த களத்தைச் சார்ந்தே, பாசறை

அமைந்திருக்கும்; போர் யார் யாரிடையே நிகழ்ந்தது என்றோ எவ்விடத்தில் எவ்வூரில் நிகழ்ந்தது என்றோ ஆசிரியர் நூலில் நவின்றிலர். தலைவி, தலைவன் இருக்கும் இருப்புகளைப் புனையுமுகமாகத் தலைவி ஊரைச் சுட்டினார் நப்பூதனார். தலைவன் பாசறை இருக்குமூரைச் சுட்டிலர்.

இரண்டு தனித் தனிப் பாடல்கள் பாடுமாறு தலைவி, தலைவன் ஆகிய இருவர் நிலையையும் தனித்தனியே புலவர் புனைந்தார். நூலின் பிற்பகுதியான எஞ்சிய அடிகள், ஊரிலிருக்கும் தலைவி ஊரில் எழும் ஒலியை ஓர்தலைக் கூறுகின்றது. இக்குறிப்பில்,

இடஞ்சிறந் துயரிய எழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
இன்ப லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தனள்

(முல்லை.86-88)

என்று ஊரில் அருவியோசை பேசப்படுகிறது. முற்பகுதியில் தலைவி மனத் துணிவு பெற விரிச்சி கேட்கப் பெறப் பிற்பகுதி தலைவி அருவியோசை ஓர்வதாய்த் தலைவன் வருகையைப் பற்றிய ஆராய்ச்சியாய் அமைகின்றது.

இறுதிப் பதினான்கு அடிகள், கானம் நந்திய செந்நிலப் பெருவழி காடு பிறக் கொழியத் தலைவன் தலைவி ஊருக்கு வருதலைப் பேசுகின்றது. செறியிலைக் காயா மலரக் கொன்றை காலக்கோடல் அவிழத் தோன்றி பூப்பப் பெருவழி அமைகின்றது. பாதையிடையே ஊர் ஏதும் சுட்டிப்புனையப் படவில்லை. இது மூன்றாம் பகுதி நூற்று மூன்று அடிகளுடைய இந்நெடும் பாட்டில் பாட்டுடைத் தலைவன் பெயர் வாராமல் புலவர் பாடியிருக்கின்றார்; அவன் பெயரை மறைக்க முயன்ற முயற்சியின் விளைவாக, மூதூரின் பெயரும் சொல்லப்படவில்லை. ஊரைச் சொன்னால் தலைவன் யார் என்று வெளிப்பட வாய்ப்பு உண்டு.

சங்கச் சான்றோர்கள் தங்கள் பனுவல்களில் ஊரைப்புனைவுவழி, ஊரின்

இயற்கை செயற்கை நலங்களை முற்றிலுமாகப் புனைவதில்லை. காப்பியம், புராணம் பாடிய புலவர்கள் தங்கள் பாடு பொருளுக்கு அப்பாற்பட்ட நிலையில் நாட்டையும் ஊரையும் விரித்தும் விவரித்தும் பாடுவர்; இருப்பதைப் புனைய வேண்டும் - இயல்பாகப் புனைய வேண்டும் - என்ற கருத்தின்றி இவர்தம் புனைவுகள் அமைந்தன; ஆனால் சங்கப் புலவர்களின் ஊர்ப் புனைவுகள் பாடு பொருளுக்குத்தக - உரிப்பொருளுக்கு - ஏற்பப் புனையப்பெற்றன. ஆதலின் வெற்றென விரித்துப் புனையும் புனைவு சங்க நூல்களில் பயிலா.

இந்த முல்லைப் பாட்டில், முதற்கண் மாலைக் காலம், கன்றுகள் தாயை நினைத்துக் கத்துதலுமாகப் புனையப்பெறுகிறது. தலைவனை நினைத்து இருக்கும் தலைவியின் எண்ணத்தை வலுவூட்டுமாறும் அவன் வருகையை அவள் எதிர் நோக்கு மாறும் இப்புனைவும் விரிச்சி கேட்டலும் வருகின்றன. தலைவியின் உணர்வு நிலைக்கேற்குமாறு இந்தப் புனைவு அமைவதால் ஊரின் வேறு பகுதிகளை நப்பூதனார் புனைந்திலர்; முல்லைப் பாட்டில் ஊரின் அமைப்பு, மரம், செடி, கொடி, விலங்கினம் என்று புனைவு விரிந்திருந்தால் அவை பாடு பொருளை விட்டு விலகிய ஊர்ப்புனைவாகிவிடும்.

தலைவனிருக்கின்ற பாசறையைப் போர்ச் சூழலுக்குத் தக்கவாறு ஒரு பரபரப்பான போர்வீரர் தங்குமிடமாக நப்பூதனார் பாடுகின்றார். இங்கு முள்மதில், யானை, கூடாரம், கிடுகு, வேல் என்பன புனையப்பெறுகின்றன. போரின் ஆரவாரம் இதனால் வெளியாகிறது. இது பாசறைப் புனைவு. ஊரின் உயிரோட்டம் இங்கே காணப்படவில்லை. இயற்கைக் காட்சியை விரித்தும் விதந்தும் புனையும் புலமை ஊற்றமும் ஏற்றமும் நப்பூதனார்க்குண்டு என்பதைப் பெருவழிப் புனைவு புலப்படுத்துகின்றது.

தலைவன் வருகின்ற வழியைக் காட்ட பல்வேறு மரங்கள் பூத்த நிலையை நப்பூதனார் புனைகின்றார். இவை செந்நிலப் பெருவழிப்புனைவு; இங்கும் ஊர்ப்

புனைவில்லை; பெருவழிப் புனைவிலும் ஊரை அடையாளங் காட்டும் கூறுகள் எவையும் கிடையா. முல்லைப் பாட்டின் மூன்று கூறான பகுதிகளிலும், தலைவி இருக்கின்ற இடமே ஊர் என்று சுட்டப்பட்டுப் புனைவு பெறுகிறது; பல அலுவலகங்களுக்குத் தலைமை நிலையம் ஒன்றிருப்பது போலத் தலைவி ஊர் அமைகிறது.

திணைக்கேற்ற புனைவுத்தொடர்:

மணல் என்ற சொல்லை அடையாகக் கொண்டு பல இடங்கள் சங்கப் புலவர்களால் புனையப்பட்டுள்ளன. 'மணல் மலிமூதூர்' என்று அமைந்த தொடர்வினைத் தொழிற் சோகீரனார் பாடிய நற்றிணைப் பாடல் (319) ஒன்றில் மட்டுமே காணப்படுகிறது. இது நெய்தல் திணையில் களவாகிய கைகோளுக்கு உரியது. நெய்தல் நில ஊர் என்று காட்டுதற்குப் புலவர் ஊரில் மணல் மலிந்திருந்தலைச் சுட்டுகின்றார். இப்பாட்டில் நெய்தல் நில ஊரின் நடுயாமக் காட்சி புனைவாகிறது.

ஓதமும் ஒலிஓ வின்றே ஊரையுந்
தாதுளர் கானல் தௌவென் றன்றே
மணல்மலி மூதூர் அகல்நெடுந் தெருவில்
கூகைச் சேவல் குராலோடு ஏறி
ஆரிருந் சதுக்கத்து அஞ்சுவரக் குழறும்
அணங்குகால் கிளரும் மயங்கிருள் நடுநாள்

(நற்.319:1-6)

நடு இரவில் ஊர் விளங்குதலை வினைத்தொழிற் சோகீரனார் புனைகின்றார். 'இரவின் நடுயாமத்தில் கடல் ஓசை அடங்கிவிட்டது; மகரந்தத்தை வீசுகின்ற காற்று கடற்கரைச் சோலையின் பொலிவை அழித்தது; மணல் மிக்க மூதூரின் கண்ணுள்ள அகன்ற நீண்ட தெருவில், கோட்டான் ஆணும் பெண்ணுமாய்ச் சென்று மக்களியங்காத பெரிய நாற்சந்தி கூடுமிடத்தில் யாவர்க்கும் அச்சமுண்டாகும்படிக் கத்துகின்றன. பேய்களும் வெளிப் போந்து உலவித் திரியும்; ஒருவரை ஒருவர்

அறிதற்கு இயலாது மயங்கிய இருள் மிக்க நடுயாமம், இது.

பாடுபொருளுக்கேற்ற புனைவு:

கடற்கரை மூதூரின் நடு இரவுப் புனைவு காலத்துக்கும் இடத்துக்கும் தக்கவாறு புனையப்பட்டிருக்கிறது. புனைவில் காலத்தை வெளிப்படுத்தும் கூறுகளே மிகுதி. சோகீரனார் மகிழ்ச்சியான சூழலையோ பிற நிலையையோ புனையாது நடு இரவைப் புனைந்திருக்கிறார்.

தலைவியின் களவொழுக்கம் பெற்றோர்க்குத் தெரிய அவளை இற்செறித்துவிட்டனர். அதனை அறிந்த தலைவன் ஆற்றானாகித் தலைவியை நினைந்து அவளுடைய முயக்கத்தை விழைந்து துயின்றிலன்? இவண் அவன் வருந்திய வருத்தமும், இரவு முழுமையும் அவள் வருவாள் என்று நோக்கியிருந்த நிலையும் உணர்த்தப்பெறுகிறது. இந்தப் பாடுபொருளுக்கு ஏற்ற வண்ணம் ஊர் புனையப்படுகிறது. இந் நுட்பத்தை உணர்ந்தே சங்கச் சான்றோர், முதல் என்றும் கரு என்றும் உரி என்றும் பாடுபொருளை முப்பொருளாகப் பகுத்தனர். முப்பொருளை ஒருமைப்படுத்திப் பாப்புனையும் போது பாடுபொருள் கலவை செவ்வனம் அமைந்து பாடல் உருவாகும். எனவே ஊர்ப் புனைவமையதல் பாடுபொருளை நோக்கியது என்பது புலனாம்.

பாலைக் கௌதமனார், மூன்றாம் பத்தில் பல்யானைச் செல் கெழுகுட்டுவனைப் பாடுகின்றார். அவனுடைய வெற்றியைப் போற்றுதற்கு அவன் வீரர் பகைவர் நாட்டை அழித்தமையையும் நாடு அழிந்த நிலைமையையும் புலவர் புனைகின்றார். ஆனால் இப்பாடலில் பல் யானைச் செல் கெழுகுட்டுவன் நாடு புனையப்படவில்லை; அழிந்த நாட்டின் பெயரையும் புலவர் கூறிலர். அழிந்த நாட்டுக்குச் சூரபதுமனுடைய வீரமகேந்திரபுரம் முருகனால் அழிக்கப்பட்டதை உவமை கூறுகிறார். நாட்டுக்கு ஊர் உவமையாகிறது; மண்ணுலகத்து ஊர் உவமையாகாது விண்ணுலகத்தவரான முருகன் அழித்த அவுணரின் ஊரான

வீரமகேந்திரம் இங்குப் பேசப்படுகிறது. அழிவு கருதிப் பாலைக் கௌதமனார் இவ்வுவமையை அமைத்தராதல் வேண்டும்; வேள்வி, சொர்க்கம் புகுதல் என்பன இடம் பெறும் பாலைக் கௌதமனார் வாழ்வியலில் முருகப்பெருமான் அழித்த வீரமகேந்திரம் இடம் பெறுவதும் அவர் தம் வைதீகபௌராணிக மரபைக் காட்டுவதாகும். இயற்கை நெறியில் வாழ்ந்து தமிழரிடையே தொன்மைப்புராணக் கதைகள் வழங்கிய நிலையை இவ்வுவமை புலப்படுத்துகிறது.

முன்னை நிலை:

பாட்டுடைத் தலைவனாகிய பல்யானைச்செல் கெழுகுட்டுவன் நாட்டையோ ஊரையோ புலவர் புனைந்திலர். பிறிதொன்றால் கொடுமைப்படுத்த முடியாத கூற்றுவனைப் போன்றவன் பல் யானைச் செல் கெழு குட்டுவன். இவனுடைய திருந்திய போர்த் தொழிலையுடைய வீரர் சினந்து அழித்த நாட்டில் தேர் ஓடிய வயல்களில் ஏரால் உழவேண்டியதில்லை. பன்றி தோண்டிய கொல்லையைக் கலப்பையால் உழ வேண்டுவதில்லை. மத்தொலிக்கும் இடையர் வீடுகளில் இன்னிசை முழக்கும் அதனை மீறி ஒலிக்காது. இத்தகைய வளம் நிறைந்த நாட்டின் பழைய வளமையை அறிவோர் இப்போது காணின்

> பண்டுநற் கறியுநர் செழுவள நினைப்பின்
> நோகோ யானே நோதக வருமே
>
> (பதிற்.26:4-5)

என்று வருந்திட நேரும். நாட்டின் வள நிலையைப் பாடலின் முற்பகுதியில் பாலைக் கௌதமனார் அமைத்துப் பாடினார். இப்புனைவில் மலையின் இயற்கைவளமோ நிலத்தின் உயிரினப் பயிரினப் புனைவோ இடம் பெற்றில.

அழிவு காட்டும் பின்னைப்புனைவு:

பாடலின் பிற்பகுதியில் அழிந்த நாட்டின் அவலநிலை பேசப்படுகிறது. சேர வீரர் சினந்த நாட்டில், மழை பெய்து மக்களைப் புரக்காது; வெப்பம் மிகுந்து காலநிலை தங்களுக்கு வெற்றியைத் தராது' என்று சொல்லி அவர்கள் கைகளைப்

புடைத்து வலி அழிந்த நெஞ்சினையுடையராய் மக்கள் துன்பத்தை மிக அடைந்தனர். அந்நாடு பீர்க்கங்கொடி படர்ந்த வேலியையுடைய பாழ்ந்த மனைகளையுடைய அங்கு நெருஞ்சிக்காடு பொருந்திய கடிய வழியில் நிலை பெற்றது.

பாலைக்கௌதமனார் சேரனுடைய வென்றிச் சிறப்பை வெளிப்பட உணர்த்த அவன் பகை நாட்டின் இனிய இயல்பையும் அழிவுநிலையையும் ஒரே பாட்டில் முன்னும் பின்னும் அமைத்துணர்த்துகிறார்.

சேரனுடைய பகை நாட்டு அழிவுக்குப் பாலைக் கௌதமனார்,

முருகுடன்று கறுத்த கலியழி மூதூர்

(பதிற்.26:12)

என்று வீரமகேந்திரத்தைக் குறிக்கிறார். "முருகன் சூரனைச் சினந்து சென்று அவனிருந்த மூதூரைச் செறுத்த காலத்தே அவன் இனத்தவரது உயிர் குடித்த கூற்றுவனைப் போல நீ சினந்து சென்று போருடற்றிய காலத்தே பகைவரை நின் (சேரன்) வயவர் கொன்று குவித்தனர்" என்பர் ஔவை. சு. துரைசாமி பிள்ளை. முருகன் சூரனைச் சினந்துடற்றிய போரால் அச்சூரனது மூதூர் வலியழிந்து மாறிய செய்தி உலகறிந்தது. அதனை ஈண்டு விளக்கத்துக்காகப் பாலைக் கௌதமனார் பயன்படுத்துகிறார். புராணச் செய்தியை ஆசிரியர் சங்க காலத்திலேயே பயன்படுத்தி விளக்குவது குறிப்பிடத்தக்கது.

புராணச் சார்பான ஊரினைச் சுட்டி அமையும் பகைவர் நாட்டுப் புனைவு இஃது ஒன்றே; நாட்டுப்புனைவு, மன்னனுடைய வெற்றியைக் காட்டுமாறுள்ளதேயன்றிப் பிறவாறு இல்லை. புலவர் இன்பச் செய்திகளை விரிவாகவும் விளக்கமாகவும் கருப் பொருள் கொண்டு புனைவர். இஃது அகப்பொருள் பாடல்களின் நீர்மை? ~~புறப்பொருளில் (இஃது அகப்பொருள் பாடல்களின் நீர்மை)~~ புறப்பொருளில் முன்பிருந்த நிலையும் பின்பிருந்த நிலையுமாக ஊரோ நாடோ அழகாகவும் அழிவாகவும் புனையப்படுகிறது

ஊரும் நெறியும்

தலைவன் கொடிய நெறியில் தலைவியைக் காண இரவில் வருகின்றான். பாதையின் ஏதத்தைச் சுட்டித்தோழி தலைவன் வாரா தொழிவனாக என்று தலைவியிடம் கடிந்துரைக்கின்றான். இச்சூழலில் நெறியின் கொடுமையை நல்விளக்கனார் பாடுகிறார். இதன்கண் தலைவி ஊரை ஆசிரியர் அம்பன் மூதூர் என்பர்.

அம்பன் மூதூர் அரவ மாயினுங்
குறிவரி இரும்புலி அஞ்சிக் குறுநடைக்
கன்றுடை வேழம் நின்று காத்து அல்கும்
ஆரிருள் கடுகிய அஞ்சுவரு சிறுநெறி

(நற்.85:3-6)

என்பது புனைவு. தலைவன் வரும் பாதை, புலிகள் திரிவது? அவற்றுக்கு அஞ்சிப் பெண்யானை தன் குட்டிகளைக் காத்து நிற்கும். இது காட்டுப் பாதை பற்றிய புனைவு. ஊரைச் சுட்டிய நல் விளக்கனார், ஊரின் நிலையை 'அம்பன் மூதூர்' என்ற ஒரு தொடராலேயே பினைந்துவிட்டார்.

ஒன்றைப் புனைய மற்றொன்றைப் புனையாமை

ஊரை வேறு வகையாக விரித்துப் புனையவில்லை; ஊரைத் தொடர்ந்து ஊருக்கு வருகின்ற வழி புனைவு பெறுகிறது; ஆகையால் நல்விளக்கனார் ஊரைப்புனையாது விடுத்தார். ஒரு பால் புலியும் ஒரு பால் கன்றுடைய வேழமும் வழங்கும் சிறு நெறி என்று பாதையின் கொடுமை புனையப்பட்டது. பாதையைப் புனைவுடன் இவர் சுட்டுவது தலைவன் வருகையைத் தடுப்பதற்காகும்; அன்றித்தோழி தலைவியைக் காக்கும் திறனையும் இந்த இயற்கைப் புனைவால் நல்விளக்கனார் உணர்த்துகின்றார்.

புனைவால் இன்னொரு கருத்தைப் புலப்படுத்தல்

புலியையஞ்சிப் பிடி யானை தன் கன்றைக்காத்துத் தங்குகிறது 'இது புனைவு' இஃது இறைச்சிப் பொருளினது. பிரிவினாலே தலைவிக்கு வரும் ஏதத்திற்கு அஞ்சித்

தோழி அவளைக் காத்திருக்கின்றாள் என்ற கருத்துப் பெறப்படுகிறது. இதனைச் சொல்லவே அஞ்சுவரு நெறியைப் புலவர் புனைகின்றார்.

சங்கப் பனுவல்கள், இயற்கையைப் புனையும் போது அவற்றை உரிப் பொருள் தழுவிப் பாடுவர். நெறியின் இயற்கைப் புனைவிலும் தோழி தான் தலைவிக்கு ஆதரவாக இருப்பதைத் தலைவனுக்குணர்த்துகின்றாள். களவில் தலைவிக்குத் தோழியின் சார்பும் ஆதரவுமின்றேல், தலைவி மனம் ஒடிந்து மாழ்கிப் போவாள்? அவளைக் காத்துக் கற்பாக்கி வாழ வைப்பவள் தோழியே; இந்த இறைச்சிப் பொருள் தலைவி நிலையைத் தலைவனுக்குணர்த்திப் பயன்படுகிறது.

ஊர்ப்புனைவாயினும் நெறிப் புனைவாயினும் தலைவியின் காதலையும் கற்பையும் நிலைப்படுத்தி வளப்படுத்துவதாகவே அமைகிறது. இதுதான் இந்த அஞ்சுவரு நெறிப் புனைவின் நோக்கமாகும்.

ஆலங்குடி வங்கனார் தன் பாட்டொன்றில்,

கழனி மாத்து விளைந்துரு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்

(குறு.8:1-2)

என்று தலைவனைக் கூறுவர்; ஊரைப் புனைந்து அவ்வூரின் தலைவனை அடையாளங் காட்டுவர். வயலருகே இருந்த மாமரத்தினது கனிந்து வீழ்கின்ற இனிய பழத்தைப் பொய்கையிலுள்ள வாளை மீன்கள் கவ்வி உண்ணுதற்கு இடமாகிய ஊரையுடைய தலைவன்; தலைவன் ஊரின் இயல்பை ஆலங்குடி வங்கனார் தலைவனுக்குக் கட்டுப்பட்டு நடப்பது போலப் புனைகிறார். ஊரை ஊர்க் காட்சியாகப் புனையவில்லை; தலைவனுடைய ஊரில் நடக்கும் காட்சியாக அவர் புனைந்து காட்டுகிறார்.

சங்ககாலத்துக்குப் பிற்பட்ட புலவர்களானால் ஊரின் இயற்கைப் புனைவாக இக்காட்சியைப் பாடியிருப்பர். சங்கச் சான்றோர், மண்ணை மட்டும் தனியே பாடுகின்ற இலக்கியக் கொள்கையுடையவரல்லர். இயற்கையைப் புனைந்தாலும் மக்களுடன் இணைத்தே பாடும் புலனெறியுடையவர்கள். சங்க இலக்கியம் மக்களைப் பாடாது மரம் செடி கொடி விலங்கினங்களாகிய உயிரினங்களை மட்டும் பாடுவதில்லை. மக்களைச் சார்ந்து மக்களுக்காகவே இயற்கை என்பது சங்க நெறி.

பேணிக் காத்து வளர்க்கும் மாமரத்தின் பழம், மண்ணில் விழாது நீரில் விழுந்து வாளை தின்னுமாறு போயிற்று என்று ஆலங்குடி வங்கனார் பாடினார். இது தலைவனைச் சார்ந்த ஊர்ப்புனைவு ஆயினும் இதில் வேறோரு கருத்தும் உறைந்திருக்கிறது. 'தலைவிக்கே உரியவனாகிய தலைமகனை (எம்மைப்போன்ற) பரத்தையர் வாய்ப்பு நேர்ந்துழி நுகர்வர்' என்ற கருத்தை ஆசிரியர் வெளிப்படுத்தினார். தலைவனுடைய அல் அறச் செய்கைகளை இலை மறை காயாகச் சொல்லச் சங்கப்புலவர்கள் ஊரைப் புனைந்திருக்கின்றனர். இந்தப் புனைவு உத்தி இலக்கியத்தை வளப்படுத்துகிறது. இதே போன்று ஊரனைச் சுட்டும் மற்றொரு குறிப்பும் பரணர் பாடலில் பயிலுகிறது.

கொக்கினுக்கு ஒழிந்த தீம்பழம் கொக்கின்
கூம்புநிலை அன்ன முகைய ஆம்பல்
தூங்குநீர்க் குட்டத்துத் துடுமென வீழும்
தண்டுறை ஊரன்

(நற்.280:1-4)

கொக்கினால் விழுகின்ற பழம், ஆம்பற் பொய்கையிலே துடுமென விழும். இதன் கருத்து என்ன; பரத்தையால் இகழ்ந்து விடப்பட்ட தலைமகன் விரைந்து தோழியை வாயிலாகக் கொண்டு இங்கு வருகின்றான் என்ற கருத்தை உணர்த்துகின்றது. தலைவனுடைய ஊரில் நிகழும் இயற்கை நிகழ்ச்சி தலைவன் இயல்பை வெளிக்காட்டுவதாய் விளங்குகிறது.

ஆலங்குடி வங்கனாரும் பரணரும் ஒரே மாதிரியான இயற்கைக் காட்சியால் ஊரைப் புனைகின்றனர்; இயல்பாக நிகழும் காட்சிகள் ஆதலின் புலவர்கள் ஒன்று போலப் பாடியிருக்கின்றனர். தலைவனுடைய பரத்தைமை ஒழுக்கத்தைப் பேசவே இரண்டு புலவர்களும் நீர்நிலையைச் சார்ந்த மாமரத்தைப் பயன்படுத்துகின்றனர். ஒரு புனைவை ஒரே திணையில் அமைத்துப் புலவர்கள் கருத்தை வெளிப்படுத்துகின்றனர்.

7. அயற்புல ஊர்ப்புனைவு

ஊரைப் பாடலில் பாடுவதில் பல்வேறு போக்குகள் சங்கப் புலவரிடையே காணப்படுகின்றன. தலைவிக்கு உவமையாக ஊரைப்பாடுமாறு வேறு வகையாக ஊர்ப் பெயர் சுட்டிப் பாடுவது காணப்படுகின்றது. தமிழகம் அல்லாது பிற நிலத்தைப் புலவர் பாடலைச் சங்க நூல்கள் வெளிப்படுத்துகின்றனர்.

படுமரத்து மோசிகீரனார், தலைமகள் கூறுவதாகப் 'பாடலி' என்ற ஊரைக்குறுந்தொகையில் கூறுகின்றார். ~~பாடல் உணர்த்துகின்றது.~~ இவர் ஊரைத் தலைவிக்கோ பிறருக்கோ உவமித்திலர். தலைவன் பரத்தையர் வீட்டிலிருந்து தன் மனைக்கு வந்ததைக் கூறவந்தபோது, அச்செய்தியைச் சொன்னவனுக்குப் பாடலியை (பாடலி புத்திரம்) அன்பளிப்பாகப் பெறுவானாக என்று தலைவி இயம்பினாள். பரத்தை வீட்டிலிருந்து தன் மனை வந்தபோது தலைவி மகிழ்ந்து, தலைமகன் வரவுணர்த்திய பாணற்குப் 'பொன்மலி பாடலி பெறீஇயர்' (குறு.75:4) என்றனள். நல்ல செய்தியைச் சொல்லிய பாணன் மிகு செல்வம் பெற்று வாழ்க என்று கூறினள். இதனைப் புனையும் படுமரத்து மோசி கீரனார்,

> வெண்கோட் டியானை சோணை படியும்
> பொன்மலி பாடலி பெறீ இயர்
>
> (குறு.75:3-4)

என்றியம்பினார். 'பாடலி பெறீஇயர்' என்று கூறினாளேனும் அவள் கருதியது செல்வம் பெற்று வாழ்வாயாக என்பதாகக் கொள்க' என்று விளக்கம் எழுதினார் அறிஞர் உ.வே. சாமிநாதையர். பாடலியைத் தலைவி எவ்வாறு அறிந்தாள் என்பது புலனாகவில்லை. ஈண்டு புலவரின் அனுபவமே வெளிப்படுகிறது.

இன்னொரு பாடல், பாடலி நகரில் கங்கையாற்றில் பெருஞ்செல்வம் புதைத்து வைக்கப்பட்டதைக் கூறுகிறது. மாமூலனார் கூறும் இச்செய்தியை.

பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதல் கரந்த நிதியங் கொல்லோ (அகம்.365)

என்றுபாடுவர். மோசிகீரனாரும் மாமூலனாரும் வடநாட்டு ஊரான பாடலி புத்திரத்தைச் சுட்டுகின்றனர். இவர்கள் அங்குச் சென்று வந்து கூறுவாராயின் அவணுள்ள பயிரினங்களையும் சுட்டிப் பாடுவர். அத்தகைய புனைவின்மையான், ஊர்களைக் கேள்வியுற்றே புனைந்திருக்க வேண்டும் என்று டாக்டர்.தே. சொக்கலிங்கம் கருதுகிறார்.

ஊர்ப்புனைவின் போர் நிகழ்ச்சி

இடையன் சேந்தன் கொற்றனார் அகநானூற்றில் (375) பாழி என்னும் கோட்டையைப் புனைகின்றான். பாழியின் கோட்டையைச் 'செம்புறழ் புரிசைப் பாழி' என்பர் கொற்றனார். இப்பாழி துளுவ நாட்டு ஊர். இக்கோட்டையை அழித்து வென்றவன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி என்ற சோழனாவான். ஊர்ப்பெயர் இடம்பெற்றும் ஊர் புனைவு பெறவில்லை.

சோழருள் ஓரரசன் ஆரியரைத் தஞ்சையையடுத்த வல்லம் என்ற இடத்தில் நிகழ்ந்த போரில் முறியடித்தான். இதனைப் பாவைக் கொட்டிலார்,

மாரியம் பின்மழைத்தோல் சோழர் வென்வேல்
வில்ஈண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை
ஆரியர் படையின் உடைக என்
நேரிறை முன்கை வீங்கிய வளையே (அகம்.336)

என்று பாடுவர். இங்கு வல்லம் என்னும் ஊர் சுட்டப்படுகிறது. தலைவி தலைவன் மேலுள்ள கோபத்தைக் கழலும் வளை மீது செலுத்தி, வல்லத்துப் போரில் உடைந்த ஆரியர் படைபோல என்வளை உடையட்டும் என்று இயம்புகிறாள். அகநானூற்றுப்

பாடலில் கோட்டையும் ஊரும் புனையப்படுகின்றன. ஊரின் போர் நிகழ்ச்சிப்புனைவு ஈண்டு அமைகிறது.

8. இருதிறப்புனைவு

சங்கப் புலவர்களில் கபிலர் மிகப்பெருஞ் சான்றோர் ஆவார். அவர் இருங்கோவேளைப் பாரி மகளிரை மணந்து கொள்ள வேண்டினார்; இருங்கோவேள் அதற்கு மறுத்தமையான் அவர் அவனைச் சினந்து பாடிய பாடல் புறநானூற்றில் உள்ளது. அப்பாடல் இருங்கோவேளின் மூதூரையும் நாட்டையும் புனைகிறது.

வெட்சிக்	கானத்து	வேட்டுவ	ராட்டக்
கட்சி	காணாக்	கடமா	நல்லேறு
கடறுமணி	கிளரச்	சிதறுபொன்	மிளிரக்
கடிய	கதழு	நெடுவரைப்	படப்பை
வென்றி	நிலைஇய	விழுப்புக	ழொன்றி
இருபாற்	பெயரிய	வுருகெழு	மூதூர்க்
கோடிபல	வடுக்கிய	பொருணுமக்	குதவிய
நீடு நிலை	யரையத்துக்	கேடுங்	கேளினி

(புறம்.202:1-9)

ஊர் பற்றிய இத்தகைய புனைவு சங்க நூல்களில் பிறயாண்டும் இல்லை. ஊரமைப்பு, வரலாறு, ஊர் அழிவு ஆகியவற்றை இப்பாட்டு ஆவணச்சான்று போல விளக்குகிறது.

'இருபாற்பெயரிய வுருகெழு மூதூர்' என்று அழிந்த ஊரைச் சுட்டும் கபிலர், ஊரின் பெயரைச் சொல்லவில்லை. வெட்சி வளர்ந்த காட்டின் நடுவிடத்திலே வேட்டுவர் கடமா நல்லேற்றை விரட்டி அலைத்தனர்: அதற்கோ புகலிடமில்லை: அக்கடமா ஏறு மலைச் சாரலிலுள்ள மணி மேலே கிளம்பவும் சிதறிய பொன் விளங்கவும் விரைந்தோடும் இயல்பினது. இம்மலைப் பக்கத்து, வெற்றி நிலை பெற்ற சிறந்த புகழ் பொருந்திச் சிற்றரையம், பேரரையம் என்று இரண்டு

பகுதிகளாகப் பெயர் பெற்ற அச்சம் பொருந்திய பழைய ஊர். அவ்வூர் பல கோடியாக அடுக்கப்பட்ட பொன்னை இருங்கோவேள் மரபினருக்கு உதவியது; நீடிய நிலையையுடையது. இவ்வாறு ஊர்ப்பெயரையும் ஊரின் மலை வாழுநர் நிலையையும் அதன் பொருள் வளத்தையும் கபிலர் பேசுகின்றார். இவர் ஊர் இரண்டு பகுதியாக அமைந்திருந்த அமைப்பை 'இருபாற் பெயரிய வுருகெழு மூதூர்" (புறம்.202:6) என்பர். கபிலர் சிறு சிறு தொடர்களான் இருங்கோவேளின் அரையத்தைத் தெற்றெனப் புனைந்தார்.

ஊரைப் புனையும் கபிலர் ஊரழிந்தமைக்கான வரலாற்றையும் குறிக்கிறார். கழாஅத் தலையார் என்ற புலவரை இருங்கோவேள் மரபின் முன்னோன் இகழ்ந்தமையால் இந்த அழிவு ஏற்பட்டது. பாட்டின் முற்பகுதி அரையம் செல்வத்தோடும் சீரோடும் வாழ்ந்தமையைப் பேசுகிறது. பிற்பகுதி,

........ அடுக்கத்
தரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தாட் டொள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும்
பெருங்கல் வைப்பி னாடுகிழ வோயே

(புறம்.202:17-21)

என்று அவன் நாட்டைக் கபிலர் புனைகிறார். வேங்கைப் பூ பரந்த பாறை புலியைப் போல் தோன்றும் பெரிய பாறைகளையுடைய ஊர். அரையத்தின் செல்வம் அழிய இயற்கை வளம் பெருகியிருக்கிறது. இப்புனைவுக்கும் புறநானூற்றுப் பழைய வுரையாசிரியர் வேறொரு கருத்தை விளக்குவர். "ஏதம் செய்யாததூஉம் ஏதம் செய்வது போலக் கண்டார்க்கு அச்சம் வரத் தோன்றுமென்றமையான், இதுவும் இகழ்ச்சி தோன்ற நின்றது"[70] இயற்கைப் புனைவுக்கு பொருத்தமாகக் குறிப்புப் பொருளை அமைத்துக் கபிலர் பாடியிருக்கிறார். ஊரின் இயல்பு நிலையும் அழிவு நிலையும் ஒரே பாடலில் எடுத்துரைக்கப்பெறுகிறது.

இதுபோலக் குமட்டுக்கண்ணனார் பகைவருடைய நாட்டையும் பாட்டுடைத் தலைவன் நாட்டையும் இணைத்து ஒருபாடலில் புனைந்து பாடுகிறார். இதனால் பாடலில் அழிவாகவும் ஆக்கமாகவும் இருதிறப்புனைவு அமைகிறது.

புறப்பொருள் பாடல்களில் ஊரையும் நாட்டையும் இணைத்து அழிவுக் காட்சியாகக் குமட்டூர்க் கண்ணனார் புனைகின்றார். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் அழித்த பகைவர் நாட்டினையும் நாட்டிலுள்ள ஊரினையும் குமட்டூர்க் கண்ணனார் கண்டுவந்தது போலப் பாடுகிறார்.

யாண்டுதலைப்	பெயர	வேண்டுபுலத்	திறுத்து
முனையெரி	பரப்பிய	துன்னருஞ்	சீற்றமொடு
மழைதவழ்பு	தலைஇய	மதின்மர	முருக்கி
நிரைகளி	றொழுகிய	நிரைய	வெள்ளம்
பரந்தாடு	கழங்கழி	மன்மருங்	கறுப்பக்
கொடிவிடு	குரூஉப்புகை	பிசிரக்	கால்பொர
அழல்கவர்	மருங்கி	னுருவறக்	கெடுத்துத்
தொல்கவி	னழிந்த	கண்ணகன்	வைப்பின்
வெண்பூ	வேளையோடு	பைஞ்சுரை	கலித்துப்
பீரிவர்பு	பரந்த	நீரறு	நிறைமுதற்
சிவந்த	காந்தண்	முதல்சிதை	முதிற்
புலவுவில்	லுழுவிற்	புல்லாள்	வழங்கும்
புல்லிலை	வைப்பிற்	புலஞ்சிதை	யரம்பின்
அறியா	மையான்	மறந்துதுப்	பெதிர்ந்தநின்
பகைவர்	நாடுங்	கண்டுவந்	திசினே!

(பதிற்.15:1-15)

இப்புனைவு முழுமையும் பகைவருடைய அழிந்த நாட்டைப் பற்றிய குறிப்பாகும்.

'இமயவரம்பனுக்குப் பகையானார் நாட்டில் மேகம் தவழ்ந்துறையும் சுவர்களும் அதனைச் சார்ந்து காவற் காடுகளும் விளங்கும். விளையாடற்குரிய

கழுங்காடுமிடம் இருக்கும்! இத்தகைய அழகினையுடைய ஊர்களைச் சேரமன்னன் எரியூட்டி அழித்துவிடுகின்றான். குமட்டூர்க் கண்ணனார் இப்பழைய நிலையைத் 'தொல்கவின்? என்பர். இவை அழிந்தமையையே புலவர் விவரித்துக் 'கண்ணக வைப்பு' என்று ஊரைச் சுட்டுகின்றார். போரால் ஊரழிந்த நிலையைப் புனைந்த ஆசிரியர் பிற்பகுதியில் அங்கு ஏற்பட்ட மாற்றத்தைப் பல ஊர்கள் அழிந்த நாடாகப் பாடுகிறார்.

ஊர்கள் அழிந்த இடங்களில் வெள்ளிய வேளைச் செடியும் பசிய சுரைக்கொடியும் தழைத்து வளர்ந்தன. பீர்க்கங் கொடி ஏறிப் படர்ந்தன? நீரில்லாத உழுசால்களில் வேரோடுடன் வாடிய செங்காந்தள் நிறைந்திருந்தது; புலால் மணம் வீசும் வில்லேந்திய உயிர்க் கொலை புரியும் புல்லிய மறவர் வாழும் புல்லிலை வேய்ந்த பாழ்வீடுகளே உள்ள ஊர்கள் அவை. இது பகைவர் நாட்டுப்புனைவு.

1. பதிற்றுப்பத்துப் புனைவில் ஊர்களில் வளமையும் அழிவும் ஒருங்கு பேசப்படுகின்றன. ஆனால் ஊர்ப்புனைவிலும் நாட்டுப்புனைவிலும் காலை, மாலை, எற்பாடு என்பன போலச் சிறு பொழுது சுட்டியோ பெரும்பொழுது சுட்டியோ பாட்டு அமைந்திலது.

2ஊர்களும் நாடும் இணைந்தே புனைவு அமைகிறது. ஊர் என்றோ கானல் என்றோ சிறுகுடி என்றோ ஏதனும் ஒன்று மட்டும் தனிப்படுத்தப்பட்டுப் புனையப்படவில்லை.

3.அகப்பாடல்களில் பாலை அன்றிப் பிறவற்றில் ஆக்கக் காட்சியாக அமையும் புனைவு இங்கு அழிவுக் காட்சியாகவே புனையப்பட்டிருக்கிறது.

குமட்டூர்க் கண்ணனார், பாடலின் ~~முற்பகுதி~~ முற்பகுதியில் பகை மன்னன் ஊர்களையும் நாட்டையும் புனைந்தார். புறப்பாடலில் பாடினாலும் பகைவன் பெயரையோ பகைவன் ஊர்ப்பெயரையோ குமட்டூர்க் கண்ணனார்

சொல்லவில்லை; புனைவாலும் எந்நாடு என்பதை அறிய முடியவில்லை. இதன்பின்னர் இமயவரம்பன் நாட்டைக் குமட்டூர்க் கண்ணனார் பாடுகிறார்.

'கடல்படு பொருள்,மலைபடுபொருள், ஆறு பாயும் முல்லை, மருதம் என்ற நிலங்களில் உண்டாகும் பொருளும் பிறநாட்டுப் பொருள்களும் வளம்பலவும் பெறப்படும் அகன்ற நல்ல நாடு. இந்நாட்டில் இடையறாது விழாக்களைச் செய்யும் முழவு முழங்கும் மூதூர்' இங்கோ பலவகைக் கொடிகளின் நிழலிலே இருக்கும் பொன்னை மிகவுடைய (நியமம்) கடை வீதிகளில் 'சீர்பெறு கலிமகிழ் முரசு முழங்கும்'. இதனைக் குமட்டூர்க் கண்ணனார்.

கடலவுங்	கல்லவும்	யாற்றவும்	பிறவும்
வளம்பல	நிகழ்தரு	நனந்தலை	நன்னாட்டு
விழவறு	பறியா	முழவிமிழ்	மூதூர்க்
கொடிநிழற்	பட்ட	பொன்னுடை	நியமத்துச்
சீர்பெறு	கலிமகி	ழியம்பு	முரசின்
வயவர்	வேந்தே		

(பதிற்.15:16-18)

என்று புனைகின்றார். ஊர்ப்பெயரின்றி மூதூர் என்று ஊர் சுட்டப்படுகின்றது; புனைவில் உயிரினம், பயிரினம் எவையும் சொல்லப்படவோ புனையப்படவோ இல்லை. ஊரின் செல்வவளத்தைக் காட்டுமாறு பலவகைப் பொருளும் வந்து குவியும் களமாக ஊர் உரைக்கப்படுவதுடன் அவ்வூரைச் சார்ந்த வணிகச்சிறப்பும் 'பொன்னுடை நியமத்து' என்பதனால் புலப்படுத்தப்படுகிறது. மரம்,கொடி,விலங்கு போன்ற எவையும் இங்குப் புனையப்படவில்லை என்பது குறிப்பிடற்பாலது. விழாச்சிறப்பும் வணிகச்சிறப்பும் தாம் இவ ண் சிறப்புப் பெறுகின்றன. குமட்டூர்க் கண்ணனார், பகைவர் நாட்டையும் பாட்டுடைத் தலைவன் நாட்டையும் தானே கண்டு வந்ததாக ஒருங்கிணைத்து ஈண்டுச்சுட்டுகிறார்.

அகப்பாடல்கள் சிலவற்றில் தலைவன் ஊரும் நாடும் தனியே புனையப்படும் போது தலைவி ஊரும் நாடும் தனியே புனையப்படும். இரண்டையும் பாடலில் முன்னும் பின்னுமாகப் புலவர் புனைந்து நிறுத்துவர். அதுபோலப் புறப்பொருள் நுதலிய பதிற்றுப்பத்தில் பகைவன் நாட்டோடு பாட்டுடைத்தலைவன் நாடும் புனைவு பெறுகிறது. பகைவர் நாட்டுப்புனைவு, இயற்கையைக் காட்டுவதாகவும் அமையப் பாட்டுடைத் தலைவன் நாட்டுப்புனைவு வணிகமும் செல்வமும் நிறைந்த புனைவாகத் திகழ்கிறது.

அகப்பாடல்களில் 'நியம மூதூர்' (நற்.45:4) என்று ஊரையும் வணிக நிலையத்தையும் இணைத்துப் பாடுவர், புலவர். இப்புறப்பொருள் பாட்டில் ஊரைத் தனியேயும் நியமனத்தைத் தனியேயும் குமட்டூர்க் கண்ணனார் பாடுகிறார். ஒரே செய்தியை இருவரும் இரண்டு வகைகளில் பாடுகின்றனர்.

9. பரணரும் ஏழூரும்

சங்கப் பாடல்களில் ஊர்களைப் புனைந்து பாடும் வழக்கமுள்ளது. ஒரு பாடலில் ஒன்றுக்கு மேற்பட்ட ஊர்களைப் பரணர் போன்ற புலவர்கள் பாடுகின்றனர். அகநானூற்றுக் குறிஞ்சித் திணைப்பாடலில் பரணர் ஐந்து ஊர்களைச் சுட்டிப்புனைகுவர்.

1.	சீறூர்	152 : 2
2.	கானலம்பெருந்துறை	152 : 6
3.	பாரம்	152 : 12
4.	பாழி	152 : 13
5.	ஏழில்	152 : 13
6.	சோலை	152 : 15
7.	தலையாறு	152 : 22

மலையூர்

ஐந்து ஊர்களைப் பரணர் இப்பாடலில் குறிப்பர். 'சீறூர்' என்பது ஊரின் பொதுப்பெயர். தனிப்பட்ட எந்த ஊரையும் இப்பெயர் சுட்டாது. சங்க இலக்கியச் சொல்லாட்சியில் இது பெருவழக்கினது. பரணர் 'குன்றுழை நண்ணிய சீறூர்' (அகம்.152:2) என்பர். இந்த ஓரடியே சிறிய ஊர் குன்றுகளுக்கு இடையே அமைந்தமையை வெளிப்படுத்துகிறது. இது தலைவனுக்கு உரிமையுள்ள ஊர்; தலைவி வாழுகின்ற ஊர்.

மலை சார்ந்த குறிஞ்சித் திணை என்பதால் மலை ஊர்ப் பெயரால், ஊர் சுட்டப்படவில்லை; மலையிலுள்ள சிற்றூர்களுக்குத் தனிப் பெயரிட்டு வழங்கும் மரபு இல்லை.

நெய்தல் துறை

மலையூரைச் சொன்ன பரணர் அடுத்து நெய்தலூரைக் 'கானலம் பெருந்துறை' என்று சுட்டுவர். (அகம்.152:6) இது தித்தன் வெளியன் என்பானுக்கு உரியது. இவன் நுண்ணிய கோலையுடைய பாணரைப் பேணிய பெரும் புகழையும் சினம் மிக்க படையினையுமுடையவன். இக் கானலம் பெருந்துறையை 'இரங்கு நீர்ப்பரப்பின் கானலம் பெருந்துறை' (152:6) என்று வருணிப்பர், பரணர். தனம் தரும் நல்ல மரக் கலத்தைச் சிதையுமாறு தாக்குகின்ற சிறிய வெள்ளிய இறால்மீனின் கூட்டம் காணப்படும். அதுபோன்று மிகுந்த பகையைத் தரும் வலிமிக்க மிண்டன் என்பானது போர் செய்யும் மாறுபாடு சிதையவென்ற வெற்றி வேலையும் புகழ்மிகுந்த நல்ல ஈகையினையும் களிறுகளைக் கொடுக்கும் கொடையால் பெற்ற மகிழ்ச்சியினையுமுடைய பாரம் என்னும் ஊர்த் தலைவனான நன்னனுக்குரிய ஏழில் என்ற நீண்ட மலையின் பாழி என்னும் பக்கமலைக் கண் வாழுகின்ற மகிழ்ச்சியான மயில்களின் தோகையைப் போலத் தலைவியின் வளைந்த சுருண்ட கூந்தல்கள் ஒத்து விளங்கும்.

பரணர், தலைவியின் கூந்தலுக்கு மயில் தோகையை உவமித்து அவள் அழகு நலத்தைக் கூறுகிறார். பொதுவாக, மயில் என்றுரையாது இன்னவன் ஆளுகின்ற இன்ன மலை மயில் என்று அவர் குறிப்பது கருதத் தக்கது. நன்னனுடைய பாழி மலை மயில் வளமும் வனப்பும் மிக்கது ஆதலின் அதனை அவ்வாறு சுட்டினார். 54

மலை மயில்

பாழியைச் சுட்டிய பரணர் ஏழில் மலையையும் 'ஏழில் நெடுவரை' என்று பின்னடை விளக்கத்தால் மலையின் இயல்பை விளக்குவர். இங்கு ஒன்றன்பின் ஒன்றாய் வருகின்ற இடம் உணர்த்தும் மூன்றும் பாழியைக் காட்ட வருவன.

இசைநல்	ஈகைக்	களிறுவீசு	வண்மகிழ்ப்
பாரத்துத்	தலைவன்	ஆர	நன்னன்
ஏழில்	நெடுவரைப்	பாழிச்	சிலம்பில்

(அகம்.152:12-14)

என்பது அப்பகுதி. பாரத்துத் தலைவன் நன்னன்; அவனுடைய நீண்ட மலை ஏழில்; அம்மலையின் பக்க மலையாகத் திகழ்வது பாழி. பாழி மலையைப் புனையும் நோக்கில்தான் ஆசிரியர் இவற்றை உணர்த்துகிறார்.

மலைச் சோலை

கானலம் பெருந்துறையைக் குறித்தது போலப் பரணர் 'சோலை' ஒன்றையும் சுட்டுவர். வல்வில் இளைஞர்களின் தலைவனான நள்ளியைக் கண்டீரக் கோப்பெருநற்கிள்ளி என்பர். இவனுடைய மலைச் சோலையிலுள்ள வண்டுகள் உண்ணும்படி மலர்ந்த கடவுள் சூடுதற்குரிய காந்தள் மலர்களுள்ளும் சிறந்த அழகிய மலர் பலவும் ஒருங்கு மணம் வீசுவது போலத் தலைவியின் தோள்கள் மணம் வீசும். தலைவியின் தோளின் மணத்துக்கு நள்ளியின் சோலை மலர் மணம் உவமமாகிறது. சோலை யாருக்கு உரிமையுடையது என்றுதான் பரணர் விளக்குகின்றார். அன்றி அதனைப் புனையவில்லை. வள்ளல் அல்லது குறுநில மன்னர்களின் பெயரைச் சுட்டுவதில்தான் பரணருக்கு மிக்கார்வம் உளது; புனைவில் இல்லை.

தலையாறு

பாடலின் இறுதியில் ஆய் கானத்தைச் சார்ந்த 'தலையாறு' என்னும் இடத்தைப் பரணர் சுட்டுவர். பரிசு பெற வந்தோர்க்குத் தகுதியிருப்பினும் இல்லையாயினும் மிடாச் சோற்றை மட்கலம் நிறைய வீசுமியல்பினன். பெரிய யானைகளையுடையவன் ஆய். இவன் நாட்டுத் தலையாறு என்னும் மிக உயர்ந்த மலையிலுள்ள மூங்கிற்கணுக்களின் நடுவிடத்தைப் போன்றன. தலைவியின் தோள்கள்.

தோள் மணமும் வனப்பும்

பரணர் தலைவியின் தோள் மணத்துக்கும் அழகுக்கும் இரண்டு ஊர்களை உவமிப்பர். இரண்டு புனைவிலும் இயற்கை நிலையை - இயற்கை அழகைப் புனைவது மிகச்சிறு பகுதியே. 'ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பு' (அகம். 152:13) என்றும்

மாஅல் யானை கானத்துத்
தலையாற்று நிலைஇ சேயுயர் பிறங்கல்

(அகம் 152:21-22)

என்றும் வருகின்றன. இவை இயல்பான புனைவுகள்; மிகை நவிற்கியோ மிகைக் கற்பனையோ இவற்றில் இடம் பெற்றில. புனைவுகளால் பாடலில் அடிகள் கூடுதலினும் புனை நிலங்களின் ஆட்சியாளர்/தொடர்பாளரை இணைப்பதாலேயே பாடலடிகள் மிகுகின்றன. பரணர் இயற்கையைப் புனைவதிலும் அந்நிலங்களின் உரிமையாளர் குறித்த செய்திகளைக் கொண்டே புனைவுகளைத் தருகிறார்.

ஏழு இடங்கள் சுட்டப்படல்

பரணர் பாடலில் வருகின்ற ஏழு இடங்களில், சீறூர், பாரம், ஏழில், பாழி, சோலை, தலையாறு என்ற ஆறும் குறிஞ்சிச் சார்பின; தலைவன், தலைவி வாழுமிடம் சீறூர்; பாரம், ஏழில், பாழி மூன்றும் நன்னனுக்குரியன; சோலையடுக்கம் கண்டீரக் கோப்பெருநற்கிள்ளிக் குரியது. தலையாறு என்னும் சேயுயர் பிறங்கல் ஆய்க்குரியது. கானலம் பெருந்துறை, தித்தன் வெளியனுக்குரியது. இது நெய்தல்

நிலம்; தித்தன் வெளியன் உறந்தைச் சோழன் எனவே கானலம் பெருந்துறை சோழநாட்டைச் சார்ந்த கடற் பட்டினமாகும். இத்துறையில் வாழும் கூட்டமான இறால் மீன்கள் தனம் தரும் மரக்கலங்களைத் தாக்கும். அதுபோல மிக்க பகையைத் தருகின்ற பிண்டனுடைய போராற்றலைச் சிதைக்கும் இயல்புடையவன் நன்னன். நன்னனுடைய வெற்றிச் சிறப்பையும் போர்ச் சிறப்பையும் விளக்க முற்பட்ட பரணர் பிண்டனைச் சொன்னார்; பிண்டனுடைய வீரத்தையும் தாக்கும் வன்மையையும் புலப்படுத்த தித்தன் வெளியனுடைய கானலம் பெருந்துறை இறால் மீன்கள் கலத்தைத் தாக்குதலை உவமித்தார். இவ்வுவமையும் கருத்தும் பாழியை விளக்க வந்தன. இவ்வாறு ஒன்றை விளக்க இன்னொன்று இடம் பெறுகின்றது.

1. தலைவி கூந்தல்	-	பாழி மலை	-	மயில் தோகை
2. தலைவி தோள் மணம்	-	நள்ளி மலை	-	மலர்
3. தலைவி தோள் அமைப்பு	-	ஆய் கானம்	-	வேய்

இங்ஙனம் மூன்றிடத்திலுள்ள பொருள்களைத் (தோகை, மலர், மூங்கில்) தலைவியின் அழகுக்கு உவமிக்கிறார் பரணர். இந்த ஏழு இடங்களின் இயல்பைச் சிறு சிறு அடிகளில் புனைந்த பரணர் அவற்றை ஆளுவோருடன் தொடர்புபடுத்திப் பாடலை விரித்து அமைத்துள்ளார். இவ்வாறு ஏழு இடங்களை ஒருபாடலில் பரணர் பாடுகின்றார்; ஏழு இடங்களைப்பாடும் போது ஒவ்வொன்றையும் வெவ்வேறாகச் சுட்டுகிறார்; புனைவிடங்கள் கூடுதலாகலின் புனைவு விரிவாகவோ விளக்கமாகவோ அமையவில்லை. இவற்றில் பாரம், பாழி என்பன ஊர்கள்; எழில் மலை, தலையாறு மலையிலுள்ள ஊர்; எனினும் பாடலில் ஊர்ப்புனைவு சிறக்க அமைய வில்லை.

ஊர்ப்புனைவு நோக்கம்

ஊர்ப்புனைவை ஒவ்வொரு புலவர்களும் ஒவ்வொரு வகையாகப் பாடுகின்றனர். ஒவ்வொரு புலவரும் தங்களுடைய தகுதியை உணர்ந்து தத்தம் புலமைத் திறத்துக்கேற்பப் புனைகின்றனர். ஒரே யாப்பு வகையில் - ஒரே திணையில் பாடுகின்ற பாடல்களில் கூடப் புனைவுப் போக்கு மாறுபடுகின்றது. ஓரம்போகியார்

ஐங்குறுநூற்று வேழப்பத்தில் வேழக்கரும்பைக் கருப்பொருளாக்கித் தலைவனூரைச் சுட்டுகின்றார். அப்பத்தில் ஒரு பாட்டில் தலைவனைச் சுட்ட வந்த தலைவி அவனை 'வேழ மூதூரூரன்' (ஐங்.15:3) என்பாள். இங்கு வேழக்கரும்பைப் பற்றிய புனைவோ வேறு செடி கொடிகளோ விலங்கினங்களோ சொல்லப்படவில்லை. ஊர் 'வேழ மூதூர்' என்று அடை பெற்றுத் தன் நீர்மையைப் புலப்படுத்துகிறது. தலைவன் இயற்பெயர் வாராது இத்தொடரால் ஓரம் போகியார் தலைவனைக் குறிக்கிறார்.

இந்த அடியில் 'வேழம்' என்ற சொல்லாட்சி காணப்படுகிறதேயன்றிக் கருத்தை உணர்த்தும் வேறு புனைவுக் கூறுகள் பயின்றில. ஊர்ப் புனைவில் வேழக்கரும்பாகிய கொறுக்கச்சி பயிரினமாக இடம் பெறுகிறது. பாட்டில் நேரடியாகக் கருத்தை உணர்த்தாது குறிப்பாகக் கருத்தை உணர்த்த வேழமாகிய புல்லினம் இங்குப் புனையப் பெறுகிறது. ஓரம் போகியார் பாட வேண்டிய பாடு பொருளை வெளிப்படப் பேசாது அதனை இயற்கைப் புனைவின் மூலம் புலவர் காட்டுகின்றார். ஒரே பயிரினத்தைப் பத்துப் பாக்களிலும் புலவர் ஊருடன் தொடர்புபடுத்திப் புனைகின்றார்.

பத்துப்பாக்களிலும் வேழக்கரும்பு ஊர்ப் புனைவாக - மருதத்திணையை - உணர்த்தப் பயன்படுகிறது. 'மனை நடு வயலை வேழஞ் சுற்றம்/துறை கேழுரன்' (ஐங்.11:1-2) என்பதும்

கொடிப்பூ வேழந் தீண்டி யயல
வடுக்கொண் மாஅத்து வண்டளிர் நுடங்கும்
மணித்துறை யூரன்

(ஐங்.14:1-3)

என்பதும் வேழக்கரும்பைக் கொண்டு அமைந்த புனைவுகள். மனைக் கண் வயலைக் கொடி புறத்து வேழம் சுற்றும் ஊரன் என்றது மணமனைக் கண்ணே வைகு ஞான்று பரத்தையர் திறமே சூழ்வான்; தலைவனுடைய இந்த நீர்மையைக் காட்டிட

வேழக்கரும்பும் வயலைக் கொடியும் பாடலில் ஊர்ப்புனைவாக அமைக்கப்பெறுகின்றன. இன்னொரு பாடலில், நீண்ட பூவினையுடைய வேழம் தீண்டுதலான் வடுக்கொள் மாஅத்து வண்டளிர் நுடங்கும் என்றியம்பப் பெறுகிறது. இஃது ஊர்ப்புனைவு. ஆனால் இந்த இயற்கைக் காட்சி உணர்த்தும் கருத்து வேறொன்று உள்ளது. பரத்தையரால் தனக்கு உளவாகிய மெலிவு இதன் மூலம் வெளிக்காட்டப்படுகிறது. இவ்விரு சான்றுகளும் ஊர்ப்புனைவாக வேழக்கரும்பைப் புனைவுதன் நோக்கம் இன்னொரு கருத்தை வெளிப்படுத்துவதாக அமைகிறது. மண்ணையும் மரம் செடி கொடிகளையும் புனையும் ஊர்ப்புனைவு ஊரையும் உணர்த்தி ஊரில் வாழுகின்ற மக்களின் ஒழுகலாறுகளையும் உணர்த்துகின்றது. வினையால் வினையாக்கிக் கோடல் போல ஓரம் போகியார் ஒரு புனைவால் இரண்டு கருத்துகளை வெளிப்படுத்துகிறார்.

சங்கப் புலவர்கள் தனித்தனிப்பாட்டுகளாகப் பாட முனைந்த போது அவர்களின் பாவாக்கத்திற்கு அடிப்படை கருத்தளவேயாகும். பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து என்று பாடிய போதும் இதுவே நெறியாகும். ஆனால் திணைக்கு நூறு பாட்டு என்று ஐங்குறு நூறு பாடப்பட்ட போது அடிவரையன்றி அமைத்துக் கொண்டே பாடப்பட்டிருக்கிறது. அதனால் தான் ஐங்குறு நூற்றுப் பாடல்களில் அடி எண்ணிக்கை கூடுதலாக அமையவில்லை. ஐந்து திணையை ஐந்து புலவர்கள் வகுத்துக் கொண்டு அளவாகப் பாடல்களை ஆக்கியுள்ளனர். அதனால்தான் இயற்கைப் புனைவாகிய ஊர்ப்புனைவுடன் இன்னொரு கருத்தையும் வெளிப்பட வெள்ளிடை மலை எனப் புனைந்தால் பாடலடிகளின் எண்ணிக்கை மிகும். ஐங்குறு நூற்றுப் பாடல்கள் மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையு உடையனவாக இயற்றப்பட்டிருக்கின்றன. இந்த அடி எல்லை அளவுக்குள் பாடவேண்டிய கட்டாயத்தால், புலவர்கள் ஊர்ப் புனைவைச் சுருக்கமாக அமைத்தனர்; பாடு பொருளையும் வெளிப்படச் சொல்லாது பாட வேண்டுமாதலின் அப்பொருளைக் கருப் பொருளுக்குள் மறைத்துப் பாடியிருக்கின்றனர்.

வேழப்பத்து முழுமையும் வேழக் கரும்பைக் கொண்டு அமைகின்ற புனைவாகும். அந்தப் புனைவுக்கு ஓர் உள்ளுறைக் கருத்து விளக்கப்பெறுவதாலும் அந்த இயற்கைப் புனைவு சிறப்புப் பெறுகிறது. ஆதலின் ஊர்ப் புனைவின் நோக்கம், வெறும் புனைவைக் காட்டுவதன்று; அஃது உள்ளடக்கிய கருத்தொன்றையும் விளக்குவது என்பது பெறப்படும்.

ஓரம்போகியார் வேழப்பத்து என்னும் பத்துப் பாடல்களிலும் வேழக்கரும்பு என்னும் கொறுக்கை ஊரிலிருத்தலைக் கொண்டு புனைகுவர். மனையில் நட்ட வயலைக் கொடி வேழக் கரும்பைச் சுற்றி வளரும் ஊர் (ஐங்.11); கரையில் நின்ற வேழக்கரும்பு வயற்கரும்புப் போலப் பூக்கும் (ஐங் 12), ஊரன்; நன்றாகப் போகின்ற குதிரையின் தலையிலணிந்த உயர்ந்த சாமரை போலக் கரையில் வளரும் வேழம் வெண்மையான பூக்களைப் பூக்கும் குளிர்ந்த துறையினையுடைய ஊர் (ஐங் 13). கொடி போன்ற பூக்களையுடைய வேழம் தீண்டுதலால் அயலவாகிய வடு நிறைந்த மாமரங்களின் வளமான தளிர்கள் அசையும் நீல மணிபோல் தெளிந்த நீரையுடைய துறையூரன். (ஐங்.14). பூவினையுடைய வேழக்கரும்பின் துளை பொருந்திய திரண்ட தண்டின்கண் சிறுதொழு மகளிர் அஞ்சனம் பெய்யும் பூக்கஞுலூரன் (ஐங்.16). புதலுக்கு மேலே உயரமாக நின்று அசையும் வேழ வெண்பூ, வானத்தில் பறக்கும் வெண்குருகு போலத் தோன்றும் ஊரன் (17), கருங் கோரையை ஒத்த செருந்தியுடன் வேழக் கரும்பு போலக் காற்றினால் சுழன்று அசையும் கழனியூரன் (18), எக்கரிடத்து நின்ற மாமரத்தின் புதிதாக மலர்ந்த பூக்களையுடைய பெரிய கொம்பு, புணர்ந்தோர் மெய்ம்மணங்கமழும் தண்பொழிலின்கண் வேழவெண்பூவின் உளை அப்பூக்களைத் துடைத்தழிக்கும் ஊரன் (19) அறுகால் அஞ்சிறைத் தும்பி நூற்றிதழ்த் தாமரைப் பூவிலுள்ள சினையை அழிக்கும். வேழ வெண்பூ விளங்கும் ஊரன் (20). இவ்வாறு ஓரம்போகியார் ஒரே கருப்பொருளான வேழக்கரும்பை அமைத்துக்கொண்டு தொடர்ந்து பத்துப் பாடல்களையும் பாடுகிறார்.

ஓரம்போகியார் புனைவு

ஓரம்போகியாரின் ஐங்குறு நூற்று மருதத்தில் - எந்தப் பத்தும் - ஊரால் பெயர் பெறவில்லை. அம்மூவனார் தொண்டிப்பத்து என்று ஒன்று அமைத்தவாறு இவர் பத்து அமைத்திலர். ஓரம்போகியார், வேட்கைப் பத்தான முதற்பத்தில், அடைகளைப் பெய்து பாடுவதுடன் இயற்கை நலங்களையும் புனைந்து பாடுவர். ஊரைப் புனையும்போது களவு, கற்பு என்ற கைகோள் மாறினும் பாடும் முறையாலும் சொல்லும் கருத்தாலும் புலப்படுத்தும் நெறியாலும் மாறுபாடு தோன்றுவதில்லை. வேட்கைப் பத்தின் முன்னைந்து பாடல்கள் கற்பியலைச் சார்ந்தன; பின்னைந்து பாடல்கள் களவியலைச் சார்ந்தன. பத்துப்பாக்களும் தோழி கூற்றுப்பாடல்கள். தோழி, தலைவன் ஊரைப் புனைந்து பேசுவனவே இப்பத்தில் ஊர்ப்புனைவாகின்றன. கைகோள் மாறுவது, புனைவில் மாற்றம் ஏற்படவில்லை.

'பூக்களையுடைய காஞ்சி மரங்களும் சினையான சிறு மீன்களுமுள்ள புதிய வருவாயை உடைய ஊரன்' (1:4-5). 'பல இதழ்களையுடைய கருங் குவளையுடன் நெய்தல் மலர்களும் ஒப்ப மலரும் குளிர்ந்த துறையையுடைய ஊரன்' (2:4-5). 'முதலைப் போத்துத் தன்னொடு வாழுகின்ற முதிய மீன்களைத் தின்னுகின்ற குளிர்ந்த துறையினையுடைய ஊரன்' (5:4-5) 'அகன்ற பொய்கையில் முகைகள் கொண்ட தாமரையினையுடைய குளிர்ந்த நீர்த்துறையுள்ள ஊரன்' (6 ? 4-5) 'உளை பொருந்திய பூக்களையுடைய மருத மரத்தில் குருகுகள் தம் கிளை சூழ இருக்கும் குளிர்ந்த துறையினையுடைய ஊரன்' (7:4-5). 'கயல்மீனை உண்ட நாரை நெற்போரில் தங்கும் குளிர்ந்த துறையையுடைய ஊரன்' (9:4-5).'பூத்து மணம் வீசும் மாவினையும் புலால் நாறும் மீனினையுமுடைய குளிர்ந்த துறையையுடைய ஊரன்(10:4-5) 'பின் விளைவு வேண்டி விதைத்தற்குச் சென்ற உழவர் முன்னே விளைந்து முதிர்ந்துள்ள நெல்லைக் கொண்டு மீளும் பூக்கள் நிறைந்த ஊரன்' (3:4-5). 'அசைகின்ற தளிர்களையுடை மாமரத்தில் அழகிய மயில் தங்கியிருக்கும் பூக்கள் நிறைந்த ஊரன்' (8:4-5) பூத்து விளங்கும் கரும்பும் காய்த்துச் சிறக்கும் நெல்லுமுடைய கழனியூரன் (4:4-5). இவ்வாறு பத்துப் பாடல்களிலும், ஓரம் போகியார், தலைவனுடைய ஊரைப் புனைந்திருக்கின்றார்.

அமைப்பின் அழகு

இவ் வேட்கைப் பத்து, ஐங்குறு நூற்றின் முதற்கண் அமைந்திருக்கிறது. இப்பாடலின் ஐந்தாவது அடியில், தலைவன் ஊர், ஓரடைச் சொல்லுடன் குறிக்கப்படுகிறது. அதற்கு முந்திய நான்காம் அடி இயற்கைப் புனைவாகிறது. பத்துப் பாடல்களும் ஒன்று போல நேர்த்தியான அமைப்புடன் சிறந்து விளங்குகின்றன. இப்புனைவின் வழி, ஓரம்போகியார், தலைவன் ஊர்ப்பெயரையும் தலைவன் பெயரையும் சொல்லாமல் ஊரின் தனித்தன்மை தோன்றப் புனைகின்றார். பத்துப்பாடல்களும், வெவ்வேறு புனைவுகளைக் காட்டினாலும், அனைத்தும் ஓரூரைப் பற்றிய புனைவு என்பதையே உணர்த்துகின்றான். தலைவன் என்ற குறிப்பாலேயே இக்கருத்து எழுகின்றது.

ஓரூரைப் பாடும் பத்துப் பாடல்கள்

ஓரம் போகியார், தலைவனுடைய ஊரில் காஞ்சி, மருதம், மா ஆகிய மரங்கள் வளர்தலையும் அவை பூத்திருத்தலையும் அவற்றில் பறவைகள் தங்கியிருத்தலையும் காட்டுகிறார். அவ்வூர்ப் பொய்கையில் கருங்குவளை, நெய்தல், தாமரை போன்ற மலர்கள் மலர்ந்திருக்கின்றன என்றும் அப்பொய்கைகளில் சிறு மீன், முழுமீன், கயல் மீன், புலால் வீசும் மீன் எனப் பல்வகை மீன்களும் முதலைப் போத்தும் இருக்கின்றன என்றும் குருகு, மயில், நாரை முதலிய பறவைகள் உள்ளன என்றும் ஆசிரியர் பாடல்களில் பேசுகிறார். மருத நிலத்துக்குச் சிறப்புச் சேர்க்கும் நெல்லும் கரும்பும் நிறைய விளைந்திருத்தலையும் இவர் புனைகிறார். ஓரம்போகியார், ஊரின் பெயரைச் சுட்டாது பன்னலம் பழுநிய ஓரூரை வேட்கைப் பத்தில் புனைந்துரைக்கின்றார்.

ஊர்ப் புனைவுப் பொருள்கள் - அட்டவணை

எண்	அடை	மரம்	மலர்	மருதப்பயிர்	நீர்வாழ்வன	நிலம் வாழ்வன	பறவை
1	யாணர் ஊரன்	காஞ்சி	-	-	சினைச் சிறுமீன்	-	-
2	தண்டுறை யூரன்	-	கருங் குவளை நெய்தல்	-	-	-	-
5	"				சிறியமீன்	முதலைப் போத்து	
6	"		தாமரை				குருகு
7	"	மருதம்					
9	"			நெற்போர்	கயல்மீன்	-	நாரை
10	"	பூத்தமா மரம்	-	-	புலால் நாறும்மீன்	-	-
3	பூக்கஞ் ஞூரன்	-	பூக்கள் -	விளைந்த நெல்	-	-	-
8	"	மாமரம்	பூக்கள்				மயில்
4	கழனி யூரன்	-	-	பூத்த கரும்பு காய்த்தநெல்	-	-	-
11	துறைகே ழூரன்	வய லைக் கொடி	-	வேழக் கரும்பு	-	-	மனை
12	"			"			
13	தண்டுறை ஊரன்	-	வேழக் கரும் பின் வெண்பூ	வேழக் கரும்பு	-	-	- -
14	மணித் துறை யூரன்	வடு நிறைந்த மாமரம்	கொடிப் பூ வேழம்	வேழக் கரும்பு			
15	மூதூர் ஊரன்			வேழக் கரும்பு			

16	பூக்களு ஆரன்			வேழக் கரும்பு			
17	ஊரன்		வேழ ஒண்பூ	வேழக் கரும்பு			
18	கழனியூரன்			வேழக் கரும்பு செருந்தி			
19	ஊரன்	பூத்தமா மரம்	வேழ வெண்பூ	வேழக் கரும்பு			
20	துறைநணி ஊரன்		தாம ரைப்பூ	வேழக் கரும்பு		அறுகால் அஞ்சிறைத் தும்பி	
21	தண்துறை ஊரன்	நீர் முள்ளி ஆம்பல்			புள்ளிக் கள்வன்		
22	ஊரன்	முள்ளி			"		
23	புனலணி ஊரன்	முள்ளி	பூக்கள்		அனைக் கள்வன்		
24	மகிழ்நன்				புள்ளிக் கள்வன் முதலை	"	
25	கழனி ஊரன்	வல்லைச் செங் கொடி			களவன்		
26	ஊரன்	வள்ளை கரந்தை கொடி			களவன்		
27	ஊரற்கு			செந்நெல்	களவன்		
28	ஊரற்கு				களவன்		
29	கழனி ஊரன்			வித்தியாலன் முறை	களவன்		
30	ஊரற்கு			நெல்லின்பூ	களவன்		

இந்த அட்டவணையால், ஓரம் போகியார் மருதத் தலைவனுடைய ஊரைப் புனைய எந்த எந்த பயிரினங்களையும் உயிரினங்களையும் கையாண்டார் என்பது புலனாகும். இவ் வேட்கைப்பத்தில், விலங்கினங்கள் எவையும் சுட்டப்படவில்லை. நீர் நிலைப் பூக்களும் உயிரினங்களும் தாம் புனைவில் வருகின்றன. மலை வாழ் பறவையான மயிலைப் பாட்டுக் கூறுகின்றது.

வேழப்பத்து

ஓரம்போகியாரின் இரண்டாம் பத்து, வேழப்பத்து. முந்திய பத்தில் இடம் பெற்ற தண்டுறையூரன் (13:3), பூக்கஞுலூரன் (16:3) கழனியூரன் (18:2) என்பன தலைவனைக் குறிப்பனவாய் இப்பத்திலும் காணப்படுகின்றன. ஊருக்கு அடைநல்காது 'ஊரன்' என்று தலைவனைக்கூறும் இரண்டு பாடல்கள் (17:2), (19:2) இப்பத்தில் உள்ளன. வேழப்பத்து என்ற பெயருக்குத் தக்கவாறு, அனைத்துப் பாடலிலும் வேழக்கரும்பைக் குறிக்கும் வேழம் என்ற மருதக்கருப்பொருள் இடம்பெறுகிறது. தலைவனுடைய ஊரில் வேழக்கரும்பு பூத்திருப்பதை ஓரம் போகியார் 'கொடிப்பூ வேழம்' (14:2) என்றும் 'வேழம் வெண்பூப் பகரும்' (13:2) என்றும் பூவின் வடிவம் தோன்றப் புனைகின்றார். இப்பத்தில் மாமரம் பூத்தும் காய்த்துமிருப்பதாகப் புனையப்பட்டுள்ளது. வயலைக் கொடி, செருந்தி, தாமரைப்பூ, அஞ்சிறைத்தும்பி ஆகியனவும் பாடலில் பயிலுகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு, ஓரம்போகியார் தலைவன் ஊரைப் புனைகின்றார். பத்துப் பாடல்களிலும் வேழக்கரும்பை மையமாக்கி ஆசிரியர் ஊரைப் புனைகின்றார். மருதநில விலங்கும், பறவையும் ஒன்று கூட இப்பத்தில் புனையப்பட்டில.

களவன்பத்து

மூன்றாம் பத்து, 'களவன் பத்து' என்ற பெயரினது. தலைவனை ஊரன் (22 :2), தண்துறை ஊரன் (21:2) கழனி ஊரன் (25:2, 29:2) என்று ஓரம்போகியார் குறிப்பர். ஊரன் என்ற சொல் நான்காம் வேற்றுமை உருபு ஏற்று ஊரற்கு (27:2) (28:2) என்று பயில்வது இப்பத்தில் காணப்படுகிறது. தலைவனை 'மகிழ்நன்' (24:3) என்ற சொல்லால், இப்பத்திலுள்ள இப்பாட்டே முதற்கண் சுட்டுகின்றது. இப்பத்து முழுமையும் களவனாகிய நண்டு பேசப்படுகின்றது.

மருத நிலத்தில் வாழுகின்ற உயிரினங்களில் ஒன்று நண்டு. நண்டு தன்னுடைய கூரிய உகிரால் ஆம்பல் தண்டினைத் துண்டித்துவிடும். இவ்வாறு மருதநில நண்டு வாழ்தலை,

முள்ளி நீடிய முதுநீ ரடைகரைப்
புள்ளிக் கள்வ னாம்ப லறுக்கும்
தண்டுறை யூரன் (ஐங்.21:1-3)

என்றும்

அயல்புறந் தந்த புனிற்றுவளர் பைங்காய்
வயலைச் செங்கொடி கள்வ னறுக்கும்
கழனி யூரன் (ஐங்.25:1-3)

என்றும்

கரந்தையஞ் செறுவில் துணைதுறந்து கள்வன்
வள்ளை மென்கா லறுக்கு மூரன் (ஐங்.26:1-3)

என்றும்

வித்திய வெண்முளை கள்வ னறுக்கும்
கழனி யூரன் (ஐங்.29:1-2)

என்றும் நான்கு பாடல்களில் நண்டின் ஒரே செயலைக் குறிக்கின்றார். ஒவ்வொரு பாட்டிலும் ஆம்பல், வயலை, வள்ளை, முளைத்த நெல்லின் வெண்முளை எனத் துண்டிக்கப்படுகின்ற பொருளே வேறுபடுகிறது. இப்புனைவால் தலைவன் பல பரத்தையருடன் தொடர்பு கொண்டிருக்கின்றான் என்ற கருத்து வெளிப்படுகின்றது. ஒரு பாடலில் (ஐங்.24) நண்டுடன் முதலையும் இணைத்துப் பேசப்படுகிறது. தாய்ச்சாகப் பிறக்கும் நண்டும் பிள்ளையைத் தின்னும் முதலையும் வாழுகின்ற ஊர்.

தோழிக்குரைத்த பத்து

இந்நூலின் நான் காம்பத்து 'தோழிக்கு உரைத்த பத்து'. இப்பத்தில் தலைவனை ஊரன் என்றும் மகிழ் நன் என்றும் குறிப்பர் ஆசிரியர். முட முதிர் மருத மரமும் உயர்ந் தோங்கிய மருத மரமும் ஆம்பலும் தாம் பேசப்படுகின்றன. இறுதிப்பாட்டில், கெண்டை மீனும் வண்டும் உரைக்கப்படுகின்றன. முந்தைய பத்துகள் போல இப்பத்திலுள்ள பாடல்களில் தலைவனுடைய ஊர் விளக்கமாகவோ விரிவாகவோ புனையப்படவில்லை.

ஊரைப் புனையாப் பாடல்கள்

இப்பத்திலுள்ள ஐந்து பாடல்கள் ஊரைச் சுட்டுதலோ புனைதலோ இன்றிக் காணப்படுகின்றன. (32, 36, 37, 38, 39) அவற்றுள் ஒரு பாட்டு:

அம்ம வாழி தோழி மகிழ்நன்
ஒருநாள் நம்மில் வந்ததற் கெழுநாள்
அழுப என்ப அவன் பெண்டிர்
தீஉறு மெழுகின் ஞெகிழ்வனர் விரைந்தே (ஐங்.32)

என்ற பாட்டில், தலைவனை மகிழ்நன் என்றமையால் ஊரையோ ஊர்ப்புனைவையோ பாட வேண்டிய தேவை ஏற்படவில்லை. அகப்பொருட் செய்திகளே, பாடலடிகளை நிறைவு செய்யப் போதியனவாக உள்ளன. அடிகளை விரிக்க வேண்டிய தேவையின்மையால், புனைவுக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. அதுபோல இன்னொரு பாடலும் ஊர்ப்புனைவின்றி உள்ளது.

அம்ம வாழி தோழி மகிழ்நன்
நயந்தோர் உண்கண் பயந்து பனிமல்க
வல்லன் வல்லன் பொய்த்தல்
தேற்றான் உற்ற சூள் வாய்த்தல்லே (ஐங்.37)

இது காதற்பரத்தை தன் தோழிக்குக் கூறியது. இப்பாடலிலும் தலைவனுடைய ஊர் புனையப்படவில்லை. ஊர் புனையப்பட்டுள்ள பாக்களிலும் மருத மரமும் ஆம்பலும் கெண்டை மீனும் வண்டும் புனையப்பட்டிருக்கின்றன.

புலவிப்பத்து:

ஐங்குறு நூற்றின் ஐந்தாம்பத்து 'புலவிப்பத்து'. இப்பத்தின் முதல் பாட்டு

தன்பார்ப்புத் தின்னும் அன்பில் முதலையொடு
வெண்பூம் பொய்கைத்தவ னூரென்ப வதனால்
தன்சொல் உணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்யு மூர்கிழ வோனே (ஐங்.41)

என்பதாகும். தான் ஈன்ற பார்ப்பினைத்தானே தின்னும் முதலைகளோடு

வெண்மையான பூக்கள் நிறைந்த பொய்கையினையுடையது அவனது ஊர். இது தலைவனுடைய ஊரைப் பற்றிய புனைவு. இப்பத்திலுள்ள இந்த ஒரு பாட்டே, தலைவனை முன்னிலைப்படுத்தாமலும் விளிக்காமலும் அமைந்திருக்கிறது. மற்ற பாடல்களில், தலைவனை யாணர் ஊர என்றும் ஊர என்றும் விளிப்பது காணப்படுகிறது. இப்பத்திலுள்ள இரண்டாம் பாடல்,

மகிழ்மிகச்	சிறப்ப	மயங்கினள்	கொல்லோ
யாண	ரூரநின்	மாணிழை	யரிவை
காவிரி	மலிர்நிறை	யன்னநின்	
மார்புநனி	விலக்கல்	தொடங்கி	யோளே (ஐங் 42)

என்பதாகும். இப்பாடலில் ஊர் புனையப்படவில்லை; எவ்வகையான புனைவுமின்றித் தலைவி பேசுவதாகப் பாட்டு அமைந்திருக்கிறது. தலைவனுடைய ஊரை 'யாணரே' என்று கூறும் இப்பாட்டு, வேறு உயிரினத்தையோ பயிரினத்தையோ சுட்டிலது. பரத்தையர் சேரியில் நிகழ்ந்ததனைத் தலைவன் மறைத்துத் தலைவியை அடைந்தான்; வந்த தலைவனிடம், தான் எல்லாம் அறிந்தமையைத் தலைவி உரைத்தாள்.

'ஓரம்போகியார், செம்புகளைப் போன்ற யாமைப் பார்ப்புகள், மரக்கால் போலும் தாயாமையின் மேல் ஏறி உறங்கும் புதிய வருவாயுடைய ஊர்' - (ஐங் 43) என்பர். தலைவன் ஊர், நீர் வளம் நிறைந்த ஊர் என்பதை இப்பாட்டுக் கூறுகின்றது. இப்பாடலில், யாமை வளத்தைப் பேசிய ஓரம் போகியார் அடுத்த பாடலில் தாயாமை முகம் நோக்கி யாமைப் பார்ப்பு வளர்ந்ததை உவமையாக்கிப் பாடுகிறார்.

தீம்பெரும்	பொய்கை	யாமையிளம்	பார்ப்புத்
தாய்முக	நோக்கி	வளர்ந்திசி	னாஅங்
கதுவே	யையநின்	மார்பே	
அறிந்தனை	யொழுகுமதி	யறனுமா	ரதுவே (ஐங்.44)

தலைவி தலைவன் மேல் கொண்ட காமத்தினை அவன் ஓம்பவில்லை யாயினும் அதனை அவனுடைய மார்பின் காட்சியே செய்யும். தலைவிக்குத் தலைவன் தொடர்பு வேண்டும் என்பதைத் தோழி தலைவனிடம் கூறினாள். இவ்வாறு தலைவன் ஊரைப் புனையாமலே, ஓரம் போகியார் பாடல் பாடியிருக்கின்றார். ஆனால், இப்பாட்டில், ஊரின் இயற்கையைக் காட்டுமாறு ஓர் உவமை காணப்படுகிறது. 'இனிய நீர் மிக்க பொய்கைக் கண் வாழுகின்ற ஆமையின் இளம் பார்ப்புகள் தம் தாய் தம்மை ஓம்பாவிடினும் தாம் அதன் முகம் நோக்கி வளர்ந்தது போல' என்பது உவமை. தலைவன் தலைவியை நாடவில்லை எனினும் அவனுடைய மார்புக் காட்சியே அவளை வாழ வைக்கின்றது என்பதை உணர்த்த ஓரம்போகியார் இவ்வியற்கையை உவமிக்கிறார். ஆமையின் வாழ்வியல், இப்பாட்டில் உவமையாகிறது. இதற்கு முந்திய பாட்டில், ஆமையும் ஆமையின் பார்ப்புகளும் ஊர்ப்புனைவில் இடம் பெற்றிருக்கின்றன. இதனையே, வேறு வகையாக, அடுத்த பாட்டில் ஓரம்போகியார் உவமையாக்கியுள்ளார். ஆமை பற்றிய செய்தி உவமையானாலும், அஃது இயற்கைப் புனைவாக அமைகிறது. இதனை நோக்கும் போது, ஊர்ப் புனைவை - இயற்கை நலத்தை - ஓரம் போகியார் உவமை வழியும் பேசுகிறார் என்று புலனாகும்.

இன்னொரு பாட்டில், ஊரைப்புனையும் முகமாக ஊரில் பாய்கின்ற ஆற்றைப் புனைகின்றார். இப்பாட்டில், வேறு புனைவுக்குறிப்பில்லை.

கூதிர் ஆயின் தண்கலிழ் தந்து
வேனி லாயின் மணிநிறங் கொள்ளும்
யாறணிந் தன்றுநின் னூரே
பசப்பணிந் தனவான் மகிழ்நவென் கண்ணே (ஐங்.45)

கூதிர், வேனிற் காலங்களில் ஆறு ஓடுவதை அடிப்படையாகக் கொண்டு தலைவியின் நிலையை ஓரம்போகியார் உணர்த்தினார். ஊர்ப்புனைவில் ஆற்றோட்டத்தை இணைத்து ஆசிரியர் புனைகிறார். ஓரம்போகியார் புனையும் ஊர், ஆறு பாயும் மருத நில ஊர் என்பதை இப்புனைவு வெளிப்படுத்துகின்றது.

அடுத்து வரும் இரண்டு பாடல்களில், மீனைக் கொடுத்துப் பயற்றையும் நெல்லையும் பெறுகின்ற பாண் மகளின் நிலையை ஊரின் இயல்பாக ஓரம்போகியார் காட்டுகின்றார்.

முள்ளெயிற்றுப்	பாண்மக	ளின்கெடிறு	சொரிந்த
அகம்பெறு	வட்டி	நிறைய	மனையோள்
அரிகாற்	பெரும்பயறு	நிரைக்கு	மூர
			(ஐங் 47 : 1-3)
வலைவல்	பாண்மகன்	வாலெயிற்று	மடமகள்
வராஅல்	சொரிந்த	வட்டியுண்	மனையோள்
யாண்டுகழி	வெண்ணெல்	நிரைக்கு	மூர
			(ஐங் 47 : 1-3)

இவ்விரு பாடற்பகுதிகளும், மருத ஊரின் கூல வளத்தைக் காட்டுகின்றன. ஓரம்போகியார் தன்னுடைய பாடல்களில் இவ்வாறு ஊரைப்புனைந்து காட்டுகிறார்.

ஒப்பு நோக்குதல்

ஓரம் போகியார் ஐங்குறு நூற்றில் முதற்கண் அமைந்த வேட்கைப் பத்தில் ஆறு அடிகளான் அமைந்த பாடல்களைப் பாடியுள்ளார்; இப்பத்துப் பாடல்களே ஐங்குறு நூற்றில் அடி எண்ணிக்கை மிகுந்த பாக்கள் [56]. இவ்வாறே ஓரம்போகியாரின் ஆறு அடிகளான் அமைந்த பாடல் குறுந்தொகையில் (குறு 127) உள்ளது. இப்பாட்டின் மூன்று அடிகளில் ஊரின் இயற்கை புனையப்படுகிறது.

குருகு கொளக்	குளித்த	கெண்டை	அயலது
உருகெழு	தாமரை	வான்முகை	வெரூஉங்
கழனியம்	படப்பைக்	காஞ்சி	யூர
			(குறு.127:1-3)

கெண்டைமீனை நாரை கவர்ந்து கொள்ள முயல, அதனிடமிருந்து அது தப்பியது. அம்மீன் தன் அருகிலுள்ள நிறம் பொருந்திய தாமரையின் மொட்டைக் கண்டு

அஞ்சுகின்ற வயற்பக்கங்களையுடைய ஊர்; அவ்வூரை யுடையவன் தலைவன் தலைவனைச் சுட்ட வரும்போது ஊர்ப்புனைவோடு அவன் இணைத்துச் சுட்டப்படுகின்றான்.

ஐங்குறுநூற்றுப் பாட்டிலும் (7) குறுந்தொகைப் பாட்டிலும (127) நீர் நிலையைச் சார்ந்தே ஊர் புனையப் பெறுகிறது. இரண்டுமே மருதத் திணையைப் புனைவன; இரு புனைவிலும் தலைவன் பற்றிய வேறொரு கருத்துப் பொதிந்து வைக்கப்பட்டிருக்கிறது.

மறைபொருளும் புனைவும்

இரண்டு பாட்டிலும் நீர் நிலையும் மரங்களும் பறவைகளும் புனைவாகச் சுட்டப்படுகின்றன.

(1) 'உளைப்பூ மருதத்தின் கண் குருகு தன் கிளையோடிருந்து இன்புறுமாறு போலத் தலைவனும் நின் பொலிவுடைய இல்லத்தின் கண் தலைவனோடு இனிது இருந்து இல்லறம் நிகழ்த்துதல் வேண்டும்'[57] என்ற குறிப்பு மறை பொருளாகின்றது.

(2) குருகிற்கு அஞ்சிய கெண்டை அக்குருகைப் போன்ற தோற்றத்தை மட்டும் உடையதும் கொடுமையில்லாததுமாகிய தாமரை முகையையும் கண்டு அஞ்சினாற்போலத் தலைவன் விடுத்த பாணனைப் பொய்யனாகக் கண்டு வெறுத்த மகளிர் பொய்யரல்லாத பிற பாணரையும் வெறுத்தனர் என்பது குறிப்பு.

இரண்டு ஊர்ப் புனைவிலும் பிறிதொரு பொருளை ஓரம்போகியார் அமைத்திருக்கிறார். இயல்பான இந்தப் புனைவுகள், பாடலடிகளின் எண்ணிக்கைக் கேற்பச் சிறு குறிப்பாக விளங்குகின்றன. இச்சிறு குறிப்பில் பாடலின் பாடு பொருளுக்கு அழுத்தம் கொடுக்கின்ற வேறோர் குறிப்புப் பொருளும் இருக்கிறது. இந்த இலக்கியத் தன்மையே சிறிய பாட்டையும் இலக்கிய ஆழம் மிக்கதாக மாற்றிவிடுகிறது.

ஐங்குறு நூற்றில் நூறும் குறுந்தொகையில் ஐந்தும் பாடிய ஓரம் போகியார் அகநானூற்றில் இரண்டு பாடல்கள் பாடியுள்ளார். இரண்டு பாடல்களிலும் ஒன்று போலப் பதினேழு அடிகள் அமைந்திருக்கின்றன. அவற்றில் தலைவன் ஊர் புனையப்பெறுகிறது.

துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை
அரிமலர் ஆம்பல் மேய்ந்த நெறிமருப்பு
ஈர்ந்தண் எருமைச் சுவல்படு முதுபோத்துத்
தூங்குசேற் றள்ளல் துஞ்சிப் பொழுதுபடப்
பைந்நிண வராஅல் குறையப் பெயர்தந்து
குரூஉக் கொடிப் பகன்றை சூடி மூதூர்ப்
போர்செறி மள்ளரிற் புகுதரு மூரன்

(அகம்.316:1-7)

என்பது பாடற்பகுதி. மருதத்திணைத் தலைவனாக ஓரம்போகியார் புனைகின்றார். நீர் நிறைந்த பொய்கையில் மீன்கள் திரிகின்றன. அப்பொய்கையிலுள்ள ஆம்பல் மலரை, வளைந்த கொம்புகளையுடைய குளிர்ந்த முதுகினையுடைய முதிய எருமைக் கடாக்கள் மேய்ந்தன. அவை மிகுந்த சேற்றிலே விழுந்து கிடந்து இரவெல்லாம் துயின்றன; ஞாயிறு தோன்றிய காலையில், பசிய நிணத்தினையுடைய வரால் மீன்கள் மிதிபட்டுச் சாக வெளிப்போந்தன. அவை வெண்மையான பூக்களுள்ள பகன்றைக் கொடியினைச் சூடிக் கொண்டிருந்தன. போரில் வெற்றி பெற்ற வீரர் மூதூருக்குள் வருமாறு அந்த எருமைகள் வந்தன. இத்தகைய ஊரையுடைய தலைவன்.

இஃது இயற்கைப் புனைவு. தலைவன் பரத்தையர் சேரியில் அப்பரத்தையரை நுகர்ந்து இரவெல்லாம் அவ்விழிந்த இன்பத்திலே மயங்கிக் கிடந்து, காலையில், தன் பெருமை குறையவும் அலர் மிகவும் நாணமின்றிப் போந்தான் என்ற இன்னொரு பொருளையும் இவ்வியற்கைப் புனைவு கொண்டிருக்கிறது. புனைவும் புனைவின் மறை பொருளும் கீழே தரப்படுகின்றன

	இயற்கைப் புனைவு	மறைபொருள்
1.	பொய்கையில் ஆம்பலை எருமை மேய்ந்தது.	பரத்தையர் சேரியில் அப்பரத் தையரைத் தலைவன் நுகர்ந்தான்.
2.	எருமை சேற்றில் துஞ்சியது கிடந்தது.	தலைவன் இரவு முழுமையும் அந்த இழிந்த இன்பத்திலே மயங்கிக் கிடந்தான்.
3.	பொழுதுபட வரால் குறைதல்	காலையில் தலைவன் தன் பெருமை குறையவும்
4.	பகன்றைப் பூவைச்சூடி	அலர் மிகவும்
5.	மூதூருக்குள் மள்ளரைப் போலப் புகுதரும் ஊரன்	நாணமில்லாமல் தலைவன் வந்தான்.

பாடலில் தனியே இயற்கைப் புனைவையும் தலைவன் ஒழுக்கத்தையும் புனைய வேண்டிய ஆசிரியன், புனைவாகிய ஒன்றிலேயே இன்னொரு கருத்தையும் மறைத்து வைத்துப் பாடிவிடுகின்றான். இஃது ஊர்ப் புனைவாக அமையும் இயற்கைப் புனைவு ஒன்றாலேயே உணர்த்த முடிவதாகும்; பிற புனைவுகளால் இன்னொரு கருத்தைப் புலப்படுத்த முடியாது. பாடலின் அடி எண்ணிக்கைக்குத் தக்கவாறு ஓரம் போகியார், ஊரின் இயற்கையைப் புனைந்திருக்கிறார். ஆறு அடிகளையுடைய ஐங்குறுநூறு, குறுந்தொகைப் பாக்களில் ஊர்ப்புனைவு மூன்றடிகளில் விளங்குகிறது. பதினேழு அடிகளான் அமைந்த அகநானூற்றில் ஏழு அடிகள் ஊர்ப்புனைவாகின்றன. ஆதலின் படைப்பாளி தன் பாடுபொருளுக்கும் பாடு பொருளைப் புலப்படுத்தும் பாட்டின் அளவுக்கும் தக்கவாறு தன் கருத்தை வரையறுத்துக் கொண்டு பாடுகின்றான்.

புனைவொப்புமை

ஐங்குறுநூறு	குறுந்தொகை	அகநானூறு	
உளையுடைய மலர் மிகுந்த மருத மரம்	அரிமலர் ஆம்பல் தப்பியகெண்டைமீன் தாமரை மொட்டைக் கண்டு அஞ்சியது	மலர் மேய்ந்த எருமை சேற்றில் கிடந்தது.	 மருத மரம் தாமரை ஆம்பல்
குருகுகள் இனிது இருக்கும்	நாரை, கெண்டை மீனைக் கவர்ந்து கொள்ள முயல அது தப்பியது	 வாரல்மீன் அழியப் பகன்றை சூடியது	குருகு நாரை எருமை மீன்......
குளிர்ந்த துறை நிலப்பகுதி	வயற்பகுதி பொய்கைப்பகுதி	மீன் வழங்கும் பொய்கைப்பகுதி	மருதப் பகுதி

மூன்று புனைவும் மருதத்தையே வருணிக்கின்றன. மூன்றிலும் நீர் நிலைப்பகுதிகளும் குருகு, நாரை, எருமை என்ற மூன்று உயிரினங்களும் கோட்டுப்பூவான மருத மலரும் நீர்ப் பூக்களான தாமரையும் ஆம்பலும் ஆகிய மலர்களும் பேசப்படுகின்றன. வருணிப்பை விரிவு படுத்த கெண்டை, வாரல் போன்ற மீன்களும் இடம் பெறுகின்றன. இந்த ஒற்றுமைக் கூறுகள் ஒருவன் படைப்பு என்பதை வெளிப்படுத்துகின்றன. மூன்று பாட்டிலும் காலங்காட்டுகின்ற கூறுகள், குறுந்தொகைப்பாடலில் தாமரை மொட்டு என்பதால் புலனாகின்றது. அகநானூற்றுப் பாடலில் (316) 'தூங்கு சேற்று அள்ளல் துஞ்சிப் பொழுதுபட' (48) என்ற அடி காலம் உணர்த்துகின்றது. பாடலின் அடி எண்ணிக்கை கூடக்கூட ஊரைப் பற்றிய விவரிப்பும் பெருகுகின்றது. ஆதலின் பாடலின் அடியளவு என்பது ஊரைப் புனையும் அடிகளின் எண்ணிக்கையையும் அளவையும் கட்டுப்படுத்துவதாகும். அதனால்தான் ஐங்குறுநூறு, குறுந்தொகை போன்ற

பாடல்களில் ஊர்ப்புனைவு குறைந்த எண்ணிக்கையுடைய அடிகளில் அமைகின்றது. அகநானூறு கலித்தொகை போன்றவற்றில் ஊர்ப்புனைவுக் கூறுகள் மிகுதியாக அமைகின்றன. ஊர்களைப் புனைய முதற்பொருள் மாபுகள் வாய்ப்பாகின்றன. பாடலடி குறையும் போது கருத்துக்கு முதன்மை கொடுத்து வருணனையைச் சுருக்க வேண்டியதாகின்றது அல்லது கருத்தை விரிவாக விளக்கி. வருணனையைக் குறைக்க வேண்டியதாகின்றது; அப்போதுதான் உரிப்பொருள் முதன்மை பெறுகிறது. பாடலில்அடி எண்ணிக்கை கூடும்போது புனைவு விரிகின்றது.

இயற்கையைப்பாடும்போது ஒட்டு மொத்தமாகப் பாடுவது ஒரு வகையான பொதுப் போக்கு; இப்புனைவில் 'காட்சிப் புனைவுகள்' இடம் பெறுகின்றன. சங்க இலக்கியங்களில் இயற்கையைத் திணை என்றும் கருப்பொருள் என்றும் கொண்டு விரித்துப் பாடுகின்ற போக்குக் காணப்படுகிறது. இங்கிலாந்தில் முல்லை நிலத்தைப் புனையும் (Pastral Poems) பாடல்கள் மிகுதியாகப் பாடப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் ஐவகை நிலங்கள் உண்மையால் ஐந்து நிலங்களின் இயற்கை நீர்மையைப் புனைகின்ற பாடல்கள் மிகுதியாகப் பாடப்படுகின்றன.

இயற்கையைப் பொது நிலையில் புனைந்த சங்கப் புலவர்கள் - பொது நிலையில் இயற்கைப் பொருள்களைப் பாடிப் பாடித் துய்த்த சங்கப் புலவர்கள் - தங்கள் பாடல்களில் பாடும் புனைவு முறையில் புதுமைகளைக் கையாண்டனர். இயற்கையைப் பாடிப்பாடி அறிவுக்கூர்மை பெற்ற புலவர்கள் இயற்கைப் புனைவின் ஓரணுப் போன்ற விலங்கு ஒன்றையோ மரம் ஒன்றையோ தனிப்படுத்திப் புனைகின்ற புரட்சிப் போக்குக்கு மாறினர். இம்மாற்றம் ஐங்குறு நூற்றுப் புலவர்களிடையே காண முடிகின்றது.

அகமும் புறமும் சங்க இலக்கியத்தின் பாடுபொருளாகத் திகழ்கின்றன. அகப் பொருள்ளை வெளிப்படுத்தும்போது இயற்கையைத் துணையாகக் கொண்டனர். ஐங்குறு நூற்றுப் புலவர்கள் தங்கள் பாடல்களில் இயற்கையை

விரிவாகப் பாடுதற்குப் பாடலடிகளின் அளவு இடந்தரவில்லை. இதனால் இயற்கையைச் சிறுபகுதியாக புனைந்து பாடினர். ஐங்குறு நூற்றில் ஓரம் போகியார் எருமைப்பத்து என்று ஒரு பத்துப் பாடியிருக்கிறார். அம்மூவனார் ஞாழல் பத்து, நெய்தல் பத்து, வெள்ளாங்குருகு பத்து, சிறுவெண் காக்கைப் பத்து, வளைப்பத்து, தொண்டிப்பத்து என்று பத்துப்பத்தாகப் பாடியுள்ளார். புறவணிப்பத்து என்ற ஒன்றே பேயனார் பாடியது. கபிலர் கேழல் பத்து, குரக்குப்பத்து, கிள்ளைப் பத்து, மஞ்ஞைப் பத்து என்று பாடினார்.

ஐங்குறு நூற்றுப் பத்துகளின் பெயர்களை ஒப்பு நோக்கும்போது, கருப்பொருளிலடங்கும் பறவைக்கு முதன்மை கொடுத்து அம்மூவனார் பாடல்களில் புனைவு அமைந்திருப்பதும் தொண்டி என்ற ஊரைத் தலைமைப் படுத்திப்பாடியிருப்பதும் குறிக்கத் தக்கது. இவர் ஆறு பத்துகளைப் பாடியுள்ளார்.

ஊர்களையும் திணை (நிலங்களை) களையும் புனைந்து பாடிப் பழகிய புலவர்கள் அம்மரபிலிருந்து புது எழுச்சியாக ஒரு பொருளை மட்டும் மையப்படுத்திப் பத்துப் பாட்டுகள் பாடுகின்ற புனைவு முறை அரும்பியிருக்கிறது. இவை ஒரு பொருள் நுதலியன வாய் அடியளவு குறைந்தனவாய் அமைந்தவை. ஒரு குறிப்பிட்ட பொருளை வரையறுத்துக் கொண்டு சுருங்கப்பாடும் புலமைத்திறம் இலக்கியக் கொள்கை வரலாற்றில் குறிப்பிடத்தக்கது.

அடியளவான் மிகுந்த பாடல்களில், திணையை விரிவாகப் பாடிய புலவர்கள் அவற்றில் ஒரு கூறை எடுத்து ஐங்குறுநூற்றில் புனைந்திருப்பது அவர்களின் படைப்புத்திறன் வளர்ச்சியையும் படைப்பாற்றலின் மேலாண்மையை காட்டுகிறது. ஆங்கிலக் கவிஞர்கள், சிறு பாடல்களில் சில உயிரினங்களையோ (Snail) மலர்களையோ பாடுவர். அவற்றைப் போல இச்சங்கப் பாடல்கள் அமைந்திருக்கின்றன. இவற்றில் அகப்பொருள் கருத்துப் பின்னி மேலோங்கி வருவது, இயற்கைப் புனைவாக மட்டும் அமைந்த ஆங்கிலப் பாடல்களை விடச் சிறப்பு மிக்கன இவை என்பதைப் புலப்படுத்துகின்றன.

விலங்கு, பறவை, பயிரினம் என்பனவற்றைப் பத்துப் பாடல்களாகப் பாடுவது, ஐங்குறு நூற்றில் ஒரு வகையின. ஆனால் அம்மூவனார் ஊர்ப்பெயரினைச் சுட்டித் தொண்டிப் பத்து என்று தனிப்பத்துப் பாடியுள்ளார். இதனால் ஊர்ப்புனைவில் வரலாற்றில் அம்மூவனாருக்குத் தனியிடம் அமைகிறது. இயற்கையின் கூறுகளைத் தனிப்படுத்திக் காட்டுவது போல இவர் ஊர் ஒன்றின் பெயரைச் சுட்டி ஊரைப் புனைந்து பாடியிருப்பது சங்க இலக்கிய வளர்ச்சியில் கருதத்தக்கது. இவர் மரபினைத் தழுவித்தான் காவிரிப்பூம்பட்டினத்தைப் பட்டினப் பாலை என்றும் மதுரையை மதுரைக் காஞ்சி என்றும் சங்கப் புலவர்கள் பாடினர். அம்மூவனாரின் தொண்டிப்பத்து, பல்வேறு புதிய இலக்கிய வகைகளுக்கு முன்னோடியாக விளங்குகிறது. அதுபோல இலக்கியப் பரிணாம வளர்ச்சியில் ஊர்களைத் தனித்துப் பாடுவதற்கு வித்திட்டவர் அம்மூவனார். சங்கப் புலவர்கள் ஊர்ப் பெயர் சுட்டியும் சுட்டாமலும் புனைந்தனர்.

அம்மூவனார் - வழிகாட்டி

ஊர்ப் பெயர் சுட்டித்தனிப் பத்தினை அமைத்த சங்கப் புலவர் அம்மூவனார்; அவர் தம்புல நெறி வழக்கைத் தழுவித் தனி நூல் பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனாரும் மாங்குடி மருதனாரும் ஆவர். இலக்கிய வடிவு நோக்கில் மூன்றையும் ஒப்பு நோக்கின், ஐங்குறு நூற்றுப் பத்துப் பாடல்களும் நாற்பது அடிகளான் அமைந்த ஒரு நெடும்பாட்டாக விளங்குகிறது; அதனைவிடப் பட்டினப்பாலை இருநூற்றுப் பதின்மூன்றடிகளையுடைய பாட்டாகவும் மதுரைக் காஞ்சி அதனைக் காட்டிலும் மிகுந்த அடி எண்ணிக்கையுடையதாகவும் திகழ்கின்றது.

தொண்டிப்பத்து, பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி ஆகிய மூன்றும் ஓர் ஊரை புனையும் புனைவாக உள்ளன. பத்துப்பாட்டுத் தொகுப்பில், காலத்தால் பிற்பட்டது என்ற கருதப்பெறும் திருமுருகாற்றுப்படை இந்த அடிப்படையில் ஐந்து ஊர்களை இணைத்து ஒரு பாட்டுடைத் தலைவனைக் கொண்டு பாடுகிறது.

இம்மரபு பல ஊர்களைப் பிணைத்துப் பாடுவதற்கு வழிகாட்டியாகும். திருமுருகாற்றுப் படையில் இயற்கைப் புனைவு குறைவு. சமய நோக்கில், திருத்தலங்களைப் படைவீடுகளை ஆசிரியர் புனைகிறார். சங்க இலக்கியங்களில், பெயர் சுட்டிய ஊர்ப்புனைவுகளில் இயற்கைப் புனைவுப்பகுதி குறைவு; ஊர்ப்பெயர் சுட்டாது பாடுகின்ற குன்றப்புனைவுகளில்தான் இயற்கைப் புனைவுப்பகுதி மிகுதி.

ஆற்றுப் படை என்னும் புறத்துறை ஆற்றுப்படுத்தலைப் பேசுவது; அத்துறையைத் தனிநூலாக விரிக்கும் போது பல ஊர்ப்புனைவு அமைகின்றது. தமிழகத்திலுள்ள நிலங்களைப் புனையும்போது ஆற்றுப் படை நூலாசிரியர் ஐந்து திணைகளைப் புனைவர்; ஒரே நூலில் ஐந்து திணைகளும் ஐந்து ஊர்களாகவோ அதற்கு மேற்பட்டனவாகவோ புனைவது இயல்பு. இவற்றில் ஒரு சில ஊர்களின் பெயர்கள் சொல்லப்பட்டும் சொல்லப்படாமலும் இருக்கும்.

ஊர்ப்புனைவில் அகப்பொருள் மரபு

மதுரையோலைக் கடைக் கண்ணம் புதுந்தாராயத்தனார், மகட் பாற் காஞ்சித் துறைப் புறநானூற்றுப் பாட்டில்,

> தூர்ந்த கிடங்கிற் சோர்ந்த ஞாயிற்
> சிதைந்த விஞ்சிக் கதுவாய் மூதூர்
> யாங்கா வலுகொ றானே (புறம்.350:1-3)

என்று ஊரைப்புனைகின்றார். இங்கு ஊர் புறப்பொருளுக்கேற்ற வகையில் புனையப்பட்டிருக்கிறது. ஊரின் அகழி தூர்ந்து போய்விட்டது; மதில் இடிந்துவிட்டது; பகைவர் செய்த அழிவால் ஆங்காங்கே கோட்டை வடுப்பட்டுள்ளது. போரால் சிதைந்த கோட்டையையுடைய ஊர் என்று மதுரைப் புலவர் ஊரைப் புனைந்து காட்டுகிறார். இக்கோட்டையூர் போருக்கு ஆற்றாது என்று புலவர் வருந்துகிறார்.

இந்தப் பாடலில், ஊர்ப்பெயரில்லை; புறப்பாடலாக இருந்தும் பாட்டுடைத்தலைவன், ஊர் ஆகியன பற்றிய குறிப்புகள் இல்லை. அகப் பாடல்கள் போலவே மகட்பாற்காஞ்சிப் பாடல்களும் திகழ்கின்றன; இவற்றிலும் பெண் திருமணம் தொடர்புபடுத்தப்படுவது அதற்கு அடிப்படையாகும். புறப்பொருளைப்பாடுகின்ற பாடல் ஆனாலும் புலவன் தான் எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்பப் பாடப்பட்ட மன்னர், ஊர் ஆகியவற்றை மறைத்தே பாடியிருக்கின்றான். திருமணத்துக்காக மன்னர்களிடையே ஏற்படும் பூசல்களையும் போரையும் பாடும் பாடலில் யாரையும் எவ்விடத்தையும் குறிக்காது பொதுமையாகப் பாட வேண்டும் என்ற இலக்கியக் கொள்கையைப் பின்பற்றியிருக்கின்றனர், புறநானூற்றுப் புலவர்கள்.

இவ்வியலில் கூறப்பெற்ற ஆய்வு முடிவுகள்

1. தொல்காப்பியர், ஐந்து திணையைக் கால அடிப்படையில் வகுத்துப் புனைதற்கு வழிசெய்திருக்கிறார். இன்ன இன்னவாறு வகைசெய்து புனைக என்று அவர் விதி வகுத்திலர்; புனைய வழிகாட்டிய தொல்காப்பியர், புனைவுரிமையைச் சங்கப் புலவர்களுக்கு அளித்துவிட்டார்.

2. சங்கப்புலவர்கள் தங்கள் பாடல்களில் 'ஊர' என்று தலைவனை விளிக்குமுகமாக ஊரைப்புனைந்திருக்கின்றனர். இதில் எந்த ஊர்ப்பெயரும் சொல்லப்படவில்லை. இப்புனைவில் உள்ளுறை 'இறைச்சி' என்னும் குறிப்புப் பொருள் அமைந்திருக்கிறது. இவ்விளி சங்கப்புலவர்கள் புனையும் திறமும் **வகையும் விளங்கும்.**

3. அள்ளூர் நன்முல்லையார் தன்னுடைய சொந்த ஊரைப்பாடல்களில் சுட்டிப்புனைகின்றார். அள்ளூர் புலவரின் சொந்தவூராயினும் அவருடைய புனைவில் ஊரை மிகுத்தோ உயர்த்தோ பாடிய பாங்கு இல்லை. சங்கப்புலவர்கள் ஊரைப்புனைந்து எவ்வாறு பாடுவரோ அவ்வாறே இவரும் பாடினார்., புனைவில் வேற்றுமை காட்டவில்லை. ஆலூர் என்று தமிழகத்தில் பல ஊர் இருந்தமையும் அந்த ஊர்களில் புலவர் பலர் இருந்தமையும் கூறப்பட்டது. ஆலூர்ப்புலவர்களும் ஊரைப்புனையும் போது சங்க இலக்கியப் பொது அடிப்படையையே பின்பற்றிப்பாடிய பாங்கு புலனாகும். புனைவுகளில் பொது ஒழுங்கை மீறிய போக்கைக் காணமுடியவில்லை.

4. ஊரில் எழுகின்ற ஒலியைக் கூர்ந்து கேட்டுச் சங்கப்புலவர்கள் ஊரைப் புனைந்துள்ளனர். அந்தப்புனைவைச் சில பாடல்கள் கொண்டு காட்டப்பட்டுள்ளது. இது மிக விரிவான ஆய்வாய் அமையற்பாலது ஆதலின் பக்க எல்லை கருதிச் சிலவே சுட்டப்பட்டன.

5. ஊரைப்புனையும்போது ஊரிலுள்ள உயிரினத்தையோ பயிரினத்தையோ புனைவதோடன்றி அங்குவாழும் உயிரினங்களின் செயற்பாடுகளையும் புலவர்கள் புனைகின்றனர். அதனைச் சங்க நூல்கள் காட்டுகின்றன.

6. சங்கப்புலவர்கள் தாம் பாடுகின்ற பாடுபொருளுக்கேற்ப ஊர்ப்புனைவை அமைத்துக்கொள்வர். முல்லைப்பாட்டில் நப்பூதனாரின் புனைவு இப்பண்புடையதாக அமைகிறது. நெய்தல் திணையைப் பாடும் புலவர்,நெய்தலூரை 'மணல்மலிமூதூர்' என்று புனைவது கருதற்பாலது. இப்பகுதியில் 'புராணச்சார்பான' ஊர் ஒன்றும் புனையைப்படுவது தெளிவுப்படுத்தப்பட்டது.

7. தமிழகம் அல்லாத வடநாட்டு ஊர்களையும் சங்கப்புலவர்கள் சுட்டுவதையும், புனைவதையும் 'அயற்புல ஊர்ப்புனைவு' என்ற பகுதி காட்டும்.

8. ஒருபாடலில் இரண்டு பகுதியாக இரண்டு ஊர்களோ, ஊரோ புனையப்படுதலைச் சங்க இலக்கியத்தில் காண முடிகிறது. ஒருபகுதி ஊரின் வளமான நிலையையும் இன்னொருபகுதி தந்த ஊர் கழிந்துபட்ட நிலையையும் புனைகிறது, சங்கப்பாடல் இந்தப்போக்கைச் சில சங்கப்பாடல்கள் காட்டுவதை ஊர்ப்புனைவில் தனி வகையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

சங்கவிலக்கியப்புனைவு வகை இவ்வண்ணம் பலவகையாகப் பிரித்து நோக்கத்தக்கது. இதனை இன்னும் கூடுதலான எண்ணிக்கையில் வகைப்படுத்தித் தனி ஆய்வு செய்ய இடமுள்ளது. ஊர்ப்புனைவில் இடம் பெறுதற்குரியதாக பக்க எல்லைக்குட்பட்டுச் சில வகைகள் மட்டும் ஈண்டு எடுத்து ஆராயப்பட்டுள்ளன.

சான்றெண் விளக்கம்

1. பூ. சண்முகம் பிள்ளை. (பதி.1995). தொல்.பொருள் இளம்.உரை. (மு.இ. முல்லை நிலையம். சென்னை). ப.8.

2. ஐங்.491 - 497

3. மேலது, 181 - 190

4. அகம்.50

5. குறுந்தொகை, ப.119.

6. பரணர் சேரநாட்டுத் தொடர்புடையவர் என்பதால் இங்குச் சேர்க்கப் பட்டது.

7. நற்.260:1-4

8. பரணர் பாடல்களின் அட்டவணை

எண்	நூல்	பா.எண்	திணை	கூற்று	கேட்போர்
1	நற்	260 : 4	மருதம்	தலைமகள்	தலைமகள்
2	அகம்	116 : 4	"	தோழி	"
3	"	196 : 7	"	தலைவி	"
4	"	246 : 4	"	"	"
5	"	386 : 2	"	"	"

9.

1. தாமரை மலரை வெறுத்துக் கழு நீரை மேய்ந்த எருமை மணற் குன்றிலே சென்று தங்கும். (நற்.260)	தலைவி நலனை வெறுத்துக் காதற் பரத்தையின் இன்பந் துய்த்த தலைவன் அங்கும் தங்காமல் சேரிப் பரத்தையிடத்துச் சென்றுறங்கினான்.
2. கதிரறுப்போர் தம்தொழிலை விடுத்து இழிந்த கள் வண்டியின் ஆழ்ச்சியைப் போக்குதற்குச் சிறந்த கரும்பினைச் சிதைத்திட்டனர். (அகம்.116)	தலைவன் இல்லறஞ் செய்தலாய தன் ஒழுக்கத்தினைக்கை விட்டு இழிந்த பரத்தையின் இன்பத்தை நுகர்தற்குச் சிறந்த தலைவியை வருத்துகின்றான்.
3. வராஅற் கொழுங்குறை நொடுத்து உண்டு ஆடி வேட்டம் மறந்து துஞ்சும் கொழுநர்க்குப் பாட்டியர் அமலை வெஞ்சோறு வைகறை இடூஉம் ஊர (அகம்.196)	தலைவன் இரவெல்லாம் பரத்தைக்குத் தன் மார்பினை நல்கி அவள் தரும் இன்பத்தை நுகர்ந்து, தலைவியை மறந்தொழுகி, விடியலில் தலைவியை நினைந்து வருகின்றான்.
4. நந்தின் ஏற்றை ஆரல் கள்வனாகத் துணையொடு புணரும் (அகம்.246)	தலைவன் அலர் கூறுவோர் அறியும் படித் தலைவனுக்குத் துணையாகிய பரத்தையொடு கூடி விளையாடினான்.
5. நீர் புனைவு புலவு நாறும் போத்து நாட்காலத்தே வாளை மீனை இரையாகத் தேரும் ஊர் (அகம்.386)	தலைவன் தன்புறத் தொழுக்கத்தால் ஊரெல்லாம் அலரெழச் செய்து, விடியலில் தலைவியை நாடி வருகின்றான்.

49

10. ஔவை.சு. துரைசாமிப்பிள்ளை பதிப்பிலுள்ள பெயர் (ப.13); பின்னத்தூர் நாராயணசாமி அய்யர்க்குப் பாடலின் ஆசிரியர் பெயர் கிட்டிலது (ப.13).

11. சுப. அண்ணாமலை, ம.ரா.போ. குருசாமி, (மொழி.ஆ:1964), **பழந்தமிழிலக்கியத்தில் இயற்கை**, (பாரி நிலையம், சென்னை), ப.75.

12. பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் (பதி.1952) **நற்றிணை**, ப.263. 'இதனை இவர் இறைச்சிப் பொருள் என்று கொண்டார்'; ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை உள்ளுறையாக விளக்குவர்.

13. பிற்காலத்தில் எழுந்த தலபுராணங்களும், பிள்ளைத் தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களும் இந்த ஊர்ப்புனைவை அடிப்படையாகக் கொண்டு பல பாடல்கள் பாடினர்.

14. நற்.400.

15. மேலது, ப.446

16. அகம்.156:1-7

முரசுடைச்	செல்வர்	புரவிச்	சூட்டு
மூட்டுறு	கவரி	தூக்கி	யன்ன
செழுஞ்செய்	நெல்லின்	சேயரிப்	புனிற்றுக்கதிர்
மூதா	தின்றல்	அஞ்சிக்	காவலர்
பாகல்	ஆய்கொடிப்	பகன்றையொடு	பரீஇக்
காஞ்சியி	னகத்துக்	கரும்பதி	யாக்குந்
தீம்புன	லூர		

17. அகம்.300, உரை, ப.13.

18. அகம்.36:1-8.

19. பரி.திரட்டு. 7

20. "An Eipthet a Metaphor, a simile may creare an image an image may be presented to us in phrase or passage on the fact of it purely Descriptive, but conveying to our imagination something more than the accurate

reflection of an external reality".

C. Pay lewis, the poetic image, P.18.

21. சேரமன்னரைப் பாடின் அவர்தம் தலைநகர் வஞ்சி என்பது சொல்லாமலே போதரும்; அதனாலும் ஊர்ப்பெயரைச் சுட்டாது விட்டிருக்கலாம்.

22. பேரிசை என்ற அடையைப் பரணர் 'பேரிசைத் தொன்று முதிர் வடவரை' (அகம்.396) என்று பயன்படுத்துவர்.

23. கா. கோவிந்தன், சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை (பகுதி-4), (கழக வெளியீடு, சென்னை, 1954), பக்.1-2.

24. இவர் சங்க நூல்களில் பதினொரு பாடல்களைப் பாடியவர்.

25. நற்.258 (மருங்கூர்ப் பட்டினம்); 340 (சிறுகுடி)

26. அகம்.60. (பொறையன் தொண்டி)

27. ஐங்.4:4

28. தலைவன் இயற்பெயரைப் போல ஊர்ப்பெயரைச் சுட்டக்கூடாது என்று விதியில்லை ஆயினும் சுட்டுவது மரபில்லை.

29. தே. சொக்கலிங்கம், **வாழ்க்கை வரலாற்று அணுகுமுறை**, அகத்தியலிங்கம், தா.ஏ. ஞானமூர்த்தி, (பதி:1988), **ஆய்வுக்கோவை** (தொகுதி-1). (இ.ப.த. மன்றம், பாண்டிச்சேரி), பக்.586-587.

30. தொல்.பொருள். பேரா. உரை. நூ.எண்.26.

31. ந. சுப்புரெட்டியார், (1981), **அகத்திணைக் கொள்கைகள்**, (பாரி நிலையம், சென்னை,), ப.459.

32. தோழி, தலைவனை விளித்துச் சொல்லுவதில் உள்ளுறை அமைத்துப் பேசுகிறாள்; தலைவி நிலையில் பேசும் தோழி, தனக்குத் தானே சொல்லும்போது உள்ளுறை அமைக்காமல் உவமையாகப் பேசுகிறாள்.

33. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, (பதி.), புறநானூறு மூலமும் உரையும் (இரண்டாம் பகுதி), (கழக வெளியீடு, சென்னை-1, 1951), பக்.239-240.

34. உ.வே. சாமிநாதையர், புறநானூறு மூலமும் உரையும், (டாக்டர்.உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை-41, ஏழாம் பதிப்பு, 1971), ப.22.

35. புறம்.322

36. அகநானூற்றுப் பதிப்பில் 'ஆமூர்க் கவுதமன் சாதேவனார்' என்றுள்ளது.

37. ஆலூர் என்பது ஆமூர் என்றாகியிருக்கிறது. வகரம் மகரமாக மாறும்.
வானம் > மானம்; நாவலூர் > நாமலூர்; வினைகெட > மெனக்கெட.

38. மு. வரதராசன், (1985), **காலந்தோறும் தமிழ்**, (பாரி நிலையம், சென்னை), ப.32

39. ஒளவை. சு. துரைசாமிப்பிள்ளை, **புறநானூறு மூலமும் உரையும்**, பக்.1034-35

40. மொ.அ. துரைஅரங்கசாமி, (1960), ***சங்ககாலச் சிறப்புப் பெயர்கள்***, (பாரி நிலையம், சென்னை), ப.132.

41. புறம்.127.

42. அகம்.24 : 1-10.

43. மேலது, அ.எண் : 11-18.

44. உ.வே. சாமிநாதையர் உரை, புறம்.38 : 10

45. தொல். சொல். வேற்றுமை இயல். நூ. எண். 20 : 2-3

46. 'பொது செய் கம்பலை முது செம் பெண்டிர்' அகம்.86:9; 96:17; 165:2; 181:9 ; 227:22; 296:13, பதி.27:14, புறம்.7:8; 120:20, பரி.8:11, மது.110; 116; 430; 526; 544; 617, பெரும்.260, மலை.335.

47. அடிகளாசிரியர், (பதி.1988), தொல். சொல். உரியியல், சூ. எண்.343, (தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்), ப.263

48. ஒளவை. சு. துரைசாமிப்பிள்ளை உரை, (1995), **பதிற்றுப்பத்து**, (கழக வெளியீடு, சென்னை, நான்காம் பதிப்பு), ப.26.

49. பொ.வே. சோமசுந்தரனார், குறுந்தொகை மூலமும் உரையும், (கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1978), ப.14.

50. உ.வே. சாமிநாதையர், (பதி.), குறுந்தொகை மூலமும் உரையும், (கபீர் அச்சுக் கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1947), ப.173.

51. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், (அலமேலு நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1971), ப.42.

52. அழிந்து போன இவ்வூரின் பகுதிகள் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ளன என்று டாக்டர். தே. சொக்கலிங்கம் குறிப்பிடுகின்றனர்.

53. உ.வே.சா. உரை. புறம்.202. ப.365.

'இருபாற் பெயரில் உருகெழு மூதூர்' என்று சிலப்பதிகாரமும் சுட்டும்

54. பரணரின் அகநானூற்றுப் பாக்களில் பாழி பற்றிய குறிப்புகள் உள்ளன.

55. பாட்டில் 'கானல்' என்று வருவதும் 'நன்கலம்' என்று வருவதும் கடற்பட்டினம் என்று கருத வைக்கின்றன.

56. ஒவ்வொரு பாட்டிலுமுள்ள முதலடி 'வாழியாதன் வாழியவினி' என்று சேரமன்னனை வாழ்த்துகிறது; இதனால் ஓரடி கூடுதலாகிறது. இயற்கைப் புனைவால் இரண்டடி கூடுதலாகிறது.

57. ஐங்.7. குறு.127.

இயல் மூன்று

மூதூர்ப் புனைவுகள்

மூதூர்ப் புனைவுகள்

ஊரும் தொன்மையும்

'ஊர்' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் இரண்டுக்கும் அடிச் சொல்லாக அமைவது. ஊர்தல், ஊர்ந்தான் என்னும் போது வினையாகி விடுகிறது; சிற்றூர், பேரூர் என்று வரும் போது 'ஊர்' என்பது பெயராகி விடுகிறது. ஊர் என்ற சொல் ஊரைச் சுட்டுவதாகும். மக்கள் பெருகப் பெருக அவர்கள் வாழுமிடம் சிறிது சிறிதாக ஊர்ந்து ஊரின் பரப்புப் பெருகும்; இவ்வாறு வீடுகளும் மனைகளுமாக ஊர்ந்து - வளர்ந்து - பெருகுவதாலேயே ஊராயிற்று. ஊர் என்ற சொல் ஊரின் இயல்பையோ அமைப்பையோ புலப்படுத்தவில்லை. ஊரைப்பற்றிக் கூடுதலாகக் கருத்துகளை உணர்த்த புலவர்கள் அடை கொடுத்துப் பாடுகின்றார். சொல்லோடு சொல் சேர்ந்து தொகையாகி வழங்கும் போது கருத்து விரிவாகவும் அழுத்தமாகவும் வெளிப்படுத்தப்படுகிறது.

சங்கச் சான்றோர் ஊரின் பழமையை உணர்த்த விழைந்து 'மூதூர்' என்ற தொகைச் சொல்லால் ஊரைச் சுட்டிப் பாடலாயினர். சங்கப் பாடல்களில் மூதூர் என்ற சொற்களால் பல ஊர்கள் பேசப்படுகின்றன. அவை தமிழகத்தின் தொன்மையான ஊர்கள் என்பதில் இறையும் ஐயமில்லை. ஊரின் பழமையை அடைச்சொற்களால் சங்கப்பாட்டுகள் காட்டுகின்றன. அடை கொடுத்த மூதூரைப் புனைதலின்றித் தனித்தும் விளக்கமாகவும் புலவர்கள் புனைகுவர்.

அடையும் புனைவும்

ஓரம் போகியார் அகநானூற்றுப் பாடலில் மூதூரைப் புனைகின்றார்; ஆனால் மூதூருக்கு எந்த வகையான அடையும் தந்திலர்; ஊர் பற்றிய புனைவோ மிக விரிவாக அமைந்திருக்கிறது.

துறைமீன்	வழங்கும்	விரிநீர்ப்	பொய்கை
அரிமலர்	ஆம்பல்	மேய்ந்த	நெறிமருப்பு
ஈர்ந்தண்	எருமைச்	சுவல்படு	முதுபோத்துத்

தூங்குசேற் றள்ளல் துஞ்சிப் பொழுதுபடப்
பைந்நிண வராஅல் குறையப் பெயர்தந்து
குரூஉக் கொடிப் பகன்றை சூடிமூதூர்ப்
போர்ச்செறி மள்ளரிற் புகுதரு மூரன்

(அகம்.316:1-7)

மிக விரிவாகவும் தெளிவாகவும் இங்குக் குறிப்புப் பொருளமைய ஓரம்போகியார் புனைகின்றார். மீன்கள் திரிகின்ற பொய்கை; அங்கு ஆம்பல் மலர் பூத்திருக்கிறது. வளைந்த கொம்பினையும் குளிர்ந்த முதுகினையும் உடைய முதிய எருமைக் கடா மிகுந்த சேற்றுச் சகதியிலே கிடந்து இரவெல்லாம் துயின்றது. விடிகாலை, வரால்மீன் மிதிபட்டு அழியப் பொய்கையை விடுத்த வெண்மையான பூக்களையுடைய பகன்றைக் கொடியினைச் சூடிக்கொண்டு பழமையான ஊரின்கண் வெற்றி வீரர் புகுமாறு புகும்.

இது மருதநிலத்து ஊரில் நடக்கும் ஒரு மெய்யான புனைவு; இங்கு மிகை நவிற்சியோ அல்லியற்கையோ அமையவில்லை. குளத்தில் கிடந்து நீரைக் கலக்கிச் சகதியில் (அள்ளல், கிடக்கும் எருமைக் கிடாவின் நீர்மையை மிக உண்மையாக ஓரம்போகியார் காட்டுகிறார். இங்கு எருமையைப் பாடிய ஓரம் போகியார், ஐங்குறுநூற்று மருதத்தில் - மருதத் திணையாக - எருமைப் பத்துப் பாடினார். ஐங்குறு நூற்றில் ஊரை வேறு அடைகளான் குறிக்கின்றாரேயன்றி மூதூர் என்று சுட்டிலர். ஓரம் போகியாரின் மூதூர்ப் புனைவு தலைவன் பரத்தையரோடு இன்பம் துய்த்தமையைக் குறிப்பால் உணர்த்துகிறது.

ஓரம்போகியார் போல இடைக்குன்றூர் கிழார் புறநானூற்றில் அடையின்றி 'மூதூர்' என்ற தொகைச் சொல்லை ஆளுகின்றார். மூதூர் வாயிற் பனிக்கய மண்ணி' (புறம்.79:1) என்று பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போருக்குப் புறப்பட்டதைப் புலவர் பாடுகின்றார். மூதூர் என்பது பாண்டியன் தலைநகரான மதுரையாகும். இயல்பாக ஊர் எது என்பது தானே புலனாகும் என்பதால் ஊர்ப் பெயரைப் புலவர் சொல்லவில்லை.

ஓரம்போகியார் அகநானூற்றுப் பாடலிலும் இடைக்குன்றூர் கிழார் புறநானூற்றுப் பாடலிலும் மூதூர் என்று ஊரைச் சுட்டுவர். மூதூர்க்கு எவ்வகையான அடையும் வழங்கப்படவில்லை; ஆசிரியர்கள் ஊர்ப் பெயரைப் பாடலில் கூறவில்லை. ஓரம்போகியார் ஊரின் பழமையை 'மூதூர்' என்று சுட்டுவதுடன் அதனியற்கை நிலையையும் கூடுதலாகப் பாடலில் புனைதல் நோக்கத்தக்கது.

அடையும் புராணக் கதை வளர்ச்சியும்

மதுரைக் தத்தங்கண்ணனார் தன் அகநானூற்றுப் பாடலில் 'மாட மூதூர்' மதிற்புறம் (அகம்.335:11) என்று ஊரைப் பெயரின்றிச் சுட்டுவர். இந்த ஊர் மதுரையே என்பது 'அடுபோர்ச் செழியன்/மாட மூதூர்' (335:10) என்று பாராட்டப்படுவது மதுரை நகரேயன்றி வேறு பிறிதில்லை. பல்வேறு பாடல்களில் மதுரை என்றும் கூடல் என்றும் சங்க இலக்கியம் பேசும் போது மாடமுடைமை உரைக்கப் பெறுகிறது. 'மாடக் கூடல்' என்று மதுரைப் புலவரான, நக்கீரரும் மாங்குடி மருதனாரும் தாம் சுட்டுகின்றனர். இம்மாடக் கூடல் என்ற அடையே கலித் தொகையிலும் பரிபாடலிலும் நான் 'மாடக் கூடல்' என்று வழங்கப் பெற்றிருக்கிறது. இந்த நான் 'மாடக் கூடல்' என்ற தொடருக்கு நச்சினார்க்கினியர்,

> நான்குமாடம் கூடலின், 'நான் மாடக் கூட'லன்றாயிற்று;
> அவை திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை,
> திருநடுவூர். இனிக் கன்னி கரியமால் காளி ஆலவாய்
> என்றுமாம்

என்று புராண வழிவிளக்கம் எழுதினார்.[1] சங்க இலக்கியக் கூடல் - மாடக் கூடலாய்ப் பின் நான் மாடக் - கூடலாய் வருணனை பெற்றது. இதற்கெனத் தனிக் கதையும் வழங்கலாயிற்று.

மாடம் அடை அமைதல்

வ. எண்	அடைச்சொல்	நூல், பா.எண்	புலவர்	திணை	பாடல் அடிகள்
1.	மாடமலி மறுகின் கூடல்	அகம் 346:20	நக்கீரர்	மருதம்	மாடலி மறுகிற் கூடல்
2.	மாடமலி மறுகின் கூடல்	முருகு.71	நக்கீரர்	பரங்குன்றம்	மாடமலி மறுகிற் கூடல்
3.	மாட மறுகின்	பரி. 20:25-26	நல்லந்து வனார்	-	மாட மறுகின் மறுகிற் கூடல்
4.	நான் மாடக் கூடல்	பரி. திர:1:3	நல்லந்து வனார்	-	நான் மாடக் கூடல் எதிர் கொள்ள
5.	நெடுநீர் மலிபுனல் நீண்மாடக்கூடல்	பரி. 20:106	நல்லந்து வனார்	-	நெடுநீர் மலிபுனணீன் மாடக் கூடற்கடிமதில்
6.	நான் மாடக்கூடல் நகர்	பரி.திர. 6:4	நல்லந்து வனார்	-	தென்னவன் நான் மாடக் கூடல் நகர்
7.	நான் மாடக்கூடல் நகர்	பரி. 12:2			
8.	நான் மாடக்கூடல்	பரி. 13:8			
9.	நீண் மாடக் கூடலூர்	கலி.35:17	பாலை பாடிய பெருங் கடுங்கோ	-	நிலனாவில் திரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
10.	நான் மாடக்கூடல்	பரி. 12:2	மருதனிள நாகனார்	-	நான் மாடக் கூடல் மகளிரும்
11.	மாட மதுரை	புறம் 32:5	கோவூர்	வாகை	மாடமதுரையும்
12.	மாட மதுரை	மதுரை.429	மாங்குடி மருதனார்	-	மாடம் பிறங்கிய மலிபுகழ்க்கூடம்
13.	மாடமோங்கிய மல்லன் மூதூர்	நெடு. 29	நக்கீரன்	-	மாடமோங்கிய மல்லன் மூதூர்

சங்கவிலக்கியம் இந்த மூதூர்ப் புனைவைப் பின்வரும் தொடர் வடிவில் அமைத்துப் பாடுகிறது.

சொல்	தன்மை	வண்ணச் சினைச்சொல்
ஊர்	இயல்புஅடிச்சொல்	அமைப்பு முதற்பொருள்
மூது	அடை ஊர்ப்	சினைப்பொருள்
(முதுமை)	பண்பைக் காட்டுவது	போல்வது)
செம்மல்	மேலும் ஓரடை பெற்று வரும்	வண்ணம்

அடைச்சொல் + அடைச்சொல் = செம்மல் மூதூர்

1 2

வண்ணம் சினை முதல்

இத்தகைய அடைபெற்ற/ தொடர்கள் சங்க இலக்கியத்தில் பல; அவை ஊரின் இயல்பைப் புனைந்து காட்டுகின்றன. இங்ஙனம் ஊர் என்ற இடப்பெயர்ச் சொல் 'மூதூர்' என்றாகி, அத்தொடர் கருத்தை விளக்கப் போதியதாகாமல் 'செம்மல்' என்று அடைபெற்றுச் 'செம்மல் மூதூர்' என்றாயிற்று. ஊர் பற்றிய விரிவான கருத்துகளைப் பெயர் சொன்ன அளவான் உணர்த்துமாறு சங்கப் புலவர்கள் அடைகளை ஆக்கியுள்ளனர். தொல்காப்பியர் வண்ணச் சினைச் சொல்லுக்கு வண்ணம், சினை, முதல் என்று வரிசை முறை மயங்காது வரவேண்டும் என்று விதிப்பது இந்தத் தொடருக்கும் பொருத்தமாகும். இங்ஙனம் மூதூர் என்ற தொடருக்குச் செம்மல் என்ற அடை அமைந்த பாடல்கள் நற்றிணையில் ஒன்றும் (130:4), அகநானூற்றில் ஒன்றும் (15:5) புறநானூற்றில் ஒன்றும் உள்ளன.

சூழலுக்கு இணைந்த புனைவு

அடைச்சொற்களால் ஊர்ப்புனைவை உணர்த்திய நெய்தல் தத்தனார், ஊரில் காலைப்பொழுதில் தலைவன் செயல்படுதலை ஊர்ப்புனைவாகப் பேசுகின்றார்.

வடுவின்று நிறைந்த மான்தேர்த் தெண்கண்
மடிவாய்த் தண்ணுமை நடுவின் ஆர்ப்பக்
கோலின் எறிந்து காலைத் தோன்றிய
செந்நீர்ப் பொதுவினைச் செம்மல் மூதூர்த்
தமதுசெய் வாழ்க்கையின் இனிய துண்டோ

(நற்.130:1-5)

இங்கு நெய்தல் தத்தனார் ஊர்ப் பெயரைச் சுட்டிலர். தொன்மையான ஊரின் காலை நேர நிகழ்ச்சி இங்குத் தலைவி கூற்றாக வெளிப்படுகிறது. தெண்கண் மடிவாய்த் தண்ணுமை காலைப் பொழுதில் ஒலிக்கின்றது. தலைவன் கோலால் அடித்துக் குதிரை பூட்டிய தேரைச் செலுத்திக் கொண்டு மூதூரில் இல்லறம் நடத்த வேண்டும் என்று பிரிவிடை மெலிந்த தலைவி உணர்ந்தனள். செம்மல் மூதூர், தலைவன் தலைவியைப் பிரியாது வாழுதற்குரிய ஊர் என்பதால் ஊர்ச் சிறப்பைக் காட்ட 'செம்மல்' என்ற அடை நல்கப் பெற்று ஊரின் திறம் அடைகளாலும் கருத்து விளக்கத்தாலும் புனையப்பட்டிருக்கிறது.[2] நெய்தல் திணையைப் பாடுகின்ற புலவர் பாட்டில் கடலையோ கானத்தையோ புனைந்திலர்; வேறு இயற்கைக் கூறுகளும் புனைவில் அமைந்தில; ஆனால் மூதூரின் கலைச் சிறப்பைத் தண்ணுமை ஒலி ஒன்று மட்டும் கொண்டு காட்டுகிறார் நெய்தல் தத்தனார். பாட்டின் பாடுபொருள் சூழலுக்குத் தக்கவாறு, மூதூர்ப் புனைவு அளவாக அமைகின்றது. இவர் பாடுபொருளைக் காட்டிலும் புனைவை மிகுத்துப் பாடவில்லை.

'செம்மல்' என்று மாமூலனார் அடையை அமைத்துப் பாடியதை அகநானூற்றில் காண முடிகின்றது. மகட் போக்கியதாய் தன் மகள் தலைவனுடன் செல்லும் ஊர் துளு நாடு போலப் புதியவர்களைப் புரக்கும் பண்புடையதாக இருத்தல் வேண்டும் என்பர் மாமூலனார். தலைவி செல்லும் மூதூர் துளுநாடு போல வளமுடையததால் வேண்டும் என்பது தாயின் விழைவு. தலைவியைத் தலைவன் உடன் கொண்டு சென்றமையால் அவ்வூர் தலைவன் ஊர் என்பது பொருந்தும். மாமூலனார் ஊர்ப்பெயரைக் கூறாது மூதூர் என்று மட்டுமே சுட்டினார். ஊரின் தலைமையைக் காட்ட 'செம்மல்' என்று இவரும் அடையிட்டார்.

வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பிற்

செறிந்த சேரிச் செம்மல் மூதூர்

(அகம்.15:6-7)

என்பது தலைவன் தலைவியைக் கொண்டு சென்ற ஊர். வெறுங்கையோடு வருகின்ற புதியவர்களைத் தாங்குகின்ற பண்புடைய சேரியுள்ள ஊர்; வருவோரை எல்லாம் வாழவைக்கும் நீர்மையுடைய ஊர் செம்மல் மூதூராகும்.

இந்நெடுந் தொகைப் பாட்டு, மகட் போக்கியதாய் சொல்லியது; ஆதலின் அவளும் தலைவியும் வாழுகின்ற ஊருக்கு அயலான ஊரை வேற்றூரை - செம்மல் மூதூரை - செவிலி அறிந்திராள்; எனவே மாமூலனாரும் அவ்வூரைச் 'செம்மல் மூதூர்' என்று சுட்டித் துளுநாடு போல வளமிக்கிருக்க வேண்டும் என்றார். இப்பாடலில் மூதூர்ப் புனைவு உவமையால் விளக்கப் பெறுகிறது. இப் பாலைத் திணைப் பாடலில் மூதூருக்குத் துளுநாடு உவமையாகிறது; ஊருக்கு ஊர் உவமை கூறவது சாலும். இவரோ ஊருக்கு நாட்டை உவமை உரைக்கிறார். முதலுக்கு முதலும் சினைக்குச் சினையும் தாம் உவமை கூற வேண்டும்; தொல்காப்பியர் 'ஆயிரு பொருட்கும், நுதலிய மரபின் உரியவை உரிய[3] என்று முதலுக்குச் சினையும் சினைக்கு முதலும் மாறி உவமையாதலுக்கு இசைகுவர். மாமூலனார் ஊருக்கு நாட்டை உவமிப்பதும் முதல் சினை மாறாட்டமேயாகும்.

நாடு பெரும் பிரிவு; ஊர், நாட்டின் சிறு பிரிவு, நாட்டைப் போலப் பெருவளமுடையதாக ஊர் விளங்கும் போது, ஊருக்கு நாட்டை உவமிப்பது பொருத்தமே. உவமை, பொருளைக் காட்டிலும் சிறந்ததாக இருக்க வேண்டும் என்பதால் ஊருக்கு நாடு உவமையாக்கப் பெறுகிறது. நாட்டில் எல்லாவளமும் எல்லாப் பயனும் எல்லாமும் இருப்பது போல ஊரில் அனைத்தும் இருக்கும் என்பதைக் காட்டவே இந்த உவம மரபு. ஆகலின் ஊருக்கு இயற்கை வளம் நிறைந்த நாடு புனைவையும் கருத்தையும் உணர்த்தத் உவமையாகின்றது.

மாமூலனார்,

மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்கைப் பறைக்கண் பீலித்
தோகைக் காவின் துளுநாட் டன்ன

(அகம்.15:2-5)

என்று ஊருக்கு உவமை சொல்லும் துளுநாட்டைப் புனைவர். கோசர்களுடைய துளுநாட்டுச் சோலையில் மயில்கள் மிகுதி; அம்மயில்கள் தோகையையுடைய ஆண்மயில்கள்; அவற்றுக்குப் பறை போன்ற வட்டமான கண்கள்; அவை முற்றின பாகற் பழத்தைத் தின்பன. மாமூலனார் துளுநாட்டை எளிமையாகவும் இனிமையாகவும் தோகை மயில் வாழும் நாட்டைக் கொண்டு புனைகிறார். மாமூலனார் ஊர்ப்புனைவில் செம்மல் என்று அடையைப் பெய்தமைபோல உயர்திணையாகிய மக்களைக் காட்டுகின்ற கோசருக்கும் அதே அடையைப் பெய்தார். செம்மல் மூதூர் என்றும் செம்மற் கோசர் என்னும் ஓரடைச் சொல்லே ஊருக்கும் மக்களுக்கும் வருகின்றது; மக்களுக்குரிய அடை ஊருக்கும் அடையாவது அந்த ஊரின் உயர்வைப் புலப்படுத்துவதாகும்.

செம்மல் மூதூர்

ஊரின் தலைமையையும் பழமையையும் வெளிக் காட்டும் 'செம்மல் மூதூர்' என்ற புனைவுத் தொடர் அகப்பாடல்களில் நெய்தல் தத்தனாராலும் (நற். 130) மாமூலனராலும் (அகம்.15:7) பயன்படுத்தப் பெறுகின்றன. இவ்வடை அகப்பொருளில் பயிலுமாறு புறப்பொருளிலும் பயிலுகின்றது.

அகப்பாடலாட்சி

வ. எண்	நூல்	பாடல் எண்	ஆசிரியர்	திணை	கூற்று	பாடலடி
1.	நற்றிணை	130:1-5	நெய்தல் தத்தனார்	நெய்தல்	தலைவி	செந்நீர்ப் பொது வினைச் செம்மல் மூதூர்
2.	அகநானூறு	15:7	மாமூலனார்	பாலை	தாய்	செறிந்த சேரிச் செம்மல் மூதூர்

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை நப்பசலையார் பாடுங்காலை, அவன் பகைவனுடைய ஊரைப் புனைகின்றார். 'கராம் செருக்கிய குழிந்த இடத்தையுடைய அகழி; இடம் கடுமையான ஆழத்தின் கட் சேரத் திரண்டோடி இடையாமத்து ஊர்காப்பாளருடைய நிழலைக் கவரும் கடிய மாறுபாடு பொருந்திய மதிலையுடைய தலைமை பொருந்திய ஊர் என்று பகைஞன் ஊரை நப்பசலையார் பாடுகிறார்.[4] கிள்ளி வளவனுடைய பகைஞன் யார் என்ற குறிப்புப் பாட்டில் இல்லை. அகப்பாடலில் போலப் புறப்பாடலிலும் ஊர்ப்பெயர் சுட்டப்பட்டிலது. ஊரைக் காட்டுமாறு அவண் உள்ள பயிரின வளமோ இயற்கைப் புனைவோ பாடலில் கிடையாது. புறப்பாடலின் கண் பகைஞனுடைய கோட்டை வளத்தைக் காட்ட, இந்தப் புனைவு அமைகிறது; நப்பசலையார் படைத் தாக்குதலில் கோட்டை வலிமையைப் புலப்படுத்துகிறார். போரிலும் பகைவர் தாக்குதலிலும் எதிர்த்து நிற்கக் கூடியதாக ஊரும் கோட்டையும் விளங்குவதாகப் புறப்பொருளுக்கு ஏற்ற முறையில் ஊர்ப்புனைவு திகழுகின்றது. ஊரின் தலைமையை உணர்த்திடச் 'செம்மல் மூதூர்' என்ற அடை வருகின்றது; பாட்டின் பாடுபொருளுக்குத் தக்கவாறு இந்த ஊர்ப்புனைவு அமைகிறது. புறப்பொருளைப் பாடுகின்ற நப்பசலையார்க்கு மூதூரின் இயற்கை நலத்தைக் காட்டிலும் பகைஞன் வலிமையைக் காட்டும் அவனுடைய கோட்டை, மதில், அகழி, ஆகியனவே கண்ணிற்கும் கருத்திற்கும் புலனாகின்றன. அவருடைய புனைவு அதனையே சுற்றி அமைகின்றது.

'செம்மல் மூதூர்' என்று அடையளித்துப் பாடும் இன்னொரு புறநானூற்றுப் புலவர் அவ்வையார். அவர் பகைவர்களை நோக்கி 'உங்கள் ஊர் உங்களுக்கு உரித்தாகல் வேண்டின் அதியமான் அஞ்சிக்குத் திறை செலுத்துங்கள்' என்று நவிலுகின்றார். அவ்வையார் ஊரைச் சுட்டும் போது "தடந்தாட்/பிணிக்கதிர் நெல்லின் செம்மன் மூதூர்" என்று புனைகுவர்.[5] பாடலின் முதலீரடிகள் மதிலைப் பேசுகின்றன. மூதூர் நெல்வளம் மிக்க ஊர் என்று பாட்டுப் பேசுகிறது. பாடலில் பேசப்படுவோன் யாவன் என்பதும் அவன் சுட்டுப் பெறும் மூதூர் எவ்வூர் என்பதும் தெரியவில்லை; தெரிந்து கொள்ளும் குறிப்பும் கிடையாது. ஊரின் நெல்வளம், தொன்மை நலம், தலைமை ஆகிய மூன்றும் வெளிப்படுமாறு புனைவை அவ்வையார் அமைத்துள்ளார்.

புறப்பாடலாட்சி

நூல்	பா. எண்	ஆசிரியர்	திணை	கூற்று	பாடலடி
புறநானூறு	37:7-11	நப்பசலையார்	வாகை: அரச வாகை	-	'செம்புறழ் புரிசைச் செம்மல் மூதூர்'
புறநானூறு	9:18	அவ்வையார்	பாடாண்டிணை இயன் மொழி	-	'பிணிக்கதிர் நெல்லின் செம்மல் மூதூர்'

அடைச்சொல்லின் பொருள் திறம்

'செம்மல்' என்ற சொல், சீர்மை காட்டும் செந்தமிழ்ச் சொல்; சங்கப் பனுவல்களில் இச்சொல் தலைமையையும் உயர்வையும் காட்டுமாறு மிகுதியாகப் பயிலும்.

அருந்தொழில் முடித்த செம்மல் உள்ளமொடு (அகம்.184:5)
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு (குறு.270:5)&(குறு.275:5)
சேவடி படரும் செம்ம லுள்ளமொடு (திருமுரு அடி:145)

இவ்வாறு உள்ளத்தின் உயர்வைக் காட்டுகின்ற நனி சிறந்த சொல், செம்மல் என்பதாம். இச் சொல்லைப் பெருந்தலைச் சாத்தனார் 'செம்மற் களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே' (புறம்.20:13-14) என்று களிற்றுக்கு அடையாக்கிக் கூறுவர். தலைமையை எடுத்துக் காட்டக் கூடிய இச்சொல்லைச் சங்கப் புலவர்கள் ஊருக்கு அடையாக்கியிருக்கின்றனர். சான்றோர் ஊரைப் பல அடிகளான் பல்வேறு பொருள்களைச் சுட்டிப் புனையாது, ஒரு சொல்லான் உயர்ந்த கருத்தை மனத்தில் உருவாக்கும் வண்ணம் 'செம்மல்' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

பொருளும் புனைவும்

'செம்மல்' என்ற அடை மூதூருக்குரியதாக அகப் பாடல்களிலும் புறப் பாடல்களிலும் பயிலுகின்றன. அடை ஒன்று போல இருவகையான நூல்களில் பயின்றாலும் அகம் புறம் என்ற பொருள் வேறுபாட்டுக்குத் தகப் புனைவிலும்

மாறுபாடு தெரிகின்றது. அகப் பாடல்களில் இயற்கைக் காட்சிகளும் பயிரின உயிரினங்களும் புனைவில் வருகின்றன. புறப் பாடல்களில் கோட்டை, மதில் என்ற செயற்கைப் பொருள்களுடன் உயிரினமும் பயிரினமும் சிறுபான்மை வருகின்றன. அப்பாடல்களில் பகைவருடைய ஊரே 'செம்மல் மூதூர்' என்று பாராட்டப் பெறுகிறது.

பழவிறல் மூதூர்

சங்க நூல்கள் ஊரின் பழமையைக் காட்டிட 'மூதூர்' என்று அடைபெய்து பேசுகின்றன. இந்த அடைப் பெயருக்கு முன்னர்ப் பல்வேறு அடைகள் பயிலுகின்றன. இத்தகைய அடைகளுள் ஒன்று 'பழவிறல்' என்பதாகும். இந்த அடை மூதூர் என்ற சொல்லுடன் அமையும். 'பழமையான வெற்றியுடைய முதிய ஊர்' என்பது இந்த அடையின் விளக்கமாகும். 'பழவிறல் மூதூர்' என்ற தொடர் நற்றிணை, அகநானூறு, பெரும்பாணாற்றுப் படை, மலைபடுகடாம் ஆகிய நான்கு நூல்களிலேயே பயிலுகின்றன; பிறவற்றில் இல்லை.

தலைவி ஊரில் நிகழும் கார்த்திகைத் திருநாளன்று தலைவன் தன்னுடன் இருக்க வேண்டும் என்று விரும்பினாள்; தலைவனைப் பிரிந்திருந்த தலைவி பிரிவிடை ஆற்றாள் என்று தோழி வருந்தினாள்; தோழியின் மனநிலையை அறிந்து தலைவி கூற்று அமைகிறது. இங்கு நக்கீரர், திருவிழா நிகழும் ஊரின் அழகைப் புனைகிறார். அத்திருநாள் கார்த்திகைத் திருநாள்; ஏனைய நாளினும் திருநாளன்று ஊர் தனியழகு பெற்றுப் பொலிவாய்க் காட்சி தரும்; வயலில் உழுது பயிரிட்டு ஓய்ந்த நிலையில் இத்திருநாள் நிகழும்.

> உழுதொழில் முடிந்து கலப்பைகள் ஓய்ந்துவிட்டன:
> மழைபெய்து ஓய்ந்த வானத்தில் குறுமுயலாகிய
> மறுவின் நிறம் விளங்க மதி நிறைவுற்றுக்
> கார்த்திகையைச் சேரும் இருள் அகன்ற நடு இரவில்
> தெருக்களில் விளக்குகளை வரிசையாக ஏற்றியுள்ளனர்;

வரிசையாக மாலைகள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன.

இத்தகைய 'பழைமையான வெற்றியையுடைய முதிய ஊரில் பலரும் ஒருங்கு கூடிய விழா நிகழ்கிறது.

(அகம்.141:5-10)

இது கார்த்திகைத் திருநாள் நடைபெறும் ஊரின் புனைவாகும். பாடலில் மரங்களோ செடிகளோ பயிலவில்லை. கார்த்திகைத் திருநாளன்று ஊர் விழாக் கோலம் பூண்ட காட்சி இங்குப் புனையப்படுகிறது. இப்புனைவு விழாப் புனைவாக அமைவதோடன்றி இராக்காலப் புனைவாகும் விளங்குதல் குறிக்கத்தக்கது.

இரவும் விழாவும்

கார்த்திகை விழாவின் தனிச் சிறப்பாகிய விளக்கேற்றுதலையே நக்கீரர் புனைந்திருக்கிறார். திருநாள் காட்சியே ஊர்ப் புனைவு; மகளிர் தம் மணவாளர் நல்ல நாளிலும் திருநாளிலும் தம்முடன் உறைய வேண்டும் என்று விழைவதியல்பு. மகளிரியற்கை, தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி தன் கணவன் தன்னோடு வதிதல் வேண்டும் என்ற விருப்பத்தைத் திருநாள் மீதிட்டுரைக்கின்றாள். சங்க இலக்கிய ஊர்ப் புனைவில் நக்கீரரின் இந்தப் புனைவு பிற புனைவுகளிலிருந்து - இரவுப் புனைவாகவும் - திருவிழாப் புனைவாகவும் வேறுபட்டு நிற்கிறது.

திருவிழா நாளில் ஊரின் கவினும் ஆகுல நீர்மையும் குறிக்கத்தக்கனவாய் விளங்கும்; நக்கீரர் ஊரை விழாக் காட்சியொடு ஈண்டுப் புனைந்து காட்டுகிறார். இவ்விழா நிகழும் ஊரோ தொன்று தொட்டு வரும் மிகப் பழைமையான ஊராகும். இதனை உணர்ந்த நக்கீரர் 'பழவிறல் மூதூர்' (அகம்.141:10) என்று பாடுவர். பழவிறல் மூதூரின் கார்த்திகைத் திருநாள் காட்சி இங்கு இடம் பெறுகிறது. நக்கீரர் இப்பாடலில் இடையாறு, வேங்கடமலை ஆகியவற்றைக் குறிக்கிறார்; ஆனால் பழவிறல் மூதூரின் பெயரைக் குறித்திலர்.[6]

கார்த்திகை நாள் புனைவுடன், வானிலையையும் நக்கீரர் புனைகிறார். கலப்பைகள் மடிந்து உலகத்தில் உழுதொழில் முடிந்து விட்டது; மழை பெய்யாமல்

வானம் நின்றுவிட்டது; வானத்தில் குறிய முயலாகிய மறுவின் நிறம் விளங்க மதிநிறைவுற்று விளங்கியது. கார்த்திகைத் திருநாளைக் காட்டுகின்ற இப்புனைவு காலப் புனைவாம். நக்கீரர் விழாப் புனைவாகவும் காலப் புனைவாகவும் இந்த ஊர்ப்புனைவை அமைத்திருக்கிறார்.

பாதையும் மூதூரும்

நக்கீரர் தலைவி ஊரைப் புனைந்தார்; கயமனார் தலைவனொடு தலைவி உடன் போன சுரனையும் ஊரையும் புனைந்தார். கயமனார் மகட் போக்கிய செவிலித் தாய் கூற்றாகப் பாடியவர். இவர் பாலைத்திணைச் சுரத்தை விரிவாகப் பேசுகின்றார். இப்புனைவு பன்னிரண்டு அடிகளில் அமைகின்றது.

.......... கல்லென
ஊரெழுந் தன்ன உருகெழு செலவின்
நீரி லத்தத் தாரிடை மடுத்த
கொடுங்கோ லுமணர் பகடுதெழி தெள்விளி
நெடும்பெருங் குன்றத் திமிழ்கொள இயம்புங்
கடுங்கதிர் திருகிய வேய்பயில் பிறங்கல்
பெருங்களி றுரிஞ்சிய மண்ணரை யாஅத்
தருஞ்சுரக் கவலைய அதர்படு மருங்கின்
நீளரை இலவத் தூழ்கழி பன்மலர்
விழவுத் தலைக்கொண்ட பழவிறல் மூதூர்
நெய்யுமிழ் சுடரில் கால்பொரச் சில்கி
வைகுறு மீனில் தோன்றும்
மைபடு மாமலை விளங்கிய சுரனே

(அகம்.17:10-22)

என்று கயமனார் பாலை வழியைப் புனைகின்றார். பாலைப் பாட்டில் இடம் பெறும் சுரப் புனைவில் ஓர் ஊர்க்காட்சி வருகிறது. இப்புனைவில் ஆசிரியர்

ஊர்ப்பெயரை உரைத்திலர். பாலைத்திணைச் சுரப் புனைவில், இடைப் பிற வரலாக ஊர்ப்புனைவு இடம் பெறுகிறது.

பெரிய ஆண்யானைகள், பலவழிகளையுடைய காட்டுப் பாதையிலுள்ள (சுரம்) சேற்றுமண் அப்பிய மரங்களை உராயும்; அங்கே நீண்ட அடியினையுடைய இலவமரத்தின் முதிர்ச்சி மிக்க பலவாய்ப் பூக்கள் பூத்திருக்கும்; விழாக்கள் நிகழும் போது விளக்கின் சுடர் விழுவதைப் போல இலவம் பூக்கள், காற்று வீசலால் விழுந்திடும். எஞ்சிய பூக்கள் விடியற்காலத்து விண்மீன் போலச் சிலவாகத் தோன்றும்; மேகங்கள் பெரியமலைகளைக் குறுக்கிட்டு நிற்கும் சுரன். இது பாலை வழிச்சுரம்.

பாலை நிலத்துச் சுரனைப் புனையும் கயமனார், சுரனிடைக் காட்சி ஒன்றுக்குச் சுரனிடையே உள்ள ஊர் ஒன்றினைப் புனைகின்றார். இவ்வூர் திருவிழா நிகழும் ஊர்; என்ன திருவிழா என்று ஆசிரியர் கூறிலர்; இது கார்த்திகைத் திருவிழாவாதல் வேண்டும்.[7] திருவிழா நிகழும் போது உயரமான இடத்தில் நிறைய விளக்குகளை வைத்து எண்ணையை மிகுதியாக ஊற்றி ஏற்றுவர்; அப்போது விளக்குகளின் எண்ணெய் திரிவழியே சுடர் சுடராக விழுதல் சுரவழியில் இலவம் பூக்கள் விழுதலுக்கு உவமையாகின்றன. ஊரிலுள்ள விளக்குச் சுடரின் பிழம்பு வீழ்ச்சி, ஈண்டு உவமையாகிறது.[8]

நக்கீரரும் கயமனாரும் விழவு தலைக் கொண்ட பழவிறல் மூதூரைத் திருநாள் ஊராக - கார்த்திகை விழாக் கொண்டாடும் ஊராக - இரவுப் புனைவாகச் - சித்தரிக்கின்றனர். இருவரும் விளக்குகளையே புனைவர்; நக்கீரர் கார்த்திகை விழா என்ற பெயர் சுட்டிப் புனையக் கயமனார் அதனைக் குறிப்பாகப் பெற வைக்கிறார். நக்கீரரும் கயமனாரும் பாடலில் ஊர்ப்பெயரைச் சுட்டிலர்; நக்கீரர் புனைவைப் பாடற்கருத்தாக்கக் கயமனார் புனைவை உவமையாக்கிவிட்டார்.

எவ்விழா என்று சுட்டாமை

பாலைத் திணையில் தாய் கூற்றாகத் தலைவி பிறந்த வளர்ந்த ஊரைக் கயமனார் 'விழவுத் தலைக் கொண்ட பழவிறல் மூதூர்' (நற்.293:4) என்று பாடுகிறார். இப்புலவர் இதே அடியை அகநானூற்றில் (17:19) செவிலி கூற்றாகப் பயன்படுத்துகிறார். இந்த நற்றிணைப் பாட்டில், கயமனார் நிகழும் விழா என்ன விழா என்ற சுட்டிலர். அகநானூற்றுப் பாடலில் கார்த்திகை விழா என்று குறித்தார் ஆசிரியர்; இரண்டிலும் ஒரே அடி பயில்வதால் நற்றிணையிலும் கார்த்திகைத் திருவிழாவே சுட்டப் பெறுகிறது என்பது பெறப்படும். கார்த்திகை விழாவில் குயவன் அணங்குக்கும் காக்கைக்கும் பலியூட்டுவது ஊர்ப்புனைவில் வருகிறது. பயிரினங்கள் தழைத்திருக்கும் காட்சியோ அழகோ பாடலில் புனையப் படவில்லை. முதுகுயவன் பலியிடுதலும், அணங்கும் காக்கையும் பலியை உண்ண வருதலும், விழா நிகழ்தலும் மூதூரின் நிகழ்ச்சிப் புனைவாகின்றது.[9]

சங்க நூல்கள், 'பழவிறல் மூதூர்' என்ற அமைத்த ஊரின் பழமையையும் பெருமையையும் விழவுத்திறத்தையும் வெளிப்படுத்துகின்றன; அடைக்குப் பொருந்திய புனைவுகளும் அப்பாடலில் தனியே அமைகின்றன. ஊருக்கு மட்டும் உரிய இந்த அடையை இடத்தினீர்மையை விளக்கும் அடையாகவும் சங்கவிலக்கியம் பயன்படுத்துகிறது.

பழவிறல் அடையின் விரிவு

தொகை நூல்களில் ஊருக்கு அடையாகும் அடைச் சொற்களை இடத்துக்கும் அடையாக அளிக்கின்றனர், சங்கப் புலவர்கள். இதனைக் கபிலர் (அகம்.318:7) பேரி சாத்தனார் (நற் 37:1) ஆகிய இருவர் பாக்களில் காண முடிகிறது. மூதூருக்கு அடையாகும் இந்த அடைகள், மிகுதியான ஆட்சி பெற்று 'நனந்தலை' என்ற இடமுணர்த்தும் கிளவியுடனும் பயிலலாயிற்று. இந்த இரண்டு இடங்களில் தாம் 'பழவிறல்' விழாக்குறிப்பின்றி வருகின்றது. ஊருக்கு வருகின்ற அடையை இடத்துக்கும் கையாண்டு சங்கப் புலவர்கள் பயன்படுத்தியிருக்கின்றனர்.

பழவிறல் நனந்தலைப் பாதை

பாலைப் புனைவில், பழவிறல் என்ற அடை ஊருக்கு அமைவது போல நனந்தலை என்பதும் அடையாக வருகின்றது. ஈண்டுப் 'பழவிறல்' என்பதற்குப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் 'பழைய தன்மை'[10] என்று பொருள் வரைவர். பாலைப் பாதையைச் சுரனை - புலவர்

பிணங்கரில்	வாடிய	பழவிறல்	நனந்தலை
உணங்கூ	ணாயத்	தோரான்	தெண்மணி
பைய	விசைக்கும்	அத்தம்	

(நற் 37:1-3)

என்று விளக்குகிறார். ஊர், நனந்தலை, சுரன் ஆகியன இடத் தொடர்புடையன; எனவே ஊருக்கு வருகின்ற அடை நனந்தலைக்கோ அத்தத்துக்கோ வருவது பொருந்தும். ஒன்றோடன்று சிக்குண்ட சிறுதூறுகளும் பழைமையான நல்ல தோற்றமும் விளங்கும் வாடிய அகன்ற இடமுடைய அத்தம். அங்கு உணவின்றி வாடிய ஆக்கூட்டத்திலுள்ள ஓராவினது தெளிந்த மணியோசை மெல்ல ஒலிக்கும்.

ஆசிரியர் இங்கு மழையின்றி வாடிய பயிரினங்களையும் உயிரினத்தையும் (ஓர் ஆ) சுட்டிப் புனைகின்றார். இஃது ஊர்ப்புனைவில்லை. ஊர்ப் புனைவைப் புனைந்த புலவர்கள் அதனைப் போலப் பாதையையும் புனைகின்ற மரபு தோன்றியபோது ஊரைப் போலப் பாதையையும் புனையலாயினர். மக்கள் வாழுமிடம் ஊர்; அங்கிருந்து அவர்கள் வேறிடத்துக்குச் செல்லவும் வேறிடத்திலிருந்த ஊருக்கு வரவும் பாதை தேவையானது; பாதையின்றி ஊர் இருக்கமுடியாது; அன்றிப் பாதையிடையே ஊர் அமைதலுமுண்டு. ஆதலின் பாதைப்புனைவும் ஊர்ப்புனைவு போல அமைகிறது.

மலை நாட்டுப் புனைவாதல்

'பழவிறல் நனந்தலை' என்ற தொடரைக் கயமனார் பாலைத் திணையில் பயன்படுத்த, கபிலர் குறிஞ்சித் திணையில் கையாளுவர்; ஆனால் அத் தொடர் தலைவனை இனங்கண்டு கொள்வதற்குரிய தொடராகின்றது. தலைவனை

அவனுடைய மலைநாட்டொடு இணைத்துக் கபிலர் விளிக்கின்றார்.

வரையிழி யருவிப் பாட்டொடு பிரசம்
முழவுச்சேர் நரம்பின் இம்மென இமிரும்
பழவிறல் நனந்தலைப் பயமலை நாட

(அகம். 318:5-7)

என்பது கபிலரின் மலை நாட்டுப் புனைவு. தலைவனுடைய நாடு இயற்கை வளமும் பயனும் நிறைந்த நாடு என்று காட்டுமாறு நாட்டைப் புனைந்து கபிலர் பாடுகிறார். 'மலையிலிருந்து விழுகின்ற அருவி ஓசை, வண்டு ஒலி, தண்ணுமை ஒலி, ஆகியன யாழோசை போல இம்மென்று ஒலிக்கும். பழைமையான வெற்றியினையும் பயன்தரும் அகன்ற இடத்தினையுமுடைய பயன்பொருந்திய நாட்டிற்குத் தலைவன்' என்று ஆசிரியர் நாட்டைப் புனைகுவர். குறிஞ்சியில் நாடே புனைவு பெறும்.

மருத நிலத்து ஊர் அமையுமாறு குறிஞ்சி நிலத்து ஊர் அமைவதில்லை; அதனால் குறிஞ்சியில் ஊர் என்பதற்கு ஈடாக நாடு என்பது விதந்துகூறிப் புனையப்பெறும்; பெரும்பாலான குறிஞ்சித் திணைப்பாடல்களில் 'நாடு' என்று சுட்டும் புனைவுகளே காணப்படுகின்றன.

தொகையும் பாட்டும்

'பழவிறல் மூதூர்' என்ற அடையைத் தொகை நூல்கள், இரு வகை நிலைகளில் கையாண்டு ஊர்ப்புனைவை வெளிப்படுத்துகின்றன. ஒன்று ஊரை விளக்குவது; இன்னொன்று இடத்தை விளக்குவது. ஆனால் பத்துப் பாட்டில், பழவிறல் என்ற அடை ஊரை உணர்த்துவதாகவே பயிலுகிறது.

கச்சிச் சிறப்பு

பெரும் பாணாற்றுப் படையில், கச்சிமாநகரில் வீற்றிருக்கும் இளந்திரையனைச் சுட்டவந்த கடியலூர் உருத்திரங் கண்ணனார்.

விழவுமேம் பட்ட பழவிறல் மூதூர்

(பெரும்பாண்:411)

என்று கச்சி மாநகரைச் சுட்டுவர். கச்சிமாநகர்ப் புனைவு விரிவாக விளங்குகின்றது.[11]

அந்த விரிவான புனைவில் காஞ்சியை ஆசிரியர் குறிப்பர். இதற்கு

> "ஈண்டு 'விழவு மேம்பட்ட பழவிறன் மூதூர் என்றது திருவெஃகா முதலாகப் பல வூர்களைத் தன் சேரிகளாகக் கொண்ட பேரூரை என்பது பொருந்தும். பழவிறன் மூதூர் = பழமையாகவே விறலாற் சிறந்த பல்லூர்களுந் தோற்றற்கு முன்னரே தோன்றிய ஊர்; "நகரேஷு காஞ்சி" என்னும் வடமொழி வழக்கால் இதன் சிறப்பும் பழமையுமுணரலாம்".[12]

என்று ரா. இராகவையங்கார் விரிவுரை எழுதுவர். கயமனார், ஆகிய எட்டுத் தொகைப் புலவர் சொல்லுமாறே இவரும் ஊரைப் பேசுவது குறிக்கத்தக்கது. தொகை நூல் மரபு பத்துப் பாட்டிலும் காணப்படுகிறது. அடி எண்ணிக்கை குறைந்த பாடல்களில் பயிலும் அடி, அடி எண்ணிக்கை மிகுந்த பாடல்களிலும் பயிலுவது, இவண் ஒப்புநோக்கி ஆராயத்தக்கது. பேராசிரியர் ரா. இராகவையங்கார் பழவிறல் மூதூருக்குத் தந்த விளக்கம் அத்தொடரின் பொருளாழத்தையும் அகலத்தையும் விளக்குவதாகிறது.

ஊரண்மை உரைக்கும் ஒலிப்புனைவு

மலைபடு கடாம் (கூத்தராற்றுப் படை) நன்னன் சேய் நன்னனுடைய ஊரைப் புனைகின்றது. ஊரைச் சொல்லி - ஊர் மிக அண்மையிலுள்ளது என்று அந்நூல் இயம்புகிறது; பாட்டில் ஊர்ப்பெயரே இடம் பெறவில்லை. நன்னனுடைய ஊரை ஒன்பது அடிகளில்

நிதியந் துஞ்சு நிவந்தோங்கு வரைப்பிற்
பதியெழ லறியாப் பழங்குடி கெழீஇ
வியலிடம் பெறாஅ விழுப்பெரு நியமத்து
யாறெனக் கிடந்த தெருவிற் சாறென
இகழுநர் வெரூஉங் கவலை மறுகிற்
கடலெனக் காரென வொலிக்குஞ் சும்மையொடு

மலையென மழையென மாட மோங்கித்
துனிதீர் காதலி னினிதமர்ந் துறையும்
பனிவார் காவிற் பல்வண் டிமிரும்

(மலைபடு:478-486)

என்று பழவிறல் மூதூரைப் பாடுவர்; இங்கு மிக்க ஆரவாரம் விளங்குதலைச் 'சாறென' (விழா என்று) ஆசிரியர் பேசினார். ஊரின் விழாக் கோலத்தைச் சுட்டியவர், ஊரின் வணிக வளத்தை 'விழுப் பெரு நியமத்து' என்றும் உணர்த்துகிறார். ஊரின் பரந்த பரப்பை மலைபடு கடாம், பல்வேறு வகையாகச் சுட்டி ஓசையான் அந்த ஊரை இங்குப் புனைந்திருக்கிறார். இப்பாட்டில், தொகை நூல் போலப் பெருங்கௌசிகனார், 'பழமை, வணிகம், விழாச் சிறப்புகளையுடைய ஊர் நன்னனுடைய ஊர் என்று காட்ட 'பழவிறல் மூதூர்' என்ற அடைத் தொடரைத் தொகைநூல் போலப் பாட்டிலும் பயன்படுத்துகிறார்.

பெருங்கௌசிகனார், மலைபடுகடாத்தில், நன்னனுடைய ஊரின் செயற்கை நல்வளத்தையே - வணிக வளத்தையே - புனைகிறார்; ஊரின் இயற்கை அழகும் கவினும் பாடலில் இடம் பெற்றில. வறியோன் நாடிவந்த ஊர் அருகிலுள்ளது என்று அறிய ஊரைப் பெருங்கௌசிகனார் இவ்வண்ணம் விவரிக்கின்றார். பெரும்பாணாற்றுப் படைப் புனைவு, மலைபடுகடாம் புனைவிலிருந்து வேறுபட்டதாகவும் இயற்கைச் சார்புடையதாகவும் திகழ்கிறது.

சங்க நூல்களிலேயே பழவிறல் மூதூர் என்றும் பழவிறல் நனந்தலை என்றும் இரண்டு வகையாகப் பயிலும் இடமுணர்த்தும் தொடர்கள் ஏழு இடங்களிலே பயிலுகின்றன. மகட் போக்கியதாய் கூற்றாகப் பாடும் கயமனார் ஒருவரே இந்த ஒரே அடியை இரண்டு பாடல்களில் கையாண்டிருக்கிறார்; இரண்டும் பாலைத் திணையின; நக்கீரர், ஒரு பாடலில் பாலைத் திணையில் இத் தொடரைப் பயன்படுத்துவர். நனந்தலையைக் கபிலரும் பேரிசாத்தனாரும் இவ்வடைத் தொடர் கொண்டு விளக்குவர். கடியலூர் உருத்திரங்கண்ணனார், இரணிய முட்டத்துப் பெருங்குன்றூரார்ப் பெருக்கௌசிகனார் ஆகிய இருவரே, இவ்வடைத் தொடரை

அமைத்துப் பத்துப் பாட்டில் இரண்டு நூல்களில் பாடியுள்ளனர். தொகை நூல்களில் 'பழவிறல் மூதூர்' பெண்கள் கூற்றாகப் பயிலப் பத்துப் பாட்டில் அதே தொடர் ஆண்கள் கூற்றாக விளங்குகிறது.

பழவிறல் மூதூர்

நூல்	பா. எண்	ஆசிரியர்	திணை	கூற்று	பாடலடி
நற்றிணை	37:1	பேரி சாத்தனார்	பாலை	தோழி	பிணங்கரில் வாடிய பழவிறல் நனந்தலை
	293:4	கயமனார்	பாலை	தலைவி	விழவுத் தலைக்கொண்ட பழவிறல் மூதூர்
அகநானூறு	17:19	கயமனார்	பாலை	செவிலி	விழவுத்தலைக் கொண்ட பழவிறல் மூதூர்
	141:10	நக்கீரர்	பாலை	கிழத்தி	பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
	318:7	கபிலர்	குறிஞ்சி	தோழி	பழவிறல் நனந்தலைப் பயமலை நாட
பெரும்பாணாற்றுப் படை	411.	கடியலூர் உருத்திரங் கண்ணனார்		ஆற்றுப் படுக்கும் பெரும் பாணன்	விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்
மலைபடு கடாம்	485	இரணிய முட்டத்துப் பெருங் குன்றூர்ப் பெருங் கௌசிகனார்		ஆற்றுப் படுக்கும் பெரும் பாணன்	நனிசேய்த் தன்றவன் பழவிறல் மூதூர்

மல்லல் மூதூர்

மல்லல் என்ற சொல் சங்க இலக்கியத்தில் மிகுதியாக ஆட்சி பெறுவது; இச்சொல் மூதூர் என்ற சொல்லுக்கு அடையாகித் தொடராகிச் சங்கப் பாடல்களில் வருகின்றது. தொன்மையை உணர்த்தும் அடையின்றி (மூது) ஊர் என்ற சொல்லுடனும் மல்லல் என்ற சொல்லும் வருதல் உண்டு. மல்லலூர் என்ற தொடர் குறுந்தொகையிலும் (45:3) கலித்தொகையிலும் (61:23;104:62;138:10) தாம் ஆட்சி பெற்றுள்ளன; பெரும் பாணாற்றுப்படையில் மல்லல் மூதூர் என்பது போல மல்லற் பேரூர் (254) என்ற தொடர் பயிலுகின்றது. மல்லல் என்ற ஒரு சொல் அடையால் ஊரின் வளமையான நிலைபுனையப்படுகிறது. மூலங்கீரனார் பாலைப் பாட்டில் ஊரைப் புனையும் போது புன்கண் மாலைக் காலத்தையும் இணைத்துப் பாடுகிறார். அவர் ஊரை 'மல்லல் மூதூர்' என்று சுட்டுவர்.

வேனில் முருக்கின் விளைதுணர் அன்ன
மாணா விரல வல்வாய்ப் பேஎய்
மல்லன் மூதூர் மலர்ப்பலி உணீஇய
மன்றம் போழும் புன்கண் மாலை

(நற்.73:1-4)

மாலைக் காலத்து மலர்ப்பலி உண்ணப் பேய்கள் வளமான மூதூருக்கு வரும். வேனிற்காலத்தில் முருக்கமரத்தில் தோன்றும். பூங்கொத்துப் போன்று பேயின் விரல்கள் காணப்படும் வளவிய மூதூர் என்று இயம்பியதற்குத் தகப் பாடலில் வேறு புனைவு கிடையாது.

'மல்லல் மூதூர்' என்று அடை பெய்து மூலங்கீரனார் ஊர்வளத்தை வெளிப்படுத்துகின்றார். ஆனால் 'மூதூர்' என்பது எவ்வூர் என்று இவர் இயம்பிலர்; இதே பாடலில், ஆசிரியர் சாய்க்காடு என்று ஊரைப் பெயருடன் சுட்டித் தலைவி நுதற்கவினுக்கு உவமை உரைப்பர். இத்தொடர்ப் புனைவின் மூலம் ஊரின் வளநிலையை மூலங்கீரனார் பயில்வோரை உணரவைக்கிறார்.

தலைவனிருக்கும் ஊர்

தன் கணவன் பரத்தையர் ஒழுக்கம் மேற் கொண்டமையால் அவன் தன்பால் வரவில்லை என்று வருந்தித் தன்னிலைமையைத் தலைவி வெளிப்படுத்தினாள்; அதனை அறிந்த தோழி பாணனுக்குக் கூறுவதாய்க் கருவூர்ப் பூதஞ் சேந்தனார் நெய்தல் திணையில் (அகநானூற்றில் ஒரு) பாடல் பாடியுள்ளார். தோழி கூற்றுப் பாடலில், தோழியிடம் தலைவி சொல்லியதாக இப்பகுதி வருகின்றது.

இப்பாட்டில் ஊர் என்றோ இன்ன பெயர் என்றோ தலைவியின் ஊரைக் குறிக்காமல் புலவர் புனைந்துள்ளார்.

.......... எல்லி
மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில்
துணையொன்று பிரியினும் துஞ்சாக் காணெனக்
கண்ணிறை நீர்கொடு கரக்கும்
ஒண்ணுதல் அரிவையான என்செய்கோ வெனவே.

(அகம்.50:10-14)

என்பது தலைவி வாழும் சூழல் புனைவு. தலைவி மனநிலைக்குப் பொருந்த சூழ்நிலை புலவரால் புனையப் பெறுகிறது. இங்கு அன்றிலும் அதன் அன்புணர்வும் பாடுபொருளாகித் தலைவி இருப்பிட நிலையை - நெய்தல் நிலத்தைக் - காட்டுகின்றன.

இச்செய்தியைத் தலைவனிடம் சென்று சொல்ல வேண்டும் என்ற கருத்துத் தோன்ற தலைவன் ஊர் பாடலில் சுட்டப்படுகிறது.

மல்லல் மூதூர் மறையினை சென்று

(அகம்.50:9)

என்பது தலைவன் ஊரைக் குறிக்கிறது. இங்கு ஊர்ப் பெயரில்லை; புனைவில்லை. மல்லல் என்றும் பழைமை என்றும் ஊர் அடையாளங் காட்டப்படுகிறது. தலைவன்

இருக்கும் ஊரும் தலைவி இருக்குமிடமும் பாடலில் குறிக்கப்பட்டாலும் இரண்டு இடமும் ஒன்று என்று கருவூர்ப் பூதஞ்சாத்தனார் குறித்திலர்.

தலைவன் உள்ளூரிலேயே பரத்தையிற் பிரிந்திருந்தால் புலவர் மூதூர் என்று சுட்டார்; அவன் தலைவி இல்லாத வேற்றூரில் வாழ்ந்த பரத்தையையே நாடி வாழ்ந்திருக்கின்றான். ஆதலின் இங்குத் தலைவி ஊர் வேறாகவும் தலைவன் ஊர் வேறாகவும் இருந்திருக்க வேண்டும் என்பது புலனாம். தலைவன் ஊரை எல்லா வளமும் நிறைந்த பழமையான ஊர், என்று புனைந்ததன்றி வேறு குறிப்பில்லை.

குடபுலவியனார் புனைவு

'மல்லல் மூதூர்' என்ற ஊர்ப்புனைவு அகப்பாடலில் போலப் புறப்பாடலிலும் ஒரு பாடலில் பயிலுகிறது. பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் நீர் நிலைகளைப் பெருக்குக என்று அறிவுறுத்தும் போது அவனை மூதூர் வேந்தன் என்று விளிக்கின்றார். பாண்டியன் நெடுஞ்செழியனைக் குறிப்பதால் இதிலமையும் ஊர் மதுரை மூதூரேயாகும்.

நீர்த்தாழ்ந்த குறுங்காஞ்சிப்
பூக்கதூஉ மினவாளை
நுண்ணாரற் பருவராற்
குரூஉக்கெடிற்ற குண்டகழி
வானுட்கும் வடிநீண்மதில்
மல்லன்மூதூர் வயவேந்தே (புறம்.18:7-11)

என்ற புனைவில் அகழி, மதில் ஆகியன புறப்பொருளுக்கேற்பப் புனையப் பெறுகின்றன. பாண்டியனுடைய கோட்டைச் சிறப்பை - நகரின் வலிமையைக் - காட்டவே இம்மாதிரிப் புனைவு அமைகிறது. இப்புனைவின் நோக்கம், மன்னன் தலைநகர்ச்சிறப்பைக் காட்டுவதாகின்றது. எனவே இது மதுரை மூதூராதல் சாலும்.

குட்டையான காஞ்சிமரம், நீரிலே படும்படியாகத் தாழ்ந்திருக்கும்; அம்மரத்தின் பூவை இனமாகிய வாளை மீன் கவரும்; அந்த ஆழமான கிடங்கில்

நுண்ணிய ஆரல்மீன், பெரிய வரால் மீன், நிறமுடைய கெடிற்றுமீன் ஆகியன காணப்படும்; வானம் அஞ்சுகின்ற திருந்திய நெடிய மதில்; இத்தகைய வளமுடைய பழைய ஊர். இந்தப் புனைவு மன்னனின் உடைமையாக ஊர் விளங்குதலையும் அவ்வூரின் அகழி. மதில் ஆகியவற்றின் சிறப்பையும் புறப்பொருளுக்கேற்பப் புனைந்து காட்டுகிறது.

ஈரடைச் சிறப்பு

நக்கீரர் நெடுநல் வாடையில் ஊரைப் புனையும் போது மல்லல் மூதூர் என்றும் மாடமோங்கிய மூதூர் என்றும் அடை பெய்து ஊரின் தனிச் சிறப்பைக் காட்டுகிறார். இங்கு ஓரடியில் ஈரடை வருதல் குறிக்கத்தக்கது. மல்லல் என்று வளங்காட்டும் சொல் மூதூர்க்கும் ஆவணத்துக்கும் வந்து ஊர் வளம் உரைக்கப்பெறுகிறது.

மாட மோங்கிய மல்லன் மூதூர்
ஆறுகிடந்த தன்ன வகனெடுந் தெருவில் (நெடு.30-11)

இஃது ஊர்ப்புனைவு. ஊர் பல்வேறு தெருக்களையுடையது; அந்தத் தெருக்கள் மிகவும் அகன்றவை. அங்கு விளங்கிய ஆவணமும் வளமுடையது. நக்கீரர் அதற்கும் 'மல்லலாவணம்' (நெடு.44) என்று அடைபெய்து பாடுவர். இந்த ஊர்ப்புனைவில் நக்கீரர் ஊருக்கும் ஆவணத்துக்கும் 'மல்லல்' என்ற ஒரே அடையைப் பெய்து பாடியிருக்கிறார். இந்த ஈரிடத்தும் வளத்தைக் காட்டவே அடை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.[13]

மல்லலூர்ப்புனைவு

இவையெல்லாம் மல்லல் மூதூர் என்று அடைபெற்றவை; ஆலங்குடி வங்கனார்,

மல்லலூர னெல்லினன் பெரிதென (குறு.45:3)

என்று இந்த அடையை ஊரனொடு இணைத்து இயம்புவர். இது தலைவன் வளம் உணர்த்துகின்றது. இவ்வாறே ஊர் வளம் காட்டுவதாக இவ்வடை கலித்தொகையில் 'மல்லலூ ராங்கட் படுமே' (கலி.61:22) என்றும், 'வாங்கெழில் நல்லாரும் மைந்தரும்

மல்லலூர்/ஆங்கணயர்வர் தழூஉ' (கலி.104:61) என்றும் 'மல்லலூர் மறுகின்கண் இவட்பாடும் இஃதொத்தன்' (கலி.138:10) என்றும் வருகின்றன. இவை அனைத்தும் ஊரின் வளத்தைக் காட்டுவன. பெரும்பாணாற்றுப் படையில் 'மல்லற் பேரூர்' என்று ஊர் பேசப்படுகிறது. முதுமைக்கு ஈடாகப் பெருமை வருகிறது.

தொல்பசி யறியாத் துளங்கா விருக்கை
மல்லற் பேரூர் மடியின் மடியா

(பெரும்பாண்.253:254)

என்று மருதநிலப் பேரூர் புனையப் பெறுகிறது. எட்டுத் தொகைப் பாடல்களை விடப் பத்துப்பாட்டு ஊர்ப் புனைவு விரிவாகவே விளங்குகிறது. மல்லல் என்ற சொல் அடையாக வந்து ஊரின் வளத்தைக் காட்டுவதாய்ப் புனையப் பெற்றிருக்கிறது. மல்லலூர் என்ற புனைவு கலித்தொகையில் மிகுதி. ஆனால் இவற்றில் ஊர்ப்புனைவு விரிவாக இல்லை. 'மல்லல்' என்ற அடை வளத்தைக் காட்டுவதாகவே அமைந்தது. ஊருக்கு இச்சொல் அடையாக வருமாறு வேறு பலவற்றின் வளத்தைக் காட்டவும் இஃது அடையாக வருகின்றது.

நூல்	புலவர்	பா.எண்	அடைகொளி	பாடலடி
ஐங்.	அம்மூவனார்	120:3	இருங்கழி	மல்ல லிருங்கழி மலிநீர் விரியும்
ஐங்.	பேயனார்	414:4	புறவு	மல்ல லாகிய மணங்கமழ் புறவே
நற்.	குன்றியனார்	239:4	இருங்கழி	மல்லல் இருங்கழி மலிநீர்ச் சேர்ப்பற்கு
நற்.	உலோச்சனார்	249:9	சேரி	மல்லஞ்சேரி கல்லெனத் தோன்றி அம்பல் மூதூர் எழச் சென்றது
பெரும்	கடியலூர்	143	மன்றம்	மல்லல் மன்றத்து மதவிடை கெண்டி
நெடு.	நக்கீரர்	29	மூதூர்	மாடமோங்கிய மல்லன் மூதூர் ஆறுகிடந் தன்ன அகனெடுந் தெருவிற்
பரி.	நல்லந்துவனார்	11 43	புனல்	மல்லல் புனல் வையை

மல்லல் மூதூர், மல்லலூர், மல்லற் பேரூர்

நூல்	பா. எண்	ஆசிரியர்	திணை	கூற்று	பாடலடி
நற்.	73:3	மூலங்கிரனார் உணீஇய	பாலை	தலைவி மலர்ப்பலி	மல்லல் மூதூர்
அகம்.	50:9	கருவூர்ப் பூதஞ் சேந்தனார்	நெய்தல்		மல்லல் மூதூர் மறையினை வென்று
புறம்.	18:12	குடபுல வியனார்			மல்லல் மூதூர் வயவேந்தே
நெடு.	29	நக்கீரர்			மாடமோங்கிய மல்லல் மூதூர்
குறு.	45:3				மல்லூர நெல்லினள் பெரிதென
கலி.	61:22				மல்லூராங்கட் படுமே
கலி.	104:61				மல்லலூர் ஆங்கண்
கலி.	138:10			மறுகின்கண்	மல்லலூர்
பெரும்.	254	கடியலூர் உருத்திரங் கண்ணனார்			மல்லற் பேரூர் மடியின் மடியா.

நனந்தலை மூதூர்

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் இறப்பை ஐயூர் முடவனார் பாடுகின்றார். ஆனந்தப்பையுள் துறை. வளவனை அடக்கம் செய்யும் தாழியை வேட்கோ வனைகின்றான். ஐயூர் முடவனார் அவனை 'இருள் நீக்கி ஓரிடத்தே செறிந்து நின்றாற் போன்ற நிறமுடைத்தாய்த் திரண்ட மிக்க புகை அகன்ற பெரிய ஆகாயத்தின் கட் சென்று தங்கும் சூளையையுடைய அகன்ற இடத்தையுடைய பழைய ஊரின் கட்கலம் வனைவோன்' (புறம்.228:2-4) என்று பாடுவர். இங்குப் புலவர் ஊரை 'நனந்தலை மூதூர்' என்று அடை கொடுத்துரைப்பர். மட்கலம் வனைதல், சூளை வைத்தல், புகைவானில் பரவல், ஊரின் அகன்ற இடப்பரப்பு ஆகியனபுனைவில் இடம் பெறுகின்றன.

இங்கு ஊர்ப் பெயருமில்லை; ஊரை அடையாளங் காணுமாறு புனைவுமில்லை. பாட்டுடைத் தலைவன் வளவனாதலின் இங்குச் சுட்டும் ஊர் 'உறையூராதல்' வேண்டும்; பாடியோன், பாடிய சூழல், பானை வனைதல் ஆகியவற்றைப் பொருத்தமுற ஐயூர் முடவனார் காட்டுகிறார். மண்பாண்டம் வனையும் இடங்களில் பயிரினங்களைப் பெருகக் காணமுடியாது; அந்தக் களத்துக்குத் தக்கவாறு இந்தப் புனைவு அமைகிறது.

இன்னொரு பாடலில் இதே சூழலில் ' நனந்தலை மூதூர்க் கலம் செய்கோவே' (புறம்.256:7) என்பர் புலவர். இங்கு வெறும் அடைத் தொடர் மட்டுமே ஊரைக் காட்டுகிறது. நிகழ்ச்சி நடக்கும் களத்துக்குத் தக்கவாறு புனைவு இல்லை. கலஞ்செய்கோவை விளிக்கும் இரண்டு பாடல்களிலும் (228,256) ஒரே சொல் ஊருக்கு அடையாகிறது. இரண்டும் ஒரே கருத்தை உணர்த்துவன. ஐயூர் முடவனார் தன் பாடலில் சுட்டும் ஊர் உறையூர் (228); இன்னொரு ஊர் (256), எவ்வூர் என்று தெரியவில்லை. 'நனந்தலை மூதூர்' என்ற அடைத் தொடர் சங்க நூல்களில் புறநானூற்றில் தான் பயில்கின்றது.

நனந்தலை என்று அடை பயில்கின்ற வேறு பல சொற்கள் சங்க நூல்களில் காணப்படுகின்றன.

நனந்தலைக்கானம்	(அகம்.78:1)
நனந்தலைப் பெருங்காடு	(அகம் 101:11)
நனந்தலைக் குறும் பொறை	(அகம். 271:4-5)
நனந்தலைச் சுனை	(அகம். 268:1)
நனந்தலைப் பெரும்பல் குன்றம்	(நற். 298:1)
நனந்தலைக் கானத்து	(நற். 394:1)
நனந்தலை உலகம்	(குறு. 6 3 (பதி.63:18) (முகில்:1)
நனந்தலைக் கானம்	(குறு 272 : 3)
நனந்தலை நிழலிடம்	(ஐங். 326 : 1)
நனந்தலை வெம்மினம்	(ஐங் 329 : 12)

நனந்தலை வேந்தர்	(பதி. 55 :17)
நனந்தலை யீண்டிய	(பதி. 59 14)
நனந்தலை யோராங்கு	(பதி. 59 16)
நனந்தலை யகலிரு வானத்து	(பெரும். 291 - 292)
நனந்தலைக் கம்பலை	(மது. 430)
நனந்தலை வினைஞர்	(மது. 539)
நனந்தலை தேஎத்து	(மது. 322)
நனந்தலை மறுகின்	(பட். 193)
நனந்தலைத் தேஎம்	(மலை:272 -73)

இவற்றில் எல்லாம் 'நனந்தலை' வெவ்வேறு பொருள்களுக்கு அடையாக வந்திருக்கிறது; இச்சொல் ஊருக்கு அடையாக வில்லை என்றாலும் இடத்துக்கும் மக்களுக்கும் பெயருக்கும் அடையாக வருகின்றது. ஊரின் பரப்பைக் காட்ட 'நனந்தலை' என்ற அடைச்சொல் ஊருக்கு அமைகின்றது. மூதூரின் பரந்து பட்ட விரிந்த நிலப்பரப்பைக் காட்டி மூதூரைப் புனையவே புலவர்கள் இவ்வடையைப் பயன்படுத்துகின்றனர்.

அஞ்சுவரு மூதூர்

ஊரின் அச்சம் தருகின்ற நிலையை உணர்த்த சங்கப் புலவர்கள் 'அஞ்சுவரு' என்று அடைபெய்து பாடினர். இந்தத் தொடர் மூதூர்க்கு அடையாக வருகின்றது. இஃது அகநானூற்றில் பெயரறியாப் புலவர் பாடிய முல்லைத் திணைப் பாட்டு. இப்பாடல் இரண்டு பகுதியாகப் புனையப் பட்டிருக்கிறது; ஒன்று தலைவி தோழியை நோக்கிக் கூறுவதாகத் தலைவன் எண்ணுவது; இன்னொன்று தலைவியைப் பற்றித் தலைவன் எண்ணுவது. ஒரே ஊரில் இருக்கும் தலைவி உணர்வைக் கொண்டு ஆசிரியர் ஊரை இரண்டு வகையாகப் புனைந்து காட்டுகிறார். முல்லைத் திணைக்குப் பொருந்த தலைவி புனைவில் மாலைக் காலக் காட்சி பாட்டின் முற்பகுதியாக அமைகிறது; தலைவன் தன் ஊர் சேர்தலுக்குத் தகப்

பிற்பகுதி இராப் பொழுதுப் புனைவாகிறது. இரண்டு பகுதியிலும் ஒரே ஊர் மாலையிலும் இரவிலுமாகப் புனைவு பெறுகிறது.

தலைவி முல்லை நிலத்தூரில் வாழ்கின்றாள்; அங்குப் பூக்கள் உதிர்ந்து கிடக்கின்றன; அவை வேலன் வெறியாடு களத்தில் பரவிய சிறிய பூக்கள் போலக் காட்சி தருகின்றன. வலி குன்றிய 'கதிர்களையுடைய மேற்கே மறையும் கதிரவன், பாம்பு விழுங்குகின்ற சந்திரனைப் போல (சந்திர கிரகணம்) மெல்லென மறைகின்ற சிறு புன் மலைக் காலம். இது தலைவி ஊரின் மாலைக் காலப் புனைவு. இம் மாலைக் காலத்தில் தலைவன் தன்னை நினையாரோ என்று தலைவி கூறிப்புலந்து உறைகின்றாள்.[14] முல்லைத் திணைக்குப் பொருந்த மாலைக் காலம் இங்குப் புனையப்படுகிறது. பாடலில் கதிரவன் மறைவும் மலர்கள் வீழ்ந்து கிடத்தலும் தாம் புனையப்பெறுகின்றன. தொல்காப்பிய உரிப் பொருள், முதற்பொருள் மரபு இங்குப் பின்பற்றப் படுகிறது.[15]

தலைவன் தலைவியைப் பற்றி எண்ணும் எண்ணம் பாட்டின் பிற்பகுதியாக அமைகிறது.

நெடுங்கொடி நுடங்கும் வான்தோய் புரிசை
யாமங் கொள்பவர் நாட்டிய நளிசுடர்
வானக மீனின் விளங்கித் தோன்றும்
அருங்கடிக் காப்பின் அஞ்சுவரு மூதூர்த்
திருநகர் அடங்கிய மாசில் கற்பின்
அரிமதர் மழைக்கண் அமைபுரை பணைத்தோள்
அணங்குசால் அரிவையைக் காண்குவம்

(அகம்.114:11-15)

என்பது புனைவு. கோட்டை மதிற்சுவர்மீது இரவு நேரத்தில் விளக்கேற்றியிருப்பது வானத்து விண்மீன் போலக் காட்சி தருகிறது. கோட்டைச் சுவர், விளக்கு ஆகியவற்றைப் புனைந்து அணுக முடியாத கடுங்காவலினையுடைய பகைவர்க்கு அச்சத்தைத் தரும் முதிய ஊர் என்பது புனைவு.

புலவர், மூதூரை மாலைக் காலத்தில் ஒரு வகையாகவும் இரவுக்காலத்தில் இன்னொரு வகையாகவும் புனைந்து பாடுகின்றார். ஒரே ஊரைப் பற்றி ஒரே பாடலில் இரண்டு வகையான புனைவு அமைகிறது. மாலைப் புனைவு தலைவியின் மென்மைப் பண்புக்குத் தகக் கதிரவன் மறைதலும் மலர்கள் கிடத்தலுமாகக் காட்சிப் படுத்தப்படுகிறது; இராப்புனைவு வினை முற்றி மீளும் தலைவன் மனநிலைக் கேற்பக் கொடிபறத்தல், கடுங் காவலுடைமை, பகைவர் அஞ்சல் என்று அமைகின்றது. இவ்வாறு 'அஞ்சு வருமூதூரை' அகநானூறு அழகுறப் புனைகிறது. பாடிய புலவர் தெரியாத இந்தப்பாட்டில், மூதூரின் பெயரும் சுட்டப்படவில்லை. மூதூர் என்ற பண்புத் தொகைச் சொல் 'அஞ்சுவரு' என்று அடைபெற்றுத் தலைவனுடைய ஊரின் காவல் நலத்தையும் தொன்மையையும் பெற்றது என்றுய்த்துணர வைக்கிறது.

மாமூலனார் அகநானூற்றுப் பாட்டில், (எண்.115) குடநாடு, அத்தம், அஞ்சுவருகவலை ஆகியவற்றைப் புனைவுழி, 'அழியா விழவின் அஞ்சுவரு மூதூர்' (அகம்.115:1) என்று ஊரைக் குறிப்பர். அவ்வூர் புறங்கூறித் திரியும் சேரிப் பெண்டிர் வாழும் ஊர். ஊரின் நிலையாகத் திருவிழா நிகழ்தலைப் பேசும் மாமூலனார், ஊரை எவ்வகையானும் புனைந்திலர். இது கற்பாதலின், தலைவன் ஊரிலேயே தலைவி வாழுகின்றாள்.

பாதை வழிப் புனைவு

பாலைத் திணைக்கு ஏற்ப மாமூலனார் பாதையை 'அருஞ்சுரக் கவலை' என்று புனைகுவர்.

........ வாய்வாள்
எவ்வி வீழ்ந்த செருவிற் பாணர்
கைதொழு மரபின்முன் பிரித்திடூஉப் பழிச்சிய
வள்ளுயிர் வணர்மருப் பன்ன ஒள்ளிணர்ச்
சுடர்பூங் கொன்றை ஊழுறு விளைநெற்று
அறைமிசைத் தாஅம் அத்தம் நீளிடைப்

பிறைமருள் வான்கோட் டண்ணல் யானைச்
சினமிகு முன்பின் வாமான் அஞ்சி
இனங்கொண் டொளிக்கும் அஞ்சுவரு கவலை

(அகம்.115 : 7-15)

மிக நீண்ட கரத்தின் பாதை; அங்கே சுடர் விட்டுக் கொத்துக் கொத்தாகக் கொன்றையின் முற்றி விளைந்த நெற்றுகள் பாறை மீது கிடக்கும்; அங்கு வாழுகின்ற வெண்மையான கொம்பினையுடைய யானைகளையும் சினமிக்குத் துள்ளித் திரியும் குதிரைகளையுமுடைய அஞ்சி என்பான் பகைவரின் ஆனினங்களைக் கைப்பற்றி ஒளித்துவைத்திருப்பான்; அத்தகைய அச்சந் தோன்றும் கவர்த்த நெறி, இந்தப் பாதையையே மாமூலனார் 'அஞ்சுவரு கவலை' என்று அடை கொண்டு புனைகின்றார்.

இவர் ஊரை 'அஞ்சுவரு மூதூர்' என்று புனைந்தமைக்கான அடிப்படையைப் புனைவில் பாடிலர்; இந்தப் பாடலின் பிற்பகுதியில், அஞ்சியின் வெட்சிப்போர் நிலையை மாமூலனார் பாடிப் பாதையை 'அஞ்சுவரு கவலை' என்று அடைநல்கி அறைகுவர். இங்குப் பாதையின் அஞ்சத் தக்க நிலை புனையப்படுகிறது. மாமூலனார் ஊருக்கும் பாதைக்கும் ஒரே அடையைக் கொடுத்துவிட்டுப் பாதையின் நிலையை மட்டும் விரித்துப் புனைகுவர்.

அடையின் பொருட் சிறப்பு

சங்கப்பனுவல்கள், 'அச்சத்தைத் தருகின்ற' என்ற கருத்தை உணர்த்தும் அஞ்சுவரு என்ற அடையை மூதூருக்கு அடையாக்கி அந்த ஊரின் புனைவாக்குகின்றன. பாதையின் கொடுமையைப் புனைய விழையும் புலவர்களும் இந்த அடையைப் பயன்படுத்துகின்றனர். கபிலர் பாதையின் இரவு நேரத்து விலங்குப் போராட்டத்தை,

............ யாமத்து
இரும்புலி தொலைத்த பெருங்கை யானை

வெஞ்சின உருமின் உரறும்
அஞ்சுவரு சிறுநெறி வருத லானே

(நற்.353:8-11)

என்று விவரிப்பர். தலைவன் தலைவியை நாடி இரவு நேரத்தில் வரக் கூடாது என்று கூறத் தோழி பாதையின் கொடுமையைப் புனைந்து பேசுகிறாள். ஆகலின் சங்கச் சான்றோரின் ஊர்ப்புனைவும் பாதைப் புனைவும் அகப் பாடலின் பாடு பொருளை நோக்கி அமைந்தவையாகக் காணப்படுகின்றன. பாதையின் கொடுமையைச் சுட்டிட இந்த அஞ்சத்தக்க புனைவைப் பாவலர் பாடுகின்றார். சங்கப் புலவர்கள் 'அஞ்சுவரு' என்று அடை பெய்தும் அந்த அடைக்கேற்பப் புனைந்தும் பாடுவர்.

நல்விளக்கனார் தலைவன் தலைவியை இரவில் நாடி வருதலைத் தோழி அறிந்து இரவில் வாராதொழிக என்று கடிந்து கூறினாள்; இது களவுப் பாட்டு. இப்பாட்டில், தலைவியின் மூதூர், சிறுநெறி, தலைவன் ஊர் ஆகிய மூன்றும் வருணிக்கப் பெறுகின்றன. ஆனால் சிறுநெறி மட்டுமே 'ஆரிருள் கடுகிய அஞ்சுவரு சிறு நெறி' என்று அடைபெறுகிறது. அந்த அடைக்கு விளக்கமாக

குறிவரி இரும்புலி அஞ்சிக் குறுநடைக்
கன்றுடை வேழம் நின்றுகாத்து அல்கும்
ஆரிருள் கடுகிய அஞ்சுவரு சிறுநெறி

(நற்.85:4-6)

என்ற புனைவு அமைகிறது. புலியிடமிருந்து தன்னுடைய கன்றை வேழம் காத்து நிற்குமியல்பு சிறு நெறியின் தன்மையாகிறது.

அஞ்சுவருநெறி

வேம்பற்றூர்க் குமரனார், 'அஞ்சுவரு சிறுநெறி' என்ற தொடரை 'அஞ்சுவரு நெறி' என்று சுருக்கினார். 'சிறு' என்ற அடையை இவர் தவிர்த்துவிட்டார். போரை விரும்பி ஆரவாரிக்கும் செங்கண் மறவர், கள் விற்கும் பெண்கள் அரித்துப் போட்ட

கள்ளின் வண்டலைக் குடித்தனர்; அவர்கள் வழிச் சென்றோரை அம்பால் எய்தனர்; அம்பு பட்டுப் பட்டோர், பதுக்கைக் கல்லின் மீது வீழ்ந்தனர். அக்கற்குவியலின் அருகேயுள்ள கோங்கின் மீது படர்ந்து இரவில் மலர்ந்த பசிய அதிரற் கொடியைக் காட்டு யானைகள், பெரிய இருள் புலர்கின்ற விடியற்காலத்தில் அரும்புடன் இழுத்துக் கவளமாக உண்ணும் அச்சம் வருகின்ற சுரநெறி.[16] இஃது அச்சம் தருகின்ற பாதைப் புனைவு. புலவர்கள் 'ஊருக்கு அச்சம் தருகின்ற' என்று அடையைத் தந்து புனையுமாறு பாதைக்கும் அந்த அடையைத் தந்து புனைகின்றனர். இடத்தின் புனைவு நிலையும் அடைத் தொடரின் கருத்தாழமும் இத்தகைய ஆட்சிகளுக்கு அடிப்படையாகும். பாதையின் இடப்பரப்புக் கருதி இவர் 'சிறு' என்ற அடையை விடுத்தார்.

அஞ்சுவரு நனந்தலை

விற்றூற்று வண்ணக்கன் தத்தத்தனார் 'அஞ்சுவரு நனந்தலை' என்று பாடுவர். இதே அடியில் 'அருஞ்சுரக் கவலை அஞ்சுவரு நனந்தலை' (நற்.298:5) என்று அருஞ்சுரம், அஞ்சுவரு என்று இரண்டு அடைகளைப் பெய்தியற்றினார்.

வம்ப	மாக்கள்	வருதிறம்	நோக்கிச்
செங்கணை	தொடுத்த	செயிர்நோக்கு	ஆடவர்
மடிவாய்த்	தண்ணுமைத்	தழங்குகுரல்	கேட்ட
எருவைச்	சேவல்	கிளைவயிற்	பெயரும்
அருஞ்சுரக்	கவலை	அஞ்சுவரு	நனந்தலைப்
பெரும்பல்	குன்றம்		

(நற்.298:1-6)

குன்றங்களுக்கிடையே உள்ள பாதை வழியை இங்குப் பாவலர் பாடுகிறார். பாதை வழியில் புதிதாக வருவோரை எய்ய அம்பைக் குறிபார்க்கும் மறவர்; பிணத்தைத் தின்னக் காத்திருக்கும் பருந்தின் சேவல், தண்ணுமை முழங்கும் குரல் கேட்டுச் சுற்றத்துடன் சேரும்; இது தான் பாதை வழியின் காட்சி; இயல்பாகவும் உண்மையாகவும் புலவர் பாடுகின்றார். பாதையின் கொடுமையைக் காட்ட

'அருஞ்சுரக் கவலை' என்றும் அங்கு அகன்ற இடம் இருத்தலை 'அஞ்சுவரு நனந்தலை' என்றும் இவர் உணர்த்துகிறார். தத்தனார் இரண்டு அடைகொடுத்துப் பாதையின் கொடுமையைக் காட்டியாங்கு இவரும் அதே இரண்டு அடைகளை நல்கிப் புனைந்துள்ளார். இரண்டு புலவர்களும் ஒன்று போல ஒன்றனை விளக்க இரண்டு அடைகளைப் பெய்து பாடுகின்றார்.

அஞ்சுவருகவலை

பல்வேறு பாதைகள் இணையுமிடத்தையோ பிரிந்து செல்லுமிடத்தையோ 'கவலை' என்பது மரபு. பாலை வழிப்புனைவுகளில் 'அருஞ்சுரக்கவலை' என்று வருவதும் ஒரு புனைவாகும். மதுரைப் பள்ளி மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் பாலை வழியை 'அஞ்சுவருகவலை' என்றும் 'அருஞ்சுரக் கவலை' என்றும் இரண்டாகப் பகுத்துப் பாடியிருக்கிறார். இந்த நற்றிணைப் பாட்டின் (நற்.352:1-9) இறுதி மூன்றடிகளன்றி ஏனைய எஞ்சிய ஒன்பது அடிகளும் பாதைப் புனைவேயாகும். இலை போன்ற அம்புகளையுடைய மறவர், உயிர்களிடத்து அன்பில்லாதவர்கள். அவர்கள் கொன்றமையால் பல புதியோர் இறந்து கிடக்கின்றனர். அப்பிணங்களைக் கழுகின் சேவல் தின்னாமல் முதுநரி விரட்டி அலைக்கின்றது. அம்முது நரிபசிய ஊனைத் தின்று வாய் வறண்டு நீர்பருக விரும்பிப் பேய்த்தேர் விளங்குகின்ற நீரில்லாத வறும்புலத்தை நீருள்ள இடம் என்று சென்று அலைந்து தடுமாறியது. தண்ணீர் கிடைக்காமல் வருந்திக் கற்குவியலின் நிழலில் தான் வெயிலுக்கு ஒதுங்கி இருக்கவும் இடம் கிடைக்காது வருந்துகின்ற அஞ்சத்தக்க பல வழி.[17] இங்குப் பாதையின் கொடுமையை வெளிப்படுத்த அருஞ்சுரம் (நற்.352:3) என்றும் 'அஞ்சுவரு' (நற்.352:9) என்றும் அச்சத்தைப் புலப்படுத்துகின்ற இரண்டு அடைகள் காணப்படுகின்றன.

மதுரைப் புல்லங் கண்ணனாரும் பாதையை 'அஞ்சுவருகவலை' என்பர் . 'சுருண்டமுடியையுடைய மறவர் குதை அமைந்த அம்பினை இழுத்து விடுத்து வழிச்செல்லும் புதியவர்களைக் கொன்ற அச்சம் தோன்றுகின்ற கவர்த்த பாதை' புலாலை விரும்பி உண்ணும் சிவந்த செவியையுடைய பருந்துச் சேவல் நெருங்கிய

தன் சுற்றத்தினை அழைக்கும் அச்சம் தோன்றும் கானம்.[18] இது கானத்துச் சுரப்புனைவு. இயற்கைக் காட்சிகளைப் புனைதல் போலப் பறவையினத்தையும் மனிதரையும் வைத்து ஆசிரியர் புனைகின்றார்.

இந்தப் பாதை வழிகளை 'அருஞ்சுரக் கவலை என்று விற்றூற்று வண்ணக்கன் தத்தனார், மதுரைப் பள்ளி மருதங்கிழார் மகனார் சொகுத்தனார், ஆகிய இருவரும் பாடுகின்றனர். ஊன்பொதி பசுங்குடையாரும் கோவூர் கிழாரும் 'அஞ்சுவரு' என்ற அடையைப் பயன்படுத்திப் போர்க்களத்தைப் பாடுகின்றனர். இருவர் பாடல்களும் ஒரே திணையாகவும் ஒரே துறையாகவும் உள்ளன. இந்த அடி இருவர் பாடல்களிலும் ஈற்றடியாகவே காணப்படுகின்றன. 'அஞ்சுவரு கிடக்கைய களங்கிழ வோயே' (புறம்.370:27) என்பது தான் ஈற்றடி. 'அஞ்சத்தக்க களம்' என்று போர்க்களம் புனையப்படுகிறது. போர்க்களத்தில் வீரர் சாவதையும் பேய்மகள் அழுதலையும் செஞ்செவிப் பருந்து புறத்தலையும் இப்புறப் பாட்டுகள் ஊரின் அஞ்சத்தக்க காட்சியாகப் புனைகின்றன. இதே அடை இதே பொருளில் அகநானூற்றில் பயின்றாலும் புனைவு வேறாகக் காணப்படுகிறது. பாதையில் ஆறலை கள்வர் வம்பலரைக் கொல்லுதலையும் அவண்செஞ்செவி எருவை பறத்தலையும் புனைந்து காட்டுகின்றன.

சங்கப்புலவர்கள், பொருள் பொதிந்த அடையை ஊருக்கும் பாதைக்கும் கவர்த்த வழிகளுக்கும் கையாண்டாலும் எல்லா அடைகளும் 'அஞ்சுவரு' என்றே அமைகின்றன. இக்கருத்தை வலியுறுத்துமாறு இத்தொடர் பதிற்றுப்பத்தில் பயிலுகிறது. தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறையை, அரிசில் கிழார், அயிரைமலைபோல நிலைபெற்று வாழ்க என்று வாழ்த்துகிறார். அயிரைமலையில் நடக்கும், நிகழ்ச்சியை 'அஞ்சுவரு மரபு' என்ற தொடரைப் பயன்படுத்தி விளக்குகிறார். கொற்றவைக்குப் பலியிட விழுப்புண்பட்ட வீரர், உடலிலிருந்தும், அவர்தம் மார்பிலிருந்தும் ஒழுகும் குருதியைத் தெளித்து மடை கொடுப்பர். குருதி விரவிய மடை கொடுத்தால்தான் கொற்றவை ஏற்பாள்; அதனையே 'அஞ்சுவரு

மரபு' என்று அரிசில் கிழார் சுட்டுகிறார்.[19] பாதையின் கொடுமையைக் காட்டுமாறு இங்குத் தெய்வப் பலி கொடுக்கும் அஞ்சத்தக்க மரபையும் ஆசிரியர் விளக்கினார்.

'அஞ்சுவரு' என்று ஊருக்கு அடையாக வருகின்ற இந்த அடை மொழிகள், சுரம் ஆகியவற்றுக்கும் அடையாகிப் பாதையில் ஏற்படுகின்ற அழிவுகளையும் கொடுமைகளையும் இவ்வடை உணர்த்துகின்றது. 'அருஞ்சுரம்' என்ற தொடரும் இக்கருத்தையே வெளிப்படுத்துகின்றது. அஞ்சுவரு மூதூர், 'அஞ்சுவரு சிறுநெறி, அஞ்சுவரு நெறி, அஞ்சுவரு நனந்தலை, அஞ்சுவரு கவலை என்ற அடைத் தொடர்களும் அச்ச உணர்வைக் காட்டுவன; அகப்பொருட்பாடல்களில் மட்டும் பயில்கின்றன. ஊரின் அச்சம் தரும் நிலையைப் புனையச் சங்கப் புலவர்கள் இந்தத் தொடரைப் பயன்படுத்துகின்றனர்.

அஞ்சுவரு மூதூர்

நூல்	பா. எண்	ஆசிரியர்	திணை	கூற்று	பாடலடி
அகம்.	14:14	-	முல்லை	தலைவன்	அருங்கடிக் காப்பின் அஞ்சுவரு மூதூர்
அகம்.	115:1	மாமூலனார்	பாலை	தலைமகள்	அழியா மரபின் அஞ்சுவரு மூதூர்

அஞ்சுவரு சிறுநெறி

நூல்	பா. எண்	ஆசிரியர்	திணை	கூற்று	பாடலடி
நற்.	85:6	நல்விளக் கனார்	குறிஞ்சி	தோழி	ஆரிருள் கடுகிய அஞ்சுவரு சிறுநெறி
நற்.	353:10	கபிலர்	குறிஞ்சி	தோழி	அஞ்சுவரு சிறுநெறி வருதலானே

அஞ்சுவரு நெறி

நூல்	பா. எண்	ஆசிரியர்	திணை	கூற்று	பாடலடி
அகம்.	157:9	வேம்பற்றூர்க் குமரனார்	பாலை	தலைமகன் நெறியிடைத்	அஞ்சுவரு தமியர் சென்மார்

அஞ்சுவரு நனந்தலை

நூல்	பா. எண்	ஆசிரியர்	திணை	கூற்று	பாடலடி
நற்.	298:5	விற்றூற்று வண்ணக்கண் தத்தனார்	பாலை70	தலைமகள்	அருஞ்சுரக் கவலை யஞ்சுவரு நனந்தலைப் பெரும்பல் குன்றம்

அஞ்சுவரு கவலை

நூல்	பா. எண்	ஆசிரியர்	திணை	கூற்று	பாடலடி
நற்.	352:3	மதுரைப்பள்ளி மருதங்கிழார் மகனார் சொகுத்தனார்	பாலை	தலைமகள்	வம்பலர் தொலைந்த அருஞ்சுரக் கவலை
நற்.	352:9	மேலது			அஞ்சுவரு கவலை வருதலின் வருந்திய
அகம்.	161:5	மதுரைப் புல்லங் கண்ணனார்	பாலை	தோழி	வம்பலர்ச் செகுத்த அஞ்சுவரு கவலை
அகம்	115:15	மாமூலனார்	பாலை	தலைமகள்	இனங்கொண் டொளிக்கும் அஞ்சுவரு கவலை

அஞ்சுவருகிடக்கை

புறம்.	370:27	ஊன்பொதி பசுங்குடையார்	அஞ்சுவருகிடக்கையை களங்கிழ வோயே
புறம்.	373:39	கோவூர்கிழார்	அஞ்சுவரு கிடக்கையை களங்கிழவோயே

பதிற்.	79:17	அரிசில் கிழார்	மடையெதிர் கொள்ளா அஞ்சுவரு மரபின்

அருங்கடி மூதூர்

ஊர்ப்புனைவில் 'அருங்கடி மூதூர்' (முல்லை.71) என்ற அடையைப் பயன்படுத்தி நப்பூதனார் தலைவி வாழும் ஊரைப் புனைகின்றார். 'அருங்கடி' என்ற சொல்லே அவ்வூரின் காவல் தன்மையை உணர்த்துகின்றது. முல்லைப் பாட்டின் தலைவன் மன்னனராய்ப் போர் மேற் சென்றிருக்கின்றான். ஆகையால் அவன் மனைவியும் கோப் பெருந்தேவியாதல் வேண்டும்; அவள் வாழுகின்ற ஊரும் காவல் மிக்க ஊராதல் வேண்டும். ஆதலின் நப்பூதனார் ஊரின் காவற் கடுமையைச் சொற்களால் பல அடிகளாகப் புனையாது, ஓரடைச் சொல்லான் உணர்த்துகிறார். சங்க நூல்களில் ஊரின் கடுமையைக் காட்டுமாறு 'அருங்கடி' என்ற தொடர் பயன்படுத்தப்படுகிறது. ஊரின் காவல் நலத்தைக் காட்ட புலவர்கள் விரிவாகப் புனையாது.[20] ஓரடையையே பெய்து பாடிய பாங்கு, சங்கச் சான்றோரின் புனைவு வளச் சால்பைக் காட்டுவதாகிறது. இவ்வாறு அடைப்புனைவு, அடிகளால் புனையும் புனைவைக் கட்டுப்படுத்துகின்றது.

மூதூரும் வியனகரும்

மூதூருக்கு அடையாக 'அருங்கடி' என்று வருவது முல்லைப் பாட்டில் மட்டுமே காணப்படுகிறது. பாட்டும் தொகையுமாகிய பிற நூல்களில் பயிலவில்லை. அகநானூற்றில் குடவாயிற் கீரத்தனார் 'அருங்கடி வியனகர்' (அகம்.315:8) என்று தலைவி இருக்கும் மனையை உரைப்பர். அடை கொளியான 'மூதூர்' என்பதற்கு ஈடாக இச்சொல் நகர் (மனை)க்கு அடையாகின்றது. குடவாயிற் கீரத்தனாரைப் போல மாறோக்கத்து நப்பசலையாரும் 'ஊன்புலத்/தருங்கடி வியனகர்க் குறுகல் வேண்டி (புறம்.383:5-6) என்று நகர் (மனை)க்கு அருங்கடி என்ற தொகைச்

சொல்லைப் புனைவதற்கு ஈடாகவே இந்த அடை பயன்படுகிறது. இவ்வடை பாடலில் பயிலுதலால் விரிவாகப் பல அடிகளான் உருவாக வேண்டிய புனைவு தவிர்க்கப் பெறுகிறது; ஓரடை ஆட்சியால் அழுத்தமான பொருள் உணர்த்துகின்ற புனைவு பயில்வோர்க்குத் தோன்றுகின்றது.

காப்பும் வரைப்பும்

பட்டினப்பாலையின் காவிரிப்பூம்பட்டினப் புனைவில் இந்த அடை பயன்படுத்தப் பெறுகின்றது. காவிரிப் பூம்பட்டினத்துச் சுங்கச் சாவடியைப் பட்டினப் பாலை 'அருங்கடிப் பெருங்காப்பு' (பட்.133) என்று விளக்குகிறது. இந்நூலில் பகைவருடைய ஊர் அழிவைச் சுட்ட வந்தவர் 'அருங்கடி வரைப்பி னார்கவின்' (பட்.269) என்று குறிப்பர். இரண்டிடத்தும் வெவ்வேறு இடங்களின் காவல் கடுமையை உணர்த்த இந்தத் தொடர்கள் பயன்படுகின்றன. நெடுநல் வாடையிலும் 'ஆடவர் குறுகா வருங்கடி வரைப்பின்' (107) என்று அரண்மனையின் காவற் சிறப்புப் பேசப்படுகிறது.

அருங்கடி மாமலை

மதுரைக் காஞ்சியில் பாண்டிய நாட்டுக் குறிஞ்சி வளத்தையும் நலத்தையும் பாடுகின்ற ஆசிரியர், மலையைப் பலவகையாகப் புனைகிறார். (286-301). மலையிலுள்ள மரங்களையும் விலங்குகளையும் மக்களையும் புனைந்து ஈற்றில் 'அருங்கடி மாமலை' (மது.301) என்று அடை பெய்து முடிப்பர். குறிஞ்சி மலைப் புனைவுக்கு இந்த அடை (அருங்கடி) முத்தாய்ப்பாக அமையாது, புனைவிலிருந்து வேறுபட்ட அடை இன்னொரு பொருளை உணர்த்துகின்றது. இந்த 'அருங்கடி' என்ற தொகைச் சொற்கள் எல்லாப் பாடல்களிலும் ஒரே மாதிரியான புனைவுக் காட்சியை உருவாக்கும் தொடராகவே ஆளப்பட்டிருக்கின்றன.

புறநானூற்றில் மதுரை நக்கீரர் சோழ நாட்டுப் பிடவூர் கிழார் மகன் பெருஞ்சாத்தனைப் பாடும் போது

.........		பலநல்ல	புலனணியும்
சீர்சான்ற	விழுச்சிறப்பிற்		
சிறுகண்	யானைப்	பெறலருந்	தித்தன்
செல்லா	நல்லிசை	யுறந்தைக்	குணாது
நெடுங்கை	வேண்மா	னருங்கடிப்	பிடவூர்
அறப்பெயர்ச்	சாத்தன்	கிளையேம்	

(புறம்.395:16-21)

என்று பிடவூரைப் பாடுவர். மதுரை நக்கீரர் பிடவூரை அருங்கடிப் பிடவூர் என்று அடைகொடுத்தும் அவ்வூர் உறையூருக்குக் கிழக்கின் கண்ணது என்றும் குறித்தார். ஈண்டு அருங்கடி என்ற அடை ஊர்ப்பெயருடன் ஊரின் காவற் சிறப்பை உணர்த்தி அடையாக வருகின்றது.

சங்கப் பனுவல்களில் அருங்கடி என்ற அடைபெற்று ஊர்ப் பெயருடன் வருகின்ற ஒரே பாடல் இஃதாகும்; இத்தகைய ஆட்சி அகப்பாடல்களில் காணப்படவில்லை. இப்பாட்டு, புறப் பாடலாக விளங்குதலின் ஊர்ப்பெயரும் அவ்வூர் பேரூர்க்கு இன்ன திசையில் உள்ளது என்றும் இன்னாருக்கு உரிமையுடையது என்றும் மதுரை நக்கீரர் விரிவாக உரைத்திருக்கிறார். ஆதலின் சங்க நூல்களில் இப்பாட்டு ஊரின் கடுங்காவலைப் புனையும் புனைவில் தனித்தன்மையுடையதாகும்.

அருங்கடி மூதூர்

நூல்	பா. எண்	ஆசிரியர்	திணை	கூற்று	பாடலடி
அகம்.	315:8	குடவாயிற் கீரத்தனார்	பாலை	தாய்	அருங்கடி வியனகர்ச் சிலம்புங்கழியான்
புறம்.	383:5-6	மாறோக்கத்து நப்பசலையார்	-	-	அருங்கடி வியனகர்க் குறுகல் வேண்டி
	395:20	மதுரை நக்கீரர்	-	-	நெடுங்கை வேண்மான் அருங்கடிப் பிடவூர்
முல்லை.	7	நப்பூதனார்	-	-	அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
பட்டினம்.	133	கடியலூர் உருத்திரங் கண்ணனார்	-	-	அருங்கடிப் பெருங்காப்பின்
	269	கடியலூர் உருத்திரங் கண்ணனார்	-	-	அருங்கடி வரைப்பின் ஊர்கவினழிய
நெடு.	107	நக்கீரர்	-	-	ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின்
மதுரை.	301	மாங்குடி மருதனார்	-	-	அருங்கடி மாமலை தழீஇ ஒரு சார்

நியமமூதூர்

வணிகச் சிறப்புணர்த்தும் அடை

வணிகம் வாழ்க்கைக்கு மிக இன்றியமையாத ஒன்று. ஒரு நாட்டின் தொழில்களிலே உழவும் வணிகமுமே தலைசிறந்தன என்பது அறிஞர் கொள்கை. ஒரு நாட்டின் மேம்பாட்டுக்கு இவ்விரு தொழில்களும் ஒருங்கு செழித்திருத்தல் வேண்டும். தமிழகமும் சங்க காலத்தில் இவ்விருதொழிலையும் குறைவுறப் பெற்றிருந்தது.[21]

இதனை மூதூர்க்கு வருகின்ற அடைகளால் அறிய முடிகிறது. வணிகம் செய்து வளம் பெற்று வாழ்ந்தது சங்ககால மன்பதை; மூதூர்க்கு அடையாக வரும் சொற்களில் ஒன்று 'நியமம்' என்பதாம். சங்ககால வணிகர் வணிகநிலையங்களைப் பழமையான ஊர்களில் நிறுவியோ மூதூர்களைச் சார்ந்தோ அமைத்தனர். வணிகக்களமாக விளங்கிய ஊரின் நிலையைக் காட்சியை ஒரு சொல்லடையால் உணருமாறு சங்கப் புலவர் உணர்த்தினர். தலைவனூரை நற்றிணைப் புலவர்,[22]

நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர் (நற்.45:4)

என்று பாடுவர். ஊரைப் பற்றி வேறு வகையான புனைவு பாடலில் கிடையாது. தலைவி வாழுமூர் சிற்றூர்; அதனைக் 'கானல் நண்ணிய சிறுகுடி' (நற்.45:1) என்பர் புலவர். நெய்தற் பாடலில் தலைவன் தலைவியர் ஊர்ப்புனைவு சுருக்கமாகக் காணப்படுகிறது. கடற்கரைச் சிறுகுடியில் வாழும் நெய்தல் நங்கையை வணிக வளம் சான்ற மூதூர்த் தலைவன் நயக்கின்றான். சிற்றூரை விடப் பெரிய ஊராயும் பழைமையான ஊராயும் பொலிதலினால் புலவர் அவ்வூரை 'மூதூர்' என்றார். இது கடற்கரையை விடுத்துத் தள்ளியமைந்த ஊர்; தலைவி ஊர் கடலை ஒட்டியமைந்த ஊர். கடல் சார்ந்த ஊர்களில் தான் வணிகம் செழிக்கும்; நெடுங்கொடிகள் பறக்கும் நியம மூதூர் என்பது வணிக வளத்தையும் ஊரின் பெருமையையும் காட்டும். தலைவனுடைய உயர் செல்வ நிலையையும் மேம்பாட்டையும் தலைவியின் தாழ்ந்த பரதவ வாழ்க்கையையும் இந்நற்றிணைப் பாட்டுப் புனைந்து வேற்றுமை காட்டுகிறது. இப்பாடலில் ஊர்ப்பெயர் சொல்லப் பெறவில்லை.

புனைவின் நோக்கம்

கானல் சிறுகுடிக் கன்னியையும் நியம மூதூர்த் தலைவனையும் காதல் பிணைக்கிறது. தலைவன், தலைவியரின் பொருள்நிலை, குடும்ப நிலை வேறுபாட்டைக் காட்டுதற்கு ஊர்ப்புனைவு கருவியாகிறது. திருமணத்திற்கு முன் தலைவன் தலைவியரின் ஊர்களைத் தனித்தனியே இப்பாடல் சுட்டுகிறது. ஆசிரியன் தான் வற்புறுத்த விரும்பிய கருத்துத் தக்கவாறு தலைவனைச் சேட்படை

செய்யத் தோழி, புனைவை மிகச் சுருக்கமாக - ஓரடியாக - ஆக்கியமை நோக்கத் தக்கது.

தலைவன் தனிமொழி

நற்றிணைப் பாடல் போல அகநானூற்றுப் பாடலொன்றிலும் 'நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்' என்ற அடி வருகின்றது. பாலைத் திணையைப் பாடும் கல்லாடனார். பாலை வழிப்பட்ட ஊர் ஒன்றனையும் அவ்வூரை ஆண்ட தலைவனயும் சுட்டிப் பாப்புனைந்துள்ளார். இது தலைவன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

வலம்சுரி	மராஅத்துச்	சுரங்கமழ்	புதுவீச்
சுரியா	ருளைத்தலை	பொலியச்	சூடிக்
கறையடி	மடப்பிடி	கானத்	தலறக்
களிற்றுக்கன்	றொழித்த	உவகையர்	கலிசிறந்த
கருங்கால்	மராஅத்துக்	கொழுங்கொம்பு	பிளந்து
பெரும்பொளி	வெண்ணார்	அழுந்துபடப்	பூட்டி
நெடுங்கொடி	நுடங்கும்	நியம	மூதூர்
நறவுநொடை	நல்லில்	புதவுமுதற்	பிணிக்குங்
கல்லா	இளையர்	பெருமகன்	புல்லி
வியன்றலை	நன்னாட்டு	வேங்கடம்	

(அகம்.83:1-10)

தலைவன் தான் செல்லும் பாதை வழியைக் கடந்து செல்லுதலை எண்ணுகின்றான். அப்போது கானமும் நியம மூதூரும் காட்சிப்படுத்தப்படுகின்றன. பாதை வெளியிலுள்ள வெண் கடம்ப மரத்தின் மலர்களைப் புனைந்த இளையர், யானைக் கன்றைக் கானத்திலே பிடித்துக் கொண்டு வந்து நியம மூதூரில் கள் விற்கும் நல்ல வீட்டுவாயிலினிடத்தே பிணித்திடுவர். இத்தகைய கல்லா இளையரின் தலைவன் புல்லி.

புல்லியையும் புல்லியின் நாட்டையும் பேச வந்த கல்லாடனார், கல்லா இளையர் புல்லி நாட்டு யானைக் கன்றைப் பிடித்து வந்து நியம மூதூரில் கள் விற்கும் வீட்டின் முன் கட்டுவதாகக் கூறுகிறார். இதனால் பாடலில் நியம மூதூர் இடம் பெறுகிறது. நீண்ட கொடிகள் அசையும் அங்கொடிகளையுடைய பழைமையான ஊர், அவ்வூர். இவ்வாறு புல்லியின் வணிக நகரம் உரைக்கப்படுகிறது. சங்கப் புலவர்கள் 'நியம மூதூர்' என்று அடைபெய்து பாடின் அவற்றுக்கு முன்னே 'கொடி நுடங்கும்' என்பது அடையாக வருகின்றது. இந்த அடி நற்றிணையிலும் (45:4) காணப்படுகின்றது.

அகப்பாடல்களின் 'நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்' என்று வருகின்ற புனைவு நற்றிணை, அகநானூறு ஆகிய இரண்டு நூல்களிலும் ஒவ்வொரு பாடலில் பயிலுகின்றது; வேறு பாடல்களில் பயிலவில்லை. இரண்டிலும் ஒன்று போல அமைந்த அடியே காணப்படுகின்றது. இரண்டு புலவர்களும், ஒரே அடியைப் பயன்படுத்துவது அவை முன்னரே வழக்கில் இருந்த அடி என்பதை உணர்த்துவதாகும்.

வணிக மையங்களில் வணிகப் பொருள்களை காட்டுமாறு கொடிகள் பறந்தன. இதனைப் பட்டினப் பாலையாலும் மதுரைக் காஞ்சியாலும் அறிய முடிகிறது.[23] இவை கொடி பறக்கும் நியமத்தைக் கூறுவன.

கொடி பறவா நியமம்

கொடியுடன் இணைத்துப் பேசாதும் சில நியமங்களைச் சங்கநூல்கள் கூறுகின்றன. 'கடுங்கட் கோசர் நியமம்' (அகம்.90:12) என்று மதுரை மருதனிள நாகனார் சுட்டுவர். தலைவியின் பாசிழை விலைக்குக் கோசருடைய நியமமும் ஈடாகாது என்பர் ஆசிரியர். தலைவியின் மதிப்பை நியமத்தின் மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக இப்பாட்டுரைக்கின்றது நெடுங்கொடி பறத்தல் பற்றி இவர் இயம்பிலர்; இந்த நியமத்தின் பெயர் (ஊர்ப் பெயர்) சொல்லப்படவில்லை. இப்பாட்டு நெய்தல் திணை.

கோசருடைய நியமம் செல்லூர்க்குக் கிழக்கே உள்ளது.[24] என்றும் அது பெரிய கடல்போல ஆரவாரத்தையுடையது என்றும் போரில் வடுப்பட்ட முகத்தையுடைய கோசர் வாழும்புதுவருவாய் உடைய நியமம் என்றும் மதுரை மருதனிளநாகனார் ஊரைப் புனைகுவர். மதுரைப் புலவராகிய இவர், செல்லூர் என்று மதுரைச் செல்லூரரையே சுட்டுகிறார். 'பெருங்கடல் முழக்கிற்றாகி' என்ற அடியைக் கொண்டு 'செல்லூர்க் கிழக்குக் கடற்கரை ஊர்.'[25] என்று விளக்குவது பொருந்தாது. கடலோசை, செல்லூர் நியமத்தின் ஆரவாரத்தை விளக்கவே வந்தது; அப்புனைவு அதனிருப்பிடத்தைச் சுட்டுவதன்று. எனவே செல்லூர் கடற்கரை ஊரன்று; மதுரையை அடுத்த செல்லூரேயாகும் என்பது தெளிவு.

சங்கப் புலவர்கள் 'மூதூர்' என்று சுட்டி அந்த ஊரைப்புனையும் போது அவ்வூரினை விழா நிகழும் ஊராகப் புனைகுவதுடன் அதனை அடுத்து வணிகநிலை அமைந்தது என்றும் பாடுகின்றனர். விழவறா மூதூர் என்று பயிலும் அடைத்தொடர் புறப்பாடல்களில் தாம் காணப்படுகின்றன. குமட்டூர்க் கண்ணனார்,

கட்வுங்	கல்லவும்	யாற்றவும்	பிறவும்	
வளம்பல	நிகழ்தரு	நனந்தலை	நன்னாட்டு	
விழவறு	பறியா	முழவிமிழ்	மூதூர்க்	
கொடிநிழற்	பட்ட	பொன்னுடை	நியமத்துச்	
சீர்பெறு	கலிமகிழ்	இயம்பு	முரசின்	
வயவர்	வேந்தே			(பதி.15:16-21)

என்று இமையவரம்பன் சேரலாதனை விளிப்பர். இங்கு நாட்டைச் சொல்லி நாட்டில் அடங்கும் மூதூரரையும் ஆசிரியர் உரைத்தார்; ஆனால் நாட்டின் பெயரோ ஊரின் பெயரோ பேசப்படவில்லை. ஊரினைப் புனையும் போது விழா அறுபடாது முழவு முழங்க ஆரவாரமாய்த் திகழும் ஊர் என்று குமட்டூர்க் கண்ணனார் காட்டுகிறார். பல வகைக் கொடிகளும் பறக்கும் கடைத் தெருக்கள் அவ்வூரில் உள்ளன. சேரனை விளிக்கும் போது நாடு, ஊர் என்றும் அவற்றின் வணிக வளம் ஆகியன சுட்டுகின்றார்; மூதூர்களைச் சார்ந்து விழா நாள்களில் வணிக

நிலையங்கள் அமைந்து வணிகம் நடைபெற்றமையை இக்குறிப்புகள் உணர்த்துகின்றன.

மிகச் சிறந்ததும் வணிகவளம் நிறைந்ததுமாகிய கோசர் நியமத்தைத் தலைவியின் பாசிழைக்கு ஈடற்றது என்று மதுரை மருதனிளநாகனார் உரைத்தார்; தலைவியின் பாசிழைக்கு ஊர் ஒப்பாகாது என்று புலவர் உவமை காட்டி மறுத்தார். இதில் வணிகமையம் செல்லூர்க்குக் கிழக்கே அமைந்திருக்கிறது. பெரிய ஊர்களைச் சார்ந்து அவ்வப்போது அமைக்கும் வணிக நிலையங்கள் இருக்கும். கோசர் செல்லூர்க்குக் கிழக்கே இம்மையத்தை அமைத்திருந்தனர். அதனால் தான் அம்மையத்தின் பெயரை ஆசிரியர் சுட்டிலர். 'கோசர் நியமம்' என்ற தொடரால், தமிழகத்திற்குள் கோசர்கள் வணிகம் செய்ய வந்தனர் என்று கருத வேண்டியுள்ளது.

ஆவணம்

நியமத்தைச் சுட்டிய சங்கச் சான்றோர் மற்றொரு வணிக நிலையை 'ஆவணம்' என்றும் குறிக்கலாயினர். 'பல்முட்டின்றால் நங்களவே' என்றுரைக்க வந்த பரணர்

இரும்பிழி மாரி அழுங்கல் மூதூர்
விழவின் றாயினும் துஞ்சா தாகும்
மல்லல் ஆவணம் மறுகுடன் மடியினும்
வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்
(அகம்.122:1-4)

என்று அழுங்கல் மூதூரின் வளஞ்சான்ற கடைத் தெருவைச் சுட்டி ஊரின் ஆரவார நிலையைப் பேசுகிறார். இரவு நேரத்து ஊரின் பல்வேறு ஓசைகளையும் பரபரப்பையும் சுட்டும் பரணர் இங்கு ஆவண மறுகையும் குறிக்கிறார். இதனை நியமம் என்று பரணர் சுட்டிலர். நியமத்தைவிடச் சிறியதாயும் சுருங்கியதாயும் இருத்தலின் இதனைத் தனியே பிரித்து ஆவணம் என்று கொண்டனராதல் வேண்டும்.

செல்வக்கடுங்கோ வாழியாதனின் வீரர் பகை வேந்தர் ஊர்ந்து செல்லும் யானையின் வெண்கோட்டினைக் கொடி அசையும் ஆவணத்தில் கள் விலையாகத் தந்து கள்ளுண்டு மகிழ்ந்தனர். இங்குக் கள்ளுக் கடையில் கொடி பறப்பதாகக் கபிலர் பாடுகிறார். இஃது ஆவணக் காட்சியே அன்றிவேறு ஊர்ப்புனைவுக் குறிப்புகளில்லை.[26]

வளம் நிறைந்த ஆவணத்தில் (அங்காடியில்) மாலைக் கால வழிபாட்டை மகளிர் செய்தலை 'மல்லல் ஆவணம் மாலை அயர' என்று நெடுநல்வாடை (அடிஎண்.44) யில் நக்கீரர் நவிலுகிறார். வணிக நகரமான காவிரிப்பூம்பட்டினம் ஆவணத்தையுடைமையைப் பட்டினப்பாலை பேசுகின்றது. (அடி எண்.158) ஆவணத்திலே வெறியாடு விழா நிகழ்தலை அந்த நூல் புனையும்.[27] இவ்வாறு ஊரைப் புனைவுழி நியமம் என்றும் ஆவணம் என்றும் புனைவது அங்காடித் தெரு வாதலின்அதனைச் சங்கப் புலவர்கள் ஊரின் ஓர் உறுப்பாகக் கூறினர். ஆவணத்தைக் காட்டிலும் நியமம் பேரமைப்பு, ஆதலின் இரண்டையும் வேறுபடுத்தினர் சங்கப் புலவர்கள். நியம மூதூர் பற்றிய பாடல்களில் விரிவான இயற்கைப் புனைவுகள் காணப்பட்டில. ஆவணப் புனைவிலும் இதே போக்குத்தான் உள்ளது.

உவமையும் ஊரும்

ஊரில் எழுந்த அலர் ஓசைக்கும் ஆரவாரத்துக்கும் மருங்கூர்ப் பட்டினத்து ஆவணத்தெடுக்கின்ற ஓசையை நக்கீரர் (அகம்.227), உவமையாக்கிக் கருத்தை வெளிப்படுத்துவர். மருங்கூர்ப்பட்டினத்து ஆவணம் (அங்காடி) கல்லென்ற ஆரவாரமுடையது; இங்குப் பெரிய உப்பங்கழிகள் காணப்படும்; பொருள் நிறைந்த பெருமை கொண்ட அழகிய நகரம்; இவ்வூரை நக்கீரர் நேரடியாகப் பாடலில் சுட்டாது, அவ்வூருக்கு அருகிலுள்ள புகழ்பெற்ற ஊணூரைச் சொல்லி அதற்கு மேற்கே (உம்பர்) உள்ளது மருங்கூர்ப்பட்டினம் என்பர்.

ஊணூர்ப் புனைவு

வணிக ஆவணம் இருக்கும் மருங்கூர்ப் பட்டினத்தை அடையாளங்காட்ட நக்கீரர் ஊணூரரை ஈண்டுக் கொண்டு வந்து பேசுகிறார். 'கடிமதில் வரைப்பின் ஊணூர்' (அகம்.227:18) என்பது புனைவு. ஊரை ஓரடியால் புனைகின்ற ஆசிரியர் அவ்வூரின் உயிரினப் பயிரின அழகுகளை - இயற்கைக் காட்சிகளைப் - புனையாது அவ்வூரின் உரிமையாளனையே ஊர்ப்புனைவுகளில் கூடுதலான அடிகளால் புனைகின்றார். ஊரைப்புனைவதைக் காட்டிலும் நக்கீரர் மக்களையும் அவர்கள் வாழுமுறையும் புனைவதிலேயே பேரார்வம் காட்டுகின்றனர்.

........ வாய்வாள்
தமிழகப் படுத்த இமிழிசை முரசின்
வருநர் வரையாப் பெருநா ளிருக்கைத்
தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்
பிடிமிதி வரைப்பின் ஊணூர் உம்பர்
விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து
எல்லுமிழ் ஆவணத்து அன்ன

(அகம்.227:13-21)

என்பது பாடற்பகுதி. ஊணூரரைத் தன்னூராகக் கொண்டு வாழுகின்ற தழும்பன் பற்றிய அடிகளே பாடலில் மிகுதி; பெண் யானை மிதித்தமையால் உண்டாகிய தழும்பு வழுதுணங்காய் போல அவன் உடலில் விளங்கியது; அதனால் அவன் வழுதுணைப் பெரும்பெயர்த்தழும்பன் ஆனான்; இவனைத் தூங்கலோரியார் பாடினார்.[28] தழும்பன் குறி தவறாத வாளையுடையவன்; தமிழ்நாடு முழுமையும் அகப்படுத்தியவன்; ஒலிக்கும் முரசினையும் தன்னைப் பாடிவருகின்ற இரவலர்க்கு வரையாத நாளோலக்க இருக்கையினையுமுடையவன். அவனுடைய ஊணூர், காவல் அமைந்த மதிலையுடையது. ஊணூருக்கு மேற்கே உள்ள ஊர் மருங்கூர்ப்பட்டினம். இவ்விரண்டு ஊர்களிடையே வேறு தொடர்பில்லை. ஊணூர் அருகேயுள்ள மருங்கூர்ப்பட்டினம் வழுதுணைத் தழும்பன் ஊரேயாதல் வேண்டும்

உவமை சொல்ல எடுத்துக் கொண்ட மருங்கூர்ப் பட்டினத்தை மட்டும் சொல்லாது, அந்த ஊரை விளக்க இன்னொரு ஊரையும் கொண்டு வந்து நக்கீரர் இணைக்கின்றார். மருங்கூர்ப் பட்டினத்தை அடையாளங் காட்ட ஊணூர்; ஊணூரின் வரலாற்றுச் சிறப்பையும் பெருமையையும் காட்ட தழும்பன், ஒன்றை விளக்க இன்னொன்று என்று ஒன்றின் ஒன்றாக நக்கீரர் ஊர்களையும் மக்களையும் சுட்டிப்பாடுகின்றார்.

புனைவு நிலையும் நோக்கமும்

நக்கீரர் தழும்பனையும் ஊணூரரையும் அகப்பாடல்களில் சுட்டிப் பாடவே மருங்கூர்ப்பட்டின ஆவணத்தை உவமையாக்குகிறார். தழும்பன், 'ஊணூர் ஆகியன மருங்கூர்ப் பட்டினத்தை விளக்கும் கூடுதல் விளக்கங்களே அன்றிப் பிறிதில்லை; இவற்றை நீக்கினும் பாடலின் கருத்துச் சிதையாது. நக்கீரர்தான் பாட விரும்பியே இந்த ஊரையும் அதன் தலைவனையும் பாட்டில் சுட்டியிருக்கின்றார். ஆவணம் விளங்கும் மருங்கூர்ப்பட்டினமாயினும் ஊணூராயினும் பயிரினமோ உயிரினமோ இவை தழைத்து விளங்கும் காட்சியோ வேறு இயற்கைக் காட்சியோ புனையப்படவில்லை.

நக்கீரர் இயற்கையைப் புனையாது செயற்கை வளங்களையும் மனிதர்கயைும் ஆவணப்பகுதியையும் புனைந்திருக்கிறார். மருங்கூர்ப்பட்டினமும் ஊணூரும் பாண்டிய நாட்டூர்கள்; வழுதுணைத் தழும்பன் பாண்டிய நாட்டினன். இந்த ஊர்களையும் தலைவனையும் பாடிய நக்கீரரும் பாண்டிய நாட்டுப் புலவர். இவர் தமக்கு உதவிய புரவலரின் இடங்கள் என்ற காரணத்தால் இவ்வூர்களையும் இவனையும் நன்றியுணர்ச்சியுடன் அகப்பொருள் பாட்டில் உவமையாகக் கொண்டு வந்து பாடியிருக்கிறார்.

ஊர்களை அடையாளம் சொல்லும்போது தலைமையும் புகழும் மிக்க ஊர்களைச் சுட்டி அறியப் பெறாத ஊர்களைச் சொல்லுவது உலகியற்கை. அவ்வண்ணம் மதுரை மருதனிளநாகனாரும் (அகம்.90:9-14) கோசருடைய

நியமத்தைச் செல்லூர்க்குக் கிழக்கே உள்ளது என்றுரைப்பர். நக்கீரர் மருங்கூர்ப்பட்டினம், ஊணூர்க்கு மேற்கே இருக்கிறது என்பர். இருமதுரைப் புலவரும் வணிக மையத்தைச் சுட்டும் போது இன்ன ஊருக்கு இன்ன திசையிலுள்ளது என்று சுட்டிக் கூறுகின்றனர்.

நியம மூதூர் - ஆவணம்

நூல்	பா. எண்	ஆசிரியர்	திணை	கூற்று	பாடலடி
நற்.	45:4	-	நெய்தல்	தோழி	நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்
அகம்.	83:1-10	கல்லாடனார்	பாலை	தலைவன்	நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்
அகம்.	90:12	மதுரை மருதனிள நாகனார்	நெய்தல்	தோழி	கடுங்கண் கோசர் நியமமாயினும்
அகம்.	122:3	பரணர்	குறிஞ்சி	தலைமகள்	மல்லல் ஆவணம் மறுகு
நெடு.	44	நக்கீரர்	குறிஞ்சி	தலைமகள்	மல்லல் ஆவணம் மாலை அயர
பட்டினம்.	158	கடியலூர் உருத்திரங் கண்ணனார்	குறிஞ்சி	தலைமகள்	விழவறா பாலை வியலாவணத்து
அகம்	227:18	நக்கீரர்	குறிஞ்சி	தலைமகள்	எல்லுமிழ் ஆவணத்து
பதி	15:17-19	குமட்டூர்க் கண்ணனார்	குறிஞ்சி	தலைமகள்	நன்னாட்டு..... முழவிமிழ் மூதூர் நியமத்து

அருமன் மூதூர்

மூதூர் என்று சுட்டும் சங்கப் புலவர்கள் ஊரின் இயல்பு தோன்றப் பாடுபொருளுக்குத் தக்கவாறு ஊரைப் புனைகுவர். கள்ளில் ஆத்திரையனார், ஆதியருமன் மூதூரைத் தன்பாட்டில் சுட்டுகிறார். அந்த ஊர் சேயிழையாகிய பரத்தைக்கு உவமையாகிறது.

கள்ளிற் கேளிர் ஆர்த்திய உள்ளூர்ப்
பாளை தந்த பஞ்சியங் குறுங்காய்
ஓங்கிவரும் பெண்ணை நுங்கொடு பெயரும்
ஆதி யருமன் மூதூ ரன்ன

(குறு.293:1-4)

கள்ளிலாத்திரையனார், ஆதியருமன் ஊரை மூதூர் என்று குறிக்கின்றாரேயன்றிப் பெயரைச் சுட்டவில்லை. ஊரை உடைமையாளனொடு இணைத்து 'ஆதியருமன் மூதூர்' என்றார் புலவர்.[29] குறுந்தொகைப் பாடலில் மூதூர் என்ற சொல்லாட்சி இந்த ஒரு பாடலிலே தான் காணப்படுகிறது.

கள்ளிலாத்திரையனார் ஊர்ப்பெயரைச் சொல்லவில்லை. இது மருதப்பாட்டு. கள் குடிப் போர்க்குக் கள் இன்மையால் உள்ளூரிலுள்ள உயர்ந்த கரியபனையினது பாளை தந்து பஞ்சியம் குறுங்காயாகிய நுங்கை வெட்டிக் கொண்டு[30] 'பெயரும் ஆதியருமன் என்பானுடைய பழைய ஊர்' (குறு.293). பனைமரங்கள் நிறைந்து நுங்கு விளையும் ஊர் அருமனுடைய ஊர். நற்றிணையில் நக்கீரர் அருமன் சிறுகுடி என்று ஒரூரை உரைக்கின்றார். 'மூதில் அருமன் பேரிசைச் சிறுகுடி' (நற்.367:6) என்பது அந்த அடி. மூதில் அருமன் என்ற தொடர் அருமன் ஊர் மூதூர் என்பதையே உணர்த்துகிறது. வாழ்கின்றவர் இயல்புடன் பனை வளத்தைப் பேசுகிறார். வேறு இயற்கை புனையப்பட்டிலது.

கள்ளிலாத் திரையனாரும் நக்கீரரும் அருமனுடைய ஊர்களைப் பாடுகின்றனர்.

குறுந்தொகை	நற்றிணை
ஆதியருமன் மூதூர்	மூதில் அருமன் சிறுகுடி
மருதம்	முல்லை
தலைவி கூற்று	தோழி கூற்று
ஊர்	சிறுகுடி
கற்பு	களவு
பரத்தைக்கு உவமை	தலைவி நெற்றிக்கு உவமை

இரண்டு புலவர்களும் பாடிய ஊர் ஒன்றா? வேறா? என்பதைத் தெளிவாகக் கூற முடியவில்லை. கள்ளிலாத்திரையனார் குறிக்கும் ஆதியருமன் நக்கீரர் குறிக்கும் மூதில் அருமனிலிருந்து வேறானவர் என்பது ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை கருத்து.[31] சங்க நூல்கள் தங்களின் கருத்துக்கும் தேவைக்கும் தக்கவாறு புனைவை அமைக்கின்றன. கள்ளிலாத்திரையனார் மூதூர் என்று ஒருவன் ஊரைப் பாட நக்கீரர் சிறுகுடி என்று இன்னொருவன் ஊரைப் பாடுகிறார்.

ஒரு நாட்டில் பல பெரிய ஊர்களும் சிறிய ஊர்களும் இருக்கும்; புலவன் தான் விரும்புகின்ற அல்லது கருதுகின்ற வள்ளலையும் அவன் ஊரையும் தாம் பாட்டில் உரைப்பான். கள்ளிலாத்திரையனாரும் நக்கீரனாரும் பெண்களின் இயல்பிற்கே அருமனுடைய மூதூரையும் சிறுகுடியையும் உவமித்தனர்.

கள்ளிலாத்திரையனார், பனையை மட்டுமே பாடலில் அடியளவு கருதிப்புனைந்திருக்கிறார்.[32] குறுந்தொகைப் பாடலை விட நற்றிணைப் பாடல்களுக்கு அடி எண்ணிக்கை கூடுதல் ஆதலின் நக்கீரர் புனைவு சற்று கூடுதலாக அமைந்திருக்கிறது. 'பெண் காக்கை குஞ்சுடன் தன் இனத்தையும் அழைத்துக் கொண்டு கருங்கண் கருணைக் கிழங்குப் பொரிக் கறியோடு கூடிய செந்நெல் சோற்றுத் திரளைத் தெய்வத்துக்கு இடும்பலியுடன் கவர்ந்து கொள்ளுமாறு குறியகால் நாட்டிக் கட்டிய மிக்க உணவை உடைய நல்ல மனையின் கண்ணே கூடித் திரண்டிருக்கும் பழைமையான வீடுகளையுடைய அருமன் என்பானது பெரியபுகழ் பொருந்திய சிறுகுடி' (36:1-6) முல்லைத்திணையில் மாலையில் பலியிடுதல் ஊர் நிகழ்ச்சியாகப் புனையப்படுகிறது.[33]

உவமை வழியே இரண்டு புலவர்களும் அருமன் என்பானைக் குறிக்கின்றனர்; கள்ளிலாத்திரையனார் எந்த அடிப்படையில் அருமனுடன் தொடர்பு கொண்டவர் என்பதை அறியப் போதிய சான்றுகள் கிட்டில. நக்கீரர் அருமனைக் குறிப்பதற்கான அடிப்படையும் தெரியவில்லை. பாடல்கள் தோன்றிய

காலத்தில் புலவன் எத்தொடர்பினால் அருமனைக் குறிக்கின்றான் என்ற உண்மை விளங்கியிருக்கும்; இன்று அந்த உண்மை புலனாகவில்லை.

பெரும் பெயர் மூதூர்

பெரும் பெயர் என்பதை அடையாகப் பெற்ற வருகின்ற மூதூர் என்ற ஆட்சி 'பெரும் பெயர் மூதூர்' (புறம்.398:11) என்று புறநானூற்றில் மட்டும் பயிலுகின்றது. சேரமான் வஞ்சனைத் திருத்தாமனார் பாடும் போது இவ்வாறு பாடுகின்றார். திருத்தாமனார் மூதூர்ப் பெயரை வெளிப்படச் சுட்டிலர். புறப்பாடலுக்குத் தக மூதூர் இயல்பை

நகைவர் குறுகி னல்லது பகைவர்க்குப்
புலியின் மடிந்த கல்லளை போலத்
துன்னல் போகிய பெரும்பெயர் மூதூர்

(புறம் 398:9-11)

என்று ஊரின் மறச்சிறப்பை விளக்கிப் புனைவர் திருத்தாமனார், பெரும் பெயர் மூதூர் என்ற தொடருக்கு ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

> பெரும்பெயர் மூதூர், பெரிய பெயரையுடைய மூதூர் பெயருக்குப் பெருமையாவது, மூதூராளும் பெருமானாகிய வஞ்சனது பெயரையே தனக்கும் பெயராக அமையும் பெருமை; அப்பெருமை அதன் பழம் பெயரை மறைத்து விட்டது; சேரமான் வஞ்சன் பெயர் கொண்டெழுந்த மூதூர் அஞ்சன் குன்றென்றிருந்து அஞ்சு குன்னு என்று இப்போது வழங்குகிறது [34]

என்று விளக்கம் தருகின்றார். புறப்பொருளுக்குத் தக்கவாறு அடைகளின் மூலம் ஊரை வருணிக்கக் கூடியவற்றைப் புலவர் பாடினாலும், காலத்தை உணர்த்த இயற்கையை இப்பாடலில் தனியே புனைகின்றார். விடியற் காலத்தில் சேரமான் வஞ்சன் புலவர்களை எவ்வாறு வரவேற்றுப் பரிசில் நல்குவான் என்பதைக் காட்ட திருத்தாமனார் வைகறைப் பொழுதைப் புனைகுவர். இதனால் ஊர்ப்புனைவிலிருந்து வேறாகப் பொழுதுப் புனைவு ஊரொடு இணைந்து வருகிறது.

மதிநிலாக்	கரப்ப	வெள்ளி	யேர்தர
வகைமா	ணல்லில்		
பொறிமயில்	வாரணம்	பொழுதறிந்	தியம்பப்
பொய்கைப்	பூமுகை	மலரப்	பாணர்
கைவல்	சீறியாழ்	கடனறிந்	தியக்க
இரவுப்புறம்	பெற்ற	வேம	வைகறைப்
பரிசிலர்	வரையா	விரைசெய்	பந்தர்

(புறம்.398:1-7)

திருத்தாமனார், இயற்கையின் நலங்களை எழில் பெறப் பாடியிருக்கிறார். வெண்ணிலா மறைகிறது; வெள்ளி சிறிது சிறிதாக உயர்கிறது; கோழிகள் பொழுதை அறிந்து கூவத் தொடங்குகின்றன; பொய்கைகளில், தாமரை முதலிய மலர்கள் மலர்ந்து மணங்கமழலாயின. பாணர் தம் கையில் யாழிசைத்துப் பண்பாடலாயினர்; இவ்வண்ணம் இரவுகழிய வைகறை வந்துற்றது என்று ஆசிரியர் வைகறைக் காட்சியைக் தான் பாட எடுத்துக் கொண்ட கருத்துக்குத் தக்கவாறு பாடுகிறார். கவின் மிகும் காட்சியாக வஞ்சனுடைய பெரும் பெயர் மூதூரைத் திருத்தாமனார் புனைகிறார்.

விடியற் காலப்புனைவு, மருதப் பாடல்களில் அமையுமாறு இங்கு அமைந்திருக்கிறது. வஞ்சன் குன்று விடி காலையில் தோன்றும் நிலையை இப்பாடல் மிக நுட்பமாக எடுத்துக் காட்டுகிறது. காலப்புனைவால் ஊரின் ஒரு காட்சியையும் அடைப்புனைவால் இன்னொரு காட்சியையும் ஒரு காட்சியாகப் புனைந்து வஞ்சன் குன்றைத் திருத்தாமனார் பாடுகின்றார்.

மதுரைக் காஞ்சி மதுரையைப் புனையும் போது விரிவாகப் புனைகின்றது.

அளந்துகடை	யறியா	வளங்கெழு	தாரமொடு
புத்தே	ளுலகங்	கவினிக்	காண்வர
மிக்குப்புக	ழெய்திய	பெரும்பெயர்	மதுரை

(மது.698-700)

என்பது புனைவின் ஒரு பகுதி. அளந்த அறிய முடியாத வளங்களையுடையது; தேவருலகம் வந்து காணுதற்குரிய அழகைப் பெற்று மிகுத்துப் புகழெய்திய பெரும் பொருளையுடைய மதுரை. மதுரைக் காஞ்சி இவ்வாறு ஊரைப் புனைந்து அதன் பெருமையை யெல்லாம் உள்ளடக்கிப் 'பெரும் பெயர் மதுரை' என்றார்; இந்த அடைக்கு விளக்கமாகவே முன்னைப் புனைவுப்பகுதிகள் அமைந்திருக்கின்றன.

'பெரும் பெயர்' என்ற அடையை நல்கிச் சங்கப் புலவர்கள் ஊரைப் புனைந்து அதன் நீர்மையை விளக்கியிருக்கின்றனர். நக்கீரர், 'தலைவன் காவிரிப் பூம்பட்டினம் போல் சிறந்த நம் மில்லலத்திலும் விருந்தோம்பச் சிறந்த செல்வம் பெறுக' என்று தலைவி கூற்றாகக் கூறுகிறார். இந்த உவமையில் காவிரிப் பூம்பட்டினத்தை

நிலங்கொள வெஃகிய பொலம்பூண் கிள்ளி
பூவிரி நெடுங்கழி நாப்பண் பெரும்பெயர்க்
காவிரிப் படப்பைப் பட்டினத் தன்ன

(அகம்.205:10-120)

என்று புனைகுவர். 'பெரிய புகழையுடைய ஊர்' என்று நக்கீரர் புனைந்துள்ளமை நோக்கத்தக்குது. உவமையில் நக்கீரர் ஊரின் சிறப்பை உரைக்கிறார். பாண்டிய நாட்டுப் புலவரான நக்கீரர், சோழ நாட்டு ஊரை இங்குச் சுட்டுகிறார்.

கபிலர் பாரியின் பறம்பை அதன் சிறப்பெல்லாம் தோன்ற 'பெரும் பெயர்ப் பறம்பே' (புறம்.113:7) என்று விளிக்கின்றார். பாரியின் புறம்பு பற்றிய புனைவு இங்கு இல்லை. ஆனால் புலவர் தனக்கும் புறம்புக்குமுள்ள தொடர்பை இங்கே இந்த அடை மூலம் காட்டுகிறார்.

'பெரும் பெயர்' என்ற அடையால் திருத்தாமனார் வஞ்சன் குன்றினைப் புனைந்து காட்டினார். (புறம்.398:11) மாங்குடி மருதனார் மதுரையைப் புனைந்தார் (மது.700) நக்கீரர் காவிரிப் பூம்பட்டினத்தைப் புனைந்தார் (அக.205:10-12) கபிலர் பறம்புமலையைச் சுட்டினார் (புறம்.113:7). வெண்பூதனார் குறுந்தொகையில் 'பெரும் பெயர் உலகம்' (82:2) என்று மேலுலகைச் சுட்டினார்.

'உலகம்' என்று சொல் மக்கள் வாழும் உலகைக் குறிக்கும். இச் சொல்லுடன் 'பெரும் பெயர்' என்ற அடை சேரும் போது 'பெரும் பெயருலகம்' என்றாகிப் பெரிய புகழுடைய துறக்க (சொர்க்க) வுலகத்தை உணர்த்துகிறது. இஃது அடையின் இயற்கையாகும், (குறு.83:2) என்று மேலுலகைச் சுட்டினார்.

'உலகம்' என்ற சொல் மக்கள் வாழும் உலகைக் குறிக்கும். இச் சொல்லுடன் 'பெரும் பெயர்' என்ற அடை சேரும் போது 'பெரும் பெயருலகம்' என்றாகிப் பெரிய புகழுடைய துறக்க (சொர்க்க) வுலகத்தை உணர்த்துகிறது. இஃது அடையின் இயற்கையாகும். (குறு.83:2). இந்த அடையால் மேலுலகம் என்பது பெறப்பட்டது. மூதூர்க்கு வழங்கி ஊரின் புனைவை விளக்கிய 'பெரும் பெயர்' என்ற அடை, வேறு சில ஊர்களுக்கும் மலைகளுக்கும் அடையாக வந்து ஊரைப் பற்றிய புனைவைக் காட்டுகிறது. ஊரின் இயற்கை நிலையும் செயற்கை நிலையும் ஊரின் தொன்மையையும் புதுமையையும் காட்டிவிடும்; இளையோன் தோற்றம் அவனிளமையைக் காட்டும்; முதியோன் தோற்றத்தை அவனுடலின் முதுமை காட்டிவிடும். இளைஞன் என்று சொன்னாலேயே, அவன் தோற்றம், இளமை, போன்ற பலவும் தானே மனத்துக்குத் தோன்றிவிடும். அது மொழியின் ஆற்றல். சொல் தன்னையுமுணர்த்திப் பொருளையுமுணர்த்தும் இயல்பினது. சொல்லே பொருளை அறிய அடிப்படை; ஆதலின் படைப்பாளிகள் விரிவாகப் புனைய வேண்டியவற்றை அடைகளால் புனைந்துணர்த்துகின்றனர். 'மூதூர்' என்ற சொல்லே மிகவிரிந்த பொருளைக் கொண்டது; அந்தச் சொல் மேலும் அடைபெற்ற போது ஊரைப்பற்றிய புனைவுகளாக அந்த அடைகள் மாறி விடுகின்றன. சங்கப் புலவர்கள் அடைகளைக் கொண்டே ஊர்களைப் பற்றிய புனைவைக் காட்டி விடுகின்றனர்.

'மூதூர்' என்பதிலுள்ள 'ஊர்' என்பது மருதத் திணையிலுள்ள ஊரைக் குறிக்கும் சொல். சங்கச் சான்றோர்களால், இச்சொல் மருதத் திணைப் புனைவில் தான் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. நச்சினார்க்கினியர் ஒவ்வொரு திணைக்குமுரிய ஊர்களைப் பின்வருமாறு கூறுவர்.

முல்லை	:	பாடி
		சேரி
குறிஞ்சி	:	சிறுகுடி
		குறிச்சி
மருதம்	:	ஊர்கள்
நெய்தல்	:	பட்டினம், பாக்கம்
பாலை	:	பறந்தலை.

ஆனால், இளம்பூரணர் ஒவ்வொரு திணைக்குமுள்ள ஊர்களுக்குரிய பெயர்களை விதந்து விளம்பிலர். நச்சினார்க்கினியரே இவ்வாறு இயம்புகிறார்.[35] இவர் கருத்தைத் தழுவி நம்பியகப் பெருளும் தொன்னூல் விளக்கமும் முத்துவீரியமும் கருப்பொருளுள் ஊரையும் தனியே எண்ணின. நச்சினார்க்கினியரின் இந்தப் பிரிப்பு சங்க இலக்கிய ஆட்சியைத் தழுவியே அமைக்கப்பட்டிருக்கிறது.

சங்க நூல்களில் மூதூர் என்ற ஆட்சி எல்லாத்திணைகளிலும் பயன்படுத்தப்படுகின்றது. மூதூர் என்ற தொடராட்சி பாலைத்திணையில் தான் மிகுதி; அடுத்து நெய்தல் திணை. முல்லையில் இரண்டே இடங்களில் பயிலுகின்றது. மருதத்திற்குரிய இந்த ஆட்சியை நான்கு இடங்களில் காணமுடிகின்றது.

இவ்வியலில் கூறப்பட்ட ஆய்வு முடிபுகள்

1. ஊர் என்ற சொல் தொன்மை உணர்த்துமாறு 'மூதூர்' என்று அடைபெற்றிருக்கிறது. இந்த அடை தமிழர்கள் தொன்றுதொட்டு ஊரில் வாழ்ந்தமையை வெளிப்படுத்துகிறது. ஐங்குறுநூறு இந்த அடையைக் கொண்டு ஊரில் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளைக் காட்டுகின்றது.
2. சங்க இலக்கியத்திலேயே ஊர்கள் பற்றிய புராணக் கதைகள் தோன்றியிருக்கின்றன.
3. மூதூர் என்பதோடு செம்மல் என்ற அடைபெற்று பலவூர்கள் சுட்டப்பெறுகின்றன. செம்மல் என்று மக்களுக்குக் கொடுக்கின்ற அடை ஊருக்கு அதன் பெருமை காட்டுதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.. பகைவருடைய ஊரே 'செம்மல் மூதூர்' என்று அடைபெறுகிறது.
4. பழவிறல் மூதூர் என்று சில புலவர்கள் குறிப்பிடுகின்றனர். இவை ஊரின் திருவிழாச் சிறப்பை உணர்த்துகின்றன. ஊரைப்புனையும் போது புலவர்கள் விழாக் காட்சியாகப் புனைகின்றனர்.
5. ஊர் வளத்தைக் காட்டுவதற்கு மல்லல் மூதூர் என்ற அடை பயிலுகிறது. இதன் மூலம் ஊரின் வளம் பெரிதும் விதந்து பேசப்படுகிறது. இவ்வாறு ஊரின் பரப்பைக் காட்டுமாறு 'நனந்தலை' என்ற அடை அமைகிறது.
6. அச்சத்தை உணர்த்துமாறு சில அடைகள் ஊருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அருங்கடி மூதூர் என்றும் சில அடைகள் உள்ளன.
7. ஊரின் வணிகச் சிறப்பைக் காட்டுமாறு நியம மூதூர் என்று சில தொடர்கள் பயிலுகின்றன. இந்த அடைகளின் மூலம் ஊரின் பண்பியலைச் சங்கப் புலவர்கள் காட்டுகின்றனர். ஊர்ப்புனைவில் அடைகள் சிறு குறியீடு போல அமைகின்றன. இவ் அடைகளுக்கேற்ப சங்கப்புலவர்கள் ஊரைப் புனைகின்றனர். புனைவும் அடையும் ஒன்றோடு ஒன்று விளக்கம் உடையன என்பதை மூதூர்ப் புனைவுகள் காட்டுகின்றன.

சான்றெண் விளக்கம்

1. நச்சினார்க்கினியர், (உ.ஆ. : 1962), **கலித்தொகை**, (கழக வெளியீடு, சென்னை - 1, ஆறாம் பதிப்பு), ப.273.

2. அ. நாராயணசாமி ஐயர், (பதி : 1952), **நற்றிணை நானூறு மூலமும் உரையும்**, (கழக வெளியீடு, சென்னை, நான்காம் பதிப்பு), ப.146.

3. கு. சுந்தரமூர்த்தி (பதி : 1985), **தொல்காப்பியர் பொருளதிகாரம்** (பிற்பகுதி), உவமவியல், சூ. எண். 281, (அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணா மலை நகர்), ப.121.

4. உ.வே. சாமிநாதையர், (பதி : 1963), **அகநானூறு மூலமும் உரையும்**, பா.எண். 37, (டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, ஆறாம் பதிப்பு), ப.98.

"கராஅங் கலித்த குண்டுகண் ணகழி
இடங்கருங் குட்டத் துடன்றொக் கோடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம்
கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சிச்
செம்புறழ் புரிசைச் செம்மன் மூதூர்" (அகம். 37 : 7-11)

5. மேலது, பா.எண். 97 : 17-18, ப.205.

"உலகுதொழில் உலந்து நாஞ்சில் துஞ்சி
மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மரங்திறங் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகலிருள் ஒடுநாள்
அறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயிர வருகதில் அம்ம" (அகம். 141 : 5-10)

6 ________ ?

7. கார்த்திகை விழா விளக்குகள் ஏற்றிக் கொண்டாடுகின்ற விழாவாகும். இன்றும் இந்த மரபுக் காணப்படுகிறது.

8. ச.வே. சுப்பிரமணியன், (பதி : 1990), **அகநானூறு களிற்றியானை நிரை**, (டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை), ப.71. (இதற்கு வேறாகப் பொருள் கொள்வர் பதிப்பாசிரியர்)

"அரிய சுரத்துக் கவர்ந்த நெறியினருகில் நீண்ட அரையையுடைய இலவின் முறைமை மிக்க பலவாகிய முதிர்ந்த மலர் நெய்யுமிழ் விளக்கு அவிழ்தல் போல விழும்படிக் காற்று மோதுதலாலே (உதிர்ந்தன போக நின்றவை) சிலவாய் விடிகின்ற காலத்து ஒளிருஞ் சில மீன் போலத் தோன்றா நின்ற மேகம்"

9. "மணிக்குரல் நொச்சித் தெரியல் சூடிப்
பலிகள் ஆர்கைப் பார்முது குயவன்
இடுபலி நுவலும் அகன்றலை மன்றத்து
விழவுதலைக் கொண்ட பழவிறல் மூதூர்
பூங்கண் ஆயம் காண்தொறும் "

(நற். 293 : 1-5)

10. அ. நாராயணசாமி ஐயர் (பதி : 1952), **நற்றிணை நானூறு மூலமும் உரையும்**, (கழக வெளியீடு, சென்னை - 1, நான்காம் பதிப்பு), ப.44.

11. மா. நவநீத கிருட்டினன், (1988), **தமிழ் இலக்கியத்தில் ஆற்றுப்படை**, (குறிஞ்சி மலர் வெளியீடு, மதுரை.), ப.138.

12. ரா. இராகவையங்கார், (1949), **பெரும்பாணாற்றுப்படை உரையும் ஆராய்ச்சியும்**, (அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்), ப.102.

13. நியம மூதூர் என்ற பகுதியில் "மல்லலாவணம்" பற்றிய கருத்துகள் விளக்கப்பட்டிருக்கின்றன.

14. அகம். 114 : 1-6

15. ச.வே. சுப்பிரமணியன், (பதி : 1993), **தொல்காப்பியம் தெளிவுரை**, சூ. எண்.949, (மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 108), ப.354.

16. அகம். 157 : 1-9.

17. நற். 352 : 1-9

18. அகம். 161 : 3-7

19. பதிற். 79 : 9-19.

20. பெரி. மு. காசிவிசுவநாதன் செட்டியார், (பதி:1966), **சிலப்பதிகாரம்**, அ.எண். 147, (கழக வெளியீடு, சென்னை, எட்டாம் பதிப்பு), ப.325.

21. சு. வித்தியானந்தன், (1954), **தமிழர் சால்பு**, (சங்க காலம்), (தமிழ் மன்றம், கல்ஹின்னை, கண்டி), ப.204.

22. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை தம்முடைய நற்றிணை உரையில் இப்பாட்டு 'உலோச்சனார்' பாடியது என்பர்.

சு. துரைசாமிப்பிள்ளை, (பதி : 1966), **நற்றிணை மூலமும் விளக்கவுரையும்**, (அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை - 17), ப.188.

23. "நறவு நொடைக் கொடியோடு" (பட்டினம்.180)

"ஓவுக்கண் டன்ன இருபெரு நியமித்துச்
சாறயர்ந் தெடுத்த வுருவப் பல்கொடி
வேறுபல் பெயர வாரெயில் கொளக்கொள
நாடோ றெடுத்த நலம்பெறு புனைகொடி
நீரொலித் தன்ன நிலவுவேற் றானையொடு
பலவுப்படக் கொன்று மிடைதோ லோட்டிப்
புகழ்செய் தெடுத்த விறல்சா னன்கொடி
கள்ளின் களிநவில் கொடியொடு நன்பல
பல்வேறு குழுஉக்கொடி பதாகை நிலைஇப்
பெருவரை மருங்கி னருவியி னுடங்க"

(மதுரை.365-374)

24. புறம். 395 : 17-21. உறையூர்க்கு கிழக்கில் உள்ளது பிடவூர் என்ற குறிப்புள்ளது.

25. தி.சு. அவினாசிலிங்கம். (பதி : 1958), **கலைக் களஞ்சியம்**. ஐந்தாவது தொகுதி. (தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை), ப.186.

26. "வேந்தூர் யானை வெண்கோடு கொண்டு
கட்கொடி நுடங்கு மாவணப் புக்குடன்
அருங்க ணொடைமை தீர்ந்துபின் மகிழ்சிறந்து
நாம மறியா வேம வாழ்க்கை
வட்புல வாழ்நரிற் பெரிதமர்ந் தல்கலும்
இன்னகை மேய பல்லுனற பெறுபகொல்"

(பதிற்.68 : 9-14)

27. பத்துப்பாட்டில் அறியப்பெறும் ஊர்ப்புனைவுத் தனிப்பகுதியாக ஆராயக் கூடியது.

28. தழும்பனையும் ஊனூரையும் தூங்கலோரியர் பாடிய பாடல் கிடைத்திலது. தூங்கல் என்பது ஊர்ப்பெயர்; ஓரியார் என்பது புலவர் பெயர். ஓரியார் பாடியவை குறுந்தொகை. 151, 295 : நற்.60, அகம். 227, ஆகியனவற்றிலுள்ளன.

29. திருக்குறள் "'ஆதிபகவன்"' என்பது நோக்குக.

30. இங்குக் குறிக்கப்பெறுவது பனங்கள்; கள்ளெடுக்கப் பனம் பாளையைச் சீவவேண்டும்; பாளை முற்றிச் சீவிக் கள்ளை வடிக்க முடியாதபடி நுங்கு வந்துவிட்டது; எனவேதான் கள் கிடைக்கவில்லை.

31. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, (பதி:1966), **நற்றிணை மூலமும் விளக்கவுரையும்** (201 முதல் 400 வரை), ப. 1393.

32. கள்ளில்லாத்திரையனார், நல்லேர் முதியனைப் பாடும் புறநானூற்றுப் பாட்டிலும் 'நீர் நுங்கின் கண்வலிப்ப' (389:1) என்று நுங்கைச் சுட்டுவர்.

33. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை , 'அன்ன நன்னுதல் ஆய் கோல் அவிர் தொடி' என்று ஓரடியை ஏடுகளிலிருந்து கண்டு சேர்த்துள்ளார். ப.1391.

34. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, (1962), **புறநானூறு** (201 - 400 பாட்டுகள்), (கழக வெளியீடு, சென்னை - 1, மறுபதிப்பு -), ப.492.

35. கு. சுந்தரமூர்த்தி, (பதி.1986), **தொல்காப்பியம்**, பொருளதிகாரம், நச்சினார்க்கினியார் உரை, சூ.எண். 3, (அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணமலை நகர்), ப.12

இயல் நான்கு

சிறுார்ப் புனைவுகள்

சீறூர்ப் புனைவுகள்

சங்கப் புலவர்கள் பல்வேறு அடைகளைப் பெய்து ஊரைப் பாடல்களில் கூறுகின்றனர். சங்கவிலக்கியங்களில், சீறூர் என்ற தொடராட்சி அகநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, பெரும் பாணாற்றுப் படை ஆகியவற்றிலேயே காணப்படுகின்றன. கலித்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்து ஆகிய தொகை நூல்களிலும் பெரும்பாணாற்றுப் படை தவிர்த்த பத்துப்பாட்டு நூல்களிலும் இத்தொடராட்சி கிடையாது. 'சிற்றூர்' என்ற தொகைச் சொல்லாட்சியும் காணப்படவில்லை.

சங்கப் புலவர்கள் 'சீறூர்' என்ற தொடரைப் பொருள் பொதிந்த தொடராகத் தனி ஆட்சியுள்ள தொடராகத் தங்கள் பாடல்களில் பயன்படுத்தியிருக்கின்றனர். அத் தொடரின் மூலமும் அதனை ஒட்டிய புனைவின் மூலமும் ஊர்ப்புனைவைத் தனிப்படுத்தியிருக்கின்றனர். இப்புனைவு, ஊர்ப்புனைவில் தனி வகையாக அமைந்திருப்பதைக் காண முடிகின்றது.

சேரநாட்டுப் புலவர் புனைவு

தலைவனுடன் தலைவி உடன் போகின்றாள். அவ்வாறு செல்லும் அவர்கள் பாதையைக் கடந்து இடையே எங்கும் தங்காது தாம் செல்லவேண்டிய தலைவன் ஊருக்குச் செல்வதாகப் பாடுகின்ற மரபில்லை. தலைவனும் தலைவியும் உடன் போக்காகச் சென்று ஊரை அடைந்ததாக ஊர்ப்பெயரைச் சுட்டிக் கூறுவதில்லை. காதலர் இருவரும் போகும் வழியில் சுரத்தை/கானத்தைக் கடந்து சென்று ஓரூரில் தங்கியதாகப் புனைகுவர். இதுதான் இலக்கிய மரபு. இம் மரபு உலகியல் நடைமுறை தழுவியமைந்தது. ஊரைச் சுட்டிப் புனைந்து பாடும் சங்கப் புலவர் அச்சீறூரின் பெயரைச் சுட்டியாண்டும் கூறிலர்.

பாலைச் சீறூர்ப் புனைவு

பாலைக்குரிய பிரிவான பிரிவும் உடன் போக்காகிய மற்றொரு பிரிவும் புனையப்பட்டிருக்கிறது. பாலை நிலத்தைச் சார்ந்தே இந்தப் புனைவு விளங்குகிறது. பாலைத் திணையில் தலைவன் - தலைவி பிரிவைக்கொண்டு அகப் பாடல்களில் ஊர் புனையப் பட்டிருக்கிறது. தலைவன் போன அத்தமும் அதனைச் சார்ந்த ஊரும் பாடல்களில் வருணிக்கப்பட்டுள்ளன.

குடவாயிற்கீரத்தனார் தோழிகூற்றில் சீறூரைப் புனைவர். "கானத் தாங்கண்" (அகம்.129:5) என்பது பாலைநிலப் புனைவு. "புல்லைத் தின்னுதலை மறந்து அசையும் நெடிய மூங்கிலிலிருந்து உதிர்ந்த நெல்லைப் பார்த்துக் கலைமான் தன் பிணையை அழைக்கும் காடு" என்று காடு வருணிக்கப்படுகிறது.

குடவாயிற் கீரத்தனாரின் சீறூர், முல்லைச் சார்பினது. "பாறையைச் சார்ந்திருந்த சிதைவுற்ற குடில், அங்குத் தாழியிடத்தே தழைத்த கொழுவில் இலையையுடைய பருத்திச் செடி; அதனுடைய பருத்த வயிற்றினையுடைய இளங்காயைப் பேடைகட்கு ஆண் பறவைகள், உண்ணச் செய்யும்; அவை பிளந்து போட்ட பஞ்சினையுடைய வெள்ளிய பருத்திக் கொட்டையை வறுமையுற்ற மகளிர் வைத்துண்ணும் உணவாகச் சேர்க்கும் கலங்குதற்கு ஏதுவாய போர் நிகழும் இடங்களையுடைய சீறூர்; அவ்வூரிலுள்ளவர்கள் கையைத் தலைமீது வைத்து அலற அவர்களுடைய கொழுத்த ஆக்களைக் கொன்றுதின்ன கூர்ம்படை மறவர்கள் செருப்புடை அடியர்களாகித் தெளிந்த சுனை நீரை மிகுதியாகப் பருகுவர். இத்தகைய அரிய சுரநெறிகள்[1] சங்க நூல்கள் 'பருத்தி வேலிச்சீறூர்'[2] என்று புனைதலை நோக்கின் குடவாயிற் கீரத்தனார் புனைவும் உண்மைப் புனைவு என்பது புலனாம். பாலைக்குப் புறமான வெட்சிப் போர்நிகழ்ச்சி சீறூர்ப் புனைவிலிடம் பெறுகிறது.

குறுந்தொகைப் பாட்டொன்றில் குடவாயிற்கீரத்தனார் (குறு.79). பொருள் வயிற் பிரிந்த தலைவனைத் தலைவி நினைந்து தோழிக்குச் சொல்லும் போது

'சீறூர்'புனையப்படுகிறது. இங்கு உடன் போக்கில்லை; தலைவன் மட்டுமே பிரிந்து செல்லுகின்றான்.

கான	யானை	தோணயந்	துண்ட	
பொரிதா	ளோமை	வளிபொரு	நெடுஞ்சினை	
அலங்க	லுலவை	யேறி	யொய்யெனப்	
புலம்புதரு	குரல	புறவுப்பெடை	பயிரும்	
அத்த	நண்ணிய	வங்குடிச்	சீறூர்	(குறு.79:1-5)

'அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்' என்ற அடி, அணிலாடு முன்றிலார், குடவாயிற் கீரத்தனார் ஆகியோர் பாடல்களில் பயிலுவன. ஓமை மரத்தினது பட்டையைக் காட்டு யானை உரித்துத் தின்னுகிறது. காற்று மோதி அசைகின்ற வற்றிய கிளையில் ஏறி ஒய்யென்று புலம்புகின்ற குரலையுடைய ஆண் புறாக்கள் பெண்புறாக்களை அழைக்கின்றன. இத்தகைய பாலை நிலத்தில் அழகிய குடிகளையுடையது சிற்றூர். தலைவியிடம் சொல்லாமல் தலைவன் பிரிகின்றான். அவன் வழியிடைத் தங்குமிடத்தைத் தலைவி இவ்வாறு எண்ணிப் பேசுகின்றாள்.

இங்கு மிக எளிய இயற்கைக் காட்சியை ஆசிரியர் காட்டுகிறார். ஓமை மரமும் புறாக்களும் ஊரின் இயற்கையைக் காட்டுகின்றன. மக்களின் செய்கையோ இயக்கமோ இங்கு இடம் பெறவில்லை. தலைவன் சென்ற பாதையைப் பற்றித் தலைமகள் எண்ணுவதாக இப்புனைவு பாடப்பட்டுள்ளது. உறையூர் முது கூத்தனார், தலைமகள் கூற்றாகப் பாலைத் திணையில் பாடிய பாட்டு,

குவிந்த	குரம்பை	அங்குடிச்	சீறூர்ப்	
படுமணி	யியம்பப்	பகலியைந்து	உமணர்	
கொடுநுகம்	பிணித்த	செங்கயிற்	றொழுகைப்	
பகடயாக்	கொள்ளும்	வெம்முனைத்	துகடொகுத்து	
எறிவளி	சுழற்றும்	அத்தம்		(அகம்.329:4-8)

என்று காற்றுச் சுழன்று வீசும். சுரநெறியைக் கூறுகின்றது. குடிசை நிறைந்த சீறூர்; உப்பு வணிகர் தங்கள் வண்டிகளில் பூட்டிய பகடுகள் வருந்தியிழுக்கும்

கொடிய இடங்கள்; அங்குக் காற்றுச் சுழன்று புழுதியைச் சுழற்றி எறியும். புலவர் உண்மையாகவும் எளிமையாகவும் சீறூரைப் புனைகின்றார். தழைத்தோங்கிய மரங்களோ செடி கொடிகளோ பிற இயற்கைக் காட்சிகளோ பாடலில் புனையப்படவில்லை. போய் வரும் பாதையிடையே அமைந்த ஊராக இருத்தலின் பாதைக் காட்சி ஊரை ஒட்டிப் புனையப்பட்டுள்ளது. தலைவன் வருவானோ என்று தோழியை வினவும் தலைமகள், வருகின்ற தலைவன் தங்கும் சீறூரின் புனைவாக இப்புனைவு மிளிர்கிறது.

கல்லாடனாரின் பாலைப் பாட்டு, தோழி கூற்றாய் அமைந்தது. சீறூரையும் சுரத்தையும் இணைத்து "அலந்தலை ஞெமையத்து அதர் அடைந்திருந்த/மால் வரைச் சீறூர்" என்று புனைகிறது. அங்குள்ள சுரத்தில் கொல்லுதல் வல்ல கரடி இருந்தது. அதனிருப்பை உணர்வராய் அம்பினையுடையவராய் வலியவில்லைத் தோளிற் கொண்டு இடமெலாம் தேடினர். அதனால் கரடி, தரையில் கிடக்கும் உணவை உண்ணாது மேலிடத்தே கிளைகளிலுள்ள பழங்களைப் போல இனிக்கும் சாறு மிகுந்த துளையுடைய பூக்களைப் போலக் கரிய கிளைகளமைந்த இருப்பை மரத்தின் மேல் ஏறும் பெரிய கை உடைய கரடிகள் வாழும் சுரநெறி என்பது கல்லாடனார் புனைவு.[3]

ஊரை ஆரவாரமில்லாது இயல்பாக மரம் நிறைந்ததாகக் கல்லாடனார் புனைகின்றார். இவர் இன்னொரு அகநானூற்றுப் பாடலில் (9) இருப்பை மரத்தையும் அதன் பூக்களையும் சுட்டுவர். இப்பாடலில் சீறூரில் இருப்பதாகச் சொல்லாது சுரனிலிருப்பதாக உரைக்கிறார். தலைமகளை வற்புறுத்தும் போது, சீறூரை இவ்வாறு தோழி புனைகின்றாள். பரணர், பாலைப் பாட்டாகத் தலைவி கூற்றாகப் பாடுகிறார்.

இலங்குசுடர் மண்டிலம் புலந்தலை பெயர்ந்து
பல்கதிர் மழுகிய கல்சேர் அமையத்து
அலந்தலை மூதேறு ஆண்குரல் விளிப்ப

மனைவளர் நொச்சி மாசேர்பு வதிய
முனையுழை யிருந்த அங்குடிச் சீறூர்க்
கருங்கால் வேங்கைச் செஞ்சுவல் வரகின்
மிகுபதம் நிறைந்த தொகுகூட் டொருசிறைக்
குவியடி வெருகின் பைங்கண் ஏற்றை
ஊனசைப் பிணவின் வயங்குபசி களைஇயர்
தளிர்புரை கொடிற்றிற் செறிமயிர் எருத்திற்
கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ அன்ன
நெற்றிச் சேவல் அற்றம் பார்க்கும்
புல்லென் மாலையும் இனிது மன்றம்ம

(அகம்.367:1-13)

இதில் மாலைப் பொழுது இடத்துடன் புனையப் படுகிறது. "முதிய ஏறு ஆண்குரல் தோன்ற கத்திட, மனையில் வளரும் நொச்சியைக் சூழ்ந்து மான்கள் தங்கியிருக்கக் காட்டரண்களின் பக்கத்தேயிருந்த அழகிய குடியிருப்புகளையுடையது சிற்றூர்; அங்குக் கரிய அடியினையுடைய வேங்கை மரம் சூழ்ந்த சிவந்த மேட்டுநிலத்தே விளைந்த வரகினைத் தொகுத்த கூட்டின் ஒரு பக்கத்தே, குவிந்த அடியினையும் பசிய கண்ணினையுமுடைய ஆண் வெருகு ஊனை விரும்பிய பெண் வெருகுக்குக் கோழிச் சேவலைப் பிடிக்கச் சமயம் பார்த்திருக்கும் பொலிவற்ற மாலைப் பொழுது" என்று பரணர் மிகவிரிவாகச் சீறூர் மாலைக் காலத்தில் விளங்குதலைப் புனைந்து காட்டுகிறார். ஞாயிறு மேற்கே மறைதலை இயல்பாகவே பரணர் கூறுகிறார். அதனை உவமைப் படுத்தியோ பிறவாறு அழகுபடுத்தியோ புனையவில்லை சீறூரைச் சுற்றிக் காட்டரண் உள்ளது. அங்கு வரகைச் சேர்த்து வைக்கும் கூடு காணப்படுகிறது. வெருகு தன் பிணவுக்காகக் கோழிச் சேவலைப் பிடிக்கக் காத்திருக்கிறது. சீறூரின் நிலையைக் காட்டுமாறு உயிரினங்களைக் கொண்டு புனைகின்றார், பரணர். தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரைக் காட்டும் பாடுபொருளுக்குத் தக்கவாறு சீறூர்ப் புனைவமைகின்றது.

உடன்போக்கும், ஊர்ப்புனைவும்

சீறூர், பாலைத் திணையைச் சார்ந்தது என்றும் வேயுயர் பிறங்கல் மலையிடையே அமைந்தது என்றும் கயமனார் காட்டுகின்றார். தலைவனுடன் போன தலைவி சீறூரில் இரவு தங்குவளோ நெடுகப் போவாளோ என்று தாய் கவலுகின்றாள்.

"நீரற்ற சுனையுட் புகுந்து வரும் மேல் காற்றின் தெளிந்த ஒலி, மலைப்பிளப்பில் ஒலிக்கும். அங்கு இருப்பை மரத்தினுடைய வெள்ளிய பூவினை உண்ணத் தன் ஆண்குரல் தோன்ற பெண்மானை ஆண்மான் விளிக்கும் தொலைவிலுள்ளது. பெரிய மடியினையும் மணியினையுமுடைய ஆநிரைகள் பருக ஆயர் அமைத்த கிணறுகளைத் தன்கன்றுடன் பிடியும் களிறும் தடவிப் பார்க்கும் பொலிவற்ற இடத்தினையுடைய மன்றினையும் அழகிய குடியிருப்பினையுமுடைய சீறூர்"[4]

இவ்வாறு கயமனார் குறிஞ்சி முல்லை சார்ந்த ஊராகச் சீறூரைப் பாடுகின்றார். ஆண் மான் பெண் மானை அழைத்தலும் யானைக் கூட்டம் கிணறுகளைப் பார்த்தலும் புனைவில் அமைகின்றன. இவற்றால் நிலத்தின் நீரற்ற தன்மை வெளிப்படுத்தப்படுகிறது.

இத்தகைய பாலைச் சீறூரில் தலைவி இரவில் துணையொடு தங்கியிருப்பாளோ - தலைவனுடன் நடந்து செல்லுவாளோ - என்று செவிலி கவலைப்படுகின்றாள். கயமனார் தாயுள்ளம் அமையப் பாடுதற்குத் தக்கவாறு சீறூர் நீரற்ற ஊராகவும் களிறும் பிடியும் திரியும் ஊராகவும் புனையப்படுகிறது. கருவூர்க் கண்ணம்புல்லனார், செவிலி கூற்றாகப் பாலைத் திணையில் 'கல்லென் சீறூர்' (அகம்.63:13) என்று புனைவர். இவர் பாலை நிலத்துக் கானத்துடன் இணைத்தே சீறூரைப் பாடலில் பகருகிறார். முதற்கண் கானம் புனையப்பட்டு அதனைத் தலைவி கடந்து செல்லலும் பேசப்படுகின்றது. "கடுங்கண் யானையினுடைய நீண்ட கையை அணைத்து வளைந்த காலால் உதைத்துண்டாக்கிப் பொற்றுகள் எழும்

புழுதியில் பெரிய இருள் புலர்கின்ற விடியற் காலத்தில் வெயில் மிகுந்து எறிக்கக் கரிய மாலை போன்ற கழுத்தினையுடைய சிவந்த குறும் பூழின் சேவல் தன் சிறிய புல்லிய பெடையுடன் குடையும் இடங்களையுடைய அச்சமுறத் தகுவதாகிய காட்டைக் கடந்து"[5] என்பது கானப் புனைவு. விலங்கு, பறவைகளின் செயலைக் கூறிப் புலவர் கானத்தைப் புனைகின்றார். இதனைத் தொடர்ந்து சீறூர் புனையப்படுகிறது.

கன்றுகா ணாதுபுன் கண்ண செவிசாய்த்து
மன்றுநிறை பைதல் கூரப் பலவுடன்
கறவை தந்த கடுங்கால் மறவர்
கல்லென் சீறூர் எல்லியின் அசைஇ

(அகம்.63:10-13)

என்று சீறூரைப் புனைகின்றார். வெட்சி மறவர் ஆக்களைக் கவர்ந்து மன்றில் அடைத்துள்ளனர். அவை பொலிவற்ற கண்ணினவாய்ச் செவிகளைச் சாய்த்துக் கன்றுகளைக் காணமால் வருந்தின. இது மிக மிக எளிமையான புனைவு. இவ்வாறு ஆனிரை கவர்ந்த வேகம் மிக்க காலினையுடைய வெட்சி மறவரது கல்லென்னும் ஆரவாரத்தையுடைய சீறூர். இச்சீறூரில் இரவு தலைவனும் தலைவியும் தங்குகின்றனர்.

கானத்திற்கு விடியற்காலை வந்த தலைவன் தலைவியர், இரவுக்குச் சீறூர் வருகின்றனர்; உடன் போக்கில் அவண் தங்குகின்றனர். பாலைக்குப் புறனாய வெட்சிக்குத் தக்கவாறு சீறூர்ப் புனைவு அமைகிறது. உடன் போக்கில் செல்லுவோர் ஒருநாள் முழுமையும் நடந்து சென்று இரவில் தங்குமிடமாகச் சீறூர் அகப் பொருள் பாடல்களில் சுட்டிப் புனையப்படுகின்றது. இந்தப் பாட்டு பாலைத் திணையின் மறுதலையாகிய வெட்சித் திணைப் புனைவாக ஊரைப் புனைந்து காட்டுகிறது. ஊர்ப் புனைவில், அகப் பாடலில் புறப் பொருள் தன்மை அமையப் புனையப்பட்டிருப்பது புதுமையானதாகும்.

நக்கீரர் மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியதாகப் பாலைத் திணையில் பாடிய பாடலில் அருஞ்சுரத்தைப் புனைந்து பின் சீறூரைச் செப்புகின்றார். உடன்போக்கில் சென்ற தலைவிக்குச் சிலம்பு கழீஇய நோன்பு சீறூரிலுள்ள நல்கூர்ந்தார் மனையில் நிகழுகிறதே என்று செவிலி வருந்துகிறாள். இதனைப் பாடப் புனைவு அமைகிறது. "பல கிளைகளாகத் தழைத்த ஓமை மரங்கள் உயர்ந்துள்ள காடாகிய நீண்ட இடத்தில் மணிகள் பதித்த பரிசையினையும் நீண்ட காம்பினையுமுடைய வேலினையும் துணிவு மிக்க நெஞ்சமுடன் மெய் வலியினையுமுடைய அறியப்படாத தேசத்து அரிய சுரநெறி"[6] என்று நக்கீரர் புனைகின்றார். இது தலைமக்கள் உடன் போன அருஞ்சுரத்தியல்பு. இதனைத் தொடர்ந்து சீறூர் விவரிக்கப்படுகிறது. சீறூரின் இயல்பைத் தலை மக்கள் தங்குகின்ற வீட்டுப்புனைவாகக் காட்டுகின்றார், ஆசிரியர்.

சிறப்பு சீரும் இன்றிச் சீறூர்
நல்கூர் பெண்டின் புல்வேய் குரம்பை
ஓரா யாத்த ஒருதூண் முன்றில்

(அகம்.369 : 22-24)

என்பது புனைவு. பாலையைச் சார்ந்த ஊர்; 'அங்கு வறுமையுற்ற பெண்டினது புல்வேய்ந்த குடிசையில் ஒரு பசு ஒற்றைத் தூணில் கட்டப்பட்ட முகப்பு' என்று சீறூர்ச் சொல்லோவியமாகிறது. வறுமை ஓவியத்தை நக்கீரர் விரிவாகப் புனைவர். இக்கருத்தைத் தூங்கலோரியார் வாய்பாட்டு நடையாக "ஓரான் வல்சிச் சீறில் வாழ்க்கை" (குறு.295:4) என்று மனையைக் கொண்டு காட்டுவர். உடன் போக்குடனும் சிலம்பு கழிக்கின்ற சடங்குடனும் நக்கீரர் பாடலைப் புனைவதால் சீறூரின் மரஞ்செடி கொடிப் புனைவில்லை. அதனை ஈடு செய்யச் சுரப்புனைவில் அவை இடம் பெறுகின்றன.

இருவகைப்புனைவு

உடன் போகின்றவர்கள் தங்கும் ஊரைச் சீறூர் என்பது சங்க இலக்கிய வழக்கு. இதனால் இந்த ஊர் 'சீறூர்' என்று சுட்டப்படும். அணிலாடுமுன்றிலார்

தலைவனும் தலைவியும் இணைந்திருக்கும் இன்ப நிலைக்குச் சாறு கொள் ஊரையும் தலைவி தலைவனைப் பிரிந்திருக்கும் துன்ப நிலைக்கு அங்குடிச் சீறூரின் அணிலாடு முன்றிலையும் உவமையாகக் கூறினார். இரண்டு ஊர்களின் பெயரும் சுட்டப்படவில்லை. இன்பப் புனைவு சுருக்கமாக அமையத் துன்பப் புனைவு விரிவாகவும் ஊரிலுள்ள முற்றத்தைப் பற்றியதாகவும் விளங்குகிறது. சங்கப் புலவர்கள் உவமையாக ஊரைச் சுட்டும்போது ஊர்ப் பெயர் சுட்டியே பாடுவர். இங்கு அவ்வாறு சுட்டப்படவில்லை.

அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்
மக்கள் போகிய வணிலாடு முன்றிற்
புலப்பில் போல (குறு.41 : 3-5)

என்று பாலையில் பாடுகின்றார். தலைவன் பிரிந்தமையான் வருந்திய தலைவி, தன்னிலையைப் பாலை நிலத்துச் சீறூரில் யாருமின்றிக் கிடக்கும் தனிவீட்டு நிலையைக் கூறி உவமிக்கின்றாள். இதனால் சீறூர் என்பது பாலைச் சுரத்திடையே அமைந்த ஊர் என்று வெளிப்படும். பாலை எனபதால் வீட்டிலுள்ள மக்கள் எல்லாம் போய் விட்டனர் என்றும் வீடும் வீடிருந்த பகுதியும் பாழாயிற்று என்றும் புனைகின்றனர். ஊர்களின் இயற்கை வளத்தையோ செயற்கை வளத்தையோ புனையாது மகிழ் நிலையையோ, வறிய நிலையையோ புனைகின்றார், அணிலாடு முன்றிலார்.

ஓதலாந்தையார், தலைவன் தலைவியர் உடன்போன போது ஒரூரில் தங்கியதைச் சுட்டுகிறார்.

புள்ளொலிக் கமர்த்த கண்ணள் வெள்வேல்
திருந்துகழற் காளையொ டருஞ்சுரங் கழிவோள்
எல்லிடை யசைந்த கல்லென் சீறூர்ப்
புனையிழை மகளிர்ப் பயந்த
மனைகெழு பெண்டிர்க்கு நோவுமார் பெரிதே (ஐங்.382)

இப்பாடலில் பாலைக்குரிய சுரம் 'அருஞ்சுரம்' எனப்பட்டது. சென்றோர் இரவில் தங்கிய ஊர் "எல்லிடை யசைந்த கல்லென் சீறூர்' (382:3) என்று புனைவு பெற்றது. இரவுப் பொழுதுடன் ஒலி மிகுந்த ஊராக ஓதலாந்தையர் ஊரைப் புனைகின்றார்.

உடைமையாளனின் சீறூர்

கபிலர் தலைவியின் கைவளையலைக் குறிக்க வந்தவர், வளையறுப்போனைச் 'சீறூர் வல்லோன்' என்பர். கபிலர் இயற்கையை உற்று நோக்கிச் சீறூரைப் பேசுகிறார்.

............ செவ்வேர்ச்
சினைதொறுந் தூங்கு பயங்கெழு பலவின்
சுளையுடை முன்றில் மனையோன் கங்குல்
ஒலிவெள் ளருவி ஒலியில் துஞ்சும்
ஊரலஞ் சேரிச் சீறூர் வல்லோன்

(நற்.77:4-8)

பலாமரத்தின் வேர் சிவப்பாக இருத்தலைச் 'செவ்வேர்' என்றும் பலாமரத்தின் கிளை தோறும் பழங்கள் காய்த்திருத்தலைச் 'சினை தொறுந் தூங்கும் பயங்கெழு பலவின்' என்றும் குறிப்பர். பழம்மிகுதியாய் இருத்தலால் மனை முற்றத்தில் சுளைகள் கிடைக்கின்றன; அங்கிருக்கும் மனையோள், இரவில், ஒலிக்கும் அருவியோசை கேட்டுத் துயிலுகின்றாள். அவ்வூரோ சேரிகள் சிலவற்றையுடைய சீறூர்.

கபிலர் மிக இயல்பாக மிகையின்றிச் சீறூரைப் புனைந்திருக்கிறார். பலாவும் அருவியும் தாம் அவர் புனைவில் அமைகின்றன. இப்பாடலில் சங்கறுப் போனுக்குரியதாக ஊர் பாடலில் இடம் பெறுகிறது. பாலை ஊராகப் புனைவு அமையாது, நெய்தல் நிலத்தில் வாழும் சங்கறுப்போன் வதியுமிடமாகப் புனையப்பட்டிருக்கிறது.

கபிலர் மகட்போக்கிய (செவிலித்) தாய் சொல்லியதாகப் பாடிய பாலைப் பாடலில், 'பன்மலை யருஞ்சுரத்தைக்' (அகம்.203:11) குறிப்பர். சுரத்தைக் கடந்து சென்ற

தலைவனும் தலைவியும் நல்ல ஊரில் தங்கிட இடம் கிடைக்க வேண்டும் என்று செவிலி விரும்புகிறாள்.

மானதர் மயங்கிய மலைமுதற் சிறுநெறி
புல்லென் மாமலைப் புலம்புகொள் சீறூர் (அகம்.203:13-15)

விலங்குகள் செல்லும் பாதைகள் மயங்கிக் கிடக்கும் சிறிய வழிகள்; பொலிவற்ற பெரிய மலையைச் சார்ந்த தனிஊர். இவ்வாறு மரம் செடி கொடிகளை விடுத்துக் கபிலர் சீறூரை நவிலுகிறார். சுரத்தை அடுத்துச் சீறூர் இருப்பதும் உடன் போக்காகச் செல்லும் தலை மக்கள் அங்குத் தங்குவதும் கபிலர் குறிப்பால் உறுதிப்படும்.

காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், முதற்கண் எட்டு அடிகளில் வல்லாண் அருமுனையாகிய சுரத்தைப் புனைகிறார். இதனைத் தொடர்ந்து சீறூரைப் பேசுகிறார்.

உகுமணா றஞ்சும் ஒருகாற் பட்டத்
தின்னா ஏற்றத் திழுக்கி முடங்கூர்ந்
தொருதனித் தொழிந்த உரனுடை நோன்பக
டங்குழை இருப்பை அறைவாய் வான்புழல்
புல்லுளைச் சிறாஅர் வில்லின் நீக்கி
மரைகடிந் தூட்டும் வரையகச் சீறூர்

(அகம்.107:13-18)

என்று சீறூரைப் புலவர் ஓவியமாக்குகிறார். ஓடை மேட்டில் வழுக்கி விழுந்து முடம்பட்ட வலிமையான காளைக்கு அழகிய தளிரையும் உட்டுளையினையுடைய வெள்ளிய பூவையும் வில்லால் அடித்துதிர்த்து அதனைத் தின்னவரும் மரைமான்களை விரட்டிவிட்டு ஊட்டுகின்ற மலையிலுள்ள சீறூர். முடம்பட்ட காளைக்குத் தளிரையும், பூவையும் ஊட்டும் சிறுவரியல்பு இங்குப் படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

சீறூர்ப் புனைவில் இஃது குறிப்புப்பொருளாகிய உள்ளுறைப் பொருளை உணர்த்துகின்றது. பாடலில் 'நின்னொடு வரும்' என்று உடன் போக்கை வலியுறுத்தும் கருத்தும் இவ்வுள்ளுறையால் மேலும் வலியுறுத்தப்பெறுகிறது.[7]

மருதனிளநாகனார், பாலைத் திணையில் தலைமகன் பிரியக் கருதிய நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்குவித்ததாகப் பாடுகிறார் (அகம்.77). இப்பாடலிலும் சீறூர் கானத்திலுள்ள ஊராகப் பேசப்படுகிறது. ஊரைப் புனையும் மருதனிளநாகனார் உவமைகளால் புனைவை வனப்புப்படுத்துகின்றார்; இதனால் ஊர்ப்புனைவடிகள் மிகுகின்றன.

..........			வெய்துற
இடியுமிழ்	வானம்	நீங்கி	யாங்கணும்
குடிபதிப்	பெயர்ந்த	சுட்டுடை	முதுபாழ்க்
கயிறுபிணிக்	குழிசி	ஓலை	கொண்மார்
பொறிகண்	டழிக்கும்	ஆவண	மாக்களின்
உயிர்திறம்	பெயர	நல்லமர்க்	கடந்த
தறுக	ணாளர்	குடர்தரீஇ	தெறுவரச்
செஞ்செவி	எருவை	யஞ்சுவர	இகுக்குங்
கல்லதர்க்	கவலை	போகின்	சீறூர்ப்
புல்லரை	யித்திப்	புகர்படு	நீழல்
எல்வளி	யலைக்கும்	இருள்கூர்	மாலை

(அகம்.77:4-14)

இடிமுழக்கம் எழுகின்ற மேகம், மழை பெய்யாது போகக் குடிமக்கள் தங்கள் ஊரை விடுத்துப் பெயர்ந்து போகப் பலரும் சுட்டிக் கூறும் பாழிடமாகிய பாலை நிலமாகும். பகைவரை வென்று பட்ட தறுகணாளரான வீரர்களின் குடலைச் செஞ்செவிப் பருந்து, கண்டார் அஞ்சுமாறு வெளியே எடுத்துப் போடுகின்ற கற்களையுடைய கவர்த்த பாதையில் சீறூர் விளங்கும். அவ்வூரிலுள்ள புல்லிய அடியினையுடைய இத்தியின் புள்ளிபட்ட நிழலிலே பெருங்காற்றலைக்கும் இருள்மிக்க மாலைப்

பொழுது. பருந்து, வீரர்களின் வயிற்றிலிருந்து குடலை எடுப்பதற்குக் குடத்திலுள்ள முத்திரையை ஆராய்ந்து ஓலையைத் தேருதலை உவமையாகப் புலவர் கூறுகின்றார். தன் கால நடை முறையைக் கொண்டு ஆசிரியர் பாடுகிறார். பாலை நிலத்து ஊராகச் சீறூர் இங்குப் புனையப் படுகிறது. தலைவன் கூற்றாதலின் அவனுடைய வீரத்தைக் காட்டுமாறு புனைவு விளங்குகிறது. இத்தி மரநிழலும் பெருங்காற்று வீசுதலும் பாடலில் புனைவாகின்றன. பாலை என்பதால் வேறு புனைவுகளைப் படைப்பாளி அமைத்திலர். பிரிந்து போய் வந்த தலைவன் பாதை வழியில் சென்றபோது கண்டவற்றை இப்புனைவுணர்த்துகின்றது.

இளங்கீரனார் (நற்.3). பாலைத் திணை ஊராகச் சீறூரைப் புனைகின்றார்.

ஈன்பருந் துயவும் வான்பொரு நெடுஞ்சினைப்
பொரியரை வேம்பின் புள்ளி நீழல்
கட்டளை அன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்
வில்லேர் உழவர் வெம்முனைச் சீறூர்ச்
சுரன்முதல் வந்த உரன்மாய் மாலை

(நற்.3:1-6)

குஞ்சு பொரித்த பருந்து வருந்தியிருக்கும். அது வாழுகின்ற வேப்ப மரமோ வானாளாவிடச் செல்லும் நீண்ட கிளைகளையும் பொரிந்த அடியையும் உடையது. அம்மரத்தின் புள்ளி போன்ற நிழலில், வட்டுக்காயினால் கோடு கீறிச் சிறுவர்கள் நெல்லிக் காயை வைத்து வட்டாடுவர் (பாண்டில்). அவ்விடம் தங்களுடைய வில்லால் வழிப்போவாரை அலைத்துண்ணும் மழவரின் வெய்ய குடியிருப்பாகிய சீறூர் ஆகும். அது மாலைக் காலத்து வெப்பம் மிக்க சுரனில் விளங்குகிறது. சீறூர், பாலைக்குரிய வேம்பும் சிறுவர் விளையாட்டும் ஆறலைப் போரின் தொழிலும் நிறைந்ததாகப் புனையப்பெறுகிறது. இளங்கீரனார், ஆறலை கள்வர் வாழும் ஊராகச் சீறூரைக் குறிக்கின்றார்.

கல்லாடனார் தலைமகன் கூற்றாகப் பாடும் பாலைப் பாடலில் 'அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்' (அகம். 9:10) என்று உரைப்பர். தலைவன் வினை முற்றி மீளும் போது தலைவி இருக்கும் ஊரைக் கூறுகின்றான். "அரும்பிய இருப்பைப் பூ (இலுப்பைப் பூ) சிவந்த தளிர்களினிடந் தொறும் நெய்யை ஒத்த இனிய துளையுள்ள பூக்கள் ஆர்க்குக் கழன்று துளையினைக் காணத் தக்கவாய்க் காற்றால் சிதறுண்டு சிவந்த மேடாகிய வழிகளில் பரவுகின்ற சுரத்திலுள்ள அழகிய குடிகளையுடைய சிற்றூர்."[8] இருப்பைப் பூவின் தோற்றமும் அவை செம்மண் மீது விழுதலும் ஊர்ப்புனைவாகக் கல்லாடனாரால் பேசப்படுகிறது. இப்புனைவைப் படைப்பாளி உவமையினால் மேலும் விரிக்கின்றார்.

இருப்பைப்பூ, அது விழுதல் ஆகிய இயல்பான காட்சியைக் கல்லாடனார் தக்க உவமைகளுடன் அமைத்துப் புனைந்திருக்கிறார். என்றைக்கும் சிற்றூர்களில் காணத்தக்க புனைவே சங்கப் புலவர்களின் புனைவாகும்.

நற்றிணைப் (92) பாட்டில், பாடல் முழுமையும் சீறூரும் கேணியும் புனையப் படுகின்றன. இது தலைவன் பிரிவால் வேறுபட்ட தலைவிக்குத் தோழி சொல்லுவதாக அமைந்தது. "சுரத்தின் கண்ணே சென்ற தலைவன் நம்மைக் கருதவில்லை" என்று தோழி பேசுகின்றாள். சுரனும் சுரத்திலுள்ள சீறூருமே புனையப்படுதலின் இங்கு வேறு கருத்துகள் இடம் பெற்றில. பாட்டின் முதலடியான 'உள்ளார் கொல்லோ தோழி' என்ற அடியே அகப் பொருள் தொடர்புடையதாய் அமைகிறது; ஏனைய அடிகள் புனைவுக் கூறின.

........... துணையொடு
வேனில் ஓதிப் பாடுநடை வழலை
வரிமரல் நுகும்பின் வாடி அவணை
வறன்பொருந்து குன்றத்து உச்சிக் கவாஅன்
வேட்டச் சீறூர் அகன்கண் கேணிப்
பயநிரைக்கு எடுத்த மணிநீர்ப் பத்தர்
புன்தலை மடப்பிடி கன்றோடு ஆர

வில்கடிந்து ஊட்டின பெயரும்
கொல்களிற்று ஒருத்தல சுரன் இறந் தோரே

(நற். 92:2-9)

முதுவேனிற் காலத்தில் வருத்திய செலவையுடைய ஆண் ஒந்தி (வழலை), தன் துணையுடன் வாட்டமுற்றுக்கிடக்கின்ற வறண்ட குன்றத்துச்சியில் திரியும். அதனருகிலுள்ள வேட்டச் சீறூ (வேட்டுவச்சேரி) ரையடுத்த பெரியகேணியிலிருந்து பசுக்கூட்டம் குடிக்க நீர்பத்தரில் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதனைப் பெண் யானை தன் கன்றுடன் அருந்த பத்தரின் வாயை மூடிய விற்பொறியை முறித்துப்போட்டுக் கொல்களிறு அவற்றை உண்பிக்கும்; காட்டுவிலங்குகள் திரிகின்ற சுரன். இப்பாட்டு (92) பாலைத் திணையாகத் தலைவன் போகின்ற பாதையையும் ஊரையும் புனைகின்றதாகும். சுரத்திடையே உள்ள ஊரையே இவர் புனைகின்றார். இவ்வாறு பேசித் தோழிதலைவியை ஆற்றுவிக்கின்றாள். தோழிப் பெண், தலைவன் சென்ற பாதையைத் தன்னோக்கில் கூறுவதாய் இப்பாட்டுத் திகழ்கிறது.

மாமூலனார், ஆற்றாமை மீதூரத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவதாய்ப் பாடினார். இது பாலைத் திணை. இப்பாட்டில் மாமூலனார் வேங்கட மலையைச் சார்ந்ததாகச் சீறூரைப் புனைகுவர். ஊரைப் புனைந்த பின் சுரத்தை 'வெம்முனை அருஞ்சுரம்' என்பர்.

........... பொறையடைந்து
இன்சிலை எழிலேறு கெண்டிப் புரைய
நிணம்பொதி விழுத்தடி நெருப்பின் வைத் தெடுத்து
அணங்கரு மரபிற் பேஎய் போல
விளரூன் தின்ற வேட்கை நீங்கத்
துகளற விளைந்த தோப்பி பருகிக்
குலாஅ வல்வில் கொடுநோக்கு ஆடவர்

புலாஅற் கையர் பூசா வாயர்
ஒராஅ உருட்டுங் குடுமிக் குராலொடு
மராஅஞ் சீறூர் மருங்கில் தூங்கும்
(அகம். 265 : 11-19)

என்பது சீறூர்ப் புனைவு, மறவர்கள் குன்றினை அடைந்து எருதினைக் கொன்று கொழுப்புப் பொதிந்த தசையினை நெருப்பில் வைத்துச் சுட்டு எடுத்து அவ்வூனைத் தின்று நீர் வேட்கையால் தோப்பிக் கள்ளை அருந்திப் புலால் நாற்றம் வீசும் வாயும் கழுவாத கையுமுடையவராய்க் கோட்டான் ஒலிக்க வெண் கடப்ப மரங்கள் உள்ள சீறூர் ஆகும். மாமூலனார், பாலைக்கு மாறான வெட்சி மறவர் (வல்வில் கொடு நோக்கு ஆடவர்) எருதின் ஊனைத் தின்னலும் கள்ளைக் குடித்தலும் கோட்டான் ஒலித்தலுமாகச் சீறூரைப் புனைகின்றார்.

இவ்வூர்ப் புனைவில் சங்கப் புலவர்களின் இயல்புத் தன்மை உள்ளதேயன்றிப் பிறிதில்லை. அவர்கள் புனைவு மக்கள் வாழ்க்கையைச் சார்ந்தே அமைகின்றது. எனினும் இச்சீறூர் வேங்கட மலையைச் சார்ந்தது என்று மாமூலனார் கூறுகிறார். ஊர்சார்ந்த மலையினைச் சுட்டியவர், அகப்பொருள் மரபு கருதி ஊர்ப் பெயரைச் சுட்டவில்லை.

வினைமுற்றித் தலைவன் நெஞ்சிற்குச் சொல்லல்

மதுரைப் பேராலவாயார் தலைமகன் கூற்றாகப் பாலைப் பாடலைப் புனைகுவர்.

தீந்தயிர் கடைந்த திரள்கால் .மத்தம்
கன்றுவாய் சுவைப்ப முன்றில் தூங்கும்
படலைப் பந்தர்ப் புல்வேய் குரம்பை
நல்கூர் சீறூர் எல்லித் தங்கிக்
குடுமி நெற்றி நெடுமரச் சேவல்
தலைக்குரல் விடியல் போகி முனாஅது
கடுங்கண் மறவர் கல்கெழு குறும்பின்
எழுந்த தண்ணுமை இடங்கட் பாணி

அருஞ்சுரம் செல்வோர் நெஞ்சம் துண்ணெனக்
குன்றுசேர் கவலை இசைக்கும் அத்தம்

(அகம். 87:1-10)

இப்புலவர் முதற்கண் சீறூரைப் புனைகின்றார். தயிர் கடைந்த மத்தினைக் கன்று நாவால் நக்குமாறு முற்றத்தில் தொங்கும், மரநிழலாகிய பந்தரையும் புல்லால் வேயப்பெற்ற குடில்களையுமுடைய வறுமைப்பட்ட சிறிய ஊர். இங்கு இரவில் தங்கிச் சேவல் கூவும் விடியற்காலையிற் புறப்பட்டுச் சென்றான் தலைவன். கடுங்கண் மறவர்களின் காட்டரணில் எழுந்த தண்ணுமைப் பறையில் எழும் ஒலி சுரத்தில் செல்வோர் நெஞ்சு நடுக்குற ஒலிக்கும்; இக் கவர்த்த நெறிகளையுடைய காடு. குன்றினைச் சார்ந்தது.

மதுரைப் பேராலவாயார் மிக எளிமையாகவும் உண்மையாகவும் ஊரைப் புனைகின்றார். முல்லை நிலம் பாலையாகத் திரிந்தமையை இவர் வருணிக்கின்றார். கற்பனையாகவோ மிகை நவிற்சியாகவோ இங்கு ஊர் விவரிக்கப்படவில்லை. சங்கப் புலவர் இயற்கையைச் சார்ந்து இயற்கைக்குள் வாழ்ந்த வாழ்க்கையுடையவராக விளங்கினார். இயற்கையைத் தழுவி உழைப்பதும் இயற்கை தரும் பயனால் வாழ்ந்து வாழ்க்கை நடத்துவதும் சங்கத் தமிழர் தகைமை. இயற்கையை அழித்தோ அடக்கியோ சங்கத் தமிழர் வாழ்ந்திலர். மக்களின் ஆற்றலை உணர்ந்து இயற்கை நெறியிலேயே தமிழர் வாழ்ந்தனர். அதனால் அவர்தம் புனைவுகள் அல்லியற்கையாகவோ மிகைப் புனைவாகவோ இலங்கில.

பாலைப் பாடல்களில் சுரத்தைப் புனைந்தபின் அதனையடுத்துச் சீறூர் இருப்பதாகப் புனைவது மரபு.[9] தலைமகனும் தலைமகளும் உடன் போன வழி சுரத்தில் சென்று சீறூரில் தங்கினர் என்று பாடுவர். இதனால் சுரம்- கானம் - முதற்கண் புனையப்பெறும். மதுரைப் பேராலவாயார் தன் பாடலில் முதற்கண் சீறூரைப் புனைந்து பின் அதனைச் சார்ந்ததாகச் சுரத்தைப் பேசுகிறார். ஏன் இந்த முறை மாற்றம்? வினை முற்றி மீளுந் தலைமகன் இடைச் சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியதாகப் பாடல் அமைவதால் இப்புனைவு முறை மாறுகிறது.

வீட்டிலிருந்து போகும் போது சுரன்முதலில் இருக்கச் சீறூர் அடுத்து வரும்; போன இடத்திலிருந்து திரும்பும் போது சீறூர் முதலிலும் சுரன் அடுத்தும் வரும். இந்த உலகியல் நடப்பே பாடலின் பாடு பொருளமைப்புக்கு அடிப்படையாகும். சங்க இலக்கியங்கள், பாலைவழிச் செல்வோர் பாதைவழியே செல்லும் போது இரவில் தங்குகின்ற ஊராகச் சீறூரைச் செப்புகின்றன. தலைவன் வினை மேற் சென்றாலும் வினை முற்றி மீண்டாலும் தலைமகனும் தலைமகளும் உடன் போக்காகச் சென்றாலும் சீறூரில் இரவு தங்கியே செல்லுகின்றனர். சங்கத் தமிழரின் இயல்பு வாழ்க்கையே ஈண்டு புனையப் பெறுகிறது.

பாத்திர மனத்துக்கு ஏற்பப் புனைவமைதல்

மதுரை மருதனிள நாகனாரின் பாலைத் திணைப் பாட்டு, உடன் போக்கு வலித்த தோழி தலைமகனுக்குச் சொல்லியதாக அமைந்தது. இப் பாட்டில், சீறூரைச் சுரவழியினதாக ஆசிரியர் புனைகின்றார். சீறூர், "பல கிளைகள் பொருந்திய கொம்பினையுடைய முதிய மான்களைத் துரந்து சிறிய உணவுப் பொருளைக் கொண்டு வந்த சிறிய ஊர்களிலுள்ள பெண்கள் திரிகின்றனர். அங்குச் சேய்மையிடத்தே இருந்து ஒலிக்கும் பேராந்தையின் வருத்தம் தரும் மெல்லிய குரல் மென்மையாக வந்து ஒலிக்கும். அதனைக் கேட்கும் தோறும் வழிப் போவார் வருந்தும் சுர நெறிகள் செல்லற்கு அரியன".[10] என்று தோழி கூறுகின்றாள். இப்பாதையையும் சீறூரையும் கடந்தே உடன் போக்கில் தலைவனும் தலைவியும் செல்ல வேண்டும்.

இதனால் சீறூரைப் புனையும் போது பாதைக்குரிய நீர்மை தோன்ற ஆசிரியர் புனைகிறார். இவ்வழியும் சீறூரும் ஏகுதற்கு அரியன ஆகும்.[11] தலைவி தலைவனுடன் போவதால், இக் கொடிய பாதை எவ்வெவ்வாறு மாறிட வேண்டும் என்று தோழி விழைகின்றாள். அதனால் பாலை முல்லையாக மாற வேண்டும் என்றுரைக்கின்றாள்.[12]

...............			கரிமரங்
கண்ணகை	இளங்குழை	கால்முதல்	கவினில்
விசும்புடன்	இருண்டு	வெம்மை	நீங்கப்
பசுங்கண்	வானம்	பாய்தளி	பொழிந்தெனப்
புன்னுகும்	பெடுத்த	நன்னெடுங்	கானத்து
ஊட்டு	பஞ்சிப்	பிசிர்பரந்	தன்ன
வண்ணம்	மூதாய்	தண்ணிலம்	வரிப்ப
இனிய	ஆகுக		

(அகம். 283 : 9-16)

என்பது பாடற்பகுதி; அப்பாட்டில். முல்லையாக வேண்டும் என்றுரைக்கின்றாள் தோழி.

பாலைப்பகுதி	முல்லைப்பகுதி
1. கரிந்த மரங்கள்	தழைக்க வேண்டும்
2. வெப்பம் (ஒழியவும்)	வானம் இருண்டு மழை பெய்ய வேண்டும்
3. புற்கள் (கருகியவை)	குருத்து விட்டிடுக
4.	(மழை பெய்ய) கோபப் பூச்சி ஊர வேண்டும்.

பாலையைப் பாடுகின்ற மருதனிள நாகனார், பாலைத் திணைக்குரியவாறு முற்பகுதியைப் புனைந்திருக்கிறார். இது பாடு பொருளுடன் இணைந்த புனைவு. இது கற்பனை கலவாத உண்மையியற் புனைவு. இதனைத் தொடர்ந்து தோழி, தலைவி செல்லும் வழி இவ்வாறாக வேண்டும் என்று விழைகின்றாள். அஃது அவள் எண்ணுகின்ற/கற்பிக்கின்ற புனைவாகும். இவண் கற்பனை அரும்புகின்றது. இந்த இரண்டாவது புனைவில், தலைவி செல்லும் பாதையே இனிமையாக இருக்க

வேண்டும் என்று புனைகின்றாளேயன்றிச் சீறூரைப் பற்றி அவள் எக்கருத்தும் நவின்றிலள்.

உடன் போக்கில் போவாரும், வினைமேற்செல்வாரும் வினை முற்றி மீள்வாரும் தம் செலவிடைத் தங்குமிடம் சீறூராகும்; அதனால் தான் ஊரில் மாற்றம் அமைந்திலது. சீறூர் சார்ந்த புனைவை இருவகையாக ஒரு பாடலில் மதுரை மருதனிள நாகனார் வருணித்திருக்கிறார். பாடலின் கருத்தைப் பாடுதற்குத் தக்கவாறு இப் புனைவு அமைந்திருக்கிறது. ஒரு பாடலில் இருவகைப் புனைவு பாலை, முல்லை ஆகிய இரண்டிலும் சீறூர் ஒரு நீர்மைத்தாக இருக்குமாதலின் பாலைச் சீறூரே புனையப்படுகிறது.

ஒரே புனைவால் ஈரிடம்

'அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்' என்பது பாலைத்திணையில் சீறூர் சுட்டப்படும் வகையாகும். கருவூர் கதப்பிள்ளைச் சாத்தனார், சீறூரைப் பாடும்போது மாலைக் காட்சியைப் பாடுகின்றார். இதனால் ஊர்ப்புனைவு அமைகின்றது. ஊர்ப் புனைவில் ஒன்றனைப் பாடி மற்றொன்றையும் பெற வைக்கிறார். இது பாடல் குறைந்த அடிகளான் அமைய வாய்ப்பாகிறது. தலைவி இருக்குமூர் தலைவினிருக்குமூராக.

முல்லை தாய கல்லதர்ச் சிறுநெறி
அடையாது இருந்த அங்குடிச் சீறூர்த்
தாதெரு மறுகின் ஆபுறந் தீண்டும்
நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து
உகுபலி அருந்திய தொகுவிரற் காக்கை
புன்கண் அந்திக் கிளைவயிற் செறியப்
படையொடு வந்த பையுள் மாலை

(நற்.343 : 1-7)

இப்பாட்டு ஊர்ப் புனைவில் இடமும் காலமும் புனைவு பெறும் பகுதியாகும்.

முல்லைக் கொடி படர்ந்த மலை வழியான சிறுநெறியைச் சாராது அமைந்த அழகிய குடிகள் வாழும் அங்குடிச்சீறூர் "அங்கு மலரின் மகரந்தப் பொடிகள் உதிர்ந்த தெருக்கள் உள்ளன. அத்தெருக்களில் செல்லும் பசுக்களின் முதுகைத் தீண்டும் நீண்ட விழுது வீழ்ந்த கடவுள் எழுந்தருளிய ஆலமரம்; அங்கு உள்ள கடவுளுக்குப் படைத்த சோற்றைக் காக்கைகள் மெல்லத் தின்றன." துன்பத்தைத் தருகின்ற மாலையம்பொழுது. தலைவி தான் காணும் இயற்கைக் காட்சியைப் பிரிந்து வாழுகின்ற தலைவனும் காண மாட்டானா என்று வினவுகின்றாள். தான் உணரும் உணர்ச்சியைத் தன் தலைவனும் உணரவேண்டும் என்று அவள் எண்ணுகின்றாள். ஊர்ப் புனைவு தலைவியின் இன்ப ஏக்கத்தை வெளிப்படுத்துகின்றது.

தலைவி வாழுகின்ற ஊர் அவள் உணர்ந்த உணர்ச்சிகளுடன் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. தலைவி தான் இருக்குமிடத்து ஊரைப் போலத் தலைவனிருக்குமிடத்தூரும் இருக்க வேண்டும் என்று அவாவுறுகிறாள். சுரவழியில் அமைய வேண்டிய ஊர்ப் புனைவு, கருவூர்க்கதப் பிள்ளைச் சாத்தனாரால் தலைவி வாழூூர்ப் புனைவாக மாற்றிப் பாடப்பட்டுச் சுரத்திடையமையும் சீறூர்ப் புனைவாகிறது.

பிரிந்து செல்லுவோர் பிரிவின்போது சென்று தங்குமிடமாகச் சீறூரைச் செப்புகின்றனர். இஃது ஊரைப் புனைவதில் ஒரு வகைமை. இதே கருத்தை நற்றிணைப் பாட்டு (343), தலைவி பிரிந்து வாழுகின்ற ஊர்ப்புனைவாகக் காட்டுகின்றது; புனைவினீற்றில், கருவூர் கதப்பிள்ளைச் சாத்தனார், தலைவி

இல்லைகொல் வாழி தோழி நம்துறந்து
அரும்பொருள் கூட்டம் வேண்டிப்
பிரிந்துறை காதலர் சென்ற நாட்டே

(நற். 343:8-10)

என்று கூறுவதாகப் பாடலை யாத்தார். தலைவன் சென்ற சீறூரைப் புனையாது, அதனியல்பை யெல்லாம் தலைவி இருந்த ஊர்ப்புனைவாக்கினார், புலவர். பின் அதனைத் தலைவியே 'அவன் சென்ற நாட்டில் இல்லை கொல்' என்று கூறி அவன் ஊர்ப் புனைவாகவும் உணரவைக்கின்றார். இவ்வாறு ஈரிடத்துப் புனைவை ஓரிடத்துப் புனைவாகப் படைப்பாளி காட்டிச் சீறூர்ப் புனைவில் புதிய போக்கைப் படைக்கின்றார். ஓவியங்களில் ஒரு வடிவத்தில் இரண்டு வகையான உருவங்களைக் காட்டுதல் போலப் படைப்பாளி ஒரு புனைவால் இரு புனைவை உணரவைக்கின்றார். இது புனைவு வகையில் குறிக்கத்தக்க வகையாகும்.

மனையிலிருந்து பாதைச் சீறூரை எண்ணல்

இன்று மனைவியுடன் இருக்கும் தலைவன் அவளைப் பிரிந்து நாளைச் சீறூரில் தங்கியிருத்தலை நெஞ்சிற்குச் சொல்லுவதாக எயினந்தை மகனார் இளங்கீரனார் பாடுகின்றார். தலைவன் தான் நாளைக்குத் தங்க இருக்கும் சீறூரைப் பற்றி எண்ணுகின்றான். சீறூர்ப் புனைவுக்கு முன் அருஞ்சுரப் புனைவு இடம் பெறுகிறது. 'மூங்கிலில் வண்டுகள் துளையிட அத்துளை வழியே காற்றுப் புகுந்து ஆயர் குழல் போல இசைக்கும் தேக்கு மரங்கள் நிறைந்த சோலையினையுடைய காடு உயர்ந்த அரிய பாலை வழி' இவ்வழியில் அமைந்த சீறூர் புனையப்படுகிறது.

யாத்த தூணித் தலைதிறந் தவைபோற்
பூத்த இருப்பைக் குழைபொதி குவியிணர்
கழல்துளை முத்திற் செந்நிலத்து உதிர
மழைதுளி மறந்த அங்குடிச் சீறூர்

(அகம். 225:10-14)

என்று இருப்பை மரத்தின் பூக்கள் முத்தைப் போலச் சிவந்த நிலத்தே உதிர, மழை பெய்யாத சீறூர் என்று ஆசிரியர் புனைகின்றார். பாலை நிலத்தில் இருப்பை (இலுப்பை) மரத்தின் பூக்கள் விழுவதை எயினந்தை மகனார் இளங்கீரனார் புனைகின்றார்.

குறிஞ்சித் திணையில் சீறூரைச் சங்கப் புலவர்கள் நான்கு பாடல்களில் (அகம். 52, 152, 368, நற். 95) புனைந்திருக்கின்றனர். குறிஞ்சிக்கேற்பப் பாடல்கள் மலை ஊராகவும் குறிஞ்சி உரிப் பொருளாகவும் விளங்குகின்றன.

குறிஞ்சிப் புனைவு

நொச்சி நியமங்கிழாரின் பாட்டுக் குறிஞ்சித் திணையில் தலைவி கூற்று (அகம் 52). தலைவன் நாட்டைப் புனையும் போது, மலைகெழுசீறூர் என்பர் புலவர். மரங்கள் உயர்ந்த பக்கமலையிடத்துச் சுற்றிய கொடியைச் செழிந்தெழுந்த வேங்கை மரம். அதனுடைய மிக உயர்ந்த கிளையிலுள்ள பொன்னை ஒத்த புதிய மலரினைப் பறிக்கக் குறமகள் விரும்பினாள். அதனால் துன்பம் விளைக்கும் ஒலியையுடைய 'புலி புலி' என்னும் ஆரவாரத்தைத் தொடர்ந்து அவள் எழுப்பினாள். அதனைக் கேட்டு உயர்ந்த பாறை அடுக்கில் இருண்ட சிலம்பில் ஆ கொள் வயப்புலி ஆகும் அஃது என்று கருதி வில்லை இடக் கையிற் கொண்டு வருகின்ற கானவர்களின் மலையை அடுத்துள்ள சீறூர் கல்லென ஒலித்தெழுகின்ற நாடு, பெண் பூப்பறிக்க எழுப்புகின்ற ஓசையைக் கேட்டு ஊரார் எழுகின்றனர். அத்தகைய (வீரமிக்க) ஊரவர் வாழுமிடமே சீறூர். சீறூரில் குறமகளிர் வேங்கைப் பூப்பறித்து விளையாடுங் காட்சி ஊர்ப் புனைவாகி நாட்டுச் சிறப்பைக் காட்டுகிறது. இவ்வூர் மலைகெழு சீறூர் ஆகும்.

மதுரை மருதனிளநாகனார் குறிஞ்சித் திணையில் தலைவனுக்குரிமையுடைய மலை நாட்டைப் புனைந்து பாடுகிறார். தலைவனை அடையாளங்காட்ட இந்த விவரிப்புத் தேவைப் படுகிறது. தலைவனுடைய மலை நாட்டைப் புனைந்து தலைவன் இயல்பைச் சொல்லிய ஆசிரியர், தலைவி ஊரைச் சீறூர் என்பர். இப்பாட்டுக் களவாதலின் தலைவன் நாடு வேறாகவும் தலைவி ஊர் வேறாகவும் புனைவு பெறுகிறது.

"உயர்ந்த மலைப் பக்கத்தே உள்ள காந்தளையுடைய அழகிய சோலை; அது குரங்குகள் ஏறி அறியாத நீண்ட மரங்கள் செறிந்த காடு. அங்கு விளக்கம் பொருந்திய

தெளிந்த பளிங்கினை ஒத்த இனிய நீர் நிறைந்த சுனை. அச்சிற்றூரில் வாழும் மக்கள் வண்டு மொய்க்கும் கண்ணியையுடையவர்களாய் அழகிய மூங்கிற் குழாயில் முற்றிய தேனாகிய கள்ளின் தெளிவை உண்டு மகிழ்வர்."[13]

இவ்வாறு காடு சூழ்ந்த மலைநாட்டுச் சீறூராகத் தலைவி ஊரை மதுரை மருதனிளநாகனார் புனைகின்றார். மக்கள் கள்ளருந்தல் ஊராரின் செயலாகப் புனையப்படுகிறது. வேறு வகையாகப் புனைவில்லை. இப்பாட்டு திருமணம் முடிய வேண்டும் என்ற நோக்கில் பகலே சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.

இரவுக் குறி வந்து நீங்குந் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதாகப் பரணர் பாடினார். அக்குறிஞ்சித் திணைப் பாடலில், ஓரடியில் 'குன்றுழை நண்ணிய சீறூர்' (அகம். 152:2) என்று திணைக்குத்தக ஊர் சுட்டப்படுகிறது. தலைவியின் கூந்தலுக்கும் தோளுக்கும் விரிவாக வரலாற்று உவமை சொல்லுவதால் பாடலில் சீறூர்ப் புனைவு ஓரடியாகிறது; அன்றி இப்பாட்டு தலைவன் பிரிவையோ உடன் போக்கையோ பாடவில்லை; அவற்றைப் பாடின் சீறூர்ப் புனைவு விரிந்திருக்கும். இப்பாட்டு இரவுக்குறியில் தலைவன் வந்து போதலைப் பேசுதலால் சீறூர் தலைவி ஊராய்ப் புனைவு பெற்றுளது. பாடுபொருளுக்குத் தக்கவாறு ஊர்ப் புனைவுகளைப் படைப்பாளிகள் படைப்பர். படைப்பாளிகள் தாம் அறிந்த/துய்த்த நிலத்தியலையோ இயற்கையையோ தம்படைப்புகளில் சொல்லோவியமாக வடித்திலர்; பாடுபொருளுக்கு எத்தகைய புனைவு தேவையோ அதனையே படைப்பாளிகள் தங்கள் படைப்பில் வடித்தனர்.

தலைவியைக் கண்ட ஊர்

பாங்கற் கூட்டத்தில், தலைவன் தலைவியைக் கண்ட இடத்தைக் கூறும்போது ஊரைப் புனைய வேண்டிய வாய்ப்பும் சூழலும் அமைகின்றன. ஆனால் சங்க இலக்கியத்தில் பாங்கற் கூட்டத்தில், தலைவன் தலைவியைப் பெற்றதாகப் பாடிய பாடல்கள் மிகச் சிலவேயாம். பாங்கற் கூட்டத்தில் கொட்டம் பலவனார் (நற். 95)

தலைவன் தான் தலைவியைக் கண்ட இடத்தைப் பாங்கனிடம் சொல்லுவதாகப் பாடிப்போந்தார். இப் பாடலில் தலைவன் தலைவி இருந்த ஊரைச் சொல்லிப் புனைகிறான். ஆனால் ஊர்ப் பெயரில்லை; ஊர் விரிவாகப் புனையப்பெறுகிறது.

கழைபாடு	இரங்கப்	பல்லியம்	கறங்க
ஆடுமகள்	நடந்த	கொடும்புரி	நோன்கயிற்று
அதவத்	தீங்கனி	அன்ன	செம்முகத்
துய்த்தலை	மந்தி	வன்பறழ்	தூங்கக்
கழைக்கண்	இரும்பொறை	ஏறி	விசைத்தெழுந்து
குறக்குறு	மாக்கள்	தாளங்	கொட்டுமக்
குன்றகத்	ததுவே	கொழுமிளைச்	சீறூர்

(நற்.95 : 1-7)

பாங்கன் தலைவியை அவளிருக்கும் ஊர் சென்று கண்டு வர வேண்டும். அவன் சென்று கண்டு வர வேண்டுமாயின் ஊர் அடையாளங்காணுமாறு சொல்லப்படல் வேண்டும். அப்போது தான் பாங்கனுக்குத் தலைவி இருக்கும் ஊர் தெரியும். ஊர்ப் பெயரைக் கூறின் ஊரைக் காட்டும் புனைவு வேண்டியதில்லை. அகப் பாடலில் தலைவன் பெயரையோ அவன் ஊர்ப் பெயரையோ தலைவி பெயரையோ அவள் ஊர்ப் பெயரையோ சுட்டிப் பாடினால் அகப் பெருட் குற்றம் ஏற்படும்.

குழலிசைக்கப் பல்லியம் ஒலிக்க ஆடல்பயிலும் கழைக் கூத்தி நோன் புரிக் கயிற்றில் நடந்தாள். அதனைக் கண்ட சிவந்த முகத்தையுடைய பெண் குரங்கு, வலிய குட்டி தன்னைப் பற்றிக் கொண்டிருக்க ஆடியது. அதனைக் கண்ட குறச் சிறுவர்கள் மலைப் பாறை மேலேறி ஆரவாரித் தெழுந்து தாளமிட்டனார். அவ்வூர் வளமான காவற் காட்டையுடைய சீறூர். அங்குத்தான் தலைவி வாழுகின்றாள்.

தான் கண்ட தலைவியைத் தனக்காகப் பாங்கனும் கண்டு வருமாறு ஊரைத் தலைவன் கூறுகின்றான். கழைக் கூத்தியர் ஆடுவது ஊரைக் காண்டற்குரிய

அடையாளப் புனைவு. ஊர் குன்றிலுள்ளது. 'கொழுமிளைச் சீறூர்' என்பது பிற ஊர்களிலிருந்து தலைவி ஊரைக் காட்டும் அடையாளம். இதனால் தலைவி ஊரை - இருக்குமிடத்தைப் - பாங்கன் அறிய முடியும். ஊரைப் புனைய இடந்தலைப் பாடு நல்ல வாய்ப்பான களமாகும். ஆதலின் சங்கப் புலவர் ஊரைப் புணர்ச்சி என்னும் உரிப் பொருளுக்குத் தக்கவாறு மலைநாட்டு ஊராகக் கொட்டம் பலவனார் புனைகின்றார்.[14] பெரிதும் பாலைப் பாடல்களில் பயிலும் சீறூர் என்னும் தொகைச் சொல், இங்குக் குறிஞ்சித் திணையைப் புனைவதாக அமைகிறது.

முல்லை நிலச் சீறூர்

முல்லையைச் சார்ந்தும் சீறூர்ப் புனைவு அமைந்திருக்கிறது. வினை முற்றி மீளும் தலைவன் சீறூரில் தங்கி மனை நோக்கி வருகின்றான். ஒக்கூர் மாசாத்தியார், முல்லைத் திணையில் சீறூரைச் சுட்டுகிறார். சீறூர் புறவைச் சார்ந்தது.

முயற்பறழ் உகளும் முல்லையம் புறவிற்
கவைக்கதிர் வரகின் சீறூர்

(அகம். 384 : 5-6)

என்பன பாடலடிகள். முயற் குட்டிகள் துள்ளித் திரியும் முல்லைநிலம். அதிலுள்ள சீறூரோ கவர்த்த வரகங்கதிரினைக் கொண்டது. இது முல்லைச் சீறூர். உழையர் கூற்றான இப்பாட்டில், புனைவுப் பகுதி தலைவன் கூற்றாக எடுத்துக் கோளாக வருகிறது. வினை முற்றிய தலைமகன் தான் வந்த வழியில் கண்ட காட்சியை இவ்வடிகள் புனைகின்றன.

மதுரை மருதனிள நாகனார், முல்லைத் திணையில் தோழி தலைவனுக்குக் கூறும் பாடலில் தலைமகன் தலைவியை அடைதற்கு ஏற்ப முல்லை நிலம் 'இன வண்டார்க்கும் தண்ணறும் புறவு' (அகம்.104:2) எனப் பெறுகிறது. மருதனிள நாகனார், தலைமகன் நான்கு குதிரைகள் பூட்டிய தேர்க்கொடிஞ்சி பொலிய வருகின்றான், அவன் தேரில் வரும்போது சீறூர் பலவற்றைக் கடந்து வருகின்றான் என்பர். அப்போது ஊர்ப்புனைவு விரிவாக இடம் பெறுகிறது.

"புதல்களிற் படர்ந்த பூவையுடைய அவரைக் கொடியிலுள்ள பொய்த் தோல் போன்ற உள்ளீடில்லாத வயிற்றினவும் மயங்கிக் கிடந்தாலொத்த தாழ்ந்து தொங்கும் பெரிய செவியினவும் ஆகிய வெள்ளாட்டின் வெள்ளிய குட்டி புற்கென்ற தலையினையுடைய சிறுவர்களோடு குதித்துச் சென்று மன்றின் கண்ணே கவையாய இலையினையுடைய ஆத்தியின் அழகிய தளிரைக் கடிக்கும் சிறிய ஊர்கள் பல பின்னே ஒழிந்திட வந்து".[15] என்று சீறூரை மருனிள நாகனார் சுட்டி விளக்குகிறார். முல்லைக்குத் தக்கவாறு அவரைக் கொடி, வெள்ளாட்டுக்குட்டி, சிறுவர், ஆத்தித்தளிர் ஆகியன பேசப்படுகின்றன. சங்கப் புலவரின் இயல்புப் புனைவுத் தன்மை இவருடைய புனைவில் காணப்படுகிறது. சீறூரில் இரவு தங்குவதாகப் பாடும் மரபு இவர் பாடலில் இல்லை. தலைவன் நான்கு குதிரைகள் பூட்டிய தேரில் வருவதால் சீறூரில் இரவு தங்காமல் மாலையிலேயே தன்னூருக்கு (தலைவி இருக்கும் ஊருக்கு) வந்துவிடுகின்றான். ஆயினும் புனைவு ஏனையப் பாடல்களில் அமையுமாறே விளங்குகிறது.

நெய்தற்சீறூர்

'சீறூர்' என்று ஊரைக் குறிப்பிட்டுப் புனைவமையப் பாடிய நெய்தற் பாடல்கள் மூன்றுள்ளன. (அகம் 160 நற் 135, 392). இவை முதற்பொருளால் நெய்தலாகின்றன. 'அரவச்சீறூர்' என்றும் 'அங்குடிச் சீறூர்' என்றும் 'உழை கண்சீறூர்' என்றும் ஊர்கள் பாடுபொருளுக்குத் தக்கவாறு அடை பெற்றமைகின்றன.

குமுழி ஞாழலார் நப்பசலையார், நெய்தல் திணையில் தலைவன் வரைவு மலிந்ததைத் தோழி கூறுவதாகப் பாடுகிறார். தலைவன் தன்னுடைய கானலிலிருந்து தலைவி வாழுகின்ற அரவச் சீறூருக்கு வருகின்றான். பெண் கேட்டுத் தலைவன் வருதலை

"............ திண்டேர் கரவாது
ஒல்லென வொலிக்கும் இளையரொடு வல்வாய்
அரவச் சீறூர் காண"

(அகம். 160 : 15-17)

என்று குறிப்பர் புலவர். களவொழுக்கமானால் தேரைக் கரந்து தலைவன் வருவான். பெண் கேட்க வருகின்றானாதலின் தேர் வருகையை மறைக்காது ஆரவார மிக்க இளையரொடு அலர் எழுந்த சீறூர்க்கு வருகின்றான். ஊரில் ஆரவாரம் மிக்கதாய்ப் புலவன் புனைகின்றான். கொடி, செடி, உயிரினப் புனைவுகள் தலைவன் நிலப்புனைவில் அமைந்து விடுவதால், தலைவி ஊர்ப் புனைவில் இயற்கைப் புனைவு தவிர்க்கப்பட்டிருக்கிறது.[16] தலைவன் உற்றாரறிய ஊரார் அறியப் பெண் கேட்டு வருதலின் ஆரவாரமிக்க ஊராகச் சீறூரைப் புனைகின்றார் புலவர். அதற்கியைய 'அரவச்சீறூர்' என்று ஊர் அடைபெற்றுப் பாடுபொருளுக்குத்தக விளங்குகிறது.

தோழி, 'தலைவிக்கும் தனக்கும் இனிமையாக இருந்த ஊர், தலைவனுடன் உறவு ஏற்பட்டபின் - அவன் பிரிவால் - இன்னாதாயிற்று' என்று இயம்புகிறாள். இந்த ஊரைக் கதப்பிள்ளையார், "தொங்குகின்ற ஓலையையும் நீண்ட மடலையுமுடைய பனையின் கரிய அடி மரம் புதைந்திட மணல் நிறைந்த முன்றில்; அங்கிருந்த அளவிலாத உணவுப் பொருள்களை வருகின்ற விருந்தினர்க்குப் பகுத்துக் கொடுக்கும் பண்புக்குடி வாழ்க்கையுடையாராக இருக்கின்ற அழகிய குடியிருப்பையுடைய சீறூர்" (நற் 135) என்று புனைகின்றார். இது பாட்டின் முதற்பகுதி. தலைவனுடன் ஏற்பட்ட உறவைக் கூறி 'முழங்கு திரைப் புது மணல் அழுந்த' என்று கடற்கரை மணலை ஆசிரியர் புனைகின்றார். புலவர், நெய்தல் திணையாகப்பாடுகிறார். நெய்தல் என்று திணையை வரையறுத்துக் கொண்டதற்குத் தக ஊர்ப் புனைவு பனை மரங்களைப் பற்றியதாகவும் கடற்கரை மணல் நிறைந்ததாகவும் வடிவம் பெற்றது.

மதுரை மருதனிளநாகனார், தலைவி (திருமணத்துக்கு முன்பு வாழ்ந்த) ஊரை நெய்தல் முதற்பொருளைக் கொண்டு பாடுகிறார். 'கொடிய சுறா மீனைப் பிடிக்கின்ற முயற்சியுடைய தந்தை', நீர்க் காக்கைகள் ஒலிக்கின்ற பெரிய கடலில் வேட்டைக்குச் செல்லும் போது சிறுவர்களை உடன் கொண்டு போகாது விட்டுவிட்டுப் போயினன். அதனால் மனையிலிருந்தபடி தந்தையுடன் செல்ல

விழைந்து புன்தலைச் சிறுவர் அழுது நின்றனர். அவர்கள், விரைவாக முயன்று பனை நுங்கைப் பெற்று மகிழ்வர். இத்தகைய பனை ஓலை வேலி சூழ்ந்த அகன்ற இடத்தையுடைய சிறிய ஊரிலுள்ள நன்மனை' (நற். 392 : 1-7). இவ்வணம் கடற்கரை ஊரை மருதனிள நாகனார் சித்தரிப்பர். கடல் வாழ்க்கையையும் கடற்கரை வாழ்க்கையையும் இணைத்துப் புனைவு விளங்குகிறது.

இம்மூன்று பாடல்களிலும் சீறூர் என்று தலைவியின் ஊர் புனயப்படுகிறது. முதற்பொருளால் புனைவு நெய்தலாகத் திகழ்கின்றது.

சீறூர்ப் புனைவு

ஊர்ப் புனைவில் சங்கப் புலவர்கள் பல்வேறு அடைகளைப் பெய்து ஊரின் இயல்பையும் அமைப்பையும் சுட்டுகின்றனர். சீறூர் என்ற அடைச்சொல், சங்க நூல்களில் அகப்பொருள், புறப்பொருள் ஆகிய இரண்டு பொருளிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அகப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டவாறே இத்தொடரும் புறப்பாடல்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சீறூரின் இயல்பைப் புனைவதும் அதன் வருவாய் இல்லாத தன்மையை உணர்த்துவதும் அங்கு வாழ்வோரின் செயல்களைப் பாடுவதும் தாம் இந்தப் புனைவுகளில் காணப்படுகின்றன.

உடைமையாளனூர்ப் புனைவு

உடைமையாளருடன் தொடப்புபடுத்தி ஊர்களைச் சங்க இலக்கியத்தில் கூறுவது மரபாகும். சீறூர் என்ற சொல் புறநானூற்றிலும் பயிலுகிறது. பேகனைப் பாடுகின்ற கபிலர், அவன் மனைவி கண்ணகி இருந்த சீறூரில் வந்து தங்கியதாகப் பாடுகிறார்.

............ நெடுநற்
சுரனுழந்து வருந்திய வொக்கல் பசித்தெனக்
குணில்பாய் முரசி னிரங்கு மருவி

நளியிருஞ் சிலம்பிற் சீறூ ராங்கண்
வாயிற் றோன்றி வாழ்த்தி நின்று

(புறம். 143 : 7-11)

என்று கண்ணகியிருந்த ஊரைச் சுரத்திடை அமைந்த ஊராகப் புலவர் பாடுகின்றார். சுரத்திடையே அமையும் ஊராகச் சீறூரைப் பாடுவது அகப்பொருள் மரபு. பேகனைப் பிரிந்து கண்ணகியிருக்கின்றாள். பெயர் தெரியாவிடின் இப்பாட்டு மருதமாய்க் கண்டோர் கூற்றாய் அகப் பொருளாகிவிடும். பேகன், கண்ணகி என்று பெயர் தெரிந்தமையான் இப்பாட்டு, புறப்பாடலாய்க் கோக்கப் பெற்றது. அகப் பொருளிலாட்சி பெறுமாறு 'சீறூர்' என்பதும் புறநானூற்றில் ஆளப் பட்டிருக்கிறது. ஊர் 'அருவியொலிக்கும் சாரலையுடைய சீறூர்' என்பது ஓரடியான் அமைந்த சுருங்கிய புனைவு.

பிட்டங் கொற்றனைப் பாடுகின்ற உறையூர் மருத்துவன் தாமோதரனார், சீறூர் என்ற தொடரைப் பயன்படுத்தியுள்ளார். பிட்டங் கொற்றன் நாட்டைப் பாடும் ஆசிரியர் அவனுடைய ஊரையும் உரைக்கின்றார். 'மரையாவால் பிரித்துண்ணப்பட்ட நெல்லியாகிய வேலியையுடையதும் விதைகளை மென்று தள்ளிய பரலுடைத்தாகிய முற்றத்தினையுடையதுமாகிய அங்குடிச்சீறூர். அங்குப் பகலெல்லாம் வேட்டையாடித் திரிந்த கல்வியில்லாத காட்சியையுடைய வில்லாகிய ஏராலுழுதுண்பர் நடுவே, இழிபிறப்பாளன், தன் வலியகை சிவப்ப முடுக்கிக் கொட்டும் வலிய கண்ணையுடைய அச்சத்தைச் செய்யும் துடியானது புலி கிடக்கும் நெடிய மலையின் கண் பேராந்தையோடு கூடியொலிக்கும். இத்தகைய மலை பொருந்திய மலை நாடன்' (புறம். 170:1-8).

பிட்டங் கொற்றனுடைய குதிரை மலையிலுள்ள ஊரைச் 'சீறூர்' என்று கூறித் தாமோதரனார் புனைகின்றார். ஊர்ப் பெயரையோ மலைப் பெயரையோ நாட்டுப் பெயரையோ புலவர் கூறிலர். இங்கு ஊரைப் பற்றிய புனைவு அமைந்திருக்கிறது. பெயர் சுட்டிப் பாடத் தக்கப் புறப்பாடலில் கூடப் பெயர்

சுட்டப்படாது 'சீறூர்' என்று ஊர் சுட்டிப் புனையப்பட்டிருக்கிறது. மரையாவும் நெல்லியும் ஆறலை கள்வரும் துடி எழுப்புவோரும் குடிஞையும் விளங்கிடப் பாலைநிலம் போலச் சீறூர் புனையப்படுகின்றது. அகப் பாடல்களில் 'சீறூர்' பாலைத் திணை ஊர்களாகப் புனையப்பட்டதுபோலப் புறநானூற்றிலும் புனையப்பட்டிருக்கிறது.

கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார், சோழன் குராப் பள்ளித்துஞ்சிய பெருந்திருமா வளவனைக் கண்டு பரிசில் பெறச் சென்றார். அக்காலை அவ்வேந்தன் செல்வச் செருக்கால் புலவரைப் போற்றாதும் கொடுக்கவிழைந்த பரிசைக் கொடுக்காதும் காலம் நீட்டித்தான். அப்போது அவன்பால் 'பாடறிந் தொழுகும் பண்பில்லா வேந்தர் எத்துணைப் பெரியராயினும் போற்றேம் என்றும் 'எம் பால் வியந்து பாராட்டப் பெறுபவர் சீறூர் மன்னராயினும் பாடறிந்தொழுகும் பண்புடையாரே யாவர்' என்றும் அவனைச் சீறூர் வேந்தரொடு ஒப்பிட்டுரைத்தார். இச்சூழலில் சீறூர்ப் புனைவு அமைகிறது

இடுமுட் படப்பை மறிமேய்ந் தொழிந்த
குறுநறு முஞ்ஞை கொழுங்கட் குற்றடகு
புன்புல வரகின் சொன்றியொடு பெறூஉம்
சீறூர் மன்ன ராயினு மெம்வயிற்
பாடறிந் தொழுகும் பண்பி னாரே

(புறம். 197 : 10-14)

சீறூர் மன்னரின் வறிய நிலையை அவர்தம் உணவியல் கொண்டு புலவர் காட்டுகின்றார். இவர்கள் வறியராயினும் புலவர்பால் பண்பு பாராட்டும் பான்மையினர் என்பது புலனாகும். இப்புனைவால், சீறூர் என்பது பாலை நிலத்திடை யமைந்த ஊர் என்றும் வறுமை வளமான இடம் என்றும் தெளிவாகிறது. புறப்பாடல்களில் சீறூர், அகப்பாடல்களில் சீறூர் புனையப்படுவதிலிருந்து வேறுபடுகிறது. சீறூரில் மக்கள் என்ன என்ன வகையான உணவு பெறுவர் என்றும்

அவர் மன்னர் என்றும் ஆசிரியர் காட்டுகின்றார். இது புனைவு வேற்றுமை. இவ்வாறு உணவைப் புனையும் போக்கை, ஆற்றுப்படைகள் பின்பற்றலாயின.

வேந்தனுக்கு நற்றுணைவனாகத் திகழ்ந்த சீறூர்த் தலைவனைப் பாட வந்த ஆலத்தூர் கிழார், அவனூரைப் புறநானூற்றில் புனைகிறார். பத்துக்கு மேற்பட்ட அடிகளான் இப் புனைவு அமைந்திருக்கிறது. "வெருகின் ஆணைப் போல வெருண்ட பார்வையினையும் பெரிய தலையினையும் பறவைகளின் ஊனைத் தின்பதனால் புலால் நாற்றம் கமழும் மெல்லிய வாயினையுமுடைய வேட்டுவர்கள் விளங்கினர்; அவர்களுடைய சிறுவர்கள் ஒருவரோடு ஒருவர் கூடி, சிறிய இலைகளையுடை உடை மரத்தின் வெள்ளை நிறமான முள்ளையுடைய அம்பையுடையவர்கள்; அதனால் அவர்கள் இதனை வளாரால் செய்யப்பட்ட வில்லில் வைத்து வளைத்து வலித்துப் பருத்தியாலான வேலிக் கடியில் உறையும் காட்டெலியை வீழ்த்தற்குக் குறி பார்த்திருப்பர். அத்தகைய புன் செய்கள் சூழ்ந்துள்ள அழகிய குடிகள் வாழும் சீறூர். குமிழம் பழத்தை யுண்ணும் வெள்ளாடுகளின் பிழுக்கைகள் கிடக்கின்ற பந்தரின் கீழ் இடையன் கொளுத்திய சிறிய சுடரையுடைய விளக்கொளியில், பாணரொடிருந்த நாணுடை நெடுந்தகை, வேந்தனுக்கு நெஞ்சறி துணைவனாவான்."[17]

பாலை நிலத்தமைந்த சீறூரை ஆலத்தூர் கிழார் அங்கு வாழுகின்ற வேட்டுவர் செயல்களையும் அவர்தம் சிறுவர் செயல்களையும் சுட்டிப்பாடுகிறார். இக்காலத்திய இயற்கைப் புனைவினைப் போல மரஞ்செடி கொடிகளையும் ஞாயிறு திங்களின் புனைவுகளையும் இவர் புனைந்து காட்டிலர். இயல்பான சீறூர்த் தொழில் இவண் புனைவு பெற்றுச் சிறக்கின்றது.

வேலிச்சீறூர்ப் புனைவு

அள்ளூர் நன்முல்லையார் தன்புறப்பாட்டில்,

களிறுபொரக் கலங்கு கழன்முள் வேலி
அரிதுண் கூவ லங்குடிச் சீறூர் (புறம் 306 : 1-2)

என்றுரைப்பர். காடு சார்ந்த நாட்டு மறமகள் ஒருத்தி தன் குடியினன் நடுகலை நாடோறும் தவறாமல் வழிபட்டு வந்தாள். அவள் இருந்த ஊரை அள்ளூர் நன்முல்லையார் புனைகின்றார். 'களிறு படிந்து உழக்கக் கலங்கிச் சேறாகும் உண்ணும் நீர் அரிதாகிய நீர்நிலையும் முள்ளையுடைய கழற் கொடியாகியாலாகிய வேலி சூழ்ந்த அழகிய கொடிகளையுடைய சிறியவூர்'. களிறு, அக்களிறு நீர் நிலையைக் கலக்கக் குடிநீர் இன்மை, கழன் முள்வேலி ஆகியன ஊரின் பகுதிகளாகச் சொல்லப்படுகின்றன. பாலையைச் சார்ந்த ஊரே சிற்றூர் என்று இங்குப் புனையப்படுகிறது. சிற்றூர்ப் புனைவில் வேலி அமைதல் சுட்டப்படுதல் நோக்கத் தக்கது.

பொன்முடியார் என்ற பெண்பாற்புலவர் பேரரசன், சிற்றரசன் ஆகிய இருவர் குதிரையின் சிறப்பையும் பாடுகின்றார். சிற்றரசன் சிறப்பைப் பாடுமவர் பாலைநிலச் சார்பினன் ஆதலின் அவனுடைய சீறூரைப் 'பருத்தி வேலிச் சீறூர்' (புறம்.299:1) என்பர். சீறூருக்கு வேலி அமைந்த சிறப்பை வைத்துப் புலவர்கள் ஊரைப் பாடுகின்றனர்.

மரையாத்துஞ்சும் சீறூர்

புறநானூற்றுப் பாட்டில் சீறூர் புனைவுபெறுகிறது. பாலைப் புனைவில் மருத எருமைக் கொம்பு உவமையாகிறது.

பெருநீர் மேவற் றண்ணடை யெருமை
இருமருப் புறழு நெடுமா ணெற்றின்
பைம்பய றுதிர்த்த கோதின் கோலணைக்
கன்றுடை மரையாத் துஞ்சுஞ் சீறூர் (புறம்.297:1-4)

சீறூரில் விளைகின்ற நெடிய முற்றிய நெற்றுகளையுடைய பசிய பயற்றின் நீக்கப்பட்ட கோதுகள், நீர்மிக்க மருத நிலத்தூர்களில் வாழும் எருமையின் பெரிய கொம்பைப் போன்றன. அந்தப் பயத்தங் கோதுக் குவியலைப்படுக்கையாகக் கொண்டு கன்றுடைய மரையா துயிலும் சிறிய ஊர். சீறூர் பாலை நிலத்தூர் என்பதால் பாடலில் புன் செய்ப் பயிர் விளைதல் பேசப்படுகிறது. காட்டுப்

பசுவாகிய மரையாவும் சுட்டப்படுகிறது. இவ்வண்ணம் பாலை நிலத்தமையும் ஊர் இயல்பாகப் புனையப்பெறுகிறது.

வன்புலச் சீறூர்

ஐயூர் முடவனார் தலைவனுடைய குடிகாக்கும் பண்பையும் வீரத்தையும் புகழ வந்தவர் தலைவன் தன் ஊரில் குடிகளுள் குடியாய் இருப்பதைப் பாடுகின்றார்.

நடுகற் பிறங்கிய வுவலிடு பறந்தலைப்
புன்காழ் நெல்லி வன்புலச் சீறூர்

(புறம் 314 : 2-3)

என்பது பாடற்பகுதி. ஊரின் இயற்கையைப் பறந்தலை, நெல்லி மரம் ஆகியன கொண்டும் வன்புலம் (பாலை) என்றும் காட்டுகிறார் ஆசிரியர். புறப்பாட்டாயினும் புலவர்கள் இவற்றிலும் பாட்டுடைத் தலைவன் பெயரையோ பிறர் பெயரையோ சுட்டிக் கூறவில்லை. அகப்பாடல் போலவே இந்தப் பாடல்களும் பெயர் சுட்டாப் பாடல்களாகின்றன. 'வன்புலச் சீறூர்' என்பதன் மூலம் சீறூர் என்பது பாலைத் திணை ஊராக விளங்குகின்றது.

கரம்பைச் சீறூர்

அரிசில் கிழார் தான் பாடிய புறநானூற்றுப் பாட்டில், தலைவன் களத்தில் குற்றுயிராய்க் கிடக்கும்போது பலருக்கும் கொடை வழங்குகின்றான். அங்கிருந்தோர்க் கெல்லாம் 'பிணங்கு கதிர் அலமரும் கழனித் தண்ணடையை' வழங்கிவிட்டான். இறுதியாக வந்த 'இலம்பாடு ஒக்கல் தலைவ'னுக்கு, மருதநிலத்தூர்கள் அனைத்தும் கொடுக்கப்பட்டுவிட்டமையால், எஞ்சிய பாலை நிலத்தூரே கொடுக்கப்பெறுகிறது. அதனை அரிசில் கிழார்,

.......... பிணங்குகதிர்
அலமருங் கழனித் தண்ணடை யொழிய

இலம்பா டொக்கற் றலைவற்கோர்
கரம்பைச் சீறூர் நல்கின னெனவே

(புறம்.285:14-17)

என்பர். கரம்பைச் சீறூர் என்பது பாலை நிலத்தூராகும். சீறூரைப் படைப்பாளி விரிவாகப் புனைந்திலர். வெறி பாடிய காமக் கண்ணியார் புன்புலம் சூழ்ந்த சீறூர்த் தலைவன் வீரச் சிறப்பைப் புனைவுழி அவனுடைய ஊரை

விலங்கிழை மகளிர் சூந்தற் கொண்ட
நரந்தப் பல்காழ்க் கோதை சுற்றிய
ஐதமை பாணி வணர்கோட்டுச் சீறியாழ்க்
கைவார் நரம்பின் பாணர்க் கோக்கிய
நிரம்பா வியல்பிற் கரம்பைச் சீறூர்

(அகம்.302:3-7)

என்பர். 'குறுகிய வழிகளையுடைய கரம்பைகள் நிறைந்த ஊர், சீறூர். இத்தகைய பாலை நிலத்து ஊர்களைப் பல பாணர்க்கும் கொடுத்துவிட்டான் என்று குறிப்பிடுகிறார். வேறு விரிவாகப் புலவர் ஊரை விவரிக்கவில்லை.

வறுமைப் புனைவு

சீறூர் மன்னனையே மதுரைக் கணக்காயனார் பெயர் சுட்டாமல் பாடுகின்றார்; பாடலில் மன்னன் பெயருமில்லை; ஊர்ப் பெயருமில்லை. ஊரின் வருவாய் இன்மை சுட்டி ஊர் உணர்த்தப்படுகிறது. 'புரவிற் காற்றாச் சீறூர்' என்பது (புறம். 330 : 6) புனைவடி. பாடலில் மக்கள் வாழ்க்கையையோ இயற்கையையோ புலவர் பாடவில்லை; ஆனால் ஊர் பாலை நிலத்தூர் என்பதைப் பாட்டுக்கு முன்னமையும் தொடர் காட்டுகிறது. உறையூர் முதுகூத்தனார் பாலை நிலத்துச் சீறூரை,

கல்லறுத் தியற்றிய வல்லுவர்க் கூவல்
வில்லேர் வாழ்க்கைச் சீறூர் (புறம்.331:1-2)

என்று புனைவர். பாலை நிலம் என்பதற்குத்தக ஊர்வளம் பாடுகிறார். பாறையில் தோண்டிய உப்புநீர்க் கிணறு என்பது புனைவு.

சங்கப் புலவர்கள் இயற்கையைச் சார்ந்து உண்மையைப் பாடியவர்கள்; இன்மையைத் தன் மனத்தால் கற்பனை செய்து அளவுக்குமிகப் பாடியவரல்லர். பாலை நிலம் வறண்ட நிலம்; புல்லும் பூண்டும் இல்லாதது; வருவாய் அற்ற நிலம்; ஆகையால் மரம் செழித்திருத்தலையோ பறவை விலங்குகளின் வாழக்கையையோ சீறூர்ப் புனைவில் புலவர்க்குப் பாட இயலாமல் போய்விட்டது.

புறநானூற்றில் மூதின் முல்லைத் துறையில் அமைந்த பாட்டின், ஆசிரியர் பெயரோ பாடியவர் பெயரோ கிடைத்தில. பாடலும் சிதைந்துள்ளது. இப்பாட்டில், "புன்புலச் சீறூர் நெல்விளை யாதே"(புறம். 328 : 2) என்றும்

> தாருளிமுத னீடிய சிறுநறு முஞ்னஞு
> முயல்வந்து கறிக்கு முன்றிற்
> சீறூர் மன்னனைப் பாடினை செலினே
>
> (புறம். 328 : 14-16)

என்றும் சீறூரைப் பாடுகின்றார். பாலைச் சார்புடைய ஊரையே சங்கப் புலவர்கள் சீறூர் என்று குறிப்பர் என்பது 'புன்புலச் சீறூர்' என்ற தொடராலும் அறிய முடிகிறது. அதனை வலியுறுத்துமாறு தான் குறிப்புகளும் வருகின்றன. முல்லை நிலத்தைச் சார்ந்த சீறூர்களில் நெற்பயிர் விளையாது; வரகும் தினையும் விளையும்; அவற்றையெல்லாம் இரவலர்க்குக் கொடுத்துவிட்டனர். தயிர், தொடரிப் பழம், கள், வாடூன் கொழுங்குறை, அரிசியுடன் நெய் கலந்து சமைத்த சோறு ஆகியன அங்கு உணவாகப் பாணர்க்கு வழங்கப் பெறுகின்றன. பாணாற்றுப் படைகளில் பாணர்கள் தங்குமிடங்களில் கிடைக்கும் உணவு வகைகளைச் சொல்லிப் பாடுவது தமிழ் மரபு. அந்தப் போக்கின் தொடக்கமாகப் புறநானூற்றில் வரும் இந்தக் குறிப்புகள் அமைகின்றன.

ஊரைப் புனைந்த சங்கப் புலவர்கள் அதன் வளர்ச்சியாக ஊரில் கிட்டுகின்ற உணவுகளைச் சுட்டிப் புனையும் வளர்ச்சி தோன்றியிருக்கிறது. புனைவு மரபு மாறுவதையே இஃதுணர்த்துகின்றது.

சீறூர்த் தலைவனைப் பாடவந்த மதுரை அறுவை வாணிகன் இள வேட்டனார், ஊரைப் புனைந்து அந்த ஊரின் தலைவனாக அவனைப் பாடுகின்றார்; ஆனால் அவனுடைய பெயரோ ஊரோ நாடோ பாடலில் கூறப்படவில்லை. அகப்பாடல் போலப் பெயர் (ஊர், புரவலன்) சுட்டாத பாடலாக இப்பாட்டு (புறம் 329) அமைந்திருக்கிறது. பாடலின் ஆறு அடிகளில் ஊர்ப் புனைவும் இறுதி இரண்டடிகளில் தலைவன் பண்பும் இடம் பெறுகின்றன.

'மனைகளில் செய்யப்படும் கள்ளையுடைய சில்குடிகள் வாழும் சீறூர். அவ்வூர்க்குப் பக்கத்தே நடுகல் நடப்பட்டுள்ளது. அந்நடுகலுக்கு விடியற் காலத்தில் பலியை யூட்டி நன்னீராட்டி நெய் விளக்கேற்றுகின்றனர்; அதனால் மேகம் போலப் புகை எழுந்து தெருவில் மணம் வீசுகின்றது; இத்தகைய அரிய முதன்மையான இடத்தையுடையதாயினும் வரி பொருந்திய கழுத்தையுடைய பாம்பு தாங்கும் புற்றைப் போன்றது, உரை சால் நெடுந்தகை காக்கும் ஊர்'[18] சீறூரின் மறுகில் நடுகலுக்கு வழிபாடு செய்வதால் எழும்புகை புனையப் பெறுகிறது. இப்புனைவில் சீறூர் பாலையைச் சார்ந்த ஊராகப் புனையப்படுகிறது.

வீரத்துக்கு முதன்மை கொடுத்துச் சீறூரில் நிகழும் நடுகல் வழிபாட்டை ஊரின் புனைவாக இளவேட்டனார் பாடுகின்றார். ஊரின் உயிரினமோ பயிரினமோ பாடலில் பாடப்படவில்லை. ஊர்ப் புனைவு அங்கு வாழ் மக்களின் செயற்பாட்டுப் புனைவாக விளங்குகிறது. சீறூர் பாலை நிலத்தூராதலின் இள வேட்டனார் இயற்கைப் பயிரினங்களை மறுகைப் புனைவதிலும் ஊரைப் புனைவதிலும் கையாளவில்லை. சங்கப் புலவர்களின் ஊர்ப் புனைவு, இயற்கைப் புனைவு பாடுபொருளுக்குத் தக்கவாறே அமையும் தன்மையது என்பதை இப்பாட்டுணர்த்துகின்றது.

புனைவின் தனித்தன்மை

ஆலங்குடிவங்கனார் தன்னுடைய பாடலில் ஒரு தலைவனுடைய மனைவி பேசுவதாகப் பாடுகிறார். அப்போது ஆசிரியர் ஊரையும் தலைவனையும் சுட்ட **'சீறூர் மன்னன்'** என்பர்.

கொடுங்கோட்	டாமா	ணடுங்குதலைக்	குழவி
புன்றலைச்	சிறாஅர்	கன்றெனப்	பூட்டும்
சீறூர்	மன்ன	னெருநை	ஞாங்கர்
வேந்துவிடு	தொழிலொடு	சென்றனன்	

(புறம்.319 : 10-14)

இஃது ஊர்ப் புனைவு. வளைந்த கொம்பை உடைய ஆமானுக்கு அசைகின்ற தலையையுடைய இளங்கன்றிருந்தது. அதனைப் புன்றலைச் சிறார் தம்முடைய சிறு தேர்க்குச் சேங்கன்று எனப்பூட்டி விளையாடும் சிறிய ஊர்; அவ்வூர்க்குரிய தலைவன், நேற்று மன்னன் ஆணையால் போருக்குப் போனான். இதுதான் மன்னன் ஊர்ப்புனைவு. இளஞ்சிறுவர் கன்றுகளை வண்டியில் பூட்டி விளையாடுவதை ஆசிரியர் நன்கு புனைகின்றார்.

அச்சீறூரில் ஒரு வீட்டை ஆசிரியர் புனைகின்றார். செம்மண் நிலத்தில் தோண்டிய கிணற்றுநீரை முகந்து சிறிய வீட்டின் முற்றத்தில் முதுவாய்ச் சாடியின் அடிப்பகுதியில் நீர் சிறிது குற்றமில்லாமல் உள்ளது. அங்குப் படலை முன்றில் சிறுதினை உணங்கலைப் புறாக்களும் இதல் பறவைகளும் முற்றவும் உண்க என்று தெளித்துப் (அவை உண்ண வரும்போது) பிடித்துச் சமைத்தற்கு ஞாயிறு மறைந்து இரவாயிற்று; அதனால் உள்ளது முயலினது சுட்டகறியே. அதனை உண்ணத் தருவார்கள். இவ்வாறு ஊரிலுள்ள வீட்டைப் புனைகின்றார், புலவர்.

சங்கப் புலவர்கள் ஊரைப் புனைந்து ஊரிலுள்ள வீட்டையும் இப்பாட்டில் புனைந்திருக்கிறார். ஊரைப் புனையும் போது ஊரிலுள்ள வீட்டையும் புனைந்து பாடுகின்ற போக்கை இப்புற நானூற்றுப் பாடலிலேயே காண முடிகின்றது. சங்கப்

பாடல்கள் ஊரையே புனையுமியல்பின; ஆனால் இப்பாட்டில் ஆலங்குடி வங்கனார் மனையும் புனைந்திருக்கிறார். பாணாற்றுப் படையில் பாணனை விருந்தோம்புபவர் என்ன என்ன உணவு தருவர் என்று இயம்புமாறு[19] இப்பகுதி விளங்குகிறது.

புனைவிலாச் சுட்டு

சீறூர் மன்னனுக்கும் பெருவேந்தர்க்கும் இடையே நடந்த போரில், கோவூர் கிழார் சீறூர் மன்னன் வீரத்தைப் பாராட்டிப் பாடினார். அப்போரில் புலவர் இருவர் பெயரையும் சுட்டிலர். ஊரைப் புனையும் போது 'சீறூர் மன்னன்' (புறம். 308 : 4) என்று கோவூர் கிழார் புனைகுவர். போர்க் களப் புனைவாக இஃது அமைகின்றது; ஆதலான் ஊர்ப் புனைவில்லை.

நெடும் பாடலும், ஊர்ப் புனைவும்

புறப் பாடல்களில் சீறூர்ப் புனைவு புறநானூற்றுப் பாடல்களிலேயே பயிலுகின்றன. பதிற்றுப் பத்தில் இச்சொல்லாட்சியில்லை. பத்துப் பாட்டில் பெரும் பாணாற்றுப் படையில் சீறூர் புனையப் படுகிறது. இப்புனைவு விரிவான புனைவு. புறப் பாடல்களிலும் அகப் பாடல்களிலும் காண முடியாத அளவுக்குக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் புனைவு அமைந்திருக்கிறது. இவர் முல்லை நிலத்தைச் சார்த்திச் சீறூரைப் புனைகின்றார்.

"ஆடுகள் தின்னத் தழைகள் கட்டப்பட்ட குறிய காலையுடைய குடில்; அக்குடிலுக்குச் சிறிய வாயில்; அதற்குச் செறித்துக் கட்டப்பட்ட கதவு; கம்புகளால் கட்டப்பட்டு வரகுக் கற்றையால் வேயப்பட்ட காவலிடம். அங்குக் காவல் செய்வோன் தோற்பாயில் தூங்குகிறான். முற்றத்தில் குறிய முளைகளில் கிடாய்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கொடுமுகத் துருவையொடு வெள்ளாடும் கிடக்கும் கட்டுமுள்ளாலான வேலியையுடைய எருமிகுந்த ஊர்".[20] இஃது இடையர்களின் இருப்பிடத்தைப் புனைகிறது.

"விடியற் காலத்தே பறவைகள் துயில் எழும் நேரத்தே எழுந்து தன் வேலையைத் தொடங்குகின்றாள் ஆய மகள். அவள் புலியின் முழக்கம் போல மத்து ஒலிக்கக் கயிற்றை இழுத்து இழுத்து இறுக உறைந்த தயிரைக் கடைகின்றாள். அதிலிருந்து வெண்ணையை எடுத்துத் தயிர் புள்ளியாகத் தெரிந்த மோர்ப் பானையைத் தலை சுமட்டின் மீது வைத்துப் புதிய மோரை விற்கும் மாமை நிறத்தையுடைய மேனியையும் சிறுகுழை துயல் வரும் காதினையும் பணைத் தோளினையும் குறு நெறிக் கொண்ட கூந்தலினையுமுடையவள் அவ்வாய மகள்".[21] முல்லை நிலத்தில் வாழும் ஆயர் குலப் பெண்ணின் செயலை இங்குக் கடியலூர் உருத்திரங் கண்ணனனார் புனைகின்றார்.

"அவள் மோர் விற்றதனாலுண்டாகிய நெல் முதலியவற்றால் சுற்றத்தை அருத்தி எல்லாதையும் ஊட்டப்பண்ணி, நெய்க்கு மாறாகத் தங்கத்தைப் பெறாது அவ்விலைக்கு மாறாக எருமையினையும் நல்ல ஆன்களையும் அவற்றின் கன்றுகளையும் வாங்கி வருகின்ற சீழ்க்கை அடிக்கும் இடையர் குடியிருப்பில் தங்கினால் (பரிசு பெற்ற பாணன் கூறுகின்றான்) பசிய தினையாலாக்கின சிலுத்த சோற்றைப் பாலுடன் வழங்குவர்"[22] தொடர்ந்து அமையும் இப்புனைவு அவர்கள் வழங்குகின்ற உணவைப் பற்றிப் பேசுகின்றது. இதனைத் தொடர்ந்து, "செருப்பின் வடு அமைந்த கால் அடியும் கோடரித் தழும்பிலிருந்த தோளும் கையும் ஆன்பாலைத் தடவிய இடியும் பல்வகைப் பூக்களால் கட்டப்பட்ட மாலையினையும் ஒற்றை ஆடையினையுமுடைய பாற்சோற்றை உண்ணும் இடையன்"[23] என்று இடையன் தோற்றம் உவமைகளுடன் புனையப்படுகிறது.

"ஆயர்கள் கன்றுகளைப் பெரிதும் விரும்புகின்ற பசுக்கூட்டத்துடன் காட்டில் தங்கி அழகிய நுண்புகை கமழும் படி கடை கோலால் தீயையுண்டாக்கித் துளையை ஏற்படுத்திய குழலால் பாலைப் பண்ணை ஊதி யாழில் குறிஞ்சிப்பண்ணை விரலாலே தெரித்து எழுப்பி அதனை வண்டுகள் கேட்கின்ற முல்லை நிலத்தைக் கடந்து சென்று"[24] என்பர் புலவர். இது ஆனிரையோம்பும் இடையர்களின் நீர்மையைப் பற்றிப் பேசுகின்றது.

முல்லை நிலத்தையும் முல்லை நிலமக்களையும் புனைந்த உருத்திரங் கண்ணனார் அந்நிலத்திலமைந்த ஊரான சீறூரை இறுதியாகப் புனைகின்றார். ஊர் என்று சுட்டி அவர் புனைவது நோக்கற் பாலது.

..........			முள்ளுடுத்
தெழுகா	டோங்கிய	தொழுவுடை	வரைப்பிற்
பிடிக்கணத்	தன்ன	குதிருடை	முன்றிற்
களிற்றுத்தாள்	புரையுந்	திரிமரப்	பந்தர்
குறுஞ்சாட்	டுருளையொடு	கலப்பை	சார்த்தி
நெடுஞ்சுவர்	பறைந்த	புகைசூழ்	கொட்டிற்
பருவ	வானத்துப்	பாமழை	கடுப்பக்
கருவை	வேய்ந்த	கவின்குடிச்	சீறூர்

(பெரும்.184-191)

முள் நிறைந்து வளர்ந்த காடுகள் சூழ வளர்ந்த தொழுக்களையுடைய நிலத்தின் வரகு முதலியன நிறைத்து நிற்கும் குதிர்களையுடைய முன்றிலையும் வரகுதிரிகை நட்டு நிற்கும் பந்தரினையும் குறிய சகடத்தின் சக்கரத்தோடு கலப்பையையும் சார்த்தி வைக்கப்பட்டமையாலே நெடிய சுவரிடத்துத் தேய்ந்த புகை சூழ்ந்த கொட்டிலினையுமுடைய வரகுத் தாளால் வேய்ந்த அழகினையுடைய குடியிருப்பினையுடைய சீறூர். இப்பெரும்பாணாற்றுப் படை முல்லையைச் சார்ந்த ஊராகச் சீறூரைப் புனைகின்றது. புனைவுக்குப் பின், வரகுச் சோறும் அவரை விதையை விட்டுத் துழாவிய இனிய மூரலும் உணவாகக் கிடைக்கும் என்று கூறுகிறது. நெடும்பாடலாக ஆற்றுப் படை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார், முல்லையைச் சார்த்திச் சீறூரைப் புனைகின்றார். நெடும் பாடலில் சீறூர் வருவதால் சீறூரின் சுற்றுச் சூழல் விரிவாகப் புனையப்பட்டிருக்கிறது; புறப் பாடல் என்பதால் இப்புனைவில் செடியும் கொடியும் ஆகிய பயிரினமும் பிற உயிரினமும் புனையப் படவில்லை. மக்கள் வாழ்வியலைக் காட்டுகின்ற மானிடவியல் கூறுகளே ஊர்ச் செய்தியாக உரைக்கப் படுகின்றன. ஆற்றுப் படைப்பாடல்களில்' "பாட்டுடைத் தலைவனை விடக் குடிமக்கள் பேரிடம் பெற்றுள்ளனர்"[25] என்று டாக்டர் ந. செயராமன் குறிப்பர். பாடுபொருளுக்குத்

தக்கவாறு பாடலைப் பாடும்போது, படைப்பாளி ஊர்ப் புனைவை வெவ்வேறு வகையாகப் புனைகின்றான்.

அகப் பாடல்களிலும் புறப் பாடல்களிலும் சீறூர் புனையப் பெறுகிறது. அகப் பாடல் புனைவுகளைத் தழுவியே புறப்பாடல் புனைவுகளும் அமைந்திருக்கின்றன. பெரும் பாணாற்றுப் படையும் இந்த மரபு தழுவியே சீறூரைப் புனைந்தாலும் அப்புனைவுக்கு முன்னும் பின்னும் அமைவன ஊர்ப் புனைவைத் திணைப் புனைவாக மாற்றுகின்றன. இம் மூவகையான நூல்களிலும் சீறூரின் பெயர் சொல்லப்படவில்லை. என்பது நோக்கத் தக்கது. ஊர்ப் புனைவிலுண்டாகிய வளர்ச்சியைப் பெரும்பாணாற்றுப் படைகாட்டுகிறது.

இவ்வியலில் கூறப்பெற்ற ஆய்வுமுடிவுகள்

1. சங்கநூல்கள் சீறூர் என்றே குறிக்கின்றன. சிற்றூர் என்ற ஆட்சி சங்கநூல்களில் காணப்படவில்லை. தலைவனும், தலைவியும் சுரத்தைக் கடந்துபோய்ச் சீறூரில் தங்குவதாக உடன்போக்கில் புலவர்கள் பாடுகின்றனர்; இதனால் பாலைப்பாடல்களில் சீறூர்ப்புனைவு அமைகிறது. இதே போலப் புறப்பாடல்களிலும் சீறூர்ப்புனைவு காணப்படுகிறது; பதிற்றுப்பத்தில் சீறூர்ச் சுட்டு இல்லை.

2. பாலைவழிச் செல்வோர் பாதைவழியே செல்லும் போது இரவில் தங்குகின்ற ஊராகச் சீறூரைச் செப்புகின்றன. தலைவன் வினைமேற் சென்றாலும் வினைமுற்றி மீண்டாலும் தலைமகனும் தலைமகளும் உடன் போக்காகச் சென்றாலும் சீறூரில் இரவு தங்கியே செல்கின்றனர். இதனால் பாடல்களில் சீறூர் சுட்டிப் புனையப்படுகிறது.

3. பாங்கற் கூட்டத்தில் தலைவன் தலைவியைக் கண்ட இடத்தைப் புனையும் போது 'கொழுமிளைச் சீறூர்' என்று ஊரைப் புனைகின்றார், கொட்டம்பலவனார். இவ்வாறு வேறு பாடல்கள் சங்க நூல்களில் இல்லை.

4. சீறூர் வறுமை வாழுமூராகச் சங்க நூல்களில் புனையப் பெறுகின்றன. அவ் வறுமை நிலையை அங்குள்ள இயற்கைப் புனைவால் புலவர்கள் காட்டாது, உணவு நிலையைப் புனைந்து காட்டுகின்றனர்.

5. பெரும்பாணாற்றுப்படையில், சீறூர் புனையப்படுகிறது. முல்லை சார்ந்த ஊராகச் சீறூர் அமைகிறது.

சான்றெண் விளக்கம்

1. அகம்.129:6-14

2. மேலது, 171:7-15

3. மேலது, 321:1-10

4. மேலது, 209:1-7
5. மேலது, 63:4-9

6. மேலது, எண்.369:16-20

7. அகம்.107, ப.249. - ஓடையிலே நீருண்டு அதனின்றும் ஏறமாட்டாத முடம்பட்ட உரனுடைய பகட்டிற்குச் சிறார் இருப்பைப் பூவை மரத்தினின்றும் பிரித்து மறையினைக் கடித்து ஊட்டினார்போல களவொழுக்கமாகிய இன்பத்தை நுகர்ந்து, இக்களவொழுக்கத்தினின்றும் நீங்கி வரைவொடு புகமாட்டாது வருந்தும் நினக்குக் குற்றவேன் மகளாகிய யான் தலைமகளைச் சுற்றத்தினின்றும் பிரித்து நொதுமலர் வரைவினை மாற்றி உடன்போக்கிற்கு ஒருப்படுத்த என்பது.

8. அகம்.9:1-10
9. அகம். 321
10. அகம்.283: 4-8
11. மேலது, அ.எண்.9.
12. மூதாய் என்னும் இந்திர கோபப்பூச்சியை பாடல் குறிக்கிறது. இது முல்லைக்குரியது; முல்லை பாலையாவது போல மருதனிள நாகனார் பாலையை முல்லையாக்குகிறார்.
13. அகம்.368:8-15

 "உயர்வரை மருங்கிற் காந்தளஞ் சோலைக்
 குரங்கறி வாரா மரம்பயி லிறும்பிற்
 கடிசுனைத் தெளிந்த மணிமருள் தீநீர்
 பிடிபுணர் களிற்றின் எம்மொ டாடிப்
 பன்னா ளும்பர்ப் பெயர்ந்து சின்னாள்
 கழியா மையே வழிவழிப் பெருகி
 அம்பணை விளைந்த தேக்கட் டேறல்
 வண்டுபடு கண்ணியர் மகிழுஞ் சீறூர்"

14. இவர் ஒரு பாடலே பாடியவர்.

15. அகம்.104, களிற்றியானை நிரை உரை, ப.243.

16. சங்க நூல்களில் தலைவன் ஊர்; தலைவி ஊர் என்பன பாடல்களில் தனித்தனியே புனையப்பட்டிருக்கின்றன. ஒரு பாடலில் இரண்டும் புனையப்பட்டால் ஒரு புனைவிலிருந்து இன்னொரு புனைவு வேறுபட்டிருக்கிறது.

17. புறம்.324:1-8

வெருக்குவிடை	யன்ன	வெருணோக்குக்	கயந்தலைப்
புள்ளூன்	தின்ற	புலவுநூறு	கயவாய்
வெள்வாய்	வேட்டுவர்	வீழ்துணை	மகாஅர்
சிறியிலை	யுடையின்	சுரையுடை	வான்முள்
ஊக	நுண்கோற்	செறித்த	அம்பின்
வலாஅர்	வல்விற்	கருப்பை	பார்க்கும்
புன்புலந்	தழீஇய	அங்குடிச்	சீறூர்

18. புறம்.329.
19. பொ. வெ. சோமசுந்தரனார் (உஆ.1962) **பத்துப்பாட்டு** (முதற்பகுதி), பா.அடிகள் 173-177;189-195; 154-163. (கழக வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு. ப-106)
20. பெரும்பாண்.அ.எண்கள் 147 - 154.
21. மேலது, 155 - 162
22. மேலது, 163 - 168
23. மேலது, 169 - 175
24. மேலது, 176 - 184
25. நா. செயராமன், **சங்க இலக்கியத்தில் பாடாண் திணை**, (மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1975), ப.24.

இயல் ஐந்து

அம்பலூர் அலரூர்ப் புனைவுகள்

அம்பல் - அலரூர்ப் புனைவுகள்

அம்பலூர்ப் புனைவு

அகப்பொருள் இலக்கியங்கள், தலைவன் வாழுமுறைக் காட்டிலும் ~~களவில்~~ தலைவி வாழுமுறைப் புனைவதே மிகுதி. தலைவியை நாடித்தலைவன் வருபவனாதலின் இருவரும் களவொழுக்கம் மேற்கொள்ளும் நிலம் தலைவி மண்ணேயாகும்.[1] இப்புனைவுகளில் கருப்பொருளும் உரிப்பொருளும் இடம் பெறும். அகப்பொருள் கருத்தமைவில் ஊரைப் புனைதற்கு வாய்ப்பான பல களங்கள் உண்டு. தலைவன் தலைவியர் ஒருவரோடு ஒருவர் உறவாடிக் காதலித்துத் திரிதலை ஊரார்கண்டு இலை மறை காயாகப் பேசித்திரிவர்.

> சமுதாய நெறிக்கு நல்லது என்ற கருத்தால், தமிழ்ச் சான்றோர் ஊராரையும் அகத்திணையிலக்கியத்துப் போற்றிக் கொண்டனர். களவிலும் கற்பிலும் ஊராருக்கு இடனுண்டு[2]

இவ்வாறு ஊரார் இடம் பெறுகின்ற அகப்பொருட் பகுதியில் அம்பலும் அலரும் முதன்மை பெறுகின்றன. ஊராரின் பேச்சையும் செயற்பாட்டையும் சங்கப்புலவர்கள் ஊர்ப்பேச்சாகவும் செய்கையாகவும் புனைந்தனர். அத்தகைய புனைவுக்கு அடிப்படையாக அம்பல், அலர் என்பன ஊர்க்கு அடையாயின. இப்புனைவு சுருங்கிய சொற்களால் கருத்தாழம் மிக்கதாய் அமைந்தது. இவ்வியல் அத்தொடர்களின் புனைவு நீர்மையை ஆராய்கிறது.

தலைவிக்கும் தலைவனுக்குமுள்ள காதல் தொடர்பை ஊரார் அறிந்து புறங்கூறும் மொழியே அம்பலாகும்; அலருக்கு முன் அரும்பி எழுவது அம்பல். அம்பல் பேசுகின்ற ஊரின் நிலையைக் காட்ட வந்த சங்கப் புலவர்கள் 'அம்பலூர்'

என்ற ஒரு தொடரான் ஊரைப் புனைவர். அம்பலூர், அம்பல் மூதூர் என்ற இரண்டு வகைத் தொடர்கள் சங்கப் பாடல்களில் எட்டு இடங்களில் பயிலுகின்றன. ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல் ஆகிய மூன்றிலும் இத்தொடராட்சி இல்லை.

ஐங்குறுநூற்று அம்பற்சேரி

ஐங்குறுநூற்றில் 'அம்பல்' என்ற சொல் மட்டும் (ஐங்.9:6;279:5) ஈரிடங்களில் வருகின்றது. கபிலர்,

> வரைமிசை யுகளு நாட நீவரிற்
> கல்லகத் தது வெம் மூரே
> யம்பற் சேரி யலராங் கட்டோ (ஐங்.279: 5)

என்ற பாட்டில் 'அம்பற்சேரி' என்ற தொடரைப் பயன்படுத்துவர். அவர் 'ஊர் கல்லகத்தது; அஃது அம்பல் தூற்றும் சேரியையுடையது' என்று ஊரின் பகுதியான சேரியைக் குறித்தார். இங்கு ஊர் முழுமையுமன்றிச் சிறு பகுதியாகச் சேரியின் நிலை மட்டும் புனையப்பட்டிக்கிறது. வேறு புனைவு இல்லை. 'அம்பற்சேரி' என்பதற்கும் 'அம்பலூர்' என்பதே கருத்து. இவ்வாறு, கபிலர் குறிஞ்சித்திணையில் தோழி கூற்றாகப் புனைகுவர்.

குறுந்தொகையின் அம்பலூர்

குன்றியனார், குறுந்தொகைப் பாடலில் 'அம்பலூரும் அவனொடும் மொழிமே' (குறு. 51:6) என்பர். இது மருதத் திணையில் தலைவி கூற்று. அம்பல் பேசுகின்ற ஊரும் தலைவியைத் தலைவனொடு சேர்த்தே பேசும். ஊர் மக்கள் தலைவன் தலைவி தொடர்பைப் பேசி ஊரெல்லாம் அம்பல் எழக்காரணமாகின்றனர். இதனால் பலர் பேசுகின்ற ஊரின் ஆரவார நிலையும் தலைவன், தலைவி தொடர்பும் அகப்பாடல்களில் ஊர்ப்புனைவாகி விடுகின்றன. குறுந்தொகையில் அம்பல் என்ற தொடர் பாடல்களில் பயின்றாலும் (139:5; 175:7) அம்பலூர் என்ற தொகைச் சொல்லாட்சி பயிலவில்லை.

வ. எண்	புலவர்	நூல்	நாடு	திணை	கூற்று	தொடர் வருமிடம்	பாடலடி
1.	கபிலர்	ஐங். 279:5	பறம்பு நாடு	குறிஞ்சி	தோழி	இறுதியடி முதற்சீர்	அம்பற் சேரியலராங் கட்டே
2.	குன்றிய னார்	குறு. 51:6		மருதம்	தலைவி	இறுதியடி முதற்சீர்	அம்பலூரு மவனொடும் மொழிமே

நற்றிணையின் அம்பலூரும் அம்பல் மூதூரும்:

நற்றிணையில் 'அம்பலூர்' என்ற தொடர் ஐந்து பாடல்களில் பயிலுகின்றன. அம்பல் என்ற சொல் மூன்று (நற். 73:11, 149:3 ;223:9) பாடல்களில் வருகின்றது. கண்ணாகாரன் கொற்றனார் 'அம்பல் மூதூர் அலர்வாய்ப் பெண்டிர்' (நற் 143:7) என மருதத்திணையில் பாடுவர். இது தாய் கூற்றாகும், இத்தொடரான் மட்டும் ஊரின் நிலை பேசப்படுகிறது. 'அம்பலூர்' என்ற தொடர், ஊரின் பழமை காரணமாக 'மூதூரா' கின்றது. இச்சிறு அடையால், சங்கப் புலவர்கள், தாம் சுட்ட வந்த ஊரின் தொன்மைச் சிறப்பைப் புலப்படுத்துகின்றனர்.

நல் விளக்கனார் 'அம்பல் மூதூர் அரவம் ஆயினும்' (நற்.85:3) என்று குறிஞ்சித்திணையில் தோழி கூற்றாகப் பாடுவர். மூதூர், அம்பல்மூதூர் என்று புனையப்படுகிறது. பிறவாறான புனைவில்லை. முக்கல் ஆசான் நல்வெள்ளையார்,நெய்தல் திணையில் தலைவி கூற்றாக 'அம்பல் மூதூர் அலர் தந்து' (நற்.272:9) என்பர். இதுகாறும் சுட்டிய கண்ணகாரன் கொற்றனார், நல்விளக்கனார், முக்கல்ஆசான் நல்வெள்ளையார், ஆகிய மூவரும் ஒவ்வொரு பாடல்களில் 'அம்பல்மூதூர்' என்ற தொடரைப் பயன்படுத்தி ஊரில் அம்பல் எழுந்த நிலையையும் ஊரின் தொன்மை நிலையையும் உணர்த்தித் தலைவன் தலைவியர் காதல் நிலையைக் காட்டுவர்.

உலோச்சனார் புனைவு

நற்றிணையில், உலோச்சனர் 'அம்பலூர் (நற்.223:9) என்று ஒன்றிலும் 'அம்பல் மூதூர்' (நற்.249:10) என்று இன்னொன்றிலும் அமைத்துப் பாடினார். இரண்டு பாடல்களும் நெய்தல், திணையைச் சார்ந்தவை. இவற்றில் புலவர் இத்தொடர்களைப் பயன்படுத்தியதோடு பிற புனைவுகளையும் அமைத்திருக்கின்றார்.

சுறவினம் கலித்த நிறைஇரும் பரப்பின்
துறையினும் துஞ்சாக் கண்ணர்
பெண்டிரும் உடைத்து இவ்வம்பல் ஊரே (நற். 223:7-9)

சுறாமீன்களின் கூட்டம் மிக நிறைந்த மணல்பரப்பான கடற்கரை, இத்துறையில் தூங்காத கண்களையுடைய பெண்கள் அம்பல் பேசும் ஊர். இவ்வண்ணம் உலோச்சனார் கடற்கரையையும் அங்கு வாழ்வோரின் செயலையும் புனைந்து ஊரைக் காட்சிப்படுத்துகிறார்.

இன்னொரு பாடலில், உலோச்சனார் அம்பலூர் என்ற தொடரை விரித்து 'அம்பல் மூதூர்' என்று பாடினார். நெய்தல் திணையில் தலைவி கூற்றான இப்பாட்டு, தலைவி சேரியில் தலைவன் தேர் சென்றமையையும் அதனால் அம்பலும் அலரும் எழுந்தமையையும் உலோச்சனார் விவரிக்கின்றார். 'இரும்பினைப் போன்ற கரிய கிளைகளையுடைய புன்னை; புன்னைமரத்தில் நீலமணி போன்ற பசிய இலை; அவற்றினிடையே வெள்ளியைப் போன்ற பூங் கொத்துகளின் இடையே பொன்னைப் போன்ற நறுமணம் வீசும் மகரந்தப் பொடிகள் உதிர்ந்தன; அவை புலியினது புள்ளிகள் போலக் காணப்பட்டன; இவ்வாறு அழகு விளங்கிய பூங்கொத்துகள் மீது நல்ல நிறமுள்ள மேற்புறத்தை உடைய வரி வண்டுகள் ஊதுதலால், இது புலியோசையோ என்று ஐயுற்று அச்சம் கொண்டு சிறந்த நடையினை உடைய குதிரையின் கால்கள் பந்தைப் போலக் குதித்தோடின, (நற். 249) என்று தலைவன் தலைவியைக் காணச் சேரிக்கு வருதலை உரைக்கின்றார்,

உலோச்சனார். இங்குப் புன்னை மரம் பூத்து நிற்கும் காட்சியும் அதன் தாது வண்டின்மீது படிந்து புலிபோலத் தோன்றலும் அதன் ஓசை புலியைப்போலக் குதிரைக்குக் கேட்டலும் தலைவி வாழும் சேரிப்புனைவாகும். ஊரைப் புனையும் உலோச்சனார் 'அம்பல் மூதூர் அலர் எழ' (நற். 249:10) என்று ஊரின் அலர் நிலையையும் எடுத்துக்காட்டுவர்.

வ. எண்	புலவர்	நூல்	திணை	கூற்று	தொடர்	பாடலடி வருமிடம்
1.	நல்விளக் கனார்	நற். 85:3	குறிஞ்சி	தோழி	இடையடி முதற்சீர்	அம்பல் மூதூர் அரவம் ஆயினும்
2.	கண்ணா-கரன்	நற் 143:7	பாலை	தாய்	இடையடி முதற்சீர்	அம்பல் மூதூர் அலர்வாய்ப் பெண்டிர்
3.	உலோச்ச னார்	நற். 223:9	நெய்தல்	தோழி	இறுதியடி இறுதிச்சீர்	பெண்டிரும் உடைத்து இவ் அம்பல் ஊரே
		நற். 249:10	நெய்தல்	தலைவி	ஈற்றயல் அடிமுதற் சீர்	அம்பல் மூதூர் அலரெழ
4.	முக்கல் ஆசான் நல்வெள் ளையார்	நற். 272:9	நெய்தல்	தலைவி	ஈற்றயல் அடிமுதற் சீர்	அம்பல் மூதூர் அலர்தந்து

அகநானூற்று அம்பல்

அகநானூற்றிலும் இத்தொடர் பயில்கின்றது. கபிலர் 'அம்பல் மூதூர் கேட்பினும் கேட்க'[3] என்று தலைவியின் குறியிடமான சாரலும் ஊரும் புனையப்பெறுகின்றன. தலைவன் தலைவியைச் சேருகின்ற பகற்குறியிடம் கூறியமையால், அம்மலைச்சாரல் கபிலரால் தனியே கூறப்பட்டிருக்கிறது. ஊரை 'அம்பல் மூதூர்' என்றே கபிலர் சுட்டி, ஊரின் ஆரவார நிலையை உணர்த்துகின்றார். தொல்கபிலர் 'அம்பல் ஊரும் அவனொடும் மொழியும்' (அகம்.282:13) என்று தலைவன் தலைவி காதல் நிலையைப் பேசி ஊர் பரபரப்பாக இருந்த காட்சியை இவ்வொரு தொடராற் சுட்டுவர்.

அம்பலூருக்கு உவமை

மாமூலனார், பாலைத் திணைப்பாட்டில், "அம்பல் மூதூர் அலர் நமக் கொழிய" (அகம் 347:7) என்று ஊரின் நிலையைப் பேசுவர். அம்பலூர், அம்பல் மூதூர் என்று பாடிய புலவர் எல்லாம் அத்தொடரைப் பயன்படுத்தியே ஊரின் ஆரவாரநிலையைப் புனைந்துகாட்டினர். அம்பல் மூதூரின் நிலையை உணர்த்த மாமூலனார் ஒரு வரலாற்று நிகழ்ச்சியைப் பாட்டில் உவமிக்கிறார்.

சால்பெருந் தானைச் சேர லாதன்
மால்கடல் ஓட்டிக் கடம்பறுத் தியற்றிய
பண்ணமை முரசின் கண்ணதிர்ந் தன்ன
கவ்வை தூற்றும் வெவ்வாய்ச் சேரி
அம்பல் மூதூர் அலர்நமக் கொழிய (அகம்.347:3-7)

மாமூலனாரின் வரலாற்றுவமை அலரின் ஆற்றலைக் காட்டுகிறது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், மேலைக்கடலில் பகைவரை ஓட்டி அவர்தம் கடம்பமரத்தை அறுத்துச் செய்த முரசுமுழங்கினாற் போன்று மூதூரின்கண் சேரிப் பெண்டிர் அம்பலும் அலரும் தூற்றினர். இதனால் அம்பல் ஊரின் இயல்பும் அழுங்கலூரின் இயல்பும் புனையப்படுதலை அறிய முடிகிறது. முரசு ஆரவாரம் போல அம்பல், அலர்ப் பேச்சுகள் அமைந்தன. அம்பல் மூதூரின் ஆரவாரத்துக்கு வரலாற்று உவமை கூறி அம்பலினால் பாதிக்கப்பட்ட ஊர் இயல்பை மாமூலனார் விளக்கினார். ஊரின்

ஆரவார நிலையையும் அவலநிலையையும் உணர்த்துமாறு சங்கப் புலவர்கள் இத்தொடரைப் பயன்படுத்துகின்றனர் என்பதை இந்த உவமை ஆட்சியும் அழுத்தமாகக் காட்டுகிறது.

வ. எண்	புலவர்	நூல்	திணை	கூற்று	தொடர் வரும் பாடலடி	பாடலடி
1.	கபிலர்	அகம் 218:19	குறிஞ்சி	தோழி	பாடலின் இடையடி முதற்சீர்	அம்பல் மூதூர் கேட்பினும் கேட்க
2.	தொல்கபிலர்	அகம். 282:13	குறிஞ்சி	தோழி	பாடலின் இடையடி முதற்சீர்	அம்பல் ஊரும் அவனொடும் மொழிமே
3.	மாமூலனார்	அகம். 347:7	பாலை	தலைவி	பாடலின் இடையடி முதற்சீர்	அம்பல் மூதூர் அலர் நமக் கொழிய

அகப்பொருள் புனைவு

அம்பலூர், அம்பல் மூதூர் என்ற இரண்டு தொடர்களும் சங்க இலக்கியங்களில் அகப்பொருள் தொடர்புடையனவாகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. அம்பல் என்ற சொல்லோ அம்பலூர் என்ற தொடரோ, புறப்பொருள் நூல்களில் ஆட்சி பெற்றில. எனவே இவை அகப்பொருளில், தலைவன் தலைவியர் தொடர்பை ஊரார் அறிந்து பேசுவனவாகக் கையாளப்பட்டிருக்கின்றன. அம்பலூர், அம்பல் மூதூர் என்பன, ஊரைப் புனையும் போது காதலர் தம் களவை உணர்த்த ஊரின் ஆரவாரத்தைக் காட்டும் ஊர்ப் புனைவாகின்றன.

திணையும் கூற்றும்

ஐங்குறுநூற்றில், கபிலர் ஊரின் பிரிவான சேரியைச் சுட்டும்போது 'அம்பற் சேரி' என்று புனைவர். மருதத்திணையில், தலைவி கூற்றாகக் குன்றியனார் 'அம்பலூர்' எனப்புனைவர். மருதத்திணையில் இஃதொன்றே பாட்டு. குறிஞ்சித்திணையில் மூன்றும் (நற்.85, அகம் 218;282;347) பாலைத்திணையில் இரண்டும் (நற். 143, அகம்.347) நெய்தல் திணையில் மூன்று (நற்.223,249,272) மாகப் பாடல்கள் உள்ளன. இத் தொடர்களை அமைத்துப் பாடிய முல்லைத் திணைப்பாடல்கள் கிடையா. தோழி கூற்றாக (நற்.85,223, அகம்.218,282) நான்கு பாடல்களும் தலைவி கூற்றாக (குறு.51, நற்.249,272, அகம்.347) நான்கு பாடல்களும் நற்றாய் கூற்றாக (நற்.143) ஒரு பாடலும் பாடப்பட்டிருக்கின்றன. 'அழுங்கல் மூதூர்' என்ற தொடரை நற்றாய் பயன்படுத்துவதாகவும் பாட்டுள்ளது. அம்பலூர், அம்பல் மூதூர் என்ற தொடர்களைப் பாடலின் வெவ்வேறு அடிகளில் அமைத்திருக்கின்றனர், புலவர்கள். அதன் விளக்கம் அட்டவணை-1 இல் காண்க.

இத்தொடர்கள் பாடலின் இறுதியடியிலும் பாடலின் இடையடிகளிலும் வருகின்றன. பாடலின் முதலடியில் இச்சொல் இல்லை. இவை பாடலின் இடையடிகளிலேயே மிகுதியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. (அட்டவணை-2)

அலரூர்ப் புனைவு

மக்கள் வாழ்ந்த - வாழும் - ஊரைப் பாட வந்த புலவர்கள் புனைந்து ஊரைப் பாடியது போல அடைச்சொல் பெய்தும் ஊரைப் புனைந்திருக்கின்றனர். அடைப் புனைவுகளில் விரிவான ஊரின் இயற்கைப் புனைவோ பிற புனைவோ அமைவதில்லை. அடைப்புனைகளில் அம்பல், அலர் என்ற அடைகள் அமைந்து ஒரு விரிவான கருத்தை வெளிப்படுத்துகின்றன. அடைப்புனைவுகளில் பயிலும் அடைச் சொற்கள் சங்க இலக்கியங்களில் கலைச் சொற்களைப் போல எல்லாப் பாடல்களிலும் ஒன்றாக அமைந்திருக்கின்றன. இதனால் அகப்பாடல்களில் ஓர் ஒட்டு மொத்தமான பொதுக் கருத்து உணர்த்தும் அடையாக 'அழுங்கல்' என்ற சொல்லமைகிறது. இதனை அடையாகப் பெற்று 'அழுங்கலூர்' என்ற

	புலவரும் நூலும்	இறுதியடி		இடையடி		முதலடி	
		முதற்சீர்	இறுதிசீர்	முதற்சீர்	இறுதிசீர்	முதற்சீர்	இறுதிசீர்
1.	குன்றியனார் குறு 51:6	இறுதியடி முதற்சீர்					
2.	நல்விளக்கனார் நற். 85:3				இடையடி இறுதிச்சீர்		
3.	கண்ணாகாரன் கொற்றனார் நற்.143:7			இடையடி முதற்சீர்			
4.	உலோச்சனார் நற். 223 : 9		இறுதியடி இறுதிச்சீர்				
	நற். 249:10	ஈற்றயலடி முதற்சீர்					
5.	கபிலர் அகம். 218:19			பாடலின் இடையடி முதற்சீர்			
6.	முக்கல் ஆசான் நல்வெள்ளியார் நற்.272:9	ஈற்றயலடி முதற்சீர்					
7.	தொல்கபிலர் அகம். 282:13			பாடலின் இடையடி முதற்சீர்			
8.	மாமூலனார் அகம். 347:7			பாடலின் இடையடி முதற்சீர்			

அம்பலூர், அம்பல் மூதூர் வருகை அட்டவணை - 2

	புலவர் பெயர்	நூல்	திணை	கூற்று	தொடர்வரும்	பிறபுனைவு	பாடலடி
1.	குன்றியனார்	குறு.51:6	மருதம்	தலைவி	பாடலிறுதியடி	--	அம்பலூரு மவனொடும்
2.	நல்விளக்கனார்	நற். 85:3	குறிஞ்சி	தோழி	பாடலிடையடி	--	'அம்பல் மூதூர் அரவம் ஆயினும்'
3.	கண்ணகாரன்	நற். 143:7	பாலை	தாய்	,,	"	'அம்பல் மூதூர் அலர்வாய்ப் பெண்டிர்'
4.	உலோச்சனார்	நற். 223:9	நெய்தல்	தோழி	பாடலினிறுதி	உண்டு	"பெண்டிரும் உடைத்து இவ் வம்பல் ஊரே"
		நற். 249:10	நெய்தல்	தலைவி	பாடலினி ஈற்	உண்டு	"அம்பல் மூதூர்
5.	முக்கல் ஆசான் நல்வெள்ளையார்	நற். 272:9	நெய்தல்	தலைவி	பாடலின் ஈற்றயலடி முதற்சீர்	--	'அம்பல் மூதூர் அலர் தந்து'
6.	கபிலர்	அகம்.218:19	குறிஞ்சி	தோழி	பாடலின் இடையில்	உண்டு	'அம்பல் ஊரும் அவனொடும் மொழிமே
7.	தொல்கபிலர்	அகம். 282:13	குறிஞ்சி	தோழி	பாடலிடையடி	--	"அம்பல் ஊரும் அவனொடும் மொழிமே"
8.	மாமூலனார்	அகம். 347:7	பாலை	தலைவி	பாடலின் இடையடி முதற்சீர்	--	அம்பல் மூதூர் அலர் நமக்கொழிய

ஐங்குறுநூறு - கலித்தொகை -பரிபாடல் ஆகியவற்றில் இவ்விரு தொடர்கள் பயிலவில்லை.

தொடரமைகிறது. அடி எண்ணிக்கை குறைந்த ஐங்குறுநூற்றுப் பாடல்கள் இரண்டில் இத்தொடர் காணப்படுகின்றது. அம்மூவனார், நெய்தல் திணைப்பாடலில் 'அழுங்கலூரே' (181:5) என்பர்.

துறை கெழு கொண்கன் நல்கின்

உறைவினி தம்மவிவ் வழுங்க லூரே (ஐங்.181:4-5)

என்பது ஐங்குறுநூறு. பாடலின் ஈற்றடியில் இறுதிச் சீராக இத்தொடர் வருகின்றது. தலைவன் - தலைவியரின் களவொழுக்கம் உணர்ந்து ஊரெல்லாம் ஆராவாரமுண்டாக அலர்தூற்றுவர் என்ற அச்சத்தால் தலைவி மெலிகின்றாள்; தலைவன் மணந்தால் தலைவி உயிர் வாழுதல் இனிது; இன்றேல் அவள் உயிர் வாழ்தல் அரிது. இங்கு ஊரிலுள்ள பயிரினமோ உயிரினமோ பேசப்பட்டில. தலைவியின் ஊர் ஒரு தொடரால் மட்டும் சுட்டப்பட்டிருக்கின்றது. ஐங்குறுநூற்றில் நெய்தல் திணையில் தலைவி கூற்றாக இப்பாட்டு உள்ளது. இத்தொடரின் மூலம் பயில்வோர் ஊரைப்பற்றிய ஒருகற்பனையை அமைத்துக் கொள்ள இயலுகிறது. தொடரிடையே வேறு புனைவுகளும் வந்தில. ஆனால் ஊரொடு இணைந்த இச்சொல் ஊரின் ஆரவார நிலையை வெளிப்படுத்துகிறது. இங்குத் தொன்மை சுட்டும் அடையின்றி 'ஊர்' நிற்கின்றது.

தொடரிடைப் பிறவரல்

ஐங்குறுநூற்றில் ஓதலாந்தையார் பாலைத் திணையில் பாடிய பாட்டு,

என்னு முள்ளினள் கொல்லோ தன்னை

நெஞ்சுணத் தோற்றிய வஞ்சினக் காளையொ

டழுங்கன் மூதூ ரலரெழச்

செழும்பல் குன்ற மிறந்தவென் மகளே (ஐங். 372)

இப்பாடலின் ஈற்றடியில் ஈற்றுச் சீராக 'அழுங்கலூர்' என்பது வராது, ஈற்றயலடியின் முதற்கண் 'அழுங்கல் மூதூர்' என்று விரிந்து வருகிறது. ஓதலாந்தையார், தலைமகள் உடன் போகிய வழி ஊரார் அலரெடுத்து உரைக்கும் போது இத்தொடர் மூலம்

கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். அவர், இதனைத் தலைவி அல்லது தோழி கூற்றாகப் பாடாது நற்றாய் கூற்றாகப் பாடியிருக்கிறார். ஐங்குறுநூற்றில் நற்றாய் கூற்றாய் இத்தொடர் அமைந்த பாட்டு இஃது ஒன்றேயாகும்.

ஐங்குறுநூற்றில் தலைவி, நற்றாய் கூற்றாக இரண்டு பாடல்களில் மட்டும் 'அழுங்கலூர்', 'அழுங்கல் மூதூர்' என்ற இரு தொடர்களும் பயின்று ஊரின் நீர்மையைப் புலப்படுத்துகின்றன. இவை நெய்தலிலும் பாலையிலும் மட்டுமே பயிலுகின்றன. இத்தொடர்களைப் பயன்படுத்தி அம்மூவனார் பாடிய பாடல்கள் ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய மூன்றிலுமுள்ளன. ஓதலாந்தையார், ஐங்குறுநூறு, குறுந்தொகைப் பாடல்களில் மட்டும் இத்தொடர்களைப் பயன்படுத்தியிருக்கிறார்.

வ.எண்	புலவர் பெயர்	பா. எண்	திணை	கூற்று	பாடலடி
1.	அம்மூவனார்	181	நெய்தல்	தலைவி	உறைவினி தம்மவிவ் வழுங்கலூரே
2.	ஓதலாந்தையார்	372	பாலை	நற்றாய்	அழுங்கல் மூதூரலரெழச் செழும்பல்குன்ற மிறந்த வென்மகளே

குறுந்தொகைப் புனைவு

குறுந்தொகையிலும் 'அழுங்கலூர்' என்ற தொடர் பயில்வதைக் காணமுடிகின்றது. ஓதலாந்தையார், அள்ளூர் நன்முல்லையார், கூடலூர்க் கிழார், கூழிக் (கோழிக்) கொற்றன், பெருங்கண்ணன், அம்மூவனார், விற்றூற்று மூதெயினார், கபிலர் ஆகிய எட்டுப் புலவர்கள் குறுந்தொகையில் 'அழுங்கலூரே' என்ற அடையைப் பயன்படுத்தி ஊரைச் சுட்டியுள்ளனர். இப்பாக்கள் அனைத்திலும் இத்தொடர், பாட்டின் இறுதிச்சீராக ஏகாரத்துடன் முடிகின்றது. இத்தொடர், பாலை, குறிஞ்சி, நெய்தல், முல்லை ஆகிய நான்கு திணைகளில் மட்டுமே பன்படுத்தப்பட்டிருக்கின்றன. மருதத் திணைப் பாடல்களில் இத்தொடராட்சி இல்லை.

தலைவி, தலைவன், தோழி ஆகிய மூவரும் தலைவியின் ஊரைச் சொல்லுமுகத்தான், இத் தொடர்களைப் புலவர்கள் கையாண்டிருக்கின்றனர். குறுந்தொகையிலுள்ள ஏழு பாடல்களில் 'அழுங்கலூர்' என்ற தொடரால் ஊர் சுட்டப்பட்டிருக்கிறது. அப்பாடல்களில் ஊரைப் பற்றிய வேறு புனைவுகளில்லை. ஆதலின் இந்த ஒரே தொடர்தான், பாடலில் ஊரைப் பற்றியதாக விளங்குகின்றது.

குறுந்தொகை ஆட்சி

வ.எண்	புலவர்	பா. எண்	திணை	கூற்று	பாடலடி
1.	ஓதலாந்தையார்	குறு. 12:6	பாலை	தலைவி	'நொதும கழறுமிவ் வழுங்க லூரே'
2.	அள்ளூர் நன்முல்லையார்	140:5	பாலை	தலைவி	'யாங்கறிந்தன்றிவ் வழுங்க லூரே'
3.	கூடலூர்கிழார்	214:7	குறிஞ்சி	தோழி	'ஏமுற்றன்றிவ் வழுங்கலூரே'
4.	கூழிக்(கோழிக்) கொற்றன்	276:8	குறிஞ்சி	தலைவன்	'அளிதோ தானேயிவ் வழுங்கலூரே'
5.	பெருங் கண்ணன்	289:8	முல்லை	தலைவி	'நந்திறத் திரங்குமிவ் வழுங்க லூரே'
6.	அம்மூவனார்	351:8	நெய்தல்	தோழி	'இன்னுமற்றோமிவ் வழுங்க லூரே'
7.	விற்றூற்று மூதெயினனார்	372:7	குறிஞ்சி	தலைவி	'அலரெழுந்தன்றிவ் வழுங்கலூரே'
8.	கபிலர்	385:7	குறிஞ்சி	தலைவி	'புதுவோர்த் தம்மவிவ் வழுங்கலூரே'

நற்றிணைப் புனைவு

நற்றிணைப் பாடல்களில் சீத்தலைச் சாத்தனார், உலோச்சனார், அஞ்சிலஞ்சியார், அம்மூவனார் ஆகிய நான்கு புலவர்கள் ஏழு பாடல்கள் பாடியிருக்கின்றனர். இவற்றில் குறிஞ்சித் திணைப்பாடல் ஒன்றிலும் (36) மருதத்திணைப்பாடல் ஒன்றிலும் (90) இத்தொடர் பயிலுகின்றது. ஏனைய ஐந்து பாடல்களும் நெய்தல் திணைப்பாடல்கள் (38,63,149,203,138). குறுந்தொகை மருதத்திணைப் பாடல்களில் இத்தொடர் கையாளப்படவில்லை. ஆனால் நற்றிணை பாடலில் இத்தொடர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

சீத்தலைச் சாத்தனார், 'ஆனாக் கௌவைத்தாகத் / தானென் இழந்ததிவ் வழுங்கலூரே' (நற்.36:8-9) என்று தோழி தங்கள் ஊரைக் குறிப்பதாகப் பாடுகிறார். இக்குறிஞ்சித் திணைப்பாட்டில், 'அழுங்கலூர்' என்ற ஒரு தொடரே ஊரைப் புனைகின்றது.

உலோச்சனார் புனைவு முறை

உலோச்சனார் என்ற புலவர் நான்கு நற்றிணைப் பாடல்களில் (38,63,149,203) இத்தொடரைப் பொருள் பொதிந்த தொடராகப் பயன்படுத்துகிறார். இவர் பாடிய நான்கு பாடலும் நெய்தல் திணையன. 'அலர் சுமந்து ஒழிக இவ் அழுங்கல் ஊரே' (149:10) என்பது தோழி கூற்றுப் பாடல். இப்பாவிலும் ஊரின் இயற்கையோ பிறவோ புனையப்பட்டில. அழுங்கல் ஊர் என்ற தொடர் உளது. இவருடைய இன்னொரு பாடலிலும் 'உயவுப் புணர்ந்தன்றிவ் வழுங்கல் ஊரே' (203:11) என்று அழுங்கலூர் பயன்படுத்தப்படுகிறது. இறுதியடியில் இறுதிச்சீர் என்று நிலையில் அமைந்த இத்தொடர் அன்றித் தலைவி ஊரைப் புனையும் வேறு அடிகள் இல்லை. ஆனால் பாட்டின் முதல் பகுதியில் தலைவனுடைய ஊர் 'சிறுகுடிப்பாக்கம்' என்று சுட்டிப் புனையப்பட்டிருக்கிறது. தலைவி ஊர் 'அழுங்கலூர்' என்று சுட்டப்பட்டது; புனையப்படவில்லை. தலைவன், தலைவியை நாடிவருவது தலைவி ஊர்க்கேயாகும். அலருரைப்பவர்கள் தலைவி ஊரினரே.

ஓரடைத் தொடரும் இயற்கைப் புனைவும்

உலோச்சனர் இன்னும் இருபாடல்களில் (நற் 38, 63) இத்தொடரை ஆண்டுள்ளார். நெய்தல் திணைப்பாட்டின் இறுதியடியில் இறுதிச் சீரில் 'அழுங்கலூரே' என்ற அடைத் தொடர் காணப்படுகிறது. அடைமொழியால் ஊரைச் சொன்ன உலோச்சனார், அதனியல்பை மேலும் விளக்கமாகப் பின்வருமாறு புனைந்திருக்கிறார்.

'உரவுக்கடல் உழந்த பெருவலைப் பரதவர்
மிகுமீன் உணக்கிய புதுமணல் ஆங்கண்
கல்லென் சேரிப் புலவற் புன்னை
விழவுநாறு விளங்குஇணர் விரிந்துஉடன் கமழும்
அழுங்கல் ஊரோ அறனின்று (நற்.63:1-5)

இப்பாட்டில் ஊரின் இயல்பு 'அழுங்கல் ஊர்' என்று குறிக்கப்பட்டிருப்பதுடன், ஊரின் இயல்பும் புனையப்பட்டிருக்கிறது. பரதவர் பிடித்து வந்த மீன்களைக் கடற்கரையில் பெண்டிர் காயப்போட்டிருக்கின்றனர்; அது புதுமணல் பரப்பையுடைய சேரி; அங்குப் புன்னை மரங்களின் பூங்கொத்து ஒரு சேர மலர்ந்து நறுமணம் கமழும். இவ்வாறு நெய்தலைப் பயிரினமும் உயிரினமும் வாழும் நிலமாக உலோச்சனார் புனைகின்றார்.

இறுதி வருவது இடையில் வருவானேன்?

'அழுங்கலூர்' என்ற தொடர் உணர்த்தாத கருத்தை உணர்த்தவே பாடலில் இயற்கைப் புனைவு அமைகின்றது. உலோச்சனார் நான்கு பாடல்களில், இரண்டு பாடல்களில் மட்டும் 'அழுங்கலூர்' என்ற அடையுடன் கூடுதலாக ஊரின் இயற்கைப் புனைவு அமையப் பாடல் பாடியிருக்கிறார். அழுங்கலூர் என்ற தொடர் ஊர் பற்றியதாயினும் அத்தொடர் அங்கு வாழும் மக்களின் பண்பியலுணர்த்துவதாகும்.

மக்களைப் பற்றிய பகுதி தனித்தமைய, உயிரினம் பயிரினம் பற்றிய பகுதி இயற்கைப் புனைவாகப்பாடலில் கூடுதலாக இடம் பெறுகிறது.

'அழுங்கலூர்' என்ற தொடர் எல்லாப் பாடல்களிலும், பாடலின் ஈற்றடியில் ஈற்றசையாக வருகின்றது. இந்த இறுதி அசை ஏகாரமாக முடிகின்றது. இது தொல்காப்பியம் வலியுறுத்தும் யாப்பு மரபை ஒட்டியது. நற்றிணை அறுபத்து மூன்றாம் பாடலில் மட்டும், அழுங்கலூர் என்ற தொடரைப் பாட்டின் இடையில் ஐந்தாவது அடியில் உலோச்சனார் நிறுத்திப்பாடியிருக்கிறார். இப்புனை தொடர், இப்பாடல் ஒன்றில் தான், பாவின் இடையே வருகின்றது; வேறு பாடல்களில் இல்லை. பாடலிடையே இத்தொடர் வருதலால் ஏகார ஈற்றுக்கு மாறாக ஓகார ஈறு அமைக்கப்பட்டிருக்கிறது.

ஊர் 'அறனின்று' (63:5) என்று கூற விழைந்தமையால் உலோச்சனார் 'அழுங்கலூர்' என்ற தொடரைப் பாடலின் இடையே அமைத்தாராதல் வேண்டும். பிற பாடல்களில் இவ்வாறு உலோச்சனார் ஊர்களைப் பற்றித் தீர்மானமான கருத்தை உரைத்திலர். உலோச்சனாரின் கருத்து முடிபே, இம்மாற்றத்துக்குக் காரணமாகும்.

இட மாறுதலும் அடை விரிதலும்

அஞ்சிலஞ்சியார், நற்றிணையில் (99) 'அழுங்கலூர்' என்று பிறரெல்லாம் பாடிய தொடரை 'அழுங்கல் மூதூர்' என்று விரித்துப் பாடினார். இவர் இத்தொடரைப் பாட்டின் முதலடியில் இறுதிச் சீராக ஆண்டிருக்கிறார்; அதுபோல ஏகாரம் இன்றித் தொடர் அமைந்திருக்கிறது. அஞ்சிலஞ்சியார், தலைவனையும் அவனுடைய சுற்றத்தையும் 'வேந்துடை அவையே' என்றும் ஊரின் சிறப்பை 'ஆடு இயல் விழவின்' என்றும் மிகுத்துரைப்பர். இக் குறிப்புகளால் அஞ்சிலஞ்சியார் சுட்டும் ஊர், வேந்தற்குரிய ஊர் என்றும் 'விழவுமலிமூதூர்' என்றும் அறியப்படுகிறது. எனவேதான், இவர் 'அழுங்கலூர்' என்று பாடும் மரபில் 'அழுங்கல்மூதூர்' என்று

பாடினார். சங்கப் புலவர்கள் மெய்ம்மையைப் புனைந்து பாடும் புலவர்கள் ஆதலின் ஊரின் தொன்மை கருதி 'மூதூர்' என்று சிறப்பித்தனர்.

'ஆடியல் விழவின் அழுங்கல் மூதூர்' (நற். 90:1) என்பது அஞ்சிலஞ்சியாரின் பாடலடி. அவரைப் போல அம்மூவனாரும் அழுங்கலூர் என்ற தொடருக்கு ஈடாக 'அழுங்கல் மூதூர்' என்ற தொடரைப் பயன்படுத்தினார்.

....			நுண்வினை
இழையணி	அல்குல்	விழவாடு	மகளிர்
முழுங்குதிரை	இன்சீர்	தூங்கும்	
அழுங்கல்	மூதூர்	அறிந்தன்றோ	இன்றோ (நற். 138: 8-11)

என்பது பாடற்பகுதி. அம்மூவனாரும் மாநகரப் புலவராவர். இவர் இப்பாடலில் விழா நடைபெறும் ஊரைப் பேசுகின்றார். இவற்றால், இவர் பாடலில் குறிக்கும் ஊர் பழைமையான ஊராதல் வேண்டும். எனவேதான் 'அழுங்கலூர்' என்று சங்கப் புலவர்கள் ஊரைப் புனையும் தொடரை 'அழுங்கல் மூதூர்' என்று விரித்துப் பாடினார். ஆனால், இத்தொடர் பாட்டின் ஈற்றடியில் இறுதிச் சீரில் வாராது முதற் சீரில் வருகின்றது. ஆசிரியர் ஊரின் பழமையும் முதன்மையும் தோன்ற இவ்வாறு அமைக்கின்றார்.

நற்றிணையில் 'அழுங்கலூர்' என்ற தொடர் ஐந்து பாடல்களிலும் அதன் விளக்கமான 'அழுங்கல் மூதூர்' என்ற தொடர் இரண்டு பாடல்களிலும் பயிலுகின்றன. இவற்றுள் உலோச்சனார் பாடிய ஒரு பாடல் (நற். 38) மட்டுமே தலைவி கூற்று; ஏனைய தோழி கூற்று. ஊரின் இயல்பை ஒரு தொடர் கொண்டு எல்லாப் புலவரும் புனைய உலோச்சனார் இரண்டு பாடல்களில் (நற். 38, 63) இத்தொடருடன் ஊரின் உயிரினங்களையும் பயிரினங்களையும் புனைகின்றார். வேறு எப் புலவரும் நற்றிணையில் இவ்வாறு பாடிலர்.

நற்றிணை

வ.எண்	புலவர் பெயர்	பா.எண்	திணை	கூற்று	பாடலடி
1.	சீத்தலைச் சாத்தனார்	36	குறிஞ்சி	தோழி	"தானென் இழந்தது இவ்வழுங்கல் ஊரே"
2.	உலோச்சனார்	38	நெய்தல்	தலைவி	"..... கலங்குநீர்க் கழிசூழ் படப்பை காண்ட வாயில் பெண்ணை இவரும் ஆங்கன் வெண்மணல் படப்பையெம் அழுங்கல் ஊரே
3.	ஷ	62	ஷ	தோழி	உரவுக்கடல் உழந்த பெருவலைப் பரதவர் மிகுமீன் உணக்கிய புதுமணல் ஆங்கண் நல்லென் சேரிப் புலவற் புன்னை விழவுநாறு விளங்குஇணர் விரிந்து உடன் கமழும் அழுங்கல் ஊரோ"
4.	ஷ	149	ஷ	தோழி	"அலர்சுமந்து ஒழிகஇவ அழுங்கல் ஊரே"
5.	ஷ	203	ஷ	தோழி	"உயவுப் புணர்ந்தன்று இவ் அழுங்கல் ஊரே"
6.	அஞ்சிலஞ்சியார்	90	மருதம்	தோழி	"ஆடுஇயல் விழவின் அழுங்கல் மூதூர்"
7.	அம்மூவனார்	138	நெய்தல்	தோழி	"அழுங்கல் மூதூர் அறந்தன்றோ இன்றே"

உலோச்சனார் ஆட்சியும் புனைவும்

குறுந்தொகை, நற்றிணை போல அகநானூற்றிலும் 'அழுங்கலூரே' என்ற தொடர் ஏழு பாக்களில் கையாளப்பட்டிருக்கிறது. நற்றிணையில் பாடிய உலோச்சனார், அகநானூற்றில் இரண்டு பாடல்களிலும் இத் தொடரைப் பாடியிருக்கிறார். (அகம். 100: 18;400) இவ்விரு பாடல்களிலும் இத்தொடர் இறுதிச் சீராகவே அமைந்திருக்கிறது. 'கைதையம் படப்பை எம் அழுங்கலூரே' (அகம். 100:18) என்று ஊரைப் பாடுகின்ற உலோச்சனார்,

......			தண்புலர்
வைகுறு	விடியல்	போகிய	எருமை
நெய்தலம்	புது	மலர்	மாந்தும்
கைதையம்	படப்பைஎம்	அழுங்க	லூரே

(அகம்100:15-18)

என்று ஒரு தொடரால் ஊரைப் புனைவதோடு அமையாது ஊரில் வாழும் உயிரின வாழ்வையும் இணைத்துப் புனைகின்றார். தாழை வேலிகளைக் கொண்ட தோட்டங்களுள்ள கடற்கரை; அங்கே விடியற் காலையில் வெளியே சென்ற எருமை புதிதாக மலர்ந்த நெய்தல் பூவைத் தின்னும். இவ்வாறு நெய்தல் நிலத்து ஊரை உலோச்சனார் புனைகின்றார். அடைத் தொடரை மட்டும் அமைத்துப் புனைவது போதாது என்று ஊர்பாடும் உலோச்சனார் ஊரின் இயற்கை நலத்தையும் மிகுத்துப் புனைந்திருப்பது ஊர்ப் புனைவு முறையில் குறிப்பிடத்தக்கது.

உலோச்சனார் 'அழுங்கலூரே' என்றுதான் ஆறு பாடல்களில் பாடியுள்ளார். ஒன்றிலும் 'மூதூர்' என்ற தொடரை அவர் 'அழுங்கல்' என்பதுடன் பயன்படுத்திலர். அகநானூற்றுப் பாடலில் இவர்,

.... பழவிறற்

பாடெழுந் திரங்கும் முந்நீர்

நீடிரும் பெண்ணைநம் அழுங்கல் ஊரே

(அகம்.400:24-26)

என்று பாடுவர். 'மூதூர்' என்ற கருத்தமைய இப்பாட்டில் 'பழவிறற் பாடெழுந்து' என்ற பகுதி அமைந்திருக்கிறது. மேலும், அவர் 'கடற்கரையில் பெண்ணை மரம் நிற்கும்' என்று ஊரைப் புனைகிறார்.

மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார், நெய்தல் திணைப் பாட்டில் ஈற்றடி ஈற்றுச் சீராக 'அழுங்கலூரே' என்ற தொடரை ஆளுவர். 'ஒலியவிந் தன்றில் அழுங்கல் ஊரே' (அகம் 70:17) என்பது பாடலடி.

கல்லாடனார், இருபத்தேழு அடிகளான் அமைந்த அகநானூற்றுப் பாடலில் 'அழுங்கல் மூதூர் அலரெடுத்தரற்ற' (அகம் 113:8) என்று பாலைத் திணைப்பாடலில் இடையடியாகப் புனைந்திருக்கிறார். இது தலைவி கூற்று. தலைவியின் ஊரே இங்ஙனம் புனையப்பெறுகிறது. ஊரின் பழமை தோன்ற ஊர் - 'மூதூர்' - என்று விரிக்கப்படுகிறது. ஊரைப் பற்றிய விரிவான புனைவு பாடலில் கிடையாது.

கருவூர்க் கண்ணம்பாளனார் (அகம். 180:15) பாட்டின் இறுதியடியில் இறுதிச் சீராக வருமாறு 'என்னும் நோக்குமிவ் வழுங்கல் ஊரே' (அகம். 180:15) என்று பாடுகின்றார். இங்கு இத்தொடர் ஊரைப் புனைவதாய் அமைவதோடு ஊர்ப் புனைவும் தனியே அமைக்கப்பட்டிருக்கிறது. ''புலால்நாறும் கழியினைத் துழாவிப் பல வகைப் பறவைகளும் ஒருங்கு தங்கியிருக்கும்; முள்ளுடைய நீண்ட இதழையுடைய தாழையைச் சார்ந்த புலிநகக் கொன்றையொடு பொருந்தித்

தோட்டத்தில் நிற்கும் வளைந்த தாளினையுடைய புன்னையது பொன்னை ஒத்த நுண்ணிய தாதினைப் பார்த்து என்னையும் நோக்கா நிற்கும்". (அகம்.180)

பெரும் புலவரான பரணர், பாட்டின் முதலடியில் இறுதிச் சீராக 'இரும்பிழி மாரி அழுங்கல் மூதூர்' (அகம். 122:1) என்று குறிஞ்சித் திணையில் தலைவி கூற்றாகப் பாடினார். இவரைப் போலக் கல்லாடனாரும் (அகம். 113:8) அதியன் விண்ணத்தாரும் (அகம். 301:25) இந்நெடுந் தொடரைப் பாலைத் திணையில் பாடினர்.

கல்லாடனார் 'அழுங்கல் மூதூர் அலரெடுத்தரற்ற' (அகம். 113:8) என்று பாடல் நடுவில் எட்டாவது அடியாக அமைத்தார். இத் தொடரும் அடியின் முதலிரு சீர்களாயின. அகநானூற்றுப் பாடல்களில் 'அழுங்கலூர்' என்ற தொடர் நான்கு பாடல்களிலும் (அகம். 70, 100, 180, 400) அழுங்கல் மூதூர் என்ற தொடர் மூன்று பாடல்களிலும் (அகம். 113, 122, 301) பயிலுகின்றன.

அகநானூற்றில் உலோச்சனார் இரண்டு பாடல்களில் (அகம். 100, 400) அழுங்கலூர் என்று பாடியிருக்கிறார். கருவூர்க் கண்ணம் பாளனார் ஒரு பாடலில் (அகம். 180) பாடினார். இருவர் பாடிய மூன்று பாடலும் நெய்தல் திணையன; தோழி கூற்றின. அகநானூற்றுப் பாடல்கள் ஏழும் தோழி (70, 100, 180, 400) கூற்றினவாகவும் தலைவி கூற்றினவாகவும் (113, 122, 301) உள்ளன. தலைவன், நற்றாய் கூற்றாகப் பாடல் இல்லை. நெய்தல் திணையில் நான்கு பாடலும் (70, 100, 180, 400) பாலைத் திணையில் இரண்டு

அகநானூற்று ஆட்சி

வ.எண்	புலவர் பெயர்	பா.எண்	திணை	கூற்று	பாடலடி
1.	மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார்	அகம். 70:17	நெய்தல்	தோழி	'ஒலிய விந்தன்றிவ் அழுங்கல் ஊரே'
2.	உலோச்சனார்	அகம்	நெய்தல்	தோழி	"தண்புலர்/வைகுறு விடியல் போகிய / எருமை நெய்தலம் புதுமலர் மாந்தும் / கைதையம் படப்பைஎம் அழுங்கலூரே'
3.	கல்லாடனார்	அகம்	பாலை	தலைவி	' அழுங்கல் மூதூர் அலரெடுத்தரற்ற
4.	பரணர்	122:1 அகம்	குறிஞ்சி	தலைவி	' இரும்பிழி மாரி அழுங்கல் மூதூர்'
5.	கருவூர்க் கண்ணம் பாளனார்	அகம்	நெய்தல்	தோழி	'புலவுநாறிருங் கழி துழை இங் பலவுடன்/புள்இறை கொண்ட முள்ளுடை நெடுந்தாழை/மணந்து எழலொடு செரீஇப்/படப்பை நின்ற முத்தாட் புன்னைப்/ பொன்னேர் நுண்தாது நோக்கி/ என்னும் நோக்கு மிவ் வழுங்கல் ஊரே'/
6.	அதியன் விண்ணத் தனார்	அகம். 301:25	பாலை	தலைவி	'அழுங்கல் மூதூர்க் கின்னதாகும்'
7.	உலோச்சனார்	அகம்.	நெய்தல்	தோழி	'....................... பழவிறல்' பாடெழுந் திரங்கும் முந்நீர் நீடிரும் பெண்ணை நம் அழுங்கல் ஊரே'

பாடலும் (113, 301,) குறிஞ்சித்திணையில் ஒரு பாடலும் (122) என மூன்று திணையில் தான் பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன. முல்லை, மருதத்திணைப் பாடல்களில், இத் தொடராட்சி இல்லை. இத் தொடரான் ஊரை உணர்த்திய உலோச்சனாரும் கருவூர்க் கண்ணம்பாளனாரும் ஊரின் இயல்பை விரிவாகப் புனைந்துள்ள போக்குக் குறிக்கத்தக்கது.

கலித்தொகை - அழுங்கலூர்

கலிப்பாவான் அமைந்த கலித்தொகையில், பாலைபாடிய பெருங்கடுங்கோ, பாலைத் திணைப்பாடல் ஒன்றில் தலைவி கூற்றாக 'நகுதக் கன்றிவ் வழுங்கலூர்க்கே' (கலி 23:5) என்று பாடுவர். இப்பாட்டிலும் அடையான் மட்டும் ஊர் உணர்த்தப்படுகிறது. பாடலில் அடிகள் மிகுதியாக இருந்தும் ஊர் புனையப்பட்டிலது. இந்த அடி, கலிப்பாட்டின் தரவில் ஈற்றடியாக உள்ளது.

வ.எண்	புலவர்	பா. எண்	திணை	கூற்று	பாடலடி
1.	பாலைபாடிய பெருங்கடுங்கோ	23 :	பாலை	தலைவி	'நகுதக் கன்றிவ் வழுங்க லூர்க்கே

பரிபாடலாட்சி

நல் வழுதியார் தாம் பாடிய வையைப் பரிபாடலில்,

இன்பமும் கவினும் அழுங்கல் மூதூர்
நம்பல் நன்பல நன்பல வையை
நின்புகழ் கொள்ளாது இம்மலர் தலைஉலகோ
(பரி. 12:100-192)

என்று பாடுகிறார். இங்கு 'அழுங்கல் மூதூரார்' என்று ஊர் அடைத் தொடரான் அடையாளங் காட்டப்படுகிறது.

அகப்பொருள் நூல்களில் பயிலுதல்

சங்க நூல்களில் 'அழுங்கலூர்' என்ற தொடரோ 'அழுங்கல் மூதூர்' என்ற தொடரோ ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை, பரிபாடல் ஆகிய ஆறு நூல்களிலேயே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

புறப்பொருள் நுவலும் பதிற்றுப்பத்திலோ புறநானூற்றிலோ இத் தொடராட்சி இல்லை. பத்துப் பாட்டிலும் இத்தொடரைக் காண முடியவில்லை. ஆதலின் அழுங்கலூர், அழுங்கல் மூதூர் என்ற இரண்டு தொடர்களும் அகப்பொருள் நூல்களிலேயே பயில்கின்றமையான் இஃது அகப்பொருள் பொதிந்த தொடராக - அகப்பொருளுக்குரிய தொடராக - திகழ்கிறது.

சங்க நூல்களில் அம்பலும் அலரும் பேசப்படுகின்றபோதுதான் 'அழுங்கலூரே' என்ற தொடர் புலவர்களால் ஆளப்படுகிறது. அழுங்கல் என்ற சொல்லுக்கு ஆரவாரம், வருத்தம் , கேடு என்று மூன்று பொருள்களைச் சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் தருகின்றது.[4] ஐங்குறுநாற்றுப் பாட்டடியில் (181:5) பயிலும் சொல்லுக்கு ஆரவாரம் என்பதே பொருளாகும். 'கேடு என்ற பொருள் பொருந்தாது. இத்தொடர் சங்க இலக்கியங்களில் அம்பலும் அலரும் பேசப்படும் சூழலில் தான் ஆட்சி பெற்றிருக்கிறது.

இத்தொடர், அலரால் எழுகின்ற ஆரவாரத்தைப் பேசுவதாகத்தான் (அகம். 70:17; 100:14; 113:8; 122:1; 180:13; 301:25; 400:19, குறு. 12:6; 140:6; 214:7; 276:8; 351:8; 372:9; 385:7, நற். 36: 4-9; 38:5-10; 63:5; 138:11; 90:1; 149:8; 203:9, ஐங். 372, 181:4-5, பரி. 12:100, கலி. 23:5;26) விளங்குகிறது. சங்கவிலக்கியங்களில் அழுங்கலூர், அழுங்கல் மூதூர் என்ற தொடர்களை இருபத்தாறு பாடல்களில் பதினாறு புலவர்கள் பயன்படுத்தியிருக்கின்றனர். அழுங்கலூர் பத்தொன்பது பாடல்களிலும் அழுங்கல் மூதூர் ஏழு பாடல்களிலும் காணப்படுகின்றன. 'அழுங்கலூர் என்ற தொடரை மிகுதியாகப் பயன்படுத்திப் பாடியவர் உலோச்சனார். இவர்

நற்றிணையில் நான்கு பாடலிலும் அகநானூற்றில் இரண்டு பாடல்களிலும் இத்தொடரைப் பயன்படுத்தியுள்ளார். இவர் அலர்ச் செய்திகளை மிகுதியாகப் பாடியமையால், 'அழுங்கலூர்' என்ற தொடரைப் பாடல்களில் ஆண்டிருக்கிறார். இதனை வெளிப்படக் காட்டுமாறு உலோச்சனாரை அகப்பொருளா ராய்ச்சியாளர் 'அலர்ப் புலவர்' என்று சுட்டிக் குறிப்பர்.[5] ஆகையால், உலோச்சனார் பாடல்களில் அலரை விளக்க 'அழுங்கலூர்' என்ற தொடர் மிகுதியும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அம்மூவனார் ஐங்குறுநூற்றுப் பாட்டு ஒன்றிலும் நற்றிணைப் பாட்டு ஒன்றிலும் 'அழுங்கலூர்' என்ற தொடரைப் பயன்படுத்தினார். நற்றிணைப் பாட்டு இன்னொன்றில் 'அழுங்கல் மூதூர்' (138) என்ற தொடர் ஆட்சி உள்ளது. ஓதலாந்தையார் அழுங்கலூரை ஒரு பாட்டிலும் (குறு:12) அழுங்கல் மூதூரை (ஐங்:372) ஒரு பாட்டிலும் அமைத்துப் பாடினார்.

அழுங்கலூர், அழுங்கல் மூதூர் ஆகிய இரண்டு தொடர்களையும் பயன்படுத்தியவர்கள் அம்மூவனாரும் ஓதலாந்தையாருமாகிய இருவரே. அஞ்சிலஞ்சியார், அதியன் விண்ணத்தனார், கல்லாடனார், நல்வழுதியார், பரணர் ஆகிய ஐவரும் 'அழுங்கல் மூதூர்' என்ற தொடரை மட்டுமே கையாண்டிருக்கின்றனர். ஏனைய பதினொருவர் 'அழுங்கலூர்' என்ற தொடரை மட்டுமே ஆண்டிருக்கின்றனர்.

தொடராட்சி அட்டவணை

வ. எண்	அழுங்கலூர்	அழுங்கல் மூதூர்	அழுங்கலூர் அழுங்கல் மூதூர்
1.	அள்ளூர் நன்முல்லையார் (குறு 140 : 5)	அஞ்சிலஞ்சியார் (நற். 90:0)	அம்மூவனார் அ. ஐங் 181 குறு. 351 ஆ. நற். 138
2.	உலோச்சனார் நற். 38:10: 63:5; 149:5: 203:11: அகம். 100 : 18 : 400:26	அதியன் விண்ணத்தனார் (அகம் 301:25	ஓதலாந்தையார் இ. குறு 12:6 ஆ. ஐங். 372:2
3.	கபிலர் குறு. 385:7	கல்லாடனார் (அகம். 113:8) நல்வழுதியார் (பரி. 12 100) ι ரணர் (அகம் 122:1)	
4.	கருவூர்க் கண்ணம் பாளனார் : அகம். 180:15		
5.	கூடலூர் கிழார் (குறு. 214:7)		

தொடராட்சி அட்டவணை

வ. எண்	அழுங்கலூர்	அழுங்கல் மூதூர்	அழுங்கலூர் அழுங்கல் மூதூர்
6.	கூழிக் (கோழீக்) கொற்றனார் (குறு. 276:8)		
7.	சீத்தலைச் சாத்தனார் (நற். 36:9)		
8.	பாலைபாடிய பெருங்கடுங்கோ		
9.	பெருங்கண்ணன் (குறு. 289.8)		
10.	(மதுரை தமிழ்க் கூத்தன்) கடுவன் மள்ளனார் (அகம். 70:17)		
12.	விற்றூ ற்றுமுதெயினனார் (குறு. 372 : 8)		

இத்தொடர்கள் அகப்பொருள் பாடல்களில் மட்டுமே பயன்படுத்தற்குரிய தொடராகின்றன. இக்கருத்தை வலியுறுத்துமாறு இத்தொடர், புறப்பொருள் நூல்களான பதிற்றுப்பத்திலோ புறநானூற்றிலோ பயிலவில்லை. நெடும் பாடல்களான பத்துப்பாட்டிலும் இவை காணப்படவில்லை. இந்த ஆட்சியின்மையும் இத்தொடர் அகப்பொருளுக்கே உரியது என்பதையே உணர்த்துகின்றது. அகப்பொருள் - திணையடிப்படையில் - இத்தொடர் ஆட்சியைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

இத்தொடர்கள் முல்லைத் திணைப் பாடலொன்றிலும் (குறு. 289:8) மருதத்திணைப் பாடலொன்றிலும் (நற் 90:1) பயில்கின்றன. குறிஞ்சித் திணைப்பாடல் ஆறிலும் (குறு. 385:1; 276:8; 214:7; 372:8, ஐங்.: 372:2, குறு. 140:5; 12:6; அகம் 301:25; 113:8; நற் 138:11; 38:10; 63:5; 149:10; 203:11; அகம் 100:18; 400:26; 180:15; 70:17) பதினொன்றிலும் பயிலுகின்றன. இத்தொடர் வருகையைக் கொண்டு ஆராய்கின்றபோது, இத்தொடர்கள் அகப்பொருளில் நெய்தல் திணைப்பாடல்களிலேயே மிகுதியும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது போதரும்.

நூல்	நெய்தல் களா. 8 கற் - 3 கற்பு - 5	பாலை களவு - 1	குறிஞ்சி களவு	முல்லை கற்பு	மருதம் கற்பு
ஐங்குறுநூறு	அம்மூவனார்	ஓத: ஐங் 372:2			2 களவு
குறுந்தொகை	அம். 351:8 கள	அள் 140:5-க ஓத. 12:6-க	கபி 385:7 கூ. கொ 276:8 கூ. தி 214:7 வி.மூ. 372:8	பெரு 289: 8	8
நற்றிணை	அம் 138-கற.11 உலோ 38:10: கற், கள63 : 5: 149:10-கற் 203 : 1:		சீசா 36:9		அஞ் 90:1
அகநானூறு	அம் 100:18கள 400:26 க.க: 180 : 15 - கள க.வ. 70:17 கள	அதி 301:25 113:8-க	பர 122:1		7
கலித்தொகை		பாலை பெரு 23:5 - க			1
பரிபாடல்				நல் பரி12 : 100	1

களவொழுக்கத்தில், தலைவன் தலைவியர் களவை ஊரார் அறிந்து பேசுதலை 'அழுங்கலூர், அழுங்கல் மூதூர்' என்ற அடைகள் உணர்த்துகின்றன. ஊரின் ஆரவாரத்தையும் தலைவன் - தலைவி தொடர்பைப் பலரும் பேசுதலையும் புனையும் புனைவாக இத்தொடர்கள் கையாளப்பட்டிருக்கின்றன. கூழிக் (கோழிக்) கொற்றனார், விற்றூற்று மூதெயினனார், கபிலர், கூடலூர் கிழார், சீத்தலைச்சாத்தனார், பரணர் ஆகிய அறுவரும் களவாகிய கைகோளிலேயே இத்தொடர்களைப் பயன்படுத்தினர். நெய்தல் திணைப்பாடல்களில் எட்டுப்பாடல்கள் களவையும் (குறு. 351, நற். 138; 63;230 அகம். 100; 180; 70; 400) மூன்று கற்பையும் (நற். 38; 149, ஐங். 181) பேசுகின்றன. பாலைத் திணைப்பாடல்களிலும் களவு பற்றிய பாட்டு (ஐங். 372) ஒன்றும் கற்புப் பற்றிய பாட்டுகள் ஐந்தும் (குறு. 140; 12, அகம். 113; 301, கலி. 23) உள்ளன.

பாலை திணையிலுள்ள கற்புக் கைகோளுக்குரிய பாட்டுகள், தலைவி தலைவன் பிரிவை ஆற்றாமல் வருந்துவதைத் தூற்றுவனவாகவே அமைகின்றன. ஓதலாந்தையார், அள்ளூர் நன்முல்லையார் பாடல்கள், தலைவியின் பிரிவைப் பற்றியே பேசுகின்றன. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் 'கற்பு காலத்தும் அலரெழுந்தென்று கூறுதல் தலைவிக்கு உண்டு'[6] என்று எழுதியுள்ளனர். கைகோள் களவாயினும் கற்பாயினும் தலைவி தலைவன் உறவாலோ பிரிவாலோ ஏற்படுகின்ற விளைவுகளை-மக்கள் பேச்சுகளை - உணர்த்துமாறு எழுகின்ற அலரையே 'அழுங்கலூர்' என்ற தொடர் காட்டுகின்றது. மேற்காட்டிய அனைத்தையும், ஒரு முகப்படுத்தி நோக்கின், 'அழுங்கலூர்', அழுங்கல் மூதூர் , என்ற தொடர்கள் அகப்பொருளை உணர்த்துவனவதாகச் சங்க நூல்களில் வழங்குகின்றன என்பது புலனாகும். தலைவன், தலைவியரின் களவொழுக்கத்தை வெளிப்படப் பேசுகின்ற அலர்நிலையை - ஊரின் நிலையை - காட்டுதற்காக இத்தொடர்கள் உருவாக்கப்பட்டுக் கையாளப்பட்டிருக்கின்றன.

அழுங்கலூர் என்ற தொடரே இயல்பானதாகவும் மிகுதியாகவும் வழங்கிய தொடராகும். புலவர்கள் தாங்கள் பாடிய ஊர், பழமையான ஊர் என்று அறிந்த போது, அந்த ஊருக்கு அதன் தொன்மையை உணர்த்த 'மூதூர்' என்று அடை வழங்கினர், வையையாற்றைப் பாடுகின்ற நல்வெள்ளியார், மதுரையைக் குறிக்கும் முகமாக 'அழுங்கல் மூதூர்' என்று அந்த ஊரை உணர்த்துகின்றார். மதுரை தொன்மையான ஊர்; அவ்வூரைச் சுட்ட வந்தபோது அழுங்கலூர், அழுங்கல் மூதூராக விரிந்தது. இவ்வடிப்படையில் எல்லாப் பாடல்களிலும் 'அழுங்கல் மூதூர்' என்ற தொடர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அழுங்கலூர் என்பது இயல்பான ஊரைப் புனைந்து காட்டும் தொடர்; இத்தொடரை மிகுதியான பாக்களில், மிகுதியான புலவர்கள் கையாண்டிருக்கின்றனர். இத்தொடரின் விளக்கமாகவும் ஊரின் தொன்மையை உணர்த்து முகமாகவும் 'மூதூர்' என்ற தொகைச் சொல்லடையே வருகின்றது. 'மூதூர்' என்று புலவர்கள் ஊரைச்சுட்டி அழைப்பானேன்? மதுரை, உறையூர் போன்ற ஊர்கள் மூதூர்கள்; இவற்றைச் சுட்டும்போது, 'மூதூர்' என்பது இயல்பானதும் பொருத்தமானதும் ஆகும்.

ஊரை புனைகின்றபோது, இந்தத் தொடர்கள் பாட்டில் பயிலுகின்றன. இந்த அடைத்தொடர்கள் மக்கள் வழக்கில் - பேச்சில் - பயின்றனவாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இருக்கின்றமையால் தான், இத்தொடர்களைச் சங்கப் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

சங்க இலக்கியத் தலைவன் தலைவியர் அகவொழுக்க மரபில் அலர் பேசுதலைச் சுட்டும் புலவர்கள், ஊரின் ஆரவார நிலையையும் வருத்த நிலையையும் இத்தொடர்களின் வழி வெளிப்படுத்துகின்றனர். தலைவன் தலைவியோடு கொண்ட களவொழுக்கத்தைப் பிறர் வாய்விட்டு அயலாரிடம் உரைக்கும் அல்-நாகரிகத்தைச் சித்தரிக்க விழையாத சங்கச் சான்றோர் குறிப்பாகச் சுருக்கி இத்தொடர்களைச் சங்க இலக்கியத்தில் பயன்படுத்தினர். இத்தொடர்கள் யாண்டும்

அலரொடு தொடர்புடையனவாய் - ஊர் நிலையைப் பேசுவனவாய் - உள்ளன. ஆண் - பெண் உறவுகளைச் சமுதாயம் நெறிப்படுத்த அம்பலும் அலரும் இன்றியமையாதன. இவை ஒருவனுக்கு ஒருத்தி என்ற அடிப்படையை உறுதிப்படுத்த உரியன. தனிமனிதவாழ்வை அறநெறிப்படுத்தும் சமுதாய உணர்வைக் காட்டுதற்கு இந்தப் புனைவுத் தொடர்கள் துணையாகின்றன.

ஊரின் ஆரவார மிக்க வருத்தநிலையைப் பலவாகப் புனைந்து தலைவன் தலைவியர் ஒழுக்க நிலைப் பிறழ்ச்சியை ஊரறியச் செய்து பல அடிகள் பாடாமல் தவிர்க்க இத்தகைய பொருள் பொதிந்த தொடர்கள் சங்கப் புலவர்களால் பயன்படுத்தப்பட்டன. அம்பல் பற்றிய பகுதி அம்பலூர் என்றும் அம்பல் மூதூர் என்றும் உணர்த்தப்பட்டது. அலரைப் பற்றி உணர்த்தும் தொடர்கள் 'அலரூர்' என்றோ 'அலர் மூதூர்' என்றோ வழங்கல் வேண்டும். அலர் என்ற ஒரு சொல் ஊரின் நிலையையும் அலரையும் நன்கு விளக்காமையின் அப்பொருளில் வேறு சொல் பயன்படுத்தப்பட்டது. அலரொடு அழுங்கலும் சேர்ந்தமையான் ஊர்ப் புனைவு அழுங்கலூராயிற்று. தலைவன் தலைவியர் அகவொழுக்க மரபில் ஊரின் ஆரவாரத்தையும் அலர் நிலையையும் புனைவது புறங்கூறலாய்விடும். பிறர் பழி தூற்றலாய்த் திகழும். கபிலர் 'தீவாய், அலர்வினைமேவல் அம்பல் பெண்டிர்' (அகம். 203:2-3) என்று பாடுவதும் இதனை வலியுறுத்தும். பிறர்பழி தூற்றிப் புறங்கூறும் அலர்பேசுதலை விரித்துப் பாட விழையாமலேயே புலவர்கள் அதனை விரித்துப்பாடாது, ஒரே தொடரான் கருத்தை உய்த்துணரவைத்தனர். ஆதலின், அம்பலூர், அம்பல்மூதூர், அழுங்கலூர் அழுங்கல் மூதூர் என்பன அகப்பொருட் கருத்தை உணர்த்துவனவாய் அகப்பொருட்பாடல்களில் பயின்று ஊர்ப்புனைவைக் காட்டுகின்றன.

•

இவ்வியலின் ஆய்வு முடிபுகள்

ஊரின் பரபரப்பு

1. அம்பலூர், அம்பல் மூதூர் என்பனபோல அழுங்கலூர், அழுங்கல் மூதூர் என்பன அமைந்திருக்கின்றன. இவை நான்கும் ஊரை விளக்கும் அடைகள்.

2. அம்பலூர் என்பதும் அழுங்கலூர் என்பதும் அம்பல், அலர் என்னும் அகப்பொருட் கருத்துக்களை விளக்குவன. இவை தலைவன், தலைவியர் தொடர்பை-களவை-அறிந்த ஊர் மக்களின் பரபரப்பை ஊரின் பரபரப்பு ஆரவாரமாகக் காட்டுதற்காகப் புலவர்களால் அகப்பாடல்களில் மட்டும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இவை அகப் பாடலுக்குரிய கலைச் சொற்கள்.

அலரூரா ? அழுங்கலூரா ?

3. 'அம்பலூர்' என்பதில் அம்பல் மட்டுமே இடம் பெறும். அலர்க்கு இடமில்லை. அம்பலில் அலர் அடங்காது; அலரில் அம்பல் அடங்கும். எனவே, அலரில் அம்பலும் பேசப்படும். 'அம்பல் மூதூர் அலர்வாய்ப் பெண்டிர்' (நற். 143:7) என்றும் 'அலர்வினை மேவல் அம்பற் பெண்டிர்' (அகம். 203) என்றும் வருவன இதனைக் காட்டுவன. அலரில் அம்பலுக்கு இடமுண்டு. தலைவன்-தலைவியர் காதலொழுக்கத்தைப் புறம் பேசித் திரியும் பெண்டிரின் ஆரவாரத்தை ஊர் மீதேற்றிப் புலவர் காட்டுவர். அம்பல் மூதூர் என்பது போல அலர் மூதூர் என்று தொடர் அமையவில்லை. அலர் என்பதற்கு ஈடாக அதன் விளைவான அழுங்கல், ஊருக்கு அடையாக நிற்கிறது. தொடர் அமைப்பில் அலர் வாராது அழுங்கல் வருகின்றது.

வழக்குத் தொடர்

4. அம்பலூர், அழுங்கலூர் என்பன மக்களுடைய பேச்சு வழக்கில் வழங்கிய தொடர்களாதல் வேண்டும். சங்க கால வழக்குத் தொடரான இவற்றைச் சங்கப் புலவர்கள் தங்கள் பாடல்களில் பயன்படுத்தினராதல் வேண்டும். ஊரின்

பழமையைப் புனைவில் காட்ட விரும்பிய புலவர்கள், வெளிப்படையாக 'அம்பல் மூதூர்' அழுங்கல்மூதூர்' என்பனவற்றைக் கையாண்டனர்.

அகப்பொருள் தொடர்

5. இவை களவு, கற்பாகிய இருவகைக் கைகோளிலும் அலர் எழுதலை உணர்த்தி ஊரின் ஆரவார நிலையைப் புனையத் துணையாகின்றன. இவை அகப்பொருளுக்கே உரிய கலைச் சொற்களாய் இலக்கியத்திலும் வழக்கிலும் வழங்கியவை. அகப்பொருள் நூலிலும் பயில்கின்றவை. தலைவன் தலைவியர் களவுக்காதலை அலராகப் பேசும் ஊரின் புனைவை விளக்க இத்தொடர்கள் பாக்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இவை புறப்பொருள் தொடர்பாகவோ புறப்பொருளிலக்கியங்களிலோ பயன்படுத்தப்படவில்லை. இவை அகப்பொருள் பாடல்களில் ஊர்ப் புனைவை காட்டக் கையாளப்பட்டிருக்கின்றன.

அடிவருகை இறுதியடி

6. அம்பலூர் என்பது பாடலின் ஈற்றடி முதற்சீரில் வருகின்றது. (குறு. 51:6) உலோச்சனார் பாட்டின் இறுதியடிக்கண் இறுதிச்சீரில் பயிலுகின்றது. (நற். 223:9) இரண்டு பாடல்களில் மட்டும் இத்தொடர் இறுதியடியில் வருகிறது.

அழுங்கலூர், அழுங்கல்மூதூர் என்பன ஊர்ப்புனைவை விளக்கும் தொடர்கள், பாடலில் இறுதியடியில் ஈற்றுச்சீரில் பதினாறு பாடல்களில் அமைந்துள்ளன. இவை குறுந்தொகைப் பாக்கள் அனைத்திலும் இறுதியடி இறுதிச்சீராக விளங்குகின்றன. 'அழுங்கலூர்' ஒரு சீராலானது. 'அழுங்கல் மூதூர்' இரு சீராலானது. பாட்டின் இறுதிச்சீராக இறுவன ஏகார ஈற்று அசையுடன் முடிகின்றன. அம்மூவனார் நற்றிணையில் 'அழுங்கல் மூதூர்' (138) என்ற தொடரை இறுதியடியில் முதற் சீராக்கியுள்ளார். இறுதிச் சீராக வேண்டியது முதற்சீராகியுள்ளது. இவர் பாடலில் ஈற்றயலடியில் முதற்சீருக்குப் பொருத்தமான எதுகையாதலின் இம்மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

முழங்கு திரை இன்சீர் தூங்கும்
அழுங்கல் மூதூர் அறிந்தன்றோ இன்றே

(நற். 138:10-11)

பாலைபாடிய பெருங்கடுங்கோ, பாலைக்கலியில் (23) தரவின் இறுதியடியில் இறுதிச் சீராக 'அழுங்கலூரை' ஆண்டிருக்கிறார். பாடலின் கருத்துத் தரப்பெறும் இடம் தரவு. அதனைத் தொடர்ந்து வரும் தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்பன தரவைத் தொடர்ந்து தரவின் கருத்தைவலியுறுத்துவன. எனவே பாலைபாடிய பெருங் கடுங்கோ பாட்டின் ஈற்றடி ஈற்றுச்சீரில் அமைப்பது அனையதே ஆகும்.

'அழுங்கலூர்' என்ற தொடர், பாடலின் இறுதியடியில் வருமாறு முதலடியிலும் இறுதிச் சீராக இரண்டு பாடல்களில் காணப்படுகிறது. ஒன்றை அஞ்சிலஞ்சியாரும் (நற். 90) மற்றொன்றைப் பரணரும் (அகம். 122) பாடினர். பரணர், 'அழுங்கல் மூதூர்' என்று ஊரின் தொன்மை தோன்றப் பாடினார். இத்தொடரின் இறுதியில் ஏகாரம் ஈற்றசையாக வரவில்லை.

பாடலின் இடையடி

கருத்தின் முத்தாய்ப்பாக ஈற்றடியில் அமைந்த பெயர், இடையடிகளிலும் பயிலலாயிற்று. 'அம்பல் மூதூர்' என்பதே பாடலின் இடையடிகளில் மிகுதியும் வந்திருக்கிறது. இஃது இடையடி முதற் சீராகும், பிற சீர்களில் வரவில்லை.

அழுங்கலூர், அழுங்கல் மூதூர் என்பன பாடலின் இறுதியடியில் வருமாறு, பாடலின் இடையடிகளிலும் வருகின்றன. அதியன் விண்ணத்தனார் 'அழுங்கல் மூதூர்' (அகம். 301:25) என்று இருபத்தைந்தாவது அடியில் முதற்சீராகப் பயன்படுத்துவர். உலோச்சனார் நற்றிணையில் (63) பாட்டின் ஐந்தாம் அடி முதற்சீராகக் கையாளுவர். கல்லாடனார் அகநானூற்றுப் பாடலின் (113) எட்டாம் அடியில் முதற்சீராகப் பாடினார். ஓதலாந்தையார் பாடலின் ஈற்றயலடியில் (ஐங். 372:3) இத்தொடரைப் பயன்படுத்தினார். பரிபாடலின் நல்வழுதியார் பாட்டில்

(12:100) ஈற்றடிக்கு முந்திய அடிக்கு முன்னடியில் இறுதிச் சீராக இத்தொடர் பயிலுகின்றது.

பாடலின் முதலடி

அம்பலூர், அம்பல் மூதூர் என்ற தொடர்கள் அகப்பொருள் பாடல்களின் முதலடியில் பயின்றில. ஒன்பது பாடல்களில் ஒன்றில் கூட இந்த அமைப்பைக் காண முடியவில்லை. அழுங்கலூர், அழுங்கல் மூதூர் என்பன இரண்டு பாடல்களில் (நற்.90, அகம்.122) மட்டுமே முதலடியில் காணப்படுகின்றன. இரண்டு பாட்டிலும் இவை முதலடியின் ஈற்றுச்சீராக வருகின்றன. அஞ்சிலஞ்சியார், பரணர் இருவரும் இவ்வாறு பாடியவர்கள். பாடலின் இறுதியடியில் இறுதிச்சீராக அமைத்துப்பாடுகின்ற மரபையே அதியன் விண்ணத்தனார் (அகம். 301:25), கல்லாடனார் (அகம். 113:8), உலோச்சனார் (நற். 63:5), ஓதலாந்தையார் (ஐங். 372:2) ஆகிய நால்வரும் பாடலின் இடையே இத்தொடர் வருமாறு பாடலாயினர். இவற்றையெல்லாம், ஒருமுகப்படுத்தி நோக்கும் போது, பாடலின் இறுதியடி இறுதிச் சீராக அமையும் 'அழுங்கலூர்' என்ற தொடரே பிற அடிகளிலும் பயிலலாயிற்று. அதன் விரிவாகவே 'அழுங்கல் மூதூர்' என்ற தொடர் பயன்படுத்தப்பட்டது.

அம்பல் தொடர்பான தொடர்கள் ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல் ஆகியவற்றில் பயின்றில. அழுங்கல் தொடர்பான தொடர்கள் அகப்பொருள் தொகை நூல்கள் அனைத்திலும் காணப்படுகின்றன. அம்பல், அழுங்கலூர் முதலிய நான்கு சொற்களும் புறநானூற்றிலோ பதிற்றுப்பத்திலோ பத்துப்பாட்டிலோ ஆசிரியர்களால் பயன்படுத்தப்படவில்லை. இவ்வுண்மையும் இந்நான்கு தொடர்களும் அகப்பொருளுக்கே உரியவை என்பதைக் காட்டுகின்றன.

தொடர்களும் ஊர்ப்புனைவும்

தலைவன் தலைவியர் ஒருவரையொருவர் காதலித்துத் திரிதலைக் களவு என்பர். களவொழுக்கத்தைக் கண்ணால் கண்ட ஊர் மக்கள் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் களவைப் பேசித்திரிவர். அந்தப் பேச்சை - மெய்ப் பாட்டை

- உணர்த்துமாறு அம்பலும் அலரும் உலாவரும். ஊரைப் புனையச் சங்கப் புலவர்கள் இந்த (அம்பலூர், அம்பல் மூதூர், அழுங்கலூர், அழுங்கல் மூதூர்). என்ற நான்கு தொடர்களை ஒரு குறியீடாகக் கையாண்டிருக்கின்றனர். இத்தொடராட்சியின் மூலம் ஊரில் அலர் பேசப்படுதலை உணரமுடிகிறது.

கருவூர்க் கண்ணம்பாளனார் (அகம் 180) நல்வழுதியார் (பரி 12) இருவரும் ஆளுக்கு ஒரு பாடல் பாடியவர். அவர்கள் இத்தொடரைக் கையாண்டதுடன் கூடுதலாகப் புனைவையும் அமைத்திருக்கின்றனர். 'பறவைகள் தங்கிய முள்ளுடைய நீண்ட இதழையுடைய தாழையைச் சார்ந்து புலிநகக்கொன்றையுடன் பொருந்தித் தோட்டத்தில் நிற்கும் வளைந்த தாளினையுடைய புன்னைப் பொன் போன்ற தாது போல விளங்கும், தலைவியின் மேனிப்பசலை'. இது கண்ணம்பாளனாரின் இயற்கைப்புனைவு. தலைவியின் மேனி நிலையைக் காட்டுமாறு இஃது அமைகின்றது.

நல்வெள்ளியார், மதுரையை அழுங்கல் மூதூர் என்று பரிபாடலில் பாடினார். இப்பாட்டு முழுமையும் ஆற்றுவெள்ளத்தையும் அதன் விளைவுகளையும் விவரிக்கின்றது. இஃது ஊர்ப்புனைவாகாது ஆற்றங்கரை நீர்விழாப்புனைவாக விளங்குகிறது. ஊரின் அம்பல், அலர்ப்புனைவை இந்தப்புனைவுகள் விளக்கில. முற்சுட்டிய நான்கு தொடர்களே ஊர்ப்புனைவைச் சுட்டுகின்றன.

திணையும் தொடர்களும்

அம்பலூர், அம்பல் மூதூர் என்ற தொடர்கள் நெய்தல் திணையில் மூன்றிலும் (நற். 223:249:272) குறிஞ்சித்திணையில் மூன்றிலும் (நற். 85, அகம். 218; 282) பாலைத் திணையில் இரண்டிலும் (நற். 143, அகம். 347) மருதத்திணையில் ஒன்றிலும் (குறு. 51) பயிலுகின்றன.

அழுங்கலூர், அழுங்கல் மூதூர் என்ற தொடர்கள் நெய்தல் திணையிலே தாம் மிகுதியாக வருகின்றன. இத்தொடர்கள் முல்லைத் திணையில் ஒரு பாட்டிலும்

(குறு. 289) மருதத்திணையில் ஒரு பாட்டிலும் (நற். 90) பயிலுகின்றன.

கூற்று நிகழ்த்துவோர்

அம்பல், அம்பல் மூதூர் என்ற தொடர்கள்

	தலைவி	தோழி	தாய்(நற்றாய்)
அம்பலூர்	குறு. 51:6	நற். 223:9	--
அம்பல் மூதூர்	நற். 249:10 நற். 272:9 அகம். 347:7	நற். 85:3 அகம். 218:19	நற். 143:7

இவற்றை அகப்பொருளில் வருகின்ற பெண் மக்களே பேசுகின்றனர். ஆண்கள் கூறிய குறிப்புக் காணப்படவில்லை.

அழுங்கலூர், அழுங்கல்மூதூர் என்ற தொடர்கள் பயிலல்.

	தலைவி	தோழி	தாய்(நற்றாய்)	தலைவன்
அழுங்கலூர்	ஐங். 181 குறு. 12:6 குறு. 140:5 குறு. 289:8 குறு. 385:5 நற். 38	குறு. 214:7 குறு. 351:8 குறு. 372:8 நற். 36:63 நற். 149:203 அகம்.70:17 100:18; 180:5 400:25		குறு 276:8
அழுங்கல் மூதூர்	அகம். 113:8 122:1 301:25 பாலைக்கலி. 23.	நற்:90 நற்:138	ஐங். 372	

தலைவி, தோழி, தாய் ஆகிய பெண் மக்கள் கூற்றில் தான் இவ்விரு தொடர்களும் காணப்படுகின்றன. அம்பல்மூதூர், அழுங்கல் மூதூர் என்று மூதூருடன் வருகின்றன. தாய் கூற்றில் தான் பயிலுகிறது. 'அழுங்கலூர்' என்ற தொடரைத் தலைவன் கையாளுகின்றான். தலைவன் தனக்கும் தலைவிக்குமுள்ள தொடர்பைக்காட்ட மடலேறி அவளை அடைவேன் என்று கூறும்போது இது தலைவியைச் சுட்டியுரைத்தது. அதனால் இது தலைவன் கூற்றாயிற்று. இத்தொடர்கள் பெண்கள் கூற்றாக அமைவதுடன் இவை பெண் தொடர்பைக் காட்டுவனவாயும் அகப்பொருட் சார்புடையனவாயும் விளங்குகின்றன. இவர்கள் அன்றி இன்னும் பலர் அகப்பொருளில் கூற்று நிகழ்த்து வோராயினும் அவர்கள் கூற்றுகளில் எல்லாம் இந்தத் தொடர்கள் ஆளப்படவில்லை.

சான்றெண் விளக்கம்

1. ஆ. சிவலிங்கனார், (தொ.கு) (1994), தொல்காப்பியம் - பொருளதிகாரம், களவியல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. பக். 458 - 464. பகற்குறி, இரவுக்குறி என்பன தலைவி நிலத்தில் சுட்டப்பெறும் (சூ.எண்.40,41,42)

2. வ.சுப. மாணிக்கம், (1962) - **தமிழ்க்காதல்**, பாரிநிலையம், சென்னை, ப.71.

3. அகம்.218 : 18-22

 அன்னை யறியினும் அறிக அலர்வாய்
 அம்பல் மூதூர் கேட்பினும் கேட்க
 வண்டிறை கொண்ட எரிமருள் தோன்றியொடு
 ஒண்பூ வேங்கை கமழுந்
 தண்பெருஞ் சாரல் பகல்வந் தீமே

4. இரா. சாரங்கபாணி (மு.ப), (1986), **சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்**, (தொகுதி-1) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ப. 107.

5. வ.சுப. மாணிக்கம், **தமிழ்க்காதல்**, ப. 381.

6. ஆ. சிவலிங்கனார் (தொ.கு), (1993), **தொல்காப்பியம் - பொருளதிகாரம் - கற்பியல்**, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பக். 229 - 30.

இயல் ஆறு

ஊருவமைப் புனைவுகள்

ஊருவமைப்புனைவுகள்

முன்னுரை

சங்க இலக்கியங்களில் ஊரைத் தலைவனைச் சார்த்தியோ தலைவியைச் சார்த்தியோ அவள் தந்தையைச் சார்த்தியோ சங்கப்புலவர்கள் பாடியுள்ளனர். ஊர்ப்புனைவு, சங்கப்பாடல்களில் மிகுதியாகப் பயின்று ஆட்சி பெற்றிருக்கிறது. ஆதலால், அனைவரும் அறிந்த உவமையாகச் சங்கப்புலவர்கள் ஊரைப் பயன்படுத்தியுள்ளனர். சங்க இலக்கிய ஊர்ப்புனைவு, ஊரைப் பற்றி அறியவும் திணையை உணரவும் தரவுகளாகின்றன. அவை படைப்பாளிக்கு முதற்பொருளைக் கூற நிலைக்களமாகின்றது.

சங்க இலக்கியங்களில் ஊர் உவமையாகப் பயன்படுத்தப் பெற்ற இடங்களுள் தலைவிக்கு ஒப்புமையாக ஊர் உவமை மிகுதியாக இடம் பெற்றுள்ளது. தொண்டி, மாந்தை, அள்ளூர், விளங்கில், பொறையாறு, பவத்திரி, மருங்கூர்ப்பட்டினம், சிறுகுடி, வஞ்சி, ஆர்க்காடு, இருப்பை, கூடல், வியலூர், பொதினி முதலான பதினான்கு ஊர்கள் தலைவிக்கு ஒப்புமை கூறப்பட்டிருக்கின்றன. அம்மூவனார், அள்ளூர் நன்முல்லையார், ஆலம்பேரி சாத்தனார், உலோச்சனார், குடவாயிற் கீரத்தனார், குன்றியனார், கொல்லிக் கண்ணன், நக்கீரர், பரணர், மருதனிளநாகனார், மாமூலனார் மற்றும் பெயர் காணப்படாத ஆசிரியர் ஒருவருமாகப் பன்னிருவர், தலைவிக்கு ஊர்களை உவமித்துள்ளனர்.

புலவர்கள் ஊரைத் தலைவியின் ஒட்டுமொத்த நலனுக்கு உவமிப்பர். சிறுபான்மையாகத் தலைவியின் கண், மார்பு, தோள், தொடி, கூந்தல், நுதல் ஆகியனவற்றிற்கும் ஊர்களை உவமை கூறியுள்ளனர். இவ்வாறு தலைவியை எவ்வாறாவது தொடர்புபடுத்தி ஊரைச் சங்கப் புலவர்கள் பண்டு புனைந்திருக்கின்றனர். சங்கப் புலவர்கள் உவமையாக ஊரினைப் புனையும் முறையை இவ்வியல் விளக்குகிறது.

முழு அழகுப் புனைவு

அம்மூவனார் தலைவியின் நலத்திற்குத் தொண்டியை நான்கு பாடல்களில் (அகம்.10, ஐங்.175,179,180) உவமித்திருக்கிறார். இவருடைய புனைவுகளில் விரிவானது, அகநானூற்றுப் புனைவு,

.......			கொண்டலொடு
பழந்திமில்	கொன்ற	புதுவலைப்	பரதவர்
மோட்டுமணல்	அடைகரைக்	கோட்டுமீன்	கொண்டி
மணங்கமழ்	பாக்கத்துப்	பகுக்கும்	
வளங்கெழு	தொண்டி	யன்னஇவள்	நலனே

(அகம்.10:8-13)

இப்புனைவு ஐந்தடிகளான் அமைந்தது. கீழ்க்காற்றால் கடலலைகள் மணல் மேட்டைச் சிதைக்கின்றன. பழைய படகுகளைப் பழுது பார்த்துப் புதிய வலைகளைப் பரதவர் பின்னுகின்றனர். மேடாக மணல் கிடக்கும் கடற்கரையில் கிடக்கும் சுறாமீன் குவியலைப் பாக்கத்திலே உள்ள பலருக்கும் பங்கிட்டுக் கொடுக்கும் வளம் பொருந்தியது தொண்டி நகர். தொண்டி நகர் போன்றது தலைவியின் நலன். தலைவி நலனைக் காட்டிட ஊர் உவமையாகிறது.

தொண்டி நெய்தல் நிலத்திலுள்ள ஊர். இவ்வூர் வருணனையில் நெய்தற் கருப்பொருள்களான வலை, மீன்கள் ஆகியனவும் நெய்தல் நிலத்தில் வாழும் பரதவரும் சுட்டப் பெறுகின்றனர். தொண்டி நகரை அறிந்தவருக்கே அதனுடைய வளமை தெரியும். தொண்டி உலகறிந்த ஊராக இருப்பதாலேயே அம்மூவனார் ஊரை உவமிக்கின்றார்.

உழுதல், விதைத்தல், களையெடுத்தல், அறுத்திடல் என்னும் எவ்வகை முயற்சியுமின்றித் தாமே கிட்டுவன கடல் மீன்கள். கடலிலிருந்து பிடித்து வரப்பட்ட மீன்கள் பலருக்கும் பகுத்துக் கொடுக்கப்படுகின்றன. 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பு' தொண்டி மண்ணின் பண்பாகும் - வளம் நிறைந்த தொண்டியைத் தலைவிக்குப் புலவர் உவமிக்கிறார். இதன் மூலம் தலைவன் தலைவியை மணந்து

கொள்ள வேண்டும் என்று தோழி வற்புறுத்துகிறாள். வளமான ஊரை அதன் தலைவன் அழியா வண்ணம் காக்குமாறு தலைவியையும் தலைவன் காத்தல் வேண்டும் என்பதையும் இவ்வுவமை வற்புறுத்தப்படுகிறது.

புனைவுப் பொதி பொருள்

இப்புனைவு இயற்கையையோ இயற்கையை ஒட்டிய தொழிலையோ புனைவதோடு அடங்கிவிடவில்லை. அஃது இன்னொரு கருத்தையும் குறிப்பாகக் காட்டுகிறது. சுறா மீன் வேட்டையாடாமல் தானாகக் கரையில் ஒதுங்கியது. அந்த மீன் கூறு வைத்து ஊருக்கெல்லாம் வழங்கப்பட்டது. அதுபோலத் தலைவனும் கற்பொழுக்கத்தில் ஈடுபடாமல் களவொழுக்கத்தால் ஊரார் பேசும் அலரை மக்களுக்கு வழங்குதலை உணர்த்துகிறார், அம்மூவனார். இவ்வுட் பொருள், தொண்டிக்குரிய ஊர்ப்புனைவின் விரிவினாலேயே கிட்டுகிறது. இஃது ஊர்ப்புனைவின் ஒரு பகுதியின் மறைபொருள்; அஃதே இன்னொரு பொருள். இவ்வியற்கைப் புனைவாலும் குறிப்புப் பொருளாலும் தலைவியைத் தலைவன் விரைந்து மணந்து கொள்ள வேண்டும் என்ற கற்பறம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

அம்மூவனார், நற்றிணைப் பாடலில் (395) களவு நீட்டித்தலால் உண்டாகும் விளைவினைப் பேசுகிறார்; அதன் கண் 'மாந்தை' என்ற நகரம் உவமிக்கப்படுகிறது. இரண்டு பாக்களிலும் (அகம்.10, நற்.395) தலைவி கற்பறத்தை மேற்கொள்ள வற்புறுத்து முகமாக ஊர்களே சுட்டப்படுகின்றன.

கற்பறம் வலியுறுத்தும் புனைவுப்பொருள்

தலைவியின் இயற்கை அழகைப் பாடிட வந்த அம்மூவனார் சேரநாட்டுத் தொண்டியைப் புனைந்தார். இப்புனைவு இன்னொரு குறிப்புப் பொருளையும் தருமாறு அமைக்கப்பட்டிருக்கிறது. சுறாமீன் வேட்டையாடாமல் தானாகக் கரையில் ஒதுங்கியது. அம்மீனைக் கூறு வைத்துப் பரதவர் ஊருக்கெல்லாம் வழங்கினார்கள். அதுபோலத் தலைவனும் கற்பொழுக்கத்தில் ஈடுபடாமல் களவொழுக்கத்தில் ஈடுபட்டு ஊரார் பேசும் அலரை மக்களுக்கு வழங்கினான்.

களவொழுக்கத்தில் தலைவியைக் கூடி மகிழும் தலைவனை இல்லறப்படுத்தத் தோழி ஊர்ப் புனைவால் உணர்த்துகின்றாள். ஊர்ப் புனைவின் குறிப்புப் பொருள், தலைவியைத் தலைவன் மணந்து கூட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

பிறிதொரு பாடலில் அம்மூவனார் களவு நீட்டித்தலினால் உண்டாகக்கூடிய விளைவினைப் பேசுகிறது. அப் பாடலில் மாந்தை (மரந்தை) என்ற ஊர் உவமையாகிறது. தலைவியின் களவைக் கற்பாக்கும் வளர்ச்சிக்குத் தொண்டி உவமையானாற் போல நற்றிணைப் பாடலில் (395) மாந்தை உவமையாகிறது. தலைவன் கூடி முயங்கி வரையாது காலம் நீட்டித்தான். வளமை நிறைந்த தலைவியின் இளமை அழகைத் தலைவன் துய்த்து மகிழ்ந்தான். அயலார் தலைவியைப் பெண் கேட்டு வரைய முயன்றனர். அஞ்ஞான்று தோழி மணஞ் செய்யத் தூண்டிக் களவால் தலைவி இழந்த கவினைத் தருக என்று தலைவனைக் கேட்டாள். தலைவி, கவினை உணர்த்த மாந்தை உவமையாகிறது. தலைவியின் அழகு மாந்தை ஊர் போன்ற அழகாகும்.

மாந்தையை அம்மூவனார் கடற்கரை ஊராகப் புனைகுவர். குட்டுவன் வேந்தர்களை வென்ற போர்க்களத்தில் முரசதிர்ந்தது போலக் கடலலை ஓசையை எழுப்பியது. அக்கடலில் பாய்ந்து நீராடிய மகளிர் தாம் அணிந்திருந்த பலவாய மலர்களைக் களைந்தெறிந்தனர். அவற்றை முதிர்ந்த ஆக்கள் தின்றன. அவை தங்களுடைய புலத்தில் புகுகின்ற மாலைக் காலத்தில் கடற்கரையிலமைந்த மாந்தை நகர் போன்றவள் தலைவி.[1] மாந்தை நகரின் விரிவான புனைவால் அம்மூவனார் தலைவியின் அழகுச் சிறப்பைக் காட்டுகின்றார். தலைவி கன்னிமை வனப்பை - குமரிக் கவினை - இந்த ஊர்ப்புனைவால் காட்டுகிறார், அம்மூவனார். தலைவனுடன் தலைவிக்கு மெய்ப்புணர்ச்சி அமையுமுன்னர் வாய்த்திருந்த கட்டழகைக் காட்ட பெயர் சுட்டிய ஊர்ப்புனைவு பயன்படுகிறது.

தொண்டி என்ற ஊருக்கு முதன்மை கொடுத்து அம்மூவனார், தொண்டிப் பத்துப் பாடியிருக்கிறார். இதன் கண் நான்கு பாடல்களில் தொண்டியைத் தலைவி நலத்திற்கு அம்மூவனார் உவமை கூறியுள்ளார். (ஐங்.171, 175, 179, 180)

ஐங்குறு நூற்றில் மூன்று பாடல்களில் (175, 179, 180) அம்மூவனார் தலைவி நலத்துக்குத் தொண்டியை உவமிக்கின்றார்.

தொண்டி யன்னநின் பண்புநலங்கொண்டே

(ஐங். 175:4)

...... பெருநீர்
வலைவர் தந்த கொழுமீன் வல்சிப்
பறைதபு முதுகுரு கிருக்குந்
துறைகெழு தொண்டி யன்னவிவ ணலனே

(ஐங்.180:2-4)

இரண்டு பாடல்களிலும் தலைவி நலத்தைக் காட்டத் தொண்டி உவமையாகிறது. ஒரு பாட்டில் (ஐங். 175) தொண்டி பெயர் மாத்திரையான் மட்டுமே சுட்டப்படுகிறது;. புனைவு கிடையாது. மற்றொரு பாட்டு, 'கடலிற்குச் சென்று வலைவர் பிடித்து வந்த கொழுமீனாகிய உணவினைத் தின்னக் கருதிப் பறக்கும் ஆற்றலை இழந்த கிழக்கொக்குக் காலம் பார்த்திருக்கும் தொண்டி', என்பது புனைவு.

அம்மூவனார் தன் புனைவின் வழி வேறு கருத்தை உணர்த்த வேண்டும் என்று கருதி ஊர்ப்புனைவை அதற்குத் தகப் புனையும் போது ஊரின் செயற்பாடே வெளிப்படுகின்றது. 'இவ்வுள்ளுறைக்கண் தலைவியின் குடிக்குக் கடலும், தலைவனுக்கு வலை வீசி மீன்படுக்கும் பரதவரும், தலைவியை மணம் பேசி வந்தோர் இழிவிற்குக் கிழக்கொக்கும்' உவமமாக்கப்பட்டிருக்கின்றன.[2]

அம்மூவனார் தொடர்ச்சியாகத் தொண்டியைப் பத்துப் பாடல்களில் பேசுவதால், ஒரு பாட்டில் பெயரை மட்டும் (175) சுட்டினர்; இன்னொரு பாட்டில் புனைவமைந்தது (180). மற்றொரு பாட்டில், தொண்டி தலைவியின் உறுப்பாகிய நுதலுக்கு உவமை (179) யாயிற்று.

ஊர்களைப் பெண்களுக்கு உவமை கூறிப்பாடுவதுதான் சங்க இலக்கியத்தில் பெரும்பான்மை மரபு. தொண்டிப்பத்தில் தலைவன் தனக்குத் தொண்டியை உவமை கூறிக்கொள்ளுகிறான். தலைவன் தனக்கு ஊரினை உவமை கூறுவதாக வேறு சங்கப் புலவர்கள் யாரும் பாடிலர். அம்மூவனார் ஆண்மகனுக்கு ஊரை உவமித்து வேறுபட்டு நிற்கின்றார்.

தோளும் கூந்தலும் பலபா ராட்டி
வாழ்த லொல்லுமோ மற்றே செங்கோற்
குட்டுவன் றொண்டி யன்ன
வெற்கண்டு நயந்துநீ நல்காக் காலே
(ஐங்.178)

என்பது பாட்டு. இப்பாடல் தலைமகன் தோழியை இரந்து குறை நயந்து கூறுவதாகும். அம்மூவனார் எந்த நோக்கில் தலைவனுக்குத் தொண்டியை உவமிக்கிறார் என்று தெரியவில்லை; உவமை அடிப்படை வெளிப்பட விதந்து சொல்லப்படவில்லை. அம்மூவனார் காலத்தில் தொண்டியின் சிறப்பும் வளனும் மக்கள் அனைவரும் அறிந்ததாக விளங்கின. எனவேதான் பெயர் சொன்ன மாத்திரை கருத்துத் தெளிவாக வெளிப்பட்டிருக்கிறது.

புனைவுப் புதுமை

குட்டுவன் தொண்டியில் அவனது செங்கோன்மை காரணமாக அறம் நிலவுகின்றது. அது போன்று யானும் அறம் பிறழாச்செம்மையுடையேன் காண் என்று கூறு முகமாகத் தலைவன் செங்கோல் தொண்டியை உவமமாக்கினான். தோழி தலைவன் மணப்பானோ மணவானோ என்று ஐயுற்ற நிலையில், நீயிர் ஐயுறாதே கொண்மின் என்று தலைவன் தன் உறுதிப்பாட்டைத் தெளிவுபடுத்துகிறான்.[3] இதன் காரணமாகத் தலைவன் தனக்கு ஊரை உவமித்துக்கொள்ளுகிறான். ஐங்குறு நூற்றில் அடி எண்ணிக்கை குறைவாதலின், ஊர் பற்றிய புனைவும் புனைவுக்கு அடிப்படையான காரணங்களும் தெற்றெனக்கிளக்கப்படவில்லை. அதனால் மிகச் சுருக்கமாகத் தொண்டியின்

உடைமையாளன் (மன்னன்), தொண்டிக்கடற்கரை, ஆகிய செய்திகள் புனைவு பெற்றுள்ளன.

அம்மூவனார் தொண்டி, மாந்தை என்ற இரு ஊர்களைத் தலைவியின் நலத்திற்கு உவமை கூறியும் ஒரு பாடலில் மட்டும் தொண்டியினைத் தலைவனுக்கு உவமைப்படுத்தியும் பாடியுள்ளார். தலைவனுக்கு ஊரை உவமிக்கும் போது தொண்டியின் உடைமையாளன், தொண்டியின் அற மேன்மை ஆகிய இரண்டும் இயம்பப் பெறுகின்றன. தலைவியின் அழகைச் சிறப்பிக்கும் முகமாக ஊரின் வளமே பேசப்படுகிறது. ஒரு பொருளைப் பெண்ணுக்கு ஒப்பிடல், ஆணுக்கு ஒப்பிடல் என்ற இரண்டு நிலையில் இரண்டு வெவ்வேறான போக்கே காணப்படுகிறது. ஆண்மகன் என்பதால் உவமையில் அவனுடைய புறப்பண்புகள் தோன்றுமாறு ஊர் புனையப் பெறுகிறது.

குன்றியனார் புனைவு

தொண்டி நகரினைக் குன்றியனார் குறுந்தொகையில் தலைவிக்கு உவமையாக்குவர். அம்மூவனாரின் புனைவு நோக்கே குன்றியனாரிடத்தும் காணப்படுகிறது. அம்மூவனார் களவு வாழ்க்கையினை நெய்தல் திணைப்பாடலில் வைத்துப் பேசுகிறார். களவில் தலைவனைப் பிரிந்த தலைவி, தொண்டி போன்ற தன்னிளமைக் கவினை இழந்து விட்டாள், என்பது அவர் துணிபு. ஆனால், குன்றியனார், கற்பில் தலைவன் பிரிவால் வாடுகின்ற தலைவியின் வளமைக்கவின் இழப்பை மருதத்தில் பாடுகின்றார். இது கற்பில் தோழி கூற்றாகும்.

தலைவன் தலைவியை விடுத்துப் பரத்தையிடம் போய் விட்டான்; திரும்பி வந்த போது தோழி அவனிடம் தலைவியின் பழைய நலத்தை - கன்னிமை கனிந்த கட்டிளமை நலத்தைத் - தரும்படி வேண்டுகிறாள்.

பாசவல் இடித்த கருங்கா முலக்கை
ஆய்கதிர் நெல்லின் வரம்பணைத் துயிற்றி
ஒண்டொடி மகளிர் வண்ட லயரும்

தொண்டி யன்னவென் நலந்தந்து

கொண்டனை சென்மோ மகிழ்ந நின்சூளே

(குறு.238:1-5)

அவலிடித்த வயிரம் பொருந்திய உலக்கைகளைப் பெண்டிர் வயல் வரப்பிலே வைத்திருக்கின்றனர். அவல் குத்தியதை விடுத்து அவர்கள் வண்டல் விளையாடுகின்றனர். குன்றியனார் மருதமும் நெய்தலும் கலந்த ஊராகக் காட்டப் பெண்கள் செயல்களைப் புனைகின்றார். மங்கையரின் அமைதியான வாழ்க்கைக்குத் தொண்டி நிலைக்களன். தலைவி வாழ்க்கையோ தலைவன் பிரிவால் கவலுதற்குரித்தாயிற்று. தொண்டி மகளிர் போலத் தலைவியும் நலனும் நன்மையும் பெற்று அன்புடைய இல்லறநெறி வாழுதல் வேண்டும் என்பது தோழியின் விழைவு. மகளிர் காதலர்ப் பிரியாது கவலையின்றி வாழுதற்கு உரிய ஊர் தொண்டி. அவ்வாறே தலைவியும் தலைவனுடன் இணைந்து மகிழ்ந்து வாழுதல் வேண்டும் என்பதை ஊர்ப்புனைவுவமையால் குன்றியனார் காட்டுகின்றார். இதனைப் பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனார்,

> தொண்டி சிறந்த பட்டினத்துக்குரிய மாண்புகளெல்லாம்
> உடைத்தாதல் போலத் தலைவியும் மகளிர்க்குரிய பெண்மை
> நலத்துக்குரிய எல்லா மாண்புகளும் உடையாள் என்பாள்
> தொண்டியினை என்னலம் என்றாள்[4]

என்று தலைவி மாண்பாக விளக்குகிறார்.

ஊர்ப் புனைவில், பெண்டிர் இயற்கை இயைந்த வாழ்வு வாழுதலைப் புனைகிறார், புலவர். மரங்களையும் செடி கொடிகளையும் விண்மீனையும் நிலவையும் அமைத்துப் புனைவை அமைக்காது செயற்படுவதாகப் புலவர் புனைவை அமைத்துக் காட்டுகிறார். கற்பு நெறிப்பட்ட தலைவி கவலையற்ற வாழ்க்கை வாழ வேண்டும் என்பதை வண்டலயரும் விளையாட்டாகக் குன்றியனார் கூறுகின்றார். தொண்டியைத் தலைவன் ஊர் என்று கொண்டால் ஊரிலுள்ள பெண்கள் நல்வாழ்வு வாழும்போது தலைவி மட்டும் தலைவனைப் பிரிந்து வருந்த வேண்டியதென்ன? இவ்வுவமப் புனைவால் தொண்டி போலத் தலைவன்

மனையில் தலைவியும் நலம் பெற்றிருக்க வேண்டும் என்று குன்றியனார் உய்த்துணர வைக்கின்றார்.

தொண்டியில் மக்களுக்குத் தேவையான நெல் விளைந்து அவலாதற்கு உரித்தானது போலத் தலைவியிடமும் தலைவன் துய்க்கத்தக்க இயற்கையழகு கனிந்து இருக்கிறது என்று காட்டப்படுகிறது. ஊரை உவமை கூறுதல் மட்டுமின்றி ஊரைப் புனைந்து சொல்லுதலும் இங்குக் கருத்துடையதாகத் திகழ்கின்றது.

நக்கீரர் புனைவு

நெய்தல் திணைக்குப் பொருந்த கடற்கரை ஊர்களான பவத்திரியையும் மருங்கையையும் நக்கீரர் பாடலில் புனைகின்றார். பவத்திரி (அகம்.340) திரையனுக்குரியது; மருங்கை (நற் 358) பாண்டியனுக்குரியது.

செல்லா நல்லிசைப் பொலம்பூட் டிரையன்
பல்பூங் கானற் பவத்திரி அனவிவள்

(அகம். 340:6-7)

என்று பவத்திரியைத் தலைவிக்கு உவமிக்கின்றார். மூன்று சொற்கள் ஊர்ப்பெயர்க்கு முன்னின்று கருத்துணர்த்துகின்றன. கடற்கரையில் பூ மரங்கள் நிறைந்தமையை அடைகள் காட்டுகின்றன. இதனைத் தொடர்ந்து வரும் அடிகள் தலைவி இருக்கின்ற நெய்தல்புனைவைக்காட்டுகின்றன.

....... ஒல்லெனக்
கழியே ஓதம் மல்கின்று வழியே
வள்ளெயிற் றரவொடு வயமீன் கொட்கும்

(அகம்.340:8-10)

இவ்வாறு நிலத்தைப் புனைந்தவர், பொழுதை 'மான்றின்று பொழுதென'ப் புனைகுவர்.

'திண்ணிய படகுகளுடன் சென்று பகலிலே மீன் பிடிக்கும் தொழிலைப் பரதவர்கள், கடுங்காற்று விசையுடன் சென்றபோது சுறா மீன்கள் ஒருங்கே பாய்ந்து நீண்ட வலைகளைக் கிழித்துவிட்டன; பரதவர்கள் அவற்றை முடித்திட்டிருக்கின்றனர். இதனால் மீன்பிடிக்கும் தொழில் ஒழிந்த குளிர்ந்த கடலிலிருந்து அசைந்து வருகின்ற காற்று வீசுந்தோறும், வீட்டு முற்றத்திலுள்ள தாழை மரத்தின் மீது வலை கிடந்து அசையும்; இத்தகைய தெளிந்த கடற்பரப்பினையுடைய ஊர்' (அகம்.340:17-24). இது பவத்திரியின் இயல்பான ஓவியப்புனைவு.

தலைவியின் ஊரை நக்கீரர் விரிவாகப் புனைகின்றார். தலைவிக்கு உவமை சொல்லிய ஊரின் பெயரை நக்கீரர் சுட்டியுரைத்தார்; ஆனால் அவண் இயற்கையையோ பிறவற்றையோ விரித்துப் புனையவில்லை. தலைவி இருந்த ஊரை நக்கீரர் பரதவர் வாழ்விடம் புனைந்தார்; ஊர்ப்பெயரைச் சுட்டவில்லை. உவமையான ஊரில் பெயர் சுட்டியும் புனைவூரில் பெயர் சுட்டாமலும் நக்கீரர் ஊரைப் புனைகின்றார்.

இவர் இன்னொரு பாடலில் மருங்கையைப் புனைகின்றார். (நற்.358); மற்றொரு பாடலில் இவ்வூரை மருங்கூர்ப்பட்டினம் (நற். 258) என்பர். இத்துறைமுகப் பட்டினம் தலைவியின் எழிலுக்கு உவமையாகிறது. இரண்டடிகளான் இந்த ஊர்ப்புனைவு அமைகிறது. பெரியதும் சிறந்ததுமான பஞ்சு போன்ற தலையையுடைய இறாலின் மடங்கலைச் சிறு வெண்காக்கை விடியற்காலையில் இரையாகப் பெறும் என்று நக்கீரர் இயற்கையைப் புனைகிறார். இப்புனைவுடன் பசும்பூண் வழுதி மருங்கூர் (நற்.358) தலைவியின் அழகுக்கு உவமையாகிறது. கடற்கரை ஊர்களில் மீன்வளமே மிகுதி. கடற்கரை ஊர்களைப் புனையும்போது, அங்கு மீன்களைப்பறவை இரையாகப் பெறுதல் ஊர்ப்புனைவாகிறது.

இப்புனைவு உள்ளுறையாகப் பாடுபொருளுக்கு இசைவான கருத்தையும் பயக்குகிறது. இறாலின் முடங்கலைச் சிறு வெண்காக்கை நாட் காலையில் இரையாகப் பெறும்; இது புனைவுச் செய்தி. இப்புனைவு தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவன் பெரும்பொருளைப் பெற்றுத் திரும்புவான் என்ற குறிப்புப்பொருளை உணர்த்துகிறது.

அறத்தொடு நின்றபின் வரையாது பொருள்வயிற் பிரிகின்றான், தலைவன். அக்காலத்து ஆற்றாத தோழி கூற்றாகப் பாடல் பாடப்பட்டுள்ளது; ஆதலின் தலைவன் பொருள் தேடி வருவான் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

இவ்வாறு தலைவிக்குச் சங்கப் புலவர்கள் ஊர்களை உவமை உரைக்கின்றனர். ஊர்களைச் சுட்டிப்பாடும் புலவர்கள் ஊரைப் புனைந்து பாடுகின்றனர்; இப்புனைவில் ஊரின் பெயர் வெள்ளிடை மலையென வெளிப்படையாகக் கூறப்படுகிறது. தலைவிக்கு உவமையாக அமையும் ஊர்ப்புனைவுகள் எல்லாவற்றிலும் ஊரின் பெயர் சுட்டப்படுவது தனிச் சிறப்பு. இப்புனைவு அளவாகவே அமைகிறது. பெரும்பாலான ஊர்கள், நெய்தல் சார்புடையனவே; இவற்றில் உயிரினங்களின் இயக்கமே பாடப்படுகிறது. அவற்றில் சில, பாட்டின் மையக் கருத்தினை விளக்கும் உள்ளுறையாகத் திகழ்கின்றன.

பரணரின் மருதத்திணைப் பாடல்களில் மாந்தை (அகம்.376), வஞ்சி (அகம்.396), ஆர்க்காடு (குறு.258), என்னும் மூன்றூர்கள் தலைவியின் நலத்திற்கு உவமையாகப் புனையப்பெறுகின்றன. அகநானூற்றுப் பாடல் இரண்டும் காதற்பரத்தை கூற்றாகவும் குறுந்தொகைப் பாடல் தோழி கூற்றாகவும் அமையும்.

அம்மூவனார் போன்று பரணரும் மாந்தையைக் குறிப்பிடுகின்றார். இவரும் சேரநாட்டுத்தொடர்புடைய புலவர் என்பது பதிற்றுப்பத்தால் புலனாம்.[5] ஆதலின் மாந்தையும் பரணர் சென்று வந்த/அறிந்த ஊராக இருத்தல் வேண்டும். தலைவிக்கும் மாந்தையூர்க்கும் என்னென்ன வகையில் அழகில் ஒப்புமை என்று இவர்

எடுத்தியம்பிலர். ஊரை உவமிக்கும் சங்கப் புலவர்கள் உவமைக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பைப் பாடலில் எடுத்து மொழியாதே பாடுகின்றனர்.

'சேற்றிலுள்ள வள்ளைக் கொடியை இறால் மீன் பின்னுவித்தது; வளம் பொருந்திய கதிரை உடைய நெல்லினது நெல் மணிகள் விழுந்திட வளைந்தது. இறால் மீன் திரியும் கடற்கரை அழகிய பிடரி மயிர்க் குதிரை திரியும் குட்டுவனது மாந்தை (மரந்தை). இவ்வாறு பரணர் மாந்தையைப் புனைகின்றார். இப்புனைவில் வள்ளைக் கொடியை மயக்கியது நெல்லைச் சிதைத்தது எல்லாமே இறால் மீன். (அகம்.376). தலைவன், தலைவியையும் தன்னையும் (காதற்பரத்தை) கலங்கடித்தமையை இப்புனைவின் வழி உணர்த்துகிறார், பரணர். உயிரினப் புனைவினை அமைத்து ஊரினைப் பாடுகிறார், புலவர்.

இன்னொரு பாட்டில் (அகம்.396) பரணர் காதற்பரத்தையின் நலத்துக்கு வஞ்சிமாநகரை உவமையாக்குகிறார்.

> சினைஇ
> ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
> தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
> வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
> வஞ்சி அன்னவென் நலந்தந்து சென்மே.
>
> (அகம்.396:15-19)

வஞ்சிமா நகரைக் கூறும் பரணர் பாடலில் உயிரினங்களையோ பயிரினங்களையோ புனையவில்லை. வஞ்சிமா நகரக்குரிய வேந்தன் வெற்றிச் சிறப்பாக வஞ்சிப் புனைவு அமைகிறது. காதற்பரத்தை இயல்பு வாழ்க்கையினும் ஆடம்பர வாழ்க்கையையும் பிறரை ஆளும் வாழ்க்கையையுமே விரும்பும் தன்மையள். காதற்பரத்தை இயற்கையழகினும் செயற்கையழகாலே தன்னை நனி அழகு செய்பவள். அன்னவளின் இயல்பைப் புலப்படுத்துமாறும் அவளுடைய மனநிலைக்குத்தக்கவாறும் வஞ்சிநகரின் நீர்மை புனைவு பெறுகிறது.

ஊர்ப் புனைவைக் காட்டிலும் ஊராளும் ஆட்சியாளன் பெருமையே இங்கு இடம் பெறுகிறது. பரணர் மன்னவன் வெற்றியைச் சுட்டி ஊரைக் குறித்தார். குறுந்தொகைப் பாட்டில் (258) பரணர் ஆர்க்காட்டினைத் தலைவி நலத்திற்கு உவமை கூறினார். இப்பாடலில் புனைவு நான்கடிகளில் அமைகிறது. 'காவிரி ஆற்றின் பெரிய நீர்த்துறையில் மருதமரத்தொடு, ஏந்திய கொம்புகளையுடைய களிறுகளைச் சேந்தன் தந்தை கட்டி வைத்திருக்கின்றான். கள்ளுணவையும் விலங்குக் கூட்டத்தை வேட்டையாடும் தொழிலையும் பகைவர்க்கு நரகத்தைப் போலத் துன்பத்தைத் தருகின்ற வாளையுமுடைய இளமையான வீரர்களுக்குத் தலைவன். அவன் பெயர் அழிசி. அவனுக்கு உரிமையுடைய ஊர் ஆர்க்காடு'. (குறு.258). ஆர்க்காடு போன்ற குற்றமற்ற மாட்சிமையுடைய தலைவியின் நலன்களை விளக்கவதற்கு ஆர்க்காடு உவமை வருகின்றது.

இங்கு மரம் செடி கொடிகளையோ விலங்கினங்களையோ ஆசிரியர் சுட்டிப் புனையவில்லை. பரணர், சேந்தன் தந்தையான அழிசியைப் பேசுகிறார். ஊருக்கு உரிமையாளனான ஆட்சியாளன் பெயரைச் சொல்லி ஊரின் நிலையை உணர வைக்கிறார், பரணர். காவிரி பாயும் மருத நிலத்தில் குறிஞ்சி நிலத்துக் களிறுகள் விளங்குகின்றன. இந்நாட்டு வீரர்களின் போர்க்கருவியான வாளைக் கண்டு பகைவர்கள் அஞ்சுகின்றனர். அகப் பாடல்களில் இயற்பெயரைச் சுட்டி ஒருவன் சிறப்பைப் பாட முடியாமையால் அவன் பெயரை உவமை வழிச்சுட்டிப் புனைவுகளைப் புலவர்கள் பாடியுள்ளனர்.

வளமான ஊர்களைப் பதினொரு பாடல்களில் தலைவிக்குச் சங்கப் புலவர்கள் உவமை உரைத்தனர். அம்மூவனார், குன்றியனார், நக்கீரர், பரணர் என்ற நான்கு புலவர்களில் நக்கீரர் பாண்டிய நாட்டுப் புலவர்; ஏனைய மூவரும் சேரநாட்டுப் புலவர்; சேர நாட்டுத் தொடர்புடையவர்கள். இவர்கள் தொண்டி என்ற கடற்கரை ஊரையே பெரிதும் புனைந்துள்ளனர்.

ஊரைத் தலைவிக்கு உவமை சொல்லிய சங்கப் புலவர்கள் தலைவியின் கண், மார்பு, தோள், கூந்தல் என்ற உறுப்புகளுக்கும் உவமித்தனர். ஊரை உவமை சொல்லும் மரபில் இது மாறுபாடாகும். சங்க கால ஊர்கள் ஐம்புலன்களால் நுகரத்தக்க பேரின்பத்துக்கு நிலைக்களனாகத் திகழ்ந்தன. தலைவியிடத்து முழு ஈடுபாடு ஏற்பட்டுக் காம வயப்படக்கண், மார்பு, தோள், கூந்தல் ஆகியனவும் வேண்டும்; ஆதலின் ஏதேனும் ஓர் உறுப்பைச் சொல்லித் தலைவி அழகைக் கொள்ள வைப்பர். தலைவன் தலைவியின் ஏதேனும் ஓர் உறுப்பில் ஈடுபட்டுக் கலக்க அந்த உறுப்பே கவர்ச்சியாகும்; காதலையூட்டும். பெண் ஆணழகில் மயங்கியமையை இராமன் அழகைக் கண்ட மிதிலை மங்கையர் நிலையைப் பாடும்போது "தோள் கண்டார் தோளே கண்டார்"[6] என்று கம்பன் காட்டுகிறான். சங்க நூல்களில் ஆண் பெண்ணழகில் மயங்குகிறான். ஆடவன் தான் கண்ட பெண்ணின் உறுப்பழகில் மயங்கியதை ஊருவமைகள் மூலம் சங்க நூல்கள் காட்டுகின்றன. சங்கப் புலவர்கள் தலைவியின் உறுப்பால் (சினை) உரைத்தாலும், அது முதலாகிய தலைவியையே குறிக்கும்.

சினைப்புனைவு :

பரணர் தலைவி கூந்தலுக்கு இருப்பையூரை உவமிக்கின்றார். 'மலி புனல் வாயில் இருப்பை அன்னஎன்/ஒலியில் கூந்தல் நலம் பெறப் புனைந்த/முகையவிழ் கோழை வாட்டிய பகைவன்' (நற்.260:7-9) என்பது பாடற் பகுதி. இதற்குப் பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் "இருப்பையூர் போன்ற என்னை விட்டொழிதாலானே"[7] என்றுரை எழுதுவர். இருப்பையூர்த் தலைவன் பகைவரை அழித்த சிறப்புடையவன், 'மலிபுனல் வாயில் இருப்பை' என்பதே ஊர்ப்புனைவு. ஊரில் வாழ்பவனை வைத்துத்தான் ஊருக்குச் சிறப்பு. 'எவ்வழி நல்லவர் ஆடவர்/ அவ்வழி நல்லை வாழிய நிலனே' (புறம்.187:3-4) என்று ஔவையார் கூறுமுண்மை இதனைத் தெளிவுபடுத்தும். இப்போக்கை மனத்தில் கொண்டு பரணரும் நிலத்திற்குச் சிறப்பு, நிலத்து வாழ்பவரால் அமைகிறது என்று ஊர்ப்புனைவால்

காட்டுகிறார். ஊரின் இயற்கைக் காட்சியோ செயற்கைக் காட்சியோ பாடலில் புனையப்படவில்லை.

தலைவி தழைத்த கூந்தலிலே மணம் பெற்ற பூக்களைச் சூடியிருக்கிறாள்; அவள் கணவனைப் பிரிந்து வாடியிருக்கிறாள். கணவனைப் பிரிந்து தாம் வாடியமைக்கு வருந்திப் பழைய அழகுக்கு இருப்பையூரைத் தலைவி உவமிக்கின்றாள். இங்குத் தலைவியே தன் கவினைத் தன் கூற்றாகப் பேசுகின்றாள். தலைவி தன்னுடைய பழைய அழகை விவரிக்கவில்லை. தன்னுடைய அழகைத்தானே அறைவதால் அழகு புனையப்படவில்லை.

விளிப்புனைவு :

தன்னுடைய அழகைக் காட்ட இருப்பையூரைப் புனைந்தவள், தலைவனை விளிக்கும்போது ஊர்ப்பெயர் சுட்டாது விளிக்கின்றாள்.

கழுநீர் மேய்ந்த கருந்தாள் எருமை
பழனத் தாமரைப் பனிமலர் முணைஇ
தண்டுசேர் மள்ளரின் இயலி அயலது
குன்றுசேர் வெண்மணல் துஞ்சும் ஊர

(நற்.260:1-4)

என்று தலைவி தலைவனை அழைக்கும் பகுதியில் 'கழுநீரை மேய்ந்த எருமை தாமரை மலரை வெறுத்து மணற்குன்றிலே தங்கும். இந்த ஊர்ப்புனைவு, தலைவன் தலைவி நலனை வெறுத்துக் காதற்பரத்தையிடம் இன்பம் துய்த்து அவளை விடுத்து இன்னும் சேரிப்பரத்தையிடத்துச் சென்று தங்குவான் என்று காட்டுகிறது. தலைவன் பரத்தமை ஒழுக்கத்தை நேருக்கு நேர் இடித்துச் சொல்ல முடியாத தலைவி, தலைவன் ஊர்ப்புனைவால் தன்னழகையும் தலைவன், ஒழுக்கப் பிழையையும் நனி நாகரிகமாக நவிலுகின்றாள். தலைவன் ஒழுக்கப் பிழையை அவள் கடிந்து கழறவில்லை எனில் அவள் மனமாறாது. தலைவி தன் வெகுளியைக்

காட்டி நினைத்ததைச் சொல்லி விட்டோம் என்ற மன ஆறுதல் பெறுவதை இப்புனைவு காட்டுகிறது.

பாடலின் முற்பகுதியில் புனைவு அமைவதால் பிற்பகுதியில் பரணர் இருப்பையூர்ப் புனைவைச் சுருக்கினராதல் வேண்டும்.

சீறிச் சிதைந்த பகைவருடைய ஒளி வீசும் வேலினையுடைய போர்க் களத்தினில் யானை மடியக் கொல்லுகின்ற மாவண் கடலன் என்பானுடைய விளங்கில் என்னும் ஊரைப் போன்ற கண்கள். இதுதான் அவர் ஊரைப் பற்றிச் சொல்லுவன. பாலைத் திணையில் தலைவி கண்களுக்கு உவமையாக வரும் ஊர் அவலத்தை உணர்த்துகின்றது. 'எம்மையெழில் உண்கண் கலுழ' என்பது அவல மெய்ப்பாடு. உயிரினமோ பயிரினமோ இப்புனைவில் இல்லை. உவமையையும் பொருளையும் ஆராய மேலும் போதிய செய்திகள் கிட்டில.

மார்பு பாடிய மாமூலனார்:

இரண்டு பாடல்களில் தலைவி மார்புக்கு ஊரை மாமூலனார் உவமிக்கின்றார் (அகம்.61,97)

நறவு மகிழிருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூார் அன்ன நின்
அலர் முலை யாகம் புலம்ப

(அகம். 97:12-14)

என்றும் அடிகளான் மாமூலனார் நன்னன் வேண்மானது வியலூரைத் தலைவி மார்புக்கு உவமிப்பர். ஊருக்கு உரிமையாளனாகிய நன்னன் வேண்மான் உடைமையாக ஊர் குறிக்கப் பெறுகிறது. சங்கப் புலவர்கள் உவமையாக ஊரைக் காட்டும்போது அவ்வூர் யாருக்கு உரிமையுடைத்து என்பதைச் சொல்லிப் பாடுகின்றார். இதனால் படைப்பாளி தனக்குத் தொடர்புடைய புரவலரை

அகப்பாட்டில் பாடுகின்ற முயற்சியாக இந்த ஊர் உவமைகள் அமைந்திருப்பது புலனாகிறது. இது பல்வேறு அரசர்களைப் பற்றி அறிந்துகொள்ளும் தரவாகும். இதனால் பாடல்களில் அடி எண்ணிக்கை மிகுகின்றது. மாமூலனார், பரணர், நக்கீரர் ஆகியோர் பாடல்களில் மிகுதியான அடிகள் வருதற்கு இதுவே காரணமாகும்.[8]

வயலூரைப் பெண்ணின் மார்பகத்துக்கு உவமை கூறிய இவர் மற்றொரு பாடலில் பொதினியை மார்புக்கு உவமை கூறுகிறார். மிகப் பழமை வாய்ந்த முழவினை ஒத்த வலிய தோளினையுடைய நெடிய வேளாகிய ஆவியின் தொன்மை மிக்க பெரிய நகரமாகிய பொதினியை ஒத்த ஒளி விளங்கும் அழகிய முலையால் சிறந்த நுண்ணிய பூணினை அணிந்த மார்பு என்று தலைவி மார்புக்குப் பொதினி உவமையாகிறது. பொன்னிறைந்த நகரம் என்று தலைவி பொன் அணிந்தமையைக் குறிப்பிடுகிறார். நெடுநகர் என்றமையால் மார்பின் வளமையையும் நீட்சியையும் அழகினையும் உணரமுடிகிறது.[9]

தலைவன், தலைவி மார்பு முயக்கத்தை மறக்கும் உணர்வினன் அல்லன். கம்பன், 'ஒருத்தி முலைக்கிடந்த ஏக்கறவால்'[10] என்று காமுகன் முலைமயக்கத்தைச் சுட்டுவர். மெய்யுறு புணர்ச்சிக்கு மையமாக விளங்குவது மார்பகங்களேயாகும். திருவள்ளுவரும் 'முலை இரண்டும் இல்லாதள்'[11] என்று உரைப்பதும் நோக்கத்தக்கது. பெண்ணின் மார்பினைப் பற்றி அகப் பாடல்கள் மிகுதியாகப் புனைகின்றன. ஆதலின் ஒழுக்கத்தில் மங்கையின் கொங்கைச் சிறப்பு வலியுறுத்தப் பெறுகிறது.

உலோச்சனார் :

தலைவியின் தோள்களுக்குப் பொறையாற்றினை உவமைப்படுத்துவர் உலோச்சனார். இவரைப் போன்றே மருதனிள நாகனார் பாடலொன்றும் ஆசிரியர் யாரென அறியாப் பாடலொன்றும் தலைவி தோளுக்கு ஊரை உவமிக்கின்றன

(நற்.39, 131, 190). உலோச்சனார் நெய்தல் திணைப் பாடலாகவும் தோழி கூற்றாகவும் இப்பாடலை அமைக்கின்றார். இப்பாட்டில் பெரியனுடைய பொறையாறு உவமையாகின்றது.

வளைந்த அடி மரத்தையுடைய தாழைமரத்தில் சுறாமீன் கொம்புபோல இரண்டு பக்கம் கொம்புடைய இலை சாயும்படி, இறால் மீனை இரையாகத் தின்ற நாரைகள் கூட்டம் தங்கியிருக்கின்றவை. கள்ளுணவை உண்டால் மகிழ்ந்திருக்கும் நற்றேர்ப் பெரியனுடைய கண்ணின் மணங்கமழும் பொறையாறு என்னும் ஊர் போன்ற தோளினை உடையவள் தலைவி. பொறையாற்றில் உயிரினமும் பயிரினமும் வாழும் வகையும் அவ்வுரிமையாளனும் ஊர்ப்புனைவாகின்றன.

தாழையின் தோட்டின் மீது இறவார்ந்த குருகு தங்கியிருக்கும் என்று நெய்தல் புனையப் பெறுகிறது. தலைவி மனமகிழ்ந்து தழையும்படி அவள் உள்ளத்தில் செல்வம் நிரம்பியிருக்கத் தலைவன் வீற்றிருக்கின்றான் என்று தோழி தலைவியானவள் தலைவனை நினைத்து ஆற்றியிருந்தமையைக் கூறினாள். ஆகவே, குறிப்புப் பொருளாக உணர்த்த வேண்டிய சூழலில் இயற்கைப்புனைவாக உலோச்சனார் வலியுறுத்துகின்றார்.[12]

மருதனிள நாகனார் பாடலும் ஆசிரியர் பெயர் காணாப் பாடலும் குறிஞ்சித் திணைக்குரியன. இவை குறிஞ்சித் திணையில் தலைவன் கூற்றாகும். கூடல் மாநகரைத் தலைவி தோளுக்கு உவமை கூறுகிறார். சங்கப் புலவர்கள் கூடலைப் பல்வேறு பாடல்களில் புனைந்திருப்பினும் மருதனிள நாகனார் ஒருவரே கூடலைப் பெண்ணுக்கு உவமிப்பர். இப்புனைவில் இயற்கைப் புனைவு இல்லை.

ஓம்புஅரண் கடந்த அடுபோர்ச் செழியன்
பெரும்பெயர்க் கூடல் அன்னநின்
கரும்படைந் தோளும் உடையவால் அணங்கே (நற்.39:9-11)

என்று இயற்கைப் புனைவின்றி உடைமையாளனுக்கு உரியதென்று சொல்லுதல் புனைவாகிறது. இதன்வழி மருதனிள நாகனார் மதுரையின் மதிற்சிறப்பைப் பேசுகிறார். மதுரையின் இயற்கை வளத்திலும் செயற்கை வளம் மேம்பாடுற்ற நிலையை இந்தப் புனைவு காட்டுகின்றது. இயற்கையொடு இயைந்த செடி கொடிகளுக்கிடையே பசுமைப் புனைவாகக் கூடல் அமையாது கோட்டை, முரசொலி என்று பாண்டியன் கூடல் பாடு பெறுகிறது. கூடல் செயற்கை அரண்கள் செறிந்த நகரமாய்ச் செயற்கை யெழிலுடையதாய் விளங்குகிறது.

கூடல் மாநகரைச் சொல்லும்போது பெரும் பெயர்க் கூடல் என்று அதன் சீர்த்தியைப் புகழ்படச் செப்புகின்றார், மருதனிளநாகனார். தலைவியின் தோள்கள் தொய்யில் எழுதப்பட்ட கரும்பையுடைய தோள்கள் என்று புனையப்பட்டுள்ளன. கூடல் பாண்டியனுக்கு உரிமையுடையது போலத் தலைவி தலைவனுக்கு உரிமையுடையவள். தலைவி தோளைத் தழுவுகின்ற உரிமை தலைவனுக்குத்தான் உண்டு. இரண்டும் தோளாற்றலால் துய்த்தற்குரியன. எனவே ஊரைப் புனைந்து மருதனிள நாகனார் தோளுக்கு உவமை சொல்லியிருப்பது பொருத்தமுடையதாகிறது.

பிறிதொரு பாடல் தலைவன் ஆற்றானாகி நெஞ்சிற்குச் சொல்லிய (நற். 190). பிற பாடல்களில் தலைவியோ தோழியோ ஊரைத் தலைவிக்கு உவமை கூறுவர். இங்குத் தலைமகன் தற்கூற்றாக ஊரைப் புனைந்து தலைவிக்கு உவமையாகச் சொல்கிறான். ஆர்க்காடு, தலைவியின் 'பணைத்தோள்' நலத்திற்கு உவமையாகிறது.

திதலை யெஃகின் சேந்தன் தந்தை
தேங்கமழ் விரிதார் இயல்தேர் அழிசி
வண்டுமூசு நெய்தல் நெல்லிடை மலரும்
அரியலங் கழனி ஆர்க்கா டன்ன
காமர் பணைத்தோள் நலம்வீ றெய்திய
வலைமான் மழைக்கண் குறுமகள்

(நற்.190:3-8)

என்னும் நற்றினை அடிகள் ஆர்க்காட்டினைத் தலைவிக்கு உவமையாக்கிப் புனைகின்றன. பலவாகிய கோட்டைகளை உடைய அழிசியின் ஆர்க்காட்டில் உள்ள கழனிகள் பகைவர் நெருங்குதற்கு அரியன; அது போலத் தலைவி நெருங்குதற்கு அரியளாயினாள் என்று உணர்த்தவேண்டிய கருத்தை ஆசிரியர் இவ்வாறு வெளிப்படுத்துகின்றார்.

இரு பாடல்களில், கூடல், ஆர்க்காடு என்னும் இரண்டு ஊர்கள் தலைவி தோளுக்கு உவமையாயின. தோள், தலைவன் இன்துயில் பெறுவதற்கு இன்பத் துறையில் இன்றியமையாத உறுப்பு. உற்றறியும் புலன் தோளன்றி மற்று வேறில்லை. இணை விழைச்சில் இணைந்திருப்பது தோளே. ஆதலில் இப்புலவர்கள் தலைவி தோளாகிய உறுப்பைச் சொல்லியிருக்கின்றனர். ஆயினும், தலைவியால் பெறுகின்ற அனைத்து இன்பங்களும் தோளைத் தழுவவில்லை எனில் இல்லை. ஆதலால்தான் தோள் சேர்ந்தால் அனைத்துப் புலனின்பங்களும் தானே கிட்டும். எனவே ஐம்புலனின்பத் துய்ப்பைக் 'காமர் பணைத் தோள் நலம் வீறெய்தி' என்னும் தொடரால் புலவர் காட்டுகின்றார்.

தொடி

ஊரைப் புனைகின்ற புலவர்கள் தலைவியின் தொடிக்கு ஊரை உவமை கூறியுள்ளனர். அள்ளூர் நன்முல்லையார் (அகம்.46) குடவாயிற் கீரத்தனார் (அகம்.60), நக்கீரர் (நற்.258, 340) ஆகியோர் நான்கு பாடல்களில் முறையே அள்ளூர், தொண்டி, மருங்கை, சிறுகுடி என்னும் நான்கு ஊர்களைத் தலைவியின் தொடிக்கு உவமை உரைத்தனர்.

அள்ளூர் நன்முல்லையார்

இப்புனைவில் ஊரின் உடைமையாளரும் நெல் வளமும் சொல்லப்பட்டிருக்கின்றன. பயிரினங்கள் உயிரினங்கள் பேசப்படவில்லை. இது, மருதத் திணையில் அமைந்த தோழி கூற்றுப் பாடலாகும். தலைவனுக்குத் தோழி

வாயில் மறுத்துரைக்கும் போது அள்ளூர் என்னும் ஊரைத் தலைவியின் தொடிக்கு உவமைப்படுத்துகிறார் ஆசிரியர்.

ஒளிறு வாள் தானைக் கொற்றச் செழியன்
பிண்ட நெல்லின் அள்ளூர் அன்ன என்
ஒண்டொடி நெகிழினும் நெகிழ்க (அகம்.46)

என்பது பாடலடிகள். பகைவர்களது யானையை வைத்துச் செய்யும் அரிய போரினைச் சிதைத்துக் கொல்லும்படி ஒளிவீசும் வாட் படையினையுடைய கொற்றச் செழியனுடைய நெற்பொலி மிக்க அள்ளூர் என்று ஆசிரியர் தான் வாழ்ந்த ஊரைப் புனைகின்றார். இப்பாட்டில் அள்ளூருக்குரியவனாகப் பாண்டியன் சுட்டப்பெறுகிறான். அள்ளூர் மருதவளம் மிக்கது என்பதை அவர் பாட்டின் முற்பகுதியில் புனைகின்றார். ஆனால் அதனை உய்த்துணருமாறு 'பிண்ட நெல்லின்' என்ற தொடரைப் பயன்படுத்தியிருக்கிறார். இப் புனைவு, தலைவி வளையலுக்கு உவமையாகிறது. அள்ளூரைப் போலத் தலைவி வளையலும் சிறப்புடையதாகிறது. அள்ளூர் நன்முல்லையார் காலத்தில் இந்தச் செழியன் யார் என்று அறியப் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால் பாண்டியன் என்ற மரபுப் பெயர் உள்ளதேயன்றி அவனுடைய இயற்பெயர் விதந்து ஓதப்படவில்லை.

குடவாயிற் கீரத்தனார்

சேரர் கடற்கரை நகரான தொண்டியைத் தலைவிக்கு உவமை உரைத்து, அவளுடைய அரிய காவலுக்குச் சோழ நாட்டுக் குடந்தையைப் புலவர் உவமிக்கின்றார். இப்பாட்டில் இரு நாட்டு ஊர்கள் புனையப் பெற்றிருப்பினும் தொண்டி நகர் தலைவியின் தொடிக்கு ஈண்டு உவமை கூறப்படுகிறது.

எவ்வகையான அடைமொழியுமின்றி அம்மூவனார் தொண்டியைப் புனைவர் (அகம்.10). குடவாயிற் கீரத்தனார் 'திண்தேர்ப் பொறையன் தொண்டி' என்று உரிமையுணர்த்தும் அடைமொழியிட்டுச் சேரர் தொண்டியைச் சுட்டினார்.

பிற நாடுகளிலும் தொண்டி இருத்தலின் வேற்றுமை தெரிதற்கு இவ்வாறு அடை பெய்தார். ஊரை உரிமையாளனொடிணைத்துச் சொல்லுவது சங்கப் புலவர் மரபாகும்.

தொண்டிப் புனைவில் பெரிய கடற்பரப்பில் சிவந்த இறால் மீன்கள் ஒடுங்கும் வண்ணம் வலையைக் கொண்ட நீண்ட படகுகளிலிருந்து தலைவியின் தந்தை மீன்களைப் பிடிப்பர். அதற்கு முன்பே தலைவி தானே திரட்டிய உப்பை விற்றுக் கொண்ட நெல்லால் உணவினைச் சமைப்பள். இது நெய்தல் திணைக்குரிய புனைவாகும்.

இயற்கைப் புனைவிலும் பிறிதொரு பொருள் விதந்து உணர்த்தப் பெறுகிறது. படகொடு இருந்த தந்தைக்கு மகள் கடலுக்குள் புக்கு மீன்களோடு அவன் வருமுன் தான் உப்பு விற்ற நெல்லால் ஆக்கிய வெண் சோற்றையும் மீனையும் உணவாகக் கொடுக்கிறாள். இக்கருத்து இடம்பெறும் பாட்டுத் தலைமகற்குத் தோழி செறிப்பறிவுறீஇ வரைவுகடாயது. இதன்வழி தலைவி திருமணம் நடைபெறத் தமரும் புறம்பே முயல நாங்களும் (தலைவி, தோழி ஆகியோர்) அறத்தொடு நிலையால் இங்கு முயல்வோம் என்ற கருத்து உணர்த்தப்பெறுகிறது. தலைவி தந்தை கடலுக்குள் சென்று மீன் பிடித்தலுக்குப் போவது தலைவிக்கு மணமகன் தேடப் போவது போன்றது. தந்தை தேடுதலுக்கு முன்னரே தலைவி உப்பு மாற்றித் தந்தைக்கு உணவைக் கொடுத்துவிடுவது அறத்தொடு நிலை மூலம் களவை வெளிப்படுத்தித் தலைவனை மணக்க முயல்வதாகின்றது. இவ்வாறு தொண்டியின் இயற்கைப் புனைவு தலைவி தலைவன் களவு மணம் கற்பு மணமாகும் நல்லறத்தை வெளிப்படுத்தும் பாங்கினதாம்.

நெடுந்திமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு
உப்புநொடை நெல்லின் மூரல்வெண் சோறு
அயிரை ! துழந்த அம்புளிச் சொரிந்து

கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்
திண்தேர்ப் பொறையன் தொண்டி அன்னஎம்
ஒண்டொடி ஞெமுக்கா தீமோ

(அகம்.60:3-8)

என்பது கீரத்தனாரின் புனைவு.

நக்கீரனார்

நக்கீரர், பவத்திரி மருங்கை என்று ஊர்களைத் தலைவியின் நலத்திற்கு உவமை கூறியவர்; ஈண்டு, மருங்கூர்ப்பட்டினம் (நற்.258) சிறுகுடி (நற்.340) என்றும் இரண்டு ஊர்களைத் தலைவி தொடிக்கு உவமை கூறுகின்றார். இரு பாடல்களும் மருதத் திணையில் அமைந்தவை.

தலைவி கைவளையலுக்கு மருங்கூர்ப்பட்டினத்தை உவமிக்கின்றார். இப்புனைவு மருங்கூரில் உயிரினத்தின் செயற்பாட்டைக் காட்டுகிறது. வேறொரு பாட்டில் பாண்டியனுக்குரியது மருங்கூர்ப்பட்டினம் என்று குறித்த நக்கீரர் (நற்.358) இப்பாட்டில் உடைமையாளன் பெயரைக் குறித்திலர்.

மகளிர் இட்டப் பலிச்சோற்றை உண்டு அங்காடியிலே களித்த இறால் மீனைக் கவர்ந்த காக்கை வங்கத்துக் கூம்பில் தங்கும். இஃது இன்னொரு பொருளை தந்து நிற்கிறது. பாங்கனாலும் பாங்கியாலும் தலைவியைக் கூடி மகிழ்ந்த தலைவன் வரைதலுக்கு முயலாமல் கவலையின்றி ஊரில் இருக்கிறான். அவனை இடித்துரைத்தற்கு இப்புனைவை நக்கீரர் பயன்படுத்துகிறார். தலைவியை இற்செறித்தமையால் குறியிடத்துக்கு வந்து தலைவனைக் கண்டு தோழியால் பேச முடியவில்லை. அதனால், அவள் குறிப்புப் பொருள் வழி, அவன் வாராமையை இடித்துச் சுட்டி வரைவு தோன்றப் பேசுகின்றாள். இதனை, ஊர்ப்புனைவான இயற்கைப் புனைவு கொண்டே அறிய வேண்டியுள்ளது.

நக்கீரர் வாணனது சிறுகுடியைத் தலைவி தொடிக்கு நற்றிணை 340-ஆம் பாடலில் உவமிக்கிறார். மடையிலிருந்து நீர் ஓடுதலும் வாளை மீன் எதிர்த்து ஓடுதலும் நீர் வழிப்பட்ட வாளை வயலுள் புகுதலும் வயலில் உழுத உழவர் நீரொடு வந்த மீனைக் கோலால் புடைத்தலும் இயல்பாக அமைகின்ற புனைவு. இத்தகைய வயல்வளம் மிக்க புனைவை ஆசிரியர் புனைகின்றார். வாணன் சிறுகுடி என்று அதனைக் குறிப்பிடுவர்.

பண்பும் அறமும் அறிவுறுத்தும் புனைவு

வாணன் சிறுகுடியைப் புனைந்த ஆசிரியர் அதனுள் குறிப்புப் பொருள் ஒன்றினைப் பெய்துள்ளார். அது தலைவனின் இல்லறப் பிழையைக் கண்டித்துத் தலைவி பேசுவதாகிறது. புடைத்துப் புறப்பட்ட வாளை மீன் கால்வாயிலே சென்று கழனியுள் ஓடிச் சேறுபுறந் தீற்றப்பெற்று அங்கு உழவர் புடைத்தற்கும் அஞ்சாது செருக்கி வரம்படியிலே சென்று புரளும் என்றது, தலைவி மனையை விட்டுப் புறப்பட்ட தலைவன் பாணன் செலுத்தும் வழியிலே சென்று ஒரு பரத்தையிடம் புகுந்து அதனை அறிந்த ஏனையோர் கூறும் பழிமொழியை ஏற்றுக்கொண்டு அங்கு தங்கிய வழி ஏனைப் பலப்பல பரத்தையரும் நின்னை விரும்பியீர்ப்பச் செல்லாது அவர்களில் ஒருத்தியில்லத்துக் கிடந்து துயின்று வந்தனை என்று தலைவி கூறுகின்றாள்.

தலைவன் பிற பெண்களோடு உடலுறவு கொண்டிருந்தான் என்பதை முகத்துக்கு முகம் சொல்ல முடியாது. அவ்வாறு தலைவனுடைய பரத்தை ஒழுக்கத்தைத் தலைவி நேருக்கு நேர் கண்டிப்பதற்குத் தமிழ்ப் பண்பாட்டில் இடமில்லை; இதனையே இலக்கணமும் காட்டுகிறது. அவ்வாறு தலைவி கண்டித்துப் பேசுவதும் தமிழப் பண்பாடன்று. ஆண் சமுதாயம் மேலாண்மை பெற்றிருந்த தமிழ் மன்பதையில் பெண் ஆணை இடித்துரைப்பது மரபன்று. ஆதலின் சங்க இலக்கியத்தில் நேருக்கு நேர் கண்டிக்கும் பல குறிப்புகள் ஊர்ப்புனைவுகள் அல்லது நிலப்புனைவுகளில் புதைத்து வைத்துப் பாடப்பட்டிருக்கின்றன. ஊர்ப்புனைவுகள் இன்றி இதனை வெளிப்படுத்த வேறு

உத்திகள் இல்லை. இதனைத் தொல்காப்பியர் "தெய்வம் உணாவே......"[13] என்னும் நூற்பாவின் மூலம் எவ்வெவ்வாறு எவ்வெவ்வடிப்படையில் எவ்வெவ்வண்ணம் சொல்ல வேண்டும் என்பதை புலப்படுத்துகின்றார்.

தலைவனுடைய இல்லறப் பிழையை இடித்துரைக்கும் தலைவி தோழி இருவரும் ஊர்ப்புனைவுகள் அல்லது நிலப் புனைவுகள் உயிரினப் பயிரினப் புனைவுகள் வாயிலாக உணர்த்தி இருக்கின்றனர். இத்தகைய புனைவு வாய்ப்புப் படைப்பாளிகளுக்கு இல்லையெனில் சங்க அகப்பொருள் தலைவர்களின் ஒழுக்கக் குறைபாடும் தலைவியரின் நயத்தக்க நாகரிக இடித்துரைக்கும் பேச்சாற்றலும் இலக்கியங்களில் பயின்றிரா.

இங்ஙனம் சங்கப் புலவர்கள் புனையும் உவமையாம் ஊர்ப் புனைவின் அடிப்படை யாது என்பது ஆராய்தற்குரியது; சங்கப் புலவர்கள் தலைவிக்கோ தலைவனுக்கோ ஏன் ஊரை உவமை கூறிட வேண்டும் என்று எடுத்துரைக்கவில்லை. உவம மரபுகளை உணர்த்தும் தொல்காப்பியமும் ஊரை உவமிப்பது பற்றியாதும் உணர்த்திலது. பின்னாளில் எழுந்த சீவகசிந்தாமணி இவ்வாறு பெண்ணுக்கு ஊரை உவமை சொல்லும் மரபை தன்னூலில் பயன்படுத்தி உவமைக்கும் பொருளுக்குமுள்ள உறவை விளக்கியிருக்கிறது. அதனால் சங்க இலக்கிய உவமையால் ஊர்ப்புனைவின் அடிப்படை நோக்கத்தை அறிய முடிகிறது.

உவமையின் நோக்கம்:

சங்க இலக்கியப் புலவர்கள் ஊருக்குப் பெண்ணை உவமை சொல்லலைச் சீவக சிந்தாமணி ஆசிரியர் நாட்டுக்கு (மத்திம தேசத்துக்கு) உவமை சொல்லுவதாகப் பாடியிருக்கின்றார்.

மாலைக் கதிர்வேன் மலங்க மணிமலர்க்
கோலை விடுக ணுருக, கொடியிடை

ஏலங் கமழ்குழ லேழை யவரன்ன
ஆலைக் கரும்பி னகநாட ணைந்தான்[14]

என்று திருத்தக்க தேவர் பெண்ணுக்கு ஊரை உவமை சொல்லும் மரபை நாட்டுக்கு உவமை சொல்லும் மரபாக மாற்றினார். எனினும் பெண்ணுக்கு ஊருவமையாதல் சங்க இலக்கிய அடிப்படையிலேயே அமைகிறது.

இப்பெரும் புலவரின் இவ்வுவமை ஆட்சியால், சங்கப் பாடல்களின் உவமை மரபுக்குத் தெளிந்த கருத்து விளக்கம் போதருகின்றது. இப்பாட்டுரையில், நச்சினார்க்கினியர்,

வேல் கெடுதலின் தானும் போர் வேண்டின் வருகவென்று
மலர்க்கு ஓலைவிடும் கண்ணினையும் இடையினையும்
குழலினையுமுடைய மகளிரைப் போல ஐம்புலனுக்கும்
வேண்டும் பொருள்களை யுடைய மத்திம தேசத்தைச்
சேர்ந்தானென்க[15]

என்று விளக்குவர். மத்திம தேசம் ஐம்புல நுகர்ச்சிக்களனாக விளங்குகிறது என்பதைப் பெண்ணை உவமிப்பதன் வழி திருத்தக்க தேவர் புலப்படுத்துகிறார். திருவள்ளுவர் காமத்துப் பாலில் பெண் ஆணுக்குத் தரும் ஐம்புல நுகர்ச்சியைக்

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள[16]

என்று வெளிப்படவுரைப்பது நோக்கத்தக்கது.

ஊர்களும் நகரங்களும் ஐம்புலன்களாலும் ஆரத்துய்க்கும் நிலைக்களன்கள். ஊர்களையோ, நகரங்களையோ தலைவிக்கு உவமை சொல்லுவதனால் தலைவி ஐம்புலன்களால் ஆரத்துய்த்தற்குரிய தகுதியள் என்பது புலனாகும். சங்க நூல்கள் ஊர்-தலைவி என்று உவமித்தனவேயன்றி எந்நோக்கில் உவமை கூறப்படுகிறது என்றோ உவமைக்குரிய அடிப்படையே என்ன என்று விதந்தோ விளம்பில.

சிந்தாமணியும் அதனைப் பின்பற்றிட, நச்சினார்க்கினியர், சங்க நூல்களை நுண்மாண் நுழைபுலம் கொண்டு நோக்கிய திட்ப நுட்ப அறிவினராதலின் 'ஐம்புலனுக்கும் வேண்டும் பொருள்களையுடைய' என்று உவமிப்பதன் உள்ளார்ந்த பொருளைப் புலப்படுத்தினார். இவ்வடிப்படையைச் சங்கப் புலவர்கள் அக்கால இலக்கிய நெறி தழுவித் தெற்றென வெளிப்பட உணர்த்திலர்.

சங்கப் புலவர்கள், ஊரைப் பெண்களில் தலைவிக்கு மட்டுமே உவமை உரைக்கின்றனர். கணவன் மனைவி என்ற பாலுறவுக்கே காதலுறவுக்கே ஊருவமை சொல்லப்படுகிறது. இதனால்தான் தோழிக்கோ செவிலிக்கோ வேறு மங்கைக்கோ சங்க கால ஊர்கள் உவமையாகில. பரணர் இரண்டு பாடல்களில் (அகம் 376, 396) ஊரைக் காதற் பரத்தைக்கு உவமிக்கின்றார். காதற்பரத்தையும் 'தலைவி' போலத் தலைவனுக்கு ஐம்புல இன்பம் நல்கும் பெண் ஆவாள். இவரன்றித் தோழியோ செவிலியோ, நற்றாயோ வேறு பிற பெண்களோ ஊரால் உவமித்துப் பேசப்படவில்லை. ஏனெனில் இவர்களுக்கும் தலைவனுக்கும் ஐம்புல நுகர்ச்சித் தொடர்பில்லை.

தலைவியை ஆளுகின்ற உரிமையும் ஊரினை ஆளுகின்ற உரிமையும் தலைவனுக்குரியன. இன்ப நுகர்ச்சியாகத் தலைவியை ஆளுதலும் ஊரை ஆளுதலும் தலைவன் உரிமை. எனவே தலைவனுடன் அண்மிய தொடர்புடையனவான பொருளையும், உவமையையும் இணைத்துத் தலைவியைச் சங்கப் புலவர்கள் பாடுவது தலைவன் மேலாண்மையைப் புலப்படுத்துகிறது.

சங்கப் புலவர்கள், தலைவியின் கவினை ஊர்ப் புனைவால் உணர்த்தினர். இதனால் புகழ்பெற்ற ஊர்கள் சங்க இலக்கியத்தில் பாடு பெறலாயின. அச்சங்க இலக்கியப் போக்கால், தலைவியின் ஏதோ ஓர் உறுப்பு நலனும் ஊர் உவமையால் உணர்த்தப்படும் வளர்ச்சி தோன்றலாயிற்று. தலைவியின் ஒட்டுமொத்த நலனுக்கு ஊரை உவமித்த புலவர் இலக்கிய வளர்ச்சியில் தலைவியின் உறுப்பு நலனுக்கும் ஊரை உவமிக்கலாயினர்.

தலைவியும் ஊருவமையும்

தமிழக ஊர்கள் வளம் மிக்கவையாகவும் மக்களனைவரும் அறிந்தவையாகவும் விளங்கின. சங்கப் புலவர்கள் சங்க கால ஊர்களைப் பட்டினப்பாலை என்றும் மதுரைக் காஞ்சி என்றும் தனித்துப் பாடித் தனி இலக்கியமாக்கினர். புகழ்பெற்ற ஊர்களைச் சங்கப் புலவர்கள் தாம் பாடிய பாடல்களில் உவமையாகப் பயன்படுத்தினர். இதனால் சங்க கால ஊர்கள் உவமப் பொருளாயின. பொருளைக் காட்டிலும் உவமை அனைவரும் அறிந்ததாகவும் புகழ் மிக்கதாகவும் விளங்க வேண்டும் என்பது உவமை இலக்கண விதி; இதுதான் உலகியல் மரபுமாகும். இக்கோட்பாட்டால், உவமையாகக் கையாளப்பட்ட ஊரின் பெருமையையும் சிறப்பையும் பயில்வோர் அறிய முடிகின்றது. இங்ஙனம், அகப்பாடல்களில் ஊர்களைத் தலைவிக்கே உவமையாக்கிப் புலவர்கள் உரைத்தனர். புறப்பாடல்களில் இவ்வாறு தலைவிக்கு ஊரை உவமை கூற வாய்ப்பு இல்லை. எனினும் மூன்று சங்கப் புலவர்கள், புறநானூற்றில் தலைவிக்கு ஊரை உவமித்துப் புதுமை செய்துள்ளனர்.

தலைவிக்கு ஊணூர்

தலைவியை மணத்தற்காகப் போர் தொடங்கியது; பகைவர் தலைவி ஊரை நாடிப் போருக்கு வந்தனர். இச் சூழலை விளக்கப் போந்த பரணர், 'தலைவியைத் தாய் பெற்றெடுக்காமல் இருந்தால், யானை கட்டப்பெற்றுப் பெருந்துறை மரங்கள் துன்பப் பட்டிருக்கமாட்டா' என்று போரின் விளைவைப் பேசுவர். இங்குத் தலைவிக்குப் பரணர் ஊணூரரை உவமிக்கின்றார்.

வெண்ணெல் லரிஞர் தண்ணுமை வெரீஇக்
கண்மடற் கொண்ட தீந்தேன் இரியக்
கள்ளரிக்குங் குயஞ் சிறுசின்
மீன் சீவும் பாண்சேரி
வாய்மொழித் தழும்பன் ஊணூ ரன்ன (புறம்.348:1-5)

ஊணூர் தழும்பனுக்குரியது; இவன் வாய்மை நெறியன். ஊணூரில் உழவர்களின் தண்ணுமை ஓசைக்கு அஞ்சிக் கண்மடற் கொண்ட தீந்தேனீக்கள் இரியக் கள்ளரிக்கும் குயவர் சேரி; சிறிய சில மீன்களைச் சீவும் பாண்சேரி; பாணர் வாழும் சேரியைப் பெற்றிருப்பது ஊணூர்ச் சிறப்பு. பாணர்கள் பாட்டும் கூத்துமாய் ஆரவாரத்துடன் வாழ்வர்; இவர்கள் கொடை பல பெற்று எக்காலத்ததும் குறையாத செல்வத்துடன் வாழும் இயல்பினர். ஆகையால் ஆரவாரமும் செல்வமுமிக்க ஊணூரைப் பரணர் தலைவிக்கு உவமித்தார்.

ஊணூர் சங்கப் புலவர்களான பரணர், நக்கீரர், மதுரை மருதனிள நாகனார் ஆகிய மூவராலும் பாடிய சிறப்புடையது. ஊணூர் பாணர் வாழும் ஊர்; பாணர்களுக்குத் தலைவன் தழும்பன். பரணர் புறநானூற்றுப்பாடலில் (348) ஊணூரை நெல், தேன், மீன் ஆகியன மிகுந்த ஊராகக் காட்டுகின்றார். பரணர் தான் பாடிய அகப் பாடலில் (நற்.300) ஊணூரைப் புனைந்திலர். ஊர்ப் பெயரை மட்டுமே இவர் சுட்டுகிறார். இவர் பாடிய நான்கு பாடல்களில் (அகம்.220,227; நற்.300; புறம்.348) ஊணூர் பற்றிய குறிப்பு வந்தாலும் பரணரின் புறநானூற்றுப் பாடலில்தான் அந்த ஊர் புனையப்பட்டிருக்கிறது.

வாய்மொழித்தலைவனுக்குரிய பல்வளம் பழுநிய ஊணூர், தலைவியின் சிறப்பை விளக்க வருகின்றது. ஊணூர், ஐம்புலநுகர்ச்சிக்குக் களமாக இருப்பதுபோலத் தலைவியும் ஐம்புல இன்பம் தரும் தகையளாகத் திகழ்கின்றாள். இதனை உணர்த்தவே ஊருவமை ஆட்சி பெறுகின்றது.

உவமையை வேறாகப் பயன்படுத்தல்:

ஊணூரை உவமித்த பரணர் முசிறி, உறந்தை ஆகிய இரண்டு ஊர்களையும் புறநானூற்றில் சுட்டுகின்றார். முசிறி, உறந்தை போன்ற ஊர்ச் செல்வத்தைத் தலைவிக்கு ஈடாகக் கொடுத்தாலும் தலைவியின் தந்தை தலைவியை இவர்களுக்கு மகட்கொடை நேரான் (புறம் 343, 352) என்பர். மகட்கொடை நேர்தற் பொருட்டு நலமெல்லாம் நிறைந்த விழுமிய பொருளைக் கொடுப்பினும் இவள் தந்தை

கொடான். ஒருபாட்டில் ஊரின் செல்வத்துக்குத் தலைவியைப் பொருளாக்கியவர் (உவமேயம்), இங்கு ஊர்ச் செல்வங்களையெல்லாம் விடத் தலைவி உயர்ந்தவள் என்றுரைக்கிறார். ஊர்ச் செல்வத்தைக் காட்டிலும் தலைவி உயர்ந்தவள் என்பது தெளிவு.

பரணர் முசிறியைப் பத்து அடிகளால் புனைகின்றார். மீனை விற்று அதற்கீடாகப் பெற்ற நெல் குவியல்களால் வீடும் தோணிகளும் பிரித்தறிய முடியாதபடி கண்டோரை மயங்கச் செய்யும்; மனையிடத்துக் குவிக்கப்பெற்ற மிளகு மூடைகள் கரையினின்றும் பிரித்தறிய முடியாதபடி கண்டோரை மயங்கச் செய்யும்; மலைபடு பொருளும் கடல்படு கொருளும் கலந்து இரந்து வருவோர்க்கு அளிப்போன், குட்டுவன்; கள்ளை மிகுதியாகவுடைய பொன்மாலை பூண்ட குட்டுவனுடைய கடல்போல் முழங்குகின்ற முசிறி நகரத்தையொத்த நலஞ்சால் விழுப் பொருள் கொடுத்தாலும் தலைவியை அவன் தந்தை மகட்கொடை செய்யான். இங்குப் பரணர் முசிறியைத் தலைவிக்குத் தொடர்புபடுத்திப் பேசுகிறார்; ஆனால் உவமையாக்கிலர். முசிறியின் நலஞ்சால் பெருஞ்செல்வத்தைவிடத் தலைவி சிறந்தவள் என்பது பரணர் கருத்து.

நேர் உவமை இன்மை

உவமையாகக் கூறாது ஒத்து நோக்கும் வண்ணம் பரணர் முசிறியைப் பிணைத்துத் தலைவியின் சிறப்பைப் புலப்படுத்தினார். பொருளை உவமைகொண்டு விளக்கும்போது உவமை பொருளை விட உயர்ந்ததாகும். இதுதான் இலக்கண இலக்கிய மரபு. ஊரை விடத் தலைவி உயர்ந்தவள் என்ற கருத்து அமையப்பரணர் உவமை - உவமேயம் (பொருள்) என்ற நிலையை மாற்றி விடுகின்றார். ஊரழிந்தாலும் நாடழிந்தாலும் தலைவியை இழக்க விரும்பாத தந்தை நோக்கில் தலைவி சிறந்தவளே ஆதலின் ஊரை உவமையாக்காது - வேறு வகையாகத்-தம் கருத்தைப் புலப்படுத்தினார், பரணர்.

இது போல உறந்தையையும் (புறம்.352) இவர் பாடியுள்ளார்; அவர் பாடிய பாட்டுச் சிதைந்துள்ளது. அப்பாட்டு.

தேஎங் கொண்ட வெண்மண்டை யான்
வீங்கு முலை கறக்குந்து
அவல் வகுத்த பசுங் குடையாற்
புதன் முல்லைப் பூப் பறிக்குந்து
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
குன்றேறிப் புனற் பாயிற்
புறவாயாற் புனல் வரையுந்து
........ நொடை நறவின்
மாவண் டித்தன் வெண்ணெல் வேலி
உறந்தை யன்ன வுரைசா னன்கலம்
கொடுப்பவும் கொளாஅ னெடுந்தகை

(புறம்.352:1-11)

உறந்தையன்ன தலைவி என்று சொல்வதைப் பரணர் விடுத்து உறந்தை போன்ற செல்வத்தைக் கொடுத்தாலும் தலைவியின் தந்தை மகட்கொடை நேரான் என்றார். பெண்ணுக்கு முலை விலையாக - பரிசமாகக் - கொடுக்கும் மரபைத் தழுவிப்பரணர் சொன்னமையால் சொல்லும் முறையில் மாற்றம் ஏற்பட்டது; தலைவி உறந்தையிலும் சிறந்தவள் என்ற கருத்தும் ஏற்பட்டது. இந்த ஈரிடங்களிலும் தலைவிக்கு ஊரை நேர் உவமையாகப் பரணர் சொல்லாமல், அந்த வளத்தை அவளுக்கு ஈடாகக் கொடுத்தலை உரைத்தார். மணமகன் மணமகளின் பெற்றோர்க்குப் பரிசங் கொடுத்தலைக் குறிப்பாகத் தெரிவிக்கிறது. எனினும் முசிறி, உறந்தை ஆகிய இரண்டும் தலைவியின் மேலாண்மையை உணர்த்துவதற்கே கையாளப்பட்டிருக்கின்றன.

அகம், புறமரபுகள் மாறாடுதல்

அகப்பாடல்களில் தலைவிக்கு ஊரை உவமித்த பரணர், புறநானூற்றுப் பாடல்களிலும் அவ்வாறே உவமித்திருக்கிறார்; ஒப்புக்காட்டித் தலைவிக்கு உயர்வும் தந்திருக்கிறார். அகப்பொருளிலேயே வழங்கும் உவமை மரபு, புறப்பொருளிலும் பரணரால் கையாளப்பட்டிருக்கிறது. புறப்பொருள் ஆடவனுக்கு வீரனுக்குரித்தாய் அவனை மையப்படுத்தி அமைவது. அதில் மண்பொருளாகவோ மைந்து பொருளாகவோ போர் எழுவது போலத் தலைவி பொருளாகப் போர் எழுந்தால் அது தனித்திணையாகாது. மகட்பாற்காஞ்சி என்ற தனித்துறையாகிறது. அத்துறையில் தலைவிக்குப் பரணர் ஊரை உவமிக்கின்றார்.

அகப்பொருள் புனைவுமரபு, புறப்பொருளில் போந்து ஊடாடுவானேன்? மகட்பாற் காஞ்சித்துறை புறப்பொருளுக்குரிய துறையானாலும் அத்துறை பெண்ணால் போர் விளைதலை முதன்மைப்படுத்திப் பாடுகின்றது. அங்குப் பெண்ணாகிய தலைவி முதன்மைப்படுத்தப்படுகிறாள். அகப்பொருள் அன்பு நெறியில் தலைவன் தலைவியர் ஒருவரை ஒருவர் காதலிப்பதை முதன்மைப்படுத்தி மணப்பதை விவரிக்கிறது. ஆனால் புறப்பொருளில் இடம் பெற்ற மகட்பாற் காஞ்சித்துறை வன்முறையால் ஒரு பெண்ணை மணத்தலைப் பேசுகிறது. ஆதலின் மகட்பாற் காஞ்சித்துறைப் பாடல்கள், அகப்பொருளின் அடித்தளத்தில் வளர்ந்தவை; எனவேதான் பரணர் இங்கு ஆண்-பெண் சேர்க்கை என்ற பொது அடிப்படையில் அகப்பொருள் பாடல்களில் போலப் புறப் பாடல்களிலும் ஊரைத்தலைவிக்கு உவமிக்கின்றார்.

பரணர் ஒரு பாட்டில் ஊணூரைத் தலைவிக்கு உவமை கூறினார்; வேறிரண்டு பாடல்களில் முசிறியையும் உறந்தையையும் பரணர் தலைவியொடு இணைத்துப் பேசினார். முசிறி சேரநாட்டு ஊர்; உறந்தை சோழ நாட்டு ஊர். அகப்பாடல்களில் பரணர், நக்கீரர், மாமூலனார் ஆகியோர் புறச்செய்திகளை உவமையாக்கித் தம் பாடல்களை நெடும்பாட்டுகளாக்கியுள்ளனர். அதுபோல

அகப்பாடல் மரபொன்றைப் புறப்பாடல்களில் பின்னிப் பரணர் பாட்டை வளப்படுத்தினார் என்பது குறிக்கற்பாலது.

பெயர் தெரிந்தவூரும் தெரியா ஊரும்

சங்க நூல்களில் மதுரைப் படைமங்க மன்னியார் பாடிய பாடலொன்று (351) புறநானூற்றில் காணப்படுகின்றது. இப்பாட்டில் தலைவிக்கு வாகை என்ற ஊரைப் புலவர் உவமித்தார். 'வண்கையெயினன் வாகையன்ன இவணலம்' (புறம்.351:6-7) என்பது பாடலடிகள். வாகையூர்யாருக்கு உரிமையுடையது என்று காட்டியே மதுரைப் படைமங்க மன்னியார் புனைந்திருக்கிறார். இது நிலக்கிழாரின் உரிமையைக் காட்டுகிறதேயன்றி வேறு இயற்கைப் புனைவை வெளிப்படுத்தவில்லை. இப்பாட்டில் தலைவி ஊர் நன்கு புனையப்பட்டிருக்கிறது.

"தெளிந்த பொய்கை நீரில் திரிந்த மீன்களைச் செவ்வரி நாரைகள் மேயும்; அவை தேன் பொருந்திய மருதமரத்தின் பூவொடு கூடிய கிளைகளில் தங்குதலை வெறுத்தால் காமரு காஞ்சி மரத்தின் கண் உறங்கும்; இத்தகைய காப்பமைந்த சிறப்பினையுடைய நன்செய் வயல்வளம் நிறைந்த ஊர்" (புறம்.351) என்பது தலைவி ஊர்ப்புனைவு. ஆனால், ஆசிரியர் தலைவி ஊரின் பெயரைச் சொல்லவில்லை; மகட்பாற் காஞ்சி என்பதால் ஊர்ப் பெயரை ஆசிரியர் சொல்லாமல் விடுத்தார். படைமங்க மன்னியார் பெயர் சுட்டிய ஊர் ஒன்றைப் புனைவின்றியும் பெயர் சுட்டாத ஊர் ஒன்றைப் புனைவொடும் பாடியிருப்பது குறிக்கத்தக்கது.

சங்கப் புலவரில் போற்றத்தக்கவரான கபிலரும் மகட்பாற் காஞ்சித்துறையில் தலைவிக்குக் கூடலூரரை உவமிக்கிறார். கூடலூரர் 'குண்டு நீர் வைப்பிற் கூடல்' (புறம். 347:6) என்று புனையப்படுகிறது. ஆழமான நீர் நிலைகளையுடைய கூடலூர் என்பதுதான் புனைவு. பெயர் சுட்டிய ஊரைப் பற்றி விரிவான புனைவில்லை; தலைவி வாழும் பெயர் சுட்டாத ஊர் புனையப்பட்டிருக்கிறது. ஆயினும் அகப்பாடல்களில் தலைவிக்கு ஊரை உவமிக்குமாறு புறப்பாடல்களிலும் தலைவிக்கு ஊர் உவமிக்கப்பெறுகிறது.

ஊரும் தலைவியும்

ஊருக்கும் தலைவிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. ஊர் ஈடிணையில்லாத பொருளாகத்தலைவனுக்கு விளங்கிற்று; தலைவியும் தலைவனுக்கு அத்தகையவளே, தலைவிக்கு உரிமையாளன் தலைவன்; ஊருக்கும் தலைவன் தான் உரிமையாளன்; ஊரும் தலைவியும் தலைவனுடைய உடைமைப்பொருள்கள் இரண்டும் நிலமானிய சமுதாய அமைப்பினைக் காட்டுவன. ஊரால் தலைவர்களிடையே போர் நிகழ்ந்தது போலப் பெண்ணாலும் தலைவர்களிடையே போர் நடைபெற்றது. ஊர்-மண்ணாசைப்போர்-தனித்திணையாயிற்று; பெண்ணுக்காக நிகழும் போர் தனித்துறையாயிற்று. ஊருக்கும் தலைவிக்குமிடையே உள்ள ஒருமை. தலைவிக்கு ஊர் உவமயாகும் நிலையை ஏற்படுத்தியது. இவ்வழக்கு அகப்பாடல்களில் மிகுதியாகவும் புறப்பாடல்களில் குறைவாகவும் காணப்படுகிறது.

ஊரினுமினிய தலைவி

தலைவிக்ககு ஊரை உவமித்துப் பாடுவதுபோலத் தலைவியின் சிறப்பைக்காட்ட தலைவியுடன் ஊரை இணைத்துப்பேசுகிற போக்கையும் காணமுடிகிறது; உவமையாக அமைத்துப் பேசாது ஒப்புமையாகக் காட்டி ஊரின் செல்வ வளத்தை மேம்படுத்தித் தலைவியின் மேன்மையைப் படைப்பாளிகள் காட்டுகின்றனர். மதுரை மருதனிள நாகனார்,

அருந்திறற் கடவுள் செல்லூர்க் குணாஅது
பெருங்கட் முழக்கிற் றாகி யாணர்
இருப்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கண் கோசர் நியமம் ஆயினும்
உறுமெனக் கொள்ளுநர் அல்லர்
நறுநுதல் அரிவை பாசிழை விலையே (அகம்.90:9-14)

என்று அகநானூற்றில் செல்லூரையும் கோசர் நியமத்தையும் குறிக்கின்றார். நல்ல நெற்றியை உடைய தலைவியின் பசிய அணிகட்கு விலையாகப் புது

வருவாயையுடைய நியமம் என்னும் ஊரினைக் கொடுத்தாலும் போதும் என்று கொள்ள மாட்டார்கள்; அவ்வூர்ச் செல்வத்தைக் காட்டிலும் மிகுதியாகக் கொடுக்க வேண்டும் என்று தலைவியின் அருமையை வெளிப்படுத்தினாள் தோழி. நியமம் கடுங்கண் கோசர்க்குரியது. இவ்வூர் வணிக வளத்தால் பெருங்கடல் போல முழக்கத்தையுடையது. நியமத்தை அடையாளங்காட்ட வந்த ஆசிரியர் 'அருந்திறற் கடவுள் செல்லூர்க் குணா அது' (90:9) என்றார். நியமத்தை அடையாளங்காட்ட செல்லூரைச் சொன்னார்; ஓரிடத்தில் ஓர் ஊரையும் இன்னொரு பகுதியையும் இணைத்துப் புலவர் பாடினார். ஒரு பகுதியை அடையாளங்காட்ட ஊர் துணையாகிறது. செல்லூரை மதுரை மருதனிள நாகனார், 'அரிய வலிமை கொண்ட தெய்வங்களையுடைய செல்லூர்' என்பர். செல்லூரோடு தெய்வத்தை இவர் தொடர்புடுத்துவர். நியமம் என்பது கோசருடைய இருப்பிடமாய் வணிக மையமாய் - விளங்கியது. பொருள் நிறைந்து வணிகத்தால் செல்வச்சிறப்பு மிக்க நியமம் தலைவியின் பெருமையைக் காட்ட வருகின்றது.

ஊரைப் புனைந்து அதனைத் தலைவிக்கு உவமை சொல்லுதலிலிருந்து இங்கு ஊரைக் கூறும் முறை மாறியிருக்கிறது. இஃது ஊர் உவமையாக அமையும் போக்கின் வளர்ச்சியாகும்.

தலைவியின் மதிப்பருமை

செல்லூர்க்குக் கிழக்கே உள்ள நியமத்தைத் தலைவியின் மதிப்பருமையை விளக்கப் பயன்படுத்திய மதுரை மருதனிள நாகனார் செல்லூரின் வேள்வித் தூணைத் தலைவியின் மார்புக்கு ஒப்பிடுகிறார். 'என்றும் நீங்காத வேள்வித் தீயினையுடைய அழகிய செல்லூர்; அங்கு மதம் கொண்ட யானைக்கூட்டம் போர் முனையில் அழிய மன்னர் வழிமுறையை அழித்தவன் பரசுராமன்; அவன் முன் முயன்று முடித்த வேள்வியில் கயிற்றினை அரையிற் சுற்றிய காணத் தக்க அழகினையுடைய அரிய காவலைக் கொண்ட நீண்ட வேள்வித்தூண்போல யாவரும் காணல் ஆகாது மாண்புற்ற அழகினையுடைய தலைவியின் மார்பு' (அகம்.220) என்பது புனைவு.

வேள்வித் தூண் அரையில் கயிற்றைச் சுற்றி மறைத்திருப்பதைத்தலைவியின் மறைத்த மார்புக்கு மதுரை மருதனிள நாகனார் உவமையாக்கினார். இது தலைவிக்கு உவமையாக ஊர்களைச் சொல்லும் மரபிலிருந்து ஊரிலுள்ளதைப் புனைந்து உவமையாக்கும் மரபு வளர்ச்சியாகக் காணப்படுகிறது. இதனை மருதனிளநாகனாரின் இரண்டு பாடல்களும் காட்டுகின்றன.

நாட்டின் சிறப்பும் தலைவி நலமும்:

தலைவன் பிரிவால் மெலிந்த தலைமகளைத்தோழி வற்புறுத்தித் தேற்றினாள். தலைவன் உலகத்துச் சிறந்த எந்தப் பொருளைக் கண்டாலும் அதனைப் பெற விழையாது தலைவியை நாடியே ஓடி வருவான்; தலைவிபால் அத்தகைய அன்புடையவன் என்று தோழி தலைவியிடம் தலைவன் கொண்ட அன்பை விதந்துரைத்தாள். தலைவன் அன்பை எடுத்துரைக்க வந்த மாமூலனார் குட நாட்டினைப் பெற்றாலும் அவன் தலைவியை மறக்க மாட்டான் என்று பாடினார்.

.......... இருங்கேழ்
இரலை சேக்கும் பரலுயர் பதுக்கைக்
கடுங்கண் மழவர் களவுழ வெழுந்த
நெடுங்கால் ஆசினி ஒடுங்காட் டும்பர்
விசிபிணி முழவின் குட்டுவன் காப்பப்
பசியென வறியாப் பணைபயில் இருக்கைத்
தடமருப் பெருமை தாமரை முனையின்
முடமுதிர் பலவின் கொழுநிழல் வதியும்
குடநாடு பெறினும் தவிரலர்
மடமான் நோக்கிநின் மாணலம் மறந்தே

(அகம்.91:9-18)

மாமூலனாரின் குடநாட்டுப் புனைவில் மூன்றடிகளில் ஒடுங்காடு புனையப்பெறுகிறது. அக்காட்டுக்கு மேற்பகுதியில் குடநாடு உளது என்று திசையுடன் 'குடநாடு' சுட்டப்படுகிறது.

ஒடுங்காடு, ஒடுவ மரங்கள் மிக்குள்ள காடாகும். இங்குக் கரிய நிறமுடைய ஆண் மான்கள் தங்கும் பரலுள்ள உயர்ந்த கற்குவியல்; இதில் கொடுமைமிக்க மழவர்கள் களவு செய்தலாகிய உழவிற்கு எழும் நீண்ட அடியையுடைய ஈரப் பலா மரங்கள் நிறைந்துள்ளன. (ஈரப்பலா மரங்களின் அடியில் மழவர் மறைந்திருந்து களவு செய்வர்). இத்தகைய தன்மையது ஒடுங்காடு. இஃது ஒடுங்காடு பற்றிய புனைவு. இந்தக் காட்டுக்கு மேல் பால் உள்ளது குடநாடு.

குடநாடு, இறுகப் பிணித்த முழவினையுடைய குட்டுவனால் காக்கப்படுவது; பசி என்பதை அறியாத மருதவளம் மிக்க ஊர்; வளைந்த கொம்பினையுடைய எருமை தாமரையை மேயும்; அதில் வெறுப்பு ஏற்படின் வளைந்த பலா மரத்தின் மிக்க நிழலில் தங்கும். வளம் மிக்க குடநாட்டைப் பெற்றாலும் தலைவன் இளமை வாய்ந்த மான் போன்ற பார்வையினையுடைய தலைவியின் மாண் நலம் மறந்து தங்கமாட்டான். குடநாடு என்ற ஊரினையே மாமூலனார் புனைகின்றார். அவர் ஊரை உவமையாக்காது ஊரின் வளத்தையும் தலைவி நலத்தையும் ஒன்றோடொன்று பொருத்தி ஊரைக் காட்டிலும் தலைவியின் நலம் சிறந்தது என்று வெளிப்படுத்துகின்றார்; இஃது உவமையாக அமையாது நிற்கிறது; ஆனால் தலைவியின் நலத்தொடுபொருத்தியே விளக்கப்படுகிறது. -உவமையாகச் சுட்டிப்பாடினால் உவமைக்குச்சிறப்பு; பொருளுக்கு உவமையினும் குறைவான சிறப்பு; எனவேதான் ஊரை உவமிக்காமல் ஒரு பொருளுடன் இன்னொருபொருளை இணைத்துச் சிறப்பை ஒப்புமையால் வெளிப்படுத்திக் காட்டினார்; இதனால் தலைவியின் பெருமை வெளிப்படுகிறது. குடநாட்டினைத் தலைவி நலத்துக்கு இணைத்துப் பாடிய மாமூலனார், இன்னொரு அக நானூற்றுப்பாட்டில், தலைவியின் நலத்துக்குக் குடநாட்டை உவமையாகப் பயன்படுத்துகின்றார்.

நுண்பூண் எருமை குடநாட் டன்னஎன்

ஆய்நலம் தொலையினும் தொலைக

(அகம்.115:5-6)

என்பது அப்பகுதி. நுண்ணிய வேலைப்பாடு அமைந்த எருமை என்பானது குடநாடு போன்ற அழகிய நலம் தலைவியின் நலமாகும்.

குடநாடு பற்றிய குறிப்புப்பயிலும் இரண்டு பாட்டும் (அகம்:91,115) பாலைத் திணைக்குரியன; இரண்டிலும் குடநாடு ஒரே நோக்கில் - தலைவி நலனைக் காட்டுமாறு - ஆளப்பட்டிருக்கிறது. முதற் பாட்டில் குடநாட்டின் இருப்பிடத்தையும் புனைவையும் விரித்துப் பாடியவர் பிற்பாட்டில் புனைவின்றிப் பாடினர்; முற்பாட்டில் 'குட்டுவன் காப்ப' என்றவர் பிற்பாட்டில் 'எருமை குட நாடு' என்றார். ஆனால் இரண்டு பாட்டிலும் குடநாடு தலைவியின் நலத்தைப் புலப்படுத்து முகமானது. ஒரே புலவன் இரண்டு பாட்டிலும் ஒரே செய்தியைக் கருத்தாகவும் உவமையாகவும் அமைத்துப் பாடியிருக்கின்றான். இது படைப்பாளி கருத்தைப் புலப்படுத்தும் முறையில் வெவ்வேறு வகையான நெறிகளைப் பின்பற்றுகிறான் என்பதைக் காட்டுகிறது. சங்கப் புலவர்களின் பாடல்களை ஒன்றுடன் ஒன்று இணைத்தும் பொருத்தியும் பார்க்கும் போது தான் கூடுதல் விளக்கம் கிடைக்கும். அதற்கு மாமூலனாரின் இரண்டு பாலைப் பாடல்கள் நல்ல சான்றாகும்.

ஆமூர்ப்புனைவு

ஆமூர்க் கவுதமன் சாதேவனார், ஆமூரைப் பாடுகின்றார்; ஆமூர் குறும்பொறை என்னும் ஊருக்குக் கிழக்கே உள்ளது என்று சுட்டுவர். ஆமூரைப் புனையும் சாதேவனார், அவ்வூர் இருக்கும் திசையைச் சொல்லி ஆமூரைப் புனைகுவர்.

விசும்பின் நல்லேறு சிலைக்கும் சேண்சிமை

நறும்பூஞ் சாரல் குறும்பொறைக் குணாஅது

வில்கெழு தடக்கை வெல்போர் வானவன்

மிஞிறுமூசு கவுள சிறுகண் யானைத்
தொடியுடைத் தடமருப்பு ஒடிய நூறிக்
கொடுமுடி காக்கும் குரூஉக்கண் நெடுமதில்
சேண்விளங்கு சிறப்பின் ஆமூர் எய்தினும்
ஆண்டமைந்து உளையுநர் அல்லர்நின்
பூண்தாங்கு ஆகம் பொருந்துதல் மறந்தே

(அகம்.159:13-21)

வானத்து இடி ஒலிக்கும் உச்சியையுடைய மலை; நல்ல பூக்கள் நிறைந்த சாரல்; இத்தகைய குறும்பொறை என்னும் மலைக்குக் கிழக்கே உள்ளது ஆமூர்; வில் பொருந்திய கைகளையுடைய வெல்போர்ச் சேரனது, வண்டுகள் மொய்க்கும் மதநீர் ஒழுகும் கன்னத்தினையுடைய சிறுகண் யானையின் பூண்பூண்ட பெரிய கோட்டினை ஒடியும்படி அழித்துக் கொடுமுடி என்பான் காத்துவருகின்ற நெடிய மதில் சூழ்ந்த நெடுந்தூரம் சென்று விளங்குகின்ற சிறப்புடைய ஆமூரை அடைவதாயினும் தலைவி மார்பை மறந்து தலைவன் ஆமூரில் தங்கிவிட மாட்டான்.

இங்குச் சாதேவனார் ஆமூரின் மதில் சிறப்பையும் அதனைக் காவல் செய்யும் 'கொடுமுடி' என்பான் வீரச்சிறப்பையும் உணர்த்துகின்றார். ஊர்ப் புனைவு என்பது செடி கொடிகளாகிய பயிரினங்களையும் யானை, முயல் முதலிய உயிரினங்களையும் புனையும் என்ற கருத்துடன் செயற்கையாக எழுகின்ற மதில்கள், கோட்டையைச் சிதைக்கும் யானை என்று புனைவு விரிகின்றது. ஒரு பொருளைப் பற்றித் தெளிவான விளக்கத்தைப் பெறப் பயன்படுகின்ற எழுத்தோவியமே புனைவாகும். இங்குச் சாதேவனார் மதிலையும் கோட்டையையும் புனைந்து பாடுகிறார். 'ஆமூரின் சிறப்பையும் அருமையையும் சொல்லி அங்குத் தங்க நேர்ந்தாலும் தலைவன் தலைவியை விடுத்து அங்குத் தங்க மாட்டான்' என்று தோழி தலைவியை வற்புறுத்துகிறாள். தலைவிக்குச் சாதேவனார் ஆமூரை உவமித்துப் பாடாமல் ஒன்றை மற்றொன்றோடு துலாக்கோலில் நிறுக்குமாறு காட்டித் தலைவி நலத்தைச் சிறப்பிக்கிறார்.

சங்க நூல்களில் தலைவிக்கு ஊரை உவமிப்பது போலத் தலைவியின் நலத்துக்கு ஊர் நலத்தைச் சொல்லி, அந்நலம் பல மிக்க ஊரைத் தலைவன் பெற்றாலும்/கண்டாலும் மயங்கித் தலைவியை மறவான் என்றும் அவ்வூரின் செல்வத்தைப் பெறுவதிலும் தலைவியையே விழைவான் என்றும் கருத்தைப் பெற வைக்கின்றனர்.

பட்டினப் பாலையிலும், தலைவி நலனுக்குப் பல்வளம் பழுநிய காவிரிப்பூம்பட்டினம் ஈடாகாது என்று தலைவன் சொல்லுவதாகப் புலவர் பாடுவர்; 'நெஞ்சமே இத்தகைய சிறந்த பட்டினத்தைப் பெறுவதாயிருந்தாலும் தலைவியை விட்டு வாரேன்' என்று கூறுகின்றான் தலைவன்.[17] அந்நூலில் காவிரிப்பூம்பட்டினம் பலவாறாகச் சிறப்பிக்கப் பெறுகிறது. தலைவிக்ககு ஊரை உவமித்த மரபே, இவ்வாறு தலைவியின் நலத்துடன் ஊர்நலத்தை ஒப்புநோக்கிப் பேசுமாறு சிந்தனையை வளர்த்தது.[18]

ஒரு பொருளைக் கொடுத்து இன்னொரு பொருளை வாங்கிக் கொண்டு விடுவது உலகியற்கை; சிறந்த பொருளுக்கு ஈடாக எதைக் கொடுத்தாலும் சிலர் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். இஃது உலகத்தியற்கை. தலைவி தலைவன் பிரிந்து போய்விடுவானோ என்று கருதி வருந்தினாள். தோழியோ, 'ஏழில் மலையைக் கொடுத்தாலும் தலைவன் தலைவியைப் பிரிய மாட்டான்' என்று உணர்த்தினாள். சிறப்புடைய ஏழில் மலையைக் காட்டிலும் தலைவி உயர்ந்தவள் என்பது புலப்படுத்தப்படுகிறது. இங்குப் பாலைபாடிய பெருங்கடுங்கோ நன்னனது ஏழில் மலையைப் (பாலை) புனைகிறார்.

புலிப்பொறி அன்ன புள்ளியம் பொதும்பில்
பனிப்பவர் மேய்ந்த மாயிரு மருப்பின்
மலர்தலைக் காரான் அகற்றிய தண்நடை
ஒண்தொடி மகளிர் இழையணி கூட்டும்

பொன்படு கொண்கான நன்னன் நன்னாட்டு
ஏழிற் குன்றம்

(நற்.391:2-7)

புலியின் புள்ளி போன்ற புள்ளி அமைந்த சோலையில் படர்ந்த கொடியைத்தின்ற பெரிய கரிய கொம்புகளையுடைய எருமை மாடு, அக்கொடியிலிருந்து தின்று விட்ட மலைப்பச்சையின் இலைகள் தொடியுடைய மகளிர் கலன்களை அணிதற்குப் பயன்படுமாறு கூட்டா நிற்கும் கொண்கானத்திலுள்ள நன்னனது நல்ல நாட்டிலிருக்கின்ற ஏழில்மலை. இங்கு மலையின் இயல்பு தோன்ற புனைவு அமைந்திருக்கிறது. ஒரு குன்றத்தை விடப்பெரும் மதிப்புடையவள் தலைவி. ஊரைத் தலைவிக்குப் பொருத்தி ஆசிரியர் மலையை இங்குச் சொல்லுகிறார்.

கொல்லனழிசி, தலைவியும் தோழியும் இல்லத்திலிருந்து கொண்டு பேசுகின்றனர் என்று பாடுவர். அவர்கள் மனை ஏழிற் குன்றத்திலிருக்கிறது. "ஏழில் உம்பர்/ மயிலடியிலைய மாக்குர னொச்சி" அணிமிகு மென் கொம்பூழ்த்த/மணிமருள் பூவின் பாடு நனி வேட்டே" (குறு.138:2-5). நொச்சி கரிய பூங்கொத்தையுடையது; அதன் இலை மயிலின் அடியைப் போன்றது; அதன் பூக்கள் நீலமணி போன்றவை. அந்த நொச்சியின் கொம்புகள் அப்பூக்களை உதிர்த்தன. அவை விழும் ஓசை தலைவிக்கும் தோழிக்கும் கேட்டது. ஏழில் மலையின் இயற்கை நிலையை இயல்பாகப் புலவர் புனைந்துள்ளார்.

ஏழிற் குன்றத்து நொச்சிப்பூ இரவில் விழுதல் இயற்கைப் புனைவு எனினும் அதற்கு இன்னொரு கருத்துமுண்டு. 'பூ விழுகின்ற ஓசையைக் கேட்கும் நேரத்தில் தலைவன் வரின் அதனை அறிந்திருப்போம்' என்ற கருத்தும் பெறப்படும். சங்க இலக்கியத்தில் இயற்கைப் புனைவு என்பது இன்னொன்றையும் உணர்த்துமாறு பாடுதலை இது காட்டுகிறது. இஃது உவமையாகவோ உள்ளுறையாகவோ அமையவில்லை.

ஆய்வு முடிவுகள்

1. ஊர்ப்புனைவில் படைப்பாளி நிலத்தையோ கருப்பொருளையோ புனையும் போது கானல், புலம்பு, சேர்ப்பு, ஊர் என்று திணை புலப்படுமாறுச் சுட்டிப் புனைகின்றான். ஆனால், தலைவி / காதற்பரத்தை / தலைவன் ஆகியோருக்கு உவமையாக ஊர் புனையப் பெறும் போது அப்பாடல்களில் படைப்பாளிகள் ஊரின் இயற்பெயரைச் சுட்டியிருக்கின்றனர். பெயர் சுட்டாமல் ஊர் ஏதும் உவமையாகச் சங்கப் பாடல்களில் சுட்டப்பெறவில்லை.

2. சங்கப் புலவர்கள், ஊர்ப் புனைவால் உடமையாளனைத் தொடர்பு படுத்தியே ஊரைப் புனைந்துள்ளனர். இதனால், சங்கப் புலவர்கள் தாம்பாடும் பாடல்களில் தம்மைப் புரந்த புரவலரையோ தங்கள் தொடர்புடைய தலைவரையோ தொடர்புபடுத்திக் கூறவேண்டும் என்ற மனப்பாங்கு இருந்திருக்கிறது. சங்க இலக்கிய அகப் பாடல்களில் இயற்பெயர் வரலாகாது என்ற நெகிழ்ச்சியற்ற விதி பழந்தமிழ் இலக்கிய ஆக்கத்தில் அழுத்தமாக இடம் பெற்றிருக்கிறது. அதனால் அகப்பாடல்களில் தங்கள் தொடர்புடைய புரவலர்களையோ தலைவரையோ உறவினரையோ பாடுதற்கு யாண்டு வாய்ப்புளது என்று நோக்கி அதனை ஊர்ப்புனைவைக் களமாகக் கொண்டுப்பாடியிருக்கின்றனர்.

3. ஊர் உவமை வரும்போது தலைவியின் முழு நலத்திற்கே உவமை சொல்லப்படுகிறது. ஊர் உவமைக்குத் தலைவியின் முழு நலம்/உறுப்பு/அணிகலன் என்பன உவமிக்கப்படுகின்றன. ஆனால் பெரிதும் தலைவி முழு நலனுக்கே ஊர்கள் சுட்டப்பட்டிருக்கின்றன.

4. எல்லா ஊர் உவமைகளும் தலைவியின் அழிந்துபோன பழைய இளமை வனப்பைத் தருமாறு அழகு குலைந்த நிலையில் உவமையாகின்றன.

5. உவமையாக வரும் ஊர்ப்பெயர்கள் அனைத்தும் தொண்டி, முசிறி என அமைகின்றன. எந்த ஊரும் ஒரு புலவரால் இரண்டு வகையாகச்

சுட்டப்பெறவில்லை. நக்கீரர் ஒருவரே மருங்கூர்ப்பட்டினம் என்னும் ஓரூரை இருவகையாகக் குறிக்கின்றார்.

6. ஊர்ப்பெயர் சுட்டிய ஊர்ப்புனைவால் அகப்பாடல்களில் அடியெண்ணிக்கைக் கூடுதலாகின்றன. இதனால் குறுந்தொகைப் பாடல்களில் ஊர்ப்புனைவு அமைந்த பாடல்கள் குறைவு.

7. குறிஞ்சி, முல்லைத் திணைப் பாடல்களில் ஊர் உவமைகள் இல்லை. மிகுதியான பாடல்கள் நெய்தற் கடற்கரையை/நெய்தலைப் பேசுகின்றன.

சான்றெண் விளக்கம்

1. நற்.395 : 4-10.
2. ஐங்.180 (பொ.வே. சோம சுந்தரனார் உரை), ப.23.
3. ஐங்.178 : 1-4
4. பொ.வே.சோ.உரை.குறு. 238. ப.349
5. பரணர், பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பத்து பாடியவர்.
6. வைமு. கோபால கிருஷ்ணமாச்சாரி, (உ.ஆ.:1964), **கம்பராமாயணம் (பாலகாண்டம்)**, பா.எண்.19, (வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார் கம்பெனி, சென்னை - 5, ஏழாம்பதிப்பு), ப.796.
7. நற்.260, ப.264.
8. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப.419.
9. அகம். 61
10. உ.வே.சாமிநாதயைர், (பதி:1962), **கம்பராமாயணம் யுத்தகாண்டம் (இரண்டாம் பகுதி)**, பா.எண். 1649, (டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை. 20), ப. 425
11. பரிமேலழகர், (உ.ஆ. 1937), திருக்குறள், பா.எண். 402, (கழக வெளியீடு, சென்னை).
12. நற்.190.

13. மு. சண்முகம் பிள்ளை (பதி.1995), தொல் - பொருள். இளம். உரை, சூ.எண்.20, (முல்லை நிலையம், சென்னை-1), ப.29.

14. உ.வே. சாமிநாதையர், (பதி:1969), **சீவக சிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்**, கனகமாலையாரிலம்பகம், பா.எண்.1613, (கபீர் அச்சுக்கூடம், சென்னை, ஏழாம் பதிப்பு), ப.819.

15. மேலது, ப.820.

16. குறள்.1101

17. பெ. தூரன், (பதி:1959), **கலைக்களஞ்சியம் (தொகுதி ஆறு)**, (தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை), ப.710.

18. ஊரை ஒப்புச் சொல்லுமாறு மலையை ஒப்புச் சொல்லுதலும் காணப்படுகறது.

முடிவுரை

முடிவுரை

ஊர்ப்புனைவின் தேவை

சங்க இலக்கியங்கள் அகப்பொருளையும் புறப்பொருளையும் பாடுகின்றன; அவற்றில் அகப்பாடல்களில் ஊர்ப்புனைவு அமைவானேன்? சங்கப் புலவர்கள், தங்கள் பாடல்களில் தலைவன், தலைவி பெயரைச் சொல்லக் கூடாது என்ற விதியை நெகிழ்ச்சியின்றிப் பின்பற்றினர். இவ்விதியைப் பின்பற்றியமையால்தான் சங்கப் பாடல்கள் தலைவன் பெயரைச் சொல்லாமல் நாடன், ஊரன், துறைவன், பொருப்பன், மகிழ்நன் என்று சுட்டின. இவ்வாறு சுட்டிய பாடல்களில் தலைவனைப் பிற தலைவரிலிருந்து வேறுபடுத்திக் காட்ட வெவ்வேறு வகையான ஊர்ப்புனைவுகள் தேவைப்பட்டன.

> குறுங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை
> பூநுதல் இரும்பிடி புலம்பத் தாக்கித்
> தாழ்நீர் நனந்தலைப் பெருங்களி றடூஉங்
> கல்லக வெற்பன் (நற்.36:1-4)

என்பது சீத்தலைச் சாத்தனார் புனைவு. இங்குத் தலைவன் 'வெற்பன்' என்று சுட்டப்படுகிறான்; பெயர் வரக்கூடாது என்ற விதிப்படித் தலைவன் பெயர் வரவில்லை. பாடலின் மூன்றடிகள் தலைவனுக்குரிய நிலத்தின் தன்மையைப் பேசுகின்றன. அவ்வடிகள் தலைவனைப் பேசுகின்றன. அவ்வடிகள் தலைவனைப் பொதுநிலையிலிருந்து விலக்கிச் சிறப்பு நிலை நல்குகின்றன. நிலத்தின் வெவ்வேறு வகையான புனைவால், அகப் பாடல்களின் தலைவன் ஒவ்வொருவனும் வெவ்வேறானவன் என்பதைப் பாடல்கள் உணர்த்துகின்றன. சங்கப் புலவர்கள் இயற்கைப் புனைவால் தலைவனுடைய தலைமைத் தன்மையை - பண்பு நிலையை - வடிவப்படுத்தியுள்ளனர்.

சங்கப் புலவர்கள் ஊரன், கிழவன் என்று தலைவனை அடையாளங் காட்டினால் தலைவன் எனபது உணரப்படும். ஆனால், அச்சொல்லாட்சி மட்டும் எந்த வகையிலும் ஓர் உயிரோட்டத்தை - இலக்கிய நயத்தை - ஏற்படுத்தாது, தலைவன் பெயரொடு இயற்கைப் பகுதிகளையும் கருப்பொருள்களையும் இணைத்துக் கூறுகிறபோது ஒவ்வொரு பாடலிலும் வருகின்ற தலைவன் வெவ்வேறானவனாகக் கருதப்பெறுகிறான். இதன் வழி தலைவனுடைய அனுபவம் வெவ்வேறானதாகப் படைப்பாளிகள் காட்டுகின்றனர். ஆதலால் தான் தலைவனைச் சுட்டும்போது அவன் வாழுகின்ற நிலத்துடன் இணைத்துப் பேசுகின்றனர், படைப்பாளிகள்.

உலகியல் வழக்கில் ஆடவராயினும் பெண்டிராயினும் தொழிலையோ பண்பையோ ஊரையே சேர்த்துச் சுட்டுவர். சில பாடல்களில், ஊராலேயே சுட்டுகின்ற மரபுமுள்ளது. சங்க நூல்களில், ஊர்ப் பெயருடன் ஆண்பால் விகுதி பெற்றுப் பெயர்கள் வழங்குதலையும் காணமுடிகின்றது. 'கரூரான்' என்ற பெயர் கருவூரைச் சார்ந்தோன் என்பதைக் காட்டும். இத்தகைய சொல்லாட்சி, அகப் பாடல் தலைவனைக் குறிக்கக் கையாளப்படுவதில்லை என்பது நோக்கற்பாலது.

பெயர் சொல்லாமை புனைவு அடிப்படையாதல்

ஓரம் போகியார், ஐங்குறு நூற்றின் மருதத் திணையில் பாடும் பாடலில் ஆறடிகள் அமைந்துள்ளன. தலைவன் புறத்தொழுக்கத்தில் நெடுநாள் ஒழுகிப்பின் தலைவியுடன் கூடி வாழ்ந்தான். அந்நாளில், தலைவன் தன் புறத்தொழுக்கத்தில் ஈடுபட்டிருந்த போது தலைவியும் அவள் தோழிமாரும் என்ன நினைத்தனர் என்று தலைவன் அறிய விரும்பினான். அவன் அவர்களை வினவத் தோழி விடையிறுக்கின்றாள். முதல் மூன்று அடிகள், தோழி, நாட்டுநலம் வேண்டியதைப் பற்றிக் கூறினாள். பின் மூன்று அடிகள் தலைவனைப் பற்றித் தோழி உரைத்தனள். அப்பகுதியில் தலைவனைச் சுட்டவே, தலைவனுடைய ஊர் நனைய காஞ்சிச் சினைய சிறுமீன் 'யாணர் ஊர்' என்று புனையப்படுகிறது. இதனால் பல்வேறு

தலைவர்களிடையே இத்தலைவன் யாவன் என்று சுட்டுமாறு அவன் ஊர்ப்புனைவோடு பேசப்படுகிறான்.

இன்றையச் சிறு கதை, புதினங்களில் கதைத் தலைவன், கதை மாந்தர் பெயர் சுட்டப்பெறுதல் போலச் சங்க இலக்கியங்களில் தலைவன், தலைவி, தோழி ஆகியோர் பெயர் சுட்டப்படுவதில்லை. புலனெறி வழக்காகப் பாடல்கள் பாடப் பெற்றாலும், உலகியல் வழக்கம் தழுவிப் பெயர் சுட்டப்படவில்லை. இன்பத் துய்ப்பை மக்கள் இயற்கையாகக் கொண்டு எந்தத் தனி மனிதன் அனுபவமாகவும் ஆக்காது பொதுமைப் படுத்திச் சங்க இலக்கியப் புலவர்கள் பாடல்கள் பாடினர். இவற்றை ஆராய்ந்தால், தலைவனுடைய இயற்பெயரைச் சொல்லக்கூடாது என்ற அகப்பொருளிலக்கியக் கொள்கையே, தலைவனை அவனுடைய ஊரால் உணர்த்தி வேறுபடுத்திக் காட்டுகிற இலக்கியப் போக்கை உருவாக்கியிருக்கிறது என்பதை அறிய முடியும்.

குறிப்புப் பொருள் காட்டல்

சங்கப் புலவர்களின் ஊர்ப்புனைவு இயற்கைப் புனைவாக அமைக்கப்படின், அப்புனைவு கொன்னே அழகுப் புனைவாகும். அழகுப் புனைவு பாடலின் கருத்தான உரிப் பொருளுக்குப் பயன் பயக்காது, வலிவூட்டாத இயற்கைப் புனைவாகிவிடும்; சங்கப் புலவரின் இயற்கைப் புனைவு உரிப்பொருளை நோக்கியும் உரிப் பொருளை மிகுத்துக் காட்டும் வண்ணமும் அமையும். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் இயற்கைப் புனைவைப் போலச் சங்கவிலக்கியப் புனைவு வெறும் இயற்கையை வண்ணிக்கும் புனைவன்று. மக்கள் உணர்வை மையப்படுத்திச் சூழலைப் புனைவதாகும். அச்சூழல் புனைவு பாட்டின் கருத்தான உரிப்பொருளை வலியுறுத்தும் குறிப்புப் பொருளைப் பெற்றிருக்கும்; ஆதலால் தலைவன்/ தலைவியருக்குரிய ஊரைப் புனைய வேண்டிய தேவை ஏற்படுகிறது.

குறுங்கை	இரும்புலிக்	கோள்வல்	ஏற்றை	
பூநுதல்	இரும்பிடி	புலம்பத்	தாக்கித்	
தாழ்நீர்	நனந்தலைப்	பெருங்களி	றடூஉங்	
கல்லக	வெற்பின்			(நற்.36:1-4)

இப்பகுதி பிடி தனியே வருந்துமாறு புலிகளிற்றைத் தாக்கிக் கொல்லுகின்ற மலையன் என்ற தலைவனுடைய மலையைப் புனைகின்றது. குறிஞ்சித் தலைவன் ஊர் மலையாதலின் ஊர் மலை என்று குறிக்கப் பெறுகிறது. இப்புனைவில் குறிப்புப் பொருள் அடங்கியிருக்கின்றது. இந்த இயற்கைப் புனைவு இங்குப் பயில்வதன் அடிப்படை என்ன? இரவுக்குறியில் தலைவன் வந்தால் தலைவி, தோழி ஆகியோர் வருந்திட அவர்களைச் சார்ந்தோர் தலைவனுக்குத் துன்பம் விளைப்பர் என்ற கருத்தைத் தருகிறது. தோழி தலைவனுக்குச் சொல்ல வேண்டிய கருத்தை மறைமுகமாக இப்புனைவு பேசுகின்றது. இக்கருத்தைத் தோழி தலைவனிடம் நேருக்கு நேர் சொல்லமுடியாது; அவ்வாறு சொன்னால், தோழியைப் பற்றித் தலைவன் பிறழ உணர்வான்; தலைவனுடைய தலைமைத் தன்மைக்கும் அது களங்கமாய் அமையும்.

இம்மலைப் புனைவு, பாடலில் அமையவில்லை எனின் தலைவியின் நிலையும் ஊரவர் நிலையும் தலைவனுக்குப் புலப்படா. எனவே ஊர்ப்புனைவாகிய இயற்கைப் புனைவின் இன்றியமையாமையைக் குறிப்புப் பொருள் பயன்பாடு மிகைப்படுத்துகிறது.

ஊரின் இயற்கைக் காட்சிகளைச் சங்கப் புலவர்கள் புனைகின்றனர். இக்காட்சிப் புனைவுகளில் குறிப்புப் பொருள் அடங்கியிருப்பதாகப் பயில்வோர் கண்டிருக்கின்றனர். படைப்பாளி குறிப்புப் பொருளை அமைத்துப் பாடலை ஆக்கினார் என்பதற்கோ ஆக்கிலர் என்பதற்கோ பாடலில் சான்றில்லை. இயற்கைப் புனைவும் பாடலின் பாடு பொருளும் (உரிப் பொருளும்) குறிப்புப் பொருளை இயற்கைப் புனைவில் காண்பதற்கு வழி வகுத்துவிட்டன. தொல்காப்பியர்

இயற்கைப் புனைவு அடிப் படையில் அமையும் உள்ளுறையை அகப்பொருளுக்குரியதாக ஏற்றுக் கொண்டிருக்கிறார். அவர் தெய்வம் அல்லாத ஏனையவற்றைக் கொண்டு உள்ளுறை அமையும் என்று கூறுவதே இயற்கைப் புனைவில் குறிப்புப் பொருளாய் உள்ளுறை இருக்கிறது என்று கருதுகின்ற மனப் பான்மையை அறிவுலகில் வளர்த்திருக்கிறது.

ஊர்ப்புனைவுப் பாடல்களில் குறிப்புப் பொருளாகிய உள்ளுறை இருப்பதை அகப் பாடல்கள் காட்டுகின்றன. ஊரைப் புனையும் பாடல்களில் அல்லது இயற்கைப் புனைவுப் பாடல்களில் உள்ளுறை அல்லது குறிப்புப் பொருள் காணும் முயற்சியைத் தனி ஒரு நூல் முழுமைக்கும் மேற்கொண்டவர் ஐங்குறு நூற்றுப் பழைய உரையாசிரியரே. அடி அளவு குறைந்த ஐங்குறு நூற்றுப் பாடல்களில் இயற்கைப் புனைவு மிகுதியாக அமையவும், தலைவன் தலைவியர் பற்றிய புனைவும் கருத்தும் குறைவாக அமையவும், இரண்டையும் இணைத்து விளக்கப் பழைய உரையாசிரியர் குறிப்புப் பொருள் காணல் பெரிதும் துணையாகின்றது. பழைய உரையாசிரியரின் குறிப்புப் பொருள் விளக்கத்தாலேயே ஐங்குறு நூற்றின் இலக்கிய நிலை மேலோங்கி நிற்கின்றது.

சங்க நூல்களில் ஊர்ப்புனைவாக வரும் எல்லாப் பாடல்களிலும் ஊாப்புனைவு குறிப்புப் பொருளுடையதாக இல்லை. குறிப்புப் பொருளை உணர்த்துவன, குறிப்புப் பொருளை உணர்த்தாதன என்று இவற்றை வகைப்படுத்துவர்.

குறிப்புப் பொருள் வளர்ச்சி

சங்க விலக்கியக் குறிப்புப் பொருளை இரு வகையாகத் தொன்று தொட்டு விளக்கி வருகின்றனர். ஒன்று, குறிப்புப் பொருளை உவமையாகக் கொண்டு விளக்குவது; இதனை உள்ளுறை உவமை என்று வழங்குவர். இதே குறிப்புப்பொருளை உவமையாக விளக்காது ஒட்டு மொத்தக் கருத்தாக விளக்கினால் 'இறைச்சி' என்பர்; ஆனால் இரண்டும் இயற்கைப் புனைவிலிருந்து

விளக்கப் பெறுபவையே. ஒரு குறிப்புப் பொருளை உள்ளுறை உவமையாக விளக்க முடியாதபோது அதனை இறைச்சி என்று குறிப்பிடுகின்றனர். உவமையின் வகையான உள்ளுறை, உவமையாகப் பாடலில் வரும் இயற்கைப் புனைவைப் பாடல் பொருளொடு பொருத்தி உவமையாகப் புலப்படுத்தினால் அஃது உள்ளுறை உவமையாகி விடும். அதே இயற்கைப் புனைவை ஒட்டு மொத்தப் பொருளில் வேறொன்றைக் குறிப்பாக உணர்த்துமாயின் அஃது இறைச்சி எனப்படும். சங்க இலக்கியப் புலவர்கள் இயற்கைப் புனைவை மையப்படுத்தி உள்ளுறை என்றும் இறைச்சி என்றும் குறிப்புப் பொருளை விளக்கியிருக்கின்றனர். இயற்கைப் புனைவு இல்லை எனின் இந்த இருவகைக் குறிப்புப் பொருளும் அகப் பாடல்களில் அமையாது; இயற்கைப் புனைவின்றேல் சங்க இலக்கிய அகப்பாடல்கள் சீர்மையும் மேன்மையும் பெறா. எனவே, ஊர்ப்புனைவான இயற்கைப் புனைவு சங்கப் பாடல்களுக்கு கவினூட்டுவன என்பது உறுதி.

அகப் பாடல்களில் தலைவன் தலைவியர் இணைந்து வாழும் வாழ்க்கையையோ தலைவன் பரத்தையொடு வாழ்ந்த வாழ்க்கையையோ தலைவன் தலைவி உறவையோ காட்டுமாறு தான் இந்தக் குறிப்புப் பொருள்கள் அமைந்திருக்கின்றன. தலைவன், தலைவியர் உறவு என்பது ஆண் பெண் பாலியல் உறவு என்பது வெளிப்படை. ஆண், பெண் உறவில், இணை விழைச்சு இன்பத்தை வெளிப்படையாகப் பெண் ஆணிடம் பேச முடியாது. அவ்வாறு தெரிவிக்கும் போது தமிழ்ப் பண்பாடு குலையாமல் புலப்படுத்தவேண்டும். மன்பதையின் ஏற்றத் தாழ்வு பெண்கள் ஆண்களுக்கு அடங்கியே இருக்க வேண்டும். அதன் காரணமாகப் பெண் ஆணை மீறி மேலாண்மையாகப் பேசமுடியாது. எனவேதான் குறிப்புப் பொருள் மூலம் புலவர்கள் இடித்துச் சொல்ல வேண்டிய அல்லது தடுத்துச் சொல்ல வேண்டிய கருத்துகளைக் குறிப்புப் பொருளாக இயற்கைப் புனைவின் மூலம் புலப்படுத்தியிருக்கின்றனர்.

குறிப்புப் பொருளை எவ்வாறேனும் புலப்படுத்த வேண்டும் என்ற முயற்சியின் விளைவாகவே பல பாடல்களில் ஊர்ப்புனைவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று இன்றைய திறனாய்வாளர்கள் மு.வ., ம.ரா.போ. குருசாமி போன்றவர்கள் கருதுகின்றனர். இது சங்கப் புலவர்களின் படைப்பியல் கோட்பாடாகும். ஆதலால் தான் சங்கப் புலவர் பாடல்களில் விரிவான ஊர்ப் புனைவு அமைந்திருக்கிறது.

இவற்றை நோக்கில், இயற்கைப் புனைவின் ஓர் இன்றியமையாத பகுதியே உள்ளுறை, இறைச்சியாகும். இயற்கைப் புனைவில், ஊர்ப் புனைவு என்று தனிப்பகுதி வளர்ந்து தனி இலக்கியக் கொள்கையாக இலக்கணிகளால் ஏற்றுக் கொள்ளப் பட்டமையால், உள்ளுறை இறைச்சி என்று தனியே வளர்ந்தன.

யாப்புக்குத் தகப் புனைவுப் போக்குமாறுதல்

ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை அகநானூறு ஆகிய நான்கு நூல்களிலும் அகப்பொருள் பாடல்கள் புனைவு பெறுகின்றன. அவற்றில் இயற்கையைத் திணை அடிப்படையாகவும் ஊராகவும் சங்கப் புலவர்கள் புனைகின்றனர். இவையனைத்தும் பாடல்களில், புலவன் நிலத்தையும் பொழுதையும் கண்டு புனைகின்ற புனைவாக அமையும். கலித்தொகையிலோ நிலம் / திணைப் புனைவு, நேரே கூறுமாறு அமைக்கப்பட்டிருக்கும்; 'நீ பார்' என்றோ 'என்று தலைவர் கூறினார்' என்றோ இப்புனைவு அமைக்கப் பெறும். இரண்டு நூல்களுக்குமிடையே இவ்வேறுமை நோக்கத்தக்கது. தனித்தனி நிலத்தைப் புனைந்து பாடி வளர்ந்த பின்பே ஒரே நூலில் பல திணைகளைப் பாடுகின்ற இலக்கிய மரபு உருவாகியிருக்க வேண்டும்.

குறிப்புணர்த்தும் புனைவு

சங்கப் புலவர்கள் ஊரைப் புனையும் போது புனைவின் வழியே மக்களின் பண்பையும் காட்ட முனைகின்றனர். ஓரம்போகியார்,

தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னு முதலைத் தவனூர்
எய்தின னாகின்று கொல்லோ மகிழ்நன்
பொலந்தொடி தெளிர்ப்ப முயங்கியவர்
நலங்கொண்டு துறப்ப தெவன்கொ லன்னாய் (ஐங்.24)

என்று பாடுகின்றார். ஓரம் போகியார், 'தாய் சாகப் பிறக்கும் புள்ளியினையுடைய கொடிய நண்டுகளோடு தாம் ஈன்ற பிள்ளையையே தின்னும் இயல்பினையுடைய முதலைகளையும் உடையது தலைவன் ஊர்' என்று பாடுவர். தாய் சாகப் பிறக்கும் நண்டும் பெற்ற பிள்ளையைத் தின்னும் முதலையும் என்று இரண்டு உயிரினங்களை ஓரம்போகியார் தலைவன் ஊரில் வாழ்வதாகக் காட்டுகிறார். தாயைக் கொல்லும் பிள்ளை; பிள்ளையைத் தின்னும் தாய்; இரண்டும் முரண்பட்டவை' இரண்டும் கொடுமையைக் காட்டுபவை. இக்கொடுஞ்செயல்கள் உயிரினத்து வாழ்வியல். இக்கொடுமைக் குணம் தலைவனுக்குமுண்டு என்று ஓரம் போகியார் உரைக்கின்றார்.

இங்குத் தலைவன் கொடுமையை நேரடியாகச் சொல்ல முடியாத தோழி ஊர்ப் புனைவின் மூலம் வெளிப்படுத்துகின்றாள். தலைவன் ஊரின் கொடுமையை அவனும் உடையவனாயினான்; மண்ணின் மணம், பயிரினம் விலங்கினம் என்பனவற்றுக்கு இருப்பதுபோல மக்களினத்துக்கும் அமைகிறது. சங்க இலக்கிய இயற்கைப் புனைவு ஊரில் வாழுகின்ற மக்களின் பண்புகளையும் உணர்த்துமாறே புனையப்பட்டிருக்கின்றது. ஆணைப் பெண் இழித்துரைப்பதும் தாழ்த்தி உரைப்பதும் சங்க இலக்கியப் பண்பாடு அன்று; தலைவனை உயர்நிலையில் மதித்துப்போற்றும் தலைவியும் தோழியும் அவனைத் தாழ்த்துப் பேசுதல் மன்பதை மரபில்லை.

தலைவனுக்குக் கூற வேண்டிய இயல்பை ஊரின் இயல்பாகப் புனைந்து ஓரம் போகியார் உரைப்பர். ஏன் நேரடியாக உரையாது இவ்வாறு சுற்றி வளைத்துப்புனைய வேண்டும்; தலைவனை இழித்துக் கூறின் - கொடுமை கூறின் -

அது தலைவன் பண்புக்கும் தலைமைக்கும் மாசு ஊட்டுவதாகும். எனவே தான் தலைவன் கொடுமையை வெள்ளிடை மலையெனப் புனையாமல், ஊர்ப் புனைவின் மூலம் புனைகின்றனர், புலவர். ஓரம்போகியார், ஊரின் இயல்பைத் தலைவன் மேலேற்றி உரைக்கின்றார்.

தன்பார்ப்புத் தின்னும் அன்பின் முதலையொடு
வெண்பூம் பொய்கைத் தவன்ஊர்என்ப, அதனால்
தன்சொல் உணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்யும் ஊர்கிழ வோனே (ஐங். 41)

தான்பெற்ற பிள்ளைகளைத்தானே தின்னும் அன்பில்லாத முதலையுடன் வெளிய மலர்களையும் ஒருங்கே உடைய நீர்நிலைகளைப் பெற்றது ஊர். அவ்வூரே தலைவன் ஊர். ஊரின் இயல்பைச் சொல்லித் தலைவன் இயல்பாக்குகின்றார், ஓரம்போகியார்.

இப்புனைவால், 'அந்த ஊரை உடைய தலைவனும் தன்னுடைய பொய்ச் சொல்லை உண்மை மொழி என்று தெளிந்தொழுகும் பேதை மகளிரின் மாமையைப் பசலை மூழ்கச் செய்யும் கொடுமையுடையவனாக இருக்கின்றான்' என்ற கருத்துப் பெறப்படுகிறது. ஊர்ப் புனைவைத் தலைவனுக்கு ஏத்தி உணர்த்தும் ஆசிரியர், பாடலின் முடிவில் 'ஊர் கிழவோன்' என்று முடிக்கின்றார்.

இப்பாடலில், உரிப்பொருள் வெளிப்பட உள்ளங்கை நெல்லிக் கனி என்று புலப்படச் சொல்லப்படவில்லை. ஊர்ப் புனைவு புனையப் பெற்று அதனடிப்படையில் தலைவன் செய்கை பேசப்படுகிறது. பாட்டின் கருப்பொருளாக அமைந்த இவை உரிப்பொருளை நுட்பமாக விளக்குகின்றன. ஆதலான் ஊர்ப்புனைவு, தலைவன் பண்பை உணர்த்துவதாகத் திகழ்கின்றது. உள்ளுறை அமையும் ஊர்ப் புனைவுகள் அனைத்தையும் இவ்வாறு விளக்கிட வாய்ப்புள்ளது.

ஊர்ப்புனைவு நோக்கம்

சங்கப் பாடல்களில் புலவர்கள் ஊர்களையும் ஊரில் வாழுகின்ற தலைவர்களையும் தங்கள் பாடல்களில் குறிக்கின்றனர். பாடிய புலவர்களுக்கும் பாடலில் இடம் பெறுகின்றவர்களுக்கும் ஏதேனும் தொடர்பிருத்தல் வேண்டும். அத் தொடர்பு காரணமாகவே பாடல்களில் ஊர்களும் அவ்வூருக்கு உடைமையாளர்களும் குறிக்கப் பெறுகின்றனர். அகநானூற்று மருதத் திணைப்பாடல்,

........ பரப்பிற்
பன்மீன் கொள்பவர் முகந்த இப்பி
நாரரி நறவின் மகிழ்கொடைக் கூட்டும்
பேரிசைக் கொற்கைப் பொருநன் வென்வேல்
கடும்பகட்டு யானை நெடுந்தேர்ச் செழியன்
மலைபுரை நெடுநகர்க் கூடல் ஆடிய
மலிதரு கம்பலை போல

(அகம். 296:7-13)

இந்தப்பகுதியில், மதுரை நகரின் ஆரவாரம் பேசப்படுகிறது. அந்த ஆரவார ஒலியையே பலர் பேசும் அலருக்கு ஆசிரியர் உவமிக்கிறார்.

இந்தப் பாடலில் குறிக்கப் பெறுபவன் பாண்டியன்; இதனைப் பாடுகின்ற புலவர் மதுரைப் பேராலவாயார். பாண்டியன் அரசு புரிகின்ற மதுரையில் வாழும் புலவர் தன் மன்னனைப் பாடலில் குறித்திருக்கின்றார். தான் வாழும் ஊரைப் பாட்டில் கூடல் என்றார். அகப் பொருட் பாடலில் களவித் தலைவன் பெயரைத்தான் சொல்லக்கூடாது; பாட்டுடைத் தலைவன் பெயரைச் சொல்லலாம்; ஆயினும் இப்பேராலவாயார் மன்னன் இயற்பெயரைச் சுட்டிலர்; தனக்கும் மன்னனுக்கும் என்ன தொடர்பு என்றும் பாடலில் விதந்து விளம்பிலர்; இவருடைய பிற பாடல்களாலும் இதனை அறிய முடியவில்லை.

கொற்கைப் பொருநனாகிய நெடுந்தேர்ச் செழியனுக்கும் மதுரைப் பேராலவாயார்க்கும் உறவு இருந்தே அவனையும் அவனுடைய ஊரையும் புலவர் புனைகின்றார். இக்குறிப்பில் கொற்கை, கூடல் ஆகிய பாண்டியர்க்குரிய இரண்டு ஊர்கள் புனையப்படுகின்றன. செழியனுக்கு உரிமையுடையது என்று கொற்கை சுட்டப்படுகிறது; நெடுநகர்க் கூடலின் ஆரவாரம் உவமையாகிறது; ஊரைச் சுட்டும் பேராலவாயார், கூடலின் ஓசையை புனைந்து உவமிக்கிறார். இங்குப் 'பேரிசைக் கொற்கை' என்று ஊர்ப் பெயருடன் பெயர் அடைபெறுகிறது.

ஒரு புலவரின் பல ஊர்ப் புனைவு

ஒரு பாடலில் ஒரு பொருளுக்கு ஒன்றையே உவமிப்பது என்பதுதான் பொதுப்போக்கு; ஓரம்போகியார் ஐங்குறு நூற்று மருதத்தில் 'தோழி கூற்றுப் பத்தில்' ஐந்து பாடல்களில் ஊரைப் புனைந்து (ஒரே) தலைவிக்கு உவமை தருகிறார். ஒரே பத்தில் ஐந்து உவமைகளும் வருவதால் ஒரே தலைவி என்று கொள்ளப் பெறும்; வெவ்வேறு பாடல் என்றால் வெவ்வேறு தலைவி என்று கொள்ளப்பெறுவர். ஐங்குறு நூற்றுப் பத்துகள் அனைத்தும் ஒரு பொருள் நுதலியவை ஆதலின் அவ்வைந்து பாட்டும் ஒரு தலைவியைப் பற்றியன என்பதில் ஐயமில்லை.

சேரநாட்டுப் புலவராகிய ஓரம்போகியார் ஐங்குறு நூற்றில் மூன்று ஊர்களை - சேரநாட்டுக்குத் தொடர்பில்லாத மூன்றூர்களைப் புனைகின்றார். சங்கப் புலவர்களில் ஊர்களை மிகுதியாகத் தலைவிக்குப் புனைந்து உவமித்த புலவர் ஓரம் போகியார் ஒருவரே. இம்மூன்று ஊர்களும் சேரநாட்டைச் சேர்ந்த ஊர்கள் அல்ல. தேனூர் பாண்டிய நாட்டு ஊராகும். சோழ நாட்டூரான இருப்பை விரானுக்கு உரிமையுடையது ஆமூர் சோழ நாட்டுக்குரியது. சேரநாட்டில் சேர மன்னராலும் சேர நாட்டுப் புலவராலும் தொகுக்கப்பெற்ற ஐங்குறு நூற்றில், பாண்டிய சோழ நாட்டு ஊர்கள் உவமையாகப் பயில்கின்றன. உவமிக்கப் பெறும் இந்த ஊர்கள், தலைவனுடைய ஊராகவோ தலைவியின் ஊராகவோ இருக்க முடியாது. இந்த மூன்று ஊர்கள் புலவன் அறிந்த ஊர்களாக இருக்க வேண்டும்.

சங்க இலக்கியத்தில் தலைவன், தலைவி இயற்பெயர் சொல்லிப் பாடுகின்ற மரபு அக இலக்கியத்தில் இல்லை. தலைவன் தலைவியர் பெயரைச் சொல்லாமல் அவர் வாழும் ஊரைச் சொன்னாலும் அவன் யாவன் என்றோ? அவள் யாவள் என்றோ? ஆராய்ச்சி எழும். அதனால் தலைவன் / தலைவி யார் என்று தெரிந்து விடும். இதனால் அகப் பாடல்களில் பெயர் சுட்டப்படுவதில்லை. எனவே, ஊரைச் சொன்னால் தலைவன் பெயரைச் சொல்லிவிட வாய்ப்புமுண்டு. எனவேதான் ஊர்ப் பெயரைச் சொன்னால் தலைவன் பெயரைக் கண்டுவிடக்கூடிய தடயங்கள் கிடைக்கும். அதனைத் தவிர்க்கவே இத்தகைய புனைவுகள் அமைகின்றன.

ஓரம்போகியார் மூன்று உவமைகளிலும் ஊரை வெவ்வேறு வகையாகப் புனைந்திருக்கிறார். ஓர் ஊர்ப்புனைவிலும் மூன்று பாடல்களிலும் ஒரே செய்தியைச் சொல்லாமல் வெவ்வேறு செய்திகளைச் சொல்லி ஊரின் தன்மையை அறிய வைத்திருக்கிறார். இப்போக்கு புதுமையானதும் மாறுபாடானதுமாகும். ஊர் பற்றிய மூன்றுபாடல் செய்திகளும் ஊரின் சிறப்பையும் பெருமையையும் உணர்த்துகின்றன.

உவமை பொருளைவிட உயர்ந்ததாகவும் அனைவரும் அறிந்ததாகவும் இருக்க வேண்டும் என்பது இலக்கணம். தலைவிக்கு உவமை சொல்லும் ஓரம் போகியார் வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய ஊர்களைத் தலைவிக்கு உவமை சொல்லியிருக்கிறார். இம்மூன்று ஊர்களும் மருத நிலம் சார்ந்த ஊர்கள்; மருதத் திணையைப் பாடுகின்ற ஓரம் போகியார் மருத நில ஊர்களையே உவமை சொல்லி முதற்பொருளை வலியுறுத்துவது பொருத்தமுடையது.

ஒரு பேரூரைக் கண்டவர்கள், அதன் வாழ்வினையும் வளத்தினையும் வனப்பினையும் நன்கு அறிந்திருப்பார்கள்; அந்த ஊரினை உவமிக்கும் போது, அதன் வளத்துடன் தலைவியின் வளமும் உணரப்பெற்று அவளின் பேரழகு அறியப்பெறும். இவ்வாறு உவமையாகிச் சங்கப்பாடல்களில் ஊர்ப்புனைவு கருத்துச் சிறப்பை விளக்கும் பாங்கினதாகும். இதனால் சங்கப் புலவர்கள் தலைவியின் அழகுக்கு ஊர்களைச் சுட்டிப் புனைகின்றனர். இதனால் சங்க காலத்தில், வளத்தொடும் நலத்தொடும் பொழிவு பெற்றிருந்த பல ஊர்களை அறிய வாய்ப்புளது.

பின்னிணைப்பு

பின்னிணைப்பு - 1

ஊர் பாடிய புலவர்கள்

(புலவர்கள் அகரவரிசை)

வ. எண்.	புலவர் பெயர்	ஊர்ப்பெயர்	திணை	இலக்கியம்
1	அடைநெடுங்கல்வியார்	அழும்பில்	தும்பை	புறம். 283
2	அள்ளூர் நன்முல்லையார்	அள்ளூர்	மருதம்	அகம். 46
3	ஆலம்பேரி சாத்தனார்	ஆலங்கானம்	பாலை	அகம். 175
		விளங்கில்	பாலை	அகம். 81
4	ஆவூர் காவிதிகள் சாதேவனார்	ஆமூர்	பாலை	அகம்.159
5	ஆவூர் மூலங்கிழார்	குடநாடு	பாடாண்	புறம். 177
6	இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்	ஆமூர்	-	சிறுபாண்.
		உறந்தை	-	சிறுபாண்.
		ஓய்மாநாடு	-	சிறுபாண்.
		கிடங்கில்	-	சிறுபாண்.
		கூடல்	-	சிறுபாண்.
		கொற்கை	-	சிறுபாண்.
		பறம்பு	-	சிறுபாண்.
		மாவிலங்கை	-	சிறுபாண்.
		வஞ்சி	-	சிறுபாண்.
		வேலூர்	-	சிறுபாண்.
7	இடைக்குன்றூர் கிழார்	கருவூர்	வாகை	புறம். 78
8	இடையன் சேந்தன் கொற்றனார்	பாழி	பாலை	அகம். 375
9	இடையன் நெடுங்கீரனார்	வேளூர்	மருதம்	அகம். 166
10	அம்மூவனார்	கோவல்	பாலை	அகம். 35
		தொண்டி	நெய்தல்	அகம். 10
		மாந்தை	நெய்தல்	நற். 35, 395

11	இளங்கீரனார்	உறந்தை	குறிஞ்சி	குறு. 116
12	உக்கிரப் பெருவழுதி	பாடலி	மருதம்	அகம்.26
13	உறையூர் ஏணிச்சேர் முடிமோசியார்	ஆய்குடி	பாடாண்	புறம். 132
14	உலோச்சனார்	காண்டவாயில்	நெய்தல்	நற். 38
		கொற்கை	நெய்தல்	அகம். 20
		பொறையாறு	நெய்தல்	நற். 131
15	ஒரு சிறைப் பெரியனார்	நாஞ்சில்	பாடாண்	புறம். 137
16	ஒல்லையூர் தந்த பூதப்பாண்டி	மையல்	பாடாண்	புறம். 71
17	ஓரம் போகியார்	ஆமூர்	மருதம்	ஐங். 56
		இருப்பை	மருதம்	ஐங். 58
		கழாஅர்	மருதம்	ஐங். 61
		தொண்டி	மருதம்	ஐங். 54,55,57
18	ஔவையார்	கொல்லி	பாலை	அகம். 303
		பறம்பு	பாலை	அகம். 303
		கோவல்	பாலை	அகம். 35
		நாலூர்	பாலை	குறு. 15
		வெண்ணி	மருதம்	அகம். 390
19	கடியலூர் உருத்திரங் கண்ணனார்	அம்பர்	-	பெரும். 117
		உறந்தை	-	பட்டினம்.
		பட்டினப் பாக்கம்	-	பட்டினம். பெரும்பாண்
		கச்சி	-	பெரும்பாண்
		திருவெஃகா	-	பெரும்பாண்
		நீர்ப்பெயற்று	-	பெரும்பாண்
		பாக்கம்	-	பெரும்பாண்

20	கடுவன் மள்ளனார்	பாக்கம்	நெய்தல்	அகம். 70
21	கபிலர்	அரையம்	பாடாண்	புறம். 202
		கிடங்கில்	குறிஞ்சி	நற். 65
		கொல்லி	குறிஞ்சி	குறு. 100
		பறம்பு	நொச்சி	புறம்.109,110
			பொதுவியல்	புறம்.118
			பாடாண்	புறம் 201
		முள்ளூர்	பாடாண்	புறம். 123
			குறிஞ்சி	குறு. 312
			நெய்தல்	நற். 291
		விச்சி	பாடாண்	புறம். 200
22	கயமனார்	கள்ளூர்	பாலை	அகம். 259
		குறுக்கை	பாலை	அகம். 145
23	கல்லாடனார்	அம்பர்	பாடாண்	புறம். 385
		வேங்கடம்	பாலை	அகம். 83,85, 209
			பாடாண்	புறம். 23,385 391
		கொல்லி	பாலை	அகம். 209
24	கழார்க்கீரனெயிற்றியார்	கழாஅர்	பாலை	நற். 281
25	கள்ளில் ஆத்திரையனார்	வேங்கடம்	பாடாண்	புறம். 389
26	காக்கைப் பாடினியார்	தொண்டி	முல்லை	குறு. 210
27	காட்டூர் கிழார் மகனார் கண்ணனார்	வேங்கடம்	பாலை	அகம். 85
28	காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார்	உறந்தை	பாடாண்	புறம். 58
29	குடபுலவியனார்	ஆலங்கானம்	வாகை	புறம். 19

30	குடவாயிற்கீரத்தனார்	அழும்பில்	முல்லை	அகம். 44
		உறந்தை	பாலை	அகம். 385
		ஒல்லையூர்	பொதுவியல்	புறம். 242
		கழுமலம்	முல்லை	அகம். 44
		குடந்தை	குறிஞ்சி	நற். 379
			முல்லை	அகம். 44
			நெய்தல்	அகம். 60
		கூடல்	பாலை	அகம். 315
		தொண்டி	நெய்தல்	அகம். 60
31	குளம்பனார்	கூடல்	குறிஞ்சி	அகம். 288
32	குறுங்குடி மருதனார்	உறந்தை	முல்லை	அகம். 4
33	குறுங்கோழியூர்க்கிழார்	குடநாடு	வாகை	புறம். 17
		தொண்டி	வாகை	புறம். 17
34	குன்றியனார்	தொண்டி	மருதம்	குறு. 238
35	கூடலூர்க்கிழார்	மாந்தை	மருதம்	குறு. 166
36	கொல்லன் அழிசி	ஏழில்	குறிஞ்சி	குறு. 138
37	கொல்லிக்கண்ணன்	கொல்லி	மருதம்	குறு. 34
		மாந்தை	மருதம்	குறு. 34, 155
38	கொற்றங் கொற்றனார்	மாந்தை	முல்லை	அகம். 54
39	கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்	குழுமூர்	குறிஞ்சி	அகம். 168
40	கோப்பெருஞ்சோழன்	பிசிர்	பாடாண்	புறம். 215
41	கோவூர்க் கிழார்	உறந்தை		நற். 400
		சிறுகுடி	பாடாண்	புறம். 70
42	கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார்	ஈரந்தை	வாகை	புறம். 180
43	சல்லியங் குமரனார்	அம்பர்	பாலை	நற். 41
44	சாத்தந்தையார்	ஆமூர்	தும்பை	புறம். 80

45	சேந்தங்கண்ணனார்	கொற்கை	நெய்தல்	அகம். 350
46	சோனாட்டு முகையலூர்ச் சிறுக்கருத்தும்பியார்	வல்லார்	வாகை	புறம். 181
47	தாயங் கண்ணனார்	உறந்தை	பாலை	அகம். 237
		கூடல்	பாலை	அகம். 149
		முசிறி	பாலை	அகம். 149
		கொல்லி	பாலை	அகம். 213
		வேங்கடம்	பாலை	அகம். 213
48	துறையூர் ஓடைகிழார்	துறையூர்	பாடாண்	புறம். 136
49	நக்கீரர்	அலைவாய்	-	திருமுருகு.
		ஆலங்கானம்	மருதம்	அகம். 36
		ஆவினன்குடி	-	திருமுருகு.
		இடையாறு	பாலை	அகம். 141
		உறந்தை	பாலை	அகம். 20, 369
		உறந்தை	பாடாண்	புறம். 395
		ஊணூர்	பாலை	அகம். 227
		ஏரகம்	-	திருமுருகு.
		காவிரிபூம் பட்டினம்	பாலை	அகம். 205
		கூடல்	பாலை	திருமுருகு.
			நெய்தல்	அகம்.93, 253, 346
		சிறுகுடி	மருதம்	நற். 39, 340,
			முல்லை 367	
		தொண்டி	நெய்தல்	அகம். 290
		பிடவூர்	பாடாண்	புறம். 395
		மருங்கூர்ப் பட்டினம்	நெய்தல்	நற்.258, 358
		மருங்கை	பாலை	அகம். 227

50	தேவனார்	ஆர்க்காடு	நெய்தல்	நற். 227
51	நன்னாகனார்	வேங்கடம்		புறம்.176,379
				புறம். 381
52	படுமரத்து மோசிகீரனார்	பாடலி	மருதம்	குறு. 75
53	பரணர்	அட்டவாயில்	மருதம்	அகம். 326
		அதவம்/ அதங்கோடு	முல்லை	குறு.34
		அரிமணவாயில் உறத்தூர்	மருதம்	அகம். 266
		ஆர்க்காடு	மருதம்	குறு.258
		அலைவாய்	மருதம்	அகம்.266
		அழுந்தை	மருதம்	அகம். 196, 246
		இருப்பை	மருதம்	நற். 260
		உறந்தை	மருதம்,	அகம். 6, 226
			பாலை	அகம் 135
			காஞ்சி	புறம்.352
		ஊனூர்	மருதம்,	நற்.300
			காஞ்சி	புறம்.348
		ஏழில்	குறிஞ்சி	அகம்.152
		குறும்பூர்	நெய்தல்	குறு.328
		குன்றூர்	மருதம்	நற்.280
		கொல்லி	குறிஞ்சி,	நற்.265
		நீடூர்	மருத்ம்	அகம். 266
		பறம்பு	மருதம்	அகம்.356
		பாரம்	குறிஞ்சி	அகம்.152,
				நற்.265
		பாழி	குறிஞ்சி,	அகம். 142
			மருதம்	152, 208 ,
				258, 372,396

		போஒர்	மருதம்	அகம். 326
		மாந்தை	மருதம்	அகம்.376
		முசிறி	காஞ்சி	புறம்.343
		தொண்டி	நெய்தல்	குறு.128
			மருதம்	குறு.89
			குறிஞ்சி	அகம். 62, 208
		வஞ்சி	மருதம்	அகம்.376
		வல்லம்	மருதம்	அகம்.356
		வாகை	மருதம்	குறு.393
			பாலை	அகம்.125
		வெண்ணி	மருதம்	அகம்.246
54	பாலைபாடிய	ஏழில்	பாலை	நற்391
	பெருங்கடுங்கோ	கொண்கானம்	பாலை	நற்.391.
55	பிசிராந்தையார்	உறந்தை	பாடாண்	புறம்.212
		பிசிர்	பாடாண்	புறம்.67
56	பேய்மகள் இளவெயினி	வஞ்சி	பாடாண்	புறம். 11
57	பேராலவாயர்	கூடல்	மருதம்	அகம்.296
		கொற்கை	மருதம்	அகம்.296
58	பொதும்பில் கிழார்மகனார் வெண்கண்ணியார்	ஆலங்கானம்	பாலை	நற்.387
59	பொய்கையார்	தொண்டி	பாலை	நற்.18 புறம்.48
60	பொருந்தில் இளங்கீரனார்	விளங்கில்	வாகை	புறம்.53
61	மதுரை கணக்காயனார்	கொல்லி	குறிஞ்சி	அகம்.338
		பாக்கம்	குறிஞ்சி	அகம்.338
		கொற்கை	குறிஞ்சி	நற்.23

			பாலை	அகம்.27
		வேங்கடம்	பாலை	அகம்.27
62	மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார்	சிறுகுடி	முல்லை	அகம்.204
63	மதுரை படைமங்க மன்னியார்	வாகை	காஞ்சி	புறம்.351
64	மருதனிளநாகனார்	அலைவாய்	பாடாண்	புறம்.55
		ஊனூர்	பாலை	அகம்.220
		குன்றம்	பாலை	அகம்.59
		கூடல்	பாலை	அகம்.39
		சிறுகுடி	பாலை	அகம்.269
		நியமம்	நெய்தல்	அகம்.90
		செல்லூர்	நெய்தல்	அகம்.90,220
		நாஞ்சில்	பாடாண்	புறம்.139
		முள்ளூர்	மருதம்	அகம்.206
		வீரை	மருதம்	அகம்.206.
65	மாங்குடிமருதனார்	அழும்பில்	-	மதுரைக் காஞ்சி
		ஆலங்கானம்	-	மதுரைக் காஞ்சி
		குன்றம்	-	மதுரைக் காஞ்சி
		குன்றூர்	மருதம்	குறு.164
		கொற்கை	-	மதுரைக் காஞ்சி
		சாலி	-	-மேலது-
		பட்டினப் பாக்கம்	-	-மேலது-

		முதுவெள்ளிலை	-	காஞ்சி -
		மோகூர்	-	-மேலது-
		மிழலை	பொதுவியல்	புறம்.24
66	மாமூலனார்	ஆவினன்குடி	பாலை	அகம்.1,61
		ஏழில்	பாலை	அகம்.349
		குடநாடு	பாலை	அகம்.91,115
		குன்றம்	பாலை	அகம்.295
		பாழி	பாலை	அகம்.15
		மாந்தை	பாலை	அகம்.127
		மோகூர்	பாலை	அகம்.251
		வியலூர்	பாலை	அகம்.97
		வெண்ணி	பாலை	அகம்.55
		வெண்மணி வாயில்	பாலை	அகம்.211
		வேங்கடம்	பாலை	அகம். 211, 265,393
		துளுநாடு	பாலை	அகம்.15
67	மாறோக்கத்து நப்பசலையார்	உறந்தை	பாடாண்	புறம்.39
		முள்ளூர்	பாடாண்	புறம்.126
		முள்ளூர்	வாகை	புறம்.174
68	மிளைக்கந்தன்	பறம்பு	மருதம்	குறு.196
69	முடத்தாமக்கண்ணியார்	சாலி	-	பொருநர்.
70	முள்ளியூர்ப்பூதியார்	ஏழில்	பாலை	அகம்.173

71	விற்றுற்று மூதெயினார்	மாங்காடு	குறிஞ்சி	அகம்.288
72	வெண் கண்ணன்	கொற்கை	நெய்தல்	அகம்.130
73	வெண்ணிக்குயத்தியார்	வெண்ணி	வாகை	புறம்.66
74	வெள்ளிவீதியார்	குறுக்கை	பாலை	அகம்.45
75	வெறிபாடிய காமக் கண்ணியார்	கரூவூர்	குறிஞ்சி	அகம்.98

பின்னிணைப்பு -2

(திருக்குறள் - ஊர்ப்புனைவு)

முன்னுரை

'பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே'

என்றார் பாரதி. பாரதி உலகளாவிய உணர்வுடையவர் ஆயினும் அவர் தான் பிறந்த - வாழ்ந்த - நாட்டைத் தாயாகக் கருதிப் போற்றுகின்றார். நாட்டன்பு (தேசபக்தி) என்ற பெயரால் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களிடையில் இவ்வண்ணம் பாடும் மரபு வேரூன்றியிருக்கிறது. சங்கஇலக்கியத்தின் வித்து காலந்தோறும் இவ்வாறு தழைத்து வந்திருக்கிறது.

இடைக்காலத்தால் தோன்றிய தேவாரத்தில் - சம்பந்தர் தம் சொந்த ஊரான சீர்காழியினைப் பன்னிரண்டு பெயர்களால் சுட்டிப் பாடுகின்றார். இதனால் தேவாரத்தில் சீர்காழிக்குத்தான் மிகுதியான பாடல்கள் கிடைக்கின்றன. சங்க இலக்கியத்துக்குப் பின்னும் சமய இலக்கியத்துக்கு முன்னும் தோன்றிய திருக்குறளில் இம்மரபு பின்பற்றப்பட்டுள்ள பாங்கு இங்கு ஆராயப் பெறுகிறது.

புனைவும் மரபும்

ஊர்களைப் புனைய முதற்பொருள் மரபுகள் வாய்ப்பாகின்றன. பாடலடி குறையும் போது கருத்துக்கு முதன்மை கொடுத்து வருணனையைச் சுருக்க வேண்டியதாகின்றது. அப்பொழுது உரிப்பொருள் பாடலின் மையமாக விளங்குகின்றது. பாடலின் அடி எண்ணிக்கைக் கூடும்போது புனைவு விரிவுபடுகின்றன, கபிலர், தாம் பாடிய நெடும்பாட்டில் (அகம்.2:1-9) என்று நாட்டினைப் புனைந்துரைக்கின்றார். பத்தொன்பது அடிகளைக் கொண்ட இப்பாடலில் ஒன்பதடிகள் ஊர்சுட்டிப் புனைவாக - தலைவன் நாட்டுப்புனைவாக - மறைப் புனைவாக அமைந்துள்ளது. கொழுவிய இலையுடன் வாழையின் காய்

முதிர்கின்ற பெரிய குலையின் இனிய கனி இற்றுப் பலவின் குறையுடன் கற்பாறையிடத்து விழுகின்றது. அதனைக் கள்ளின் தெளிவு என அறியாது கடுவன் நீர் வேட்கையான் பருகுகிறது. தேன் என அறியாது கடுவன் நீர் வேட்கையான் பருகுகிறது. தேன் என அறியாதுண்ட கடுவன் மிளகுக்கொடி படர்ந்த சந்தன மரத்தின் மீதேறாது சந்தன மரத்தின் நிழலில் அதனது நறிய மலர்ப்படுக்கையில் மகிழ்ந்து துயில் கொள்ளுகிறது. இத்தகைய இன்பங்களை நின் காட்டில் வாழுகின்ற விலங்குகள் இனிதாக எய்தும் என்பது புனைவு. இங்ஙனம் தலைவன் நிலையாக இன்பம் துய்க்க வேண்டும் என்பதைத் தோழி அவன் நாட்டைக் கொண்டு வெளிப்படுத்துகிறாள். அகநானூற்றிலும் அடி எண்ணிக்கைக் குறைந்ததும் ஒன்பதடிப் பாடல்களையுடைய நற்றிணைப் பாட்டில் உலோச்சனார்,

"புணரி பொருத பூமணல் அடைகரை
கழி மருங்கின் அலவன் ஓம்பி
வலவன் வள்பு ஆய்ந்து ஊர
நிலவு விரிந்தன்றால் கானலானே" (நற்.11:6-9)

என்று நெய்தலை நான்கடிகளில் புனைகின்றார். அகநானூற்றில் கபிலர், ஓர் ஆண்குரங்கை மையப்படுத்தி அதன் தொடர்ச்சியான செயல்களை உள்ளுறுத்து விரிவாகப் புனைகின்றார். இதனால் பாடலடிகள் மிகுதியாகியிருக்கின்றன. பாடலடி எண்ணிக்கை குறையுமானால், பாடுபொருள் இத்துணை விரிவும் விளக்கமும் பெறாது என்பது உறுதி. உலோச்சனார் பாடல் கானலில் நிலவு வருதலையும் நண்டு பயிலுதலையும்தான் நவில்கின்றார். இவர் வருணனை மிகச்சில அடிகளில்தான் இடம்பெற்றுள்ளன. இதனால் பாட்டு அடி எண்ணிக்கைக் குறைந்து சிறுபாட்டுகளாகிவிட்டன. அதனால் அடி எண்ணிக்கை காரணமாக அகநானூற்றில் இப்பாட்டு இடம் பெறாமல் நற்றிணையில் தொகுக்கப்பட்டுள்ளன.

ஏழு அடிகளால் கொல்லிக் கண்ணன் என்னும் புலவரால் குறுந்தொகையில் மரந்தை நகரம் வருணிக்கப்படுகின்றது

"முனாஅ தியானையங் குருகின் கானலம் பெருந்தோ

பட்ட மன்னர் ரார்ப்பிசை வெரூஉம்

குட்டுவன் மரந்தை" (குறு.34:4-6)

தலைவியின் கூந்தலுக்கு ஊர் உவமிக்கப்படுகிறது கடற்கரையிலிலுள்ள வண்டாழ்ங்குருகின் பெரிய கூட்டம் பகைவரைக் கொன்ற வீரர்களின் ஆரவாரத்துக்கு அஞ்சி நிற்கும். இத்தகைய இடமானது குட்டுவனது மாந்தையாகும் என்று ஊரினைப் புனைவர் ஆசிரியர்.

சங்கநூல்களுள் அடியெல்லையில் மிகக் குறைந்த எல்லையுடையது ஐங்குறுநூறு ஆகும். ஐங்குறுநூற்றில் அடி எண்ணிக்கைக் குறைவாக இருப்பதால்தான், ஐங்குறுநூற்றுப் புலவர்கள் பாடல்தோறும் உள்ளுறையையோ இறைச்சியையோ அமைத்திருக்கின்றனர். குறைந்த அடி, நிறைந்த கருத்து என்ற கோட்பாட்டின் காரணமாக ஐங்குறுநூற்றுப் பாட்டுகள் பிற பாடல்களைக் காட்டிலும் சிறந்து ஒளிர்கின்றன. ஆதலின் ஐங்குறுநூற்றுப் புலவர்கள் ஏனைய எட்டுத்தொகைப் பாடல்களைக் காட்டிலும் மிக்க அழுத்தமாக இத்தொகை நூற்பாடல்களை உத்திகள் அமையப்பாடியிருக்கின்றனர். நெய்தல் திணைப் பாடல்களைப் பாடிய அம்மூவனார், நான்கே அடிகளில் மூன்றடிகளில் ஊர்ப்புனைவை அமைக்கின்றார். தெருக்களில் அலையின் ஒலியொடு முழவின் ஒலியும் கலந்து முழங்கும் குட்டுவனது தொண்டி, எனப் புனைவர்.

திரையிமி ழின்னிசை யளைஇ யலது

முழவோடு ழின்னிசை மறுகுதோ றிசைக்கும்

குட்டுவன் றொண்டி (ஐன்.171:1-3)

என்பது ஐங்குறுநூற்றுப் புனைவு. குறும்பாடலின் ஊர்ப்புனைவிற்கும் நெடும்பாடலின் ஊர்ப்புனைவிற்கும் புனைவுமுறையில் வேறுபாடுகாணப்படுகின்றன. பாடலின் அமைப்புக்குதக பாடு பொருளின் கருத்துகள் கூடவோ குறையவோ செய்கின்றன. நெடும் பாடலாக அமையும் போது புனைவுச் செய்திகள் விரிவுபடுகின்றன.

புனைவும் யாப்பும்

ஒரு கருத்தை வெளிப்படுத்துவதற்குப் பொருத்தமான ஏற்ற வடிவம் வேண்டும். கருத்தை வெளிப்படுத்தும் போது வெளிப்படுத்தும் வடிவத்திற்குத்தக்க கருத்துகளில் மாற்றங்கள் ஏற்படும். தண்ணீரை வெவ்வேறு வகைக் குப்பிகளில் நிறைத்து வைத்துப் பனிக்கட்டியாக்கினால் அது வெவ்வேறு வடிவம்பெறும். அதுபோல அகப் பொருளை வெவ்வேறு யாப்பு வகையில் பாடும்போது வெளிப்படும் கருத்தில் சில ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் எழுகின்றன. தொல்காப்பியர் பரிபாடலிலும் கலிப்பாடலிலும் அகப்பொருளைப் பாடவேண்டும் என்று விதிக்கிறார். கலிப்பாட்டில் அகப்பொருளைப் பாடும் போது கருப்பொருள் உரிப்பொருள் முதற்பொருள் என்ற முப்பொருளையும் புலவர்கள் விரிவாகப் பாடுகின்றனர். கலிப்பாட்டில் கருத்தைத் தரவில் சொல்லித் தாழிசையால் மூன்றுமுறை வெவ்வேறு வகையாகக் கூறி வற்புறுத்துகின்றனர். பின் வெவ்வேறு உறுப்புகளால் சொல்ல வந்த கருத்தைத் தொடர்ந்து எடுத்துரைக்கின்றனர். குறுந்தொகையில் யாப்பு கலித்தொகை யாப்பமைப்பிலிருந்து சுருக்கமானதும் அடியெல்லை அமைப்பினது. குறுந்தொகையிலும் அடியெல்லைக் குறைவானது. தொடர் அடையாகவே வருகின்றன. உரிப்பொருள், மிகச் சிறு தொடர் அடையாகவே வருகின்றன. உரிப்பொருள் பற்றிய கருத்துகளே மிகுதி. ஆதலின் கலித்தொகை போல நிலப்புனைவோ ஊர்ப்புனைவோ மிகக்குறைவு. திருக்குறளிலும் இப்போக்கே காணப்படுகின்றது.

திருக்குறளும் அகப்பொருளும்

திருக்குறள், காமத்துப்பால் அகப்பொருள் மரபு தழுவியது. சங்க இலக்கியங்களில் திணைமரபு தழுவியது போல இங்கும் அகத்திணை மரபு காணப்படுகிறது. திருவள்ளுவர் காமத்துப் பாலில் பெரும்பாலும் மெய்ப்பாடுகளையே முதன்மைப்படுத்தி இன்பத்தைப் பாடியிருக்கிறார். இங்கு முதற்பொருளும் கருப்பொருளும் மிகச்சிறுபான்மையே இடம் பெற்றிருக்கின்றன.

குறளும் - ஊர்ப்புனைவும்

திருக்குறள் காமத்துப் பாலின் முன்னூற்று எண்பது பாடல்களிலும் ஊரைப் பற்றிய புனைவு இல்லை. திருக்குறள் காமத்துப்பால் முழுமையும் ஆராய்ந்தால் ஊர் என்ற சொல்லாட்சி ஆறு இடங்களில் (குறள்.1129, 1130, 1142, 1143, 1147, 1180) பயின்று வருகின்றது. அவ்வாறிடங்களிலும் ஊர் மக்களைக் குறித்து ஆகுபெயரால் நின்றதே, அன்றி ஊர் என்பதைச் சுட்டி வரவில்லை. கடற்கரைச் சார்புடைய துறைவன் (குறள்.1157, 1277) கொண்கன் (குறள். 1237, 1265, 1266, 1283, 1285) என்று நிலமக்கள் பெயரைக் காண முடிகின்றது.

'குறிப்பறிவுறுத்தல்' என்னும் அதிகாரத்தில் 'தண்ணந் துறைவன்' (குறள்.1277) என்ற ஒரு தொடரே தலைவன் துறையைப் புனைவதாக அமைகிறது. இத்தொடர் கற்பியலில் வருகிறது. இங்கு இது துறையின் குளிர்ச்சி பற்றிப் புனைவாக இருக்கிறது. இது ஒரு மிகச் சிறிய அடை. இந்த ஒன்றே துறைப்புனைவாகத் திருக்குறளில் காணப்படுகிறது. திருவள்ளுவர் 'படல் மெலிந்தங்கல்' என்னும் அதிகாரத்தில் (குறள். 1167, 1168, 1169) மூன்று பாடலில் இரவைப் புனைகின்றார்.

ஆய்வு முடிவுரை

திருவள்ளுவர் காமத்துப்பாலில் யாண்டும் ஊரைப் புனைந்து பாடவில்லை. திருவள்ளுவர் மிகக் குறைந்த சொற்களாலும் அடிகளாலும் அமையும் யாப்பைப் பயன்படுத்தியமையால் இப்போக்கு ஏற்பட்டது. இதனைக் குறுந்தொகை, அகநானூறு போன்றவற்றை ஒப்பிடும்போது தெளிவாக அறியமுடிகிறது.

துணை நூற்பட்டியல்

துணைநூற் பட்டியல்
(தேர்ந்தமைப் பட்டி)

I. இலக்கணம்

1. அடிகளாசிரியன், (பதி:1988), **தொல்காப்பியம் சொல்லதிகாரம்** இளம்பூரணம் உரை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

2. இளம்பூரணர், (உ.ஆ:1967), **தொல்காப்பியம் பொருளதிகாரம்,** கழக வெளியீடு, சென்னை-1. நான்காம் பதிப்பு.

3. மேலது, (உ.ஆ.1995), **தொல்காப்பியம் எழுத்ததிகாரம்,** கழக வெளியீடு, சென்னை-1. ஒன்பதாம் பதிப்பு.

4. சண்முகம் பிள்ளை, மு. (பதி:1995), தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம் உரை , முல்லை நிலையம், சென்னை - 1.

5. சிவலிங்கனார், ஆ., (பதி:1991), தொல்காப்பியம் பொருளதிகாரம் **(உரைவளம்), அகத்திணையியல்,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

6. மேலது, (தொ.கு:1993), **தொல்காப்பியம் பொருளதிகாரம்** கற்பியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

7. மேலது, (தொ.கு:1993), **தொல்காப்பியம் பொருளதிகாரம்** களவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

8. சுந்தரமூர்த்தி.கு., (பதி.:1972), **முத்து வீரியம்,** கழக வெளியீடு, சென்னை-1.

9. மேலது, (பதி.:1985), **தொல்காப்பியம் பொருளதிகாரம்,** (பிற்பகுதி), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

10. மேலது, (பதி.:1989), **தொல்காப்பியம் சொல்லதிகாரம்** சேனாவரையம் உரை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்.

11. சுப்பிரமணியன், ச.வே., (பதி.:1978), **தொன்னூல் விளக்கம்,** தமிழ்ப்பதிப்பகம், சென்னை-20.

12 மேலது, (1998), **தொல்காப்பியம் தெளிவுரை,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை-8.

13. நச்சினார்க்கினியர், (உ.ஆ.:1955), **தொல்காப்பியம் பொருளதிகாரம்,** கழகவெளியீடு, சென்னை-1, இரண்டாம் பதிப்பு

14. நாற்கவிராசநம்பி, (1963) **அகப்பொருள் விளக்கம்,** கழக வெளியீடு, சென்னை-1, ஆறாம் பதிப்பு.

II. இலக்கியம்

15. அண்ணாமலை, சுப., குருசாமி, ம.ரா.பொ.,(மொழி. ஆ:1964), **பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை,** பாரி நிலையம் சென்னை.

16. அப்பாதுரை, கா. (1971), **தென்னாட்டுப் போர்க்களங்கள்,** அழமேலு நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு.

17. இராகவையங்கார், ரா., (1949), **பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும்உரையும்,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்

18. கலியாண சுந்தரையர், எஸ்., (பதி:ஆ.இ) **பரிபாடல் மூலமும் உரையும்,** கபீர் அச்சுக்கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு.

19. கோபாலகிருஷ்ணமாச்சாரி, வை.மு., (உ.ஆ.1964)**கம்பராமாயணம் - பால காண்டம்,** (வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் கம்பெனி, சென்னை - 5, ஏழாம் பதிப்பு.

20. கோவிந்தன், கா., (1954), **சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை,** (பகுதி-4), கழக வெளியீடு, சென்னை.

21. சண்முகம் பிள்ளை, மு., (பதி:1985),**குறுந்தொகை,** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

22. சாமிநாதையர், உ.வே., (பதி:1947),**குறுந்தொகை மூலமும் உரையும்,** கபீர் அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு.

23. மேலது, (பதி:1962),**கம்பராமாயணம் - யுத்தகாண்டம்,** (இரண்டாம் பகுதி), டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.

24. மேலது, (பதி:1963),**புறநானூறு மூலமும் உரையும்,** டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை,ஆறாம்பதிப்பு.

25. மேலது, (பதி:1978),**சிலப்பதிகாரம் மூலமும் அடியார்க்கு நல்லார் உரையும்,** டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 90, ஒன்பதாம் பதிப்பு.

26 மேலது, (கு.உ.:1994),**பதிற்றுப் பத்து மூலமும் பழைய உரையும்,** டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை-90, எட்டாம் பதிப்பு.

27 மேலது, (கு.உ.:1963),**அகநானூறு மூலமும் உரையும்,** டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை-90, ஆறாம் பதிப்பு

28. சுப்பிரமணியன், மயிலம்.வே.,(பதி:1990),**அகநானூறு - களிற்றியானை நிரை,** டாக்டர். உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.

29. சுப்பிரமணியன், ச.வே., (1978), **கம்பன் கற்பனை,** தமிழ்ப்பதிப்பகம், சென்னை-20.

30. சுப்புரெட்டியார், ந., (1981), **அகத்திணைக் கொள்கைகள்,** பாரிநிலையம், சென்னை.

31. செயராமன்,நா.வி., (1975), **சங்கஇலக்கியத்தில் பாடாண் திணை,** மீனாட்சி புத்தகநிலையம், மதுரை

32. சோமசுந்தரனார், பொ.வே., (உ.ஆ.1960),**சிறுபாணாற்றுப்படை**, கழக வெளியீடு, சென்னை-1, இரண்டாம் பதிப்பு.

33. மேலது, (உ.ஆ.1968), **சீவக சிந்தாமணி மூலமும் உரையும்** (இரண்டாம் பாகம்), கழக வெளியீடு, சென்னை - 1, இரண்டாம் பதிப்பு.

34. மேலது, (பதி.1969), **சீவகசிந்தாமணி மூலமும், நச்சினார்க்கினியர் உரையும்,** கபீர் அச்சுக்கூடம், சென்னை, ஏழாம் பதிப்பு

35. சோமசுந்தரனார், பொ.வே., (1978),**குறுந்தொகை மூலமும் உரையும்,** கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு.

36. துரைஅரங்கசாமி, மொ. அ., (1960), **சங்ககாலச் சிறப்புப் பெயர்கள்,** பாரிநிலையம், சென்னை-1.

37. துரைசாமிப்பிள்ளை, ஔவை. சு., (பதி:1951), **புறநானூறு மூலமும் உரையும், (இரண்டாம் பகுதி),** கழக வெளியீடு, சென்னை.

38. மேலது, (பதி:1966), **நற்றிணை மூலமும் உரையும், (இரண்டாம் பகுதி),** அருணா பப்ளிகேசன்ஸ், சென்னை-17.

39. நச்சினார்க்கினியர், (உ.ஆ:1958),**கலித்தொகை,** வெ.பெரி.பழ. மு. காசி விசுவநாதன் செட்டியார், பாகனேரி, மறுபதிப்பு.

40. மேலது, (உ.ஆ:1962), **கலித்தொகை,** கழக வெளியீடு, சென்னை, ஆறாம் பதிப்பு.

41. நவநீதகிருட்டினன், மா., (1988),**தமிழ் இலக்கியத்தில் ஆற்றுப்படை,** குறிஞ்சி மலர் வெளியீடு, மதுரை-2.

42. நாராயணசாமி ஐயர், (பதி:1952), **நற்றிணை நானூறு மூலமும் உரையும்,** கழக வெளியீடு, சென்னை, நான்காம் பதிப்பு.

43. பரிமேலழகர், (உ.ஆ:1957), திருக்குறள், சக்தி காரியாலயம், சென்னை-6.

44. மேலது, (உ.ஆ:1980), பரிபாடல், டாக்டர். உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை. ஐந்தாம் பதிப்பு

45. பெரியகருப்பன். இராம., (1986), இறைச்சி-தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கை, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

46. மாணிக்கம், வ.சுப., (1962), தமிழ்க்காதல், பாரி நிலையம், சென்னை.

47. வரதராசன், மு., (1985), காலந்தோறும் தமிழ், பாரி நிலையம், சென்னை.

48. வித்தியானந்தன், சு., (1954), தமிழர் சால்பு (சங்ககாலம்), தமிழ் மன்றம், கல்ஹின்னை, கண்டி, இலங்கை.

49. வேங்கடராமன், எச்., (1989), நற்றிணை மூலமும் உரையும், டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 90.

50. வையாபுரிப் பிள்ளை, எஸ்., ஞானமூர்த்தி, தா.ஏ., (1955), இலக்கிய தீபம், பாரி நிலையம், சென்னை-1. இரண்டாம் பதிப்பு.

III கலைக்களஞ்சியம்

51. அவினாசிலிங்கம், தி.சு., (பதி. 1958), கலைக்களஞ்சியம், (ஐந்தாம் தொகுதி), தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை.

52. சாரங்கபாணி,இரா., (மு.பதி.1986), சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், (தொகுதி-1) தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

53. தூரன் பெ., (பதி. 1959), கலைக்களஞ்சியம், (ஆறாம் தொகுதி), தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை.

IV. கட்டுரை

54. அகத்தியலிங்கம், தி.க., (பதி.1988), **இருபதாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை**, (தொகுதி - 1) இந்தியப்பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், பாண்டிச்சேரி.

V. ஆங்கிலம்

55. Chelliah, J.V., (1962), **Pattuppattu**, The South India Saiva Sidhanta works publishing society, Chennai-1.